பத்தியுடன் அம்மானை பாட வரமருள்வாய்
வெத்தி விநாயகனே வேலவற்கு முன்னோனே
சித்த மிரங்கித் திருவாக்குத் தந்தருள்வாய்
கந்தனே இக்கதையைக் காத்தருள வேணுமையா
மைந்தா குமாரா மயிலேறுஞ் சேவகனே
என்று மயிலேறு மீளைய பெருமாளே
மாறிவருஞ் சூரர்தம்மை வாகாக வென்றோனே.
ராமப்பையன் படைப்போர் நன்றாக யான்பாட
காமன்றனை யெரித்த கண்ணுதலோன் முன்னடவாய்
ஆஸ்த்தான போசனதி வீரராமய்யனே ?
மன்னர்கள் மெச்சும் மதியூகி ராமய்யன்மேல்
மாற்றலர்கள் சிங்கம் மன்னனன்புராமய்யன்மேல்
திக்கடங்க வெட்டித் திரைக்கொண்ட ராமய்யன்மேல்
ஆராரும் பாடுகிற அம்மானைப் பாடுகிறேன்
தென்னவனூர் கச்சி திருமலை நராதிபனைப்
பொன்னவனும் ராமய்யனைப் போற்றியிரு கையேந்தி

* * * *

ஆண்டவனே இப்போதடியேன் சொல் விண்ணப்பங்கேள்
பாளையக்காரர் எல்லாம் பயந்து வணங்குவர் காண்
வணங்காமல் தானிருக்கும் வண்ட மறவனையும்
வளைந்து பிடித்துவந்து வணங்கவைப்பேன் ஆண்டவனே
எனக்கு விடைதாருமய்யா வென்றுரைத்தார் ராமய்யனும்
வேண்டாமடா ராமா வீரியங்கள் பேசாதே

* * * * * *

சேதுக்கரைதனிலே சென்றவர்கள் மீண்டதில்லை.
வாளுக்கிறையிட்ட மறவன் வலுக்காரன்
துப்பாக்கி மெத்தவுண்டாம் தோரா மறவனுக்குத்
தன்னரசு நாடு தனிக்கோட்டை யாளுவனும்
மதுரைப்படையென்றால் மதியான் மறவனுந்தான்
வேண்டாமடா ராமா வீரியங்கள் பேசாதே

மன்னனுரைத்ததெல்லாம் மனமகிழ்ந்து கேட்டிருந்து
கன்னன் புலிராமன் கைகட்டி வாய்ப்புதைத்து
அரசர்பெருமானே யாண்டவனே சொன்னீரே
பண்டுவடுகரென்று பாராமல் நின்றுரைத்தீர்
என் கீர்த்திதன்னை யினிக்கேளு மாண்டவனே
வஞ்சனைகள் பண்ணுகிற மறவர்கள் எல்லோரும்
தஞ்சமென்று வந்து சரணம் சரணமென்பார்
தஞ்சாவூர் கோட்டைதனைத் தவிடு பொடியாக்கி வைப்பேன்
மைசூர் கோட்டைதன்னை மதியாமல் நாணிடிப்பேன்
வங்காளங் கொங்குமலையாள முள்ளதெல்லாம்
தாங்காமல் உன்பாதம் சரணம் பணியவைப்பேன்
வட்டான முள்ள மகதகத்து மன்னரெல்லாம்
கட்டாத கப்பமெல்லாம் கட்டவைத்தேன் உன்னருளால்
வையகத்தில் உள்ள மன்னர் மனுராசாக்கள்
சேரப்பணிந்து திரையிட்டு நிற்கலையோ
வல்லவனேதான் மறவன் மகா பொருட்டோ மன்னவரே
இவ்வசனமெல்லாம் இயல்பாயுரைத்த பின்பு
மைவிழியார் மோகன மன்னவனுர் முன்னே நின்று
மெய்வசனமாக விளம்பினுர் ராமய்யனும்
சென்றே மறவனுடைச் செய்தியெல்லாம் பார்த்துவர
பண்டைப் படைவெட்டும் பார்த்து வருவேன் நான்
ஆண்டவனே இப்போது அனுப்புவிக்கவேண்டுமென்றுர்

* * * * * *

End :

ராமய்யனைக் கண்டு நலமாகத்தான் மகிழ்ந்து
வாருமென்று சொல்லிப்பின் மறவனைப்பார்த்தே துரைப்பார்
ஏண்டாசடைக்கா மறவினை யுண்டோன்
என்னை வணங்காமல் என்பாதங் காணுமல்
என்று சொல்லுங் கச்சித்திருக்கனது சொல்வான்
ஆண்டவனே இப்போ அடியேன் சொல்விண்ணப்பங்கேள்
என் மருகன் வன்னி யிருந்தானேயாமாகில்
தேவரீர்ப் பாதந் தெரிசிக்க மாட்டேன் நான்
என்று சொல்லிச் சேதுபதி தீரமுடனே தானுரைக்க
முத்துவீரப்பன் துணைவன் கச்சித்திருமலையேந்திரற்கு
கோபமிகுந்து கொடிய சடைக்கனைத்தான்
அரைக்கோட்டை தன்னில் அடைத்து விலங்குதைத்து
கரையில்லாப்பேரைக் காவல்வையு மென்றுரைத்தார்
மகாராசன் சொல்கேட்டு வாகான ராமய்யனும்
அந்தப்படியே யடைத்து விலங்குதைத்துக்
காவலோரை யழைத்துக் காருமென்றுவைத்தனராம்
அப்போது ராமய்யற்கு ஆனதிருமலையேந்திரனும்

* * * * * *

பூட்டியலங்கரித்துப் பொம்மண்ணன் ராமய்யனை
வாகனத்தின்மேலே வாகாய்ப் பவனிவந்தார்
பவனி வரும்போது பாங்கான நாகசுவரம்
சங்கீதராகம் தவில் முரசுதான் முழங்க
* * * * * *

விண்டுபுகழ் ராமய்யனும் வேழத்தை விட்டிறங்கி
வருமதைக்கண்டு வாகாய்த் திருமலையேந்திரரும்
சமூகந்தனில் நிறுத்திச் சந்தோஷமாயிருந்தார்
இருக்குந்தருவாயில் ஏற்ற சடைக்கனுக்கு
மனக்கவலையாகி யதைமன்னன் மிகவறிந்து
சடைக்கனுடையிக்கட்டுதான் தவிர்க்க வேணுமென்று
அப்போது மாயன் அந்நேரம் வந்து நின்று
காட்சி கொடுத்தார் கன்னன் சடைக்கனுக்குக்
காலில் விலங்குக் கலீரென்றுதான் தெரித்துப்
போனவ தைக்கண்டு புகழ்ந்து சடைக்கனுந்தான்
மாயனுக்குச் சித்தம் வந்ததுகாணென்றிருந்தார்
இருக்குந்தருவாயில் ஏற்றதொரு காவலர்கள்
திருமலை யேந்திரன் முன்றதிமாகவந்து நின்று
சடைக்கனுடைக் கால் விலங்குதான் தெரித்ததென்றுரைத்தான்
* * * * * *

சடைக்கனைப் பார்த்துத் தானுரைப்பார் அம்மானை
மாயன் கடாட்சம் மகிமையுண்டு உந்தனுக்கு
ஆனதினால் சடைக்கன் ஆலோசனை வேண்டாம்
எந்தனுரைகேட்டு இதவாக நீரிருங்காண்
இருமென்று சொல்கேட்டு ஏற்ற சடைக்கனுந்தான்
வணங்கி நமஸ்கரித்து வாகாகவேது ரைப்பான்
மாதாபிதா நீரே வாய்த்ததுணை நீரேகாண்
சுவாமி யடியேன் தாசன் காணென்றுரைத்தார்
அந்தமொழிகேட்டு ஆனதிருமலையும்
சந்தோஷமாகி யவர்தன்னருகே தானழைத்து
ஆடைவெகுபூஷணமும் அன்பாகத்தான் கொடுத்து
வேந்தன் சடைக்கனுக்கு விருதுகளுந்தான் கொடுத்து
ராமநாதசுவாமி நல்ல பெருந் தீவில்
சென்றிருங் காணென்று தீரன் விடைகொடுத்தார்.
* * * * * *

ராமநாதசுவாமி பெரும் பட்டணத்தில்
செங்கோல் செலுத்திச் சேவடியைக் கைதொழுது
மாயனருளால் மண்டலத்தை யாண்டிருந்தான்
கேட்டவர்கள் எல்லோரும் கிளைகோத்திரம் தழைக்க
படித்தோர்கள் எல்லோரும் பாக்கியங்கள் உண்டாக
மன்னன் கச்சித் திருமலையிந்திரனுர் மண்டலத்தை ஆண்டகதை
கேட்டவர்கள் எல்லோரும் சிறப்பாக வாழ்ந்திருக்க

வாழிமிக வாழிமங்காமல் வாழியதே
சொக்கலிங்க மீனுட்சி துணைபெற்று வாழியதே
ஈசனருள்பெற்று எல்லோரும் வாழியதே.

இராமப்பய்யன் அம்மானைபாடி முற்றிற்று.

கு.பு.—இந்நூல், மதுரையில் அரசாண்டிருந்த திருமலை நாயகர்க்குப் போர் முனைகளில் உதவியாகவிருந்து பல வீரச் செயல்களையும் நிகழ்த்திப் போந்த 'இராமய்யன்' என்னும் பெரிய வீரரின் மீது இயற்றியதோர் 'அம்மானை' யென்ற பிரபந்த விசேஷமாகும்; இது, ஷெ வீரர் இராம நாதபுரம் ஸமஸ்த்தானத்துச் சேதுப்பதியில் தனியரசு செலுத்திக் கொண்டு வந்த 'சேதுபதி சடைக்கரன் மறவன்' என்பவரைச் செருக்கடக்கிச் சிறை புகுவித்துத் திருமலைராயரின் கீழ் அமர்ந்திருக்குமாறு செய்து அத்திரு மலைராயரால் ஸம்மானிக்கப்பட்டிருந்தார் என்ற தாய இச்சரித்திர வர லாற்றை விரிவாக வுணர்த்துவது: முற்றுமுளது. இது வரையிலும் அச் சிடப் பெறுததாகும். சரித்திர ஆராய்ச்சியாளர்க்கு மிகவும் உபயோக மானது. ஆசிரியர் இன்னுரென்று தெரியவில்லை.

No. 2183. இராமய்யன் அம்மானை.
IRĀMAYYAN AMMĀNAI.

Substance, paper. Size, 11¼ × 8½ inches. Pages, 64. Lines, 32 to 42 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, very old.

Complete.

Same work as the above.

(கு. - பு.)—

இது முன் நம்பர் பிரிதியில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் முற்றும் உளது. எடுகள் மிகவும் புழுக்களால் அரிக்கப்பெற்றுப் படித்தற்கிய லாவண்ணமாய் அத்துணை சிதைந்து கிடைக்கின்றன.

No. 2184. இராமாயண வசனம்: பாலகாண்டம்.
IRĀMĀYAṆAVACANAM BĀLAKĀṆḌAM.

Substance, palm-leaf. Size, 16½ × 1½ inches. Pages, 104. Lines, 6 and 7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

The story found in Vālmiki's *Rāmāyaṇa* is here given in Tamil prose

Beginning:—

இராமாயணம் வசனம்: பாலகாண்டம்.

ஆதி காலத்திலே ஸ்ரீமந்நாராயணர் மகாலக்ஷ்மியுடனே வைகுண்ட வாசகர் லக்ஷ்மீஸமேதரான ஆதிசேஷன்பேரிலே பள்ளிக்கொண்டிருக்கப் பட்டவர் பச்சை நிறமாய் விளங்கப்பட்ட ரூபமுடனே தங்கஸ்வரூபமாய் விளங்கப்பட்ட மகாலக்ஷ்மியுடனே விளையாடிக்கொண்டு மகா தோத்திரங் களாலேயும் பூசைகளாலேயும் . . . . . . தூபதீபங்களினுலேயும்

வைகுண்டத்திலே எழுந்தருளியிருக்கிறபோது ஒரு நாள் உலகத்தையெல்லாம் பெற்று எடுத்து வளர்த்து ரக்ஷிக்கப்பட்ட மகாலக்ஷ்மியானவள் ஸ்ரீமந் நாராயணரை ஒரு விண்ணப்பம் கேட்கவேண்டி மல்லிகை முல்லை . . . . இருவாட்சி, பாதிரி புன்னை, பாரிசாதம், கற்பக புஷ்பம், துளசி இவைகளாலே பூசை செய்யவேண்டும் என்று உலகத்தையெல்லாம் ஓரடியாயளந்த ஸ்ரீமந்நாராயணருடைய திருவடிகளைப் பன்னீரினலே சுத்திபண்ணிப் புஷ்பங்களையெல்லாங் கொண்டு அர்ச்சித்துத் தூப தீபத்துடனே . . . .

Colophon :—

கிரந்தத்தினலே சொல்லிக்கொண்டுவர வால்மீக ராமாயாணத்தைத் தமிழினலே அர்த்தஸாரஸ்யமாகச் சொல்லத் தொடங்கி நான் மகா தெய்வ வணக்கத்துடனே பெரியோர்களையும் ஸ்தோத்ரஞ் செய்து இந்த ராமாயணம் பன்னீராயிரங் கிரந்தத்தையும் தமிழினலே எப்படி . . . . சகலகலையும் உணர்ந்து அதினுடைய தெளிவாகிய மதுர வாய்க்காலாக ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரங்களுடனே எழுத்து, சொல், பொருள், யாப்பு, அலங்காரங்களுடன் எண்ணப்பட்ட பஞ்ச லட்சணங்களும், எண் வகைக் குறிப்புகளும் படித்தறிந்து சொல்லப்பட்ட வித்துவஜ்ஜனங்கள் புலவோர்கண் முன்னே நான் சொல்லுவது எப்படியென்றல் ஸ்ரீமந்நாராயணர் ஏற்பட்ட கருடன் பறக்கிறதுக்கு முன்னே ஒரு தும்பியானது தானுங் கூட பறக்கிறேன் என்று பறந்தது போலே யான் சொன்னதென்று ஸ்ரீராமனுடைய சந்நிதிக்குக் குரு பீடமாக விளங்கப்பட்ட ‘ கனகசபைப் பண்டாரம் ’— சொல்லிக்கொண்டு வருகிற வால்மீகி ராமாயணத்தை அர்த்த ஸாரஸ்யமாய் யாதொரு [சி[ன்] (ச)ணங்களும் ராமாயாணமென்கிற கதைப் பிரசங்கத்தைக் கேட்டு ஆனந்தமாகிற ஸமுத்திரத்திலே முழுகி ஸ்ரீமந்நாராயணர் பள்ளிகொண்டு இருக்கப்பட்ட வைகுண்ட பதவியிலே யடைந்திருப்பார்கள். பூலோகத்திலேயும் மகா சந்தோஷமாயிருப்பார்கள்.

* * * * * *

* * * * * *

End :—

போகச் சொல்லிக் கட்டளையிட்டார். அது மகாப் பிரசாதமென்று அனுப்புவித்துக்கொண்டு புறப்பட்டு முன் நடந்து கங்கையை நடப்பித்துக் கொண்டுவந்து தங்கள் வங்கிசத்து ஸகர ராஜகுமாரர்கள் பேரிலே சாம்பலாய்க் கிடக்கிற அங்கத்திலே பாயவிட்டார். அந்தத் தீர்த்தம் உள்ளே பாய்ந்த உடனே அறுபதினுயிரம் பேரும் சரீரங்களுடனே எழுந்திருந்து கரையேறினர்கள். அவர்களுக்கு எல்லாம் தேவலோகத்திலிருந்து விமானங்கள் அழைப்பித்துக் கொடுக்க அத்தனை பேர்களும் விமானங்களிலே ஏறினர்கள். தேவகன்னிகைகள் ஆராத்திரிகம் எடுக்க, அரம்பை, ஊர்வசி, திலோத்தமை இவர்களுடனே ஏற்றிக்கொண்டுபோய் சோடசோபசாரங்களைப் பண்ணுவித்து, தீபங்கொடுத்து . . . . சகலமான பேரையும் சொர்க்கத்திலே அனுப்பிவிட்டுப் பகீரத மகாராஜா அயோத்தியேறத் திரும்பிவந்து ‘ சுமந்திரன் ’ என்கிற மந்திரியுடனே . . .

. . . . . சொல்லி வதிட்டரை நமஸ்க்காரம்பண்ணிச் சுவர்க்கத்துக்கு அனுப்பிவிட்ட வரலாறும் சொல்லியிருந்தான். அந்தப் பகீரதன் தபசு பண்ணி அறுபத்திராயிரம் வருஷம் தவம் பண்ணின தீர்த்தம் இந்த ஆறு. கேட்டாயா ராமச்சந்திரா வென்று விசுவாமித்திரர் பூர்வ கதையைச் சொல்லி யருளினார். இராமர் அப்படியா வென்று சேவித்து நின்றார்.

* * * * * *

(கு. - பு.)—

இந்நூல், வால்மீகி ராமாயணத்துக்குத் தமிழின் மொழி பெயர்ப்பாகக் 'கனகசபை பண்டாரம்' என்பவரால் இயற்றப்பெற்றதென்று தெரிகிறது. இதில், பாலகாண்டக் கதையில் விசுவாமித்திரர், இராம லக்ஷ்மணர்களுக்குப் பகீரதரால் கங்கை பூமிக்குக் கொண்டுவரப்பட்ட வரலாற்றை யுரைத்த கட்டம் வரையில் உள்ளது. நடையழகில்லை. மிக்கப் பிழையுடன் காணப்படுகிறது. ஏடுகள் பூச்சியால் அரிக்கப்பட்டு சில முறிந்து இருக்கின்றன.

No. 2185. கம்பராமாயணம் கிட்கிந்தா காண்டம்.
KAMBARĀMĀYAṆAM KIṬKINDHĀKĀṆḌAM.

Substance, palm-leaf. Size, 17 × 1½ inches. Pages, 66. Lines, 12–15 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Begins fol. 1. The other work herein is Kambaramāyaṇam Kiṣkindhākāṇḍam. 34-*b*.

Complete.

Same work as that described under No. D. 514.

Beginning :—

கம்பராமாயணம் : நான்காவது கிட்கிந்தகாண்டம்.

பம்பைப் படலம்.

கடவுள் வணக்கம்.

மூன்று ருவெனக் குண மும்மையாமுதற்
றோன்று ரு வெவையுமம் முதலைச் சொல்லுதற்
கேன்றுரு வமைந்தவு மிடையினின்றவுஞ்
சான்றுரு வுணர்வினுக்கு வந்ததாயினுன். (க)

தேன்படி மலரது செங்கண் வெங்கைம்மா
தான்படிகின்றது தெளிவு சான்றது
மீன்படி மேகமும் படிந்து வீங்குநீர்
வான்படிந் துலகிடைக் கிடந்த மாண்பது. (உ)

ஈர்ந்தநுண் பளிங்கெனத் தெளிந்த வீர்ம்புனல்
பேர்ந்தொளிர் நவமணி படர்ந்த பித்திகை
சேர்ந்துழிச் சேர்ந்துழி நிறத்தைச் சேர்தலா
லோர்ந்துணர் வில்லவருள்ள மொப்பது. (ங)

எற்படர் நாகர்தமி ருக்கை யீதெனக்
கிற்பதோர் காட்சியதெனினு ங்கீழுறக்
கற்பகமனைய வக்கவிஞர் நாட்டிய
சொற்பொருளா மெனத் தோன்று கின்றது. (௪)

காசட விளங்கிய காட்சித்தாயினு
மாசடைப் பேதமை யிடை மயக்கலா
லாசடை நல்லுரைக்கனைய தாமெனப்
பாசடை வயின்றெறும் பரந்த பண்பது. (௫)

குவான் மணற்றடந்தொறும் பவளக் கோலிவர்
கவானரச ன்னமும் பெடையுங் காண்டலிற்
றவா னெடு வானகந்தயங்கு மீனோடு
முவான் மதியுலப்பிலதுதித்த தொத்தது. (௬)

ஓத நீருலகமு முயிர்களி யாவையும்
வேத பாரகரையும் விதிப்ப வேட்டநாட்
சீதங் கு வரியைச் செருக்குமாறெரு
காதி காதலன்றரு கடலினன்னது. (௭)

களனவிலன்னமே முதலகண்ணகன்
றளமலர்ப்புள் ளொலி தயங்கியின்ன தோர்
கிளவி யென்றறிவ ருங்கிளர்ச் சித்தார்தலின்
வளநகர்க் கூலமே போலு மாண்பது. (௮)

End :

முற்றி நீருலகமுற்றும் விழுங்குவான் முழங்குமுந்நீ
ருற்றதேயெனினு மண்டமுடைந்து போயுயர்ந்த தேனும்
பிற்றை நும்மருளு மெங்கோனேவலு மிரண்டுபாலுங்
கற்றைவார்சிறைகளாகக் கலுழனிற் கடத்தல் காண்டி. (௰௭)

பொருவரு வேலைதாவும் புந்தியான் புவனந்தாய
பெருவடிவுயர்ந்த மாயோன் மேக்குறப்பெயர்ந்த தாள்போ
லுரு வருவடிவினும்ப ரோங்கினனுவமையாலுந்
திருவடி யென்னுந்தன்மை யாவற்குந் தெரியநின்றான். (௰௮)

ஈண்டி வணுறைமின் யானவ் வெறிகடலிலங்கை யெய்தி
மீண்டிவண் வருதல் காறும் விடைதம்மின் விரைவினென்று
வாண்டவ ருவந்து வாழ்த்த வலர்மழை யமரர்தாவச்
சேண்டொடர் சிமயத்தெய்வ மகேந்திரத்தும்பர் சென்றான். (௰௯)

பார்நிழல் பரப்பும் பொற்றேர் வெயிற் கதிர்ப்பரிதிமைந்தன்
போர்நிழல் பரப்பு மேலோர் புகழினவ்வுலகம் புக்குத்
தார்நிழல் பரப்புந்தோளான் றடங்கடறுவா முன்ன
நீர்நிழலு வரிதாவி யிலங்கைமேற்செல்ல நின்றான். (௨௰)

பகுவாய மடங்கல் வைகும் படர்வரை முழுது மூழ்க
வுகுவாய விடங்கோணுகத்தொத்த வால்சுற்றி யூழி
னெகு வாயசிகரகோடி நெரிவன தெரியநின்றான்
மகவாமை முதுகிற்றேன்று மந்தரமெனலுமானான். (௨௧)

மின்னெடுங் கொண்டருளின் வீக்கிய கழலினுர்ப்பத்
தன்னெடுந்தோற்றம் வானோர் கட்புலத்தெல்லைதாவ
வண்ணெடுஞ் சிகரகோடி மகேந்திர மண்டந்தாங்கும்
பொன்னெடுந் தூணின் பாதசிலை யெனப்பொலிந்து நின்றான். (உஉ)

மகேந்திரப்படலம் முற்றும்.

(கு. - பு.)—

கு.பு.—இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்லாக்கில் 514-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் (1)-ஆம் பக்கம் முதற்கொண்டு ஆரண்யகாண்டம் கபந்தன் மோட்சப்படலத் திறுதிச் செய்யுளிலிருந்து அக்காண்டம் முழுமையும், பின்னர் ஷை பக்கம் பின் புறத்திலிருந்து கிட்கிந்தா காண்டம் தொடங்கி அது முழுமையும் உள்ள பகுதி மாத்திரம் உள்ளது. ஒவ்வொரு படலங்களிலும் அச்சுப் பிரதிக்கும் இப்பிரதிக்கும் மாறுபாடாகப் பாடல்கள் பல முன்னவை பின்னவைகளாக மாற்றி எழுதப் பெற்றிருத்தலோடு அங்கங்கே பாட பேதங்களும் காணப்படுகின்றன. மகேந்திர படலத்துக்கு அச்சுப் பிரதியில் 29 செய்யுட்கள் காணப்படுகின்றன. இப்பிரதியிலோ 28 செய்யுட்களே எழுதப்பட்டுக் காணப்படுகின்றன. எழுத்துப் பிழையுள. ஏடுகள் மிகக் கிழிந்திருக்கின்றன. பின்னர், 34 ஏடு முதற்கொண்டு மற்றும் ஒரு பிரதியாக ஷை கிட்கிந்தா காண்டம் எழுதப்பெற்றுளது.

No. 2186. கம்பராமாயணம் கிட்கிந்தா காண்டம்.
KAMBARĀMĀYAṆAM KIṬKINDHĀKĀṆḌAM.

Size, 16¼ × 1½. Pages, 139. Lines, 10 on a page.

Begins on fol. 34(a) of the M S. described under Previous Number.

Complete.

Same work as the above.

(கு. - பு.)—

கு.பு.—இந்நூல் முன் நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாம். இப்பிரதியில் முன் பிரதிபோல ஆரண்ணிய காண்டத்திறுதியில் சபரி பிறப்பு நீங்கு படலம் (ச) நாலாம் பாடலிலிருந்து தொடங்கி அது முழுமையும், பின்னர் கிட்கிந்தா காண்டம் முழுவதுமான பகுதி மாத்திரம் உளது. இதற்கும் அதற்கும் படலந்தோறும் பல பாடல்கள் முன்னவை பின்னவைகளாயிருத்தலோடு பல பாட பேதங்களும் உள. ஏடுகள் பல முறிந்து கிடக்கின்றன. எழுத்துப் பிழையுள. இப்பிரதியில் இறுதி மகேந்திரப் படலத்துக்குச் செய்யுள் 22 காணப்படுகின்றன.

No. 2187. கம்பராமாயணம் உயுத்த காண்டம்.
KAMBARĀMĀYAṆAM UYUDDHAKĀṆḌAM.

Substance, palm-leaf. Size, 17¾ × 1½ inches. Pages, 816. Lines, 9 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Same work as that described under No. D. 522.

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக் 522-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ளதே ; இப்பிரதியில் உயுத்தகாண்டம் மாத்திரம் பூர்ணமாகவுளது. ஏடுகள் மிகவும் சிதைந்திருக்கின்றன.

No. 2188. பாரதம் வசனம் ஸ்திரீபர்வம்.

BHĀRATAM PROSE STRĪPARVAM.

Substance, palm-leaf. Size, 16½ × 1½ inches. Pages, 66. Lines, 9 on a page. Character, Tamil and Grantha. Condition, much injured. Appearance, old.

Incomplete. Contains Strīparvam only.

Same work as that described under D. No. 439.

Beginning :

ஸ்த்ரீபர்வம்.

ஸ்ரீவைசம்பாயனாய நம: | ஸ்ரீவேதவ்யாஸாய நம: | ஜநமேஜய:—

வாரீர் ப்ராஹ்மண ஶ்ரேஷ்டரான வைசம்பாயனரே துர்யோதனனும் ஸகல ஸேனைகளும் மரணத்தையடைந்த பிற்பாடு இப்படி உம்முடைய புத்ரர்களெல்லாரும் ஸகல ஸேனைகளும் இப்படி மரணத்தை யடைந்தார்களென்று ஸஞ்சயர் வந்து சொன்ன பிற்பாடு த்ருதராஷ்ட்ர மஹாராஜா வாஶோவிர்யத்தைக் கேட்டு என்ன செய்தார். அப்படியே கௌரவ ஶ்ரேஷ்டரான துர்யோதனரும் எல்லாரும் மரணம் அடைந்த பிற்பாடு என்ன செய்தார். க்ருபாசார்யரும் க்ருதவர்மாவும் அஶ்வத்தாமாவும் இந்த மூன்று பேரும் என்ன செய்தார்கள். தூங்கச் செய்தே ஶத்ருக்களை யெல்லாரையும் அஶ்வத்தாமா ஹிம்ஸித்தாரே. பீமஸேனரும் ஸ்ரீ கிருஷ்ணரும் அவனை ஶபித்தார்களே. அவனும் அவர்களைக்கூட ஶபித்தானே. (இவை) களெல்லாம் நடந்ததே. அவைகள் எல்லாவற்றையும் பார்த்துப் போட்டுப்போன ஸஞ்சயன் த்ருதராஷ்ட்ரனோடே என்னத்தைச் சொன்னார். இவைகள் எல்லாவற்றையும் எனக்குச் சொல்ல வேண்டும் என்று மஹாத்மா ரிஷிஶ்ரேஷ்டராயிருக்கிற வைசம்பாயன ரைப் பார்த்து ஜநமேஜய மஹாராஜா ப்ரஶ்னம் பண்ணினார்.

பாண்டவர்களிடத்திலே அந்யாயஸமரத்தைப் பண்ணினீர். அப்போது அப்படி பண்ணினதுக்குப் பலமாய் உமக்கு இப்போது இப்படிப்பட்ட துக்கம் வந்தது. இவ்வளவிலேயும் ஒழியாமல் திரும்பவும் பீமஸேனனை ஸம்ஹாரம் பண்ணவேணுமென்று யத்நம் பண்ணினீர். இதுவும் போராமல் திரும்பியும் கோபித்துக் கொள்ளுகிறீர். ஶோகப்படுகிறீர். நீர் பண்ணினதுக்குப் பலம் நீர் அனுபவியாதே ஆர் அனுபவிப்பார். தேச காலங்களையும் அறிந்து ஸ்வதோஷபரதோஷங்களையும் அறிந்து ஸ்வபலாபலத்தையும் அறிந்து எவன் ஒரு கார்யம் பண்ணுகிறானோ அவன் ஸுகத்தை யடைகுவன். அவைகளை யறியாமல் கேவலம் ஸாஹஸத்தை ஆஶ்ரயித்து மோஹத்தினாலே எவன் ஒரு கார்யம் பண்ணுகிறானோ அவன் அதுக்குப் பலம் வந்தபோது இப்போது நீர் எப்படித் தபிக்கிறீரோ அப்படித் தபிப்பன். நீரும் எள்ளளவும் வணக்கத்தை யடையாமலே ஸுஹ்ருத்துக்கள் ஹிதத்தைச் சொன்னாலும் அத்தையுங்கேளாமல் ஸ்வேச்சையாகாரியங்கள் பண்ணினீர். அதுக்குப் பலம் இப்படி அனுபவிக்கிறீர். பூர்வம் நாங்கள் ஹிதத்தைச் சொன்னபோது துர்யோதனனுக்குக் கோபம் வரப்போகிறது;

அவனுக்கு ஸந்தோஷம் உண்டாகவேண்டும் என்று இப்படியே தர்மத்தை மறந்து ஒருவர் வார்த்தையுங் கேளாமல் போனீரே. அதுக்குப் பலம் வந்தால் அனுபவிக்க ஸங்கடப்பட்டுக்கொண்டு அந்யாயமாய்ப் பீமனைக் கொல்ல நினைக்கிறீர். இதனாலே உமக்கு என்ன குணம் உண்டாகப் போகிறது. ஒன்றுமில்லை. ஆகையால் நீர் பண்ணின [illegible]த்தை நினைத்துக்கொண்டுக் கோபத்தையும் [illegible]த்தையும் விட்டுவிடும். ஏன் வீணாய்ப் பீமனைக்கொல்ல நினைக்கிறீர், பீமனிடத்தில் என்ன தோஷம். [illegible] ....

(கு. - பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காட்லாக் 439-ஆவது நம்பரில் வந்துள்ளதேயாகும்; இப்பிரதியிலே ஸ்த்ரீபர்வத்திலே பதினோராவது அத்தியாயம் நிரம்பிப் பன்னிரண்டாவது அத்தியாயம் தொடங்கியுளது. ஸ்ரீ கிருஷ்ணன் திருதராஷ்டிரனுக்கு நீ பீமனைக் கொல்ல நினைத்தது மிகவும் தவறாகும்; அவர் அவர் செய்த தீவினைகளை யவர் அவர் அனுபவித்தே தீரவேண்டும். ஆகையால் உன் தீவினைப் பயனை யனுபவித்தாய். இனி வருந்துவதில் ஒரு சிறிதும் பயனில்லை என்று ஹிதோப தேசஞ் செய்கிற கதை வரையில் எழுதியுள்ளது.

No. 2189. மத்தியார்ச்சுன மாகாத்மியம்.

MADDIYĀRJJUNA MĀHĀTMIYAM.

Substance, palm-leaf. Size, 18¼ × 1 inches. Pages, 34. Lines, 4 on a page. Character, Tamil and Grantha. Condition, much injured. Appearance, old.

Complete.

On the religious importance of Madhyārjuna (Tiruviḍaimarudūr, S.I.Ry.). Contains also a stone-inscription relating to this sacred place.

Beginning :

மத்தியார்ச்சுன மாகாத்மியம்.

[illegible] |
[illegible] ||
[illegible] . . . . [illegible] |
[illegible] ||
[illegible] |
. . . . . . [illegible] ||
[illegible] |
[illegible] . . . .

ஸ்ரீ சோழமண்டலத்தில் காவேரி தீர்த்தத்தின் தென் கரையில்.

மத்தியார்ச்சுன க்ஷேத்திரத்தி . . . . வரலாரும் தேவதைகள், இருஷிகள், ராசாதி ராஜர்களாயிருந்த ராஜாக்களாகிய மனுஷ்யர்கள், ... பள்ளி அந்தப் பழ . . . . வெறி சுவாமிக்குத் திருப்பணி முதலாகிய தர்மங்களும் உத்ஸவாதிகளும் . . . .

End :

சுந்தரேசுவரர் ஆகாசவாணியாய் வாரும் பிள்ளாய் வரகுண! இந்தப் பிரம்மஹத்தி விமோசனம் நம்முடைய மத்தியார்ச்சுனத்திலே (திருவிடை

நதூரிலே) மகாலிங்க ஸ்வரூபியாயிருக்கிறோம். அங்கே போய் தரிசனம் பண்ணினால் தீருமேயல்லாமல் மற்றைப்படி தீராது என்று சொல்ல அப்படிக்கு நான் சோழ ராசாவினுடைய தேசத்திலே எப்படிப்போகலாம் என்று கேட்க, அந்தச் சோழ மகாராஜா உன் பேரிலே படையெடுத்து வருகிறான். அதை வியாஜமாக வைத்துக்கொண்டு நீயும் தளமெடுத்து அவனைத் துரத்திக் காஞ்சீபுரம் வரைக்கும் அடிச்சால் முறிந்து போவான். அதைக்கொண்டு நீ மத்தியார்ச்சுனத்துக்குப் போகலாம் என்று சொல்ல, அந்தப்படியே சோழராஜா படையெடுத்துவந்ததைக் கண்டு வரகுண பாண்டியனும் தளமெடுத்து சண்டைபண்ணிக் காஞ்சீபுரம் வரைக்கும் துரத்தியடித்துப்போட்டு **மத்தியார்ச்சுனத்துக்கு வரச்** செய்தே கோபுர தரிசனங்கண்டவுடனே பிரம்மஹத்தி விட்டுப்போனபடியினாலே புஷ்ய தீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி மகாலிங்கத்தையும் தரிசனமும் பண்ணித் திருப்பணிகளும், உத்ஸவாதிகளும் பண்ணிவைத்துத் தன்னுடைய ராணியாகிய ஸ்த்ரீயையும் சுவாமி ஐக்கியம் பண்ணிக்கொள்ளும்படியாகக் கொடுத்து அருமையாக எட்டுவகை பக்திகளையும் பண்ணினார். அந்தப் பக்தி மார்க்கங்கள் எல்லாம் புராணத்திலே விஸ்தரித்து இருக்கிறது. இப்பவும் பாண்டியன் கோபுரம் என்று பிரஸித்தமாயிருக்கிறது. காவிரிப்பூம்பட்டினத்துப் 'பட்டண் சாமி' என்கிற வரும், பத்திரகிரிராஜாவும் இந்த ஸ்தலத்திலே வெகுவிதமான பத்திகளும் பண்ணிப் பாண்டிய ராஜாவினுடைய சரித்திரங்களும் எடுத்துப் பாடி ஞானவான்களாகவானார்கள். இந்தத்தலத்தை அப்பர், சுந்தரர், சம்பந்த மூர்த்திகளும் மணலாலே ஒருலிங்க மொன்றுபண்ணி இந்தத்தலத்தை மெதியாமல் இடங்கண்டசுவரத்திலேயிருந்து தேவாரம் சாத்தியிருக்கிறார்கள். மாணிக்கவாசக மூர்த்தியினுடைய திருவாசகத்திலும் ஆனந்தத்தேன் இருக்கிறவிடமென்று பாடியிருக்கிறார்கள். இப்படிக்கு வெகு மகத்துவங்களுடனே கூடின தலம் இது. இந்தத் தலத்திலே உண்டான மணல் எல்லாம் சிவலிங்கமென்றும், சலமெல்லாங் கங்கையென்றும் விருட்சங்கள் எல்லாம் கற்பக தருக்கள் என்றும், இதில் வாசம் பண்ணுகிற மனுஷ்யர்களெல்லாம் இருஷிகள் என்றும் இப்படி வெகு புராணங்களிலே சொல்லியிருக்கிறது. இப்படிக்கு ஞான க்ஷேத்திரமாகிய மத்தியார்ச்சுன மாகாத்மியம் எழுதி முடிந்தது. ஸ்ரீ மகாலிங்க சுவாமி துணை. ஆண்டபிள்ளையார் சகாயம்.

(கு. - பு.)—

இந்நூல், 'மத்தியார்ச்சுனம்' என்கிற 'திருவிடை மருதூர்' க்ஷேத்திர வரலாற்றையும், மகிமையையும், விளக்குகிறது. முதலிலும் இடையிலும் பல ஏடுகள் முறிந்தும் சிதைந்தும் இருக்கின்றன. இது முடிந்த பிறகு இந்த க்ஷேத்திரத்தைச் சார்ந்ததாய ஒரு சிலாசாஸநத்தின் பிரதி இரண்டு ஏடுகளில் எழுதியுள்ளது. எழுத்துப்பிழையுள.

No. 2190. வீரசிங்காதன புராணச் சுருக்கம்.

VĪRAŚIṄKĀDANA PURĀṆACCURUKKAM.

Substance, palm-leaf. Size, 15¼ × 1 2/8 inches. Pages, 134. Lines, 6 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete.

Same work as that described under No. R. 337.

(கு - பு.)—

இது, மூவருடக் காடலாக்கு 337 ஆவது நம்பர் பிரதிக்கு மாறு ருகையான பிரதியாகும். மிகவும் சிதைந்திருக்கிறது. மிகவும் அருமையான நூலாகும். இதுக்கு வித்தாரமான நூல் ஒன்றுண்டு என்பது மாத்திரம் தெரிகிறது.

No. 2191. திருவிளையாடற் புராணம் வசனம்.
TIRUVIḶAIYAḌAṞ PURĀṆAM VACANAM.

Substance, palm-leaf. Size, 17½ × 1¼ inches. Pages, 590. Lines, 5 to 7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

A rendering, into Tamil prose, of the *Parañjōti Tiruviḷaiyaḍaṟ Purāṇam* noticed under No. 605 of the Descriptive Catalogue of Tamil Mss. Vol. II. In the beginning of this work are found some verses taken from another work.

Beginning :

மதுரைப்புராணம் :

மன்னிக்கிடக்கு நின் பொற்றுருளல்லாற் கதி ம(ட்டி)(ற்றி)ல்லேயென்
றுன்னிக்கிடக்கு மென்னுள்ளங் கண்டா யர வான் றேடொன்று
பின்னிக்கிடக்குஞ் சடைமீதஞ்சாமற் பிறைக்கொழுந்து
மின்னிக்கிடக்குந் தமிழ்க்கூடற் சித்திவிநாயகனே.

மீனுட்சிசுந்தரேசுவரர் கடாட்சம் உண்டாக :

விநாயகர் துணையுண்டாக :

*　　　*　　　*

மதுரைப்புராணத்தின் வாசகங்கேளீர் ! கைலாசத்திலே சிவகங்கைக் கரையிலே பரமேசுவரரது உத்தரவுப்படிக்கு 'விசுவ கர்மா' ஆதியிலே நவரத்தின கசிதத்தோடே கூடியிருக்கிற ஆயிரக்கால் மண்டபமொன்று வெகுவெகு விநோதங்களையுடைத்தாய் வெகு உன்னதமாய் மெத்த அலங்கிருதமாய்க் கோடிசூரிய பிரகாச மாகத்தானே உண்டுபண்ணியிருக்கும். அந்த மண்டபத்திலே மஹர்ஷியாயிருக்கிற ஸூத மஹர்ஷி எழுந்தருளியிருந்தார். அவரைப்பார்த்துச் சகலமான ருஷிகள் எல்லோரும் வந்து தண்டன்பண்ணி முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணுயிரங்கோடி இருஷிகள், கின்னரர், கிம்புருடர், கருட கந்தர்வர், சித்தர், வித்தியாதரர், தும்புருநாரதர் சகலமான பேர்களும் ஒன்றுகக்கூடிக் கொண்டு வெகு சந்தோஷமாயிருந்தார்கள். அப்போது முனிவரிற்றலைமையராயிருக்கிற சூதமகாமுனியைச் சகல ருஷிகளும் மெத்த வணக்கஞ் செய்து சுவாமி ! ஒரு விண்ணப்பஞ் செய்கின்றோம்.

*　　　*　　　*　　　*　　　*

சுவாமி ! பரமேசுவரனும் பாருவதியும் கணநாதர்கள் கூட்டத்துடனே ஆதிபத்தியஞ் செய்துகொண்டு நித்தியவாஸமாய் இந்தக் கைலாசத்திலே தானே இருக்கிறார்களே ? இதுவே சர்வேசுவரனுக்கு அதிகமான ஸ்த்தானமோ ? இதுவல்லாமல் பதினாலு லோகமுண்டே அவைகளிலேயும் இப்படிக் கைலாசத்தைப் போலே ஸ்த்தலங்கள் உண்டாயிருக்

குமோ ? என்று கேட்டார்கள். அதற்குச் சூத மகாமுனிவர் சொல்லு வார் : பரமேசுவரன் மகிமையும் பார்வதியினுடைய மகிமையும், அவர் கள் அதிக சந்தோஷமாயிருக்கிற ஸ்த்தானம் இன்னதென்கிற வர்த்த மானம் நம்மாலே அறியப்பட்டதல்ல. நாமுங் காசியிலே கேட்டது *

* * * *

நாரதரும் நமக்கு தெரியாது. அகத்திய மகாமுனி சகலமும் அறிந்த ஞானி. வடசொல், தென் சொல், எண்டிசைச் சொல், ஈரெழு பதினாலு லோகத்திலேயுள்ள வர்த்தமானங்கள் சகலத்தையும் அளவிட்டவர். அவருக்குத் தெரியுமேயல்லாமல் மற்றொருவருக்கும் தெரியாது. ஆகை யினாலே அகஸ்தியரைக் கேளுங்கோள் என்று நாரதர் சொல்ல, வியாசர் அகத்தியரை நமஸ்கரித்துத் தோத்திரம் பண்ணி சுவாமி ! இந்தவுலகத் திலே சிவஸ்த்தலங்களிலே அதிகமான ஸ்த்தலமும், அந்த ஸ்தலத்தின் மகிமையுஞ் சொல்லவேணுமென்று கேட்க, அகத்தியர் அந்த மகிமை நம்மாலே அறியப்பட்டதல்ல. நமக்குச் சுப்பிரமண்ய மூர்த்தி குருவாகை யாலே அவர் உபதேசம் பண்ண நான் அறிந்ததாயிருக்கும் . அதுவே தென்றால் துவாபர யுகத்திலே ஸ்ரீ கைலாசத்திலே பரமேசுவரனும் பார்வ தியும் இரண்டு பேருமாகத் தனித்து இருக்கிறபோழ்து பரமேசுவரனைப் பார்த்துச் சுவாமி ! இந்தக் கைலாசத்துக்குச் சமானமானதலங்கள் இதிலும் அதிகமான தலங்களைப் பூலோகத்திலே எந்தவெந்தத் தலத்தைச் சொல்ல லாமென்று கேட்க, அப்போது பரமேசுவரரும் மனமகிழ்ந்து ரகசிய வுபதேசம் போலே பார்வதிக்குச் சொன்னார். அப்போது சுப்பிரமணியர் தேவியின் மடியில் சிறு பிள்ளைபோலேயிருந்து சகலமுங் கேட்டார். சுப்பிரமணியர் சிறு பிள்ளையானாலும் புத்தியில் அதிகரானபடியினாலே அந்த ரகசிய வுபதேசத்தை உண்மையாய்க் கேட்டுக்கொண்டிருந்து நமக்கு உபதேசம் பண்ணினார். ஆகையால் நாம் அறிந்த மாத்திரம் உங்களுக்குச் சொல்லு கிறோம். நன்றாய்க் கேளுங்கள் என்று சொன்னார். என்னவென்றால் பூமியந்தர சொர்க்கத்திலே அநேக சிவஸ்தலங்கள் உண்டு. அங்கெல்லாம் சிவன் இருப்பார். அதிலே விசேஷமாய் அறுபத்துநாலு சிவஸ்தலங்கள் உண்டு. அதிலே யதிக மூர்த்தியாயிருப்பார். அதிலும் விசேஷமான ஸ்த் தலம் பதினாறு உண்டு. அதிலும் மகா மூர்த்தியாயிருப்பார். அதிலும் மகா விசேஷம் எட்டுத்தலம் உண்டு. அதிலும் ஆனந்தமூர்த்தியாயிருந்து கொண்டு விளையாடுவார். அதிலும் மகா விசேஷமுள்ள தலம் ஐந்து உண்டு. அதிலும் மகா மூர்த்தியாயிருப்பார். அதிலும் அதிகமாகிய தலம் ஒன்று உண்டு. அது எந்தத்தலம் என்றால் ' மதுரை ' என்று ஒரு மஹா ஸ்த்தலமிருக்கிறது. அந்த * * *

* * * *

பராபர வஸ்துவாயிருக்கிற சர்வேசுவரன் அந்தத்தலத்திலேதானே அறு பத்துநாலு திருவிளையாடலும் விளையாடினார். அந்தத் திருவிளையாடல் களையும், அத்தல மகிமையையும் நன்றாய் வகை விபரமாகச் சொல்லு கிறோம். வேறே பராக்கின்றிக் கேளுங்கள் என்று அகத்திய மகா முனிவர் சொல்ல இருஷிகளும் திருவிளையாடல்களைக் கேட்கத் தொடங்கி னார்கள்.

முதலாவது தலமகிமையத்தியாயம் முற்றும்.

முதல் திருவிளையாடல் :

இருதயுகத்திலே தேவலோகத்திலே தேவேந்திரன் தேவசிங்காதனத்திலே இருந்துகொண்டு மேனகை, அரம்பை, ஊர்வசி, திலோத்தமை முதலான தேவஸ்திரீகள் எல்லோரையும்கூட்டி நாட்டியம் பார்த்துக் கொண்டு இருக்கிற சமயத்திலே முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணுயிரம்கோடி இருஷிகளும் * * *

தும்புரு நாரதர் மற்றுமுள்ளோர்களும் நிறைந்த சபையாகச் சகலருங் கண்குளிர்ச்சியாய்ப் பார்த்துக்கொண்டிருக்கிறபோழ்து தேவ குருவாயிருக்கிற பிருகஸ்பதி பகவான் அந்தச் சபைக்கு வந்தார். அப்பொழுது தேவேந்திரனும், தேவர்களும் நாட்டியம் பார்த்துக்கொண்டிருக்கிற பராக்கிலே அவரை அங்கீகாரம் பண்ணினுரில்லை. அதனுலே அவர் சபையிலே இராமல் தம்முடைய ஆச்ரமத்துக்கும் போகாமல் அரண்யத்திலேபோய் ஒளிந்துவிட்டார். தேவேந்திரனும் நாட்டியம் பார்த்து முடிந்து தேவர்கள் இருஷிகளையனுப்புகிற சமயத்திலே தேவகுருவாயிருக்கிற பிருகஸ்பதி பகவானைக் கண்டாரில்லை. அப்போது தேவேந்திரன் பயந்து இனி எப்படி யவரை நமஸ்காரம் பண்ணுவது ? * * *

* * * *

நீ தேவலோகத்திலே போயிருந்து வருஷத்துக்கு ஒருகால் சித்திரை மாஸத்திலே சித்திரை நட்சத்திரத்திலே நம்மை வந்து பூசை பண்ணினுல் நித்திய பூசைப்பலன், நித்திய சேவைப் பலன் கொடுக்கிறோம் என்று சொல்லி தேவேந்திரனையனுப்பினுர். அப்படியே பிருகஸ்பதி பகவானை முன்னிட்டுக் கொண்டு தேவர்களையுங் கூட்டிக்கொண்டு மகா சந்தோஷத்துடனே தேவேந்திரனும் தேவலோகத்துக்குப்போனுன்.

தேவேந்திரனுக்குப் பிரமஹத்தி நீங்கிய முதல் திருவிளையாடல் முற்றும்

End :

கோவிலிலே இருக்கப்பட்ட சிவலிங்கமும் வன்னிமரமும் கிணறும் சாட்சி என்று சம்பந்த மூர்த்தி திருவுளம் பற்றின பிரகாரம் அந்தச் சாட்சியை இவ்விடத்துக்கு இந்நேரம் அழைப்பித்தாலாயிற்று. அல்லாத பக்கத்துக்கு என்னுடைய சீவனை இப்பொது இங்கேதானே விட்டுவிடுவேன் என்று சொல்ல, சுவாமி சொக்கநாயகர் பழிக்கஞ்சியானபடியினுலே மகா பதிவ்ரதையென்று பயந்து திருமருகர் கோவிலிலேயிருந்து சிவலிங்கத்தையும், வன்னி மரத்தையும், கிணற்றையும் அந்தக் கணமே யழைப்பித்து, பாண்டியராஜர் முதலாய் மதுரைப்பட்டணத்திலே யுண்டாகிய பதினெண் ஜாதியும் அறியச் சாட்சி சொல்லுவித்தார். அப்போது பாண்டியராசர் முதலாகிய சகலமான பேர்களும் இந்தப் பதிவ்ரதையைப் பார்த்து வணக்கஞ்செய்து மகா தோத்திரங்கள் பண்ணினுர்கள். அப்பால் மதுரைப்பட்டணத்திலே யிருக்கப்பட்ட செட்டிகள் அவர்களுடைய ஸ்திரீகள் பின்னுமுண்டாகிய சகலமான பேர்களும் சகல ஜாதியாரும் அந்தப் பதிவ்ரதையாகிய செட்டி ஸ்திரீயினுடைய பாதத்திலே வீழ்ந்து நமஸ்கரித்தார்கள். அப்போது பாண்டிய ராஜாவும் அச்செட்டியாரைப் பார்த்து மகா தோத்திரம் பண்ணி அவருக்கும் பதிவ்ரதை ஸ்திரீக்கும் அநேக ஆடையாபரணங்களும் விடுகறைகளும் வெகுமதியாகக் கொடுத்துச் செட்டியாரை இந்தப்

பதிவ்ரதையை வீடேறவழைத்துக்கொண்டுபோய்ச் சுகத்திலேயிருங்கோள் என்று இருவரையும் அவர்கள் கிரகம் வரைக்கும் கொண்டுபோய் அனுப் புவித்துப்போட்டுப் பாண்டியராஜாவும், மந்திரிமார், காரியக்காரர் இவர்களை யழைத்துக்கொண்டு தம்முடைய அரண்மனையேறப் போனார். இப்பால் செட்டியாரும் தம்முடைய கிரகத்துக்குப் போய்த் தங்கள் இனத்தாரை எல்லாரையும் அழைப்பித்து வைத்துக்கொண்டு அவர்கள் முன்னிலைக்குச் சிறிது திரவியங்களும் ஆபரணாதிகளும், மாடு கன்றுகள் சகலமானவை யும் மூத்தாளுக்குக் கொடுத்து அவளையும் அவள் பிள்ளைகளையும் அப் புறம் ஒரு வீட்டிலே ஒதுக்குவித்து இளையாளுடனே கூட அஷ்ட ஐசுவரியத் துடனே சம்ஸாரம்பண்ணிக்கொண்டு தன சம்பத்து, தானிய சம்பத்து மக்கள் சம்பத்துடனே தங்கண் மாமனாரைப் பார்க்க அதிகமாய்க் குபேர சம்பத்தாக மகா சுகமாயிருந்துகொண்டு தான தர்மங்களைச் செய்துகொண் டு மீனாட்சியம்மனையும் சொக்கநாயகரையுங் தர்சநம் பண்ணிக்கொண்டு மகாசிவ பூஜா துரந்தரராக விருந்தார் என்ற வாறு.

அறுபத்துநாலாம் திருவிளையாடல் முற்றும்.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 605-வது நம்பரில் வந்துள்ள பரஞ் சோதி திருவிளையாடற் புராணம் என்ற நூலுக்கு வசனமாய் அமைந் துள்ளது. இதில் இந்நூல் முற்றும் உள்ளது. வசன நடையத்துணை நன்றாயில்லை. இயற்றியவர் இன்னாரென்று தெரியவில்லை. ஏடுகள் சி தைந்துள. எழுத்துப் பிழை சொற்பிழை முதலிய குற்றங்களிருக்கின் றன. முதலில், முதல் இரண்டு திருவிளையாடல்களை யுணர்த்தும் செய் யுட்கள் வேறு நூலிலிருந்து எழுதப்பட்டுள. நூலாரம்பத்து மதுரைச் சித்தி விநாயகரை வணங்கும் செய்யுள் ஒன்று காணப்படுகிறது.

No. 2192. திருவிளையாடற் புராண வசனம்.

TIRUVIḶAIYĀḌAṞ PURĀṆA VACANAM.

Substance, palm-leaf. Size, 10 2/8 × 1 2/8 inches. Pages, 442. Lines, 6 and 7 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete.

A rendering, into Tamil prose, of the *Tiruviḷaiyāḍaṟ Purāṇam.* In this work are found all the "sixty-four sports" of God Sundarēśvara of Madura.

Beginning :

திருவிளையாடற்புராண வசனம் :

சித்திவிநாயகர் சித்தியுண்டாகக் கடவது :

ஆலாசியம் என்னப்பட்ட மதுரையிலே சகத்துக்கெல்லாம் தாயான மீனாட்சியம்மன் சன்னிதானத்திலே சான்னித்தியமாய் எழுந்தருளியிருக் கப்பட்ட சித்தி விநாயகரையும் முக்குறுணி அரிசி . . . .
ஒரு மோதகமாய்ப் பண்ணி துதிக்கையினாலே . . . .

. . . . .செய்யப்பட்ட முக்குறுணி அரிசிப்பிள்ளையாரை யும் வணங்கி நமஸ்கரித்துச் சகத்துக்கெல்லாம் நாயகரான சுந்தரேசு வரர் மீனாட்சியுடனே கூடிப் பாண்டிய வமிசம் எல்லாம் கடைத் தேறவும் பூலோகம் எல்லாம் விளங்கவும் எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேத சீவாத்துமாக்களும் இந்த மகத்துவத்தைக் கேட்டுக் கடைத்தேற வுமாகப் பாண்டியர்கள் சந்திர வமிசத்தார் என்றும் அவர்கள் பேரிலே லோகநாயகராகிய சுந்தரேசுவரருக்கும் மீனாட்சியாகிய தாயாருக்குந் தய வாய் அறுபத்துநாலு திருவிளையாடல்கள் விளையாடியிருக்கிறார்களே அந்தத் திருவிளையாடற் புராணத்திலுள்ள சாரத்தைக் கதையாக என்னால் அறிந்த மாத்திரம் சொல்லுகிறேன். இதைப் பத்தியாய் விசுவாசத்துடனே நியம மாய்ப் பெரியவர்களை வைத்துக் கொண்டு அவர்கள் படிக்கவும் தாம் கேட்கவும் * * * *

End :

த்திலே இருக்கிற லிங்கத்தையும், கிணற்றையும், வன்னிமரத்தையும் அழைப்பித்துப் பாண்டியராசர் முதலாய்ச் சருவமான பேரும் அறியச் சாட்சி சொல்லுவித்தார். ஆனபடியினாலே பதிவிரதையை ராசா முதலான பேர் தோத்திரம் பண்ண, செட்டியார் தம்முடை வீடேறக் கூட்டிக்கொண் டுபோய் மூத்த ஸ்திரீயை ஒதுக்கிவைத்து இளைய ஸ்திரீயுடனேகூட அஷ்ட ஐசுவரியத்துடனே சம்சாரம் பண்ணிக்கொண்டு இருந்தார். (௬௪)

அறுபத்துநாலு திருவிளையாடல்கள் முற்றும்.

(கு. - பு.)—

இந்நூல், திருவிளையாடற் புராணத்துக்கு வசன நடையில் அமைந்த தொரு நூலாகும். இயற்றியவர் இன்னாரென்று தெரியவில்லை. இப் பிரதியில் ஆதி தொடங்கி அறுபத்துநாலு திருவிளையாடல்களும் உள. வசன நடையில் அங்கங்கே சில பிழைகள் காணப்படுகின்றன. எழுத் து நன்றாகவுளது. ஏடுகள் நிரம்பவும் பூச்சியரிக்கப்பெற்று முறிந்துள. படித்தற்கியலாவண்ணமாய் அத்துணை சிதைந்திருக்கின்றன.

No. 2193. பிரமோத்தர காண்டம் வசனம்.
PIRAMŌTTARA KĀṆḌAM PROSE.

Substance, palm-leaf. Size, 15¾ × 1¼ inches. Pages, 516. Lines, 5 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

The *Birammōttara Kāṇḍam* of Varatuṅgarāma Pāṇḍiya in prose.

Complete.

Beginning :

சிவமயம்.

ஸ்ரீமுக ௵ சித்திரைமீ நாள் ஆரம்பம் :

பிரம்மோத்தரகாண்டம் வசனகாவியம் :

* * * *

அறிவில்லாத நான் சொல்லுந்தமிழிலே பரமேசுவரனாரது கதை இருக்கிற படியாலே கல்வியுடைய பேர்கள் குற்றஞ் சொல்லாமல் மனங்கொள்வார் கள். இதல்லாமல் சத்தமும் அலையுங்கூடிய கடல் சூழ்ந்த பூமியை

யாண்டு சத்துருக்களைச் சயித்து ராச்சிய * * ; *தீர்த்துச் சௌரியமும் பிரகாசமு உடையவனுய்த் தகடாகச் செய்த வேலாயுத முள்ள கையனுனை 'வாதுங்கராம பாண்டியன்' என்கிற ராஜாவாலே செய்யப்பட்ட சரித்திரம் இந்தக் கதை [யை] சங்கத்தார் முன்னுக ஆறு காற பீடத்திலே அரங்கேற்றப்பட்டது என்று சொல்லப்படும் என்பது.

பாயிரம் முற்றும்,

பஞ்சாக்கரமான்மிய வத்தியாயம் :

இப்பால் பஞ்சாட்சர மான்மியம் வசனமாகச் சொல்லத் தொடங்கிறேம். நைமிசாரண்ணியமென்கிற புண்ணிய க்ஷேத்திரமான ஒரு வனம் உண்டு. அந்த வனத்திலே மகா புனிதராகிய பிராமணர் இருஷிகள் அநேகம் பேர் கூடிப் பிரம்மதேவர் சொற்படிக்கு அவர் சொன்ன சொல்லே சிரஸா வஹித்துக்கொண்டு யாகாதி கிரதுக்கள் பண்ண நினைத்து ஒரு குளிர்ந்த மரத்தின் நிழலிலே குண்டம் முதலான சாமக்கிரிகள் சமிதைகள் சேர்த்துக் கடை கோலினுலே அக்கினியுண்டுபண்ணி ஆரம்பித்து நடத்தி வரச்செய்தே பதினெண் புராணர்த்தமும் அசாதாரணமாய்க் கேள்விப்பட்ட 'சூத மாமுனி' எழுந்தருளி வரக்கண்டு முனீசுவரர் எதிர்கொண்டுவந்து அழைத்துப்போய் அர்க்கியபாத்யாசமனீயம் முதலான உபசாரம் பண்ணி இருக்கவைத்தபிறகு அவரைப்பார்த்து இருஷிகள் சொல்லுகிறுர்கள். ஓய் சூத முனீந்த்ர ! யாம் சிவ கதைகளைக் கேட்டக மனதிலே ஆசைப்பட் டோம். சிவ பரமாயிருக்கிற கதைகளைச் சொல்லவேண்டும் என்று சொன் னுர்கள். அந்தப்படிக்குச் சூதர் மஹா சந்தோஷத்துடனே.

End :

இந்தப்படிக்கு ஏழு நாள் பரமசிவன் பாதத்தைப் புகழ்ந்து தோத்திரம் பண்ணிப் பேய் ரூபம் விட்டுத் தேவரூபம் கொண்டு மனது சந்தோஷத்துட னே விமானத்தில் ஏறி யழகிய தனமுள்ள வஞ்சகி பாதம் பிடிக்கச் சிவ பதத்திலே வந்து சேர்ந்தான். வந்து திரும்பாத திவ்விய பதத்தைச் சேர்ந்து சிவனும், இடப்பாகம் பொருந்திய ஈசுவரியும் மகிழத்தக்கதாகச் சிவகணங்கள் பணிவிடை செய்ய ஜனி பொருந்திய வச்சிரமிழைத்த பொன் விமானத்திலே விளங்க வீற்றிருந்து சிவ போகத்தை யனு பவித்துப் பிரியாமல் ஸ்திரீயும் புருஷனும் இருந்தார்கள். ஆனபடி யினுலே பரமேசுவரன் கதையைக் கேட்ட பேருக்கு அழிவில்லாத பெரும் பதம். கிடைக்கிறபடியினுலே வேறே பெரும்பதஞ் சொல்லுவதற்கிட முண்டோ ? என்று சூத மகா முனிவன் அதிசயித்துடனே சொல்ல நைமி சாரண்ணிய இருஷிகள் கேட்டன்புடனே மனமுருகி ஹராஹரா வென்று தங்கள் இரண்டு கைகளும் தலைமேற்கூப்பினுர்கள். தேவ தேவனுன ஸ்ரீ பரமேசுவரன் பஞ்சாக்ஷர மஹிமை முதற்கொண்டு பாவங்களைப் போக்கும் புராண நூலளவு கேட்பவர்கள் பலன் பெறுதல் சொல்லுங் கதையளவுஞ் சொல்லப்பட்ட சிவ கதை முழுதும் ஆசையுடனே கேட்டபேர் ஆராகிலும் ஆகட்டும் விட்டுணு பிரம்மா முதலான பேரும் கிட்டுதற்கரிதாகிய சிவபதம் அடைவார்கள். புராண மஹிமையுரைத்த வத்தியாயம் முற்றும்.

ஆக அத்தியாயம் ௨௰௨க்கு விருத்தம் பாயிரம் உட்படச் செய்யுள் (௲௩௱௨௰) (1320) சுபமஸ்த்து.

Colophon :

இந்தப் புராண விருத்தாந்தம் : தென் காஞ்சிப் பட்டணவாசியாய் [த்தரா] வடதேசத்தையாளப்பட்ட சந்திரவங்கிச ராஜாவான 'வரதுங்கராமன்' பாடின விருத்தத்தை.

(கு. - பு.)—

இந்நூல், வரதுங்கராம பாண்டியன் இயற்றிய 'பிரம்மோத்தர காண்டம்' என்னும் நூலுக்கு உரையே போன்று வசனத்தில் அமைந்துள்ளது. இதில் பஞ்சாக்கரமான்மிய வத்தியாயம் முதல் புராணமகிமை யுரைத்த வத்தியாயம் வரையிலாய் இருபத்திரண்டு அத்தியாயங்களான் சிவகதையின் மஹிமை உணர்த்தப்பட்டுள்ளது. இப்பிரதியில் இந்நூல் முற்றும் உளது. ஏடுகள் சிதைந்திருக்கின்றன. இப்பிரதி வசன நடையில் மிகப் பிழைபாட்டுடன் காணப்படுகிறது. இதை யியற்றியவர் இன்னாரென்று தெரியவில்லை.

No. 2194. கீதாசாரத் தாலாட்டு.
GĪTĀSĀRATTĀLĀṬṬU.

Substance, palm-leaf. Size, 6 × 1¼ inches. Pages, 26. Lines 8 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete.

Same work as that described under No. D. 1058.

(கு. - பு.)—

இது, டிஸ்கிருப்டிவ் காடலாக்கில் 1058 ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப் பிரதியில் முற்றும் உளது. ஏடுகள் படித்தறியலா வண்ணமாய் மிகவும் சிதைவுற்றிருக்கின்றன.

No. 2195. திருப்புகழ்.
TIRUPPUKAḺ.

Substance, palm-leaf. Size, 16¼ × 1 inches. Pages, 70. Lines, 4 and 5 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Contains in 50 stanzas ; incomplete.

Same work as that described under No. D. 1649.

(கு. - பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1649 ஆம் நம்பரிலே வந்துள்ள நூலேயாகும். இதில் 50 செய்யுட்கள் வரையும் உள்ள பகுதி மாத்திரம் உளது. எழுத்துப் பிழையுளது.

No. 2196. தமிழறியும் பெருமாள் கதை.
TAMIḺAṞIYUM PERUMĀḶ KATHAI.

Substance, palm-leaf. Size, 13¼ × 1 inches. Pages, 192. Lines, 5 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Same work as that described under No. D. 377 of T.D.C., Vol. I.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 377-ஆவது நம்பரிலே வந்துள்ள தேயாகும். இப்பிரதியில் முற்றும் இருக்கிறது. மிகவும் பிழையுடன் உளது. ஏடுகள் பல சிதறுண்டு முறிந்து கிடக்கின்றன.

No. 2197. சாதி பேதக நூல்.
JĀTIBHĒDAKANŪL.

Substance, palm-leaf. Size, 12 × 1 inches. Pages, 58. Lines, 4 on apage. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete. Printed.

"On caste distinctions." This copy is different from that noticed under No. 641 of the Descriptive Catalogue of Tamil MSS. in this Library. This copy differs in some places from its printed edition.

Beginning :

சாதிபேதக நூல் :

ஆதிபேதகத்தா லயனிடத்திலுண்டான,
சாதிபேதங்களெல்லாஞ் சாற்றவே—நீதித்
திடவாரணங்க டினம் பரவுமுக்கட்
கடவாரண முகனே காப்பு.

கடவுள் வணக்கம்.

நலம்பயில் உமைகண்டேத்த நாகமும்புலியும்போற்ற
நிலம்பயிலந்தகார நீங்கி நீங்காக் கங்கை
யலம்பு செஞ்சடைகடாழ் வம்பலத்தாடுமையா
சிலம்பணி கமலம் போற்றிச் செப்புவன் சாதிபேதம் (க)

நெற்சாதி பேதம்போல நிலந்தனிற் கலந்துதோன்று
முற்சாதி பேதமெல்லா முறையுற மொழிகையாலே
சொற்சாதி பேதமுற்றுந்துணிந்திடி லெமது சொல்லு
நற்சாதி பேதத்துள்ளோர் நவின்றிடார் நவியிதென்றே. (உ)

புவியினிற் கலியினீட்டம் பொருந்தலிற் சாதிபேதத்
தவரவரொழுக்கங் குன்று தாகமப் பொருளையெல்லாந்
தவநெறி யுலகநாதன் றமிழினுற்றருக வென்னச்
சிவனருள் கருதி யானுஞ்செப்புவன் செய்யுளாக. (ங)

தேசவா[ர்](ரா)தி சைவதீக்கையைப் பெறுகைமிக்க . . .
வோசைசொள் சிவாகமாதி யுரைப்பதோடொழுக்கமெல்லா
மாசறு நூலுரைத்த மரபினர்க்கன்றி யான்
நேசமோ டிவை விளங்க நெறிபல விளங்குமன்றே. (ச)

சாதித்தொகை.

சாதி நால் வகையதா மச்சாதியி னனு லோமத்தின்
பேதமோரறுவகைத்தாம் பிரிதிலோமமு மோராறு
மீதிலர் [ம](வ)ந்தராள மீராறும் விராத்திய[ன்று] (ந்தா)ன்
மூதுரை தெரிந்தபேர்க்கு மொழியுறமொழி யொணுதே. (ரு)

End :

கடிகைப்புலவர்.

படிவிப்பிரர் வேளாளர் குலப்பாவையாங் கன்னிகைசோரத்
துடனற்றேளைப்புல்கி யிட வுண்டா மவனற்றமிழாலே
யடையைத்தொடையைப் பாவதனை யடைவாய்சொல்லி யவரவர்பால்
கடிகைப்புலவரென விசையாற் கவிகள் பாடித்திரிவாரே. (௱௮)

* * * *

அலகிலா சாதிபேதத் தவரவரோங்கி வாழி
பலகலை சிவாகமங்கள் பார்மிசை தழைத்து வாழி
திலகமாய்ப் புவியனைத்துஞ் சிவமயமாக வந்த
வுலகநாயகன்றன் கீர்த்தி யுலகினில் வாழிவாழி. (௱௪)

சாதி நூல் முற்றும்.

நாலு வர்ணத்திலே கூ௰கூ சாதி பேதகமுண்டானதுக்கு வயணம் (௧)
ஒவ்வொரு சாதியில் ஆறுவித பேத உண்டாயிற்று
கலியாணப்பெண் பெற்ற பிள்ளை சாதிக்குச் சமானம். (௨)
அந்தச் சாதிப்பெண் கலியாணமில்லாதவள் பெறும் பிள்ளை
குறைச்சல் (௩)
அந்தச் சாதியில் புருஷன் செத்த பிறகு அவளைச் சேர்ந்து பெற்றபிள்ளை
அதிலுங் குறைச்சல். (௪)
புருஷனிருக்கச் சோரமாகப் பெற்றபிள்ளை அதிலுங் குறைச்சல். (௫)

* * * *

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 641-ஆவது நம்பர் பிரிதியில் வந்துள்ள "சாதி நூல்" என்னும் நூலினும் வேருகவுள்ளது. இந்நூல் அச்சிடப் பெற்றுள்ளது. அதற்கும் இதற்கும் சில வேறுபாடு காணப்படுகிறது. உலகநாத பண்டிதர் என்பவர் இயற்றுவித்ததாக வுளது. முடிவுற்ற பின்னர் ஷை சாதிகளின் விவரணமாகச் சில தொடர் மொழிகள் எழுதப்பெற்றுள்ளன. எல்லாச் சாதிக்கும் ஒரு அட்டவணை யெழுதப் பட்டுளது. எழுத்துப் பிழையுடன் உளது. எடுகள் பல முறிந்து சிதைந்து கிடக்கின்றன.

No. 2198. ஏரெழுபது.

ĒREḺUPADU.

Substance, palm-leaf. Size, $16\frac{1}{4} \times 1$ inches. Pages, 24. Lines, 5 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete.

Begins on fol. 21-a. Śivapūjaikkalitturai 1-a Kapilarakaval. 33-a.

Printed.

A poem on the greatness of the plough and the ploughman, said to have been composed by the great Kambar. This copy is in many ways different from the printed edition.

Beginning :

ஏரெழுபது.

மந்தர மனைய திண்டோள் மணிமுடிவளவன் சோழன்
சுந்தர பாண்டியன்றன் றெருகு மணி மகுடஞ்சூட்ட
அந்தணர் குலங்களெல்லா மறங்களும் விளங்கவந்த
விந்திர னுலகக்கம் போலிருந்தது பெரிய நாடே. (க)

ஈழமண்டல முதலென வுலகிற்றேன்று மண்டலத்தெறிபட வேந்தன்
தாழு மண்டலஞ்செம்பியன் வளவன்றன் செய்தான பிறந்துடைய
[தொரதரணியில் ?
வாழு மண்டலங் கனகமுமணியும் வரம்பு காவிரிக்குரம்பி
[லேகொழிக்குஞ்
சோழ மண்டலமிதற்கெதிராச் சொலு மண்டலஞ் சொல்ல
[வொண்ணுதே. (உ)

பார்வாழி நான்மறை நூற்பணிதராகுதி வாழி
கார் வாழி வளவர்பிரான் காவேரி நதி வாழி
சீர்வாழி பெருக்கள்ளர் பெருஞ்செல்வக்கிளை வாழி
யேர்வாழி யிசைவாழி யெழுபத்தொன்பது வள நாடே. (ங)

தொழுங்குலத்திற் பிறந்தாலுஞ் சுடர் முடி மன்னவராலு
மெழுங்குலத்திற் பிறந்தாலு மிவர்க்குப்பின் வணிகரெனுஞ்
செழுங்குலத்திற் பிறந்தாலுஞ் சிறப்புடையராலு
முழுங்குலத்திற் பிறந்தாரே யுலகுய்யப் பிறந்தாரே. (ச)

வேதநூன்முதலாக விளங்குகின்ற கலையனைத்து
மோதுவாரெல்லாரு முழுவான்றன் றலைக்கடைக்கே
கோதை வேன்மன்னவற்குங் கொழுவளமே வளமென்பா
ராதலாலிவர் செயலை யாருரைக்க வல்லாரே. (ரு)

End :

பார் வேந்தர் பெருஞ் செல்வம் பழுதுபடா தொருநாளு
மேர் வேந்தர் பெருஞ்செல்வமிழிவுபடாதிருக்கையினுற்
றேர் வேந்தர் போர்க்களத்திற் சிலர் வெல்வர் சிலர் தேர்ப்பர்
ஏர் வேந்தர் போர்க்களத்திலி ரப்பவருந்தோலாரே. (சுயகூ)
மன்னவர் கடந்தொழிலும் மறையவர்கடந்தொழிலும்
பின்னெண்ணப் பிறந்துடைய போராளர் பெருந்தொழிலும்
மன்னுமயன் வகையாக வழியருந்தத் தொல்குலத்தோர்
கன்னி மலர்த்திருப்புயத்தார் கண்ணுளர் தம்மாலே. (எய)

ஏரெழுபது எழுதி நிறைந்தது முற்றும்.
அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகர் துணை—சிவமயம்.
குமரகுருபரன்.

(கு. - பு.)—
இந்நூல் கவிசக்கிரவர்த்தி கம்பரால் இயற்றப்பெற்ற தென்பர். இது உழவுச்சிறப்பினையுணர்த்தும். எழுபது பாடல்களால் ஆனது. அச்சிடப் பெற்றுளது. அச்சுப்பிரதிக்கும் இதற்கும் பல்வேறு பேதங்கள் காணப் படுகின்றன. எல்லாப்பாடல்களும் முன்பின்னுகவுள. பிழையுடனிருத்த லோடு ஏடுகள் மிகவும் சிதலுற்றுக்கிடக்கின்றன. இப்பிரதியில் எழுபது பாடல்களிருக்கின்றன.

No. 2199. கணக்கதிகாரம்.

KAṆAKKADHIKĀRAM.

Substance, palm-leaf. Size, 16½ × 1¼ inches. Pages, 150. Lines, 4 and 5 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Seems complete.

Similar to the work described under No. R, 199 (c.)

Beginning:

கணக்கதிகாரம் சிற்றுரையுடன்.

இக்கணக்கி லொன்று மிடையூறு வாராமற்
பொக்கணவன் பெற்ற பொருகளிறே—இக்கணக்கு
நேரே விளங்கி நிகரின்றி நிற்கும்வண்ணம்
பார்மேல் விளங்கவே பார். (க)

குருவே துணை.

சீர்படைத்த வுந்திச் செழுங்கமலத்தயனைப்
பார்படைக்கவென்று படைத்த . . . கார்படைத்த
வோதமாமேனி யுரவோனுலகளந்த
பாதமே யெம்முடைய பற்று. (க)
என்பது, சருவேசுவரனுயிருந்துள்ள ச்ரீவாசு
தேவனை நமஸ்கரித்தோம் என்றவாறு. (க)
மண்டலங்கள் முன்படைத்து வாரிமலர் தொகுத்துப்
புண்டரீகன் பாதம் புகழ்ந்திறைஞ்சித்—தண்டமிழால்
நூற்படுத்திச் சிற்றெண்ணி . . . க்கணிதமெல்லாம்
பாற்படுத்திக் கூறுவன் யான் பாத்து. (உ)
என்பது கடவுள் வாழ்த்து. (உ)
வீழுமணிதரிருளகற்றி மெய்ப்பொருள்கள்
சூழுங்கதிரோன் சுடரொளிபோல்—வழுலகும்
வா[ன்] (ழ்)வித்த காரணத்தாலாகியதோ ரெக்கணக்குந்
தா[ன்] (ழ்)வில்லாவண்ணஞ் சமைத்து, (ந)

விருத்தம்.

ஆரியந்தன்னி னுனுமருந்தமிழ் தன்னினுனுஞ்
சீரியலாகச்சொன்ன திண்ணிய கணக்கு நூலைப்
பாரினில் மனிதற்கேற்கப்பகவினூலுரைக்கும்வண்ணஞ்
சூரியற்கெதிரே தோன்றுஞ்சுடர் விளக்கதனையொக்கும். (ச)
எப்பொழுதுஞ் சிந்திந்திருப்ப னெழுத்தெண்ணதனைப்
தப்பாம லென்றுந்தலை நிற்க—வெப்பொழுதும்
பூவகத்தான் மார்பகத்தே புல்குவாளென்னுடைய
நாவகத்தே வீற்றிருக்க நல்கு. (ரு)
என்பது, வாகீசுவரியாயிருந்துள்ள சரசுவதீ தேவியை நமஸ்கரித்தோம் என்றவாறு. (ரு)

என் கருதி வண்டமிழை யெண்ணி யெடுத்துரைத்த
புன் கவிதையென்று புகலாரே—மின்கொடியே
பாற்கடலிற்பாய்ந்த நீர் பாலாமாமென்கவிதை
யேற்குமென வுரைத்தேனி யான். (சு)

என்பது, மகர்திசைப்பட்ட அறிவினையுடையார் சந்நிதியிலே அஞ்ஞான புத்தியால் அகலிடத்து வழங்கிவரும் கணக்கினை யறிவித்தற்குக் காரணம் என்னேவெனில் ஆதிமூர்த்தியாயிருந்துள்ள ச்ரீ வாசுதேவன் பள்ளி கொண்டருளிய திருப்பாற்கடலிற் பாய்ந்த நீர் தன் நிறமொழிந்து பால் நிறமானுப்போல் வித்துவான்களுக்கு யான் சொன்ன கவியும் நன் கவி யாம் என்றவாறு.

End :

காலேகாணி நிலமுழுதானுங் கலந்தங் கொரு மாநிலமுழுதானும்
எலஞ்சேர்ந்த விருவற்கும் இறை வந்துற்ற தொருகாசு
ஞாலமுடைய கணக்கற்கு நாலு மாத்தைக் கவதியிட்டேன்
சீலமுடைய பெரியோரே தெரிந்து விதனைச் செப்பீரே.

என்பது, 'இறைக்கணக்கு இது.

(கு.'-பு.)—

இது மூவருடக்காடலாக்கு 199 (c)-ஆவது நம்பரில் வந்துள்ள கணக்கதிகாரம் போன்றுளது. உரைப்பகுதி மாத்திரம் அதில் மிக விரிவாகவுள்ளது ; இதில் உள்ள உரைப்பகுதி குறிப்புரையாய் மிகச் சிறிதாயுள்ளது. மிகப் பிழையுடன் காணப்படுகிறது. ஏடுகள் மிகவும் சிதைந்து முறிந்து கிடக்கின்றன.

No. 2200. கபிலரகவல்.

KAPILARAHAVAL.

Pages, 6. Lines, 5 on a page.

Complete.

Begins on fol. 33-a of the MS. described under No. D. 2198.

Same work as that described under No. D. 1826.

Beginning :

கபிலரகவல்.

சாற்றக் கேண்மின் சாற்றக் கேண்மின்
நான் முகத்தோன் கூறிய நாலாவகைவழியும்
பிறப்பின்னரும் பொருளைக் கூறுங்கால்
ஆண் முதிதோ பெண் முதிதோ ஆண்டவினை முதிதோ
செல்வஞ்சிறப்போ கல்விச்சிறப்போ
நல்லாப்பிறப்பு மியற்கையோ செயற்கையோ
அஞ்சுறுதீவினை துஞ்சுமோதுஞ்சாதோ.

துஞ்சும் போதந்தப் பஞ்சேந்திரியங்கள்
என் செயா நிற்குமோ வெவ்விடத்தேகுமோ
ஆற்றலுடையீர் அருந்தவம் செய்தால்
வேற்றுடம்பாமோ தன்னுடம்பாமோ.

End :

அது நிற்க,

மூவகை யுலகில் முழுதுணர்ந்தோர்க்குப்
பேரொளி மாமுனி பிறக்கக்கருவூர்
பெரும்பறச்சி வயற்றிற் பிறந்த கபிலனுநானே
என்னுடன் பிறந்தாராரென்னில்
ஆண்பால் மூவர் பெண்பால் நால்வர்
எங்களை வளர்த்தார் ஆராரென்னில்
ஊற்றுக்காட்டில் வண்ணாரகத்தில் உப்பை வளர்ந்தனள்

* * * *

பாரினுட்டில் ஆரூர் தன்னில், அந்தணர் வளர்க்க யானும் வளர்ந்தனன்
அது நிற்க,

மாரிதான் சிலரை வரைந்து பெயுமோ
மாநிலம் சிலரைத்தாங்கேனென்னுமோ
காற்றுஞ் சிலரை நீக்கி வீசுமோ
கதிரவன் சிலரைக் காயேனென்னுமோ
ஆதலால் குலமுமொன்றே குடியுமொன்றே
வழிபடு தெய்வமுமொன்றே யாதலால்
எந்நாளாகிலும் எப்போவாகிலும்
பொய்யுங் கள்ளமும், புலையுங் கொலையும்

* * *

ஆணும் பெண்ணுமல்லாது குலமுமில்லை
பேணி வகுத்தவர் பெரியவராமே.

சிவமயம்.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1826-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாம். அங்கங்கே பல பாட பேதங்கள் காணப்படுகின்றன. ஏடுகள் மிகவும் சிதலுற்றுக்கிடக்கின்றன. அச்சுப்பிரதிக்கும் இதற்கும் பல பேதம் உள. எழுத்துப்பிழையுடனிருக்கிறது.

No. 2201. கபிலரகவல்.
KAPILARAHAVAL.

Pages, 8. Lines, 10 on a page.

Complete.

Begins on fol. 1-a of the Ms. described under No. D. 1577.

Same work as the above.

(கு. - பு.)—

இந்நூல் முன் பிரதியில் வந்துள்ளதே. அதற்கும் இதற்கும் மிகவும் பாடபேதங்கள் காணப்படுகின்றன. அச்சுப் பிரதியிலும் வேறுபாடு காணப் படுகிறது. மிகவும் பிழையுடன் உளது. இதன் பின்னர் ஔவை பாடல் களில் சிலவும் தொண்டைநாட்டெல்லை குறிக்கும் சில செய்யுட்களும் இருக்கின்றன.

No. 2202. நாலாயிர திவ்ய பிரபந்தம்.

NALĀYIRA DIVYA PIRABANDHAM.

Substance, palm-leaf. Size, 11½ × 1¼ inches. Pages, 28. Lines, 10 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplet.

Same work as that described under No. 646.

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 646-ஆவது நம்பரில் வந்துள்ளதே யாகும். இப்பிரதியில் குலசேகரர் இயற்றிய "தருதுயர்ந்தடாயேல்" என்று தொடங்கும் வித்துவக்கோட்டுச்சுவாமி விஷயமான பாடல்கள் பத் தும், பெரியாழ்வார் இயற்றிய திருமொழியில் "நெய்க்குடத்தைப் பற்றி யேறும்" என்று தொடங்கும் பத்து பாடல்களும், திருமழிசையார் இயற்றிய திருச்சந்த விருத்தமும் இருக்கின்றன. நிரம்பவும் எழுத்துப் பிழையுடன் உளது. ஏடுகள் சிதலுற்றிருக்கின்றன.

No. 2203. திருக்கோளூர் பெண் பிள்ளை ரகசியம்.

TIRUKKŌḶŪR PEṆPIḶḶAI RAHASYAM.

Substance, palm-leaf. Size, 7¾ × 1¼ inches. Pages, 15. Lines, 5, 6 on a page. Character, Tamil and Grantha. Condition, good. Appearance, old.

Complete.

Same work as that described under No. 116 (p)

(கு. - பு.)—

இது மூவருடக் காடலாக்கு 116 (p)-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ள தேயாகும்; இப்பிரதியில் இது முற்றும் இருக்கிறது. வசன நடையில் அங்கங்கே சில சொற்கள் மாறுபட்டிருத்தலோடு இறுதியில் "பெரிய வாச்சான்பிள்ளையருளிச்செய்வர்" என்றும் காணப்படுகிறது.

No. 2204. ரஹஸ்யத்ரயஸாரம்.

RAHASYATRAYASĀRAM.

Substance, palm-leaf. Size, 19¾ × 1¼ inches. Pages, 378. Lines, 7-9 on a page. Character, Tamil and Grantha. Condition, much injured. Appearance, old.

Complete.

Same work as that described under No. D. 971.

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 971-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உளது. 10, 11 என்ற ஏடுகள் இரண்டும் காணப்பெறவில்லை. இப்பிரதி மிகவும் சிதைந்துளது. எழுத்து நன்றாயிருக்கிறது. எழுத்துப் பிழைகள் உள. கடையில் ஹேவிளம்பி௵ வையாசி௴ ௰௨௨ ஸமஸ்தம் எழுதியாயிற்று. பிள்ளைப்பாக்கம் வேலாமூர் பத்தங்கி ஸ்ரீநிவாஸராகவ ஷ்ஷஸ்ஷிவிகம் என்ற தொடர் மொழியொன்று காணப்படுகிறது.

No. 2205. திருவாசகம்.
TIRUVĀCAKAM.

Substance, palm-leaf. Size, 14⅛ × 1¼ inches. Pages, 213. Lines 8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Same work as that described under No. D. 1152.

End :

படியதனிற் கிடந்திந்தப் பதிபாசந்தவிரவிடுங்
குடிமையிலே திரிந்தடியேன் கும்பியிலே விழாவண்ணம்
நெடியவனும் நான்முகனும் நீய் ? காணுங் காணவொண்ணு
வடிகளெனக்கருளிய வாரூர்பெறுவாரச்சோவே.
செத்திடமும் பிறந்திடமுஞ் சாகாதிங்கிருந்திடமு
மத்தனையு மறியாதார் அறியுமதங்கென்னளவோ
ஒத்தநிலக்தொற்ற விடத்துறுதியெனு மோரருளை
யத்தனெனக் கருளிய வாரூர் பெறுவாரச் சோவே. (௰௧)

அச்சோபதிகம் முற்றும்.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1152-ஆவ்து நம்பரில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் அச்சோப்பதிகத்தினிறுதியில் (௰) (௰௧) (10, 11)-ஆவது பாடல்களாக இரண்டு பாடல்கள் பல கையெழுத்துப் பிரதிகளிலும், இதுவரையில் அச்சிட்டு வழங்கப்பெரும் அச்சுப்புத்தகப் பிரதிகளிலுங் காணப்பெறாதவைகளாய் எழுதப்பட்டுள்ளன. அச்செய்யுளிரண்டும் மேலே காட்டப்பட்டிருக்கின்றன. ஏடுகள் மிகவுஞ் சிதைந்திருக்கின்றன. 107-ஆவது ஏடு அதிகமாக இரண்டு எழுதிக்கோக்கப்பட்டுள்ளா. எழுத்துப்பிழை உள.

No. 2206. வைத்ய முறைகள்.
VAIDYA MUṞAIKAḶ.

Substance, plam-leaf. Size, 7½ × 1⅝ inches. Pages, 126 Lines 3–6 on a page. Character, Telugu. Condition, good. Appearance, old.

Contains recipes given in works on Indian Medicine and used by Indian doctors.

Beginning :

நக்ஷத்திர மூலிகைகள்.

மகா நக்ஷத்திரத்து வாதா மேற்புல்லுருவி பாலிற் குடிக்கக் கர்ப்பம் தரிக்கும். அந்த நாளிலோ நெல்லி செதிக்யோ குறையாது. அது வேரோடு நெல் விளையும். அத்திசெட்டு மீதபதநிகொசாதகட்டின்னுசெல்ல வேண்டிய பெறலாம். இந்தப் புல்லுருவி மூலத்தில் கையிலிருக்கப் பெண் வசமாம். இந்தப் புல்லுருவி அனுஷத்திலே யெடுத்து நெய்யிலே சாட்டால் லாபம். விசாகத்தில் வேம்புமேல் புல்லுருவி கையிலிருக்க எதிரி வருவன். விசாகத்தில் வெடத்தெரிமேல் புல்லுருவி.* * * * * * * * * * * *

விசாகத்தில் குருந்துமேல் புல்லுருவி கையிலிருக்கக் கண்டவர்கள் மோகிப்பார்கள். எருக்குமேல் புல்லுருவி ரேவதியில் எடுத்துக் காடியிலாவது பாலிலாவது போட்டுக் குடிக்க யாவருக்கும் தெரியாது.

* * * * * *

பகு மூத்ராணிக்கு :—தங்கடி பீய்யம், மூடெண்ட்ள நாடி ராகிபிண்டி சேரு, பாதபெல்லம் சேரு * * *

ஶ்லோகம் :

ஶ்லோகானாம் ஶிவவிஷ்ணுகராணாம்

மோஹனாவஶ்யம் கர்மணாம் வதநாதி |

கல்பகல்பித்தம் ஶ்லோகம் ஶுபாய

ஜநமோஹ வஶ்யம் ஸர்வயோகவதஞ்சி ||

End :

சூதக வியாதிக்கு மருந்து :—

பரங்கிப்பட்டை வராகனெடை (க) கண்டு பேரங்கி வராகனெடை (க) சைந்தவலவணம் வராகனெடை (க) மிளகு வராகனெடை (க). மஞ்சிள் வராகனெடை (க) பளிங்கம் வராகனெடை (க) பொன் முசுட்டை வராகனெடை (க) கொத்தமல்லிகை வராகனெடை, வேப்பநெத்து அரை வராகனெடை, கோணி மூன்று வராகனெடை, ஓமம் வராகனெடை, சங்கந்தழை மூன்று வராகனெடை, திப்பிலி வராகனெடை (க), கோணிப்பட்டை, வேப்பம்நெத்து, பொன் முசுட்டை இந்த மூன்றையும் சட்டியில்வைத்து கரிக்கி ஒரே வகையெல்லாம் கூடப்போட்டு நாலுபடி தண்ணீர்விட்டுக் காய்ச்சிக் காற்படி கஷாயம் நிற்க, நேரம் ஒன்றுக்குக் கால்படி கால்படி கஷாயம் குடிக்க ஆர்த்தவம் வாங்கிப்போகும். மூன்று நாள் கொடுக்கவும். பத்தியம்—உப்பு, புளிப்பு தவிர்க்கவும். கர்ப்பம் நில்ப்புநு. பஸ்புபு ஜில்லெரு பாலுலோநூறி குளிகலுவேசி ஒக குளிக திநி வேந்நீள்ளுத்ராகநு. உப்ப ஸமு தீருநு. எனிமிதி ரோஜுலு திநேதி.

(கு. - பு.)—

இது, பெரும்பான்மையாய் அந்தந்த வியாதிகளுக்கு உரிய ஔஷதப் பிரயோக முறைகளையும், வசியம், மோஹநம், ராஜவசியம் முதலான காரியங்களுக்கு உரிய பலவகைப் புல்லுருவி முதலாய ஓஷதிகளை இன்னின்ன நட்சத்திரங்களில் எடுத்துக்கொண்டு இன்னின்ன விதமாகக் பிரயோகித்தால் இன்னின்ன காரியங்கள் கைகூடும் என்னுமதாய பிரயோக வகையையும் சிறுபான்மையாக எடுத்துக் கூறுகிறது. இது, இன்னாரால்

தொகுத்தெழுதப் பெற்றதென்றும், இத்துணைத்தென்றும் தெளிய வியல வில்லை. உள்ள வளவிலும் ஏடுகள் பல முதலிலும் இடையிலும் இல்லா மல் தொடர்பில்லாமல் கோக்கப்பட்டுத் தமிழ், தெலுங்கு, மலையாளம் முத லாய பல பாஷைகளிலும் விரவி எழுதப்பட்டிருக்கிறது. இடையிடையே வடமொழி ஸ்லோகங்கள் சில காணப்படுகின்றன. மிகவும் எழுத்துப்பிழை யுடன் காணப்படுகிறது. ஆயினும், இது மிகவும் உபயோக முள்ளதாகும்.

No. 2207. அரும்பொருள் விளக்க நிகண்டு.

ARUMPORUḶ VIḶAKKA NIKAṆṬU.

Substance, palm-leaf. Size, 13½ × 1⅛ inches. Pages, 250. Lines 6 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, very old.

Complete.

Same work as that described under No. D. 10.

Colophon :—

ஆநந்தஹு பங்குனிமீ ௰௫உ புதன்கிழமை உரோகணி நட்சத்திரம் புதுவைமா நகரத்தில் இருக்கும் குழந்தைவேல் உபாத்தியாயர் அரும் பொருள்விளக்கநிகண்டு எழுதி நிறைவேறினது. புதுவை வித்வான் பொய்கைபாக்கம் சின்னைய உபாத்தியாயர் முதல்தாரத்து இரண்டாவது குமாரன் குழந்தைவேலு உபாத்தியாயர் எழுதினது.

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 10-வது நம்பரில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உளது. ஏடுகள் பல சிதலுற்று இருக்கின் றன. இந்நூல் அச்சிடப்பெற்றுளது.

No. 2208, சூடாமணி நிகண்டு உரையுடன்.

CŪḌĀMAṆI NIKAṆḌU WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 14 × 1¼ inches. Pages, 744. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete in 10th Tokudi. (Oliparriyapeyarttokudi).

Same work as that described under No. D. 13.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 13-வது நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாம். இப்பிரதியில் இந்நூல் 10-வது தொகுதியாகிய ஒலிபற்றிய பெயர்த்தொகுதி வரையுமேயுளது. ஏடுகள் சிறிது சிதைந் திருக்கின்றன. திருத்தமாகவுளது.

No. 2209. சேந்தன் திவாகர நிகண்டு.

ŚENDAN DIVĀKARA NIKAṆṬU.

Substance, palm-leaf. Size, 13⅞ × 1⅜ inches. Pages, 263. Lines, 6 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Contains Tokudis 2 to 9 only.

Same work as that described under No. D. 25.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 25-வது நம்பரில் வந்துள்ளதே யாகும். இப்பிரதியில் முதற்றொகுதியும், இறுதி தொகுதியும் நீங்க லாக மிகுதியான தொகுதிகள் மாத்திரம் உள. ஏடுகள் பூச்சியால் அரிக்கப்பட்டுள.

No. 2210, இலக்கண விளக்கம் உரையுடன்.

ILAKKAṆA VIḶAKKAM WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 16¼ × 1¼ inches. Pages, 388. Lines, 12 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete in Akattiṇaiyiyal.

Same work as that described under No. D. 36.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 36-ம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் ஆதிதொடங்கி அகத்திணையியன் முற்றும் உரையுடன் உளது. முதலில் இரண்டு ஏடுகள் நுனியில் மிகவும் முறிந்துகிடக்கின்றன. 32-வது ஏடு முதல் 53-வது ஏடு வரையில் உள்ள ஏடுகளில்லை.

No. 2211. நன்னூல் விருத்தியுரையுடன்.

NANNŪL WITH VIRUTTIYURAI

Substance, palm-leaf. Size, 14⅜ × 1¼ inches. Pages, 284. Lines, 9 and 10 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete in 58th Sūttiram of Peyariyal of Śolladikāram.

Same work as that described under No. 60.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 60 வது நம்பரில் வந்துள்ள நூலே யாகும். இப்பிரதியில் சொல்லதிகாரம் பெயரியல் " முதலை யையுறிற் சினை யைக் கண்ணுறும், அது முதற்காகில் சினைக்கையாகும் " என்ற (ருஅ)- வது சூத்திரவுரையோடு முடிவுறுகிறது. ஏடுகள் பல சிதலுற்றுச் சிதைந் துள. உள்ளவரையில் எழுத்துப்பிழையில்லாமலிருக்கிறது.

No. 2212. திருக்குறள் உரையுடன்.
TIRUKKUṞAḶ WITH COMMENTARY.

Pages, 8. Lines, 10 on a page.
Begins on fol. 41-a of the Ms. described under No. 2. T. D. C. Vol. I.

Contains 1 to 5 stanzas. Oḷukkamuḍamai Adhikāram only.

Same work as that described under No. D. 151 of T.D.C. Vol. I.

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 151-வது நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் அடக்கமுடைமையதிகாரத்தின் இறுதிக்குறளும், ஒழுக்க முடைமையதிகாரத்தின் 1–5 குறளும் பரிமேலழகர் உரையுடன் இருக்கின்றன.

No. 2213, திருக்குறள் பரிமேலழகர் உரையுடன்.
TIRUKKUṞAḶ WITH PARIMĒLAḺAKAR URAI.

Substance, palm-leaf. Size, 15¼ × 1½ inches. Pages, 510. Lines, 9 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete.

Same work as that described under No. D. 151 of the Descriptive Catalogue of Tamil MSS. Vol. I.

Colophon :

விக்ருதி ௵ வையாசி௴ ௨௰௨ சோமவாரம் எழுதி நிறைவேறியது முற்றும்.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 151-வது நம்பரில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் இந்நூல் உரையுடன் முற்றும் உளது. எழுதினமுறையும் நன்ருகவும், சுத்தமாகவும், தெளிவாகவும் உளது.

No. 2214. திருக்குறள் மூலம்.
TIRUKKUṞAḶ TEXT.

Substance, palm-leaf. Size, 10½ × 1⅝ inches. Pages, 266. Lines, 5 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Begins on fol. 1-a The other work herein is Nālaḍiyār 134-a.

Complete.

Same work as that described under No. D. 151.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 151-வது நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் மூலமாத்திரம் முற்றும் உளது, திருத்தமாயுளது.

No. 2215. நாலடியார் மூலம்.
NĀLAḌIYĀR TEXT.

Pages, 160. Lines, 5 on a page.

Begins on fol. 134 of the Ms. described under No. D. 2214.

Complete.

Same work as that described under No. 170. Text only.

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 170-வது நம்பர் பிரதியில் வந்துள்ள தேயாகும். இப்பிரதியில் இந்நூல் மூலமாத்திரம் முற்றுமுளது, திருத்தமாகவிருக்கிறது.

No. 2216. நாலடியார் பதுமனார் உரையுடன்.

NĀLAḌIYĀR WITH PADUMANĀR URAI.

Substance, palm-leaf. Size, 15½ × 1⅜ inches. Pages, 290. Lines, 5-7 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance, old.

Complete.

Same work as that described under No. D. 175.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 175-வது நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உளது. ஏடுகள் ஒரு சிறிது சிதலுற்றிருக்கின்றன.

No. 2217. சீவகசிந்தாமணி.

JĪVAKACINTĀMAṆI.

Substance, Sritalam. Size, 20 × 2¼ inches. Pages, 126. Lines, 16 on a page Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Contains 1 to 11, Ilambakas and 45 Stanzas in 12th Ilambakam.

Same work as that described under No. D. 102. Text only.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 102-ம் நம்பர் பிரதியில் வந்துளதேயாகும். இப்பிரதியில் முதல் தொடங்கி 12-ம் இலம்பகமாய இலக்கணையாரிலம்பகம் 45-வது செய்யுள் வரைக்கும் மூலமாத்திரம் உளது. ஏடுகள் மிகவும் சிதறுற்றிருக்கின்றன. 48-வது ஏடு முதல் எட்டிலெண்கள் குறிக்கப்படவில்லை.

No. 2218. உத்தண்டன் கோவை.

UDDAṆḌAN KŌVAI.

Substance, palm-leaf. Size, 16 × 1⅜ inches. Pages, 180. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Wants 40 Stanzas from 310 to 349 in the middle. Otherwise complete.

Same work as that described under No. R. 332.

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக்காடலாக்கு 332-ம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் 310 முதல் 349 வரையிலான செய்யுட்களை கொண்டுள்ள 78 முதல் 87 வரை ஏடுகள் இல்லை. மிகுதியான பகுதி முற்றும் உளது. ஏடுகள் மிகச்சிதலுற்றிருக்கின்றன. இது ஷெ பிரதிக்கு மாத்ருகையான பிரதியாகும்.

No. 2219. திருவேங்கட சதகம்.

TIRUVEṄKAṬA ŚATAKAM.

Substance, palm-leaf. Size, 17 × 1⅜ inches. Pages, 100. Lines, 4 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete.

100 verses, in praise of God Śrī Vēṅkaṭēśa, by Nārāyaṇan.

Beginning :

வடவேங்கிட சதகம்.

செந்திருமருவு மார்பன் சீரடிக்கமலந்தன்னைச்
சிந்தையில் மகிழ்ந்தெந்நாளுஞ் சீர்தமிழ்நாதர் பாட
அந்திவளனவன்றன் பாகத்தம்பிகையருளா நின்ற
தந்திமாமுகனைப் போற்றத் தழைத்திடுஞ் சதகந்தானே.

கங்கை காவேரி நதி புஷ்கரணி வாசனே . . (க)
க. . . . . .ணி பாதனே
கருநீலவண்ணனே காயாம்பூமேனியாங்
கருணாநிதி கடவுளே
செங்கையதனால் அமிர்தமுண்ட திருவாயனே
அண்டருக்கமிர்தமாலே
அனந்தமான முனிவோர்கள் துதி செய்கின்ற
ஆதி வேதாந்த முதலே
செங் . . . . . . .ல் வண்ணனே திகழ் வரதராசனே
திரிமூர்த்தி ரூபனே நீ
செயமானவகளாகவே யிச்சிறையகற்றியருள் செய்திடக்
கிருபை புரிகுவாய்
மங்கை . . . . கொங்கையதின்மீதிலே ..
மாதவ சுவ ரூபனே நீ
வடமலையில் வளர்கின்ற திருமருவும் வாசனே
வடவேங்கடா தீசனே. (க)

End :

கார்மேக முகிலளககமலையனுகூலனே . . . .
. . . .
. . . . நின்று தினமும்.
சார்மாயப்பஞ்செழுத்தையு மொருமனதாய்ச் சதாகாலமுந் துதி
செய்ய . . . . உந்தியிலனுதினம் சகல
கலை பாலித்தருள்.
பார்மேவுலோக முழுதளந்த பரிபாலனே பைந்தமிழ்க்குதவியேநீ

பாமாலை துதி செய்த நாராயணன் மீதில் பட்சமாய்க்கிருபை வைத்து

வார்மேவுகளப முலையலமேலு மங்கையுடன் வந்து காத்தருள் செய்குவாய்.

வடமலையில் வளர்கின்ற திருமருவும் வாசனே வடவேங்கடா தீசனே.

வாழிச்செய்யுள். (கூகூ)

* * * *
* * * *

வடமலையில் வளர்கின்ற திருமருவும் வாசனே வடவேங்கடா தீசனே (ா)

தாரணஞு மார்கழிமீ ௰௫ௐ வடவேங்கிடசதகம் எழுதினது முற்றிற்று.

குருவே துணை.

(கு. - பு.)—

இந்நூல் 'நாராயணன்' என்னும் புலவரால் திருவேங்கடமுடையான் மீது துதிரூபமாக இயற்றப்பெற்றதொரு 'சதகம்' என்ற பிரபந்த விசேஷமாகும். ஒவ்வொரு செய்யுளின் முடியிலேயும் 'வடமலையில் வளர்கின்ற திருமருவும் வாசனே, வடவேங்கடாதீசனே' என்றவொரு மகுடம் புனையப்பெற்றுளது. இப்பிரதியில் இந்நூலின் நூறு செய்யுளும் உள. ஆயினும் ஏடுகள் மிகவும் சிதலுற்றுச் சிதைந்தும் முறிந்துங் கிடக்கின்றன வாதலின் படித்தற்கேயரிதாயுள்ளது.

No. 2220. பாப்பையா பிள்ளை உலாமடல்.

PĀPPAIYĀ PILLAI ULĀMADAL.

Substance, palm-leaf. Size, 17¾ × 1⅜ inches. Pages, 54. Lines, 5 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

Same work as that described under No R. 368.

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக்காட்லாக்கு 368-ஆவது நம்பர் பிரதிக்கு மாத்ருகையான பிரதியென்று தெரிகிறது. ஏடுகள் சிதலுற்று இருக்கின்றன.

No. 2221. நஞ்சமகாராசன் கதை.

NAÑJAMAHĀRĀJAN KATHAI.

Substance, paper. Size, 13¼ × 8⅜ inches. Pages, 19. Lines, 28 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Incomplete.

Same work as that described under No. D. 418.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக் 418-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். D 419.-ஆவது நம்பர் பிரதி இப்பிரதிக்கு மாதுருகையான பிரதியென்று தெரிகிறது. முற்றுப்பெறவில்லை.

No. 2222. அருணாசலபுராணம் உரையுடன்.

ARUṆĀCALAPURĀṆAM WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 14⅞ + 1¼ inches. Pages, 600. Lines, 6 on a page. Character, Tamil. Condition, Much injured. Appearance, old.

Incomplete.

Begins on fol. 1 a. The other work herein is Villiputtūrār Bhāratam with commentary, 304a.

Same work as that described under No. D 550.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 550-ஆவது நம்பர் பிரதியிலே வந்துள்ள நூலேயாகும். உரை மாத்திரம் சிறிது வசன நடையில் வேறுபட்டிருக்கிறது. இறுதியில் இரண்டொரு ஏடுகளும், இடையில் 49, 198, 300, ஆகிய இவ்வேடுகளும் காணப்பெறவில்லையாதலின் அவையிற்றில் அடங்கிய பகுதி நீங்கலாக முற்றுமுளது. ஏடுகள் சிதலுற்றுக்கிடக்கின்றன.

No. 2223. அருணாசலபுராணம் உரையுடன்.

ARUṆĀCALAPURĀṆAM WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 15¼ × 1⅜ inches. Pages, 600. Lines, 6 on a page. Character, Tamil. Condition, very much injured. Appearance, old.

Incomplete.

Same work as the above.

(கு. - பு.)—

இந்நூல், முன் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் பாவநீர்த்தச்சருக்கம் வரையில் உரையுடன் உளது. இதில் உள்ள ஏடுகள் முற்றும் நிரம்பவும் சிதலுற்று முறிந்துகிடக்கின்றன. பல ஏடுகள் முறிந்து போய் ஏட்டின் ஒரு சிறிது பாகமே கோக்கப்பட்டிருக்கின்றன.

No. 2224. கந்தபுராணம்.

KANDAPURĀṆAM.

Substance, palm-leaf. Size, 17 × 1⅝ inches. Pages, 882. Lines, 7 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance, old.

Contains Sambhavakāṇḍa, Asurakāṇḍa, Mahēndrakāṇḍa, and 1 to 121 Stanzas in Gajamukanutpattippaṭalam of Dakṣakāṇḍa only.

Same work as that described under No. 540.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 540-ஆவது நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் 1 to 359 ஆன ஏடுகளில், முதல் மூன்று காண்டங்கள் தொடர்ந்திருக்கின்றன. 360-ஆவது ஏட்டிலிருந்து ஆறுவதாகிய தக்ஷகாண்டம் தொடங்கி, கயமுகன் உத்பத்திப்படலம் 121-ஆவது செய்யுட் வரையிலுமான பகுதியுளது. ஏடுகள் அங்கங்கே ஒரு சிறிது முறிந்துகிடக்கின்றன. இரண்டொரு ஏடுகள் இரண்டு பகுதியாக ஒடிந்துமிருக்கின்றன.

No. 2225. கந்தபுராணம்.
KANDAPURĀṆAM.

Substance, palm-leaf. Size, 18¾ × 1¼ inches. Pages, 974. Lines, 9 and 10 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete in Dakṣakāṇḍa.

Same work as the above.

(கு. - பு.)—

குறிப்பு.—இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 540-ஆவது நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் ஆதி தொடங்கி தக்ஷ காண்டம் வரையிலும் உளது. ஏடுகள் பல மிகவும் முறிந்தும் சில சிதலுற்றும் இருக்கின்றன. 30-ஆவது ஏடு காணப்பெறவில்லை.

No. 2226. செவ்வந்திப்புராணம் உரையுடன்.
ŚEVVAṆDIPPURĀṆAM WITH COMMENTARY

Substance, palm-leaf. Size, 13¼ × 1 2/8 inches. Pages, 374. Lines, 8 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Incomplete.

Begins on fol. 1 (*a*). The other work herein is Tiruviḷaiyadaṛ purāṇam Bhayaṅkaramālai with commentary 188 (*a*)

Same work as that described under No. D. 583.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 583-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் கரிகாற் சோழனுக்குப் பட்டங் கட்டுங்கதைவரையில் உள்ளது. உறையூர் அழித்த சருக்கம் 89-ஆவது செய்யுள் வரையிலும் உள்ளது. மிகுதியான பாகமும், இறுதிச் சருக்கமான தாயானச் சருக்கமும் இல்லை. ஏடுகள் மிகவுஞ் சிதலுற்றுள்ளன. அதற்கும் இதற்கும் பல விடங்களிலேயும் பாட பேதங்கள் காணப்படுகின்றன.

No. 2227. மதுரைச்சொக்கேசர் திருவிளையாடற் பயங்கரமாலை.
MADURAICCOKKĒŚAR TIRUVIḶAIYĀḌAṚ BHAYAṄKARA-MĀLAI.

Pages, 160. Lines, 6 on a page.

Begins on fol. 188 (a) of the MS. described under No. 2226. Complete.

A poem, each stanza of which embodies the story of one of the Divine Sports of God Śokkēśar (Śiva) of Madura, and ends with the refrain *Sokkē Paradēśi Bayaṅkaranē.* Hence the title *Bayaṅkara Mālai*. The name of the author is not known.

Beginning :

பரிவுடன் செல்வ மதுராபுரிச் சொக்கர் பாங்கிற் செய்த
திருவிளையாடற் பயங்கரமாலையைச் செப்பிடவே
சொரிதரு மும்மதநால்வாய் தழை செவி[துங்கட] (மையங்கர)செங்கட்
கரிமுகக் கற்பகக்களிறே கழல் தந்து காத்தருளே (க)

இதன் பொருள் :—என்றது, அறுபத்துநாலு திருவிளையாடலைப் பயங்கர மாலையாகப்பாடி. இந்தப் பயங்கரமாலையைப் படிக்கின்றவர்களுடைய பாவ த்தை யறுக்கையாலே பயங்கரமாலையென்று பேர் உண்டானது. இந்தப் பயங்கரமாலையாகிய அறுபத்துநாலு திருவிளையாடல் இந்திரன் பூசை முதல் வேதம் ஓதின மட்டும் அடியார்களுக்காகச் சொக்கநாதசுவாமி வருந்தித் திருவிளையாடின பாட்டுக்கு விக்கினம் வராமல் ஆனை முகமும் மும் மதமும் தழை செவியும் நான்றவாயும் அஞ்சு கரமும் பெருவயிறும் சிற்றடியுமுடைய சித்திவிநாயக! சித்தியைக் கொடுக்கிற விக்கினேசுவரனே! அடியேன் பாடுகிற கவி பயங்கர மாலைக்குக் குற்றம் இல்லாமற் காத் தருள் கற்பகமே! அடியார்களுக்காக மதுராபுரியிலே சொக்கநாதசுவாமி கிருபைவைத்து இரட்சிக்கிறேமென்றிரங்கி அன்பர்களுக்கு விக்கினம் வறுமை யென்கிற தீராத பாதங்கள் பகை பரதேசி மிடியர் துணை ? யில்லாதவர்களுக்கு இரங்கி விளையாடின அறுபத்துநாலு திருவிளையாட லுக்குங் குற்றம் வாராமல் காத்தருளவேணும் என்றவாறு. சிவமயம்.

(1) இந்திரன் பழி தீர்த்த திருவிளையாடல்.

பூவிற்ற கௌட விருத்திராசுரனைப் பொருது கொன்று
மேவுற்ற பாவத்தை மண் பெண் புனல் மரமேல் நிறுத்தி
சேவிற்றடய் பொன் விமானமுஞ் சாற்றிய தேவர்கள் கோன்
பாவத்தைத் தீர்த்த சொக்கே பரதேசி பயங்கரனே (க)

என்றது, முன்னொரு காலத்திலே விருத்திராசுரன் என்று ஓர் அசுரன் உண்டு. அவன் சகல தேவர்கள் இருஷிகள் மற்றும் உள்ள சகலரையும் இடுக்கண்படுத்துவான். அப்போது சகலரும் துக்கமுற்று இந்த அசுரனைச் சயிக்கிற வகை எப்படியென்று விசாரமிட்டுச் சப தபங்கள் ஒன்றும் முடிக்க இடமில்லாமற்றிரிந்து உழலுகிற காலத்திலே விருத்திராசூரனை ஆயுதங் களினாலே சாகா வரமும் பெற்று இருக்கிறானே; இதுக்கு உபாயம் எப்படி யென்று எண்ணியிருக்கிறபொழுது முப்பத்திரண்டு பழு வெலும்பு உண் டானால் அதை வச்சிராயுதமாய்க் கடைந்து அந்த ஆயுதத்தினாலே அவனைக் கொல்லலாமென்று சொல்ல முப்பத்திரண்டு பழு வெலும்பு ஆருக்குண்டென்று விசாரிக்குமிடத்திலே ததீசி மகர்ஷிக்கு உண்டென்று கேட்டுத் தேவேந்திரனும் இருஷிகளும் கூடித் ததீசி மகர்ஷியினண்டைக் குப் போனார்கள். அப்போது ததீசி மகர்ஷி நீங்கள் வந்த காரியம் என்ன வென்று கேட்டார். அப்போது இவர்கள் விருத்திராசூரனுடைய பாதை பொறுக்கக்கூடாததாயிருக்கிறது. அது தேவரீராலேயே தீரவேண்டுமென் றார்கள். அதுக்கு வேண்டியதென்னென்று ரிஷி கேட்டார். அதுக்கு இவர்கள் முப்பத்திரண்டு பழு வெலும்புண்டானால் அதை வச்சிராயுத மாய்க் கடைந்துகொண்டு அவனைச் சயிக்கலாமென்றது கண்டு தேவரீருக்கு முப்பத்திரண்டு பழு வெலும்பாமே ? அது கேட்க வந்தோம் என்று

சொன்னார்கள். அப்போது ததீசி மகர்ஷி யிருந்து இத்தனைபேர் பிழைக்கிறது நல்லதோ? நாம் ஒருவன் பிழைக்கிறது நல்லதோ? என்று தம்முடைய சீவனைவிட்டு எலும்பை யெடுத்துக்கொண்டு போங்கள் என்று போனார். அந்த முப்பத்திரண்டு பழுவெலும்பையும் எடுத்து வச்சிராயுதமாய்க் கடைந்துத் தேவேந்திரன் கையிலே பிடித்துக்கொண்டு விருத்திராசுரனைக் கொன்றான். அவனைக் கொன்ற தோஷம் இந்திரனைப் பிரம்ம ஹத்தியாகத் தொடர்ந்து அலைத்தது. அது கண்டு சகல ருஷிகளும் தேவர்களும் கூடி அந்தப் பாவத்தை நாலு பங்கு பண்ணி மண்ணிடத்தில் ஒரு பங்கும் பெண்ணிடத்தில் ஒரு பங்கும் மரத்தில் ஒரு பங்கும் நீரில் ஒரு பங்கும் ஆகப் பங்கீடு பண்ணினார்கள். [அது] இவைகளிலே ஒவ்வொன்றும் இரண்டானது. மண்ணுக்கு குழியெடுத்தால் தூரவும் உவர் மண்ணும், மரத்துக்கு வெட்டித் தழையவும் பிசினும், நீருக்கு நுரையும் சுசியும், பெண்களுக்கு மாதவிடாயும் புருஷனுடனே சதாகாலமும் கூடவும் என்றும், அந்தப்பாவத்தை யகற்றித் தேவேந்திரன் பிரம்மஹத்தியை அகற்றினார்கள். அதன் பிறகு சகல ருஷிகளுடனேயும் இந்திரன் முன்புபோலே இராசாங்கமாயிருக்கிறகாலத்திலே வேட்டையாடவேண்டுமென்று பூமியிலே போய் வேட்டைக்காரரைப் பார்த்து வரச்சொல்லிச் சொன்னான். அவர்கள் வந்து பார்த்து வேட்டைக்காரன் தலம் இருக்கிறதென்று சொன்னவுடனே இந்திரன் பூமியின்கண்ணே வந்து அவர்கள் சொன்ன காட்டிற்போய்ப் புலி கரடி மான் மறை முயல் மற்றுமுள்ள பல மிருகங்களையுங்கொன்று தென் காட்டிற்றிரும்பி வேட்டையாடவேண்டுமென்று வந்தான். அப்போது சற்றிருந்த பிரம்மஹத்தியும் அவ்விடத்திலே நின்றுவிட்டது. அப்போது இந்திரனுக்குச் சற்றிருந்த மயக்கமும் போய் ஞானக்கருத்துண்டாயிற்று. அப்போது தெற்கே திரும்பினவுடனே மிருகங்களைக் கொல்லவும் மனது வரவில்லை. இவ்விடங்களிலே அதிசயமுண்டு போய்ப்பாருங்கோள் என்று அனுப்பி நின்றான். கடம்ப வனத்தை நோக்கினவுடனே பிரம்மஹத்தி வேறானபடியினாலே "வேறுநிலை" என்று பேரானது. காடு பார்த்தவர்கள் வந்து ஒரு இடத்திலே கடம்பு மெத்த நிற்கிறது. அவ்விடத்திலே ஒரு ஓடையும் இலிங்கமும் இருக்கின்றனவென்று சொன்னவுடனே இந்திரன் பார்த்து அதிசயமுற்றுப் பூசிக்கவேண்டுமென்று பூவெடுத்து வரச் சொன்னான். ஒரு இடத்திலேயும் பூ கிடைக்கவில்லையென்று அவர் அவர் சொல்லக்கேட்டு இந்திரன் மனம் மடிந்து துக்கித்திருந்தான். அதையறிந்து சுவாமி வேட்டையாடின இளைப்பொன்றும் பாராமல் நம்மைப் பூசிக்கவென்றானல்லோவென்று அந்த ஓடையிலே பொன்னினாலே தாமரைப்பூ உண்டுபண்ணினார். அப்போது இந்திரன் சந்தோஷப்பட்டுப் பூசித்து நம்முடைய சுவாமி வெய்யிலிலே இருக்கலாமோவென்று முன் பழி தீர்க்கப் பண்ணின இந்திர விமானத்தைத் தெய்வத்தச்சனையழைப்பித்து எடுத்து வரச்சொல்ல அதை அஷ்டகஜம் தாங்கியெடுத்துவந்தன. அப்படி அட்டகஜத்துடனே சாத்தினான். அழகு மிகுந்தபடியினாலே சொக்கநாதரென்று பேரும் பொற்றாமரையென்று பேருமிட்டுப் பழியுந்தீர்ந்து தன் பதியிற் போனான் என்றவாறு. (க)

இந்திரன் பழி தீர்த்த விளையாடல் முற்றும்.

வெள்ளையானை சாபந்தீர்த்த திருவிளையாடல்.

End :

(64) வேதங்கண்ட திருவிளையாடல் :—

மரியாதமாமறை மாவீர பாண்டியன் வாழுமந்நாள்
தெரியாமல் அந்தணர் எல்லாந் திகைப்பத் தெளிந்திடவே
விரிவான வேதத்தை யெல்லாருங்காண விளம்பிமிகப்
பரிவாயுரைத்தசொக்கே பரதேசி பயங்கரனே. (௬௪)

என்றது. முன் பிரளய காலத்திலே எல்லாம்போய் * * * * * * கிருத யுகத்திலே கண்ணுவ ரிஷி முதலாகிய ருஷிகள் கூடிக் கலியுகத்திலே பிராம்மணர் வேதமோதாதபடியினாலே வேதமிறந்துபோயிற்று. ஆனபடியாலே இப்போது நாலு வேதமும் ஆறு அங்கமும் தெரியவில்லையென்று சகலரும் விசாரமிட்டு இருக்கிற சமயத்திலே ஆகாசவாக்காக மதுரையிலே போங்கோளென்றது. அவர்கள் சந்தோஷப்பட்டு மதுரையிலே வந்து சுவாமியைச் சேவித்திருக்கிற வேளையிலே சுவாமி குரு வடிவுகொண்டு உடையுத்தரீயங்களும் போட்டுக்கொண்டுவந்து அவர்கள் கிட்டவிருந்து கொண்டு, இருக்கு யஜுஸ் ஸாமா அதர்வணம் ஆக நாலு வேதமும் ஆறங்க(ம்) மந்திரம், வியாகர்ணம் நிகண்டு சந்தோவிசிதி நிருக்தம் சோதிடம் ஆக ஆறும் நன்றாக அவர்களுக்கு அறிவித்து அஷ்டகசம் தாங்கியிருக்கிற ஆலயத்திலே யொளித்தார். அப்போது சகல இருஷிகளும் சந்தோஷப்பட்டுச் சொக்கநாத சுவாமியை வாழ்த்தியிருந்து நாலு வேதத்தையும் அதிகரித்து பூலோகம் எங்கும் வேதம் உண்டாக்கினார் என்றவாறு. (௬௪)

இந்த அறுபத்துநாலு திருவிளையாடல்களைக் கற்பவர் கேட்பவர் மனம் வைத்தபேர்கள் இவர்களுக்கு இம்மையிலே புத்திர பௌத்திரபாரம் பரியமும் * * * * * * * * சத்துருசயம் உண்டாம். சுத்த வீரியம் உண்டாம். நினைத்தது கைகூடும் * * * * * * மறுமையிலே இந்திர லோகத்திலும் சத்திய லோகத்திலும் வைகுண்ட லோகத்திலும் கைலாயத்திலும் இருப்பார்கள் * * * * * * * * * நீடூழி காலம் வாழ்ந்திருப்பார்கள் என்றவாறு. (௬௪)

சொக்கநாதசுவாமி துணையாகவும்.

விஷு௵ பங்குனிமீ௳ யஅ௳ மந்தவாரமும் பூச நக்ஷத்திரமும் திருதீயையுங் கூடின தினத்திலே தேவனும் பட்டணத்துச் சீமை மருதாடு சிவக்கொழுந்து பிள்ளை குமாரன் தில்லைச் சிவக் கொழுந்தன் அறுபத்து நாலு திருவிளையாடல்களைக்கொண்ட **பயங்காமாலை** முற்றும்.

தாண்டவராயன் ஸ்வஹஸ்தலிகிதம்.

(கு. - பு.)—

இந்நூல், மதுரையில் சொக்கநாதசுவாமி கருணைகொண்டு விளையாடிய திருவிளையாடல்களை உள்ளுறைப்பொருளாகக்கொண்டு ஒவ்வொரு திருவிளையாடலுக்கும் ஒவ்வொரு பாடலாக வமைந்துளது. ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் "சொக்கே பரதேசி பயங்கரனே" என்றதொரு சொற்றொடர் மகுடமாக வமையப்பெற்றது. ஆதலின் இதன் பெயர்

காரணப்பெயராகும் என்க. ஆசிரியர் தெரியவில்லை. ஒரு உரையும் உடன் உள்ளது. நடுவில் 14 to 32, 33, 71 to 99 என்ற இவ்வேடுகள் காணப்பெறவில்லை.

No. 2228. வில்லிபுத்தூரார் பாரதம் உரையுடன்.

VILLIPUTTŪRĀR BHĀRATAM WITH COMMENTARY.

Pages, 28. Lines, 6 and 7 on a page.

Begins on fol. 304 (*a*) of the Ms. described under No. D. 2222 Contains Pāyirac carukkam only.

Same work as that described under D. No. 529.

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 529-ஆம் நம்பரில் வந்துள்ள நூலே யாகும். இப்பிரதியில் பாயிரச்சருக்கமாத்திரம் உரையுடன் உளது. ஏடுகள் மிகவும் சிதலுற்றும் சில அடியோடு முறிந்தும் சில நுனியில் ஒடிந்தும் கிடக்கின்றன. முதலில் (2) ஏடுகள் இல்லை. அவை முறிந்து விழுந்துவிட்டனபோலும்.

No. 2229. நந்தீசுவரர் நடுவினை.

NANDĪŚUVARAR NAḌUVINAI.

Pages, 9. Lines, 6 on a page.

Complete.

Begins on fol. 14 (*a*) of the Ms. described under No. D. 80, 1.

Explains the religious importance and greatness of the sacred "Five-lettered" Formula in praise of God Śiva. The name of the author is not known.

Beginning :

நந்தீசுவரர் நடுவினை.

நகார மகார நற்சுடர் அருள்கொண்டு மகார
நகார மலமாய் மறைந்திடு சத்தியைச்
சிகார மருளாய் யகார முயிராய்
அறிவதுவாமே. (க)

நகாரமகாரஞ் சிகாரம் நடுவாய்
வகார யகார வாவென்று வாங்கி
நகார மகார மிரண்டு மறுத்து
சிகார நடுவாய்ச் சிறந்திருந்தானே. (உ)

நடுவிசைந்தானெங்கள் நற்சுடர் நந்தி
நடுவிருந்தான் சிவன் சிவவாசி வாசியாம்
நடுவிருவாசியை நாட்டவல்லார்க்கு
நடுவிருவாசி நடுவினையாமே (ங)

அஞ்சுநடுவே யழியாத்தலைகாட்டி
நெஞ்சில் நடுவே நிறுத்தினானெந்நந்தி
பஞ்சாட்சரத்தைப்பகுந்து காட்டி
அஞ்சிலிரண்டையறுத்தானெந் நந்தியே. (௪௭)

End :

சீயெழுத்தாலே சிந்தை தெளிந்தது
சீயெழுத்தாலே திருவடி பெற்றது
சீயெழுத்தாலே சிற்பரமானது
சீயெழுத்தாலே தெளிந்துகொண்டோமே.

நந்தீசுவரர் நடுவினை எழுதி முடிந்தது.

(கு. - பு.)—

இந்நூல் சிவ பஞ்சாட்சர மகிமையைக் கூறுவது. யோகமந்திர விஷயமானது. நந்தியைத் தெய்வமாகக் கொண்டுளது. முப்பது பாடல்கள் கொண்டுளது. முற்றுமுளது. இதில் எழுத்துப்பிழை மிகவும் காணப்படுகிறது. ஆசிரியர் இன்னாரென்று தெரியவில்லை.

No. 2230. நந்தீசுவரர் பாயிரம்.
NANDĪŚUVARAR PĀYIRAM.

Pages, 3. Lines, 6 on a page.

Begins on fol. 87 (*a*) of the Ms. described under No. D 1490.

Contains 5 stanzas only.

Verses, in which, the author devoutly prays that God Śiva may bless him with devotion to Himself, the ability to loyally serve His devotees, and such other good qualities and deeds of a truly pious *Śaiva*.

Beginning :

நந்தீசுவரர் பாயிரம்.
திருச்சிற்றம்பலம்.

மறைகள் நிந்தனை தெய்வ நிந்தனை பெரு மனமும்
தறைக்க [ ] (னைம்) புலனே தனக்கேவல் செய் சதிரும்
பிறவி தீரொணுப் பேதையர் தம்மொடு பிணக்கும்
உறுதி நல்லறஞ் செய்பவர் தங்களொடுறவும். (௧)

மனமும் வாக்கு நின்னன்பர்பால் உறுப்பொடு மகிழ்வும்
கனவினுஞ் சிவனன் பருக்கடிமையாங்கருத்தும்
நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையும்
புனிதனைச் சிவகீர்த்தியை யுரைத்திடும் பொலிவும். (௨)

* * *

யாது கேட்கினு மன்பருக்கீவதேயியல்பும்
மாதவித்தினோர் விருப்பொடு வணங்கிடும் மகிழ்வும்
ஓது நல்லுபதேசமு முறுதியு மன்பர்
தீது செய்யினும் சிவலீலை யென்றெனக் கொளுந்தெளிவும். (௪)

உறக்கமே யுறங்கினும் நரகில் வீழ்கினும்
இறக்கினும் பிறக்கினு மின்பந்துய்க்கினும்
பிறைக்கொழுந்தணி சடைப்பெருமானுன்னடி
மறக்கொணு நல்வரம் வழங்கவேண்டுமால். (௫)

திருச்சிற்றம்பலம்.

(கு. - பு.)—

இச்சிறு நூல், ஐந்து பாடல்களால் அமைந்து சிவபிரானிடத்துப்பக்தியையும் சிவனடியார்களிடத்து மனோவாக்காயங்களால் இடையருது செய்யும் அடிமையையும், இன்னுமின்னோரன்ன பலவற்றையும், தமக்கு வழங்க வேண்டும் என்று ஓர் பக்தர் சிவபிரானை நோக்கி வேண்டுவதாகவுளது. இது ஒரு தனித்த நூலன்று. எழுத்துப்பிழையுடனுளது. ஏடு சிதலுற்றுளது.

No. 2231. சல்லியநூல் உரையுடன்.

ŚALLIYANŪL WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 15 × 1¼ inches. Pages, 108. Lines 4 to 8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Begins on fol. 1 (*a*). The other works herein are Dhanvantiri Vālaiśāstram 55 (*a*). Pañcapakṣiśāstram. 91 (*a*). Tēraiyar Padārthaguṇacintāmaṇi 111 (*a*).

Same work as that described under No. R. 353 (*b*).

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு. 353 (*b*)-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும்; இப்பிரதியில் இது முற்றுமுளது. உரைமாத்திரம் சிறிது வசன நடையில் மாறுபட்டுளது. ஏடுகள் சிதைந்துள்ளன. சில மந்திரயந்திரங்கள் பொறிக்கப்பட்டுள. இது முடிவுற்றபின்னர் (2) ஏடுகளில் "கருவகை" என்ற பெயருடன் சில கருவும் அதற்குரிய தேவதையான 'சக்கதேவியின்' மந்திரங்களும் சக்கிரங்களுடன் எழுதப்பட்டுள.

No. 2232. எழுவகைத் தோற்றம்.

ELUVAKAIT TŌṞṞAM.

Pages, 7. Lines, 6 on a page.

Begins on fol. 120 (*a*) of the Ms. described under No. D. 1490 Contains 7 stanzas only.

Same work as that described under No. D 1240.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1240-ஆவது நம்பரில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் 1 to 7 செய்யுட்களே இருக்கின்றன. எழுத்துப்பிழையுடன் காணப்படுகிறது. ஏடுகள் சிறிது சிதைந்திருக்கின்றன.

No. 2233. ஔவை பாடல்.
AUVAI PĀḌAL.

Pages, 8. Lines, 5 on a page.

Begins on fol. 1 a of the MS. described under No. D. 1847.

A collection of the verses composed by the well-known Auvaiyār.

(கு. - பு.)—

இது ஔவையாரால் பாடப்பட்ட பாடல்களைத்தொகுத்து எழுதப்பட்டது. இதில் சுப்பிரமணியருக்கு ஔவையார் சொன்னது என்ற தலைப் பெயருடன் ஐந்து பாடல்களும், அறம்பாடின கவியென்ற பேருடன் நான்கு பாடல்களும், "கர்ப்ப முதல் இன்றளவும்" எனத்தொடங்கும் பாடல் முதலாக, "கருப்பைக்குள் முட்டைக்கும்" என்றதான பாடல்வரை ஏழு பாடல்களும் இருக்கின்றன. ஏடுகள் மிகவும் சிதைவுற்றிருக்கின்றன.

No. 2234. அகத்தியர் வைத்தியரத்தினச் சுருக்கம் முன்னூற்றறுபது.
AKATTIYAR VAIDDIYARATTINAC CURUKKAM MUNNŪṞ ṞAṞUPADU.

Substance, palm-leaf. Size, 8 × 1¼ inches. Pages, 70. Lines, 7 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Incomplete.

Same work as that described under No. R. 941 (*a*)

(கு. - பு.)—

இந்த நூல் மூவருடக் காட்லாக்கு 941 (a) நம்பர் பிரதியில் வதுள்ளதேயாம். இப்பிரதியில் முற்றும் இல்லை. ஏடுகள் மிகவுஞ் சிதலுற்று முறிந்துள. இறுதியில் இரண்டு ஏடுகளில் முறையே கண மாத்திரை முறையும், ஆண் பெண் வசியத்துக்கும் ஒரு வகை மருந்து முறையும் வசன நடையில் எழுதியுள. 29-வது ஏடு முதல் 95-வது ஏடுவரையும் உள்ள ஏடுகள் நடுவில் இல்லாததோடு, 36, 37-வது ஏடு கண் மாத்திரம் இடையிற் சேர்க்கப்பட்டுள.

No. 2235. சட்டைமுனி ஞானம் நூறு.
ŚAṬṬAIMUNI ÑĀNAM NŪṞU.

Substance, palm-leaf. Size, 7 × 1 2/8 inches. Pages, 94. Lines, 7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Same work as that described under No. D. 1842.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1842-வது நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உளது. ஏடுகள் மிகச்சிதைந்துள.

No. 2236. சிதம்பர தீட்சிதருக்கும் இராம யோகிக்கும் நடந்த சம்பாஷணை.

CIDAMBARA DĪKṢITARUKKUM IRĀMA YŌGIKKUM NAḌANDA SAMBHĀṢAṆAI.

Pages, 11. Lines, 9 on a page.

Complete.

Begins on fol. 20 a of the MS. described under No. D. 2237.

Purports to be a publication of Cidambara Dīkṣitar and Rāmayōgi, who claim the knowledge of all the events of the past, the present and the future, and "who out of love for the world give out in this work the results of their secret meditations." In this work it is prophesied that there would be a famine in the Tamil years, *Raktākṣi*, *Krōdana and Akṣaya*, after which an emperor by name Vīravasanta Rāya would appear, that his reign would be prosperous, and that the *Śālivāhana Erā* would be superseded by an *Era named after him.*

Beginning :

திரிகாலஞானியாகவிருக்கும் சிதம்பர தீட்சிதரும் ஸ்ரீ ராமயோகியும் இருவரும் அந்தரங்கத்தில் ஆலோசித்து வெளியங்கமாகிற காரியம் என்னவென்றால் முன்னாலே நாலுபத்திரிகை யெழுதிப் பூலோகத்தில் இருக்கப்பட்ட ஜனங்கள் எல்லாரும் அறியும்படியாக அனுப்புவித்து இருந்த[து] (ஸவ) களுடனே சீமையில் இருக்கப்பட்ட மனுஷ்யர்களில் படுகாளியாகவிருக்கப்பட்டவன் அவன் புத்தியினாலே சங்கதியாகத் தோன்றும்படியாகவிருக்கிற காரியங்களை நம்முடைய பேராலே பத்திரிகை யெழுதியனுப்புவித்திருந்த நிமித்தம் நிசமாக விருக்கிற பத்திரிகைகளையும் ஸர்வத்ராளும் பார்த்துக்கொண்டதில் புத்திசாலியாகவும் விவேகியாகவும் இருக்கிற பேர் அபத்தமாக விருக்கிறதைத் தள்ளி நிசமாகவிருக்கிறதை ஒப்புக்கொண்டு பத்திரிகைப்படிக்கு நடக்குமென்று நிச்சயித்து நிரம்பவும் பக்தியாகவிருக்கிறார்கள். மூடவிசுவாசமில்லாமல் இருக்கிற பேர்கள் வரப்பட்ட பத்திரிகையெல்லாம் அபத்தமென்று நினைத்திருக்கிறார்கள். ஆகவே சிறிது காரியங்களைச் சமீபத்தில் தரிசனம் பண்ணுவித்து அனுபூதியினாலே நம்முடைய ஸ்வரூபம் எல்லாருக்கும் தெரியவேண்டுமென்று இப்போது வெளியங்கமாகிற காரியம் என்னவென்றால், ஹிமோத் பர்வதத்தின் சாரலிலே மகாருஷிகள் ஆசிரமத்துக்குச் சமீபத்தில் தபசுபண்ணிக்கொண்டிருக்கிற முன்னுக்கு ருத்ரோத்காரி வருஷம் சித்திரை மாதம் ௫௨ பரத்துவாச மகாருஷியும் கண்வ மகாருஷியும் பிரசன்னமாகி உத்தரவான காரியம் என்னவென்றால் **சக்கிரவர்த்தி சார்வபௌம வீரவசந்தராயருக்குப்** பூத பவிஷ்யத் வர்த்தமானங்களும் தேவலோக முதலாகிய லோகங்களில் நடக்கிற காரியங்களும் எதிரே நின்று நிசத்ருஷ்டியால் பார்க்கிறதுபோலவும் உள்ளங்கையில் இருக்கிற நெல்லிக்கனிபோலவும் தெரியும் என்றும் குரோதன வருஷம் ஆனவுடனே அட்சய வருஷம் சித்திரை மாதம் ௫௨ நாலுசமுத்திரத்துக்குட்பட்ட பூமிக்கு மகாராசாவாகத்தக்கதாகவும் அவர் ராசாவானதின்பேரில் சாலிவாகன சகாப்தம் நின்றுபோய், **வீரவசந்த**

சகாப்தம் என்று சொல்லப்படுமென்றும் அதுமுதல் கிருதயுகம் போலே இருக்குமென்றும் அனுக்கிரகம் பண்ணினார்கள். இந்தக் காரியமெல் லாம் நமக்கு ஞானதிருஷ்டியினாலே தெரிந்திருப்பதினாலேயும்.

End :

அதன் பிறகு அட்சய வருஷம் சித்திரை மாதம் ௩௨ **சக்கிரவர்த்தி ஸார்வபௌமவீரவசந்தராயர்** நாலு சமுத்திரத்துக்கும் உட்பட்ட பூமிக்கு மகாராசாவானவுடனே அவர் இராச்சிய பரிபாலனம் பண்ணுகிறது முந்நூறு வருஷம். அம் முந்நூறு வருஷமும் மாசம் மூன்று மழை வீதம் வருஷித்துக் கிருதயுகம் போலே பூமியெல்லாம் சுபிட்சைமாய் ஒரு ரூபாய் அரிசி நூறு பேருக்குக் காணத்தக்கதாகவும் மற்றப் பதார்த்தங்களும்

. . . .

சக்கிரவர்த்தி சார்வ பௌம வீரவசந்தராயரும் நாமும் ஸ்ரீராமயோகியும் இராமேசுவரஸ்தானத்துக்கு வருகிறதினாலே எந்தெந்தத் தேசத்துக்கு யார் யார் பூர்வீகமாக ராசாவாக விருந்தாரோ அவரை ராசாவாக வைத் துப் பிரம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திர இந்த நாலு சாதி மனுஷ்யர்களும் அவர் அவர் ஆசாரத்தில் நடப்பார்கள். இந்தப் பத்திரிகை நகல் எழுதி வைத்துக்கொண்டு பூசை பண்ணினாலும் பாராயணம் பண்ணினாலும் அவ னுக்குக் குரோதன வருஷம் வரப்பட்ட விபத்தும் எல்லாம் பிழைத்து அட்சய வருஷம் பிறந்தவுடனே சுகங்களையும் அடைந்து நம்முடைய தரிசனமுங் கிடைத்துத் தீர்க்காயுஸ்ஸும் சௌரிய சம்பத்துடனேயும் இருந்து மோட்ச சாம்பிராச்சயத்தையும் அடைகுவார்கள். இதற்கு நக லெழுதி கிராமாந்தரங்களுக்கும் அனுப்புவித்தால் அவனுக்கும் இந்தப் பலன் கிடைக்கும். இதை யாராகிலும் தூஷணையாக நினைத்தாலும் அவிசுவாஸமாகவிருந்தாலும் அவனுக்குப் பஞ்ச மகாபாதகங்கள் வரு கிறதுமல்லாமல் அவன் அனுபவிக்கிற காரியங்களைப் பத்திரிகையில் எழுதி கிறதுக்கு அடங்கமாட்டாது. இந்தப் பத்திரிகை நாம் மகாராஷ்டிரத்தில் எழுதியனுப்புவித்ததினாலே எந்தெந்தத் தேசத்தில் எந்தெந்த லிபி யோ? எந்தெந்த வார்த்தையோ? அந்த அந்தவெழுத்தில் நகல் எழுதிவைத்துக்கொண்டு பூசைபண்ணலாம்; பாராயணம் பண்ணலாம். ருத்ரோத்காரி வருஷம் தை மாதம் ௬௨ ஸ்ரீ சிதம்பர தீட்சிதர் சகாயம்.

ஸ்ரீராமயோகி ஸகாயம்.

(கு. - பு.)—

இச்சிறு நூல், சிதம்பர தீட்சிதர், இராமயோகியார் என்ற இம்மகா புண்ணிய புருஷர் இருவர்தம்முள்ளே ஆலோசித்துப் பின்னர், அவர் காலத்து ரக்தாக்ஷி, க்ரோதன, அக்ஷய வருஷங்களில் உலகத்துக்கே ஒரு பஞ்சம் ஏற்பட்டுப் பின்னர் "வீரவசந்த ராயர்" என்னும் ஒருவர் தோன்றிச் சக்கிரவர்த்தி சார்வ பௌமராக விளங்குவாரென்றும், அவர் ஆளுகிற காலம் முந்நூறு வருஷங்களிலும் திங்கள் மும்மாரி பெய்து சகல நாடுகளும் செழித்தோங்கும் என்றும், அது முதற்கொண்டு சாலி வாகன சகாப்தம் எனும் வழங்கும் வழக்கம் வீழ்ந்துபோய் "வீரவசந்த ராயர் சகாப்தம்" என வழங்கப்படும் என்னும் ஆகிய இவ்விஷயத்தை

கருணையால் உலகத்தவர்க்கு எல்லாம் வெளியிட்டார்கள் என்ற செய்தியை விளக்குகின்றது. இறுதியில் நித்தியம் இந்நூலைப் பூசை, பாராயணம் செய்துவந்தால் குரோதன வருஷத்திய தீங்குகள் ஒன்றும் அணுகா வெனவுங்கூறியுளது.

No. 2237. ஆதித்திய ஹ்ருதய ஸ்தோத்திரம்.

ĀDITTIYA HṚDAYA STŌTTIRAM.

Substance, palm-leaf. Size, 7 × 1½ inches. Pages, 16. Lines, 10 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Begins on fol. 1-a. 9–19 foll. left blank. The other work herein is Cidambaradikṣitarkkum Rāmayōgikkum naḍanda Sambhāṣaṇai 20-a.

Complete.

This is a transliteration, in the Tamil script, of the *Ādityahṛdaya* taken from the *Vālmīkirāmāyaṇa.*

Beginning :

ஆதித்தியஹ்ருதயம்.

அஸ்ய ஸ்ரீ ஆதித்யஹ்ருதயஸ்தோத்ர மஹாமந்த்ரஸ்ய அகஸ்திய பகவான்ருஷி ஃ அநுஷ்டுப் சந்த ஃ சூரியநாராயணோ தேவதா. அம் பீஜம், உம் சக்தி ஃ மம் கீலகம் சூரியநாராயணப்ரஸாத ஸித்தியர்த்த ஜபே விநி யோக :

* * * *

* * * *

தேதாயுத்த பரிச்ராந்தம் ஸமரேசிந்தயா ஸ்த்திதம் |
ராவணஞ்சாக்ரதோ த்ருஷ்ட்வா யுத்தாய ஸமுபஸ்த்திதம் ||
தேவதைச்ச ஸமாகம்ய த்ரஷ்டு மப்யாகதோரணம் |
உபகம்யாப்ரவீத் ராமம் அகஸ்த்யோ பகவாந் ருஷி : ||

அகஸ்த்யோவாச :

ராம ராம மஹாபாஹோ ச்ருணு குஹ்யாஸ்ஸநாதநம் |
யேந ஸர்வாநரீந் வத்ஸ ஸமரே விஜயிஷ்யஸி ||
ஆதித்யஹ்ருதயம் புண்யம் ஸர்வசத்ரு விநாசநம் |
ஜயாவஹம் ஜபேந்நித்யம் அக்ஷயம்பரமம் சுபம் ||
ஸர்வமங்கள மாங்கள்யம் ஸர்வபாபப்ரணசநம் |
சிந்தாசோகப்ரசமநம் ஆயுர்வர்த்தனமுத்தமம் ||

End :

ஆதித்யம்ப்ரேக்ஷ்ய ஜப்தவாது பரம்ஹர்ஷ மவாப்தவாந் ||
ராவணம்ப்ரேக்ஷ்ய ஹ்ருஷ்டாத்மா யுத்தாய ஸமுபாகமத் ||
த்ரிராச்ம்ய சுசிர்ப்பூத்வா தநுராதாய வீர்யவாந் ||
ஸர்வயத்நேந மஹதா வதே தஸ்ய த்ருடோ பவத் ||

அதரவிரவதந்நி ரீக்ஷ்யராமம்
முதிதமநா : பரமம் ப்ரஹ்ருஷ்யமாண:
நிசிசரபதி ஸங்க்ஷயம் விதித்வா
ஸுரகணமத்யகதோ வசஸ்த்வரேதி ||

(கு. - பு.)—

இந்நூல், ஸம்ஸ்கிருத ராமாயணத்தில் "ஆதித்தியஹ்ருதயஸ்தோத்திரம்" என வழங்கும் ஸ்தோத்ரமாகும்; இங்குத் தமிழ் எழுத்தில் மிகப்பிழையுடன் எழுதப் பெற்றுள்ளது. ஏடுகள் மிகவும் சிதைந்து கிடக்கின்றன.

No. 2238. ஆசௌசவிஷயம்.

ĀŚAUCAVIṢAYAM.

Substance, palm-leaf. Size, 12 × 1¼ inches. Pages, 76. Lines, 9 on a page. Character, Tamil and Grantha. Condition, much injured. Appearance, very old. Seems complete.

This explains the Hindu *Dharma Śāstra* rules for the observance of pollution by relatives on the occasions of births and deaths. Contains many references to the works on *Dharma Śāstra*, upon which this treatise is apparently based; the names of such works form the sub-headings in this treatise.

Beginning :

ஶ்ருதிஸ்ம்ருதிகரம். விஜ்ஞாநேஶ்வரீய...
ஷடஶீதி யதிவ்யாக்யாவிகா.

ஆஶௌச மென்பது நித்யநைமித்திக காம்யகர்மாநுஷ்டாந ப்ரதிபந்தக பாப விஶேஷம். இது காய .... காயநோக்ஷ்ய மென்றும், காய ஸ்நாநாயநோக்ஷ்ய மென்றும் மூன்று விதம். காயாயநோக்ஷ்யம்ஶவ மிருக்கிற.........நோக்ஷ்யம் ஶ்ரௌத.........ஸ்பர்சாதி. காயஸ்நாநாய நோக்ஷ்யம் ஸபிண்ட ஜநநமரணாக்ஷ்யாஶௌசம். ஆஶௌசத்தில் ஸந்த்யா வந்தநம் பண்ண வேண்டும். அதிலும் மார்ஜநாதிகளை மாநஸிக மந்த்ரத்தால் பண்ணவேண்டும். அர்க்யப்ரதாநம் ஜபம் இவைகளை...............ரித்துப் பண்ணவேணும். ஸமந்த்ரகமாய் ப்ராணாயாமம் பண்ணவேண்டும். அந்த ஆஶௌசம் ஜநநநிமித்தகம் என்றும் மரணநிமித்தகமென்றும் இரண்டு விதம். இந்த இரண்டு வியாஶௌசங்களிலும் ஶ்ராவ்யமான அக்நிஹோத்ரதர்ஶ பூர்ண மாஸங்களும் அசலாரலே.........ஸ்நாநம்பண்ணி ப்ரத்யக்ஷ்வஸ்த்ருய்த்தானே பண்ணலாம். ஔபாஸநம் தர்ஶபூர்ணமாஸ ஸ்தாலீபாகங்களுள் ஸம்க...................ஸந்த்யோபாஸ்த்ரியால் பண்ண வேண்டும். அல்லது கந்யநாவ்த்தால் பண்ணவேண்டும்.

ஷடஶீதியதிவ்யாக்யாவிகா. பாராஶரஸ்ம்ருதிஸம்க்ரஹ:

ஜநநாஶௌசம் ஸூத்ரவமென்றும் பாகமென்றும் ப்ரஸவமென்றும் மூன்று விதம்.

(௩. ௪.) மூன்று நாலு மாஸங்களில் மாதாவினுடைய உதரத்தில் நின்றும் ரக்தரூபமாக வெளிப்படும். . . . த்துக்கு ஸ்ராவமென்று பேர்.

(௫. ௬.) ஐந்து ஆறு மாஸங்களில் மாதாவினுடைய உதரத்தில் நின்று வெளிப்படும். . . . . வெளிப்படும் ரக்தரூபமான கர்ப்பத்துக்கு பாதமென்றுபேர். (௭) ஏழாம் மாஸந் தொடங்கி மாதாவினுடைய உதரத்தில் நின்றும் . . . . வெளிப்படும் ஸிஸுரூபமான கர்ப்பத்துக்கு ப்ரஸவமென்று பெயர்.

மூன்றாம்மாஸ ஸ்ராவத்தில் மாதாவுக்கு மூன்று நாள் ஆசௌசம். நாலாம்மாஸ ஸ்ராவத்தில் மாதாவுக்கு நாலு நாட்கள் ஆசௌசம். இவ்விரண்டு மாஸ ஸ்ராவத்திலும் பிதாவுக்கு ஸ்நாநமாத்ரம்.

நாலாவது மாஸத்தில் ஊர்த்வம் கர்ப்பஸ்ராவத்தில் பிதாவுக்கு த்ரிராத்ராசௌசம். ஜ்ஞாதிகளுக்கு நாலாவது மாஸ ஊர்த்வஸ்ராவத்துக்கு ஸ்நாநமாத்ரம் கர்ப்பஸ்ராவத்தில் ஸபிண்ட புருஷர்களுக்கு த்ரிராத்ராசௌசம். ஸபிண்டஸ்த்ரீகளுக்கு ஆசௌசமில்லை. (௫. ௬.) ஐந்து, ஆறு மாஸ பாதத்துக்கு கர்ப்பஸ்ராவப்ரகாரம் க்ரமமாக (௫. ௬.) ஐந்து ஆறு நாள் ஆசௌசம். அப்பொழுது பித்ருஸஹோதர ஜ்ஞாதி ஜ்ஞாதிஸ்த்ரீகளுக்கு . . . . . நாள் ஆசௌசம். ஏழாம் மாஸந்தொடங்கி எப்போது ப்ரஸவித்தாலும் மாதா பிதா ஸஹோதர ஜ்ஞாதிகளுக்கு ஜநநாசௌசம் உண்டு.

இதி ப்ரயோகவ்ருத்தௌ ஸ்ம்ருதௌ ||

பூர்ண ப்ரஸவத்தில் ஸபிண்டர்களுக்குப் பத்து நாள் ஆசௌசம். ஸகோத்ரர்களுக்கு ஆசௌசமே யில்லை.

கூடஸ்தன் தொடங்கி ஏழு தலைமுறைக்குள் பட்டவர்கள் ஸபிண்டர்கள். ஏழு தலைமுறை தொடங்கிப் பதினாலு தலைமுறைக்குள்பட்டவர்கள் ஸமாநோதகர்கள். பதினைந்தாவது தலைமுறை தொடங்கி இருபத்தோர் தலைமுறைக்குட்பட்டவர்கள் ஸகோத்ரர்கள் என்று பெயர். புத்ரப்ரஸவத்தில் மாதாவுக்கு ௩௰ நாள் ஸ்த்ரீப்ரஸவத்தில் ௪௰ நாள்.

* * * * * *

௨௱௫௰. ஷஷ்டீகீ-யக்ஞப்ரதீபிகா—ஸாஸ்த்ரப்படி நியமத்துடன் ஆசௌசமிருந்து ப்ரேதகர்மத்தை நிறைவேற்றின பக்ஷத்தில் கர்த்தாவினுடைய பித்ருக்கள் ப்ரேதத்வத்தைவிட்டு பித்ருத்வத்தை அடைகுவார்கள். கர்த்ருபித்ருக்கள் மாதாபிதா முதலானவர்கள். பித்ருத்வமாவது ஸ்வகீயப்ராணாந்த கர்மஸாதநமான யோக்யதையாம். அல்லது, அதுக்கு ஸாதநரூபமான தேஹஸம்பந்தம் ஸ்யாத் | பித்ருக்களுக்கு ப்ரேதத்வநிவாரணம் பண்ணிவைத்தால் புத்ராதிகள் விஷயத்தில் பித்ருக்கள் ஸந்தோஷம் ப்ரயோஜநவ்ருத்தி யுண்டாகும்படியாயும் அநுக்ரஹிப்பார்கள். தேவப்ராஹ்மணஸந்தர்ப்பணத்தைவிட

விப்ரஸந்தர்ப்பணமே ஸாதநம். அது ஏன் என்றால், பித்ராதிகளுக்கு ஜநநபோஷண ஸம்ஸ்காராதிகளால் நிரம்பவும் ப்ரத்யுபக்ருதி உள்ளவர்களாகையால் தேவப்ராஹ்மண ஸந்தர்ப்பணாத்மமான ஸர்வகர்மங்களிலும் ப்ரதமம் விப்ரர்களையே பூஜிக்கவேண்டுகையாலும் ஜ்யோதிஷ்டோமாதிகளான ஸர்வயஜ்ஞங்களிலும் நாந்தீமுகத்தால் முதலில் விப்ரர்களைப் பூஜித்து பஶ்சாத் தேவதைகளை யஜிக்கவேண்டுகையாலும் விவாஹோபநயநபும்ஸவநஸீமந்தாதி ஶுபகர்மங்களில் நாந்தீஶ்ராத்தம் பண்ணியே தேவதைகளை ப்ரீதி பண்ணிவைக்க வேண்டுகையாலும் தீர்த்தயாத்ரையிலும் க்ஷேத்ரங்களைப் ப்ரவேஶித்து தீர்த்தஶ்ராத்தம் முதலானவைகளைப் பண்ணிப் பின்பு க்ஷேத்ராதீஶ்வரனை ஆராதிக்க வேண்டுகையாலும் இத்தனையும் ஶாகா விதாக்களுக்கு விப்ரத்வப்ராப்தியன்றிக்கே நேரிடாதாகையால் விதாக்களுக்கு நாந்தீஶ்ராத்தத்தில் தேவதாத்வமும் இல்லாததால் அப்போது பித்ராதிகளுக்கு ஒரு கர்மத்திலும் அதிகாரமில்லாததாலும் ஶௌச நியமங்களுடன் பித்ராதிகள் விப்ராதிகளுக்கு ப்ரேதத்வத்தை நிவ்ருத்திபண்ணினால் அத்தால் அவர்கள் ப்ரேதத்வத்தைவிட்டு விப்ரத்வத்தை யடைந்து தான் பண்ணின பாப கர்மபலத்தையும் பித்ராதிகளால் பண்ணப்பட்ட தாநஶ்ராத்தாதிபலத்தையும் அநுபவித்தவர்களாய்த் தங்களுக்கு இந்த உபகாரம் பண்ணின பித்ராதிகளுக்கு ஶாஶ்வதமான ஶ்ரேயஸ்ஸை ப்ரார்த்திக்கிறார்கள். லோகத்தில்: அநுபகாரிகளாயிருந்தாலும் பித்ராதிகளுக்கு ஶாகா விப்ராதிகள் ஸர்வதா ஶ்ரேயஸ்ஸுக்களைக் கோரக் கண்டிருக்கிறோம். இப்படி உபகரித்த பித்ராதிகளுக்கு ஶ்ரேயஸ்ஸைப் பிரார்த்திப்பார்கள் என்கிறவதில் கேட்கவேண்டுவதென்ன. ஆகையால் விப்ரர்களுடைய ஆஶீர்வாதத்தால் பித்ராதிகள் தீர்காயுஸ்ஸையும் ஸர்வகாமமு மாரோக்கியத்தையும் புத்ர பௌத்ரர்கள் உள்ளவரையில் வம்ஶாபிவ்ருத்தி யையும் பெற்று, உத்தரோத்தரம் ஶ்ரேயோபிவ்ருத்தியையும் [உண்டாகும்] அடைகுவார்கள்.

(கு. - பு.)—

இந்நூல் தர்ம சாஸ்திரங்களைச் சார்ந்ததாய் ஆசௌச விஷயத்தை நன்கு விளக்குவதாயுளது. மணிப்பிரவாள நடையான் அமைந்து ஒன்பது கட்டங்களுடன் இருக்கிறது. விருத்தியா சௌசம், க்ஷயாசௌசம் என்ற இவ்விரண்டையும் எளிய நடையில் நன்கு விளங்குமாறு உணர்த்துகின்றது. அங்கங்கே நுதலும் விஷயங்களுக்கு ஷடசீதி, தர்மப்ரதீபிகை, வைத்திய நாதீயம், ஸ்மிருதிஸங்கிரஹம், சதக வியாக்கியானம் முதலிய நூல்களை ஆதாரமாகக் கொண்டு இயற்றுவதாகத் தோற்ற அந்நூல்களின் பெயர்கள் தலையங்கமாகக் அங்கங்கே குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆறுவது கட்டத்திலிருந்து ஒன்பதாங் கட்டம் வரையில் கட்டத்தின் எண்கள் முறை பிறழ்ந்து தவருக எழுதப்பெற்றுள.

No. 2239 ஞானவேத்தம்.
JNĀNAVĒTTAM.

Pages, 4. Lines, 8 on a page.

Begins on fol. 80-a of the MS. described under No. D. 2249.
Complete.

Songs, on *Yōga jñānam*, composed after the fashion of the songs of those working the Picotta. From the concluding lines, it is made out that the author is the son of "Irāmayōgi," and disciple of "Irājayōgi."

Beginning :

ஞானவேத்தம்.
பிள்ளையாரும் வாரி பிள்ளையாருமங்கே
பெருத்த மூலாதாரம் சிறுத்தவிதழ் நாலாம்
உரைத்த கம்பமாகி ஓங்கியுச்சிதொட்டு
தாங்கியதன் கீழாய்த் தானிரண்டதாகி
தங்கியே வாயுவாறு அங்கியேகடந்து
சங்கிலி பிளந்து சமத்தவாயுவாறு
ஙிங்கிது வுரைத்தே ஙிரண்டுடனே வாரி.

End :

. . . . தூரமில்லேயத்தான
சாதிகுலமில்லே சற்குருவறிந்தால்
நித்திய மதுவே பத்தியாய்ப்பணிந்தால்
முத்திதருமத்தான் வாமநெறிசீவன்
ராமயோகிதந்த ராசயோகி [சேஷசன்] (சீடன்) ?
சாதனருளாலே பாசமறச்சொன்னேன்
பிரியாமலேயத்தான் பிள்ளையாரும் வாரி.

ஞான வத்தம் முற்றும்.

(கு. - பு.)—

இந்தச் சிறு நூல் யோகஞான விஷயத்தைக் குறிப்பாக வுணர்த்துவது. ஏத்தம் இறைக்குமவர்கள் பாடும்பாட்டைப்போல "பிள்ளையாரே வாரி" என்று தொடங்கி இந்நூல் பாடப்பெற்றிருத்தலின் இக்குறி காரணக்குறியென்க. இதற்கு ஆசிரியர், "இராமயோகி" என்னும் ஒரு ஞானியாரின் புத்திரனும் "இராசயோகி" என்பவரின் சீடருமான ஒருவர் என்று ஈற்றயலடிகளால் உணரக்கிடக்கிறது. முற்றும் உளது. சிதலுற்றிருக்கிறது.

No. 2240 அகத்தியர் பரிபாஷை ஐந்நூறு.
AKATTIYAR PARIBHĀṢAI AINNŪṚU.

Substance, plam-leaf. Size, $9\frac{1}{4} \times 1\frac{6}{16}$ inches. Pages, 430. Lines, 6 and 9 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Same work as that described under No. R. 265 (b) of the Triennial Catalogue of Tamil Manuscripts. Vol. II.

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக்காட்லாக்கு 265 (b) நம்பர் பிரதியிலே வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உளது. ஏடுகள் சித லுற்றுக் கிழிந்திருக்கின்றன. அப்பிரதிக்கும் இப்பிரதிக்கும் பலவிடங்களில் பாடபேதங்கள் காணப்படுகின்றன.

No. 2241 தன்வந்திரிசெயநீர் ஐம்பது.

DHANVANTIRI ŚEYNĪR AIMPADU.

Substance, plam-leaf. Size, 8 × 1¼ inches. Pages, 24. Lines, 9 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete in 46 Stanzas.

Same work as that described under No. R. 946 (d) of the Triennial Catalogue of Tamil MSS. Vol. VI.

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக் 946 (d) நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இப்பிரதியில் இந்நூல் 46 ஆவது செய்யுளோடு முடிவடைகிறது. ஏடுகள் மிகவும் சிதைந்துள.

No. 2242 தன்வந்திரி தண்டகம்.

DHANVANTIRI DAṆḌAKAM.

Pages, 68. Lines, 8 on a page.

Begins on fol 140 a of the MS described under No. D. 2246.

Complete.

A treatise, in the *Daṇḍakam* style, by Dhanvantari, and treats of Indian Medicine. At the end there is a verse explaining what is known as *Rāhukālam* in Indian Astrology.

Beginning :

தன்வந்திரிதண்டகம்.

அண்டமெனும் பரப்பிரம்ம வருளைப்போற்றி
அன்பான மனோன்மணித்தாய்ப்பாதம் போற்றி
குண்டமெனுங் குண்டலியின் பாதம் போற்றி
குருவான பராபரத்தோன் பாதம் போற்றி.
வண்டமெனும் வழலையுட வதீதம் போற்றி
வளமான வறுமுகவர் பாதம் போற்றி
மண்டமெனுஞ் சத்திசிவன் பாதம் போற்றி
மதியான ரவிமதியின் அருளே போற்றி (க)

போத்தினேன் வாசியுடை மூலங்காப்பு
வளமான வெண்குருவின் பாதங்காப்பு
ஆத்தினேன் வகாரசிவகாமி காப்பு
அன்பான நந்திமூலம் ரிஷிமூலங்காப்பு
மாத்தினேன் சிவபதத்தில் ஐம்பூதங்காப்பு
மகத்தான தொண்ணூறாத்தாறு கருவே காப்பே

* * *

காப்பாகும் சகலகலை சேதியெல்லாம்
கருத்தான தண்டகத்திற் கருவாய்ச்சொன்னேன்
வாய்ப்பாகுஞ் சிவனியென் மகனே கேளு
வளமானகலைக்கானமன்னருக்கு
ஆப்பாகுந்தரப்பிதுதான் செப்போடு சிட்டு
அரகரா விந்நூலார் கொடுக்கப்போரார்
மாப்பாகுந்திறவுகோலெல்லாமைந்தா
மாட்டுகிற விந்நூலை மருவிப்பாரே (ச)

வைத்து மே தேவிக்குப்பூசைபண்ணி
வளமான மையெடுத்துத் திலதம்போட்டு
ஆய்த்துமே உலகமதில் போனயானால்
ஆருமுனைக்காணார்களறிந்துகொள்ளு
மைத்து மே நூறுக்குள் சகலகலை யெல்லா
மாட்டிவிட்டேன் இதுக்குள்ளேபாருபாரு
நைத்து மே யிதின்மேலே நாற்பதுதான்சொச்சம்
நலமான தண்டகத்தின் கருவாமுற்றே (௱க)
போட்டுமேதலைப்பிண்ட கபாலம்மூடி
புகழான தீபத்தை யெரித்துக்கொள்ளு
ஆட்டுமேதிரிசாமமெரித்திட்டாக்கால்
அப்பனே நெலக்கணம் போலடையாப்பற்றும்
நாட்டுமே மைந்தனே சொறண்டிக்கொண்டு
நலமானவைங்கோலத்தையிலம்விட்டு
வாட்டுமே மத்தித்துச் சிமிழில் வைத்து
வளமான வஞ்சனுதேவியாமே (௱டு)

* * * *

End :

சொன்னேனடா நூற்று நாற்பதுக்குண்மைந்தா
சொற்பெரிய சூட்சுமமெல்லாங் கொட்டினேன்பார்
வன்னேனடா வகையாக விந்நூற்சொன்னேன்
வளமான சூட்சமதண்டகமாமிந்நூல்
கன்னேனட ா நான் சொன்ன நூலுக்கெல்லாம்
கருக்கிடையாங்கலைஞ்ஞான தண்டகமாமிந்நூல்
மன்னேனடா இந்நூலில் பூட்டச்சொன்னேன்
மைந்தனே திறக்குகிற விபரஞ் சொன்னேன் (௱டுசு)
சொன்னேமே யிந்நூற்போலாருஞ்சொல்லார்
சொற்பெரிய கடல்நூல் எண்பதையும்பாரு
வன்னேமே வழிகளது நன்றாய்த் தோற்றும்
வகையான நூலதுதான் வண்மை பாரு
மன்னேமே இந்நூலைப்பார்த்தோருக்கு
மகத்தான குருடருக்கு வெளிச்சம்போலாம்
அன்னேமே தண்டகத்தை யறையில்வைத்து
அனுதினமும் பூசித்து அடிபணிந்தேமுற்றே (௱சம)

குரு வாழ்க. இப்படிக்கு எழுதி முடிந்தது முற்றும்.

(கு. - பு.)—

இந்நூல் தன்வந்திரி பகவானுல் இயற்றப்பெற்றதோர் தண்டகம் என்ற நூல் வகையாகும். இது நூற்று நாற்பது பாடல்கள் கொண்டுள்ளதென்று நூலாசிரியரே 101 ஆவது பாடலிலும் 139 ஆவது பாடலிலும் உணர்த்தியிருக்கின்ருர், இதில் இந்நூல் முற்றும் உளது. இது பல கருக்களேயும் நுவல்கின்றது. ஏடுகள் மிகவும் சிதலுற்றுள. இறுதியில் இராகுகாலம் உணர்த்தும் செய்யுள் ஒன்று வரையப்பெற்றுள்ளது.

No. 2243 தன்வந்திரிவாலேசாஸ்திரம்.
DHANVANTIRI VĀLAI ŚĀSTIRAM.

Pages, 71. Lines, 6 and 7 on a page.

Begins on fol 55 a of the MS described under No. D 2231.

Complete.

A treatise on Indian Medicine, in various Tamil metres.

Beginning :

குருவாழ்க : குருவேதுணே.

தன்வந்திரியார் அருளிச்செய்தவாலே.
வாலேசாஸ்திரம் : குணமும் மருந்தும்.
வேகமாய் நெறிசேரும் விணேகளும்
தாகபோகம் விடாத்தளர்ச்சியும்
சோகவாரியிஞல் வருதுன்பமும்
'பாக யாணே முகத்தனேப்போற்றுவாம். (க)

பாலேக்கிறக்க குணக்கவியும்
மருந்து மந்திர யந்திரமும்
ாலக்கழிப்பும் நீர்சொரிவுங்
கட்டுஞ்சிலது வேறுடனே
கோலக்குளிகையெண்ணெயுடன்
குணத்தின்படியே கொள்வதற்குச்
சீலேதருவாய் விஞயகஞர்
சிந்தித்தார் சஞ்சீவியென்றே (உ)

ஆகும் நாள்விந்துவிட்டு
அஞ்சுநாள் கருப்போலாகும்
போக மூவைந்துநாளில்
பொருந்தியமுட்டை போலாம்
ஏகமாதத்திலக்கம்
இரண்டினில் மார்மட்டாகும்
ாகமா மூன்றுந்திங்கள்
பகருந்தி மட்டுமாமே. (ங)

மட்டுட நாலாமாதம்
வளர்ந்திடும் பாதமெங்கும்
கட்டுடன் அஞ்சாமாதம்
கருது சரணமாமாறில்
தட்டுடன் எலும்புசீவன்
தலைமயிர் நரம்பேழாகும்
எட்டுடனறி வாயொன்
பதில் திசைப்பிறவிதானே (ந)

End :

இலைக்கள்ளி வடக்குவேர்ப்பட்டையிதினுடனே
கலக்கமிளகுள்ளி சுக்குக்கடுக்காயும்—பிலக்கவரைத்
தடைசுட்டுத்தான் குளவியருந்தமூலம் சமூலம்
புடை புடைத்து விட்டோடிப்போமே (உ௰உ)

சென்னுயுருவியிலை சிறுகவொருபிடியை
யுண்ணுநல்லெண்ணெய் தனிலோருழக்கில்—மின்னுய்கேள்
வரிக்குமரியன்னம்வாங்கிப் பஞ்சத்தாரைப்
பெருக்கியுண்ணச் சீழ்மூலம் போம் (உ௰ந)

காட்டுக்கருணை கறிக்கருணை கருதும் பிரண்டைபிளியரணை [கொடி
வாட்டமான மருட்கிழங்கு வகையோர்பத்தும் பலமாக [வேலி ?
நாட்டிற் படிதான் வரகரிசி நலமாயிடித்துச்சர்க்கரையுங்
கூட்டிக்கலந்து உண்ணிடவே கூவிமூலமோடிடுமே (உ௰ச)

(கு. - பு.)—

இந்நூல் சித்தர் நூல்களைச்சார்ந்தாய் வைத்தியத்தைப் பிரதான விஷயமாய்க்கொண்டு வியாதியின் குணங்களையும், அவைகளைப் போக்கற் குரிய பல நன்மருந்து முறைகளையும் விரிவாக வெடுத்துணர்த்துகிறது. இது, வெண்பா, விருத்தம், அகவல் என்ற பலவகையான செய்யுள் வகைகளும் அமையப்பாடப்பட்டுள்ளது. முதலில் கரு உத்பத்தியாகி அது ஒன்பது மாதம் வரையிலும் வளருமாற்றையும் பின்னர் சிசுவாக உதிக்கு மாற்றையும் உணர்த்திப் போருகிறது. இருநூற்றுப்பதின்நான்கு பாடல் கள்கொண்டுள்ளது. எழுத்துப்பிழை மிகவுளது. ஏடுகள் பல செல்லரிப் புண்டு சிதைந்து கிடக்கின்றன.

No. 2244. தன்வந்திரி வாலை சூத்திரம்.
DHANVANTIRI VĀLAI SŪTTIRAM.

Pages, 12. Lines, 7 on a page.

Begins on fol. 101 of the MS. described under No. 2246.

Incomplete, 20 stanzas only.

Same work as the above.

(கு. - பு.)—

இந்நூல் முன் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூலின் முதல் இருபது செய்யுட்கள் மாத்திரம் உள. ஒவ்வொரு செய்யுளிலும் சிற்சில சொற்கள் பிரதி பேதங்களுடன் காணப்படுகின்றன. 107-ஆவது ஏடு முதல் 139-ஆவது ஏடு வரையில் உள்ள ஏடுகள் இல்லை. ஆகவே முற்றுப் பெறவில்லை.

No. 2245. தேரையர் சகுனகவியும் பதார்த்தகுண சிந்தாமணியும்.

TĒRAIYAR ŚAKUNAKAVI AND PADĀRTHAGUṆA CINTĀMAṆI.

Pages, 22. Lines 7, on a page.

Complete.

Begins on fol. 110-A of the MS. described under No. 2231.

Similar to the work described under No. D. 1957. By Tēraiyamunivar.

Beginning :

(தேரையர் சகுன கவியும் பதார்த்தகுண சிந்தாமணியும்.)

தேரன் கவியுஞ் சிறுகாலே யுண்டி
வாரமுடைய மனையாளும்—நேரே
வறைத்திருந்த சாந்தும் அகிற்புகையுமுண்டே
நறைத்திருந்து சாகார் நலம். (க)

அன்று கழுவிய தோராடையும் ஆன்பாலுந்
தென்றலு லாவி வருந்திண்ணையும்—நன்று
உறைத்திருந்த நல்லோர் ஒருவருண்டானால்
நறைத்திருந்து சாகார் நலம். (உ)

* * * * * *

போசனத்துக் கானதிசை பூருவமுந்தக்ஷிணமும்
ஆசறவே அன்னமருந்தலாம்—காசினியில்
குற்றம் வருமே குடக்குவடக்கானதிசை
சற்று மிருந்தன்னம் அருந்தார். (கூ)

* * * * * *

தாதுகெடும் வெள்ளிசனி சருவநாசமாம்
நீதியுடன்வெய்யோனே தீயகற்றும்—ஓதுகுரு
மானங்கெடுக்கு மானஞ் செவ்வாய் மெய்யி
லான மயிர்தான் களைந்தக்கால். (௰உ)

* * * * * *

வாழை நீர் :—

வாழைநீர்தான் குளிர்த்தி வல்ல பலனுண்டாகும்
பேழைவயிறுடையும் பெண்மயிலே—ஏழையாள்
ரேக்தக்கிச்சினம் போம் நீரிழிவைத்தான்போக்கும்
சேத்திரணம் போமெனவே செப்பு. (௩அ)

கொத்துமல்லி.

கொத்தமல்லி வேம்பு . . . . நீர் காய்ச்சலைத்துரத்தும்
மத்த விக்கல் தாகந்தனைமாற்றும்—பித்தம்போம்
மந்தந்தனையறுக்கும் வாய்வு விகாரம்போம்
செந்திருவே யிக்குணத்தைச் செப்பு. (௱உ௰)

கடுகு.

வாதசைத்தியம் போம் மாருக்கடுப்புவலி
காதம் போயோடிக் கடியுமே—பேதையரே
தாளிக்க வாகுந்தணலாகுங் கண்டீர்
தாளித்த நல்ல கடுகு. (௱உ௰க)

நாய்க்கடுகு.

சூதக வாய்வு போம் சுரோணிதத்தில் வாதம்போம்
வாதம் வலிகுன்மம் மடியுமே—மாதுநல்லீர்
பேயகமே புகை காட்டார் பேசாதே யோடிவிடும்
நாய்க்கடுகு செய்யும் நயம். (௱உ௰உ)

ஸ்ரீராமஜெயம் :
குருவே துணை.

(கு. - பு.)—

இந்நூல் தேரையரால் இயற்றப்பெற்றதென்று தெரிகிறது. இதில் எண்ணெய் தேய்த்துக்கொள்ளல், மயிர் நீக்குதல், உண்ணல் உறங்கல் முதலிய இவையெல்லாம் இன்னின்ன தினங்களிற் செய்யலாம் செய்ய லாகா என்னும் செய்தியும், ஒவ்வொரு பதார்த்தங்களினுடைய குண குணங்களும் அவற்றினுகும் பயன்களும் நன்கு விளங்குமாறு கூறப்பட் டிருக்கின்றன. ஏடுகள் மிகவும் சிதலுற்றுள.

No. 2246. தேரையர் சகுனகவியும் பதார்த்தகுண சிந்தாமணியும்.

TĒRAIYAR ŚAKUNAKAVI AND PADĀRTHAGUṆA CINTĀMAṆI.

Substance, palm-leaf. Size, 11 6/16 × 1 2/8 inches. Pages, 37. Lines 7, on a page. Charecter, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Begins on fol. 1-A. The other works herein are Tēraiyar Padārtha-guṇa Cintāmaṇi 19 (*b*). Dhanvantiri Vālaisūttiram 101-A. Dhanvan-tiridaṇḍakam 140-A.

Same work as the above.

(கு. - பு.)—

இது, முன் பிரதியில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றுமுளது. ஏடுகள் ஒரு சிறிது சிதலுற்றிருக்கின்றன.

No. 2247. தேரையர் பதார்த்தகுண சிந்தாமணி.
TĒRAIYAR PADĀRTHAGUṆA CINTĀMAṆI.

Pages 128. Lines, 7 on a page.

Begins on fol. 121-A of the MS. described under No. 2231.

Complete in 357 Stanzas.

Similar to the work described under No. D. 1957.

Beginning :

பதார்த்த குண சிந்தாமணி.

உலகமும் யாவையும் உண்டு படைத்திடு மோங்கிய மால்மருகன்
பலகலை யாயுருவேதமு மப்பமபகருமாநந்தமிழில் ?
கல முடன் அறுசுவை வர்க்க முஞ்சாற்றிட வென்னுவில்
கலகல நற்பத நடனமெனத் திருக்கணபதி காப்பாமே. (க)

சொல்லிய மூலிகை பலவித வர்க்கமுந் தொடரு மறுபதுநால்
வல்லவராமேல வணமும் லோகமும் வளரும் நவரத்தினம்
புல்லிதநாபி விஷமது வாகும் புகமும் பாஷாணம்
நல்வித குணமுஞ் சொல்லிய நாவலர் நற்பத முந்துணேயே. (உ)

திருமணி மார்பன் தங்கை செகமருள் பொருட்டா லோகம்
இருவினை நீக்கவேணும் இறங்கியே சிவனைக் கேட்க
அறுசுவை சல வர்க்கத்தை யரனுமைக் கருளிச்செய்யக்
குருவெனு நந்திகேட்கக் குவலையந் தன்னி லீய்ந்தார். (ந)

பூமியில் முல்லை நெய்தல் புகழ்ந்திடுந்தூமபாலை
தாமிது குறிஞ்சி யைந்தில் சன . . . . மாகாசம் மூன்றும்
காமிது வருணன் றேன்றக் கடாட்சித்த பரத்திலுலே
நேமிது சலமுமேலை நிறைந்திடும் பூமியெங்கும். (ச)

சொல்லிய இந்த நீரால் துணிந் துண்ணும் மனிதர்க்கெல்லாம்
சொல்லு வாய்குண . . . . . . சுருதிநூலாய்ந்து
சொல்லிருவினை யுமந்திரத் தொல்லையாம் மனிதர்க்கெல்லாம்
சொல்லு வாயறிவுள்ளோனே சொல்குணந் தவறிடாதே. (ரு)

* * * * * *

கிணற்று நீர்.

கடுத்திடுமலமும் மூத்திரங் கருகிடு மேனியெல்லாம்
எடுத்திடுங்கிருச்சிர ரோகம் எழுந்திடும் வெட்டைக்கா கா
கொடுத்திட வாதமையங் குலாவிய சீதளத்தைப் போக்கும்
தொடுத்திடும் லவணமூறிச் சொரிந்திடுங் கிணற்று நீரே. (யக)

End :

. . . . (சாஅ)

தூஅராசமிரு. 1843-ம்வூ ஏப்ரல்மீ யசுஉ திருச்சிராபுரத்திலிருக்கும் அய்தர் சாயுபுவினுடைய தேரையர் அருளிச் செய்த பதார்த்த குண சிந்தாமணி. சென்னைமா நகரிலிருக்கும் சின்னய்யன் கையெழுத்து. ஞாயிற்றுக்கிழமை காலமே எ. மணிக்கு முடிந்தது.

(கு. - பு.)—

இது, டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1957-ஆவது நம்பரில் வந்துள்ள 'பதார்த்தகுண சிந்தாமணி' யென்ற நூலைப் போன்றுளது. இதனை இயற்றியவர் தன்வந்திரியாவார் என்று நூலிறுதியிலே காணப்படும் தொடர் மொழி யொன்று தெரிக்கின்றது. (சாஅ) 408. பாடல்கள் கொண்டுளது. உள்ள ஏடுகள் எல்லாம் சில சிதலுற்றும் சில முறிந்தும் கிடக்கின்றன. ஆகவே உள்ள பாடல்களைச் சரியாகத் தெரிந்து உணர்தற்கு அரிதாகும். பல ஏடுகள் கயிற்றிற் கோத்து வைத்தற்கும் முடியாத வண்ணமாய் அத்துணை முறிந்து கிடக்கின்றன.

No. 2248. தேரையர் பதார்த்தகுண சிந்தாமணி.
TĒRAIYAR PADĀRTHAGUṆA CINTĀMAṆI.

Pages, 160. Lines, 7 on a page.

Begins on fol. 19 (*b*) of the MS. described under No. D 2246.

Complete in 402 Stanzas.

Same work as the above.

(கு. - பு.)—

இந்நூல் முன் பிரதியில் வந்துள்ள நூலேயாகும்: இப்பிரதியில் கடைசியில் ஐந்தாறு செய்யுட்கள் நீங்கலாக முற்றுமிருக்கிறது. ஏடுகளில் பல புழுக்களான் அரிக்கப்பெற்றிருக்கின்றன.

No. 2249. பிரம்மமுனி கருக்கிடைச் சூத்திரம் முந்நூற்றெண்பது.
PIRAMMAMUNI KARUKKIḌAIC CŪTTIRAM MUNNŪṞṞEṈ PADU.

Substance, palm-leaf. Size, 15¾ × 1¼ inches. Pages, 140. Lines, 6–8. on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 1. The other work herein is (1) ஞானவெட்டப்பாட்டு Nānauëttappāṭṭu 80-a.

Complete.

Same work as that described under No. R. 266-C.

End :

* * * * * *

செய்த்துமே சித்தருடை நூலையெல்லாம்
ஒட்டியே ஆயிரத்தில் வெளியாய்ச் சொனேன்
பத்துமே ஆயிரத்தைக் குறுக்கி நன்றாய்ப்
பாடினேன் முந்நூற்றுச்சில்வானந்தான்
உய்த்துமே கருவெல்லாம் வெட்டை வெளியாக
ஒளியாமற் சத்தியமாய்ச் சொல்லிப்போட்டேன்
கைத்துமே சிறு பிள்ளை முதலாயுள்ள
கருவறியா மூடர்களுங் காணுவாரே. (௩அ௰௩)

வாரான கருவையெல்லாம் வெளியாய்ச் சொன்னேன்
வாதமொடு வைத்தியமும் வகையாய் சொன்னேன்
வாரான வஞ்சன முந்திலதஞ் சொன்னேன்
வசியமொடு வழைப்புவித்தை மாரணமுஞ் சொன்னேன்
ஆரான ஞானமொடு வாசியோகம்
அடங்கி நின்ற பூரணமும் அறியச்சொன்னேன்
தேரவே வழலையொடு கருவுஞ் சொன்னேன்
செப்பினேன் கருக்கிடை சூத்திரந்தான் முற்றே. (௩அ௰௪)

பிரம்ம முனியார் அருளிச் செய்த கருக்கிடைச் சூத்திரம் எழுதி முடிந்தது முற்றும்.

(கு. - பு.)—

இந்த நூல் 'பிரம்ம முனி' என்ற சித்தர் பெரியாரால் இயற்றப் பெற்றதாகும்; முந்நூற்றெண்பது பாடல்களைக் கொண்டு முற்றுப் பெற் றுளது. இது, மூவருடக் காடலாக்கு 266-c நம்பர் பிரதியில் வந்துள்ள தேயாகும். அப்பிரதியில் [௩௬௰] (360) பாடல்களேயிருக்கின்றன. இப்பிரதியில் முற்றும் உளது. இறுதிப் பாடல்கள் இரண்டும் இங்கு எடுத்துக்காட்டாகக் காட்டப்பட்டிருக்கின்றன. இரஸவாத வைத்திய முறைகளைப் பிரதானமாகக் கொண்டுளது. மற்று இவ்வாசிரியர் வைத்திய விஷயமாக இரண்டாயிரம் பாடல் கொண்டதொரு நூலும், அதற்கும் சுருக்கமாக ஆயிரம் பாடல் கொண்டவொரு நூலும் அதற்கும் சுருக்கமாக முந்நூற்றெண்பது பாடல்கள் கொண் டுள்ள விந்நூலையும் இயற்றிப் போந்ததாக இந்நூல் முதலில் (2) இரண்டாம் பாடலில் உணர்த்தியிருக்கின்றார். இது முடிந்த பின்னர் 80, 81-ஆவது ஏடுகளில் ஏத்தப் பாட்டொன்றும், மற்றைய ஏடுகளில் வைத்திய முறைகள் பல வசனத்தில் எழுதப்பட்டு உள. ஏடுகள் சித லுற்றிருக்கின்றன.

No. 2250. கேரளாலங்காரம்.

KĒRAḶĀLAṄKĀRAM.

Substance, palm-leaf. Size 15¾ × 1¼ inches. Pages, 150. Lines, 6 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Same work as that described under No. R. 6.

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 6-ஆம் நம்பரில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உளது. இந்நூலின் செய்யுட்கள் (சரு௰அ) (458) என்று இறுதி வாக்கியத்தால் தெரிகிறது. ஏடுகள் மிகவுஞ் சிதைந்து முறிந்து கிடக்கின்றன.

இது முடிந்த பின்னர் சில ஏடுகளில் நட்சத்திரம், கிரகங்கள், இராசிகள் முதலியவைகளின் பரியாயப் பெயர்களும், இன்னும் சிலவும் எழுதப்பட் டுள.

No. 2251. பஞ்சபட்சி சாத்திரம்.
PAÑCAPAKṢI ŚĀTTIRAM.

Pages, 38. Lines, 8 on a page.

Complete :

Begins on fol. 91 of the MS. described under No. D. 2231.

Similar to the work described under No. R. 164 (*b*).

Beginning :

பஞ்சபட்சி சாத்திரம்.

உன்னியே யொருவனுரைத்த முதலெழுத்தைப்
பன்னிப்பறவை யதாய்ப் பார்க்குங்கால்—உன்னி
உதையந் திசைபட்சி உண்மை யறிந்துரைக்கக்
கதை காவியக்களிறே காப்பு. (க)

துய்ய மலருறையுந் தோகையே உந்தனுடை
செய்ய மலர்ப்பாதஞ் சேவிப்பேன்—பொய்யில்லா
ஐந்துவகை பட்சிதன் கதிநிமித்தங் குணத்தைச்
சிந்தைதனில் நிற்கவே செப்பு. (உ)

அகரமே வல்லூறு ஆந்தை இகரமதாம்
உகரம் பெருங்காக்கையுண்மை—பகருங்கால்
எகரமது கோழியெந்நாளும் மஞ்ஞை
ஒகர மயிலென்றே யுரை. (ங)

பூர்வபட்சம் பகல் வாக்கியத்துப் பாடல்.
வாக்கியம்.

நாரிவாடி பூவேதோ செவ்வாய் ஞாயிறு வல்லூறு
குறைந்த திங்கள் புதனுந்தை கவ்வாய் வியாழம் காரண்டம்
கருதும் வெள்ளி கோழியதாம் பிவ்வாய் சனியில் மயிலுண்ணும்
வனமெ பக்கத்தடைவிது வென்றவ்வாய் நூலேயகத்தியரும்
அமரற் கருளிச் செய்தனரே. (க)

உண்டு நடந்து உலகாண்டு நித்திரையாய்த்
தண்டியூர் முற்பகலிற் சாவாகும்—உண்டேனை
அரசாயிறந்து அநேக வழி நடந்து
விரவாயுறங்கு மிரவில். (உ)

வல்லூறு உண்ண வாந்தை வழி நடக்க
நல்ல குறு காகம் நாடாளப்—பொல்லா
உறக்கமது கோழி யொண்டொடி யீரிங்கே
திறக்கு மயிலென்றே யியம்பு. (ங)

End :

அபரபட்சத்து வாரப்பட்சி யறிய பகலில்.

திங்கள் சனி மயில். ஞாயிறு செவ்வாய் கோழி.
புதன் காக மிரவில், வியாழம் ஆந்தை.
வெள்ளி வல்லூரு.
சனி திங்கள் கோழி வெள்ளி மயில்.
புதனுந்தை வியாழம் வலியன்.
ஞாயிறு செவ்வாய் வல்லூறு.

பூர்வபட்சத்து வாரங்கள் எழுக்கும் பகல்.
பந்துகட்டு வாக்கியம்.
நாரிவாடி பூவேதோ.
இதற்கு ராப்பருந்துகட்டு வாக்கியம்.
பூவே குடே ஞேஞரி.

அபரபட்சம் வாரங்கள் எழுக்கும் பகல் பந்துகட்டு
தேஞேடே பூவிதே.
இதற்கு ராப்பருந்துகட்டு வாக்கியம்.
பூவே சூடிமாலோனே.

பஞ்சபட்சி சாஸ்திரம் எழுதி முடிந்தது.
முற்றும்.

இவை சாஸ்திரம் :—

ஆனைக்குளத்துச் சேரியிலிருக்கும் பத்தீசு வாத்தியார் எழுதிய தென்றறியவும்.

அ ஆ க கா ங ஙா ச சா ஞ ஞா ட டா ண ணா த தா ந நா ப பா
ம மா ய யா ர ரா ல லா வ வா ழ ழா ள ளா ற றா ன னா இ ஈ
கி கீ ஙி ஙீ சி சீ ஞி ஞீ டி டீ ணி ணீ தி தீ நி நீ பி பீ மி மீ யி யீ ரி ரீ
லி லீ வி வீ ழி ழீ ளி ளீ றி றீ னி னீ உ ஊ கு கூ ஙு ஙூ சு சூ ஞு ஞூ
டு டூ ணு ணூ து தூ நு நூ பு பூ மு மூ யு யூ ரு ரூ லு லூ வு வூ ழு
ழூ ளு ளூ று றூ னு னூ எ ஏ கெ கே ஙெ ஙே செ சே ஞெ ஞே
டெ டே ணெ ணே தெ தே நெ நே பெ பே மெ மே யெ யே
ரெ ரே லெ லே வெ வே ழெ ழே ளெ ளே றெ றே
னெ னே ஒ ஓ கொ கோ ஙொ ஙோ சொ சோ ஞொ ஞோ
டொ டோ ணொ ணோ தொ தோ நொ நோ பொ போ மொ மோ
யொ யோ ரொ ரோ லொ லோ வொ வோ ழொ ழோ ளொ ளோ
றொ றோ னொ னோ. அகாரம் வல்லூறு. இகாரம் ஆந்தை. உகாரம்
காகம். எகாரம் கோழி. ஒகாரம் மயில்.

(கு. - பு.)—

இது மூவருடக் காட்டலாக்கு 164 (b) நம்பர் பிரதி போன்றுள்ளது. முற்றும் உளது. ஏடுகள் மிகவும் சிதலுற்றுச் சிதைந்து கிடக்கின்றன.

No. 2252. தொல்காப்பியம் நச்சினார்க்கினியர் உரையுடன்.
TOLKĀPPIYAM WITH NACCINĀRKKINIYAR'S COMMENTARY.

Substance, Sritalam. Size, 17¼ × 2¼ inches. Pages, 156. Lines, 20 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 1-a. The other work herein is Ilakkaṇaviḷakkam 163-a.

Contains the chapters on Orthography and Etymology.

Complete.

Same work as that described under No. D. 47.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 47-ஆவது நம்பரில் வந்துள்ளதே யாம். இப்பிரதியிலும் எழுத்ததிகாரம். சொல்லதிகாரம் இவ்விரண்டும் நச்சினார்க்கினியர் உரையுடன் உள. 79 to 162 ஏடுகள் ஒன்றும் எழுதாமல் விடப்பட்டுள்ளன. 163-ஆவது ஏட்டில் இலக்கண விளக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எழுத்துக்கள் மிகவும் சிறியனவாய் எழுதப்பட்டிருக்கின்றன. ஆயினும் தெளிவாயிருக்கின்றன. சிதைந்திருக்கின்றன.

No. 2253. இலக்கண விளக்கம் உரையுடன்.
ILAKKAṆAVIḶAKKAM WITH COMMENTARY.

Pages, 92. Lines, 20 on a page.

Begins on fol. 163-a of the MS. described under No. D. 2252.

Incomplete.

Same work as that described under No. D. 36.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 36-ஆம் நம்பரில் வந்துள்ள நூலே யாகும். இப்பிரதியில் இந்நூலின் பொதுவியல் "உவப்பினு முயர்வினும்" என்ற (5) ஐந்தாஞ் சூத்திரம் வரையிலும் உள்ளது. அதற்கு மேலான பகுதியையும் எழுதுவதற்குச் சில ஏடுகள் வெற்றேடுகளாய் விடப்பட்டிருக்கின்றன. ஏடுகள் சிதைந்துள. எழுத்துச்சிறியவையாயினும் தெளிவாகவிருக்கின்றன.

No. 2254. பூசைக்கோவை
PŪJAIKKŌVAI.

Pages, 5. Lines, 7 on a page.

Complete.

Begins on fol. 183 of the MS. described under No. D. 1127.

A directory, in verse, for the worship of God Śiva, as it is performed by true *Śaiva Siddhāntins*, with flowers, offerings of various kinds, etc.

Beginning :

பூசைக்கோவை.

பூதசுத்தி.

உழிதரு காலுங் கனலும் புனலொடு மண்ணும் விண்ணும்
இழிதருகால மெக்காலம் வருவது வந்ததற்பின்
உழிதரு காலத்துன்னடியேன் செய்த வல்வினையைக்
கழிதருகாலமுமாய வைகாத்தெம்மைக்காப்பவனே. (க)

* * * * * *

மந்திரசுத்தி.

அல்லிக்கமலத்தயனு மாலு மல்லா தவருமமரர் கோனுஞ்
சொல்லிப்பரவு நாமத்தானைச் சொல்லும் பொருளுமிறந்த சுடரை
நெல்லிக்கனியைத் தேனைப்பாலை நிறையின்றதைய முதின்சுவை யைப்
புல்லிப்புணர்வதென்று கொல்லோ வென்பொல்லாமணியைப் புணர்ந்தே

* * * * * *

End :

சோடசோபசாரம்.

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற்பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண்ணீற்றாய்
பங்கயத்தயனுமாலறியா
நீதியே செல்வத்திருப்பெருந்துறையில்
நிறைமலர்க்குருந்த மேவிய சீ
ராதியேயடியே னுதரித்தழைத்தால்
தேந்துவையென்றருளாயே. ?

* * * * *

ஞான பூசை.

மனமுதற்காரணமெல்லாம் . . . மைசத்தாகி ஞானக்
கண்ணினுலுன்னியந்தக் கருத்தினுலெவையு நோக்கி
யெண்ணியஞ்செழுத்தை மாறி பிறைநிறையுணர்ந்து போற்றப்
புண்ணியந்தனக்கு ஞானப்பூசையாப்புகலுமன்றே.

திருச்சிற்றம்பலம்.

(கு. - பு.)—

பூசைக்கோவை யென்னும் இச்சிறு நூல், சைவ சித்தாந்திகள் சிவ பெருமானைப் பூசித்து வழிபடற்குரியனவாய், பூதசுத்தி, ஆன்மசுத்தி, மந்திரசுத்தி, திரவிய சுத்தி, இலிங்க சுத்தி, இலிங்க ஆவாஹநம், வஸ்திரா பரண புஷ்பங்கள் அணிவித்தல், நிவேதநஞ் செய்தல், மற்று ஷோடச உபசாரங்கள் முதலியன செய்தல், ஆகிய இவைகள் எல்லாவற்றிற்கும் ஒவ்வோர் பாடல் விழுக்காடாக வமைந்துள்ளது. இவைகளைக்கொண்டே சைவர்கள் பூசை செய்வார்கள்போலும். எழுத்துப்பிழை உள.

No. 2255. நாயன்மார் திருவவதார மரபு.
NĀYANMĀR TIRUVAVATĀRA MARAPU.

Pages, 10. Lines, 8 on a page.

Complete :

Begins on fol. 23 of the MS. described under No. D. 584, Vol. II.

Gives the caste, date of birth, the means of salvation, etc., of the 63 *Śaiva Saints* called *Nāyanmār.*

Beginning :

நாயன்மார் திருவவதார மரபு.

சைவசமய சிரோமணிகளாகிய அறுபத்து மூன்று நாயன்மார்கள் திருவவதாரஞ் செய்த மரபுகளையும், திருநட்சத்திரங்களையும், அவர்கள் முத்தியடைந்த விதத்தினையும் கூறுகின்றது. தில்லைவாழந்தணர். சிறு த்தொண்ட நாயனார் மரபு—மாத்துவவந்தணர். சிவனடியார்களை வழி பட்டு முத்தியடைந்தவர். மாதம் சித்திரை, நட்சத்திரம் பரணி.

மங்கையர்க்கரசியார் மரபு.

பாண்டி முடி மன்னர் பிராட்டியார் குருவருளாலே முத்தியடைந் தவர், மாதம் சித்திரை. நட்சத்திரம், உரோகிணி. விரன்மீண்ட நாய னார் மரபு—வேளாளர். சிவனடியார்களை வழிபட்டு முத்தியடைந்தவர், மாதம் சித்திரை, நட்சத்திரம், திருவாதிரை. இசைஞானி நாயனார் மரபு—சிவ வேதியர். குருவருளாலே முத்தியடைந்தவர், மாதம், சித் திரை. நட்சத்திரம் சித்திரை. திருக்குறிப்புத்தொண்ட நாயனார் மரபு—ஏகா லியர். சிவனடியார்களை வழிபட்டு முத்தியடைந்தவர். மாதம் சித்திரை. நட்சத்திரம் சுவாதி. திருநாவுக்கரசர் மரபு—வேளாளர். குருவருளா லே முத்தியடைந்தவர். மாதம், சித்திரை. நட்சத்திரம், சதையம்.

End :

முனையடுவார் நாயனார் : மரபு, வேளாளர். சிவனடியார்களை வழி பட்டு முத்தியடைந்தவர், மாதம் பங்குனி, நட்சத்திரம் பூசம்.

காரைக்காலம்மை மரபு—வணிகர். சிவனடியார்களை வழிபட்டு முத்தி யடைந்தவர். மாதம், பங்குனி. நட்சத்திரம், சுவாதி.

தண்டியடிகள் மரபு—தொன்றுமை. சிவலிங்கத்தை வழி பட்டு முத்தியடைந்தவர். மாதம் பங்குனி. நட்சத்திரம், சதையம்.

* * * * *

மாணிக்கமூர்த்திசுவாமிகள் மரபு—மாத்துவ வந்தணர். குருவருளா லே முத்தியடைந்தவர், மாதம், ஆவணி. நட்சத்திரம், மகம்.

அறுபத்து மூன்று நாயன்மார் மரபுகளில் ஒவ்வொன்றிலும் இத்து ணையர் என்பதைச் சொல்லுவது.

* * * * *

அறுபத்து மூன்று நாயன்மார்களது புராணத்தின் செய்யுட் டொகை யறிவது.

(கு. - பு.)—

இது, சைவசித்தாந்தத்தில் (63) அறுபத்து மூன்று நாயன்மார்களின் மரபு, முத்தியடைந்த வகை, அவதரித்த மாதம், நட்சத்திரம், இன்னின்ன மரபில் இத்துணையர் ஆவர் என்னும் இவ்விஷயங்களைக்குறிப்பாக வசன நடையில் எடுத்துணர்த்துவது. பின்னர் பெரிய புராணத்தின் ஒவ்வொரு புராணத்துக்கும் உள்ள பாடல்களின் மொத்த எண்களும் எழுதப்பட்டு ள.

No. 2256. அளவை வாய்ப்பாடு முதலியன.

ALAVAI VĀYPPĀḌU, ETC.

Pages, 14. Lines, 6 on a page.

Complete :

Begins an fol. 1 of the MS. described under No. D. 82, Vol. I.

A work on Indian weights ; contains also some miscellaneous information like the names of the " Seven Sages ", " Five Virgins ", etc.

Beginning :

நெல்லு (க) கொண்டது பகு [மி] (மெ) டை. பகுமெடை (உ) கொண்டது பிளவு. பிளவு (உ) கொண்டது [குண்ணி] (குன்றி). குன்றி (உ) கொண்டது மஞ்சாடி. மஞ்சாடி (உ) கொண்டது பணவெடை. பணவெடை (கூ) கொண்டது வராகனெடை. வராகனெடை (ய) கொண்டது. பலம். பலமறியும்படி. சேர் (பலம்) (அ).

(கு. - பு.)—

இச்சிறு நூல், அளவையாறனுள் எடுத்தலளவையினையெடுத்துணர்த்துவது. இப்பிரதியில் முற்றுப்பெற்றதென்றேதெரிகிறது. பின்னர், அஷ்டகஜங்கள், அஷ்டமாநாகங்கள், அரிச்சந்திரன் முதலான சக்கிரவர்த்திகள் (கூ), அறுவர், ஸப்தரிஷிகள், அவர் பத்நிமார்கள், குலபர்வதங்கள் (அ) சிரஞ்சீவிகள் எழுவர், ஸப்தபுரிகள், பஞ்சகன்னியர், பிரஹ்லாதர் முதலான பரமபாகவதர்கள் பதினைவர் (யரு). ஆழ்வார் பன்னிருவர், ஆகிய இவர்களுடைய பெயர்கள் இன்னின்னவையென்று எழுதப்பெற்ற சில ஏடுகளும்உள. ஏடுகள் சிதைந்துள. பிழைகள் உள.

No. 2257. சங்கச்செய்யுட்கள்.

SAṄGACCEYYUṬKAḶ.

Pages, 3. Lines, 9 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 4-a of the MS. described under No. D. 138, Vol. I. Contains 5 Stanzas only.

A collection of stanzas from *Puṟanāṉūṟu.*

(கு. - பு.)—

இதில் புறநானூற்றின் செய்யுட்களான " மண்டிணிந்த நிலனும் ", " எளிதோதானே," " நாளன்று போகி," " நாராய் நாராய்," என்று தொடங்கும் ஐந்து செய்யுட்களேயுள. ஏடுகள் சிதல் உற்றுக்கிடக்கின்றன.

No. 2258. ரஹஸ்யத்ரயஸாரம்.

RAHASYATRAYASĀRAM.

Substance, palm-leaf. Size, 17¼ × 1 9/16 inches. Pages 328. Lines, 8–11 on a page. Character, Tamil and Grantha. Condition, injured. Appearance, old.

Incomplete.

Same work as that described under D. No. 971.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 971-வது நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் ஆதி முதற்கொண்டு 29-ம் அதிகாரமாகிய சரமஸ்லோகாதிகாரத்தில் சிறிது பாகம் வரையில் உள்ள தாதலின் முற்றுப்பெறவில்லை. முதலில் சில ஏடுகளில் வடமொழியி லான தனியன்களிருக்கின்றன. ஏடுகள் மிகவும் சிதலுற்று முறிந்து கிடக்கின்றன.

No. 2259. கீலக வருடப் பஞ்சாங்கம்.
KĪLAKA VARUDAP PAÑCĀṄGAM.

Substance, palm-leaf. Size, 8 × 1 ⅝ inches. Pages, 38. Lines, 8 on a page. Character, Grantha. Condition, much injured. Appearance, old.

Incomplete.

The Indian Almanac for the Tamil year *Kīlaka.*

(கு. - பு.)—

இது, கீலக வருஷத்திய பஞ்சாங்கமாகும். இதில் சைத்ரசுத்தம் முதற் கொண்டு புஷ்யசுத்தம் வரையில் உள்ளது. சில ஏடுகள் முன்பின்னாக வுள. ஏடுகள் மிகவும் சிதிலமாயுள. நடுவில் 17, 20 ஆகிய ஏடு களில்லை.

No. 2260. முருகர் தரிசிப்பு.
MURUKAR DARIŚIPPU.

Pages, 6. Lines, 8 on a page.

Begins on fol. 115 of the MS. described under No. D. 1157, Vol. III.

Complete.

A poem, in which the author prays to God Subrahmaṇya to show himself before the author, his devotee. This seems to be a part of a longer work.

Beginning :

ஒரு முகமாய் வாலையாய்க் குமாரனுகி
குறையில்லா தறுமுகமும் வடிவுமாகி
அருளுருவாயோங்கார அகாரமாகி
ஆறெழுத்தாய் மூலமந்திரமுமாகி
மருவாகி மாணிக்கவொளியாய் நின்ற
வன்னியாய் மலர்க்கமல நடுவே நின்ற
திருமுகமும் பன்னிரண்டு கையும் வேலும்
திருவடிவு மடியேற்குத் தரிசிப்பாயே

End :

ஐவருமே தானொடுங்கிப் போகா முன்னும்
ஆலம்போலொற்ற கண்பஞ்சடையா முன்னும்
கைவசமாக் காண்பதற்கேகி யானுங்
காணி யாற்றங்கரையிற் காணப்பெற்றேன்

உய்வதற்கு உனக்குயானடிமையாற்றுந்
முயர்ந்ததிருப்படை வீடு உரைப்பார் சுவாமி
தெய்வசிகாமணியே உன் முகங்களாறுந்
திருவடிவு மடியேற்குத் தரிசிப்பாயே || ம ||

* * * * *

(கு. - பு.)—

இது, முருகப்பிரானைத் தரிசிக்க விழைந்தார் ஒருவர் அக்குமாரக் கடவுளை விளித்து எனக்குத் தரிசனம் தந்தருளல் வேண்டுமெனப் பிரார்த் திப்பதாக வமைந்துளது. பத்துப் பாடல்களைக் கொண்டுள்ளது. பின்னர், "தண்டாயுத முந்திரிசூலமும்" என்று தொடங்கும் இரண்டு பாடல்கள் உள. அவை இத்துடன் சேர்ந்தவையல்ல வென்று தெரிகிறது. ஏடுகள் சிறிது சிதைந்துள. எழுத்துப்பிழைகள் மிகவுள. இது ஒரு பெரிய நூ லின் ஒரு பகுதியென்று தெரிகிறது.

No. 2261. காசிம் படைவெட்டு.

KĀŚĪM PAḌAIVEṬṬU.

Substance, palm-leaf. Size, 16 × 1 inches. Pages, 80. Lines, 8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Contains 131 stanzas only.

A poem, in the *Paḍaiveṭṭu* style, on the story of "Kāsim." In the 6th stanza of this poem the author, a Muslim poet, refers to himself as "Nāleṭṭil Venṟār". This differs in many places from its printed edition.

This work has been printed.

Beginning :

மறைப்பொருளே திசையெங்கும் போற்றும் வேந்தன்
மன்னவர்க்கும் மன்னவனே பிறவாய் நின்ற
உறை பகருமடுகமதெந்தன மருகனலி யோங்கு புகழாகவந்த ?
உசனுக்காக தருவளருங்காசிங்கதை
தருவளருங்காசிங்கதை போருக்குத்
தண்டமிழ்நூல் பாடவெந்தன்றகைமைக்கு
நிறை நிறையாயளவளவாய் நிறைந்து நின்ற
நித்தனே நித்தனே நித்தருக்குக் காப்புத்தானே (க)

உலகு நிலையேழுங் கடல்களேழும் பரிடமேழுமெவ்வகையும்
இலகுமகமது படைத்தகோவேயிற் சூல மகமது திருப்பேரனார்
திலதமனையனேரலிபுலியார் செல்வரசனுடைதிருமகனார்
கலகம் வருவாரை வென்ற சிங்கங் காசிங்கதை பாடகாத்தருளே (உ)

* * * * *

ஆக்கியோன் பெயர்.

தான முதவி நீதர் காசீம்சங்கைப் புராணத்தைத் தமிழ்ப்படுத்தி
மானபுராணங்கள் சாமினூர் சொல்மாலீனவரவர்தான் மைந்தரா
[னோர்
தீனைவிரும்பிய விசுமாயல்கான் செய்யுந்தலீசு கொடை சிறப்
[பினூலே
ஞானமுறை கூட்டிப்பீருகான் சொல் நாளெட்டில் வென்றூர்
[பாடினூரே. (சு)

End :

நிறை சூலியம்பல் செய்தோமோ நீதி நெறிதப்பி நடந்தோமோ
கறை சூதுவம்பு பகர்ந்தோமோ கண்டார்தமையெல்லாம் பொரு
[தோமோ
மறை சூதளம் பேசி நின்றேமோ மன்றிலிருந்தோ ஞ் சொன்
[னோமோ
இறசூல் கோத்திர மதனிற்பிறந்து எங்கடமக்கிது வருவானே(௱௩௰)
அல்லிது படக்காரியமோ வடியாள் தனக்கொன்ற பாக்கியமோ
வல்லவினையெல்லாமெனக் கேத்தமன்னர் தலையிலே யெழுதுவா
[னேன்
எல்லையுலகினிலெனக்கான வெந்தன்கணவரையென்புலம்ப
கல்லையுரையாத அசன் மகனூர் கல்புதெரியாமற் புலம்புலுற்
[றூர். (௱௩௰௨)

(கு. - பு.)—

இந்நூல் முகம்மதியர் மதத்தைச் சார்ந்து "படைவெட்டு" என்று வழங்கும் ஒரு வகைப் பிரபந்த காவிய வகையாகும்; இது அச்சிடப் பெற்றுள்ளது. "நாளெட்டில் வென்றூன்" என்றும் "பீருகான்" என்றும் வழங்கும் முகம்மதியப் புலவரான் இயற்றப்பெற்றதாகும் என்ற விச்செய்தி இந்நூலின் (சு) ஆறுவது செய்யுளால் அறியக்கிடக்கிறது. இது நூற்றைம்பது பாடல்களால் அமைந்துளது. இப்பிரதியில் நூற்று முப்பத்திரண்டு பாடல்கள் வரையிலுமேயிருக்கிறது. அச்சுப்பிரதிக்கும் இப் பிரதிக்கும் பல விடங்களில் மிகவும் பாடபேதங்கள் காணப்படுகின்றன. எழுத்துப்பிழையுடன் உளது. ஏடுகள் சிதைந்திருக்கின்றன.

No. 2262. அமானல்லா கதை.

AMĀNALLĀ KATHAI.

Substance, palm-leaf. Size, 12¼ × 1¼ inches. Pages, 160. Lines, 6 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Incomplete.

Otherwise known as *Ulukku Malukkup Padaivettu*. The subject matter of this poem is the "story of Amānallā." No particulars of the author are given in the poem.

Beginning :

உலுக்கு மலுக்குப் படைவெட்டு.

மன்னு முலுக்கு மலுக்குப்படை வெட்டையான்
பன்னு தமிழறிந்து பாடவே—உன்னுமுயிர்
ஆரண நூற்கெட்டாத வாதியிறையோனுன்
காரணமாங் கர்த்தாவே காப்பு (க)
அமானல்லா கிருபை செய்யுவும்.

End :

உன்னை வதையாது விடுவேனுனது
மன்னருகு நீயணுகியே
மன்னுமி சுலா நெறிவரச் சொல்லு
வனல்லது மறுத்திடுகிலோ
தன்னு பலசேனையுடன் தன்னையும்
மிமைப்பமை துணித்திடுவன்யான்
இன்னவையலிப்புலி சொன்னு
ரெனமெனக்கணமிறங்கி மொழியும். (௯ாரு௰௫)

அன்னகுடையிருடீம அலிப்புலி
யெனும் பெருமை தானறிகிலா
தென்னுடனெதிர்க்க வசமோ வெவர்க்கு
முமக்குமொருநி குரடையிற
சொன்னபடி ராசனோடு சொல்லிவிடு
மென்றடி தொழுது பகருவார்
துன்னுயிர் தனக்கருக வெந்நரகி
லல்லது தனை துணி செய்வேன். (௯ாரு௰௬).

இவ்வித முரைப்பாயென

* * * * *

(கு. - பு.)—

இந்நூல் முகம்மதியர் மதத்தைச் சார்ந்ததாய் "உலுக்குமலுக்கும் படைவெட்டு" என்ற பெயர் வாய்ந்ததாயுளது. இதனை இயற்றியவர் பெயர் முதலியன ஒன்றும் தெரியவில்லை. ஏடுகள் மிகவும் முறிந்து கிடக்கின்றன. முற்றுமில்லை. எழுத்துப் பிழைகள் உள.

No. 2263. அமீன் தோத்திரம்.

AMĪN TŌTTIRAM.

Substance, palm-leaf. Size, 15 × 1 inches. Pages, 78. Lines, 5. on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

A poem in praise of Amīn, a Muslim. No particulars of the author are given in the poem.

Beginning :

அமீன் தோத்திரம்.

அலகமந்துலில்லா வனைத்தும் படைத்தாளுகின்ற
அல்லா நினதூதர முகம்மதிற் சூல நெபிமேற் சொல்லாலிவ் வண்ணம்
தொடங்கினேனென் பிழைகளேயெல்லாம்
பொறுத்து இரங்கு வாய் எங்கோவே
கோமானேயெங்கட்குத்தாயே குதரத்துள்ள சீமானே
யாவுந்தெரிந்த திறலோனே நீமாளமன வதநெை ?

End :

. . . கஞ்சப்பதம் தாருமய்யா வினி
ஒருக்காலு மும்மை நெஞ்சில் மறக்காமலிருக்க
நீருதவிசெய் . . . மய்யா
* * * * *
முத்திரை மேவும் புயாசல ராசரே
முஸ்த்தநவியே கருணேசரே .
ஒருக் காலமும்மை நெஞ்சில் மறக்காமலிருக்க
நீருதவி செய்தருளுமையா. (உ)

(கு. - பு.)—

இந்நூல் முகம்மதியர் மதத்தைச் சார்ந்ததாய் "அமீன்" என்பவர்மீது இயற்றப்பெற்றதொரு நூலாகும். இப்பிரதியில் முற்றுமில்லை. ஏடுகள் சிதைவுற்றிருக்கின்றன. எழுத்துப் பிழைகள் மிகவுள. இயற்றியவர் பெயர் முதலியன ஒன்றும் விளங்கவில்லை.

No. 2264. திருவாய்மொழி.

TIRUVĀYMOḺI.

Substance, palm-leaf. Size, 15¾ × 1¼ inches. Pages, 190. Lines, 9 on a page. Character, Tamil. Condition, very much injured. Appearance, old.

Same work as that described under No. D 716.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 716-வது நம்பரில் வந்துள்ளதே யாகும். இப்பிரதியில் முதற்பத்து மூன்றுந் திருவாய்மொழி முதல் நூல் முற்றும் உளது. ஏடுகள் மிகவும் முறிந்தும் புழுக்களால் அரிக்கப் பெற்றும் படித்தற்கியலா வண்ணமாய் அத்துணை சிதைந்து இருக்கின் றன.

No. 2265. பாண்டவர் வனவாசம்.

PĀṆḌAVAR VANAVĀSAM.

Substance, palm-leaf. Size, 14⅝ × 1¼ inches. Pages, 132. Lines, 6 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Incomplete. wants 40 foll. in the beginning and end.

A poem, in the *Ammānai* style, on the "forest life of the *Pāṇḍavas*"

Beginning :

ண்டிரென்று
பொய்யில்லா நீள் தருமன் புகன்றார் காணம்மானை
பார்வேந்தன் சொல்லப் பரீக்ஷித்து வுங் கேட்டு
தார்வேந்தே நீரிருக்கத் தம்பிமார் தாமிருக்கத்
தேனுருஞ் சோலைசூழ் தேசமெல்லாம் நன்றாக
நானுவோ வென்று நகைத்தனன் காணம்மானை
சிங்கத்தாளுளுகின்ற தேசமெல்லாம்மாளவென்றால்
பங்கமின்றி நாய் தனக்குப்பட்டம் பொறுக்குமோதான்
செறிவாக வுந்தனுடைய தேசம் நானுளுகைக்கு
அறுவாக வென் கையிலாகாதென்றே யுரைத்தான்
பார்த்தனுடைப் பொன் பகரும் மொழிகேட்டு
வாய்த்த புகழ்த் தருமன் மகிழ்ந்துரைப்பானம்மானை.

* * * * *

End :

ஏராருந் தீர்த்த மிழிந்தாடலுற்றாரம்மானை

* * * * *

வந்திவர்கள் செல்லும் வழியிற் சில வானரங்கள்
கண்டு மனமகிழ்ந்து காவலரே நீரார் தாம்
ஆண்டகைக் கண்ணனெடு போந்தோமிப் பூதலத்தில்
அந்நாளிலுங்களையும் அவனிதனில் நாங்காணேம்
எந்நா டெத் தேசம் யாவரென்றாரம்மானை
மன்னு குருகுலத்தில் பாண்டு மைந்தர் நாங்களுந்தான்
மன்னுகலி வந்து மண்ணுலகில் புகுந்தமையால்
அத்தினுபுரத்தைவிட்டு அச்சுதனைத்தான் நினைந்து
மெத்தியதோர் கானகத்தில் மேவினே மென்றுரைத்தார்
கீதம் பயில்வானரங்கள் கேட்டு மனமகிழ்ந்து
ஆதலாலெங்கள் அனுமாற் கிளையவன்காண் வீமன்.

(கு. - பு.)—

இந்நூல் பஞ்சபாண்டவர்கள் காடுறைந்த கதையினை உணர்த்துவது. அம்மானையென்ற பிரபந்த விசேஷத்தால் அமைந்துளது. முதலில் 40 ஏடுகளும், முடிவில் பல ஏடுகளும் இல்லை. நடுவிலும் சில சில ஏடுகளு மில்லை. சில அடியோடு ஒடிந்துள.

No. 2266. குருபரம்பராப்ரபாவம் மூவாயிரப்படி.

GURUPARAMPARĀPRABHĀVAM MŪVĀYIRAPPAḌI.

Substance, palm-leaf. Size, $17\frac{3}{4} \times 1\frac{1}{2}$ inches. Pages, 284. Lines, 7 on a page. Character, Tamil and Grantha. Condition, injured. Appearance, old.

Incomplete. Wants 1 to 20 and 26 foll. in the beginning.

Contains a biographical account of *Vadakalai Śrī Vaiṣṇava Gurus* from Śrī Nārāyaṇa down to Śrī Vēdānta Dēśikar and Nayinārācār. By Tritīya Brahmatantra Svāmi.

Printed.

Beginning :

நாய்ச்சியாரை அழைத்து நீர் யாருக்கு வாழ்க்கைப்பட வுகந்தீர் என்ன, அவளும் "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்ன, ஆழ்வாரும் பின்னை என்னென்ன, அவளும் "புள்வாய்பிளந்தமணி வண்ணனுக்கென்னை வகுத்திடுமின்" என்ன, ஆழ்வாரும், அவன் எவ்வூரான் என்ன, அவளும் அவனூரெல்லாஞ் சொல்லுமென்ன, ஆழ்வாரும் திவ்விய தேச மாகாத்மியங்களையெல்லாம் அருளிச்செய்ய, தென்னாடும் வடநாடுந் தொழ நின்ற திருவரங்கத் திருப்பதி வைபவத்தைக் கேட்டருளின இவ்வாண்டாள் லஜ்ஜாவிஷ்டையாய்ச் சில மநோரதங்களை அநுபவித்து அவ்வநுபவத்தைத் "தையொரு திங்களுந் தரைவிளக்கி" என்று தொடங்கி நாய்ச்சியார் திருமொழியாலே பிரகாசிப்பித்தருளித் திருவரங்கச் செல்வனாரிடத்திற் குடிகொண்ட நெஞ்சினளாயிருக்க ஆழ்வாரும் இது கைகூடும்படி எங்ஙனே யென்றிருக்க, அன்று ராத்திரியில் திருவரங்கச் செல்வனாரும் உம்முடைய பெண்ணான கோதையை அழைத்துக் கொண்டுவாரும் என்று ஸ்வப்நங்காட்டியருள, ஆழ்வாரும் ஸந்துஷ்டராயிருக்க, கோயிலிலே அழகிய மணவாளனும் ஸமஸ்த பிருதங்களோடே ஆண்டாளை அழைத்துக்கொண்டு வரும்படி ஜனங்களுக்கு ஸ்வப்நங்காட்டியருள.

End :

பின்பு திருமலை ஸ்ரீநிவாஸாசார்யர் முதலான முதலிகளும் எம்பெருமானாரப்பனைக்கொண்டு [நயி] நாயனாராசார்யருக்கு ப்ரஹ்மோத்ஸவாதி கைங்கர்யங்களையெல்லாம் நடத்தி முன்னோர்கள் நியமனப்படிக்கு நயினாராசார்யர் ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஜீயர் இருவரும் ப்ரவசநாநுஸந்தாநம் முதலானவைகளுக்கு நியமித்தருளின க்ரமத்தைக்கொண்டு பரக்கத்திருவத்யயநத்தையும் செய்தருளினார்கள். பின்பு இப்படி நயினாராசார்யர் நியமனப்படிக்கு முதலிகளும் ஸம்ப்ரதாய ப்ரவசநம் பண்ணிக்கொண்டிருக்கிற காலையிலே மணவாளமாமுனியும் வேதாந்ததேசிகரிடத்தில் க்ரமமாக ப்ரதிபத்தி தலையெடுத்துப் பெருமாள் கோயிலேற வெழுந்தருளிக் கிடாம்பி நயினார் திருவடிகளிலே ஆச்ரயித்து ஶாஸ்த்ர ரஹஸ்யவிஷயங்களையும் திருக்கோதாஸ்துதியையும் தேசிகதிவ்ய ஸூக்திகளைக்கொண்டு ஸ்வீகரித்துத் தெளிந்து தம் வாக்யத்திலும் பெரிய பெருமாள் ஸ்ரீரங்க நாச்சியார் நியமனப்படிக்கு தேசிகரு

க்குப் பிற்பட்ட தமக்கு ஆசார்யாதிகள் வேண்டுவதில்லை யென்று தம் ஶிஷ்யர்களுக்கு நியமித்தருளி வேதாந்ததேஶிகர் ஸம்ப்ரதாயமே ஸத்ஸம்ப்ரதாய மென்று காட்டியருளினர்.

பின்பு கேஶவாசார்யரிடத்தில் ஸமாஶ்ரயணத்தைப் பெற்றவரான ஒருவர் கடிகாஶதம் அம்மாள் ஸந்நிதியில் ஶாஸ்த்ராப்யாஸம் பண்ணி திருமந்த்ரார்த்தத்தையும் ரஹஸ்யஸமவிஷயங்களையும் அதிகரித்து அகிலஶாஸ்த்ரஜ்ஞராய் ஆசார்யபக்தி தலையெடுத்திருக்கிறவருக்கு ஸர்வவிஶேஷார்த்தங்களையும் கடிகாஶதம் அம்மாள் ப்ரஸாதித்தருள அவரும் வடதேசத்தில் திக்விஜயம் பண்ண அஹோபிலம் அழகிய சிங்கரும் அவருக்குத் திருவாராதநத்தையும் ப்ரஸாதித்து ஸந்ந்யஸித்துக் கொள்ளும்படியும் ஸ்வப்நங் காட்டியருள, அப்படியே ஸந்ந்யஸித்தருளின வண்ஶடகோப ஜீயரும், அந்த அழகிய சிங்கரை யெழுந்தருளப் பண்ணிக்கொண்டு கடிகாஶதம் அம்மாள் திருவடிகளிலே வந்து உண்ணாது ஸேவித்து அச்செய்தியை விண்ணப்பஞ் செய்ய, அம்மாளும் போர உகந்தருளி திவ்யதேஶங்களில் ஜீர்ணோத்தாரணங்களையும் ஸித்தாந்தப்ரவசநத்தையும் பண்ணிக்கொண்டிருக்கும்படி நியமித்தருள, வண்ஶடகோப ஜீயரும் அப்படியே ஆழ்வார் திருநகரி முதலான திவ்யதேசங்களில் ஜீர்ணோத்தாரணங்களையும் ஸம்ப்ரதாயப்ரவர்த்தநத்தையும் செய்துகொண்டு எழுந்தருளியிருந்தார்.

வேதாந்ததேஶிகர் ஸம்ப்ரதாயத்தில் ஆஶ்ரயித்திருக்கிற ஜீயர்கள் ஸ்ரீ வைஷ்ணவர்கள் திவ்யதேஶங்கள் தோறும் நிறைந்து குடிகொண்டு ஸமஸ்தாசார்ய கைங்கர்யங்களையும் ராமாநுஜ ஸித்தாந்த ப்ரவசநபூர்வக தேஶிகதிவ்ய ஸூக்திப்ரவசநத்தையுஞ் யுஞ் செய்துகொண்டு இருக்க, திவ்ய தேசங்கள் தோறும் எழுந்தருளியிருக்கிற திவ்யதம்பதிகளான பெருமாள் பிராட்டியார்களும் உளமகிழ்ந்து தம்முடைய ஸித்தாந்தமான வேதாந்ததேஶிகஸம்ப்ரதாயமே எங்கும் தழைக்க வேண்டுமென்று அநுக்ரஹித்தருள, அப்படியே வேதாந்ததேஶிகஸம்ப்ரதாயஸ்தர்கள் திவ்யதம்பதிகள் திருவுள்ளம் உகக்கும்படி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவ்வர்த்தங்களை யெல்லாம் நம் ஆசார்யரான த்விதீய ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஜீயர் செய்தருளின பன்னீராயிரப்படி குருபரம்பராப்ரபாவத்திலும் திருமலை ஸ்ரீநிவாஸாசாரியர் செய்தருளின ப்ரபந்தநிர்வாஹத்திலும் பரக்கக் கண்டுகொள்ளுவது.

நாந்யம் மந்யே குருவர்யம் ஶ்ரீமத்வேதாந்ததேஶிகாத் |
தத்த்வம்ப்ரதாய யேந்யேஹ்யநாந்யா ஸ்ந்யாம்ஸ்வஜ்ஞாநாத் ||
கார்த்ஸ்ந்யேந ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ரேண யதீந்த்ரநா |
குருவம்ஶ ப்ரஹாரோயம் ஸம்க்ரஹேண ப்ரதர்ஶித: ||
ஸத்ஸு தீர்த்தவித்யாத்ர ஸத்பஷ்டாஸ்தபஸத்தம் |
ஶஸத்ஸ்வப்ரயத்ந தீக்ஷஸ்யாத் ஸத்கிம் ||

* * * * * *

அஸ்மத்தேஶிகபத்மிநீ மெவைபவமிதம் யேவாஹம்ஸஹஸ்ரம்,
ஶ்ருத்வா விதேவக தேஶமேவ வாஸநா:
பூர்வாசார்யா: |
தேஸவர்த்தவி மாநவாநவிபூதக்ந தேநவஷ்டம்ஶுயா:
ப்ராயஶ்சித்த முத்பஹத்வேத்த்வா:விதரணம் நமநம்
மஹாபாவநம் ||
பயோர்யஹாஷ்ய காமய ப்ரணகார்த்தம்விபூந்தேக |
ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ராய ஶ்ரீயப்ரஹ்மணே நம: ||
ஶ்ரீமதே வேதாந்தகுரவே நம: |
ஶ்ரீமதே ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரயதீந்த்ர மஹாதேஶிகாய நம: ||

(கு. - பு.)—
இந்நூல், ஸ்ரீவைஷ்ணவ மதத்தில் வடகலை ஸம்பிரதாயப்படிக்கு ஸ்ரீமந்நாராயணன் பிராட்டியார் முதற்கொண்டு ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் நயினார் ஆசார்யர் இவர்கள் வரையிலான எல்லா ஆழ்வார் ஆசார்யர்களுடைய வைபவங்களையும், அவர்கள் வாயிலாக அத்தியாத்ம ஸம்பிரதாயம் குலையாதபடி முறையே ஓராண் வழியாக வந்து நிலவிய முறையினையும் எடுத்து உணர்த்துவது. த்வதீய ப்ரஹ்மதந்திரஸ்வதந்திர ஸ்வாமி இயற்றிய பன்னீராயிரப்படி குருபரம்பரையைப்படி நூலாகக்கொண்டு ஸ்ரீமத் த்ருதீயப்ரஹ்மதந்திர ஸ்வதந்திர ஸ்வாமியால் இயற்றப்பெற்றது. மூவாயிரம் கிரந்த அளவைக்கொண்டது. அச்சிடப் பெற்றுள்ளது. இப் பிரதியில் முதலில் 20 ஏடுகளில்லையாதலின் அதிலடங்கிய பகுதி நீங்கலாக மிகுதியான பகுதி முற்றும் உளது. ஏடுகள் மிகவுஞ் சிதைந்து கிடக்கின்றன. எழுத்துக்கள் மிகவுந் தெளிவாக வெழுதப்பட்டிருக்கின்றன.

No. 2267. கூர்ம புராணம்.

KŪRMA PURĀṆAM.

Substance, palm-leaf. Size, $15\frac{1}{2} \times 1\frac{1}{2}$ inches. Pages, 658. Lines, 7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete. Wants 1 to 76 foll. in the beginning.

Same work as that described under No. D 548.

Colophon :—

சாலிவாகனசகாப்தம் ௲எசயிஉ-க்கு மேற்செல்லா நின்றவிக்கிரம௵ புரட்டாசிமீ˚ யிகஉ ஞாயிற்றுக்கிழமை அசுவநி நக்ஷத்திரம் . . . . சுபதினத்தில் காஞ்சீபுரம் சாலை வீதியிலிருக்கும் ஏகாம்பிர அய்யர் குமாரன் முருகையர், குமாரனாகிய வைத்தியலிங்கம் படிக்கின்ற கூர்ம புராணம் எழுதி நிறைந்தது. வைத்தியலிங்க ஐயர் கையெழுத்து.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 548-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் பதினாறும் அத்தியாயமாகிய அந்தகாசுரன் சாரூப்யம் பெற்ற வத்தியாயத்தின் (௱௩) 103-ஆவது செய்யுள் முதற்கொண்டு முற்றும் உளது. ஏடுகள் மிகவும் சிதைவுற்றிருக்கின்றன. நடுவிலும் 73-ஆம் அத்தியாயமான தானவிதி யுரைத்த வத்தியாயத்தின் பத்தாம் (10) பாடல் முதல் (79)-ஆவது அத்தியாய முழுமையும் இல்லை. (80) அத்தியாயம் வேறு எண் கொடுத்து எழுதப்பெற்றுள்ளது.

No. 2268. வருணகுலாதித்தன் உலாமடல்.
VARUṆAKULĀDITTAN ULĀMAḌAL.

Substance, palm-leaf. Size, 15 × 1 inches. Pages, 95. Lines, 5 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Same work as that described under No. D. 332.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 332-ஆவது நம்பர் பிரதியிலே வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியிலே முற்றுமிருக்கிறது. அதற்கும் இதற்கும் மிகப்பாட பேதங் காணப்படுகிறது. ஏடுகள் செல்லரிப்புண்டு சிதைந்துள. எழுத்துகள் தெளிவாக வெழுதப்பட்டிருக்கின்றன.

No. 2269. சீட்டுக்கவிகளும் சிங்காரப்பாடல்களும்.
ŚĪṬṬUKKAVIKAḶUM ŚIṄGĀRAPPĀḌALKAḶUM.

Pages, 20. Lines, 6 and 7 on a page.

Contains nearly twenty stray stanzas of poetic merit.

Begins on fol. 55-a of the Ms. described under No. D 82, Vol. I.

Similar to the work described under No. D 356, Vol. I.

Beginning :

மாலை செந்தமிழ் :

மாலைத்தாமரை விழித்திரு மணங்கொளத்துளப
மாலைத்தாமரை வாருதியெழுங்கதிர் மலர்த்துங்
காலைத்தாமரை காட்டிய கருணையங்கண்ணாள்
காலைத்தாமரைக் கணமகலாது நங்கருத்தே. (க)

செந்தமிழ் காட்டினிற் சஞ்சரித்திடுகவிச்
சிந்துரக் கூட்டங்கள் சின்னபின்னங்கள்பட
வென்ற கண்டீரவஞ்செய்வாணி சிம்மாசனன்
சுந்தரத் துரைமக்கள் மெய்க்க வவதானஞ்சொல்
சொக்கய்யன் மகிழ் பேரனாஞ் சூரசம்மார வடிவேலர் பதசேகரன்
சொக்கன் வரவிட்டவோலை. (உ)

* * * * *

பூமகள் மருவு மார்பனே இமையோர்
போற்றிய சங்கு சக்கரனே பூவையர்,
பதினாறாயிரம் பேரைப்புணர்ந்திடுநிரந்தரம்
முகுந்தா தேமலிதுளப மாலிகாபரணா
திகழ்வடமலை மிசையமர்ந்த தேவனே.

* * * * *

End :

அஞ்சு பொருளான புவனேசுவரி,
ஏகாங்கி அகண்ட . . . காமிநி அச்சுதாநந்தி
கௌமாரி வித்தியாதரி யாநந்தி மௌனசக்தி
கஞ்சுளி விநோதி இளநாகாபரணத்தி மிகுகாயத்திரி நிஷ்களி

* * * * *

கொஞ்சுகிளியாய் சுகவாரி பரிபூரணி மோகாம்பரி குமரனைப் பெற்ற . . . .

(கு. - பு.)—

இச்சிறு நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 356-ஆம் நம்பரில் வந்துள்ள நூலைபோன்று வெவ்வேறு விஷயமான பல பாடல்களால் தொகுக்கப் பெற்றுள்ளது. சிதலுற்றிருக்கிறது. இடையிற் சில இசைக்கவிகளும் உள.

No. 2270. முமுக்ஷுப் படி.

MUMUKṢUP PAḌI.

Substance, palm-leaf. Size, $8\frac{1}{2} \times 1\frac{1}{2}$ inches. Pages, 46. Lines, 8 on a page. Character, Tamil and Grantha. Condition, much injured. Appearance old.

Complete.

Same work as that described under No. D 951.

(சு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 951-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாம். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது. ஏடுகள் மிகவும் சிதலுற்றுக்கிடக்கின்றன. இது முடிந்த பின்னர் ஆராதநக்ரமம் வடமொழியிலானது ஒன்று உளது.

No. 2271. சிவயோக தீபிகை.
ŚIVAYŌGA DĪPIKAI.

Substance, palm-leaf. Size, 7½ × 2¾ inches. Pages, 106. Lines, 10 on a page. Character, Tamil and Grantha. Condition, injured. Appearance, old.

Complete.

Same work as that described under No. D 1823.

(சு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1823-ஆவது நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூலின் ஐந்து படலங்களும் இருக்கின்றன. பின்னர் இந்நூலின் சம்பந்தமாகவே "ஈஶ ப்ரஜாபியாஸ" என்கிற பெயருடன் இரண்டு படலங்கொண்டதொரு சிறு நூல் 18 பக்கங்களில் உளது. ஏடுகள் மிகவும் சிதலுற்றிருக்கின்றன.

No. 2272. வாலை தீட்சை.
VĀLAI DĪKṢAI.

Pages, 2. Lines, 7 on a page.

Complete.

Begins on Fol. 103-a of the MS. described under No. D. 1490.

Contains the sacred spells and mystic diagram relating to Goddess Vālaidēvi.

Beginning :

அகம்ருத்திர சுரூபம் நித்தியதே, சுகபாபவினை
சுவதி அகம்முத்தியஷ்த மாத்திரெனுருத்திர
சுரூபம்மா சாக்ஷி நீ . . .

* * *

End :

மூலமந்திரம் : ஹ்ரீம் அம்ஸை அய்யுங்கிலியும்
சௌவுந் தூல சூட்சும பிராணுகாரண பரிசோதையா
மீதிஷ்டந்தீ சுவோமி சுவாகா என்று உரு. ௱அ.
யம் ஆம் லம் வம் ஸம் ஷம் தம் அம் ஜும் றீம்
சொர்ணவயிரவாய நம : என்று உரு. || ௱அ. ||

(கு. - பு.)—

இது வாலை தேவியின் மந்திரம் ஆகும். இதில் பீசாக்ஷரம், மூல மந்திரம், பூசைக்குரியதாய் மந்திரங்கள் எழுதிய ஒரு யந்திரம், ஆகிய இவைகளே உள. ஏடுகள் சிதைந்துள. எழுத்துப் பிழையுள.

No. 2273. திருப்புகழ்.

TIRUPPUKAḶ

Pages, 4. Lines, 5 on a page.

Begins on fol. 77-a of the MS. described under No. D 1490, Vol. III

Contains only one stanza.

Same work as that described under No. D 1649.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1649-ஆவது நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இதில் "உ ஊ இ ஈ ஏ ஏ அ ஆ உ வாய சிவாய நமா வென்னும்" என்று தொடங்கும் ஒரே பாடல் மாத்திரம் உளது. ஏடுகள் சிதைந்துள. எழுத்துப் பிழையுளது.

No. 2274. கருநிலைப் போதகம்.

KARUNILAIP PŌDAKAM.

Pages, 7. Lines, 7 on a page.

Begins on fol. 48-a of the MS. described under No. D 314.

Complete.

Same work as that described under No. R. 302 (m) of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. II.

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக்காடலாக்கு 302 (m) நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூலின் பத்துப் பாடல்களுமிருக்கின்றன. ஏடுகள் மிகவும் சிதைந்திருக்கின்றன.

No. 2275. தனிப்பாடல்கள்.

TANIPPĀḌALKAḶ.

Pages, 4. Lines, 8 on a page.

Begins on fol. 29-a of the MS. described under No. D. 314, Vol. I.

Complete.

A collection of stray *Śrī Vaiṣṇava* devotional songs. The particulars of the author are not known.

Beginning :

பொன்னி நதிப்புனலாடப்பெறுவேனாகிற்
பொன்மதிளேழுங்கட ந்துட்புகுவேனாகில்
மன்னுமணிப்பொட்டகஞ்சூழ்ந்திடுவேனாகில்
மரகதப்பொன்மேனியிற்கண்வைப்பேனாகிற்
பண்ணரிய திருமணத்தூணருகேசென்றுன்
பங்கயப்பொற்சேவடியைப்பணிவேனாகில்
இன்னமுமிப்பிறப்படியேன்வேண்டுகின்றேன்
ஈசனேயெழில் அரங்கத்தெம்பிரானே. (க)
வரும் பொருனைத்துறையாடப்பெறுவேனாகில்
வடமூலைக்கருடனடிபணிவேனாகில்
அரும்புமணிக்கோபுரத்துட்புகுவேனாகில்
ஆதிநாதன் சரணந்தொழுவேனாகில்
விரும்புதிருப்புளி நீழல் வலமாய்வந்துன்
மெய்ஞ்ஞானமுத்திரைக்கைக்காண்பேனாகிற்
றரும்புவியிலிப்பிறப்பே வேண்டுகின்றேன்
சடகோபாயதிராசன் தம்பிரானே. (உ)

End :

வெண்பா.

மண்டலத்தில் நானோர் மருத்துவரைப்பின் செல்லேன்
பண்டிதருக்கிச்சை சொல்லிப்பாற்கிலேன்—எண்டிசையும்
வேற்றுமருந்தொன்றறியேன் வேங்கடவா என்பிணிக்கு
மாற்று மருந்துன்றிருநாமம். (உ).

ஒன்பது திருப்பதி விவரம்.

ஸ்ரீவைகுண்டம் குளந்தைக்கள்ளப்பிரான்
வாருணமங்கையில் நம்பிடர் கடிவார்
துய்யபுளினங்குடி காசினி வேந்தர்
திருக்கோளூர் வைத்தமாநிதி பெருங்குளம்
மாயக்கூத்தர் அரவிந்தலோசனர்
துங்கமல மங்கை தேவபிரான் தென்திருப்பேரை,
மகரக்குழைக்காதர் திருநகரி ஆதிநாராயண
சுவாமிநம்மாழ்வார் ஆக (கூ) ஒன்பது திருப்பதி

இது, ஸ்ரீரங்கம் ஆழ்வார் திருநகரி தென்திருப்பேரை என்கின்றவித் திவ்வியதிருப்பதிகளிற் கோயிற்கொண்ட எம்பெருமானுதியரைத் “ திருவடி தொழுது இறைஞ்சப்பெற்றால் இன்னும் இப்பிறவியையே யான்வேண்டு கிறேன் ” என்று ஒருவர் வேண்டும் சிலபாடல்களையும், ஆழ்வார் திருப் பாதங்களே தனக்கு ஆதாரமாகும் என்ற (உ) பாடல்களும் மற்றுஞ்சில திருப்பதிகளை யுணர்த்தும் சிலபாடல்களுமே இருக்கின்றன. ஆசிரியர் இன்னாரென்று தெரியவில்லை. எழுத்துப்பிழையுள்ளது.

No. 2276. அத்திகிரி மாகாத்மியம்.
ATTIGIRI MĀHĀTMIYAM.

Pages, 16. Lines, 5 on a page.

Begins on fol. 112-a of the MS. described under No. D. 841, Vol. II.

Same work as that described under No. D. 1034. Text only.

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1034-ஆவது நம்பரில் வந்துள்ள நூலே யாகும். இப்பிரதியில் மூல மாத்திரம் உளது. அங்கு வியாக்கியானத் துடனிருக்கிறது. ஏடுகள் மிகவும் முறிந்தும் சிதலூற்றும் கிடக்கின்றன.

No. 2277. அந்திமோபாய நிஷ்டை.
ANTIMŌPĀYA NIṢṬAI.

Pages, 53. Lines, 6 on a page.

Begins on fol. 98-a of the MS. described under No. D. 806, Vol. II.

Same work as that described under No. R. 116 (c) of the Triennial Catalogue of Tamil Manuscripts. Vol. II.

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 116 (c) நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாம். இப்பிரதியில் இது கூரத்தாழ்வான் திருப்பேரனாரான "நடு விற்றிருவீதிப்பிள்ளை பட்டர்தம்" நிஷ்டையைக் கூறும் பகுதி வரையில் உளது. ஏடுகள் மிகவும் முறிந்துஞ் சிதலூற்றும் கிடக்கின்றன.

No. 2278. திருக்குறள் பரிமேலழகர் உரையுடன்.
TIRUKKUṞAḶ WITH THE COMMENTARY OF PARIMĒLAḺAKAR.

Substance, palm-leaf. Size, 15 × 1-6/16 inches. Pages, 412. Lines, 8 on a page. Character, Tamil. Condition, *injured.* Appearance, old.

Incomplete.

Same work as that described under No. D. 151.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 151-ஆவது நம்பரில் வந்துள்ளதே யாகும். இப்பிரதியில் ஆதி தொடங்கிப் 'புணர்ச்சி மகிழ்தல்' அதிகாரம் வரையில் உரையுடன் உள்ளது. சில ஏடுகள் முன்பின்னாகக் கோக்கப் பட்டுள்ளன. முதல் ஏடு பாதி முறிந்து கிடக்கிறது. 38 to 52 ஏடுகளில்லை. மற்றைய ஏடுகளும் நுனியில் முறிந்துள.

No. 2279. திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் வசனம்.

TIRUVĀLAVĀYUḌAIYĀR TIRUVIḶAIYĀḌAṞ PURĀṆAM (in) PROSE.

Substance, palm-leaf. Size, 11¾ × 1-6/16 inches. Pages, 726. Lines, 9 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete.

A prose rendering of the work noticed under No. 605 of the Descriptive Catalogue of Tamil MSS. in this Library. The prose style is good. The name of the author is not known.

Beginning :

திருவாலவாயர் தம்பிரானுர் திருவிளையாடற் புராணம்.
கடவுள் வணக்கம் :—

மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்க ளெல்லா . . . வறங்க ளின்ப
நல்குக வுயிர்கட் கெல்லாம் நான்மறைச் சைவ மோங்க
. . . . மெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க. (க)

* * * *

வென்றுளே புலன் களைந்தார் மெய்யுணர் ருள்ளந் தோன்றும்
சென்றுளே யமுத முற்றுத் திருவருள் போற்றி யேற்றுக்
குன்றுளே யிருந்து காட்சிக் கொடுத்தருள் கோலம் போற்றி
மன்றுளே மாறியாடும் மறைச் சிலம்படிகள் போற்றி. (உ)

* * * *

திருவாலவாயர்த் தம்பிரானுர் திருவிளையாடற் புராணத்தின்
வசனம் : கடவுள் வணக்கம் :—

இந்தப் புராணம் வழங்குங் காலத்தில் வேதத்திலுலே செய்யப்பட்ட யாகாதிகள் எல்லாம் வழங்கும். வான் மாரியும்பொழியும். சகலமான பயிர் முதலாகிய வஸ்த்துக்களும் பல்கியிருக்கும். சகல சனத்துக்கும் . . ளைக் கொடுக்கும். நாலு வேதத்திலேயுஞ் சொல்லப்படாநின்ற சைவ சமயம் விளங்கியிருக்கும் . . . . னுடை செங்கோல் நீதியாய் நடக்கும். சந்திர சடாதாரியாய் மதுரையிலே யிருக்கப்பட்ட சொக்கலிங்கத்தி னுடைய திருவிளையாடலை யாராமொருவர் பக்தியுடனே கேட்கப்பட . . . சங்கநிதி பத்மநிதி போல் செல்வமோங்கி நல்ல கீர்த்தியைக் கொடுக்கப்பட்ட குமாரர்களை உண்டா . . . சத்திராதிகளை யெல்லாம் சயம்பண்ணி நல்ல மணத்தைப் பெற்று எந்நாளும் வியாதியில்லாமல் . . ஆயுசு வரைக்கும் சுகத்தையடைந்து மேல் சொக்கலோகம் சேர்ந்து தேவரூபமாய் அவ்விடத்தில் உள்ள போகமெல்லாம் அனுபவித்து மேல் புண்ணிய ரூபமாய சிவனுடைய பாதச்சாயலிலே சேர்ந்து வாழ்வார்கள். * * *
* * * * *

இதுவுமல்லாமல் மேகமாகப்பட்டது சமுத்திரத்தினுடைய சலத்தைப் புசித்து அதனுடைய உவரைப் போக்கித் துல்லியமாக்கி உலகங்கள் எல்லாம் புசிக்கும்படியாய் எப்படிச் செய்கிறதோ ? அப்படியே சொல்லும் பொருளும் தெளிந்து ஆய்ந்த கேள்வியுடைத்தாகிய பெரியோர் என் புன் சொல்லி னுடைய குற்றத்தை நீக்கித் திருவாலவாயானுக்கு இனிதாகச் செய்வார்கள். இந்தச் சொக்கலிங்கத்தினுடைய சரித்திரத்தை வேதங்கூடத் துதித்திளைக் கும். அதை என் சொல்லினாலே அளவிடற்கரிதா[யா]னாலும் சொல்ல வேணுமென்கிற ஆசை என் சொல்வழியிலே நில்லாமல் நடக்கிறது. அவையடக்கம் முற்றும்.

திருநாட்டுச் சிறப்பு.

இப்பால் திருநாட்டுச் சிறப்பு :—நீலகண்டனுயிருக்கப்பட்ட அசுந்தரேசு வரன் பாண்டிய ராசாவாய் உறைவாங்கப்பட்ட வாளினாலே க்ஷத்திரியர்களை யெல்லாம் சயம்பண்ணி வேத வழியினாலே செங்கோல் செலுத்தி இராச்சிய பாரம் பண்ணின பாண்டிய நாட்டினுடைய சிறப்பைச் சொல்லுவோம். மேகங்களானவை தேவதைகளுக்கெல்லாம் நாயகனாகிய சொக்கலிங்கத்தி னுடைய விபூதி சர்வாங்கமும் தரித்த மேனியைப் போலே வெண்மையாய்ப் புறபட்டுச் சமுத்திர சலத்தை [மேய்ந்து] (குடித்து)ப் பார்வதியினுடைய நிறத்தைப்போல் பசுமையுள்ளவையாய்ப் பல்லுயிர்களுக்கும் பசியாற்றுவான் பார்வதி கிருபையுண்டாகிறதுபோலே நீர் சுரந்து எழுந்து வாய்திறந்து இடித் துப் பகலொளி மழுங்கக் கறுத்து வாளைப் போலே மின்னி இந்திர சாபமாகிய வில்லைப் பிடித்து நீர்த்தாரையாகிய அம்பை எய்து கோடையாகிய எதிராளி யின்பேரிலே யுத்தம்பண்ணை வருதல்போல் ஆகாசம் எல்லாம் மொய்த்துக் கொண்டு அகத்திய பருவதத்தின் உச்சியின்பேரிலே * * *
* * * * * *

End :

நிறைந்து நமக்கு ஆநந்தமாயிற்று என்று அருள்சுரந்து அகத்தியரைச் சமீபத்திலே யழைத்துச் சிரசின்மீது கையை வைத்து முதுகு தடவி எம்மை ஒப்பானவனே ! உன்னுடைய பெண்சாதியானவள் மகா பதிவிரதை. பார் வதியை யொப்பானவள். ஆதிலினாலே உன்னை யொத்தவர் இந்த உலகத் திலே யார் ? நிறைந்த தவம் புரிந்தவனும் தவத்திலே உறுதி பெற்றவனும் நீயே அல்லவா ? உனக்கு அரிதான வரம் நாம் கொடுக்கவேண்டுவது ஒன்றுமில்லை யென்று சொல்லிக் கருணை செய்து மகாலிங்கத்திலே சென்று இருந்தார். தனக்கரிதாகிய வரம் நல்கும் சிவலிங்கமொன்று தன் பெயரினாலே ஸ்தாபிதம் பண்ணினார். வசிஷ்டர் முதலான இருஷி களும் தங்கள் பெயராலே இலிங்கங்கள் பிரதிட்டை செய்தார்கள் ! அந்த லிங்கங்களுக்கும் அருச்சனை செய்து தோத்திரம்பண்ணி அஷ்டமூர்த்தியாய் எழுந்தருளியிருக்கிற சொக்கலிங்கத்தைத் திரிகாலமும் வந்து தரிசனம் செய்துகொண்டு இன்பமான மனத்தராகித்தே [னுகளை] (னை)ச் சுற்றின வண்டுபோல் அந்த மகாஸ்த்தலத்தில் வசிஷ்டர் முதலான இருஷிகள் தபசுகளைச் செய்து கொண்டிருந்தார்கள். திருச்சிற்றம்பலம்.

அருச்சனைப் படலம் முடிந்தது.

குரோதிஸு ஐப்பசிமீ ௰௨ பொழிச்சலூர் முத்தையா எழுதின அறுபத்து நாலு திருவிளையாடல் எழுதி நிறைவேறியது.

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 605-ஆம் நம்பரில் வந்துள்ள நூலுக்கு உரை நடையில் அமைந்த தொன்றாகும். இப்பிரதியில் முற்றும் உள்ளது. வசன நடையும் சிறப்பாகவுளது. அங்கங்கே பிழைகளிருக்கின்றன. ஏடுகள் மிகவும் சிதலுற்றும் முறிந்தும் கிடக்கின்றன. இதை இயற்றியவர் இன்னாரென்று தெரியவில்லை.

No. 2280. திருச்சிற்றம்பலக்கோவையார் உரையுடன்.

TIRUCCIṞṞAMBALAKKŌVAIYĀR WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 15 × 1-2/8 inches. Pages, 444. Lines, 9 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Incomplete. Contains 1 to 361 stanzas only. Wants beginning and end .

Same work as that described under No. D. 1169.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1169 - ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் ஆதி தொடங்கி முந்நூற்றறுபத்தோராவது (361) பாடல் வரையில் உள்ளது. ஏடுகள் மிகவும் சிதலுற்றிருக்கின்றன.

No. 2281. தனிப்பாடல்கள்.

TANIPPĀḌALKAḶ.

Pages, 3. Lines, 4 on a page.

Begins on fol. 29-a of the MS. described under No. D. 260, Vol. I.

Contains 6 stanzas only.

A collection of stray stanzas.

Similar to the work described under No. D. 356.

Beginning :

கோசிகர் பிருகு வதிஷ்டர் வான்மீகி
குறு முனி வியாசர் பராசர்
காசிபர் முதலாய்ச்சரகு நீர்வாய்வு
கந்த மூலாதிகள் பொசித்துந்
தேசுள மடவார் போகம் விட்டகலார்
சின்ன லோகமுஞ் சிதையார்
மாசறு நெய்பால் அருந்திடு மனர் கோ
மங்கையர் மாலொழிப் பவரோ. (௧)

ஒருகோட்டுக் கலேமுனியு மொளி திகழும் புலியாடை யுடுத்த கோவும்
மருமலரிற் றிசைமுகனும் வானவர்க்கு மிறையவனு மயிடன் தானுங்
கரியநிறத் திருமாலும் வாலியும் பராசருமே காமனம்பால்
பெருமை யிழந்தன ரென்றுற் சிறுமனிதர்க்கெப்படியோ பேசுங்காலே (உ)

End :

சித்திரமும் கைப்பழக்கஞ் செந்தமிழு நாப்பழக்கம்
மற்ற தெல்லாங் கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நண்புந் தயவுங்
குடையும் பிறவிக் குணம். (ரு)

ஆடை சுற்றி யழகாய்த் திரியினும்
வாடை யேறி வளர்மனே புக்கினும்
ஓடை யேந்தி யுழந்து திரியினும்
பாடை யேறினு மேடதுகை விடேல். (சு)

(கு. - பு.)—

இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 356 ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ள நூலைப் போன்றதாய்ச் சில உலக நீதி விஷயமான ஆறு பாடல்களைக் கொண்டுள்ளது. எழுத்துப் பிழையுடன் உளது.

No. 2282. அனுஷ்டான விதி.
ANUṢṬĀNA VIDHI.

Pages, 17. Lines, 5 on a page.

Begins on fol. 51-a of the MS. described under No. D. 1827 of the Descriptive Catalogue of Tamil MSS. Vol. IV.

Complete.

Similar to the work described under No. D. 1339.

Beginning :

கணபதயே நம: என்று குட்டிக்க. குரவே நம: என்று கைகூப்பி மூலத்தினுல் நிரீக்ஷணம். இருதயத்தினுல் பிரோக்ஷணம். அஸ்திரத்தினுல் தாடனம். கவசத்தினுல் . . . . அஸ்த்திரத்தினுல் தாளத்ரயம். அஸ்திரத்தினுல் திக்பந்தனம். கவசத்தினுல் அவகுண்டனம். மூலத்தினுல் தேனு முத்திரை. மகா முத்திரை கொடுக்கிறது. இது சல சுத்தி: அஸ்த்திரத்தினுல் சிரசில் பிரோக்ஷணத்ரயம். அஸ்திரம் தர்ப்பணத்ரயம். அஸ்திரசத்தசபம். அஸ்திரம் ஒரு தர்ப்பணம் ஆசமனம்: ஆத்துமதத்வாயநம: வித்தியாதத்வாயநம: சிவதத்வாயநம: என்று ஆசமனஞ்செய்து கீழ்மேல் உதடுகளை அஸ்திரத்தினுல் துடைத்து இருதயத்தால் தொடுமிடம் பனிரண்டும் தொட்டு கரந்நியாஸம் அங்கந்நியாஸம் செய்கிற வயணம்: வலது கையாலே இடது கை மேலே மூன்று தரம் * * * * * இரண்டு தரமும் அஸ்திரத்தினுல் துடைத்து இடது கையாலே வலதுகை மேலுங் கீழும் ஒருதரம அஸ்திரத்தால் துடைத்து இரண்டு கையுங் கூட்டி உள்ளங்கையிறையில்
* * * * * *

End :

நியாஸம் செய்து மூலத்தால் (ாஉஅ) உரு செய்து இல்லாவிட்டால் குரு சொற்படி செய்து பின்பு நியாஸம்பண்ணி யெழுந்திருந்து பிரதக்ஷிணம் செய்து சூரிய ஸ்தோத்ரம் செய்யும்படி :—

ஆதியே யுனைத் தொழுவேன்
ஆதிமூலமே யுனைத் தொழுவேன்
சோதியே யுனைத் தொழுவேன்
சூரியா வுனைத் தொழுவேன்
ஒத்தைத் தேரேறி யுலகமெல்லாம்
வலம் . . ருவருவிர சித்தத்தே நிற்கும்

சிவ சூரியாயநம: என்று மூன்று பிரதக்ஷிணம் செய்து நமஸ்காரஞ் செய்து ஆசமனஞ் செய்து செபம் செய்தவிடத்திலே அஸ்திரத்தினாலே ப்ரோக்ஷித்து இருதயத்தால் மாரில் அடக்கிக்கொள்ளவும்.

(கு. - பு.)—

இச்சிறு நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1339-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ள நூலே போன்று சூரியனை வழிபடுதற்குரிய பூசையை யநுஷ்டிக்கும் முறையை விளக்குகின்றது. இது மிகவும் எழுத்துப் பிழையுடன் உளது. ஏடுகள் மிகவும் சிதலுற்றிருக்கின்றன. இதற்குப் பின்னர் சோதிட விஷயமாய்த் தக்தயோகம், சித்தயோகம், மரணயோகம், அமிருதயோகம் ஆகிய இவைகளை விளக்கியுணர்த்துஞ் செய்யுட்கள் (அ) எட்டு. (21 to 28) என்ற எண்களிட்டிருக்கின்றன. ஆகவே இச்செய்யுட்கள் ஒரு பெரு நூலின் ஒரு பகுதியெனக் காணக்கிடக்கின்றன.

No. 2283. நீதி வெண்பா உரையுடன்.
NĪTIVEṆPĀ WITH COMMENTARY.

Pages, 33. Lines, 6 on a page.

Begins on fol. 1-a of the MS. described under No. D. 17, Vol. I.

Contains 54 stanzas only.

Same work as that described under No. D. 185.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 185-வது நம்பர் பிரதியிலே வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் (ருச) ஐம்பத்து நான்கு செய்யுட்களே உரையுடன் உள. ஏடுகள் ஒரு சிறிது முறிந்திருக்கின்றன. எழுத்துப் பிழைகளிருக்கின்றன.

No. 2284. ஐந்தாம் அரிச்சுவடி.
AINDĀM ARICCUVAḌI.

Substance, palm-leaf. Size, 17¼ × 1 inches. Pages, 250. Lines, 5 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

A kind of "Fifth Reader" for the beginners of Tamil study. Perhaps the author of this book has himself written the "four" readers previous to this. This shows how the problem of providing "Readers" for youngsters engaged the attention of the old type of Pandits, who themselves learned Tamil in the traditional method.

Beginning :

ஐந்தாம் அரிச்சுவடி :—

முதலாவது . . . . . மொழிப் படலம் . . . பெயர்கள், வினைகள், ஒத்தவசனங்கள், வாக்கியங்கள், நயங்கள், குழூகங்களும்:, முதலாவது பெயர்ப் பரிச்சேதம். கூட்டுப்பாடம். நாலசை ஒரு மொழிப் பெயர்கள் :—

அ - கிர்த் - தி - யம், அக் - கி - யா - னம், அக் - கி - ர - மம்
அக் - கி - ர - மி, அக் - கு - ரோ - ணி, அங் - கா - ர - கன்
அ - சங் - கி - யம், அ - சத் - தி - யம், அ - ச - ரீ - ரி,
அ - சாத் - தி - யம், அ - சாத் - தி - யன், அ - சே - த - னன்
அ - சே - த - னன், அ - டங் - கா - மை, அ - டு - க் - க - ளை.
அ - டை - மா - னம், அ - டை - யா - ளம், அட் - ட - வ - ணை,
அ - தி - கா - ரம், அ - தி - ச - யம், அ - தி - சா - ரம்,
அத் - து - வா - னம், அ - நித் - தி - யம், அ - நி - யா - யம்
அந் - த - கா - ரம், ...
அ - ப - ரஞ் - சி, அ - பத் - தி - யம், அ - ப- ரா - தம்,
அ - பாக் - கி - யம், அ - பாத் - தி - ரம், அ - பி மா - னம்
அ - பி - ஷே - கம், அப் - பி - யா - சம், ...

End :

நித்தியமா சூதைக் கற்றுக்கொள்ளுவார்
சத்தியமாய் வேதைப் பெற்றுக்கொள்ளுவார்.
மிஞ்சியே விரகத்தில் விழுந்திடுவார்
அஞ்சியே நரகத்தில் அழுந்திடுவார்.
வஞ்சத்தை நம்பிக் கற்றிடுவார்கள்
நெஞ்சத்தில் வெம்பி அற்றிடுவார்கள்.
பூதத்தை விடுத்தான் மந்திரவாதி
காதத்தில் தடுத்தான் தந்திரவாதி.

* * * *

ஆபத்தால் வீணில் தலையிட்டுக் கொள்ளாதே
கோபத்தால் தூணில் தலைமுட்டிக் கொள்ளாதே.
கல்லாரைப் புகழ்ந்து அடுக்கப் போகாது.
வல்லாரை இகழ்ந்து விடுக்கப் போகாது || ௩௰ ||
உள்ளத்திலே யிட்டுண்கிறவன் கொடையன்
கள்ளத்திலே கட்டுண்கிறவன் மடையன். || ௩௧ ||

மிகுந்தகல்வி கற்றுக் கொள்ளுவான்
தகுந்த செல்வம் பெற்றுக்கொள்ளுவான். || ௩௨ ||
உங்கள் உத்தநம்பி பேச்சு
எங்கும் மெத்தவும் நம்பலாச்சு.

ஆறுவது பன்மு காண்டம் முற்றும்.
இனி வருவது ஏழாவது சேர்ப்பு காண்டம்.

(கு. - பு.)—

இந்நூல் ஆரம்பக் கல்விக்கு இன்றியமையாது வேண்டியதாய்ப் பாலர்களுக்குரிய 'அரிச்சுவடி' என்கிற நூலாகும். இது ஐந்தாவது என்று குறியுடன் காணப்படுகின்றதாதலின் இதற்கு முன்னுக (1—4) அரிச்சுவடிகள் இந்நூலாசிரியர் தம்மாலேயே தொகுத்து வைத்திருக்கப் பெற்றிருக்க வேண்டுமென்று உணரக் கிடக்கிறது. இதில் பெயர், வினை, ஒத்தவசனம், வாக்கியம், நயம், குழகம் என்ற பெரும்பாகுபாடுகளுடன் பலவகைச் சொற்களும் தொகுக்கப் பெற்றிருக்கின்றன. இது, பண்டைய காலத்துப் புலவர்கள் ஆசிரியர்கள் எல்லாரும் பாலர்களுக்கு ஆரம்பக் கல்வியிலேயே வெகு விமர்சையாகவும் ஊக்கமூட்டத்தக்கதாயும் கல்வி புகட்டிவந்தார்கள் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாயிருக்கும். எழுத்துப் பிழையுடன் உளது. வைணவரில் ஒருவர் இதனைத் தொகுத்திருப்பாரென்று ஊகித்தற்கிடனுண்டு. சிதைந்துளது.

No. 2285. சரனூல் உரையுடன்.
SARANŪL WITH COMMENTARY.

Substance, plam-leaf. Size, 11¼ × 1-2/8 inches. Pages, 99. Lines, 5 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Same work as that described under No. 512 of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. IV.

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 512-வது நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாம். இப்பிரதியில் முற்றும் உரையுடனிருக்கிறது. எழுத்துக்கள் தெளிவாக வெழுதப்பட்டிருக்கின்றன. முதலில் சில ஏடுகள் மிக முறிந்துள. மிகுதியான ஏடுகள் ஒரு சிறிது சிதலுற்றுள. எழுத்துப் பிழையுடன் காணப்படுகிறது. பத்தாவது ஏடு இல்லை.

No. 2286. சூடாமணி நிகண்டு.
CŪḌĀMAṆI NIKHAṆṬU.

Substance, plam-leaf. Size, 12 3/16 × 1 inches. Pages, 188. Lines, 6 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

Same work as that described under No. 13 of the Descriptive Catalogue of Tamil Manuscripts, Vol.I.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 13-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாம். இப்பிரதியில் ஆதி தொடங்கி 8-ம் தொகுதியாகிய பண்பு பற்றிய பெயர்த் தொகுதியில் பன்னிரண்டாஞ் சூத்திரத்தின் தொடக்கம் வரையிலும் மூல மாத்திரமிருக்கிறது. ஏடுகள் ஒரு சிறிது சிதலுற்றிருக்கின்றன.

No. 2287. பட்டினத்துப்பிள்ளையார் பாடற்றிரட்டு.

PAṬṬINATTUPPIḶḶAIYĀR PĀḌAṚṚIRAṬṬU.

Substance, plam-leaf. Size, 8-6/16 × 1 inches. Pages, 64. Lines, 5 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

Same work as that described under No. 1859.

(கு. - பு.)—

டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1859-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும்; இப்பிரதியில் நூற்றுப் பதினைந்து (115) பாடல்கள் மாத்திரம் தொகுக்கப்பெற்றுள்ளன. அச்சுப் பிரதியிற்கண்ட முறைபோலில்லாமலிருக்கின்றன. சில பாடல்களில் அங்கங்கே பாட பேதங்கள் காணப்படுகின்றன. அச்சுப் பிரதியில் இல்லாத இரண்டொரு பாடல்கள் இதிலிருக்கின்றன. ஏடுகள் ஒரு சிறிது சிதைந்துள. எழுத்துப் பிழை உள இது, "பட்டினத்துப்பிள்ளையார் ஞானக் கலித்துறை" என்ற தலைக் குறியுடன் காணப்படுகிறது.

No. 2289. உதயண குமார காவியம்.

UDAYAṆA KUMĀRA KĀVIYAM.

Substance, palm-leaf. Size, 17¼ × 1-2/8 inches. Pages, 96. Lines, 5 on a page. Character, Tamil. Condition, good. Appearance,

Complete.

Same work as that described under No. D. 98.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 98-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது. இறுதியில் இந்நூலின் சிறு பிரிவுகளாகிய ஒவ்வொரு காண்டங்களுக்கும் உள்ள மொத்த செய்யுட்களுடைய எண்களை யுணர்த்தும் இரண்டு பாடல்கள் எழுதப் பெற்றிருக்கின்றன.

No. 2289. குருபரம்பராப்ரபாவம் ஆருயிரப்படி.
GURUPARAMPARĀPRABHĀVAM ĀṚĀYIRAPPAḌI.

Substance, palm-leaf. Size, 17 × 1¼ inches. Pages 488. Lines, 6 on a page. Character, Tamil and Grantha. Condition, injured. Appearance, old.

Incomplete.

Same work as that described under No. 45-a of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. I.

Colophon :

[illegible] |
[illegible] ||

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 45-A-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இளையாழ்வார் (இராமாநுசர்) திருநாடேற வெழுந்தருளும் கட்டம் வரைக்கும் உள்ளது. எடுகள் மிகவும் சிதலுற்றுக்கிடக்கின்றன. மேற்காட்டிய ஸ்லோகம் இந்நூலாசிரியரின் தனியனாம். இத் தனியன் அச்சிட்டப் புத்தகங்களில் காணப் பெறவில்லை.

No. 2290. உள்ள முடையான்.
ULLAMUDAIYĀN.

Substance, palm-leaf. Size, 16 × 1¼ inches. Pages, 28. Lines, 8 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Incomplete.

Same work as that described under No.D. 1992. of the Descriptive Catalogue of Tamil Manuscripts, Vol. V.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1992-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் மாதுருபாவம் முதற்கொண்டு உரோகபாவம் வரையிலும் உள்ளது. முடிந்த பின்னர், "பாபக்கிரங்கள் அறியவும்" என்றதான தலைப்பெயருடன் ஆறு எடுகளில் சில சோதிட விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. எடுகள் மிகவும் சிதலுற்று முறிந்து கிடக்கின்றன.

No. 2291. [illegible]
SĀRASAṄGRAHAGĀDHĀVYĀKHYĀNAM.

Substance, palm-leaf. Size 17·10/16 × 1¼ inches. Pages, 7. Lines, 7. on a page. Character. Tamil and Grantha. Condition, much injured. Appearance, old.

Begins on fol. 1. The other works herein are Virōdhaparihāragādhāvyākhyānam 4-b. Munivāhanabhōgagādhāvyākhyānam 16 (*b*).

Complete.

A commentary, in the *Maṇipravāḷa* style, on *Sārasaṅgraha*, one of the 32 *Rahasyas* of Śrī Nigamānta Mahādēśika, the well known *Visiṣṭādvaitin* leader, and the verses found in it.

By "*Ś*rīmad Rāghavāryar."

Beginning :

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ |
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ||
அநாதிவ்யவஹாரஸித்த கவிதாம்ருதவர்ஷிண: . . .
. . . . ப்ரபந்தஸாரஸம் ரக்ஷித்ரு தஸம்ப்ரதாய ப்ரதிஷ்டா ||
. . . . இந்த ஸ்லோகங்களை இங்கே யநுஸந்திப்பது.

ஸ்ரீவேதாந்தாசார்யர் ஸாரஸங்க்ரஹமென்கிற ரஹஸ்யத்தைச் செய்தருளக் கடவராய் "அஸ்மத்தேஶிக பரமகுரு யதிவர ப்ரமுகாந் ஸர்வதந்த்ரஸாரம் | வந்தே ஶ்ரீநாதமுநி ஶ்ரீமதாரா ஸாரதீர்ம் ஸ்ரீதேவம்" || என்கிற ஸ்லோகத்தாலே ஸ்வாசார்யாதி ஸர்வாசார்யர்களை ப்ரணிதமாயிருக்கிற அந்த ஆசார்ய ஸந்ததி ஸஜநத்தைச் செய்தருளி "ஸ்ருதஸமா வேதாந்த கடமாவ விஷ்ணுபக்தி ஸத்யநாது | ஸ்தோத்ரம் ப்ரபந்த . . . . . கவி ஸிந்து ப்ரதிவாதிநாமவிஸஜாதி" || என்கிற ஸ்லோகத்தாலே பூதத்தார் முதலாகத் திருபாணாழ்வார் பர்யந்தமாக ப்ரதிகரான ஆழ்வார்களையும் அநந்தஸாதுநாயக அவிஸ்ஸ . . . . ரான யோகவி பூங்கோதை யதிராஜரையுங் குறித்துப் ஸஜநத்தைச் செய்தருளி. "யதீஶ்வர ஸ்ரீ ரமாபுரீ: வேதவ்யாஸாதிஜா: | க்ரியாத் தேவிய ப்ரஸாதம் ஸமஸ்தம் நமோ மக:" ||

* * * * * * *

ஜ்ஞாநஸங்கோசமும் தீர்ந்து அஶரீரியாக ஜ்ஞாநஸங்கோசமில்லாத அயர்வறுமமர்களுடைய ஆநந்த ஸாகரத்திலே யழுந்துகை ஆத்மாவுக்கு ஸ்வத: ப்ராப்தமென்னு மளவான ப்ரபந்தத்தாலே ஜ்ஞாநாதி ஸங்கோசத்தைப் பண்ணி இனிமேலொரு பாட்டாலே ஸம்ஸார ஸாதமாயிருக்கிற அம்ஶபூதங்க ஸூக்ஷ்மமான ஶுத்தாக்ஷார ஸம்பந்தம் பண்ணுகிற ப்ரகாரத்தை ஸங்க்ரஹேண அருளிச் செய்கிறார்.

நின்னருளாங்கதியன்றி மற்றென்றில்லேன்
நெடுங்காலம் பிழை செய்த நிலைகழிந்தேன்
உன்னருளுக்கினி தான நிலையுகந்தேன்
உன்சரணே சரணென்னுந்துணிவுபூண்டேன்

மன்னிருளாய் நின்றநிலை யெமக்குத்தீர்த்து
வானவர்தம் வாழ்க்கைதர வரித்தேனுன்னை
இன்னருளா லினியெமக்கோர் பரமேற்றும
லென்றிருமாலடைக்கலங் கொளென்னை நீயே.

என் திருமால் என்னுடைய திருமாலே: எனக்கு ஸ்வாமியாய் ஸ்ரீ விஷயத்தில் வ்யாமோஹமுடையவனே ! நின் அருளாங்கதியன்றி மற்றொன்றில்லேன் உன்னுடைய க்ருபையாகவாகா நிற்கிற கதியன்றிக்கே வேறு ஒரு கதியில்லாதவன். அருள்-க்ருபை-கதி-மதிஃ ஜ . . மதிஶப்³த³ஃ காரணவாசகஃ உபாயவாசீ | இங்கு நான் என்று ஒரு பதமத்யாஹார்யம் | இந்த அத்யாஹ்ருதபதத்துக்குக் கழிந்தேன், உகந்தேன், பூண்டேன், வரித்தேன், என்கிற க்ரியா பதங்களோடு அந்வயம். "ரக்ஷகஸ்த்வம் ஸ்வயமேவாஸ்மாகம்," "நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளுங்கொண்டு," "நின்னருளே பொருந்தினேன்," "த்வமேவ ஶோகஸாக்ஷாத்," "த்வமேவ உபாயபூதோ மே," இத்யாதிகள் படியே த்வதீய க்ருபாதிரிக்த உபாயாந்தர ஶூன்யனான அடியேன் என்றபடி. நெடுங்காலம் பிழைசெய்த நிலை கழிந்தேன்-நெடுங்காலம் ஸம்ஸாரமும். அநாதியாக என்றபடி. பிழைசெய்த-அபராதத்தைப் பண்ணாநிற்கிற, பிழை-தப்பு-அபராத மென்றபடி. செய்கை-பண்ணுகை. நிலை-ஸ்வபாவம். நிலையில் நின்றும் கழிந்தேன்-நிவ்ருத்தனானேன். "அபராதஸஹஸ்ர பாஜநம்," என்கிறபடியே

* * * * * * *

என்னை அநந்யரக்ஷ்யனான என்னை. அடைக்கலம் கொள்ளு-ரக்ஷ்யவஸ்துவாக ஸ்வீகரி. ஸர்வகாரணிகனான நீயே ஸ்வகீய ப்ராப்ய ப்ராபக ஸம்பந்தமான விஶேஷங்களாலே ப்ரேரிதனாய்க் கொண்டு என் ரக்ஷணபரத்தை அஸஹ்யனான என்றலையிலே சுமத்தாதே ஏறிட்டுக்கொள்ளு என்றபடி. 'நின் அருளாம் கதி,' என்கிற ப்ரதமபாதத்தாலே காருண்ய ப்ராதிகூல்ய வர்ஜநரூப ப்ரமாணாநுஷ்டான ப்ரகாரத்தையும், த்விதீயபாதத்தாலே ஆநுகூல்ய ஸங்கல்ப மஹாவிஶ்வாஸ ரூபாங்கானுஷ்டான ப்ரகாரத்தையும், த்ருதீய பாதத்தாலே ஶரண்ய வரண ரூபாங்கானுஷ்டான ப்ரகாரத்தையும், சதுர்த்த பாதத்தாலே ஸாங்கப்ரபத்தி ஸ்வரூபமான ஆத்மநிக்ஷேப ரூபத்தையும் ஸம்க்ரஹேண காட்டியருளினார் என்றதாயிற்று.

அத்யந்த கிஞ்சநோஹம் உபாயாந்தர ஶூந்ய வ்ருத்தோபாய த்வத்வைகாஶ்ரயீஸ்யாம் த்வச்சரணாகத்ய ஸ்வஸ்யாதிம: ௯०

த்வம் ஸந்தேஶோபாயிகா ஸ்யா ஸ்வயிநிஜஸௌராஷ்ட்ர வஹ்நிக்ருவித்தா
த்ர யஸ்ய ஸந்த்யாஸாம: ஸகாமதயதா ஸதா நவ்யயஸ்த்த
தத்வம்" || என்கிற ந்யாஸவிம்ஶதி ஶ்லோகத்தை இங்கே யநுஸந்திப்பது.

இதி ஸாரஸங்க்ரஹ ஶாஸ்த்ரவிவ்ருதி: ஸம்பூர்ணா |
ஹரி: ஓம் | ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ காந்த தேஶிக ஸ்வாமிஶிஷ்யாய நம: ||
ரஹஸ்ய ஸங்க்ரஹஸ்ரீமத் ராகவாசார்ய கவேரியம் |
க்ருதிஸ்தேஶாஸ்த்ரே ச ஸ்ரீமத் ராகவாசார்ய ஸம்மதா ||

(கு. - பு.)—

இந்நூல் ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன் இயற்றிய முப்பத்திரண்டு ரஹஸ்யங்களுக்குள் "ஸாரஸங்க்ரஹம்" என்கிற ரஹஸ்ய க்ரந்தத்தின் உள்ளுறைப் பொருளைக் குறிப்பாக வெடுத்துணர்த்தி ஷி ரஹஸ்யத்தின் கடையகத்துள்ள "நின்னருளாங் கதியன்றி மற்றொன்றில்லேன்." என்ற தமிழ்ப் பாடலுக்கு ஒரு விரிவுரையாய் மணிப்ரவாளம் என்ற நடையில் அமைந்ததொரு நூலாகும்; இப்பிரதியில் இது முற்றுமுள்ளது. இந்நூலாசிரியர் "ஸ்ரீமத் ராகவார்யர்" என்று கடையிற்காணும் வடமொழி ஶ்லோகத்தால் தெரிகின்றது. ஏடுகள் மிகவும் சிதலுண்டு நுனியில் முறிந்து கிடக்கின்றன. எழுத்துப் பிழை மிகுந்துள்ளது. இந்நூல் இப்பிரதியில் 34-ஆவது ஏட்டிலிருந்து தொடங்கியுளது. இங்கு அதையே முதலேடாகக்கொண்டு வருணிக்கப்பட்டுள்ளது.

No. 2292. விரோதபரிஹாரகாதாவ்யாக்யாநம்.
VIRŌDHAPARIHĀRAGĀTHĀVYĀKHYĀNAM.

Pages, 20. Lines, 7 on a page.

Begins on fol. 4 (*b*) of the MS. described under No. D. 2291.

A commentary, in the *Maṇipravāḻa* style, on the *Virādhaparihōra*, one of the 32 *Rahaṣyas* of Śrī Nigamānta Mahādēśika, and on the verses found in it. Perhaps by the author of the work noticed next above.

Beginning :

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ |
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நித்தாம் ஸதா ஹ்ருதி ||

ஸ்ரீமந்நிகமாந்த தேஶிகர் விரோத பரிஹார மென்கிற ரஹஸ்யத்தைச் செய்தருளக்கோலி "ஸ்ரீமாந் நாராயணஸ்ஸர்வ ஶரண்யஸ்ஸர்வதேஹிநாம் | ஸ்வயாந்ருஜவதேவ்யாஶ்ச விரோதி விநிவாரக:" || என்கிற ஶ்லோகத்தாலே ஸர்வஸ்வாமியாய் ஸர்வஶரண்யனான ஸ்ரீமந்நா

நாராயணன் 'ஸுவர்ணாக்ஷி ப்ராஜ்ஞி ஸமோஷயி விதிவாரகோஹம் யாக' என்கிற ப்ரார்த்தநா பூர்வகமாக வக்ஷ்யமாணார்த்தஸம் க்ஷேப கதநபூர்வ வஸ்துநிர்த்தேசாத்மக மங்களத்தைச் செய் தருளி "உதிதம் பவத: பாயாதௌஷதிப்ராஸதீப: | ஔஷதம் பேதகா பேஷஜ்யம் பேதநாகம்யம் பாயிநாஃ" || என்கிற ஸ்லோகத்தாலே மோக்ஷப்ரதாதாக்களான ஆசார்யர்களுக்கு பகவத்ஸாம்ய மாயும், ஸம்ஸார நிவ்ருத்திக்கு பேஷஜமாயும், ஔஷதிப்ரஸாதத் திலே ஸந்நிதிபண்ணி நின்றிருக்கிற ஸ்ரீமந்நாராயண ப்ரஸாத விரைந்து உங்களை ரக்ஷிக்கக் கடவது என்று ஸுபிசாலாசார்யதர்சநம ஆத்தையும் மங்களபூர்வகமாகச் செய்தருளி இனிமேலொரு பாட்டாலே * * * *

End :

அலர்ந்தவம் புயத்திருந்த தேனருந்தி யின்னகை
லல்குலாரசைந் தடைந்த நடைகொளாததன மெறு
நலந்த விர்ந்ததால தென்கொறுவின் வீறிழந்ததா
றுவணங்கு நாதர்தந்த நாவின் வீறிழந்த தென்
சலந்த விர்ந்து வாது செய்து சாடிமூண்டமிண்டரை
சருவிலா ரெனக் கனைத்துரைத்த வேதிராசர் தம்
வலந்தருங்கை நாயனுர்வளைக் கிசைந்த கீர்த்தியால்
வாரிவால தாகுமென்று மாசில்வாழி வாழியே.

நாவின் வீ[றெழு]றிழந்ததால் ஐகஸ்ஸர்வஸ்வமென்பதுவாத்த:| அலர்ந்த விகஸியா நிற்கிற, அம்புயத்திருக்கிற — அம்புஜத்திலே இரா நிற்கிற, தேன் — தேனைப்போலே அருந்தி அருமையாயிருக் கிற - தித்திப்பையுடைத்தாயிருக்கிற, இன் - போக்யமாயிருக்கிற, "யாவஜ்ஜீவமதிவேகிநாம்" என்கிறபடியே, விவேகிகளுக்கு ஸதிஸக்ஷமாயிருக்கிற, மாயாவிவர்த்தமானி தேனைப்போலே ஸதி ஸோம்யமாயிருக்கிற என்கிறபடி, அகல் அல்குலார். விஷஸ்ரமிதம் பவமாவிகளான ஸ்த்ரீக்களாலே * * * *

* * * * * *

வாழி வாழியே - மிகவும் வாழக்கடவர். பாவகஸம்மென்கிற ரஹஸ்யத்திலே "ஸர்வாஸ்ரதபதச்ச வபமஸாஃ" என்கிற ஸதஷ்ப ப்பினாலே தேவநாயகனைக் குறித்து, ப்ரார்த்தநாபூர்வ மங்களஞ் செய்தருளி அநந்தரம் "எண்டளவம்புயத்துள்" என்கிற பாட் டாலே திருவாழி யாழ்வானை யநுஸந்தித்து உபக்ரமமான ப்ரப ந்தத்தைத் தலைக்கட்டி அநந்தரம், "திகிரி மழுவுயர்க்குந்தம்" என்கிற பாட்டாலே ஸ்ரீபஞ்சாயுதாழ்வானுடைய வைபவ ஸஹஸ்ரங்களைக் கொண்டாடினப்போலே இந்த ரஹஸ்யத்திலும் "உதிதம் பவத

பாயாத்விஷயாதீர ஸ்தீபக: | ஔஷயம் வேதஸாரவேஸ்வம்" என்கிற ஸ்லோகத்தின்படியும் ஔஷயாதீரநாயனைக் குறித்து மங்களம் செய்தருளி ஸ்லோகம் "பலுமறைகளெல்லாம்" என்கிற பாட்டாலே திருவாழி யாழ்வானை யனுஸந்தித்து உபகாரமான விரோதி பரிஹாரமென்கிற ரஹஸ்யத்தை முடித்து ஸ்லோகம் "அலர்ந்தவம் புயத்திருந்த" என்கிற பாட்டாலே திருவாழியாழ்வானை "வாழி வாழியே" என்று கொண்டாடுகிறாரென்று பாவ தாத்பர்யம். இப்படி பாவக நிரவதிக பக்திபூர்வகமாக ஸேவாஸம் செய்த சுதர்சன ஸம்ரக்ஷணம் பண்ணுகிற ஹேதிராஜரான திருவாழி யாழ்வான் மிகவும் வாழக்கடவரென்று அருளிச்செய்து, ஸ்லோகம், விடை - விருஷபங்களை, உடன் - கூட, ஏழ் - ஏழாயிருக்கிற, அன்று - அந்தக்காலத்திலே, அடர்த்தவன் - ஸம்ஹரித்தவன், நீளாவிவாஹ காலத்திலே ஏழு விருஷபங்களையும் கூட ஸம்ஹரித்தவனான ஸ்ரீ கிருஷ்ணனுடைய என்றபடி, மெய் அருள்பெற்ற - மெய்யாயிருக்கிற கிருபையைப் பெறு கிற, ஸர்வேச்வரா விஷய பக்தராயிருக்கிற என்றபடி, நல்லார் - நன்மையாலே ஸுதீயராயிருக்கிற ஆசார்யர்கள், ஆசார்யர்களுக்கு நன்மையாவது - ஸ்வயம் ஆசிரமவர்த்தி ப்ரஹ்மஜ்ஞானாதிகளும், ஸர்வசித்தாந்த ஞானத்தை ஸமஸ்தமுமாம், அடைய - ஸாங்கோபாங்க, அறிந்து, உரைக்க - சொல்ல, ஸுத்ரார்த்தவிஷயத்திலே ப்ரச்னங்களான ஸம்சயங்களையும் தத்த்வங்கள் பரிஹாரங்களையும் ஸாங்கோபாங்க ஸ்வாரஸ்யேன ஸ்வதர்மத்தாலே அறிந்து, ஸஜ்ஜன ப்ரயோஜன ஸூக்தி ஸமூஹங்களோடேகூட ஸஹ ப்ரயோஜனமான பக்திபூர்வகமாக "ஞானயா நிவ்ருத்யோஷாவ தேசு" என்கிறபடியே பாவஸ்த்வேயாலே உபதேசிக்க வென்ற படி, அடியோமும் - தாஸரான நாமும், "மிக்ஷ்யேஷ்டோ ஸாயிஸ்ம ப்ரவந்தம்" என்கிறபடியே ஸத்யஜ்ஞராய் மிக்ஷ்ய பக்தராய் ப்ரபந்நரான நாமும் என்றபடி, அறிந்தனமே - அறிந்தோமே, பாபக்ஷப்ரதி க்ஷேப பக்திக ஸேவாஸக ப்ரபந்த நிர்ணயம் பண்ணும்படி ஸுத்ரார்த்த விஷயத்திலே வரும் ஸங்கைகளையும் தத்த்வங்கா பரிஹாரங்களையும் அறிந்தோம் என்றபடி.

ஸ்ரீ கேஸரி ஸிம்ஹ ஸமுதாய ஸமாராத்ய நாதாய

வேதாந்த ப்ரதிஷ்டித விதியோ த்ராணாய ஜாதிஜ |

ஸுதர்சனம் ஸாரண்யம் த்ருதி த்யாதிர்வ்ரா மாவ்ர்யகா:

ஸுதர்சன ஸ்ம்ருதிம்ப்ரஸஹ பாதீர் வேவேசிகா தேசிகா: ||

என்கிற ஸ்லோகத்தை இங்கே யநுஸந்திப்பது. இரண்டு ஸ்லோகங்களாலும் இப்பாட்டாலும் தேவரீருடைய ஸத்ஸம்ப்ரதாயத்தாலே

நிந்திதமான இப்ப்ரபந்தத்தை ஶிஷ்யர்களும் ஸ்வாத்யாயாஸ்ஸர் களும் வேதபாஹ்ய குத்ருஷ்டிகளும் விஶ்வஸித்து ஆதரிப்பார்களோ என்கிற ஶங்காபராஸம் |

இதி விரோதி பரிஹார மாதாவ்யாவ்யா ஸ்வபூர்ணா ||

(கு. - பு.)—

இந்நூல், ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிய முப்பத்திரண்டு ரஹஸ்யங்களுள் ஒன்றாகிய "விரோதி பரிஹாரம்" என்ற ரஹஸ்யத்தின் உட்பொருளைக் குறிப்பாக எடுத்துணர்த்தி அதில் உள்ள தமிழ்ப் பாடல் களின் விரிவுரையாய் அமைந்ததொரு நூலாகும். மணிப்ரவாளம் என்ற நடையில் அமைந்துளது. எழுத்துப் பிழை மிகவுமுள்ளது. ஏடுகள் மிக வும் சிதைந்திருக்கின்றன. நூலாசிரியர் பெயர் இதிலிருந்து தெரியவில்லை. முன்நம்பரில் உள்ள நூலின் ஆசிரியர் 'இராகவார்யர்' என்கிறவரேயாயிருப் பர் என்று தெரிகிறது இது முடிவுற்ற பின்னர் 48 (b) நம்பர் ஏட்டில் 'வ்யாக்யாநஸமக மாதாவ்யாவ்யாநம்' என்னும் நூல் தொடங்கப்பெற்று இரண்டு ஒரு தொடர் மொழிகளே காணப்படுகின்றன. 48—80-ஆன ஏடு களில்லை. (81)-ஆம்ஏட்டில் "ரஹஸ்ய ஶிகாமணி மாதாவ்யாவ்யாநம்" என்ற நூலின் இறுதியில் ஒரு சிறிய பகுதி மாத்திரம் முடிந்துள்ளது.

No. 2293. முநிவாஹநபோகமாதா வ்யாக்யாநம். MUNIVĀHANABHŌGAGĀTHĀVYĀKHYĀNAM.

Pages, 23. Lines, 7 on a page.

Begins on fol. 16. (b) of the MS. described under No. D. 2291. Complete.

A commentary, in the *Maṇipravāḷa* style, on the *Munivāhanabhōga* one of the 32 *Rahasyas* of Śri Nigamānta Māhādēśika, and the verses found in it.

Beginning :

ஸ்ரீமதே வேங்கடநாதாய கவிதார்க்கிக கேஸரீ |
வேதாந்தாசார்யவர்யாய ஸந்நிதத்தாம் ஸதாஹ்ருதி ||
வ்யாக்யாம் வேங்கடேஶஸ்ய வக்ஷ்யே மஹநீயமஹி |
யதாமதிபோ யதீந்த்ராக்ய ரஹஸ்யார்த்தம் ரஸாயநம் ||

ஸ்ரீமத்வேதாந்தாசார்யர் முநிவாஹநபோக மென்கிற ரஹஸ்யத் தைச் செய்தருள உபக்ரமித்து.

வ்யாவ்யாஸதி ஹ்ருத்யா விரக்தகோஷாய வேங்கடேஶகவிஃ |
முகுந்த விநோத மூலித முநிவாஹந போகவ்ருத்திஷ்டிமோ ||

என்கிற ஶ்லோகத்தாலே வக்ஷ்யமாணார்த்த ஸங்க்ஷேபகம் நாமு பாவர்த்த நிதேஶம் ஸம்ஜா மாரண பூர்வகமாகவும், "ஸிஷ்டா சாரம் ஸிஷ்டஸம்மதம்" என்கிறபடியே விஷய ப்ரயோஜநாதி

ப்ரபந்தவக்த்ருவைலக்ஷண்ய கதந ப்ரதிபாதகமாகவும் விஶேஷப்ரதி பத்தியைச் செய்தருளி இனிமேல் ஒரு பாட்டாலே ப்ராப்யப்ராபக ப்ரபந்தகர்த்ரு ப்ரபந்த ப்ரஶம்ஸா ப்ரதிபாதகமாகவும் * * * * * கதந ப்ரதிபாதகமாகவும் ஸ்ரீரங்கநாத தத்தமான ஸ்ரீவேதாந்தாசார்யன் ஸம்ஜ்ஞையை "ஸூக்திநா கிஹி ஸாஸ்த்ரா ய-ர்தாவாராது ஸ்தாவயதேவி | ஸ்யமோவாரகெ யஸ்யாஸ் தஸ்யாதாவா யர் உவதெ"|| என்கிறபடியே லப்தமாகப் பெற்றோ மென்கிறார். யத்வா, "நாஹம் வ ஸாத்வெகஸ்ணெந யொதீ ஹ்ருதயெ ரவே: | ஹ்ருதயஸ்த்ருமாயதெ தத்வத்ஸ்ராதி நாரத"|| என்கிறபடியே "கற்பாரி ராமபிரானை யல்லால் மற்றுங்கற்பரோ" இத்யாதிகளிற்படியே சக்ரவர்த்தித் திருமகனில் வ்யதிரிக்தமான ஒரு வஸ்துவையும் உத்தேசித்து மாநம் பண்ணாதே "என்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்கிறபடியே அந்தச் சக்கிரவர்த்தித் திருமகனுக்கும் ஶேஷபூதராய் ஸ்ரீக்ருஷ்ணரூபியான ஸ்ரீரங்கநாதனையே ப்ரஹர்ஷத்தாலே ஸாக்ஷாத்கரித்து மாநம் பண்ணாநின்ற திருப்பாணாழ்வாராலே அருளிச்செய்யப்பட்ட இப்பத்துப் பாட்டையும் . . . . மறையின் பொருளென்று கொண்டாடாநிற்கிற ஸாத்விக ஸம்ப்ரதாயங்களே? நிஷ்ப்ரயோஜநமாக உத்தம விஷ்ணுபக்த ஸங்கமஸ்தாநம் ஸத்ஸமாஜ ப்ரஸித்தமான ஸந்நிதிக்குள்ளே 'வேதாந்தாசார்யர்' என்று சொல்லப்பட்டோம். ஜ்ஞாநாதிகத்வத்தாலே நாம் பெரியோமல்லோம், என்றைக்கும் ஸத்ஸத்துக்களை நமக்கு உரைப்பார் உளரென்று ஸத்ஸத்துக்களைத் தேடுவோ மென்கிறார்:—

காண்பனவு முரைப்பனவு மற்றொன்றின்றிக்
கண்ணனையே கண்டுரைத்த கடிய காதல்
பாண்பெருமாளருள் அருள்செய்த பாடல்பத்தும்
பழமறையின் பொருளென்று பரவுகின்றோம்.
வீண்பெரிய விரிதிரை நீர்வையூத்துள்ளே
வேதாந்தாசாரிய னென்றியம்ப நின்றோம்
நாண்பெரியோமல்லோம் நன்றுந்தீது
நமக்குரைப்பாருள (ரென்று) (ரேனும்) நாடுவோமே.

நாம்—"முனிவாஹநர்" என்று திருநாமம் ஆம்படியாகவும், "ஸ்ரீவேதாந்தாசார்யர்" என்று திருநாமம் சாத்தியருளும்படியாகவும் தங்களிருவரிடத்திலும் பெரிய பெருமாள் ப்ரஸாதஞ்செய்தருளின இஸ்ஸம்பந்தத்தையிட்டு விஶேஷித்துத் திருப்பாணாழ்வாருக்கு தாஸபூதரான நாம், "நம்பாணநாதன்" என்று ஸ்வ ப்ரபந்தஸாரத்தின் முதல்பாட்டிலே தாமேயருளிச்செய்தாரிறே.

ஸாரஸாரஸ்வாதிநியிலே "நம்பாணநாதன்" என்கிற வ்யா
க்யாநத்திலேயும் இவ்வர்த்தங் கண்டுகொள்வது. இதுக்குப் பாவு
கின்றோம், இயம்ப நின்றோம், பெரியோமல்லோம், நாடுவோமே
என்கிற க்ரியைகளோடே ஸ்வயம் காண்பனவும்-காண்கிற வஸ்து
வும், ஜாக்ரத்வஸ்துவும் என்றவுமாம். உரைப்பனவும்— *
* * * * * விளம்பினோமே -
ஆலோசித்தோம். நாம் ஸதிமோக்ஷ: | ஆக இப்பாசுரத்தில் இப்பிர
பந்தம் ஸதிவிஸ்தரம் ஸதிஸங்க்ஷேபம் ஸமஸ்தகாயிகாரஸ்தம் ஸம்ப்ரதிஷ்
டம் ஸர்வவேதாந்தஸாரஸ்தம் ஸம்ஶயாதிஜநகஸ்தம் விஶேஷஜ்ஞஸம் ஸம்ப்
ரவேஷணம் ஸவேதாவதேஶம் வாதிதேவிராஸம் என்கிறப்போலே
மற்றுள்ள ஸூத்ரார்த்தக ப்ரபந்தங்களில் உள்ளவை யொன்றுமன்
றிக்கே ஸ்வாதேஶஶக்தம் ஸம்பந்த ஸம்பந்தமாக ஸர்வஸமஸ்தாவஸ
மாயிருக்கையாலே மற்றுள்ள ஸூத்ரார்த்தக ப்ரபந்தங்களுக்கெல்லாம்
இப்ப்ரபந்தம் ப்ரதிநிதியாகுமென்று ஆலோசித்து இப்பிரபந்தத்
துக்கு நன்றாக வியாக்கியானம் பண்ணி இப்ப்ரபந்தப்ரதிவாதிக
ஸமஸ்தாக்ஷ்காரத்திலே ஸ்ரீரங்கநாத ஸ்ரேயாலே ஸ்ரீப்ரதி
ஷ்டிதரானேன் என்கிறார் என்றதாயிற்று.

End :

> தேதிவாஸந ஸோமோயம் தேவதேஶ்யஸ்ய ரஸோஸத: |
> ஸ்ரேயாரங்கநாதஸ்ய ஸ்ரீகாந்த்ய யதேந்த்ரா ||

என்று முடிவில் ஸநந்தனப்பினாலே இவ்வர்த்தத்தைத் தாமே யரு
ளிச்செய்தாரிறே. * * * * *

இவர் தாம் அருளிச்செய்த ஸமஸ்த்ராந ஸோபாநத்தாலே
ஸ்ரீரங்கநாதனை ஸ்வாதேஶஸ்தகம் வணித்தநுபவித்தாப்போலே இவ
ருடைய அவதாரரூபரான ஸ்ரீமத் கோபால தேசிகனும்,

"ஸ்ரீவைதிக ஸஞ்ஜ்ஞகே த்விஷதாம்பீடநேத்ரே விமாநகே

ஸ்ரீஶார்ங்கபாணிநாத ஸம்ஸ்தூதிகம் ஸோபாந ஸம்ஶயவிஶ்வா"
என்கிறபடியே திருக்குடந்தை யென்கிற திவ்விய தேசத்தில் நித்ய
ஸந்நிதிகளாலே ஸம்ஜநித்யமாயிருக்கிற ஸ்ரீவைதிக விமாநத்துக்
குள்ளே ஸ்வபிரகஸம்ரக்ஷணார்த்தமாக யோகநித்ரை செய்தருளா
நிற்கிற ஸ்ரீதேவநாதார்ச்சதனை ஸ்ரீஸமஸ்த்ராந ஸோபாந ப்ரதி
ரூபமாய் அதுக்கு ஸ்வீய ஸ்விஸ்வரணரூபமுமான ஸ்ரீதே
வநாதார்ச்சக ஸ்தோத்ரத்தினாலே ஸ்வாதேஶஸ்தகம் வணித்து ஸநு
பவித்தாரிறே.

* * * * * *

* * * * * *

“ஸத்ஸம்ப்ரதாய பாதுகாஸேவக ஶ்ரீராமாநுஜ ஸம்யமீந்த்ர காருண்யலக்ஷ்ய ஜகத்குருஸம்ப்ரஹ்”

ஶ்ரீரங்கநாயகத்வாரஸேவக அநவதாவதாய விசக்ஷணா: ।
முநிவாஹநபோகஸ்ய ஸாரஸ்த்ராஸ்த்ர க்ருதவாந் ॥
இதி முநிவாஹநபோக ஸாரஸ்த்ராஸ்த்ரம் ஸமாப்தம் ।
ஶ்ரீமதே ஶ்ரீநிவாஸதாஸதேசிக ராமாநுஜாய நம: ॥

(கு. - பு.)—

இந்நூல், திருப்பணாழ்வார் தாம் அருளிச் செய்த “அமலனாதிபிரான்” என்கிற திவ்விய பிரபந்தத்துக்கு வியாக்கியாந ரூபமாய் ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகனால் அருளிச் செய்யப் பெற்ற “முநிவாஹந போகம்” என்ற முப்பத்திரண்டு ரஹஸ்யங்களுக்குள் ஒன்றான ரஹஸ்ய கிரந்தத்தின் உள்ளுறைப் பொருளைக் குறிப்பாக வெடுத்துக்காட்டி அதில் உள்ள தமிழ்ப் பாடல்களுக்கு விரிவுரையாய் “மணிப்ரவாளம்” என்ற நடையில் அமைந்த தொரு நூலாகும். இப்பிரதியில் இது முற்றும் உளது. நூலாசிரியர், “ஸ்ரீமத் பாதுகாஸேவகராமாநுஜ மஹாதேசிகன்” என்னும் துறவியாரின் சீடரில் ஒருவரான “ஸ்ரீரங்கநாத தாஸன்” என்பவராவார் என்று கடையகத்துக்காணும் இரண்டு வடமொழி ஸ்லோகங்கள் தெரிக்கின்றன. மற்று, “அமலனாதிபிரான்”, “பகவத்தியாந ஸோபாநம்”, என்ற நூல்களைப் போல அதே மேனியில் “ஸ்ரீமத் கோபால தேசிகன்” என்பவராலும் திருக்குடந்தை ஆராவமுதன் விஷயமாக “ஸுயஶோத்ருஷ்ட ஸ்தோத்ரஸூக்தி” என்பதாக ஒரு துதி நூலும் இயற்றப் பெற்றிருக்கிறது என்கின்றவிச் செய்தி இறுதியிற் காணப்பெறும் தொடர் மொழிகளால் அறியக் கிடக்கிறது. சிதலுற்றிருக்கிறது. பிழையுடன் உளது.

No. 2294. தர்ம பரீக்ஷை.
DHARMA PARĪKṢAI.

Substance, palm-leaf. Size, 15½ × 1¼ inches. Pages, 218. Lines, 5 and 6 on a page. Character, Tamil and grantha. Condition, good. Appearance, old.

Incomplete.

A *Maṇipravāḷa* rendering of the *Kanarese* work of the same name by Vṛttavilasa. Deals elaborately with the doctrines of the *Jains*.

By Vijayahaṁsa Munivar, disciple of Śriman Munibhadra Svamigal.

Beginning :

கர்நாடக தர்ம பரீக்ஷை

வைஶஸ்யத்துடனே கூடின ஸர்வ ஜீவன்களாகிற வண்டு ஸமூஹங்களுக்கு விசேஷ ஸந்தோஷத்தைப் பண்ணுகிற ஸகல தீர்த்தமாகிற ஸமுத்ரத்தைப் போக்க . . . . க்கிற திவ்ய ஜ்ஞாந கிரண ஸமூஹங்களினாலே மிகவும் விளங்கி மோக்ஷமாகிற தாம

ரைக்கு ஸந்தோஷத்தை உண்டாக்க ஸூர்யோதயமென்கிற உதயாசல பர்வதத்திலே உதியா நின்று மிகவும் ரக்தமாய் தேஜஸ்ஸோடே கூடி ஸ்வர்ண ஸ்வரூபமாக அபரஞ்சி ஸ்வரூபமாகி உதியா நின்ற க்ஷீராப்தி பூர்ணசந்த்ரன்போல் நிர்தோஷனாகி விளங்கியிருக்கிற ஸ்ரீஹயக்ரீவ ஸ்வாமியை நமஸ்கரித்து ப்ரம்மா விஷ்ணு, ருத்ரன் இவர்களுடைய ஸர்வைச்வர்யமாகிய யஜ்ஞவேதிகையைச் சொல்லுகிறேன் என்றவாறு. (க)

உத்தரபாரிஷத [த்துள்]? (வந்தர்களுக்குள்) உத்கோத்ரரும் ஸ்ரீஹரி ஸூக்தத்துள் யாணி ப . . . . ரும் தியாக ஸத்தில் உத்பேஜந ஸ்தோத்ரவாதரும் ஸகல தர்மிக தக்ஷ மஹாஹிதரும் ஆகிய ஸர்வஸாதன பாரமேஷ்டிகளை ஸம்ஸார ஸமுத்ரம் கடக்கவேண்டி நமஸ்கரிக்கிறேன் என்றவாறு. (உ)

ஸகல ஸம்பத்தைக் கொடுக்கப்பட்ட க்ஷேத்ர ஸித்த ரூபாயத உபாஸ்ய ஸர்வ ஸாத . . . ங்களை நமஸ்கரித்தேன் என்றவாறு. (ங)

க்ரமமாக ஸத்யம் தேமாங்கனி, ஜபமாலை, பாஹஸ்தம், கத்தி, அம்பு, புஷ்பபாணம் இவையிற்றை வலது கையிலும், அபயம், நீலோத்பலம், பாசம், கேடையம், வில்லு, தனுஸ? உக்ஷபாலம் இவைகளை யிடது கையிலும் தரித்து ஸ்வர்ணமயமாகிய ஸிம்ஹாயின் தேவ கருடவாஹநத்தின்மேலேறி எங்களுக்கு இஷ்டார்த்த பலங்களைக்கொடுக்க ஸாரணமாக அடைந்தேன் என்றவாறு. (ச)

*   *   *   *   *   *

ஆதிகாலத்திலே தேஜோஹரமான ஶ்ரீ யஜ்ஞவேதிகையைப் பார்த்து வல்லவன் கந்நடியத்தில் செய்த? யஜ்ஞவேதிகையை ஸகலமானபேரும் இருந்து கேளுங் கோள் என்றவாறு. (கக)

ஸப்த ஸமுத்ரஞ் சூழ்ந்த ஜம்பூத்வீபம். அந்த த்வீப மத்யத்துள் மஹாமேரு. அந்த மஹாமேருவுக்குத் தெற்கு பாரத க்ஷேத்ரம். அதிக்கு ப்ரஸித்தமான பாரதக்ஷேத்ரத்தில் இருக்குந் தேசங்களில் மிகவும் அழகு பொருந்தி யிருக்கப்பட்டது விஜயாநகரமென்பது. அதினுடைய ஸௌந்தர்யமும் அழகும் சொல்லிமுடியாதாகிலும் சிறிது சொல்லுகிறோம் புண்ய ஜீவன்களே என்றவாறு. (கஉ)

*   *   *   *   *   *

அத்ரகாஸங்களிலேயும் நீலாத்ரங்களிலேயும் செய்யப்பட்ட கோபுரங்களும்வைடூர்யத்திலே யழுத்தப்பட்ட கவாடங்களும்

அநேக நவரத்தின கசிதமாகி சந்திர ஸூர்யர்கள் உதித்தாப்போல் வீதிகளும், மாட கூட மண்டபங்களும், உப்பரிக்கைகளும், அநேக ஸ்வர்ணஸ்தம்பங்களினாலே செய்த ஜிநசைத்யாலயமும், மாநஸ்தம்ப ப்ராஸாதங்களினாலே விளங்கிய வைஜயந்தபுரம். அந்தப் பட்டணத்து ராஜா ஜிதசத்ரு என்பான். அவனுடைய பட்டத்தரசி வாயுவேகை யென்பாள். ரூபத்தில் ரதியினும் மிகுந்தவள். ஸகல வித்யாநிபுணை. இவர்களிருவரும் உத்க்ருஷ்ட காமபோகங்களை அநுபவித்து இருக்கிற நாளில் ராஜஸ்த்ரீ புஷ்பவதியாய் நாலாநாள் குளித்து யாவத்ரமான வெண்பட்டுக்கட்டி ஹம்ஸதூலிகா மெத்தையிலே இலக்ஷ்மீயும் நாராயணனும் சயநங்கொண்டாற்போல் ஸுகநித்ராஸக்தியா நின்றகாலத்துள் ஸுகநித்ராஸக்தித்து நித்ரைசெய்யும்பொழுது ஸ்ரீதேவியும், ஸிம்ஹமும், ஐராவதமும், பூர்ணசந்த்ரனும், ஸூர்யனும் ஆக [வெ] விடியசாமத்துக்கு ஸ்வப்நங்கண்டு எழுந்திருந்து தான்கண்ட ஸ்வப்நத்தைத் தனது ப்ராணேஸ்வரனாகிய ராஜாவுக்குச்சொல்ல, ராஜாவும் நிமித்தஜ்ஞரை யழைப்பித்து ஸ்வப்நபலங்கேட்க நிமித்தஜ்ஞர் சொல்லுகிறார் ஸ்ரீதேவியைக் காண்டலால் ஸ்ரீபதிக்கேசரீநாதனும், ஸிம்ஹத்தைக் காண்டலால் ஸிம்ஹபராக்ரமனும், ஐராவதத்தைக் காண்டலால் ஸர்வராஜ வைபவனும், சந்திரனைக் காண்டலாலே ராஜ்யஸம்பத்தாரகனும் ஸூர்யனைக் காண்டலால் ப்ரதாபப்ரகாசகனும், த்ரைலோக்யபூஜ்யனாகிய புத்ரன் உன் ஸ்த்ரீ கர்ப்பத்திலே அவதரிக்கப் போகிறான் என்று சொல்லக்கேட்டு * * * * * *

End :

நவம: ஸர்க்க: :—

மநோவேகன் நீங்கள் ப்ராஹ்மணர்கள் எல்லாரும் ஸர்வஜ்ஞஸ்வபாவத்தினால் ஸர்வஜ்ஞவித்தராகி ஜல்பித்தீர்கள் என்றறிந்து என்னுடைய ப்ரதிஜ்ஞைக்கு ஸாதகமாயிற்றென்று தன் மனஸ்ஸில் ஸந்தோஷசித்தனாகி பவனவேகனோடே கூடிப்பார்த்துப் பூமியில் நிக்ஷேபமாகிக்கொண்ட வஸ்த்ராலங்காரத்தைவிட்டு ஆச்சரியமாயிருக்க முன்னே வித்யாப்ரபாவத்தையெடுத்து அதிசயமான ஆபரணங்களைப் பூண்டு த்விஜஸமூஹங்கள் ஸ்தோத்ரஞ்செய்யத் தக்கதாக மநோஹர ஸம்பத்தி காட்டினன். அதினாலே விப்ரரெல்லாரும் கொண்ட ஸந்தேஹம்விட்டு வெவராயிவர் முன்னே கேட்டது எங்களுக்குத் தெரிய அறிவிக்க வேணும் என, மநோவேகன் அவர்களுக்குச் சொல்லப் போகிறான். பரமஜ்ஞாந நிதாநர், காருணாகரர், உபயவித பரிக்ரஹரஹிதர், நிரவத்யசரிதர், எங்கள் குரு. ஜிந யோகிவாஸ ப்ரவ்ரஜ்யவ்ரதிகர். ஹிம்ஸை, அஸத்யம், அஸ்தேயம், அப்ரஹ்மம், அதிகாங்க்ஷை இப்படிப்பட்ட தோஷம் இல்லா[த](து) ஜீவ.

தலையோடுகூடி நடக்கிறது ஜிநஸமயம். அல்லாமல் இந்த பரத க்ஷேத்ரத்தில் விஜயார்த்த பர்வத தக்ஷிண ஶ்ரேணியில் வைஜயந்த புரத்து வித்யாதரன் ஶத்ருஞ்ஜயன் என்பான். அவனுடைய புத்ரன் நான் மநோவேகன் என்பேன். இந்த மித்ரன் பவநவேகன் என்பான். ஜிநதத்வம் கேட்கிறவன் அல்ல. கைக்கொள்ளுகிறது மில்லாமல் இருக்கையில் இவ்விஜ்ஞாநிவாஸ பூஜ்யர் உபதேஶத்தில் இவனுக்குத் தெளியவேணுமென்று வேண்டிய வேஷங் கொண்டு ஸ்வஸ்தமாயிருக்கிறதெல்லாம் நினைத்து பூர்வாபரவிரோதங்களான கதைகளைச் சொல்லி உங்களுடைய வேதஶாஸ்த்ர புராணாதிகளோடே ஸமாநமாகச் சொல்லி உங்களைப் பலவாசலிலேயும் வாதஞ்செய்து வந்தோமென்று அவர்களை ஸந்தோஷமாக்கி இந்த வேதபுராண ஶாஸ்த்ரத்தில் கதையில் சொன்ன பெரிதான புளுகுக்கு ஸமர்த்தமான கதையென்று அறியச்செய்து விப்ரஸபைக்கும் மித்ரனுக்கும் ஸ்பஷ்டமாகிறபோலே பூர்வாபரவிரோதமில்லை யென்கிற ஸமர்த்தத்தை விநயமாநன் ஸஜ்ஜநஸேவ்யன் பரஹிதார்த்த ஆசாரவித்ரன் ஜிநசரண கமல ஷட்பதன் ஸம்யக்த்வ ரத்ந விஶாலன்.

இதி விநோதோதர கதாயாம் கவிமணிவிரசித ஶ்ரீ பூஜ்ய பாதாசார்ய ஹம்ஸதாஹாக்ஷரஸ்ய வசந விநிர்க்க ஸ்வரூப நாமோபாயி ஸத்ர்ப ஸம்யாகம் ஶ்ரீதேவகீர்த்தி ப்ரதிஸ்வரூபண ஸம்ஸாரபய ஷஷ்டம் ப்ரதிபோதக பரமீக கதாநாடக ஸப்தமீ தேக கதையை ஶ்ரீமந்நேமிசந்த்ர ஸ்வாமிகளுடைய ஶிஷ்யராகிய விஜயஸம்ஸ்ஸீயர் த்ராவிட பணிபந்தமாகச்செய்த ராவணன் தலை அரிந்து பத்தினதும் ஜாம்பவந்தோதத்தியும் தநுஷ்மதி ஶிரஸு பத்தினதும் வாலிபுத்ரன் உடல் ராசி பத்தினதும் சொன்ன நவம பர்வம் ஸம்பூர்ணம். ஶ்ரீரஸ்து.

தஶம பர்வம்:—

* * * * * * * * *

என்று மநோவேகன் சொல்ல ஸபாஸதர் எல்லாரும் ஸந்தோஷித்தராகி நீர் சொல்லுகிற யதார்த்தத்தைச் சொல்லுமென்ன மநோவேகன் வணங்கி[ற]து? (அது) சொல்லுவான். பாஸபைய எல்லாவற்றினுடைய உத்க்ருஷ்டஸார யதார்த்தமும் ஸகவித்தராகிக் கேளுங்கோள். தேவநாகிந[ர உ](ரா)ரமவிநத பதஞ்ஜயனை ஜிநேஸ்வரோதத்தை ஸவிஸ்தாரமாகச் சொல்லுவேன் ஸந்தோஷமாகக் கேளுங்கோள். அது எப்படியென்றால் ஸத்ரனும் க்ஷத்ரனும் என இரு[துற]வர். அந்த ஸத்ரிலே ஜூஸதுஸத்ரனும் தூரஸத்ரனும் என இரண்டு பேதத்

தது. அஸத்யன் அநுவாஸநமும் ஸத்யன் ஸுவர்ண வாஸநமும் போல விருவகைப்படும். ஸத்யனை மநுஷ்யன் யதார்த்தாயதார்த்தங்களை விசாரித்துப் பரீக்ஷித்துக் கொள்ளுவான். அதெப்படியென்றால் ஶ்லோக:—

ஸீதவர்ணம் (ஸி)தமேது நிகஷே காஞ்சநாபேக்ஷயம் |
ஸித்தம் ஶ்ருதாசாரதத்வம் ஸமேதஹேமேக்ஷணம் ||

இப்படி ஸுவர்ணம் ப்ராமாண்யகாரணத்தினால் பரீக்ஷித்துக்கொள்ளு கிறப்போலே தர்மத்தைப் பரீக்ஷித்துக்கொள்ளுவது. அதல்லாமல் தைவத்ரயமென்பது எப்படியென்னில், லோக தைவம், பாஷண்டி தைவம், தேவதா தைவம் என்பன. அதிபஹு காரணத்தினால் ஜநங் கள் ஜ்ஞாநவிடாமலிருக்கிறது லோகதைவம். எப்படியென்றால் ஸமுத் ரம் நதீதீர்த்தம் தடாகம் இவைகளிலே ஸ்நாநஞ்செய்கிறதும் மலை மேலே ஏறிவிழுகிறதும் அக்னியில் விழுகிறதும் யாகத்தில் பிராணி களைக் கொல்லுகிறதும் இவையெல்லாம் ஸுக்ருதமென்று சொல்லு கிறதும், கோமேத்ரோஹம் இவைகளை யோக்யமென்று பூஜிக்கிற தும், ஜோதிஷ பக்ஷத்தில் தேவஸங்க்ரஹம் விக்ரஹஸங்க்ரஹம் இவர் களுக்கு தர்ஷியாமென்று சொல்லுகிறதும் ப்ராணஹீநமான லோக தைவம். இது நிஶ்சயமாகத்தெளியவும்; பாஷண்டி தைவமென்பது, விபூதி பூசுகிறதும் ருத்ராக்ஷ கண்டஸி ஜடைகளை போடுகிறதும் காஷாய வஸ்த்ரம் கட்டுகிறதும் இருப்பிடமும் கத்தி எலும்பு மாலை கட்டிக் கொள்ளுவதும் பாபவேஷத்தில் இப்படியிருப்பவர் பாஷண்டிகளென் றும் தபஸ்விகள் என்றும் எங்கும் ஸஞ்சரித்துத்திரிவர்கள். இது பாஷண்டி தைவமென்பது. அநேகதேஹங்களும் பஹுபாதங்களும் பல முகங்களும் பல நேத்ரங்களும் பல ஹஸ்தங்களும் பல ஶாஸ்த்ரங் களும் பலரூபங்களும் பல அலங்காரங்களும் சிலபேரை ரக்ஷிக் கிறதும் பலரை நிக்ரஹம் செய்கிறதும் சிலரிடத்து ஸந்தோஷமும் சிலரிடத்துக் கோபமும் ஸ்த்ரீகளுக்கு வஶமாய் நடக்கிறதும் ஸ்த்ரீ கள் சிலரை மோஹிக்கிறதும், சிலரைத் தூஷிக்கிறதும் ஸ்தோத் ரம் செய்கிறதும் பூமியை ரக்ஷிப்பனென்றும் கோபித்தால் கெடுத் துப் போடுவான் என்றும் கண்டகல்லுகளை எங்கும் ஸ்வாமியிருக் கிறான் என்று வணங்கிறதும் இவையெல்லாம் தேவதாமூடம். அதல்லாமல் தேவன் என்கிறவன் என்றால் கேவல ஶ்ரீகாவயி யென் னும் திருஜ்ஞாநத்துடன் ஜீவலோகத்திலே வந்து அவதரித்தவுடனே மஹாவதாரண ஜந்மாபிஷேகாநந்தரம் தீக்ஷை கைக்கொண்டு உத்க்ரு ஷ்டோத்க்ருஷ்டவாஜ்ஞவஸத்வ ஶௌசஸம்யக்தவ ஸூத்ராமாகினுத்வ ஸுர ஜ்ஞாநயமென்னும் தயஸஹ்ய யதிங்களுடன் நடந்து ஜ்ஞாவிம்ஶதி

பரிஷஹங்களை? ஜயித்து த்யாநாக்நி ஸமூஹ ப்ராஜ்வலித ஹோமோ
ப ஹோமத்துக்குக் காரணமான கர்ம ஸமித ஸந்தாயந ஸ்ரீமத்3நா
த்ரம ஸம்ஹநந ப்ரஸ்தாதி ஸம்ஸ்தத்தையும்விட்டு அநகார ரூபிதராகி
யிருக்கிற சரணத்தைப் ஸாதித்து உத்தமர் தெளிவர் * * *
* * * * * * *

இப்படிக்கொத்த சூத்ராசாரப்ரஸ்தாநங்களைப் பரிஹரித்து தேசந
ப்ரஹாவனைகளினாலே ஔபசாரிக வசநங்களை விடுகிற பரிணா
மத்தையும் பஞ்சேந்த்ரிய விஷயங்களை உபசரிப்பிக்கிற பேதமும்
ஸஜல ஜீவன்களுடனே ஏகத்ர ப்ரயோக காரணத்வ லக்ஷண
மான ஸாவதந யதாக்யாதமென்று சொல்லப்படும். இந்த்ரிய விஷ
யம் விட்டதும் அந்த ப்ரகாரம் நிற்பதும் யதாக்யாதம், இது
ஸம்யக்ஸ்யாத மென்கிறது. * * * * *
ஸர்வஜ்ஞனென்கிறது முதலாகி அநேகாநந்த நாமங்களினால் விளங்
கா நிற்பன். அதுவுமல்லாமல் நிரவத்யம் நிஷ்கலங்கம் நிரஞ்சநா
மிகம் நிர்மலம் நிர்விகல்பம் நிராபேக்ஷம் நிஷ்ப்ரபஞ்சம் நிஜசரண
நிலயம் நிர்த்வந்த்வம் நிரவம் * * * * விகார
மம் இப்படியாக ஸகலதோஷத்தினால் விடப்பட்டு பரஞ்ஜோதி
ஸ்வரூபனான விகாரமனென்கிறதினால் அப்படிக்கொத்த தேவ
னே சுத்தன என்று நம்புவது. அப்படிக்கொத்தவனை நம்பாமல்
ஹீநனும் நிந்த்யனும் * * * மாகியவனைத் தேவ
னென்று நம்பாதே. ஜிநரையே நம்புகிறது ஸம்யக்த்வம். அஷ்டகர்மரே
தேவர், அவரைப்போல் நிஷ்பரிக்ரஹமாயிருக்கிறதே தபஸ்ஸு
அதனுடைய பேதங்களையுஞ் சொல்லுகிறேன் கேளுங்கோள்
என்று சொல்லுகிறான். அந்தத் தபஸ்ஸென்பது * *

* * * * * * * *

ஸகலதோஷத்தராகி யதிதர்மே ஸம்ஸாரஸமுத்ரத்துக்குக் காரணம்
என்று நம்பினர். ராஜாவும் . . . . . ரமும் ப்ரீதியுடனே
வ்ரதங் கைக்கொண்டு சரணங்களை தரித்து ஸம்ஸாரபயம் விட்டு
ஸம்யக்த்வத்தையடைந்து அவர்கள் எல்லாரும் ஸௌக்ய . . .
. . . . ஸ்ரீயும் முன்தேடின த்ரவ்யமெல்லாங்கொண்டு ஜிந
சைத்யாலயங்களைச் செய்தனர். அப்படி ஸகலபவ்ய ஜநங்களும்
நாநாப்ரகாரமான தாந * * * *

(கு. - பு.)—

இந்நூல் ஜைன மதத்தைச் சார்ந்ததாய் அம்மதக் கோட்பாடுகளை விரிவாகத் தக்க மேற்கோள்களுடன் ஸகல பவ்விய ஜநங்களும் உணருமாறு எடுத்துக்கூறுகின்றது. இது, கர்நாடக பாஷையில் " வ்ருத்த விலாஸன் "

என்னும் பெரியார் இயற்றிய "தர்ம பரீக்ஷை" யென்னும் நூலுக்குத் தமிழ்மொழி பெயர்ப்பாக ஸ்ரீமந் முநிபத்ர ஸ்வாமிகளுடைய சீடராகிய "விஜய ஹம்ஸ முனிவர்" என்பவரால் மணிப்ரவாள நடையில் இயற்றப் பெற்றதென்று படலங்களின் கடைகளில் காணப்பெறும் தொடர் மொழி களால் தெரிகின்றது. இதில் அருகக் கடவுளே ஸகலருக்கும் வழிபாட்டிற்கு உரியவர் என்றும், ஸம்யக் தரிசனம், ஸம்யக் ஞானம், ஸம்யக் சாரித்ரம் என்ற இம்மூன்று தத்வமும் இன்னும் பல்வேறு தத்வங்களையும் நன்கு எடுத்துணர்த்தி இருக்கின்றார்.

இது, வைதீக மதத்தை மிக விரிவாக வெடுத்துத் தூஷித்தியற்றப் பெற்ற தாகும். இந்நூலில் முதல் நூற்கேற்பப் பத்து படலங்கள் அமைந்துள. இது ஜைனக் கிரந்தங்களுள் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகப் போற்றப்பட்டு வருகிறது. ஆதிமுதல் ஒன்பது படலங்கள் வரை பூர்ணமாயும் பத்தாவது படலத்தில் ஒரு சிறிய பகுதி மாத்திரமும் இங்குளது. பிராம்மணர்களுக்கு மிகக் கருணையுடன் அறிவுறுத்தியதாக உளது. எழுத்துப்பிழை சொற் பிழை மிகக் காணப்படுகின்றன.

No. 2295. நூற்றெட்டிலக்கம்.
NŪṞṞEṬṬILAKKAM.

Substance, palm-leaf. Size, 7¾ × ¾ inches. Pages, 222. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Begins on fol. 1-a. The other work herein is Gouḷikkādal & Tummalkādal. 112-a.

Similar to the work described under No. D. 2017.

Beginning :

நூற்றெட்டிலக்கம் : (ரா அ. இலக்கம்) விநாயகன் திருவுளம். இந்த சாஸ்திரம் பார்க்கிற விதம் எப்படியென்றால் நூற்றெட்டிற் குறைய மூன்று தரம் கணக்கு சொல்லச்சொல்லிச சொன்ன கணக்கை தொகை கூட்டி எட்டிற் பெருக்கி ஒன்று மிகுந்தால் முதல் எட்டில் முதல் வரி பார்க்கவும். இப்படி எட்டு ஏழு மட்டும் பார்க்கவும். எட்டுக்கப்பால் பார்க்கவேண்டாம்.

விநாயகரை பிரதிஷ்டைபண்ண நன்றோ தீதோ :—

விநாயகரை பிரதிஷ்டைபண்ண நன்று
தரணி யிடங்கொள்ள நன்று
இந்த ஊரில் குடியிருக்க நன்று
அடிமைகொள்ள நன்று

கடன்கொடுத்து வாங்கச் சண்டையாம்
இந்த வீடுகட்ட மிகவும் நன்று
இந்த நாட்டில் விதைத்தால் லாபம்வரும்
வாய்க்கால் வெட்டினால் நீரோடாது.

தேர்சமைக்க நன்றோ தீதோ
தேர்சமைக்க நன்று
விநாயகரை எழுந்தருளப்பண்ண நன்று
காணியாட்சிகொள்ள மத்தியமம்
இந்த ஊரில் குடியிருக்க மகாவின்பம்.
அ[டு](டி)மைகொள்ள மிகவும் நன்று
கடன் கொடுத்து வாங்க நன்று
இந்தவீடு மச்சிடச் சுகமுண்டாம்
இந்த ராசாவின் பேரிலே தண்டுவரும்.

End :

கடலேறிப் போனவன் வருவானோ வாரானோ
கடலேறிப் போனவன் ச[டு](டி)தியில் வருவான்
எருமைகொள்ள நன்றாய்ப்பலிக்கும்
ஏற்றம்வைக்க நன்றாய் வழங்கும்
கடைச்சரக்கு மலியும் கொள்ளவேண்டாம்
உடுக்கப் புடவைகொள்ள விர்த்தியாகாது
புதைத்த உடைமை பின்பு காணும்
நாலு சீவன் வருஷத்தில் காணும்
கூட்டு வளப்பஞ்செய்ய அதிகலாபமுண்டு.
இந்தக் காதுகுத்த உருகிப்போகும்
தண்டு வாணிபம்பண்ணப் பலியாது
மழை சிலவிடத்தில் செழிக்கப் பொழியும்
பருத்தி சரக்குப் போடவேண்டாம்
இந்தவீடு மச்சிட நன்று
இந்த ராசாவின் பேரிலே தண்டுவரும்
வாய்க்கால்வெட்ட ஏரி உடையும்
இந்த மனை அதிக லாபம் வரும்.

(கு. - பு.)—

இது, டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 2017 ஆம் நம்பரில் வந்துள்ள நூல் போன்றதாகும். இதற்கும் அதற்கும் வெகு பேதங்கள் காணப்படுகின்றன. விஷயத்தில் மாத்திரம் வேறுபடாதது. இப்பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது. ஏடுகள் சிறிது சிதைந்திருக்கின்றன. இறுதியில் சில ஏடுகள் முறிந்து கிடக்கின்றன. எழுத்துப்பிழை வெகுவாகக் காணப்படுகின்றன. நிமித்த சாத்திர வகைகளில் இதுவுமொன்றாகும்.

No. 2296. கௌளிக்காதலும் தும்மற்காதலும்.
GAUḶIKKĀDAL AND TUMMAṞKĀDAL.

Pages, 14. Lines, 7 on a page.

Begins on 112-a of the manuscript described under No. D. 2295.

Complete.

A treatise on 'divination' with the help of the chirping of the house—lizard, and the sneezing of human beings. According to the author of this work, both of them have the same significance.

Beginning :

கௌளிக்காதல், தும்மற்காதல் பதினாறுகோணத்தும் ஆகாசம் பூமியிலும் பார்ப்பது :—

ஞாயிறு :— ஞாயிற்றுக்கிழமை கிழக்கு முதலாகப் பிரதக்ஷணமாகப் பார்ப்பது :—ஆதிவாரம் நாள்சொல்லுங் கௌளி பிராம்மணசாதி கோவர் ணம். முதுகில் வெகு இரேகைகள் உண்டாயிருக்கும். ஆணும் பெண்ணும் கிழக்கு முகமாக விருக்கும். ஆகாரங் கொண்டிருக்கும். கிழக்கே கௌளி சொன்னாலும் தும்மினாலும் பயம். தீவு திசையிலே கேடுசொல்லும். அக்கினி மூலையில் கேது இருப்பன். சாவு வார்த்தை சொல்லும். திவு திசையில் கலகம். தெற்கு அங்காரகன் இருப்பன் கலகம். திவுதிசையில் அவகேடு சொல்லும். நிருருதியில் புதன் இருப்பன். உறவின் முறை யார் வருவார். திவுதிசையில் அசனம் வரும். மேற்கு சனியிருப்பான். கட்டுவர்க்கம் வரும். திவு திசையில் தனகாரியமாகும். வாய்வு மூலே யிலே இந்திரன் இருப்பான். புது வஸ்திரம்வரும். திவு திசையில் தன காரியமாகும். வடக்கே பிரகசுபதி இருப்பான். அர்த்தலாபம். திவுதிசை யில் பரிமள புஷ்பம் வரும். ஈசானியத்தில் சுக்கிரனிருப்பன். ஓலைவரும். திவுதிசையில் உறவின் முறையார் வருவார். ஆகாயத்தில் சூரியன் இருப் பான். வெகு சிந்தனையாகும். பாதாளத்தில் சகல காரியமும் சயமாகும். ஞாயிறு முற்றும்.

End :

சனிக்கிழமை.

கௌளி சாதி. அச்சங்கருப்பு ஆகாரமில்லாமல் ஆணும் பெண்ணும் பசி யிலே சிக்கியிருக்கும். கிழக்கே ராகு இருப்பான். வெகு வார்த்தை சொல்லும். திவுதிசையில் விஷமவார்த்தை வரும். அக்கினி மூலையில் சந்திரனிருப்பன். போசன பரிமளம் வரும். திவுதிசையில் வித்தை நட னம் கேள்விப்படும். தெற்கு சுக்கிரனிருப்பன். ராசஸ்தானம் போகும். திவுதிசையில் காய் பழங்கள் வரும். நிருருதியில் அங்காரகனிருப்பான்.

* * * * * *

மேற்கு பிரகஸ்பதியிருப்பன். புது வஸ்திரம் வரும். திவுதிசையில் தூரத்திலேயிருந்து புதுவார்த்தை வரும். வாயு மூலையில் இந்திரன் இருப் பன். வஸ்திராபரணம் வரும். திவுதிசையில் பிரியமான பந்து ஜனங்கள் வரும். வடக்கே கேது இருப்பன். கேடு வார்த்தை சொல்லும். திவு திசையில் சண்டை வரும். ஈசானியத்தில் சனியிருப்பன். வெகு பயம் சொல்லும். திவுதிசையில் குரோதம் வரும். பாதாளத்திலே யமன் இருப் பன். போசனம் உண்டாகும். காய் பழங்கள் வரும். ஆகாயத்தில் சூரிய னிருப்பன். துக்க வார்த்தைகள் கேட்பார். சொல்லும் சனிக்கிழமை பலன் முற்றும்.

(கு. - பு.)—

இச்சிறுநூல், நிமித்த சாத்திர வகைகளில் ஒன்றாகும். இதில் கௌ ளியானது இன்னின்ன திசையில் கொட்டினால் அது கொண்டு இன்னின் ன சுபாசுப பலன்கள் உண்டாகும் என்று உணருமாற்றை நன்கு விளக்கி

யிருக்கிறது. ஞாயிறு முதலாய் சனியிறுதியான கிழமைகள் ஒவ்வொன்றிற் கும் பலன்கள் கூறப்பெற்றிருக்கின்றன. இப்பிரதியில் முற்றும் உளது. காதல் என்னுஞ் சொல்லுக்கு ஆந்தை, கௌளி இவை முதலியவற்றின் ஒலிக்கும் பொருள் கொள்ளுதல் வழக்காறு உண்மையின் கௌளி சொல் லென்று பொருள் கொள்க. "தும்மற்காதல்" என்று ஒருசொல் நூலா ரம்பத்துக் காணப்படுகின்றது. அதற்கேற்ப ஞாயிற்றுக்கிழமையின் "பலன் கூறுமிடத்து கிழக்கே கௌளி சொன்னாலும் தும்மினாலும் பயம்" என்ற விவ்வொரு தொடர்மொழி காணப்பெறுகின்றதே யல்லாமல் வேறு ஒன்றும் காணப்பெறவில்லை. ஆகவே, கௌளி சொல்லுக்குக் காட்டிய பலன்களே தும்மற் காதலுக்கும் கோடல் வேண்டும்போலும்.

No. 2297. தேரையர் கிஷாயத்திரட்டு.
TĒRAIYAR KIṢĀYATTIRAṬṬU.

Substance, palm-leaf. Size 14-2/8 × 1-6/16 inches. Pages, 36. Lines, 5–7 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance, old.

Begins on fol. 1-a. The other work herein is Vaidyattiraṭṭu Nāṟpatteṭṭu 19-a.

Complete.

Explains the method of preparation and uses of certain decoctions used in Indian Medicine.

By Tēraiyar.

Beginning :

தேரையர் அருளிச்செய்த கிஷாயம்.

புகலுஞ் சீந்தில் பற்படகம் பூசுஞ் சந்தமிலாமிச் சுந்
திகழும் வோர்க் கொம்பிருவேலி சித்தா முட்டியுடன் காசு
தகவே யொவ்வொன்ேறார் கழஞ்சு தண்ணீரிரு நாழியிலிட்டுச்
சுகமாய்க் காய்ச்சிக் குடிப்பீராய் சோரும் பித்த சுரந்தானே. (க)

End :

துத்தந் துருசு பாஷாண
மெத்திய கெந்தி மிருசவகையும்
பத்திய பாகற் சாற்றிலரைத்துத்
தித்திய மிளகளவுண்டைகள் செய்யே. (ரா)
சீதசுராங்கஞ் செப்பக்கேள்
ஓதிய கந்தியுயர்ரசம்வாளங்
கோதறு திரிகடு கடுகொடு சிவதை
மாதறு பாலில் மாத்திரை செய்யே. (ராக)

சிவமயம் சர்வதாரிஞூ சித்திரைமீ அ௳ முற்றும். தூஅ௱௨௰அஞூ ஏப்ரல்மீ ௰அ௳ சரஸ்வதிதுணை யுண்டாகவும்.

கபாலத்தில் சூலைக்குக் கண்டத்தில் இசுவுக்குத் தைலம். - நல்லெண்ணெய் படி (க) வெங்காயச்சாறு படி (ச). குத்துக்காசம் முட்டி பட்டையரைத்த விழுது (டலம்) (ம) மூன்றும் கலக்கி அடுப்பேற்றித் தைலமிறக்குகிற பதத்தில் சிறுபாலடையிலை (பலம்) (ரு) எண்ணெயில் போட்டு எரித்து வடித்துக்கொள்ளவும். தலை முழுகினதினம் பத்தியம் சலபுஷ்பம் புளியாகாது.

(கு. - பு.)—

இந்நூல் வைத்தியநூல்களைச் சார்ந்ததாய்த் "தேரையர்" என்னுஞ் சித்தர் பெரியாரால் இயற்றப்பெற்றது. (௱க) நூற்றுஒரு பாடல்களால் அமைந்திருக்கிறது. இதில் பலவகையான சுரங்கள் எல்லாவற்றையும் போக்கற்குரிய பலவித கிஷாயங்களையும் இறக்குமாற்றை நன்கு விளக்கியிருக்கின்றார். முற்றியபின்னர். கபாலசூலை கண்ட இசிவுகளுக்கு உரிய தைலவகையொன்று எழுதியுளது.

No. 2298. தேரையர் வைத்தியப்பாடற்றிரட்டு நாற்பத்தெட்டு.

TĒRAIYAR VAIDYAPPĀḌAṞṞIRAṬṬU NĀṞPATTEṬṬU.

Pages, 10. Lines, 7 on a page.

Begins on fol. 19-a. of the manuscript described under No. D. 2297.

Complete.

Contains certain recipes used by the *Siddha* School of Indian Medicine.

Beginning :

வைத்தியப்பாடற்றிரட்டு நாற்பத்தெட்டு :—

வாதந்தானெண்பதாகும் வருகின்ற பக்கவாதம்
சீதமே நடுக்குவாதஞ் சிறந்திடு முடக்குவாதம்
சூதமெய் சந்துவாதம் தோன்றிய முகத்தில் வாதம்
பேதமாம் வாதந்தீரப் பெருகிடு மருந்துகேளே. (க)

மருந்துதான் சித்திரமூலம் வளருமாவிலங்கை கொன்றை
திருந்திய முருங்கைசங்கு சிறந்த வெள்ளறுகு வேம்பு
பொருந்திய வெருக்குச்சுக்குப் புகலுந் திப்பிலிமரீசங்
கருநிறலவண மஞ்சுங்காயம் மண்டலந்தான் கொள்ளே. (உ)

End.

நயன ரோகத்துக்கு மருந்து :—

இந்த மாநீலகாச மியைந்திடும் பித்தகாசம்
மந்தமாம் படலம் புல்லம் மயிர்க்குத்துப் புழுவெட்டோடுஞ்
சந்திகாமாலைக் கண்ணுந்தளர் நேத்திர வாய்வுதானும்
நந்திசொல் விழியினுள்ளே நயன ரோகத்துக்கெல்லாம். (சக)

உரைத்திடு முத்துவெள்ளி யுயருந்தாம்மிரஞ்சுக்கோடு
கரைத்திடு துரிசு துத்தங்கலைத் தலையோடும் பொன்னும்
நரைத்திடும் பிதிரொணி நற்புங்கு நிம்பச்சாற்றால்
அரைத்திடக் கண்ணிற் றெண்ணூற்றுறுமே யகன்றுபோமே.

(சஎ)

போமிது பொன்னுங்காணி புகழ் சிறுகீரை முத்தம்
போமிது சீந்தில் நிம்பம் பொருவு சண்பகம் லவங்க
மாமிது மதுர மேலமடருஞ் செங்கழுநீர் கோஷ்டம்
நாமிது சொன்னேமெண்[ணே] (ணெய்) நற்பதஞ்செய்து மூழ்கே.

(சஅ)

(கு. - பு.)—

இந்நூல் வைத்திய சாத்திரத்தைச் சார்ந்ததாகும். ஆசிரியர் இன்னு ரென்று குறிக்கவில்லை யாயினும் மேல் நூலின் ஆசிரியரான தேரைய ரேயாயிருக்கலாமென்று தோற்றுகிறது. இதில் நாற்பத்தெட்டுப் பாடல் களைக்கொண்டு வாத ரோகங்கள் முதலாய் நேத்திர ரோகங்கள் காறும் உள்ள பல்வேறுவித நோய்களின் விவரங்களும், அவைகளைப் போக்கு தற்காம் பல்வேறுவகை நன்மருந்துகளின் முறைகளும் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. வைத்தியஞ் செய்கின்றார்க்கு இது மிகவும் உப யோகமாக விருக்கும் என்பதில் ஒரு சிறிதும் ஐயமின்று. இப்பிரதியில் நாற்பத்தெட்டு செய்யுட்களு மிருக்கின்றன.

No. 2299. கொக்கோகம் உரையுடன் (மதனநூல்).
KOKKŌKAM WITH COMMENTARY (MADANANŪL).

Substance, palm-leaf. Size, 14¾ × 1-2/8 inches. Pages, 32. Lines, 6 and 7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete. Contains Adhyāyas 6 and 7 only.

Same work as that described under Nos. 188, 439 (*b*) and 540 of the Triennial Catalogue of Tamil Mss. Vols. II, IV and V.

Beginning :

பொன்னி நாட்டு றைதரும் பூவைமார் சொலும்
நன்னய மொழிகளும் நயப்பில்நாடியே
பன்னிய புறத்தொழில் கலவி பன்னிய
பின்னரிற் கூடினுற் பெரிதுவப்பரே. (மரு)

என்பது, காவேரி சூழ்ந்த சோழதேசத்துப் பெண்கள் தாம் நல்லவசனம் பாராட்டி அங்குலி சுரதம் காமாயுத மதநாங்குசம் காமமர்த்தனம் கரிகர லீலையாகிய அகத்தொழில் தவிர்த்து, நிதம்பசும்பனம் நீக்கி மைத்த லீலைகளையெல்லாஞ்செய்து போகஞ்செய்யச் சந்தோஷமாவார்கள், என்ற வாறு. (மரு)

வேறு :—

தென்றிசை நாட்டுச் சேயிழை மடவார்
திரண்முலை யிறுகுறத்தழுவிக்
கன்றிட விதைய தாடனஞ்செய்து
கவரிதழ்ப்பற்படப்பருகி
யொன்றியவுகிரான் முலை வடுகாட்டி
யுயர் விரற் சும்பனவிதத்தாற்
றுன்றியே மதனத்திருநதி பெருக்கித்
தோய்ந்திடின் மகிழ்ந்து தோய்குவரால். (௰சு)

என்பது, தமிழ்நாடாகிய பாண்டியதேசத்துப் பெண்களை மார்புற வழுந்தக் கட்டியணைத்து மார்பின் நடுவே விடாமல் குட்டனம் தாடனம்செய்து அதரத்திற் பற்குறிகாட்டி முலைகளில் நகம் தைக்கவூன்றிக் குய்யத்திற் கரிகர லீலைசெய்து புளகித கம்பிதமாக்கிப் புணர்ச்சி செய்திடில் அவர் கணவனிடத்திலே வெகுப்பிரீதியாகிக் கலந்திருப்பார் என்றவாறு. (௰சு)

ஒட்டிய மருயு மங்கமென்றுரைக்கும்
ஒளிபெருந் தேயத்து மடவார்
மட்டறத் தழுவுஞ் சுரத சும்பனத்தால்
மருவுவரிலங்கையின் மடவார்
எட்டுடனுரைத்த புறத்தொழிற்கலவிக்
கிரக்கமாயிரவு நண்பகலும்
விட்டுயர் காமத்திருவிழா நடத்தி
யகத்தொழிற் கலவி வேட்டிருப்பார். (௰எ)

என்பது, ஒட்டிய தேயத்துப் பெண்கள், அநாயுமதேயத்துப் பெண்கள், அங்கதேயத்துப் பெண்கள், காசுமீர தேயத்துப் பெண்கள் இப்படிச் சொல்லப்பட்டப் பெண்கள் எல்லாம் மட்டில்லாத ஆலிங்கனம், சும்பனம் சுரதக்கலவியாகிய போகஞ்செய்யில் மிகவும் அவர்களுக்கு நன்மையாம். இலங்கைநாடாகிய அச்சிமலாக்காய் காலிகொம்பு கொட்டியாரம் மட்டக்குளம்பு திரிகோணமலை, கண்டி, சிங்களம், யாழ்ப்பாணம் முதலாகிய இலங்கை நாட்டுப் பெண்கள் எல்லாருக்கும் ஆலிங்கனம் தாடனம் சும்பனம் பற்குறி நகக்குறி அங்குலிசுரதம் லீலகதாடனம் சரசவிநோதம் ஆகிய இவ்வெட்டுவகைப் புறத்தொழிலுஞ்செய்து சம்போகஞ் செய்யில் மிகவுமிரங்கி இராத்திரியும் பகலும் காமத்திருநாள் நடத்தி விநோதார்த்தங்களாய் மிகவும் நாட்டமாய் வாழ்வார்கள் என்றவாறு. (௰எ)

* * * *

தேசக்கலவிக் கரணம் முற்றும்.

வேறு.

நாடு நாடுள்ள நங்கையர் வண்ணமும்
பீடு சார்ந்த கலவியும் பேசினோ
மாடவர்க்கு மரிவையர்க்குமணங்
கூடிடுஞ் சுரதாரம் பங்கூறுவாம் (உ௰)

என்பது, நாடு நாடாகிய ஐம்பத்தாறு நாட்டுத் தேசத்திலுண்டாகிய பெண்கள் தேசாசாரமும் அவர்கள் கலவி விருப்பமும் அவர்கள் சேர்ந்து கலந்திடுஞ் சுரதக் கலவி வகையும் நன்ருய் அறியும்படி சொன்னேம். இனி, அது நிற்க, முதற் பிரதமை யாரம்பமாகக்கூடும் நாயகிக்குச் சுரத வாரம்பமும் மற்றும் உள்ள நாயகிகள் சுரதாரம்பமும் நாயகன் நாயகிக்கும் அன்பு மாசையுமாகக்கூடும் சுரதாரம்பமும் ஆகிய இவையெல்லாம் சொல்வோம் என்றவாறு. (உ௰)

ஆறும் அத்தியாயம் முற்றும்.

ஆக விருத்தம் (௱எ௰கூ).

ஏழாம் அத்தியாயம். சுரதாரம்பம்.

திருவுங் கல்வியுஞ் செல்வமுஞ் செல்விசே
ருருவு நல்ல விளமையு மு[ற்றமம்] (த்யமம்)
தருவின் மிக்கக்கொடையி னற்றகுதியும்
பரவு முன்சொலுமிங்கிதப்பார்வையே. (க)

என்பது, இலக்ஷ்மீகரமும் அழகும் சகல கலைகளும் கல்வியும் மிகுந்த செல்வமும் முப்பத்திரண்டுறுப்புக் குறைவில்லாத சுந்தரமும் சரீர உதஸாஹ பலமும் சுகபோசனவாரோக்கியமும் கற்பகத்தருவைப் போலக் கொடுக்குங் கொடையும் இங்கிதமாகிய வசனமும் பிரியமான பார்வையும் உள்ளவனே காமுகக் காளையாகிய நாயகன் என்றவாறு. (க)

* * * *

End :

குன்றென வுயரிய கொங்கைமீதுற
வென்றிவேள் விசயங்கள் வெட்டலென்னவே
யொன்றிய பற்குறி யொழுங்கு பட்டிடிற்
பன்றியின் சுவை யெனப்பகரப்பட்டதே.

என்பது, குன்றுபோல் உயர்ந்த முலைத்தலைத்திலே வெற்றி வேளாகிய மன்மதன் விசயம் எழுதிக்கட்டிய மாலை மேலே கொடி பறக்கின்றதுபோலப் பிரகாசம் பொருந்திய பற்குறியின் பெயர் வராகசும்பனம் என்று சொல்லுவார். (சகூ)

இயல்பல விடுவிடு தூர்த்த வென்றிணை
கயல்புரி கண்ணினுர் கையிற் தள்ளியே
அயர்வுறு சீற்கார மரும்பச்செய்வடு
மயலுறு காமத்தை வளர்க்குந் தெய்வமே. (ரு௰.)

என்பது, நாயகி நாயகனைப் பார்த்து இப்படிச் செய்வது இயல்பல்லவே. பெண்கள் கண்டால் நகைப்பார்கள். விடு விடு விடடா விடடா தூர்த்தா விடடா தொகுத்து விடடா என்றுஞ் சுருக்குச் சுருக்கென்று தைக்கும் போதெல்லாம் ஈச்சுக்கொட்டித் தள்ளித்தள்ளிவிட இரண்டு சேல்கெண்டை போல கண்ணுள்ள நாயகிக்கு அமிருத தானங்களிலே வைத்த பற்குறி வடுக்கள் விகாரத்தை விளைவிக்குந் தெய்வமென்பது. (ரு௰)

ஆலிங்கனப் பெயர்கள், சும்பனப் பெயர்கள், நகக்குறியின் பெயர், தந்தக்குறியின் பெயர் இ[து]வை யெல்லாம் கிரந்த . . . .

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 188, 439 (b) (540)-ஆகிய இந்நம்பர் பிரதிகளில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் ஆறும் அத்தியாயத்தின் (15) பதினைந்தாவது செய்யுளிலிருந்து அது முழுமையும் ஏழாவது அத்தியாயமென்ற தலைப்பெயருடன் கூடிய "சுரதாரம்பம்" என்ற பகுதியும் உரையுடன் உள. ஏடுகள் சிதைந்திருக்கின்றன. உரை நடை நன்றாகவுளது. உரை ஆசிரியர் இன்னாரென்று விளங்கவில்லை. எழுத்துப்பிழைகளுள.

No. 2300. ஆரூட நவநீதம் உரையுடன்.
ARŪḌHANAVANĪTAM WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 8-14/16 × 1-2/8 inches. Pages, 160. Lines, 6 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

An elaborate treatise on the art of Divination and Augury with the help of the signs of the zodiac, the planetary positions and aspects, the five kinds of birds, the chirping, etc., of the house-lizard, human sneezing, etc.

Beginning :

கடவுள் துணை.

ஆரூடநவநீதம்.

இதில், இராசியாரூடம், கிரகாரூடம், ஆரூடச் சுருக்கம், ஆரூட சக்கிரம், பஞ்சபக்ஷிச் சுருக்கம், பல்லிநூற் சுருக்கம், தும்மற்காதல் இவைகள் அடங்கியிருக்கின்றன. இது, நாகப்பட்டினத்துச் சமீபம் வடக்குப் பொய்யூரென்று வழங்குகின்ற "பொய்கைநல்லூர்" சுப்பைய தேசிகரால் மொழி பெயர்த்தியற்றப்பெற்றது. சென்னைப்பட்டினம் கலி ரஞ்சனி அச்சுக்கூடத்தில் பதிப்பித்த புஸ்தகத்தை முருச்சாம்பேடு அப்பாவு உபாத்தியாயர் எழுதத் தொடங்கியது. தாதுவு தை மாதம் ஐந்தாம் தேதி.

சு. வைத்தியநாத தேசிகர் இயற்றிய சாற்றுக்கவி.

பதினாறு சீர் (16) ஆசிரிய விருத்தம்.

சீர் மருவு முலகில் வளமலிசோழ நாட்டினிற்
சிறந்திடும் நாகை நகரின்
றென்பால தாகும் **வடபொய்கைநல்லூர்**தனிற்
றேசிகரின் மரபில் வந்தோன்
செல்வத்தினுமிகுங் கல்வியே பொருளெனத்
தென்றமிழும் வடமொழிகளும்
தேர்ந்ததிற் சித்தாந்த வேதாந்த நிச்சயத்
திறமையுணர்கின்ற நிபுணன்
அருமை செறி பஞ்சாக்கரமனுவினெறிகொண்டு
வாகம விதிப்படிக்கு
அரிய மாணுக்கருக்குபதேச குருவாகு
மன்புருவமான சுகுணன்

அறிவினல் வைத்திய நூல்வழியதாகவே
அவிழ்த விதிகளு முணர்ந்தோன்
அதுவலது சோதிட நால்வகையுளின்னமு
மரும்பொருளுணர்ந்ததீரன்
சுருதிநெறி தவருத **சுப்பைய தேசிகன்**
சொற் பொருட் கடமை யுணர்ந்து
சுலபமா யாவர்க்கு நன்மை தீமைகளினது
சுபா சுப பலன்கள் விளங்க
சோதிட நால்வகையு ளாரூட நூல்களின்
சோதனை நிமித்த மாதி
துகளறு மாரூட நவநீத மெனுமதிற்
சொலு மிராசியாரூடமும்
பரிதி முதலாகிய கிரகத்தினரூடமும்
பண் பாரூடச் சுருக்கம்
பார்க்கு மாரூடத்தின் சக்கிரமுமிது வலாற்
பஞ்சபட்சியின் சுருக்கம்
பல்லி நூற்சுருக்கமும் தும்மலால் வருபயனும்
பார்த்தவர்கடாம் வியப்ப
பலருக்கு முபயோகமாகவே யச்சிற்
பதிப்பித்தனன் மகிழ்ந்தே. (க)

சுபநிமித்த விருத்தம்.

முடிமாலை சங்குகுடைவாசி வேழம்
முழவோசை செம்பொன் மணிதேர்
கொடி வீணைகன்னி மடவார்கள் பூர்ண
குடமாயுதங்கள் கவரி
கடி மேவினோர்கள் மது கோவிறைச்சி
கனி தீபம் வெண்ணெய் தயிர் பால்
இடர் தீரிரட்டை மறையோர்கள் மன்ன
ரெதிராகிலென்றுமினிதே. (க)

இதன்பொருள்.—மகுடம், பூமாலை, சங்கு, குடை, குதிரை, யானை, மங்களவாச்சியம், சுவர்ணம், இரத்தினம், தேர், கொடி, வீணுகானம், கன்னிகை, சுமங்கலி, நிறைகுடம், அரசர்கையிற் பிடிக்கும் ஆயுதம், சாமரம், மணம்புரிந்தோர்கள், மதுக்குடம், பசுமாடு, மாங்கிசம், பழவர்க்கம், தீபம், வெண்ணெய், தயிர், பால், சமாதான வார்த்தை, இரட்டை பிராம்மணர், அரசர்கள் இவைகள் எல்லாம் எதிர்வர சுபமுண்டாம்.

துர்நிமித்த விருத்தம்.

அரவம்பன்றி நாய்கழுதை யழுதல் கலகம் தலைவிரித்தோர்
சிரமுண்டி தரந்தகர் முடவர் சூளைவிறகு பிற சோறு
பரவுந்தவத்தோர் மாசடைந்தோர் பஞ்சோடெண்ணெய் மருந்த [ணலம்
நரிதோலு லெலும்பு நரை கண்டால் நன்மை சிறிதும்பெற
வரிதே. (உ)

இதன் பொருள்.—பாம்பு, பன்றி, கருநாய், கழுதை, அழுகுரல், கலகக்குரல், தலைமயிர் விரித்தோர், மொட்டைத்தலையர், குருடர், முடவர், குசப்பாண்டம், விறகுக்கட்டு, முதுகில்வரும் அன்னம், தபசிகள், அங்கவீனர், பஞ்சுப்பொதி, எண்ணெய்க்குடம், அவிழ்தவகை, அக்கினி, நரி, தோற்சுமை, எலும்பு, நரைத்தலையர் இவர்கள் எதிர்வரக் காரிய ஹானியாம். (உ)

விநாயகர் தரிசனம்.

மூஷிக வாஹனா, மோதக ஹஸ்த்தா,
சாமள ரூபா, மஹேஸ்வர புத்ரா.

கடவுள் துணை.

ஆரூடநவநீதம்.

விநாயகர் துதி.

சீர் சிறந்த திறைகடல் வைப்பினிற்
பார் விளங்கப் பலித்திடுஞ் சோதிடத்
தாருட நவநீத வரும்பொருட்
கார் நல்லியானை கழலிணை யேற்றுவாம். (க)

நவக்கிரக துதி.

சூரியபகவான் துதி.

திருவருள் சுரந்து மிக்க செகத்துயிரத்தனைக் காக்க
வருபிதாவாகித் துன்ப வல்லிருளதனை யோட்டி
மருவிய சுகத்தை நல்க வாயிரங்கதிர் பரப்பும்
குரவனும் பரிதிபுத்தேள் குரைகழற்றலைமேற்கொள்வாம். (க)

சந்திரபகவான் துதி.

செல்வமோ டின்ப நல்கிச் செகத்துள வுயிர்கட்கெல்லாம்
பல்கிடு மாதாவாகிப் பாயிருளதனை யோட்டிப்
புல்கியே யமுதமாகப் பொழிந்திடக் கதிர் பரப்பி
நல்கிய சோமனூர் தம் நற்பதந்தலைக்கொள்வோமே. (உ)

அங்காரகபகவான் துதி.

செயமொடு வீரமாண்மை தீரமாம் பராக்கிரமங்கள்
நயமுள வெற்றிநல்கி நட்பு சோதரனேயாகித்
தயவுடன் பூமியின் பந்தானியம் மிகவுமோங்கி
யுயர்வுசெய் சேயின்பாத மொளிமலர் தலைமேற்கொள்வாம். (ங)

* * * *

கேதுபகவான் துதி.

மாதுமைபாகன் சொற்ற வரத்தினாலமுதபானத்
தேது வுமுடையனாகி யெவ்வுயிர்களுந்தழைக்கக்
கோதிலா ஞானமோட்சங் குருபத்தியருளுநல்கும்
கேதுவாம் பகவான் பாதம் கிளர் முடிமிசைக்கொள்வோமே.

சிறப்புப்பாயிரம் ஆசிரியப்பா.

திருவருள் சிறந்த திரைகடல் வரைப்பி
னருள் வளர்ந் தொளிரு மாரண நான்குக்
கங்கமோராறுளமர்ந்த சோதிட நூல்
பங்கமில்* நான்கு பாகமாய்ப் பகுத்தது
ளாரூடந்தன்னை யாவருமெளிதிற்
றேறும்படியாய்த் தெளிவிக்கவேண்டி
ஞானப்பிரதீபிகையிலம்பாகமின்னு
மானநூற் பலவுளாராய்ந்தெடுத்து
மேல்வரும் பலனை விளக்கியே காட்டி
நால் வகையாக நவின்று **மாருட**
நவநீதமென்று நாமத்தை நிறீஇப்
புவனியில் விளங்கப் புகன்றுமே பஞ்ச
பட்சி நூற் சுருக்கமும் பல்லி நூற் சுருக்கமும்
தட்சணத்தும் மலாற் றுன் வருபலனும்
நன்றாய் விளங்க நற்பொருள் காட்டிக்
குன்றின்மேற்றீபமாய்க் கோதற வமைத்தனன்
நாகர்புரியெனு நன்னகர்த்தென் பாற்
பூகமார் பொழிற் சூழ்**பொய்கை நல்லூரி**
லந்தி வண்ணனுகமத்துரைத்திடுஞ்
சந்தான குரவர் தம்மிலொருவராய்
வருபரஞ்சோதியார் மரபில் வந்துதித்துக்
குருபரனைக் கோதிலாநெறி சேர்
வயித்தியலிங்க மாதவன் வரத்தால்
செயத்துடனளித்த திறமிகும் புதல்வன்
அம்பணிசடிலத்தரனடிக்கன்பு செய்
சுப்பைய தேசிக னெனுந்தூயோனே. (க)

* முகூர்த்தம், சாதகம், சிற்பம், ஆரூடம் எனும் இந்நான்குமெனப.

நூற்பெருமை.

ஆரூட நவநீதப் பலனை நன்றாயறிவதற்குத்தரைமெழுகிப் பீடம் [வைத்துச்
சீருடனே புத்தகத்தை யதன்மேல்வைத்துச் சிறந்த மலர்கொண்டு [நவக் கோடம்மைப்
பேர்பெறவே பூசித்துத் தூபதீபம்பேணி நிவேதனமுடனே [சொர்ண புஷ்பம்
நேருடனே தான் சாத்தித்தியானஞ்செய்து நினைத்தெடுத்துப் [பலாபலனை நிகழ்த்தவேண்டும். (உ)

நவக்கிரங்களுக்குமுரிய தானியம்.

கோதுமை செந்நெற்றுரை குறும்பயர் கடலை மொச்சை
தீதிலா வெள்ளுளுந்து செப்பிய கொள்ளோடொன்பான்
ஆதித்தன் முதலானோர்க்குமவ்வவர் வாரந்தன்னில்
நீதியாய்த் தானஞ்செய்ய நினைத்தவை பலிக்குமன்றே. (ங)

சொல்வோர் மகிமை.

ஆரூட நவநீதத்தின் அதன் பலனறிய வேண்டிற்
சூரியன் முதலாயுள்ளோர் துணைப்பதம் மனதிலோர்ந்து
பாரினிலலகைவைத்துப் பகுத்தெண்ணி யறிந்துபார்த்து
காரிய நன்மை தீமை கண்டுரை செய்வாய் நீயே. (ச)

இதுவும் அது.

சுத்தனுயிருந்து பாரிற் சோதிட வாரூடத்தா
னத்தியே வருவோர்க்கெல்லா நன்மை தீமைகளுரைத்துக்
குற்றமில்லாமலியாருங் கொடுத்திடும் பொருள் கைப்பற்றிச்
சத்தென யாருமேற்றத் தரணியில் வாழ்வாய் நீயே. (ரு)

கேட்போரியல்பு.

கருங்கடற் சூழ்ந்தவைப்புக் காசினி மாந்தர்க்கெல்லாம்
வருமின்பதுன்பமான வகைதனை யறியவேண்டி
பருதியாதிய நவக்கோள்பண்புணர்ந்தறி வோர்தம்மை
குரவராய் மனதிலெண்ணிக் கொண்டவரிடத்திற் சென்றே. (சு)

இதுவும் அது.

வெள்ளிலை யடைக்காயோடு விரும்பு தட்சிணையும் வைத்து
உள்ளுளே யிவர்தானந்த வுண்மைசொன்னவக்கோளென்று
கள்ளமிலாது கேட்கிற் கதிரவன் முதலாயுள்ள
வள்ளலோரருள் பெற்றோர்கள் வகுத்திட விளங்குமன்றே. (எ)

இராசியாரூடம் கலிவிருத்தம்

ஆரூடப்பலனி யாருமறிவதற்
காரூடமறுபான் மொழிக்காரிய
மாரூட நவநீதத்திராசியாம்
ஆரூடமிது யாவர்க்கு முண்மையே. (க)

முன்னின்றோர்கள் மொழியுமிலக்கத்தைப்
பன்னிரண்டினிற் பகுந்ததின் மிச்சத்தை
யுன்னி ராசியாய்க் கொன்றுக்கொருபத்தி
தன்னை நீக்கியதான் வரக்காண்பதே. (உ)

விபரம்.—அலகையள்ளி வைத்துப் பன்னிரண்டுக்கீந்த மிச்சம் இராயாம், அல்லது முன்னின்றார் சொன்ன[து] (தொ)கையைக்கேட்டுப் பன்னிரண்டிற் கீந்த மிச்சம் இராசியாம். அந்த இராசியைக்கண்டு இராசியொன்றுக்கு ஒரு பத்திவீதம் எண்ணிக்கண்ட பத்தியிலுதிக்கும் இராசியிற் பலன் அறிக.

இராசியாரூட அட்டவணை.

தேவாராதனைசெய்ய.	(க)	எண்ணிய கருமம்.	(ருசு)
ஆலயமெடுக்க.	(உ)	அகவிலை நிலை.	(ருஎ)
அபிடேகஞ்செய்ய.	(ங)	காலமறிதல்.	(ருஅ)
உற்சவஞ்செய்ய.	(ச)	வருஷ நிலை.	(ருகூ)
உபதேசங்கொள்ள.	(ரு)	எழும்பிய வர்க்கு.	(சுய)

* * * அட்டவணை முற்றும்,

தேவதாராதனைசெய்ய. முதலாவது.

மேடம்—தேவாராதனை செய்வதாற் சுபமே.
இடபம்—சுப்பையன்வாக்கு யெப்பவும் நிசமே.
மிதுனம்—வானம் வழங்கத்தான் வளம்பெருகும்.
கடகம்—காலமுஞ்செழித்து மேலாய்வளமுறும்.
சிம்மம்—தானியமெங்குமே நிறைவெய்தும்.
கன்னி—எண்ணிய கருமம் நண்ணிற் சுபமே.

* * * *

அறுபதாவது. எழும்பியவாக்கு.

மேடம்—வாக்கெழும்பியது பார்க்கவும் நிசமாம்.
இடபம்—பின்னுள் வானந் தன்னுற் பெய்யும்.
மிதுனம்—வகுத்த காலம் மிகத்துயராகிடும்.
கடகம்—எங்குந்தானியம் பொங்கும் விலையே.
சிங்கம்—இப்போதெண்ணம் பிற்பகல்பலிக்கும்.
கன்னி—காரியந்துவக்கிற் சாரியாய் வராது.
துலாம்—மருந்து கொள்ளத்திருந்துமுடலே.
விருச்சிகம்—எப்போதுற்ற நோயிப்போதீராது.
தனுசு—மருத்துவஞ்செய்யப் பெருத்திடு நோயே.
மகரம்—சேர்த்தமனிதனுல் வாய்த்திடுந்திருவே.
கும்பம்—நண்பனுலென்றுந் திண்பகை யிலையே.
மீனம்—தத்துக்கொள்ளினு முற்றதோசுகமே.

இராசியாரூடம் முற்றிற்று.

பஞ்சபட்சிச் சுருக்கம் வெண்பா :

வல்லூறிருபதமும் வளராந்தை தாளிணையும்
சொல்லரிய காகத்துணையடியும்—வல்லபமாங்
கோழி யிருசரணக் கோகனக மஞ்சை கழல்
வாழியென நெஞ்சே நீ வாழ்த்து. (க)

* * * * *

உன்னி யொருவனுரைத்த முதலெழுத்தைப்
பன்னிப்பறவைய தாய்ப்பாவித்து—வந்நேரம்
உத்த பறவைக் குணத்தை யோர்ந்து பலாபலனை
நித்தியமாய்ச் சொல்லு நிலை (உ)

* * * * *

பல்லி நூற்சுருக்கம் :

வல்லியுமை தனக்கு மகேசுவரனுர் தாமுரைத்த
பல்லி நூற் சூட்சம் பகரவே—நல்லவருள்
தந்தருளுஞ் செந்தமிழ்க்குகந்த பொருளுக்குதவி
தந்தருளுந்தந்தி முகன்ருள். (க)

* * * * *

இவ்விதமாய் அருக்க நிலையறிந்து கௌளி சொன்ன திசை
தொட்டுப் புதினுறு கோணமாக்கிப் பலன் சொல்லுவது.

* * * * *

தும்மற் காதல் :

மனிதர் கடும்மறனில் வருபலன் கட[னே] (மை)
வியந்துரைக்க விநாயகன் காப்பு

தும்மலுற்ற வாரத்தை கிழக்கே வைத்து
சூழ்வலமாய்ச் சனிக்கிழமை யீருயெண்ணி
சம்மதிச்சதிசை தொட்டுச் சனி மட்டெண்ணித்
தக்கதும்மற் பலனவற்றைச் சாற்றக் கேண்மின்
தம்மிலே கலகமொன்று விடாிரண்டு.
தகுதியுள்ளோர் வரு மூன்று அலைவு நான்கு
சும்மை நிதி வரவைந்து சுகந்தானுறு
துலையாத கலக மேழ்துன்ப மெட்டே. (க)

இதன் பொருள். தும்மிய வாரத்தைக் கிழக்கேவைத்து வலமாகச் சனி வரைக்கும் எண்ணி நிறுத்தி தும்மிய திக்கு முதல் சனி வரைக்கு மெண்ணிக்கண்டது பலன்.

* * * * *

முன்வலத்தும்மலின் மொய்த்த தீமையாம்
பின்னிடத்தும்மலிற்பெருக்க நன்மையாம்
மன்னிய தெற்கொடு வடக்கு வாயுவிற்
நுன்னியதும்மலாற் சுக முண்டாகுமே.

முற்றும்.

வீரிய புஷ்டிக்கு மருந்து:

நூறு வருஷத்திய வேப்பமரத்தினுடைய பட்டை சுமார் இரண்டு சேர் பொடி செய்து அதில் பசுவின் மோர் ஒரு படிவார்த்துப் பிறகுச் சீனு கற்கண்டு நாலு சேரும், சீரகம் இரண்டு சேரும் இதில் வேளைக்குப்பட்டை ஊறின மோரில் அரைபடி வார்த்து அதில் ஒரு சேர் கற்கண்டு அரை சேர் சீரகம் தூள் செய்து ஷ மோரில் போட்டுக்காலமே சாப்பிடவும். ச.சு. தினம்.

தாது புஷ்டிக்கு மருந்து :

மூன்று வருடத்திய வெல்லத்தில் இரஸ்தாளி வாழைப்பழமும் பசுவின் நெய்யும் கலந்து தினம் தினம் சாப்பிடவும். ஒரு பலம் வெல்லத்துக்கு இரண்டு வாழைப்பழமும் ஒன்றரைப்பலம் பசுவின் நெய்யும் சேர்த்துக் கொள்ளவும்.

(கு. - பு.)—

இந்நூல் சோதிடவகையில் ஒன்றான "ஆரூடம்" என்கிற சாத்திரத்தைச் சார்ந்ததாகும். நாகபட்டினத்துக்கருகாமையிலே பொய்யூரென்று வழங்கப்பெறும் "பொய்கைநல்லூர்" என்னும் ஊரிலே சிறப்புற்றிருந்த தேசிகர் மரபிலுதித்தார் "சுப்பைய தேசிகர்" என்னும் புலவரால் இயற்றப்பெற்றதாகும். இந்நூலாசிரியர்தம் பெருமையானது முதலிற் காணப்பெறும் ஓர் சாற்றுக் கவியான ஆசிரிய விருத்தப்பாவான் நன்கு உணர்த்தப்பட்டிருக்கிறது. இதிலே இராசியாரூடம், கிரகாரூடம், பஞ்சபட்சியாரூடம், பல்லிக்காதல், தும்மற்காதல் என்கிறவைகளாகிய பல பகுதிகள்

கொண்டு ஆரூடப் பலன்கள் வெண்மணெய் திரட்டினாற் போலச் செவ்வனே விளக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்நூற் பெயர் உவமவாகு பெயரா மெனக. இப்பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது. இந்நூல் ஏற்கனவே சென்னை மாநகரில் "கவிரஞ்சனீ" என்று அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பெற்றதென்றும், அதனை முருச்சாம்பேடு அப்பாவு உபாத்தியாயர் என்பவர் தாம் தாதுருஹூ தைமீ ரூஉ இவ்வோலையேட்டகத்தில் எழுதிவைத்தார் என்னுமதாய இச் செய்திக் குறிப்பும் முதலேட்டில் குறித்துவைக்கப் பெற்றுள்ளது. இதுமுடிந்தபின்னர் வீரிய புஷ்டிக்கு ஓர் மருந்து முறையும், தாது புஷ்டிக்காம் ஒரு மருந்து முறையும் எழுதப் பெற்றிருக் கின்றன. ஏடுகளும் அங்கங்கே ஒரு சிறிது சிதலுற்றிருக்கின்றன. அங் கங்கே எழுத்துப்பிழைகளும், சில சொற்பிழைகளும் காணப்பெறுகின் றன.

No. 2301. பாண சாத்திரம் நூறு.

BĀṆA ŚĀTTIRAM NŪṚU.

Substance, palm-leaf. Size, 13 10/16 × 1⅝ inches. Pages, 52. Lines, 5 on page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete.

A treatise, in verse, on the making of various kinds of fire—works. Attributed to Bhōgar.

Beginning :

போகர் பாண சாஸ்திரம். பூவர்த்தி.

சொல்லரிய வல்லபைதன் பாதத்தானை
 துதித்துமே சுத்தன் திரி . . . . . .
. . . . ளுப்புப்பலமே நாலு
நலமான கெந்தக மோர் பலமே யொன்று
. . . . . ன்று காணுதிம் மூன்றுங் கண்மைபோலாட்டிச்
சொல்லரியக . . . . .
 சொருகியே யடைத்திட்டுச் சொரூபம்பாரே. (க)

பாரப்பாபூவர்த்தி . . . .
. . . . . . ளுப்புப்பலமேயாறு.
சீரப்பா கெந்தக மொன்றரைப்பலந்த . . . . . .
. . . . ல்.
மூரப்பா மூன்றையுமேயரைத்துமைபோல்
மூனை தண்டவாளப் பொடியொன்றரையே . . . . .
. . . . ளேதான்
கடாவிக் கொளித்திடவு திரும்பூவும் பாரே (உ)

பூவுதிரப்புருசுப்பண்ற புதுமைகேளு
புகழான . . . .
மேவு திருங் கெந்தியதுப் பலமேயொன்று
மென்மையாம் கள்ளிக்கரியது வொன்றுய்த்
தாவுதிரும் . . . .
தண்டவாளப்போடியொன்றே முக்கால் சேர்த்து
மாவு திருமண் குழாய்க்குள்ளே கெட்டித்து
மணத . . . .

* * * * *

தருகுமே யாகாசப்பாணம் பண்ணத்
தரைதனிலே பிறக்கு முப்புத்தானே பலமே
மருகுமே மகத்தான கெந்தியொன்று
மானிலத்திற் கள்ளி சுட்ட கரிதானிரண்டு
வருகுமேவகை மூன்றும் அரைத்துமைபோல்
வகையாக மூங்கிற்குழற்குட்கிட்டித்து
மருகுமே மணத மிருகீழ் மேலிட்டு
மடங்காமல் எழும்பிட வாலநாலுக் கொன்றே. (அ)

ஒன்றுகக் கதலியினுர் தன்னுற் சுற்றி
யுறுதிபெற வன்னத்தையரைத்துப்பூசி
நன்றுகச் சரவர்த்தி குழாய்க்குள் வைத்து
நலமாகக் கொளுத்திவிடவெழும்பும்பாரு
சென்றுகும் வெடிமருந்து அடியில் வைத்து
செகமறிய வந்தரத்தில் வெடிக்கும்பாரு
நன்றுகு மத்தாப்புச்சா மருந்து வைத்தால்
நல்வெளிச்சம் பொரி பறக்கும் நவிலக்கேளே. (கூ)

End :

சூ [ஷ்ஷ] (ட்ச)ம்பார் பூவர்த்தி சொல்லக்கேளு
சுப்பிரமங்கம்பி உப்புப் பதினேஞ்சாகும்
நா [ஷ்ஷ] (ட்ச)ம்பார் கெந்தி யொன்று காரியொன்றே கால்
நன்றுக வரைத்துமே நளினமாகத்
தா [ஷ்ஷ] (ட்ச) ம்பார் தண்டவாளம் நாலொக்கொன்று
தப்பாமல் பொடித்து மே தானே சேர்த்து
ஆ [ஷ்ஷ] (ட்ச) ம்பார் கடு தாசிக் குழைக்குள்ளிட்டால்
அகலாத பூவர்த்திப் பாரும்பாரே (௰)

பாரப்பா வின்னும் பூவர்த்திகேளு
பக்குவமா முப்பெட்டுக்கெந்தியொன்று
ஆரப்பா கரியொன்று மூன்று மொன்றுய்
அரைத்திடுவாய்மைபோலே யகலவே தான்
சேரப்பா அரப்பொடி நாலுக்கொன்று சேர்த்துச்
செகமறியப்பிசிறியே சேர்த்துவிட்டாற்
பூராப்பா பூவர்த்தியாகும்பாரு
பூப்போலே யுதிருமென்று புகலினுரே (௰க)

புகலேினோம் பாணவித்தைப் புதுமை செய்யப்
புலவோர்களிதைப் பார்த்துப் பொறுத்துக்கொள்ள
நல்கினோம் நன்றாக வணக்கஞ் செய்து
நகையாமற் பிழைபொறுத்து நாயேன் மீதிற்
சொல்லினோமிம் முறையே பிரகாசமாகச் . . .
சூ [ஷ்ஷ] (ட்ச) முள்ள பெரியோர்கள் தயை செய்வார்கள்
பல்கினோம் பாண புத்தகமே யொன்று
பாடினோம் பாட்டு நூற்றிரண்டுமாமே . . . (௱௨)

(1) அரப்பொடியென்று சொல்லப்பட்டதெல்லாம்
தண்டவாளப் பொடி என்று அறிந்து கொள்ளவும்.
(2) கரியென்றதெல்லாம் கள்ளிக்கரி யென்றும் அறி
ந்து கொள்ளவும். மடப்பளி பகவதி சகாயம்.

(கு. - பு.)—

இந்நூல் பலவகையான பாணங்களைத் தயாரிக்கு மாற்றைச் செய்யுள் வகையான் உணர்த்துகின்றது. இதில் அநேகவிதமான பூவர்த்திகள், பலவகையான புருசுகள், மத்தாப்புக்கள் நட்சத்திர பாணங்கள், சக்கிர வாணங்கள், ஆகாச பாணங்கள், நக்ஷத்திரமாலை புருசுகள், மரம், சாமரம் முதலியவைகள் போன்று விசித்திரமாய்க் கிளம்பியெரியும் புருசுகள் இன்னும் இன்னோரன்ன பலவகையான பாணம் முதலியனவற்றைச் சுலபமாகத் தயாரிக்கும் முறைகள் பல நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. போகர் இயற்றியதாகவுள்ளது. நூற்று ஒரு செய்யுட்களான் அமைந்துளது. மிக வருமையானது. இறுதியில் இந்நூலின் மொத்த எண்ணைத் தெரிக்குஞ் செய்யுள் ஒன்று ௱௨ ஆஞ் செய்யுளாகவுளது. முதலிலே சில ஏடுகள் அடியோடு மிகவும் முறிந்தும் அங்கங்கே பல ஏடுகள் சிதைந்துமிருக்கின்றன. எழுத்துப்பிழைகள் காணப்படுகின்றன.

No. 2302. திருவரங்கப் பதிற்றுப்பத்தந்தாதி.
TIRUVARAṄGAPPADIṞṞUPPATTANTĀDI.

Substance, palm-leaf. Size, 10-9/16 × 1 inches. Pages, 104. Lines, 4 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

This is a work in 100 stanzas in praise of Śri Raṅganātha, as worshipped in the temple at Śrīraṅgam. The name of the author is Vēṅkaṭācala-dāsa.

Beginning :

திருவரங்கர்பதிற்றுப்பத்தந்தாதி.

ஆழ்வார் வணக்கம் : காப்பு.

தென்பாற்சிறந்தொளிர் சீரரங்கேசர் திருவடிமே
லன்பாற் பதிற்றுப்பத்தந்தாதி சூட்டியருள் பெறநாந்
தன்பாற்கருணை பெருகி மறைத்தமிழ் தந்துலகை
நன் பாற்பொருத்திய மாறன் பதாம்புய [திருவடி] நாடுதுமே.

எம்பெருமானுர் வணக்கம்.

வாதாம் பற்பல சமைய மயக்கிருடீர்ந்துர்களுய்ய வந்து தோன்றிச்
சாதாந்தற் கருத்திரங்கிச் சந்தேயி விபரீதந்தலே சாய்ந்தோட
வேதாந்தப் பழம் பொருளாம் விசிட்டாத்து விதப்பொருளை
விளக்கியாண்ட
போதாந்தத் தொளிர் பூதூ ரெதிராசன்றிரு
வடிகள் போற்றல் செய்வாம். (உ)

ஆசிரியன் வணக்கம்—வெண்பா :

ஓதித்தொழுது மேலுள்ளமே நாரணனை
ஆதிக்குரவரருள் பெறுதும்—நீதித்
தருமந்திர மருவுந் தன்னருளாலுண்மைத்
திருமந்திர மளித்தான் சீர் (ரு)

நூல் :

உலகமெங்கு நிறைந்த பரப்பிரமமாகி
யொளிர் திருநாராயணவென்றுயர் நால்வேதம்
பலகலை [நூல்] (தேர)யனரன் வானவருமேத்தப்
பதின்மரொடு பாகவதர் பணிந்து போற்ற
லெலகில் புகழார்ந்த திருவரங்க மேவி
யனந்தன் மேற் கண்வளரு மாதி மூர்த்தி
இலகிய நின்றிரு வடியே சரணம்புக்க
வெளியேனையருள் புரிந்தாளெம்பிரானே (க)

எம்பிரா னெவ்வுயிர்க்கு முயிராமீசன்
இந்திரன் சந்திரமவுலி யிறையோன் வேதன்
நம்பிரானென்று பணிந்தேத்த நாளு
நயந்தருளு நளினமலர் மங்கைநாதன்
வெம்பிராவணனையுயிர் வீட்டிமேனுள்
வீடணனுக்கருளரங்கவி மானமேய
தம்பிரான்றிருவடியாரடியார் பாத
தாமரையேதலைக்கணியாந்தமியனேற்கே || உ ||

* * * * * *

ஒன்றுகிப் பலவாகி யாவுமாகி
யொன்று பல வன்றுகி யாவுமின்றி
நின்றுய் நீயென்றுணர்த்துமல்லால் வேதம்
நின்னிலைமையுள்ளபடி யின்னுந்தேரா
தென்றுலிங்கியாவரஃதறியவல்லார்
எம்பெருமானெழிலரங்கத் தெந்தாயுன்றன்
குன்றுலன்றுனிரை காத்திலங்கை வென்ற
குடக்கடலிற் குடைந்தாடிக்குளிக்கின்றுேமே

(அ)

End :

நவில்வ வெலா நின்கிளவி நடிப்பவெலா
நின்செயலே நனவிற்றேன்றுந்
துவிதமெலா நின்னினைவின் சூட்சியன்றே
சுதந்தரமென் றெழும்பனேற்கு
புவிமுதலாயாவு நீ பொருந்துயிர்கள்
பாவைகளுன் புணர்ப்பினுடிக்
குவிவவெலா நின்னுள்ளே யாதலினுற்
திருவரங்கக் கோயுட்டேவே. (௯௯)

தேவரெலாந்தொழுதேத்துந்திருவரங்கக்
கோயில் வளர் தேவ தேவன்
காவலெலாமி யாவருக்கு மாயினு
னடியேற்குக் கதியுமானுன்
மூவரெலா முடையவரென்பாரவரு
ளிவனே மெய்முதல் வனுனு
னேவலிலா முத்தொழிற்கு மொரு மூர்த்தி
யுளனுனுலதந்தானே. (௱)

Colophon :

பிறங்குலக மிசையோங்கு பெருவீடாந்
திருவரங்கம் பெரிய கோயில்
அறங்குலவ வருள்புரியு மழகிய நம்
பெருமாள் பொன்னடி மேலன்பின்
நிறங்குலவு பதிற்றுப்பத்தந் தாதித்
தமிழ் மாலை நிலவமென்மை
திறங்குலவு குணநேசன் வேங்கடா
சலதாசன் சேய்தான் மாதோ (௱௧)

(கு. - பு.)—

இந்நூல், திருவரங்கம் பெரிய கோயிலிற் கோயிற் கொண்டெழுந்தருளி யிருக்கும் திருவரங்கநாதனென்னுந் திருமாலின்மீது துதிரூபமாய் அந்தாதித்தொடையான் அமைந்த நூறு செய்யுட்களாலாகிய தொரு பிரபந்தவிசேடமாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றுமுள்ளது. இந்நூலாசிரியர் "வேங்கடாசலதாசன்" என்னும் பெரும் புலவராவாரென்று இறுதியேட்டிற்காணும் நூற்றோராவது செய்யுளால் தெரிகின்றது. செய்யுள் நடை நன்றாகவுளது. அச்சு இயற்றியதாகத் தெரியவில்லை. நூலாரம்பத்தில் ஆழ்வார் வணக்கம், எம்பெருமானுர் வணக்கம், மந்திர குருவணக்கம் ஆகிய இவற்றைத் தெரிக்கும் மூன்று செய்யுட்களுமிருக்கின்றன. ஏடுகள் மிகச்சிதலுற்றிருக்கின்றன.

No. 2303. அகத்தியர் ரஸவாத சூத்திரம் எட்டு.

AKATTIYAR RASAVĀDASŪTTITRAM EṬṬU.

Substance, palm-leaf. Size, $8\frac{1}{2} \times 1$ and $9\text{-}6/16 \times 1\frac{2}{8}$ inches. Pages, 6. Lines, 6–9 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Begins on fol. 1-a., The other works herein are Akattiyarsūttirampadimūnṛu, 4-a. Do sūttirampadinā ṛu, 10-a. Ḍamarānandarsūttiram, 17-a. Akattiyar sūttiram padineṭṭu, 24-a. Maccamunisūttiram, 31-a. Akattiyar pakṣiṇi, 43-a. Do Daṇḍakam, 59-a. Ābhicārika prayōgamuṟai with commentary 74 a.

Same work as that described under No. R. 238 (*d*) of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. II.

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக்காடலாக்கில் 238 (d) நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூலின் எட்டுச்செய்யுளுமிருக்கின்றன. ஏடுகள் சிதலுற்றிருக்கின்றன. இதற்கு " அகத்தியர் சுருக்கம் எட்டு " என்று மற்ருெரு பெயரும் உண்டு. இரஸவாத விஷயமானது.

No. 2304. அகத்தியர் சூத்திரம் பதின்மூன்று.
AKATTIYARSŪTTIRAM PADINMŪNṚU.

Pages, 11. Lines, 6 on a page.

Begins on fol. 4-a-of the Ms. described under No. D. 230?.

Complete.

Thirteen verses, on Alchemy and Yôga, attributed to Akattiyar, and said to be a summary of 1,200 verses on the same subject by the same author.

Beginning :

அகத்தீசுவரர் ஆயிரத்திருநூற்றுக்குச் சுருக்கம் பதின்மூன்று.

ஆதியென்றும் பூரணத்தாய் அருளைப்பற்றி
அறைகிறேனுயிரத்திருநூற்றுள்ளே
சோதியென்று வாதத்துடன் சூட்சமந்தன்னை
சுருக்கமுடன் பதின்மூன்றிற்குருவைச் சொல்வேன்
பேதியிலே பேதியப்பா சத்தபேதி
பெருமையினை மாணுக்கர் பேசக்கேளு
சாதியிலே வாதமது அஞ்சுமாச்சு
சாற்றுகிறேன் வெளியாகச் சாற்றக்கேளே. (க)

சாற்றுகிறேன் உலகுக்குப்பத்து மட்டுஞ்
சதிரான பெரியோர்க்கு அறுபத்துநாலு
போற்றுகிறேன் சித்தருக்குத் தொண்ணுற்ருறு
புகழான விருடிகட்கு நூறுமாகும்
மாற்றுகிறேன் ஞானிகட்கு ஆயிரந்தானுகும்
மைந்தனே சொல்லிவிட்டேன் ஆருஞ்சொல்லார்
தேற்றுகிறேன் இப்படியே வாதமாச்சு
செகச்சால குருவிடத்திற்றேறக்கேளே. (உ)

கேளப்பா ரேசகத்திற் பழக்கம்பண்ணு
    கெட்டியான பூரகத்தி லமர்ந்து வாங்கு
மூளப்பா கும்பகத்தில் அங்கென்றூனு
    முனையான சுழினைபற்றி முட்டிப்பாரு
நீளப்பா மனோன்மணியையகண்டத்தூனு
    நிலமான வாசியினையிலைதிரியேத்து ?
வாளப்பா தன்மய மாஞ்சோதி கண்டால்
    வாமெல்லாமுந்தனுக்குச் சித்தியாச்சே (௩)

* * * *

ஆகுமென்ற கெந்தியொன்று பூரமொன்று
    அழகான வீரமொன்று கெவுரியொன்று
வேகமென்ற சூதமொன்று பச்சையொன்று
    விதமான சரியிடையே பதங்கமேற்று
போகமென்ற வாலுகையின் நீரை வாங்கிப்
    புகழாகத் துருசதுக் குச்சுருக்கையேற்று
மாகமென்ற செம்பு வெள்ளி ரெண்டிற்குக்கும்
    மகத்தான வாதமெல்லாம் மலைபோலாமே (௫)

* * * * * *
* * * * * *

End :

பேச்சென்ற மவுனசத்தி யொளியுங்கண்டு
    பெற்றதல்லோ பேரென்று பேசினார்கள்
காச்சென்று அறுவரையுங் கண்டமூர்த்திக்
    கனம் விட்டு இறங்கியல்லோ கொங்கணன்ரக் கேட்டார்
ஆச்சென்ற மவுனியல்லோ இறங்கிவந்தார்
    அப்பவுமே மவுனியென்று அறியமாட்டார்
கோச்சென்ற மவுனத்தைத் தெளிந்த பேர்கள்
    கோசிவனே யானுக்காற்றேர்ந்து பாரே (௰௨)
பாங்கான மனோன்மணியின் சோதி கண்டாற்
    பலபலவாம் வாதமெல்லா மவர்க்கேசித்தி
தூங்காமலாடற்றிற்றூங்கு தூங்கு
    சொட்டர்களே மாய்கை வந்து கொல்லும்பாரு
தேங்காமன் மவுனத்தினீரியேத்தித்
    தெண்டிரையிற் சஞ்சார மாதிமேவிப்
பூங்காகும் மதமடக்கியஞ்சும் போக்கிப்
    பூலோக ஞானியென்று வாழ்வார் முற்றே.

அகத்தியர் சூத்திரம் பதின்மூன்று.

(கு. - பு.)—

இந்நூல், அகத்தியர் தாம் இயற்றிப்போந்த ஆயிரத்திருநூறு பாடல்கள் கொண்டுள்ள நூலொன்றுக்குச் சுருக்கமாகப் பதின்மூன்று பாடல்களால் அமைந்துள்ளது. இதுவும் அகத்தியராலேயே இயற்றப் பெற்றதாகும். இச்செய்தியினை இதில் முதற்பாடலிலே ஆசிரியர் உணர்த்தியிருக்கின்றார். இப்பிரதியில் இந்நூல் பாடல்கள் முற்றுமிருக்கின்றன. எழுத்துப் பிழையுள. இரஸவாத விஷயமாகவுள்ளது.

No. 2305. அகத்தியர் முப்பூ பதினாறு.
AKATTIYAR MUPPŪ PADINĀṞU.

Pages, 14. Lines, 6 on a page.

Begins on fol. 10-a of the Ms. described under No. D. 2303.

Complete.

Same work as that described under No. R. 168 (e) of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. II.

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 168 (e) நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது. இறுதியில், வேறு : " பாரிந்த நூலைப் பகர்ந்தாலெழுநரகம், பாரிந்த நூலைப்பண்பதாய்ப்பூசிப் பாய், பாரிந்த நூலைப்பதினாறு சுருக்கமென்று, பாரிந்த. " . . . ." என்றதாய் ஓர் பாடல் அரைகுறையாய்க் காணப்படுகிறது.

No. 2306. இடமரானந்தர் சூத்திரம் பதினாறு.
IḌAMARĀNANDAR SŪTTIRAM PADINĀṞU.

Pages, 14. Line, 6 in a page.

Begins on fol. 17-a of the Ms. described under No. D. 2303.

Complete.

Same work as that described under No. 267 (j) of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. II.

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக்காடலாக்கு 267 (j) நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூலின் பதினாறு பாடல்களுமிருக்கின் றன. இப்பிரதியில் முதற் டாடலின் ஈற்றடியில் " ஞானந்தம் பேசி வைத்தேன் **எழுவத்தஞ்சில்,** *நலமான வாதவித்தை நவிலுவேனே " என் றிருப்பது அப்பிரதியில் " ஞானந்தம் பேசி வைத்தேனெழு* **நூற்றஞ் சில்,** *நலமான வாதவித்தை நவிலுவேனே " என்றதாயிருக்கிறது. இவ்வாறே எல்லாப்பாடல்களிலுமே அநேகமாகப் பாட பேதங்கள் காணப் படுகின்றன. எழுத்துப்பிழைகளிருக்கின்றன.*

No. 2307. அகத்தியர் சூத்திரம் பதினெட்டு.
AKATTIYAR SŪTTIRAM PADINEṬṬU.

Pages, 13. Lines, 6 on a page.

Begins on fol. 24-a of the Ms. described under No. D. 2303.

Complete.

A treatise on *Yōga*, on the *Siddhis* to be attained by *Yōga* and on Alchemy. The author claims that this work contains rare and valuable information.

Beginning :

அகத்தியர் சுருக்கம் பதினெட்டு.

பாரப்பா ரவிமதியு மொட்டிப்பாரு
பார்க்கையிலே யிருவழியும் ஒன்றுய்ப்பாரு
நேரப்பா கண் முன்னே நிறுத்திணுக்கால்
நெற்றியிலே கருணை நதி நெருங்கியூறுங்
காரப்பா அவ்விடத்தை நித்தம் நித்தம்
கண்ணேட்டம் பார்த்தல்லோ கருதிப்பார்த்து
ஊரப்பா வருடமொன்று நாட்டமாணுல்
உன்முகந்தான் ஒளியாலே யுற்றுக்காணே. (க)

காணவேயின்னு மொரு கருவைக்கேளு
கதிரவன்றனுதிக்கு முன்னே கதிரைப்பாரு
ஊணவே சுழிதனிலே யுற்றுப்பாரு
உரைப்பான சுரூபமது வொளியாய்க்காணும்
நாணவே நான் சொன்னபடியே நாட்ட
நகாரமது நயனமதில் நாடி நிற்கும்
பூணவே மூன்றெழுத்தும் புருவமய்யம்
பொருளாக வைத்துமுனே பூசை பண்ணே: (உ)

பண்ணப்பா சிவயோக சமாதி நிட்டை
பரிவாக விருநேரம் பாங்காய் நீயும்
கண்ணப்பா சிமிட்டாதே தன்னைப்பார்த்து
கண்டுகொள்ளவேண்டுமென்று கருத்தைநாட்டி
நண்ணப்பா பஞ்சகற்பஞ் சிறசிற்போடு
நன்மையுடன் ஒருபோது திறமாய்க்கொள்ளு
திண்ணப்பா வொருபோது வமுதுகொண்டால்
திசைநாடி பத்துமொன்றுய்ச் சேருந்தானே. (ந)

தானே தான் தனித்திருந்து பாரு பாரு
சங்கல்பம் விகல்பம் ரெண்டுந்தள்ளி நீயும்
ஊனேடேயுயிராக வுறவேயாகி
உள்ளாடி நின்ற சிவன்றன்னைப்பார்த்து
ஆணேடே பெண்ணிரண்டு மொன்றுய் நின்ற
அடிமுடியும் நடுவாகி யமர்ந்து நிற்கும்
மானேடு மழுவேந்திக் கருவும் போத்தி
மந்திரமாம் வாசிதனில் வாழுவாரே. (ச)

வாராக வின்னமொரு வரிசை கேளும்
வன்மையுட னுறங்கவென்றல் வன்மை சொல்வேன்
நேராகக் கால் நீட்டி வலக்கை மேலாய்
நெறிதவருப் பூரணத்தை நினைந்து நீயும்
பாராமல் நீயுறங்கும் போதுதானே
பற்றி நின்ற மனமங்கே பாய்ந்து நிற்குங்
காராமற் காண்பதற்குக்காணெண்ணுது
கண்டவர்க்கிந்நூறுன் முத்தியென்னே (ரு)

முத்தியிது மோட்சமிது வொன்ருய்ப்பார்த்து
முக்கியமிது ஒருவருக்குஞ் சொல்லொண்ணுது
சத்தியது சம்புவிது சராசரமுமிது வாஞ்
சத்தி வித்தை. சதாசிவனுந்தானே தோன்றும் . . .
பத்திமுத்தி காண்பதற்கு மூலமேவிப் . . . . .
பார்த்தவர்கள் கெதியடைவார் பார்க்கார்க்கில்லை
சத்தி நடுவொ. . . . .

* * * * * *

சும்மா நீ பார்க்கையிலே மனத்தையங்கே
சுழிமுனையிலொட்டியங்கே காலைப்பாரு
அம்மா நீதேவியென்று அடங்கிப்பாரு
அப்போவல்லோ காயசித்தி யோகசித்தி
அம்மாளு மப்பாவு மதிலே காணும்
ஒரு மனதாய்ச்சுழி முனையில் மனத்தையூன்று
நம்மாலே யானதெல்லாஞ் சொன்னேமப்பா
நாதாக்களித்தை யெல்லாம் பாடார் காணேன். (௪)

காணுகின்ற வோங்காரம் வட்டஞ்சுற்றி [ம] (க்)
கனலெழும்பிக்கண்ணிலே கடுப்புத்தோன்றும்
பூணுகின்ற இடகலையிற் பம்பரம்போலாடும்
பொல்லாத தேகமெல்லாம் இறுகிக்காணும்
ஆணுவங்களானதெல்லாமொழிந்து போகும்
அஞ்சுவிதம் பொறிவழியே யடியினிற்கும்
ஊணுகின்ற வெழுத்தெல்லாந் தேவியாகும்
ஓங்காரக்கம்பமென்ற வுண்மைதானே. (௫)

* * * * * *

End :

ஆமிந்த வுறுதி சொல்லார் சித்தரெல்லாம்
ஆதிதொடுத்தந்தவரை யழகாய்ச் சொன்னேன்
ஓமிந்த வென்னுடைய சுருக்கம்போலே
யொருவருந்தான் உரைக்கவில்லை யுறுதிமெத்த
நாமென்று சிவசாபந்தீர்த்தேனப்பா
நாட்டிலுள்ளோர் எல்லோரும் பிழைக்கவேண்டி
தாமதங்களில்லாமல் தன்னைக்கார்த்துச்
சரயோகஞ் செய்தவனே தலைவனுமே (௰௬)
தலைவனுயிருப்பதற்கு வாதசித்தி
சாராமலிருந்து விட்டால் தவம் மெய்யாமோ
கலைவகுத்து வாசிகண்டு வழலைமார்க்கங்
கண்டவர்கள் நாதவிந்து காணலாகும்.
அலைதனிலே யொதுங்குமுப்பு அண்டபிண்டம்
அமர்ந்து நிற்கும் எழுபிறவி யானவாறே
உலைதனிலே யெழுகாய்ச்சல் கம்பியுப்பு
உண்மைதனையறியார்க்கு வாதமாமே (௰௭)

ஆமென்று வாதத்தின் கருவையெல்லாம்
அம்பதிலே சொல்லிவிட்டேனிலயவேண்டாம்
வாமென்ற வாதவித்தை வயித்தியமுஞ் சொன்னேன்

. . . .

. . . . . தானறும்மலையாமல் தன்னைக்கண்டு
தயங்காமல் மயங்காமல் தலைவணுகி
. . ஏமமென்று திரிந்தாலே வாதமாமோ . .
எழுபிறைப்பையறிந்து இனியியம்புவாயே. (ய௮)

முற்றும்.

(கு. - பு.)—

இந்நூல் அகத்தியரால் இயற்றப்பெற்றது. பதினெட்டுச் செய்யுட்களாலாகியது. இதில் முற்றுமுளது. இந்நூலில் யோகாப்பியாசமுறைமையினையும் அதன் வாயிலாகச் சகல சித்தியும் பெறுமாற்றைத் தெரிவிக்கின்றது. இரஸவாத விஷயமும் நுதலப்பெற்றுள்ளது. இதனை மிக வருமையான நூலென்று ஆசிரியர் தாமே புகழ்ந்து கூறியிருக்கின்றார். எழுத்துப் பிழையுடன் காணப்படுகின்றது. சில பாட்டுக்களில் இரண்டொரு அடிகளில்லாமலிருக்கின்றன.

No. 2308, மச்சமுனி சூத்திரம். MACCAMUNI SŪTTIRAM.

Pages, 22. Lines, 9 on a page.

Begins on fol. 31-a of the MS. described under No. D-2303

Complete.

This is a summary, in verse, by Maccamunivar, of his own treatise, entitled *Maccamunivar Perunūl Eṇṇūṟu*, and dealing with Alchemy and Medicine.

Beginning :

மச்சமுனி சூத்திரம்.

நடுமெய்யகாரவகாரத்திரயமே சொல்
கட விகடத்தானே முகன் காப்பாம்—திடமான
சாரத்துறையுஞ் தனிச்சூடன் தண்ணீருங்
காரத்துறை கனகங்காண். (க)

பொன்னணிமூலர் போக்கிரச வாதம்
நன்னயமாக நாட்டினுன் பாட்டன்
கன்னியினுண்ட சவுக்கார மன்றியே
பின்னொருகாரம் பிதறுகின்றேனே. (உ)

ஆரமிடு மூவரின் பூ ூ வயறிந்தபின்
சீருளவாதியாய்த் திட்டஞ் செலுத்துவேன்
பாரிற் பதினுறுமுளத்தாய்த்தோன்றிச்
சீருளவாதியாய்ச் சிவமானவாறே (ங)

வானுன பூவினடுக்கவே வாழுவர்
கூறுன பூவையைக் கூர்மையிற் காய்ச்சிப்
பிதற்றுஞ் சிவத்தைப் பாணியிற் சுத்தியாய்ப்
பாறையினுப்பை யெழுதரங்காய்ச்சே. (ச)
காய்ச்சிய மூப்பூ கனத்த குருவாக
வாய்ச்சிடவேதான் வகாரம் பலிக்கும்
மூச்சிடு மூடக்கசடருக்கெய்தாது
பாய்ச்சிடு மந்தப் பசுபதிபாசமே. (ரு)
பசுவின் குணத்தைப் பகருவேன் மக்களே
பொசிப்புண்டு சோம்பல் போகம் பெருத்தவன்
அசுக்கை மனத்தனுகா வெளிமட்டை
முசுக்குணமில்லா மூதேவிமாடே. (சு)
மாடென்பான் கன்றென்பான் மக்கள் பிதாவென்பான்
கூடென்பான் பேயென்பான் குலதெய்வமேயென்பான்
ஞானியென்பான் யோகியென்பான் நல்லோரைத்தான் பழிப்பான்
நாடென்பான் சண்டாளன் நாய்ப்போற்றிரிவானே. (எ)
திரிவான் குளங்கரை தீர்த்தங்கள் தானென்பான்
திரிவானவன் கோவிற்சென்று வலஞ்செய்வான்
சுருதியினுதந்தூசிப்பான் விந்துவை
அரிதான பெண்ணை ஆசிப்பான் கோபியே. (அ)

* * * *

* * * *

ஆடியசுண்ணம் வழலையிதப்பா
பாடிப்படித்துப்பாரில் விள்ளாதே
கூடிக்குழைந்து குளிகை செய்வோர்க்கு
நாடிவழலையே நாட்டுவகாரமே. (சுயஉ)
வகாரத்துறையும் வாலையைப்பூசி
யகாரத்தையோதி யடங்குஞ்சிவந்தான்
மகாரத்தினுலே விளைந்த சமரசம்
உகாரத்தினுலே உளைந்திடுஞ்சத்திக்கே. (சுங)
சத்தியமாகச் சொன்னேன் தவறில்லை
முத்தியும் புத்தியும் முதல்ஞானமுட்படச்
சித்திக்க வேதையுஞ் செப்பினே னெண்பதில்
பத்தியறிவாகா பார்ப்போர்?கருளுவோமே. (சுச)
அருளும் புண்ணுக்க ரப்பரெனக்குத்
திருமூல ரெங்கள் சித்தப்பனுகும்
பொருள்காட்டும் முன்னோர் போகரெனக்குத்
தருமச்சமாமுனி தானுமென்பேரே. (சுரு)
பேராம் பெருநூற்பெருமை யெண்ணூறு
மாராய்ந்து பார்த்தும் அதிலிந்த வெண்பதும்
சீராகப் பார்த்துச் சிறுபிள்ளையு மாடும்
பாரநான் தீட்சை பகருமொருநூறே. (சுசு)

ஞாரும் நிகண்டு நுண்மையாய்ச் சொன்னேன்
வேறொரு நூலும் விளம்பவுமில்லை
தேறுமின்னூலிற் சகமெல்லாம் பொன்னாகும்
பாரான வாதி மகிழ்ந்து செய்வாயே. (சஎ)

வாய்த்த வழலையில் வீரத்தைக் கூட்டிச்
சாய்த்திடு கல்லுப்புக் கப்பியே யூதிடு
தேத்திய சுண்ணஞ் சகமெய்த்த சாரஞ்சேர்
நீத்துரை நீராம் பூரத்தை நீத்திடே. (சஅ)

நீத்திய சுண்ணத்தால் தாளகம் நீறும்
காத் ரரி தாரத்தால் கருநாகம் நீறும்
சூத்திர வங்கத்தாற் சூட்டு நிமிளையே
சாத்து நிமிளை சாரத்தால் கொல்லுமே. (சகூ)

கொல்லுமே சாரங் கூறுந்துருசியை
வெல்லுமே சாரம் வெண்சுண்ணமாயிடுஞ்
செல்லுமே தங்கந்திடமான சுண்ணமாம்
வல்லிய் சூதமகத்தான சுண்ணமே. (ருய)

End :

விடாதே பிரமன்மேல் வீடுமால் பட்டிணம்
படாதே மேல்ருத்திரன் பட்டணமாகு.
மடாதே மயேசுவரன் மகத்தாமடிமுடி
கொடாதே கொடுக்குங்கூறு மவுனமே. (அக)

மவுனத்தொளியாய் வளர்ந்த சதாசிவம்
மவுனத்தொளியாம் வளர்ந்திடுஞ்சம்பு
மவுனத்தின் வாசல் வழியைத்திறக்க
மவுனத்தமுர்தம் வழலைக் கோப்பெண்ணே. (அஉ)

ஒப்பான வாயிரமாவிகள் கண்டவன்
எப்போதுஞ் சாகாதிருப்பான் சிவனவன்
அப்பா பராபரத்தாண்டவெ(ழு)[ளு]த்தைச்
செப்பச் சிவமாஞ் சேரவுமுற்றுமே. (அங)

தேவி சகாயம்.

மச்சமுனியார் சூத்திரம் எண்பது முற்றும்.

(கு. - பு.)—

இந்நூல், 'மச்ச முனிவர் பெரு நூல் எண்ணூறு' என்னும் நூலுக்கு சுருக்கமாய் அமைந்துள்ளது. எண்பது செய்யுட்களாலாகியது. மச்ச முனிவராலேயே இயற்றப்பெற்றதாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது. இதில் இரஸ வர்தத்திற்காம் சில கருக்களும், சுண்ணம், பற்பம், தைலங்கள் முதலியனவும் கூறப்பட்டுள்ளன. எழுத்துப் பிழைகள் அங்கங்கே காணப்படுகின்றன. இதில் இந்நூலாசிரியர் தாம் இயற்றிய வேறு நூல்களின் பெயர்களும் கூறப்பட்டிருக்கின்றன. இதனை சகூ, சஎ-ஆஞ் செய்யுட்களால் உணரலாம்.

No. 2309. அகத்தியர் பட்சிணி.

AKATTIYARPAKṢIṆI

Pages, 31. Lines, 8 on a page.

Begins on fol. 43-a of the MS. described under No. D 2303

Complete.

Same work as that described under No. 261 (*m*) of the Triennial Catalgoue of Tamil Manuscripts, Vol. II.

Beginning :

அகத்தியர் பட்சிணி.

பூவது வாசமாகும் பொருந்திய தண்டகத்தை
நாவது வோதுந்தானே நடுவனையிருந்துகேளு
போவது வருவதாகும் பூரணங் காப்புத்தானே
ஆவது கோடிவித்தையானந்தர் காப்புத்தானே. (க)

மண்ணது விண்ணுமாகி மாநிலத்துதித்தோர்க்கெல்லா
மொண்ணது பொருளதானென்றுற்பனம் விளக்கமாகக்
கண்ணது மெய்யுமாகிக் காரண முடிவாய் நின்ற
வெண்ணுமித் தண்டகந்தா னியம்புதற் காதிகாப்பாம். (உ)

End :

விருத்தம்.

திருமகள் பதியிலாகித் திருவருவாகமேவி
யருவுருவாகிமுந்த வகத்தியன் என்ற நாமங்
கொண்டனனீசன் வந்து குறுமுனியென்றுறைக்கப்
பண்டுள்ள நந்தியென்பால் பட்சிணியென்றூர் முற்றே. (ராஉ௯க)

பட்சிணி நந்திமூலர் பாடலும் நம்மைப்பார்த்துப்
பட்சிணி பாடினார்கள் பகர்கின்ற தண்டகத்தில்
நிச்சய மிந்நூறன்னி னிகழ்த்திநேமேகமொன்றாய்
அச்சமுமில்லை பார்ப்போர்க் காதியான் கற்பமுற்றே. (கங஖)

முற்றிலு நூறுங்கூட்டி முப்பத்திரண்டும்பாரு
வுத்தருமதுவாய்க்காணு முற்பனத்துறுதி தோன்றும்
கற்றவரென்னூறன்னைக் கைவிட்டாரார் தான்பார்
செத்தபேரில்லையிந்நூல் சேர்[ற்](ர்ப்)பது முத்தியாமே. (ராங஖க)

அகத்தியர் அருளிச்செய்த பட்சிணி முற்றும்.

திருவுளச்செயல் உண்டானபடியே முடியும்.

(கு. ₹ பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 261 (m) நம்பர் பிரதியிலே வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உளது. அப்பிரதியிலே முதலிற் சில காணப்பெறாத காப்புச் செய்யுட்கள் இப்பிரதியிற்காணப் படுகின்றன. அப்பிரதியில் (கஉ௯ச) பாடல்களே யிருக்கின்றனவாதலின் இறுதியில் உள்ள பாடல்கள் இங்கு எழுதிக் காட்டப்பெற்றிருக்கின்றன. அதற்குமிதற்கும் அங்கங்கே புலவர்கப் பாடபேதங்களிருக்கின்றன. ஏடு கள் சிதலுற்றுள. எழுத்துப்பிழைகள் மிகவாகக் காணப்படுகின்றன,

No. 2310. அகத்தியர் தண்டகம்.

AKATTIYAR DAṆḌAKAM.

Pages, 29. Lines, 7 on a page.

Begins on fol. 59-a of the MS. described under No. D-2303

Complete.

Same work as that described under No. 164-a of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. II.

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 164 (a) நம்பர் பிரதியில் வந்துள்ள தேயாகும். இப்பிரதியிலும் இந்நூல் முழுமையுமிருக்கிறது. அங்கங்கே அதற்குமிதற்கும் பிரதிபேதங்கள் காணப்பெறுகின்றன. எழுத்துப் பிழைக ளிருக்கின்றன.

No. 2311. ஆபிசாரிக பிரயோகமுறை உரையுடன்.

ĀBHICĀRIKA PIRAYŌGAMUṞAI WITH COMMENTARY.

Pages, 11. Lines, 9 on a page.

Begins on fol. 74-a of the MS. described under No. D-2303.

Incomplete.

Deals with witchcraft and magic for a malevolent purpose. The name of its author is not known.

Beginning :

(மங)

ஆலடிச் சொரித்தவளை யைங்காயம் வெள்ளைப்பூண்டு
மேலிடுங் கருவுமுன்னே யியம்புமந்திரங்கள் நூறும்
மாலையிற் காலைதன்னில் வளர்ந்ததோரிடத்தில்வைக்க
மேலெலாமதுவேயாகும் பின்னுமிப்படிச் செய்யுந்தானே. (மச)

என்பது, சொரித் தவளையைக்கொண்டு வந்து ஐங்காயமும் நல்ல பாம்பின் விஷப்பல்லும் நாட்டினிற் கருவுங் கூட்டித் தவளையைச்செலுத்தி வாயை யறுத்து ஆறுநரம்புகொண்டு மாலைகட்டி மூலமந்திரம் (௱அ) நூற்றெட்டுரு செபித்து மாலையிலாவது காலையிலாவது காளி கோவிலுக்குப் பலி கொடுத்துத் தூப தீபங்கொடுத்துப் புதைக்கச் சொரிக்குஷ்டமாகும் என் றவாறு. (மச)

செய்யதோர் கொட்டாங்காயுந் திறமாகத் தும்பையொன்றும்
பையதுசக்கிரங்கள் மந்திரங் குருவுங்கூட்டி
மையத்தில் மரிக்கடத்தினம் சாணத்திற் புதைக்கப்பின்னே
கையினிலோடுங்கொண்டு போவாரேகத்தபேர்கள். (மரு)

என்பது இரட்டைச்சரட்டையில் தவளையைக்கொண்டுவந்து கால்நறுக்கிப் போட்டுக் கவுதும்பைக்கு வெள்ளிக்கிழமையிற் காப்புக்கட்டித் தீப தூபங் கொடுத்து வேர் பிடுங்கிவந்து வளையம் ஆடி ச்சரட்டைக்குள்ளேகூடப் போட்டு மூலமந்திரம் (௱அ) உரு செபித்துத் தேவி சக்கிரம் எழுதிக்

கூடப்போட்டு ஆறு நரம்பு மலைவாய்க்கட்டிக் காலையிலாவது மாலையிலாவது வாசப்படியில் வைக்கவும். ஊரைவிட்டு ஓடிப்போவான். திரும்ப கோசலகோமயத்தில் சுத்தி பண்ணி ஓடுகிற தண்ணியில் விடவும் என்றவாறு. (மரு)

பேருடன் கருவுந்தொட்டுப் பின்னவன் ஐங்காயங்கூட்டி
ஊரொடு சுற்றிவந்து ஊமத்தம் வேரிற் புதைக்க
மாரொடு மதிகுலைந்தூமத்தங்காய் தின்றாற்போலும்
ஆரெனும் வெரியதாகுமயர்வாரே யறிந்துகொள்ளே. (மகூ)

என்பது, ஒரு ஊமச்சியூமத்தையும் ? எடுத்து நீர்க்குழி மண்ணுங்கருவும் ஐங்காயமும் ஊமத்தை விரையும் வாயைப்பிளந்து அதுக்குள்ளே போட்டு ஆறு நரம்பால் கட்டி அவனிருக்கிற ஊரைச்சுற்றி வந்து மூல மந்திரம் (௱அ) உரு செபித்துப்புதைக்கவும வைத்தியங்கொள்ளுவான். திரும்ப அதையெடுத்துப் பாலிலே போட்டு ஓடுகிற தண்ணியிலேவிடவும் என்றவாறு. (மகூ)

End :

செகத்தினிற் ச்மசானருத்திரன் இருநூறு உருவே சொல்லி
அகத்தினிற் கருவிரண்டு அப்பிர ங்கள்ளிக்கட்டை
முகத்தினி லைங்காயமிட்டு மின்னடிகீழே வைக்க
மகத்தான கருமமெல்லாம் மருவிநின்றாடுமென்றே. (சரு)

என்றது, மலமும் நாட்டினிற் கருவுங் காலடி மண்ணும் ஐங்காயமும் வஸ்த்து விட்டரைத்துத் திருகுக்கள்ளிமுடியிலே துளையிட்டு அதுக்குள்ளே செலுத்தி வாயை உள்ளிச்சோறுகொண்டு மூடித் தேவி பூசை செய்து மின்னடியின்கீழே வைக்கவும், தாக்கும். திரும்பவெடுத்து ஓடுகிற தண்ணியிலே விட்டுக்கட்டையிலே பிளந்து எடுத்துவிடவுமென்றவாறு. (சரு)

பருவினகழுவெலும்பும் மணிவிரல் நரம்புங்கோத்து
வெருவியவில்லுகட்டி விளம்புறக் கழுவுதன்னைக்
கருதிய கருமமெல்லாங் காலடி மண்ணிலாகுஞ்
சுருதிய மருகநெல்லைப் பொரியெனச் சொல்லுவாரே. (சகூ)

என்பது, கழு நரம்பு எடுத்து முதுகுத்தண்டெடுத்துவந்து * * * * * வெளவால் பிடித்துத் தோலையுரித்துக் காளியுருவெழுதி அவன் பேரும் எழுதி மலமும் நீர்க்குழி மண்ணும், நாட்டினிற்கருவும் ஐங்காயமும் வஸ்த்துவும் விட்டரைத்துப் பூசினபின்பு காளியுருவெழுதிப் பேரும் எழுதி மருக்காறை முள்ளுகுத்தி இரணவீரபத்திரகாளி மந்திரம் (௱அ) உரு செபித்துச் சித்தியாக்கிப் பூசை பலியும் கொடுத்துக் காலடிக்கருவுங் கூட்டி வஸ்த்துவிட்டரைத்து ஓட்டினில் வீரபத்திரகாளியைச் செபிக்க மாற்றில்லை மரணமாம் என்றவாறு. (சஅ)

திருச்சிற்றம்பலம்.

(கு. - பு.)—

இந்நூல் "ஒட்டியம்," "சல்லியம்" என்ற நூலே போன்றதாய் ஆபிசாரிக கருமங்கள் பலவற்றையும் இயற்றுதற்கான சில பிரயோக

முறைகளையுணர்த்துகின்றது. இதிலே ஒவ்வொரு கர்மங்களும் இன்னணம் இயற்றல் வேண்டும் என்று நுதலிப் பல கருக்களையும் அவைகளை உபயோகிக்குமாற்றையும் நூலாசிரியர் நன்கு தெரிவித்து இருக்கின்றார். அங்கங்கே சில குறிப்புச் சொற்கள் காணப்படுகின்றன. தெற்றென அவையிற்றின் பொருள்கள் விளங்கவில்லை. நூலாசிரியர் இன்னாரென்று தெரியவில்லை. இப்பிரதியில் ஆதியில் (ச) நான்கு ஏடுகளில்லை. இறுதியில் (உய) ஆம் ஏடுமில்லை. ஆகவே அவற்றிலுள்ள பகுதி நீங்கலாக மற்றைய பகுதிமாத்திரமேயுள்ளது. ஒவ்வொரு பாட்டுக்கும் ஒரு விளக்க உரையும் உடன் எழுதப்பெற்றுள்ளது. இந்நூல் இத்துணைத்தென்றும் இன்ன பெயரிற்று என்றும் என்னுதிய செய்தியொன்றும் ஒருவாற்றானும் விளங்கவில்லை.

இது முடிவுற்றபின்னர் சுபாசுப நிமித்தவிஷயமான மூன்று பாடலும், "குட்டிச்சாத்தான்" விஷயமான ஒரு மந்திரமும் எழுதப்பெற்றுள.

No. 2312. வைத்தியமும் மந்திரமும்.

VAIDYAM & MANTRAM.

Substance, palm-leaf. Size, 7-10/16 × 1¼ inches. Pages, 150. Lines, 9-11 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

Contains old Indian Medical recipes, and magic incantations and spells and magic diagrams believed to be efficacious in curing diseases.

Beginning :

வைத்தியமும் மந்திரமும் :—

நாடி பரீட்சையறிய.

ஏசுங்குடியிலிடார் நன்று எதிர் நின்று
பேசும் மனையாளிற் பேய்நன்று—நேசமிலா
வங்கணத்தீ நன்று வலியபகை வாழ்விலாச்
சங்கடத்தினல்லதே சாவு.
அன்னமே கோழியோனுன் மயிலென நடக்கில் வாதம்
பின்னையேராமையட்டை பெருத்திடிற் பித்தமென்க
சொன்னவா மயிலினல்லாய் சுற்றிய தவளை பாம்பு
அன்னமேயையமென்று அறிந்துகொள் நாடிதானே. (க)

* * * *

இதில் ஒரு மாத்திரையும் திரிகடுவும் வெதும்பிப் பொடி செய்து . . . . . . தேனும் இஞ்சிச்சாறும் விட்டு இரண்டு நேரமுங் கொள்ளப் பதினெட்டு வாதம், எண்பது வாயுவு, இருபத்தாறு சத்தி குன்மம், வலி குன்மம், எரி குன்மம், அ. . . மல் பித்தம் பதினாறும், குன்மம் பைத்தியத்தோடே சேர்ந்தும் குடல் செழிக்கை, வாயுவு, முகவாதம், மண்டைச் சூலை, பீனிசம் பதினெட்டு, நாசியடைப்பு, கபால வாயுவு, தலைவலி, பிடரி வலி, வாதம், செவி நோயும், கெந்த தாளியும், தொண்டை

நோவு, நெஞ்சு நோவு, மு . . ல் கண் வலி, அண்ட வாதம், குட்ட வாதம், ஆநந்த வாயுவு, அந்திர வாயுவு, உள் வலிப்புப் பிற வலிப்பு. * * * * முழங்கால் முட்டித் திமிர் வாதம், நடுக்கு வாதம், இவையெல்லாந்தீரும். மற்றுமுள்ள வியாதிக்கெல்லாம் அனுபானத்துடனே செய்தால் குணமாம். பத்தியம் : பசுவின் பால், பசுவின் நெய், துவரம்பருப்பு, பச்சைப் பயறு இவைகளாம்.

மகாதாளிச் சூரணம் :—தாளிச்சபத்திரி, சுக்கு, மிளகு, திப்பிலி, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலம், நாகேசுரம், இலவங்கம், கோஷ்டம், தூம்பிராஷ்டகம், திப்பிலிமூலம், கொத்தமல்லி, கச்சோரமாவது, கிச்சிலிக்கிழங்கு, கடுக்காய், தானிக்காய், நெல்லிப்பருப்பு, கொடிவேலி வேர், வெட்டிவேர், இலாமிச்சம் வேர். . . . . மாவது மேதிப் பால் தற்கோலப்பொட்டு இரேணுகம், கோரைக்கிழங்கு, சடாமாஞ்சில், நல்ல சந்தனம், அகில் சந்தனம், ஆக வகை உமெ வகைக்கு வராகனெடை (௬) ஆறு. இந்தப்பிரகாரம் கொண்டுவந்து உலர்த்திச்சூரணம் பண்ணி அதுக்கு இரட்டிப்பு சர்க்கரைகலந்து பிசைந்து தினம் அரை பலம் தேனில் இரண்டு வேளையும் சாப்பிடவும். இதுக்குத் தீரும் வியாதி. வாயுவு, பைத்தியம், சிலேஷ்மம், பாண்டு, சோகை, சூலை, அதிசாரம், சுவாசகாசம், சுரம், சீதம், தலை சுற்றல், தலை வேதனை, மனசு செரிச்சது,? அக்கினி மந்தம், அன்னத்துவேஷம், அரோசிகம், குலையெரிவு, சிலேசம், அதிவிரணம், விசூசி, எப்பம், விக்கல், வெளுப்பு, உடம்புவிட்டுவருகிறது, சருவ வாயுவு சுரம், நாடியில்லாமலிருக்கிறது, கால் அசந்து போகிறது, அசீரணம், உதர சோஷணம் முதல் இரத்த பித்தமும், இரத்தம் எடுக்கிறதும் தீரும். வீரிய விருத்தி உண்டாம். பத்தியம் : கைப்பு, புளிப்பு, கடுகு, கலியாணப்பூசணிக்காய், பாகற்காய், அபத்திய பத்திய முதலான வாத வஸ்துக்கள் தவிர்த்துக் கொள்ளக் குணமாம்.

End :

மறுதோன்றிக்குப் பேய் விட்டுப்போம்.

மருதோன்றி மரத்தில் கிரகண காலத்தில் கிரகணம் விடச்சே வெட்டி விழத்தட்டிக் கண்டமாக்கி நறுக்கி, உலர்த்தி, ஒரு பானையிலிட்டுத் தைலம் வடித்து அத்தைலத்தைத் தீப தூபங்கொடுத்து இதுக்கு மந்திரம் "பகரி சுவாகா உம் பட்" என்று பன்னீராயிரம் உரு செபித்து இந்தத் தைலத்துக்கு முப்பலி கொடுத்துச் சுத்தமானதொரு தலத்தில் வைத்துக்கொள்ளவும். யாவர் ஒருத்தர் பேய்ப்பிடித்தபேர் அவரை, அந்தத் தைலத்திலே திலதமிட்டுக்கொண்டு எதிரிச்சுப்பார்க்கப் பேய் போகிறேன் என்று அபயமிட்டுப்போம். மரணம் முற்றும் * * * * * * * * * *

புத்தியுண்டாக : தேவதாளி சமூலமும் சூரணம் பண்ணித் தேனில் குழைத்து விழுங்கப் புத்தியுண்டாம்.

மழுவெடுக்க : கைத்தாழஞ்சாறும் வெண்ணெயும் விடிய நேரத்திலே விழுங்கிச் சிறுகீரை வேர் பல்லில் அடக்கி மழுவெடுக்கவும்.

பெருந்துத்தி வேர் நீரிற் பிசைந்து காலில் தடவி அக்கினியிலே நடக்கலாம். தாளியிலைச்சாறும் கொத்தான்சாறும் காலிற்தடவி நெருப்பில் நடக்கலாம் வேகாது. எண்ணெயில்லாமல் விளக்கெரிய. வெள்ளிய சீலையில் ஆலரசு [யிறளி] (இறலி) இம்மூன்று பாலும் சீலையிற் பிடித்துத் திரிபண்ணி விளக்கேற்ற எரியும்.

முள்ளில் நடக்க : சேப்பு நெரிஞ்சில் வேரும் ஓரிலைத்தாமரை வேரும் தலைமாற்றிக் குளிசமாடி வாயிற்போட்டுக்கொண்டு நடக்க முள்ளு தையாது.

எருமைநாக்கும் அணில்பிச்சும் செம்பு மோதிரத்தில் சத்தாக அடைத்துப் போட்டுக்கொண்டு தென்னைமரத்தைத் தொடக் காய் உதிரும். புலி பாயாமலிருக்க : மகிழம்விரையை வாயில் அடக்கிப்போகப் புலி பாயாது. பெருங்காயமும் வெங்காயமும் அரைத்துக் கத்தியில் தடவிக் கட்டிவிட அந்தச்சாவல் நிக்காது. ஓரிலையரைத்து அரிசியில் கலந்து விடியநேரத்தில் திண்ணவிட்டுப் போருக்குவிடக் குத்துதையாது. நேர்வாளப்பருப்பு உருக்கிப் பஞ்சில் துவட்டிக் கத்தியில் தடவிக்கட்டக் குத்து தையாது. குப்பைமேனி வெள்ளிநாள் காப்புக்கட்டிச் சனிக்கிழமை நாள் பிடுங்கி அந்த இலையைக்கசக்கிச் சாற்றை அரைக்கழஞ்சு ரஸத்திலேவிட்டு நன்றாய் சாரித்து வைத்துக்கொண்டு அந்தவேளைக் குளிசமாட்டித் தலையில் வைத்துக்கொண்டு அந்தமருந்தைச் சாவல்கொண்டி

(கு. - பு.)—

இந்நூல், நெடுநாளாக வைத்தியர் மாந்தரீகர், இவர்கள் கையாண்டு வரும் தொன்றுதொட்டு வந்த அனுபவ வைத்திய முறைகளையெடுத்துணர்த்துவது. இதிலே பல்வேறுவகையான எல்லா நோய்களுக்கும் உரிய நன் மருந்துகள் விளக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன் பல மந்திர யந்திரங்களும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. (௩௬) ஆம் ஏடுமுதல் அதிகமாக மந்திர யந்திரங்கள் காணப்படுகின்றன. இவைகளல்லாமல் பல அருமையான விநோதமான விஷயங்களுக்குரிய கருக்கள் பிரயோகிக்குமாற்றையும் விளக்கியிருக்கிறது. பல ஏடுகள் மிகவுஞ் செல்லரிப்புண்டு முறிந்தும் படித்தறியலாதவாறு இருக்கின்றன. எழுத்துப்பிழை மிகவும் உள்ளது. நூலாரம்பத்து நாடி நிதானமறியச்சில செய்யுட்களிருக்கின்றன. அன்றியும் அங்கங்கே இடையிடையே இரண்டொரு வைத்தியப் பாடல்கள் காணப்படுகின்றன. இடையில் 43லிருந்து 51 வரை, 60, 62, 67, 70, 71, 74 இவ்வெண்களிட்ட ஏடுகள் காணப்பெறவில்லை.

No. 2313. கொங்கணர் கடைக்காண்டம்.

KOṆKAṆAR KAḌAIKKĀṆḌAM.

Substance, palm-leaf. Size 12 1¼ inches. Pages, 114. Lines, 6 on a page. Character, Tamil. Condition, sligh injured. Appearance, old.

Incomplete.

Contains 211 stanzas only.

Same work as that described under No. 19 of the Triennial Catalogue of Tamil Manuscripts. Vol I.

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 19-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியிலே (211)-ஆவது செய்யுள் வரையிலுமே உள்ளது. ஷெ நம்பர் பிரதியில் "கொங்கண தேவர் ஐந்நூற்றிரட்டு" என்ற பெயரான் உள்ளது. இப்பிரதியின் தலையிலே "கொங்கணர் கடைக்காண்டம்" என்று இந்நூலுக்குப் பெயர் எழுதப்பெற்றிருக்கிறது. எந்தப்பெயர் தகுதியுடைத்தோ? "கொங்கண தேவர் கடைக்காண்டம்" என்ற பெயரான் ஷெ காடலாக்கு 275 (ச) ஆவது நம்பரில் வருணித்துக் கூறப்பெற்றுள்ள நூலினும் வேறுபட்டுள்ளது.

No. 2314. அகத்தியர் பூரணசூத்திரம் இருநூற்றுப்பதினாறு.
AKATTIYAR PŪRAṆASŪTTIRAM IRUNŪṞṞUPPADINĀṞU.

Substance, palm-leaf. Size 9-10/16 × 1-10/16 inches. Pages, 44. Lines, 8 and 9 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

Wants 10 stanzas in the beginning.

Same work as that described under No. 177 of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. II. . . . .

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 177-ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் முதலில் இரண்டு ஏடுகளில்லையாதலின் அவையிற்றில் அடங்கிய பத்துப்பாடல்கள் நீங்கலாக முற்றும் உளது. அங்கங்கே பலபாட பேதங்கள் காணப்படுகின்றன. ஏடுகள் ஒரு சிறிது சிதைந்துள. சில ஏடுகள் நுனியில் முறிந்து கிடக்கின்றன.

No. 2315. அகத்தியர்ஞானம் நூறு.
AKATTIYAR JÑĀNAM NŪṞU.

Pages, 41. Lines, 11 on a page.

Begins on fol. 45-a of the MS. described under No. D-2314.

Complete.

Same work as that described under No. 9-a of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. I. . . . . . .

கு. - பு.—

இந்நூல் மூவருடக் காடலாக்கு I (a) நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இது முற்றும் உள்ளது. நிற்க, ஷெ பிரதியின் ஆதியில் "சிந்தையுறு ஞானந்தெரியவுரை பாடுதற்கு" எனத் தொடங்கி காணப்பெறும் ஒரு வெண்பா இப்பிரதியிலே காணப்பெறவில்லை. ஏடுகள் சிதைந்து இருக்கின்றன. அங்கங்கே சில விடங்களில் பாட பேதங்கள் காணப்பெறுகின்றன. ஈற்றுச் செய்யுளின் இறுதியடியில் பாதி எழுதாமல் விடப்பட்டிருக்கிறது. பின்னர் "அகத்தியநாதர்" என்று அரைகுறையாய் ஒரு தொடர்மொழியுளது.

No. 2316, கொங்கணர் பூஜாவிதி.

KONGANAR PŪJĀVIDHI.

Substance, palm-leaf. Size, 16¾ × 1 2/8 inches. Pages, 6. Lines 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol 1-a. The other works herein are Bhōgar pujāvidhi 4 a. Nāḍinidānam 20-a. Akattiyarsūttiram 24-a.. Akattiyarsūttiram aṟupattunālu 26-a. Neyccīlai sūttiram 34-a. Dīpasūttiram 35 a. Palaviraṟcūttiram 36-a. Vānmīkar uṟuppuccūttiram Pattu 37-a. Vānmīkar aḍitalaikkayiṟṟuccūttiram 38-b. . . .

This is the introductory portion of the work entitled *Koṅgaṇar Dīkṣai Pūjai Vidhi*, and dealing with Alchemy, Yōga, etc.

Beginning :

கொங்கணசுவாமி பூஜா விதி.

வாதமாங் குணங்கள் மூன்றும்
வரிசையாய்ப் பார்க்கவேண்டிக்
கோதறு குழலாள் சொன்ன
குருவுடன் . . . .
. . . . பூசை பண்ணிச்
சிந்தையாற் செபங்கள் செய்ய
வளர்ந்திடும் ஞானபோதம் மாதகலாதே நிற்பள். (க)

போத . . . . .பொலிவுறச் சொல்லும்போது
தீதற மூலமூர்த்திச் சீர்பாதந்தொழுது போற்றிக்
கோதையாமாயிபாதங்கு . . . . செய்து
பேதரை யகத்திவாதப் பேழையிற் சொன்னேனையா. (உ)

End :

அறிவு பிறக்கு மருள்தோன்று
மடங்காக் கவனங் கொடுபோகும்
அறிவு புறக்கு மனஞ்செயிக்கும்
. . . . . .போதந்தனிற்சேர்க்கும்
பிறிவு பிறக்கும் வெகு கோடி
பெருத்த வாத சித்தியுமாம்
நெறிவு பிறக்கு மாயிபதம்
நினை. . . . . . ப்பு முற்றே. (யஉ)

இவை பனிரண்டு பாவும் பாயிரம்.

திருச்சிற்றம்பலம்.

கு.-பு.—

இது "கொங்கணர் தீட்சை பூஜைவிதி" என்னும் நூலின் பாயிரமாகும். பனிரண்டு பாக்கள் உள. ஏடுகள் மிகவும் முறிந்து கிடக்கின்றனவாதலின் உள்ள செய்யுட்களெல்லாம் அநேக விடங்களில் இரந்த பாதத்துடன் காணப்படுகின்றன. எழுத்துப்பிழை மிக உள. இந்நூலின் பெரும்பகுதி இத்துணைத்தென்று தெரியவில்லை. இரஸவாத விஷயமான தாகும்.

No. 2317, போகர் பூஜாவிதி.

BHŌGAR PŪJĀVIDHI.

Pages, 32. Lines, 4 and 5 on a page.

Begins on fol 4-a of the MS. described under No. D-2316.

Complete.

Same work as that described under No. 277 (e) of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. II.

கு. - பு.—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 277 (e) நம்பரில் வந்துள்ள நூலே யாகும். இப்பிரதியில் இது முற்றுமிருக்கிறது. முடிந்தபின்னர் " கூடுவது எவ்வாறு வேதாந்த மார்க்கம்," " ஆச்சப்பா பதினாறு எட்டாந் தீட்சை " என்றுங்குத்தொடங்கும் இரண்டு பாடல் அதிகமாகக் காணப்படுகின்றன. ஏடுகள் மிகவுஞ் சிதலுற்றிருக்கின்றன. சில ஏடு முறிந்துள. அநேக இடங்களில் அப்பிரதிக்கும் இப்பிரதிக்கும் பல பாட பேதங்கள் காணப்படுகின்றன.

No. 2318, நாடிநிதானம்.

NAḌINIDĀNAM.

Pages, 8. Lines, 8 on a page.

Begins on fol. 20-a of the MS. described under No. D-2316.

A treatise on the feeling of the pulses, on the diseases caused by the derangement of the three humours, viz. *Vātam, Pittam, and Śiletṭumam,* and on the symptoms of, and remedies for, such diseases.

Beginning :

. . . . . நாடி . . திரட்டு.

வாதமும் பித்தமையம் அதனுடைகுணப் பாடத்தைத்
தீதற முனிவர்நூலைத் திறந்துபின் திரட்டதாக
ஓதிய சாத்திரத்தை யொழுங்குடன் கண்டுகொள்க
வாது சேர் வைத்தியர்க்கு வல்லிருள் விலக்குமாமே. (க)

வாதன் தான்தனித்துநின்று வந்திடும் பந்துபோலத்
தீதற வெழும்பிநின்று சிக்கிய மந்தம்பற்றி
ஏதுவாய்ச் சுரங்கண்டாலு மிடைவிடா நிற்குமாகில்
தாதுவைக் குறைத்து வுந்திதன்னையு மறைக்குமென்றே. (உ)

வந்திடும் வாதநாடி மடங்கியே துடித்து நிற்கில்
முந்திய பழமலங்கள் முடுகியே சிக்குமென்க
அந்தமாம் வாதந்தப்பி யழுந்தி நின்ற[ன] சங்குமாகில்
பந்தியாய் வாய்வாய்த் தோன்றிய பாயப்பு? வந்தடுத்த தென்ன. (ங)

நீரிரு வாதநாடி நின்றது சோபமானுல்
பாரிலே யெவர்க்கும் வாய்வு பற்றிட மந்தமாகும்
வேரி சேர்குழலாய் வாதம் விரைப்புடன் நெடுக நின்றுல்
கோரில் லாச்சன்னிவந்து கூடிடு மூன்று நாளில். (ச)

வந்திடு மூன்றுநாளில் வாதமாஞ்சன்னி கூடில்
புந்தியே மறந்து வாயாற்புலம்பியும் . . . . பண்ணும்
பிந்தியே . . . . நாளிற் பிடரியிற் பின்னற்செய்யும்
அந்தமாம் அண்டத்துள்ளே தைலமே யிறக்கிடாயே. (ரு)

* * * * * *

காரிழை தனக்குப்பிள்ளை கெர்ப்பமேபற்றி நின்றுல்
கூரிய வாதநாடி குண்டலப்புழுப் போலூரும்
வீரிய மூன்றுந்திங்கள் விட்டிற்போல் வதைந்துநிற்கும்
பாரிய எழாந்திங்கள் பையவே புழுப்போலாமே. (யக)

மாதர்கை பிடித்தபோது வந்திடும் வாதநாடித்
தீதற வெடித்துப்பாய்ந்து சிதறியே சிலும்பிநின்றுல்
பேதைதன் வயிற்றினுள்ளே பெருத்ததோர் சுரோணிதங்கி
வாதைகள் பண்ணி மாதரிடையிலே வருத்தஞ்செய்யும். (யஉ)

இடுப்பொடு வயிறுநொந்து இடைவிடா [ ] சத்துனு(ச்சத்தமு)ண்டாம்
தடுத்திடுங் கர்ப்பந்தன்னைத் தங்கிடாவண்ணஞ்செய்யும்
அடுத்த தோராவினெய்யால் ஆனதோர் திருகுகள்ளி
கொடுத்திடக் கொம்மட்டிக் காய்க்குழம்பது கொடுக்கத்தங்கும். (யங)

* * * * * *

மந்தமாய் வாதநாடி மயிலும் பேன் போலேயோடில்
இந்த மானிடரிரண்டு நாழிகை யிருப்புமில்லை
வந்தவன் முகமும் வேர்த்து மஞ்சனித்திருக்குமாகில்
முந்தவோர் நாழிகைக்குள் முடிவது திண்ணந்தானே. (யசு)

வாதந்தான்தனித்து நிற்கில் வாயுவுந்தனித்து நிற்கும்
வாதந்தானு தறிநிற்கில் வலிகுன்மம்வந்து சேரும்
வாதந்தான் தவித்து நிற்கில் மரணமும் வந்து சேரும்
வாதத்தின் திரட்டதெல்லாமிவ்வகை வடிவுதானே. (யள)

பரந்திடு மிரண்டாநாடி பித்தமே பிரண்டுநிற்கில்
வரண்டிடு மூலாதாரம் வாதையால் வடிவே செய்யும்
சுரண்டது பித்தநாடி கடித்துடன்துடித்து நின்றுல்
அரண்டுமே பையித்தியந் தானடைவுடன் வந்துகூடும். (யஅ)

உதறியே பித்தநாடி யுழுவைப்போலுதறி நிற்கிற்
பதறியே யுடம்பழுத்திப் பத்திடுஞ்சிறு நீர்வற்றும்
உதவிய புத்திமாறிக் கிறுகிறுத்துழலை யுண்டாம்
விதவிய பசும் பயறும் நெல்லிக்காய் கிஷாயங்கூட்டே. (உய)

பித்தமே கதித்தாற்சூடும் பிலத்தினுலுர்த்திச் செய்யும்
பித்தமே மிகுந்தாலீளை யிரும்பலும் பிலத்துநிற்கும்
பித்தமே மிகுந்தாற்கோழை பெருமியே யிருமற்கொள்ளும்
பித்தத்தார் திரட்டாநூலைப் பேசினூர் பெரியோர்தாமே. (உரு)

ஐய்மாநாடித்தானு மரணேவால் போலே நேர்ந்து
பையவே மந்தம்பற்றிப் பதரிடா திருக்குமாகிற்
செய்வதொன்றில்லை காலன் கெடுவது உண்மைதானே
கைதனைப்பிடிக்க வேண்டாங்கழற்றிக் கொண்டப்பாற் போவாய் (உசா)

* * * * * *

சிலேத்தும நாடிதானே தெளிவுடனிற் றீதாம்
சிலேத்துமமந்தம் பத்திற் சேர்ந்திடுங் கோழைவாய்வு
சிலேத்தும மிகுந்து நின்றூற்செப்பிடு மரண ந்திண்ணம்
சிலேத்துமந்திரட்ட தெல்லாந் தெளிவுடன் கண்டுகொள்ளே. (நக)

வாதமும் பித்தமையம் வன்பலத்துடனே நிற்கப்
பேதமொன்றில்லா வண்ணம் பேசிய நிதானமாகில்
நீதியாய் நிலைக்கு நின்றூல் நெடும்பிணிசிக்கவில்லை
தாதியே யொன்றேடொன்று தாவிடி[கள்](ற்) பிணிகள்தானே. (நஉ)

வாதமும் பித்தங்கூடிவன் பலத்துடனே யோடில்
தீதறு வயிற்றினுள்ளே திரண்டதோர் மந்தம்பற்றி
வேதனை யெரிப்புங்கூடி விரண்டிடு மெரித்தகுன்மம்
ஆதிசேர் சீனிகூட்டி யஷ்டசூரணங்கள் கொள்ளே. (நந)

End :

வாதமே கதித்தபோது வாயுவுமெழும்புங் கண்டாய்
வாதமே கதித்தபோது வந்திடுஞ்சன்னி தோஷம்
வாதமே கதித்தபோது வந்திடும் வியாதிமேலும்
வாதமே கதித்தபோது வன்னுடல் மெலிந்துகொல்லும். (நகூ)

வரச்சியாய வத்தினுலும் வருத்தமான் மலட்டினுலும்
மதிரத்திற் பிரீதியாலுஞ் சிக்கிரிப்புழுவினுலும்
உருக்கிடும் பேயினுலு மொண்டொடி முதுமையாலும்
உரப்பிலாச் சீரத்தாலும் ஆயிழை மலடியாமே. (சம)

(கு. - பு.)—

இந்நூல், வாத பித்த சிலேஷ்ம நாடிகளைக்கொண்டு அவையிற்றின் பிரகோபம் முதலியவற்றுல் உண்டாகும் மாறுந்தமான நோய்கள் பலவற்றின் உண்மைகளையுணரு மாற்றையும், அவைகளை நீக்கற்குரிய மருந்துகள் பலவற்றையும் முறையாக வெடுத்து உணர்த்துகின்றது. இது, இன்ன நூலைச்சார்ந்ததென்றும், இன்னூர் இயற்றியதென்றும், இத்துணைத்தென்றும் ஆகிய இவற்றுள் ஒரு செய்தியினையும் அறிந்து கோடற் குரித்தான ஆதாரம் ஒன்றேனும் காணப்பெறவில்லை. ஆயினும் இது மிகுந்த நடை நோக்கும் (நோக்கு - அழகு) சொல் நோக்கும் பொருள் நோக்கும் உடைத்தாய்க் காணப்படுகின்றது. மசுடு முன்னிலைத்தாய் அமைந்துளது. இங்கு நாற்பது செய்யுட்களே காணப்படுகின்றன. ஏடுகள் மிகவும் ஒடிந்துள. எழுத்துப் பிழையங்கங்கே கண்ணுறுகின்றன.

No. 2319, அகத்தியர் சூத்திரம் பத்து.

AKATTIYAR SŪTTIRAM PATTU.

Pages, 3. Lines, 6 on a page.

Begins on fol. 24-*a* of the MS. described under No. D. 2316.

Complete.

Same work as that described under No. R. 168 (d) of Triennial Catalogue of Tamil Manuscripts Vol. II.

(கு. - பு.)—

இது மூவருடக் காடலாக்கு 168 (d) நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூலின் பத்துச் செய்யுட்களுமிருக்கின்றன. இதன் ஏடு இரண்டு பாகமாகமுறிந்து ஒடிந்துகிடக்கின்றது. புழுக்களாலும் அரிக்கப்பெற்றுள்ளது. நிற்க, இதில் இந்நூலாசிரியர் "பாரப்பா வாதத்திலிலட்சங்காப்பு, பாடினேனதைக் குறுக்கியிருநூருக, ஆரப்பா ஆதிகுருவழிலைமார்க்கம், அடைவாகச் சொல்லிவிட்டேன் முப்பூவைத்தான், நேரப்பா முந்நூறிலடக்கிவிட்டேன், நேர்மையா யெண்பதிலே நிசமாய்ப்பாரு, ஆரப்பாவதிலடக்கம் பதினுருக்குள், ஆச்சரியம் பதின்மூன்றும் பத்தும் பாரே" (2) என்ற இவ்விரண்டாஞ் செய்யுளால் இரஸவாத விஷயமாக, இருநூறு, முந்நூறு, எண்பது, பதினுறு, பதின்மூன்று என்றவிவ்வெண்களில் வேறு நூல்களும் நாம் இயற்றிப் போந்தமையைக் குறிப்பித்திருப்பது இங்கு நம்மால் குறிக்கொள்ளத்தக்கது.

No. 2320, அகத்தியர் வைத்தியசூத்திரம் அறுபத்துநாலு.

AKATTIYAR VAIDDIYASŪTTIRAM ARUPATTUNĀLU.

Pages, 28. Lines, 6 on a page.

Begins on fol. 26-*a* of the MS. described under No. D. 2316.

Complete.

A treatise on Indian Medicine, attributed to the sage Akattiyar.

Beginning :

அகத்தியர் வைத்தியசூத்திரம் அறுபது ?

வாதத்துக்கு மருந்து.

ஆதியாங்கணேசன் காப்பு அறுநூற்றுக் கருவையெல்லாம்
சோதியாம் மாயிமாதந்துணே யெனவுட்கொண்டேறி
நீதியாந்திரட்டுச் சூத்திரம் நிலேத்த வாகடமாய்ச் சொல்ல
வாதியாம் பிணிகள் தீரமருந்துடன் குணத்தைக்கேளே. (க)

வாதந்தானெண்பதாகும் வருகின்ற பக்கவாதம்
தீதமெய்நடுக்கு வாதஞ் சிறந்திடு முடக்குவாதம்
சூதமெய்ச் சந்துவாதத் தோன்றிய முகத்தில் வாதம்
பேதமாம் வாதந்தீரப் பெருத்திடு மருந்துகேளே. (உ)

மருந்துதான் சித்திர மூல வளருமாவிலங்கு கொன்றை
திருந்திய முருங்கை சங்குசிறந்த வெள்ளறுகுவேம்பு
பொருந்திய வெருக்கு சுக்கு புகழ்ந்திப்பிலி மரீசங்
கருந்திற லவணமஞ்சுங் கால் மண்டலந்தான் கொள்ளே. (ரு)

கொள்ளவே யெண்ணெய ஞ்சுங்கு லாவுதில்லைப் பாற்கற்கம்
விள்ளவே முருங்கை வாகைமிகுத்த மாவிலங்கைமூலம்
கள்ள விழ்காயமிந்து கடியதிப்பிலி வசம்பு
உள்ளமா யெரித்துப்பின்னை யுடம்பிற் றெக்கடமுஞ் செய்யே. (சு)

* * * * * *

எரித்த நல்லெண்ணெய் பாலு நயந்திரு வேலிமிச்சம்
தரித்திடு சீந்தில் முத்தஞ் சந்தனந் தேவதாரம்
மூரித்திடு தண்ணீர்மிட்டான் உயர்நிலப்பனை நன்னாரி
வருத்த மஞ்சனமஞ்சோடு பகர்தலை தனக்குவாரே. (ம)

தனக்குறு ரத்தமூலந்தாங்கு முண்மூலஞ்சீயும்
மனக்குறு வாதபித்தம் வளரைய மூலத்தோடு
சினக்குறு முளையா மூலஞ்சீமலக்கு முதமெல்லாம்
கனக்குறு மருந்து சொல்லக்கன்னியே கேட்டிடாயே. (மக)

* * * * * *

End :

கற்ப மினிகேள் பறந்திடுநோ யெல்லாம்
அற்ப மிதென்று . . ட்டு சொல்லாதே
கற்பமி தாகுங்கன்ம வினையறும்
நொற்பமதாகும் நோக்குங் கஞ்சாவே. (சுக)

கஞ்சாவைக் கற்பமென்று உள்ளே கொள்ளும்
கடை செட்டாலண்டம . ண்டக . . . டரே கேள்
நஞ்சாகு ங்குருக்கொடுத்த வித்தைக்கெல்லாம்
நாவுலரு முகங்கறுக்கும் நயனம் பூக்கும்
சஞ்சாரம் வேண்டாது பெ . . . .
. . . . கெட்டுச் சாங்கமாகும்
அஞ்சாமலாணுவத்தை யொடுக்கி நிற்கும்
அறிவழிக்குஞ்சுணங்கனைப்போல லைச்சலாமே. (சுஉ)

அலைச்சலல . . . . ண்டை கட்டு . . . . ம்
அப்பனே கண் சிவக்கும் தலைதூக்கொட்டா
நிலைத்தபுத்தி யாங்காரமறிவும் பாழாம்
நிலைகெட்ட விந்திரியம் மயங்கிப் போகுங்
கலைத்தெருவும் . . . த் தெருவு மலைந்து போவாய்
கர்மமென்ற சண்டாளக் கசடனுவாய்
புலைக்குலமாய்ச் சென்மித்து அறிவைப் போக்கும்
புத்திகெட்ட சித்தர்களே? புகலக் கேளே. (சு௩)

கேளப்பா கஞ்சாவால் கெட்டு . . . . . கோடி
கெட்ட புகை வெகு நாற்றங்கீதம் பாழாம்
தேளப்பா கொட்டுதற்போல் நெஞ்சிற்கட்டுஞ்
(ஈ) சீசீசீ கசுமாலச்சி . . . .
வேள . . . . ரித்த சிவனெனக்குச் சொன்னார்
வேதாந்த சட்டைமுனி தானுஞ் சொன்னார்
வாளப்பா விதைவிட்டுக் கற்பங்கேளு
(ரு) வானவனை நமக்கரித்து வணங்கிமுற்றே. (கூ௰சு)

(கு. - பு.)—

இந்நூல், அகத்திய மகாமுனிவரால் வைத்திய விஷயமாய் இயற்றப் பெற்றதொரு நூலாகும். அறுபத்துநான்கு பாடல்களைக் கொண்டுள்ளது. ஆரம்பத்தில் "அகத்தியர் சூத்திரம் அறுபது" என்று குறித்துள்ளது. இதில், வாதம், மூலம், கிரஹணீ, குன்மம், மேகம், காமாலை, சூலை, பெருவயிறு என்னும் மகோதரம், சன்னி, கரப்பான், விஷக் கரப்பான், நயன ரோகம் இவை முதலியவாம் பல் வேறு நோய்களுடைய வகைகளும் அவைகளை நீக்கற்கு உரிய பலவகை மருந்து முறைகளும் நன்கு மிகத் தெளிவாகக் கூறப்பெற்றுள்ளன. இதில் உள்ள ஏடுகள் பல புழு வரிக்கப் பெற்று அங்கங்கே கிரந்த பாதங்களுடன் காணப்படுகின்றன. எழுத்துப் பிழை யுள.

No. 2321, நெய்ச்சீலை நாடிசூத்திரம் பத்து.

NEYCCĪLAINĀḌISŪTTIRAMPATTU.

Pages, 3. Lines, 6 on a page.

Begins on fol. 34-(*a*) of the MS. described under No. D. 2316.

Complete.

Explains how, by wrapping, for about an hour and a quarter, the wrist of a patient with a piece of white cloth soaked in cow's ghee, and by subsequently feeling the *Vāta nāḍi* of the patient, one can say whether the patient can be cured of his disease or not.

Beginning :

சிவமயம் நெய்யில் நனைச்சீலை சூத்திரம்.

சீலையை நனைத்து வெற்றித்திறமணிக்கடையிற் சுற்றிக்
காலமே மூன்றேமுக்கால் நாழிகை கண்டபின்பு
சாலவே சீலைவாங்கித் தனிவிரல் வாததாடிக்
கோலமாய்க் குதித்துவாங்கிற் குறைந்திடுமரணமென்றே. (க)

வருந்தியே நனைத்தசீலை மணிக்கடை சுற்றிப்பின்பு
திருந்தியே மூன்றேமுக்கால் சென்ற பின்னுடைவாங்கிப்
பொருந்திய வாதநாடி புழுவென நெளியுமாகில்
அருந்தியே மருந்து செல்லுமவர் பிழைத்திருப்பர்தாமே. (உ)

நனைத்த வெண்சீலை தன்னை நடுமணிக்கடையிற் சுற்றி
நினைத்திடு மூன்று நாழிகை கடந்தபின் வாதநாடி
யணைத்த வாரியரே பார்க்கில் அறியதோர் வாதநாடி
சினத்த கண்ணரவு போலே சீறியே நெளியுமாகில்
இனத்தறி சாவு சொன்னேம் இருபத்திரண்டு நாளே. (௩)

மெல்லியே நனைத்த்சீலை மிகமணிக்கட்டிற் சுற்றிச்
சொல்லிய மூன்றேமுக்கால் நாழிகை சென்றபின்பு
அல்லியே யவிழ்த்துப் பார்க்கில் அமர்ந்திடும் வாதநாடி
யொல்கியே யுரைத்து வாங்கி லொன்பதா நாளிற்சாவே. (௪)

End :

. . . . . . யாய் நெய்யிற் சீலை
தோய்த்து கைசுற்றி வைத்து
கருதியநா[ளி](ழி)கை யொன்று
சென்று பின்னவிழ்த்துப் பார்க்கிற்
பருதிய வாத நாடி
பக்கஞ்சேர்ந் தெதிர்த்து வாங்கில்
மிகுதியாய்க் குருதிச்ச . . . .
முப்பது நாழிகை யிற்சாவே. (ம)

ஆனெய்யை நனைத்துச் சுற்றி
மணிக்கடைக் குறிப்பு நெய்யி
லூட்ட வேசுற்றிப் பார்த்து
உள்ளதோர் நன்மை தீமை
குறிப்புடன் ஆய்ந்து பார்த்துச்
செகதலம் விளைவதாக
நாடி வான்மீகர் சொன்னர்
நானென்று மறைந்திலேனே. (மக)

(கு. - பு.)—

இந்நூல், வெள்ளியதோர் சீலையை ஆவின் நெய்யில் நனைத்து அதை நோயாளரின் மணிக்கடைப் பாகத்தில் சுற்றிவைத்து மூன்று நாழிகை கழித்துப் பின்னர்க் கையிற் வாத நாடியைத் தொட்டுப் பார்த்து அதன் நிதானங்கொண்டறிந்துகொண்டு சாத்தியா - சாத்தியக் குறியினைக் குறிப்பாக வுணருமாற்றைச் சுருக்கமாகப் பதினேரு பாடல்களான் உணர்த்து கின்றது. இதனை "வான்மீகர்" என்னும் ஒரு சித்தர் பெரியாரது சீடர் ஒருவர் இயற்றியதாகத் தெரிகின்றதன்றி அவரது இயற் பெயர் ஒரு வாற்றானுமிதிலிருந்து விளங்கிற்றிலது. இதில் பதினேரு பாடலுமிருக் கின்றன. ஏடுகள் மிகவும் புழுக்களால் அரிக்கப்பெற்று முறிந்து கிடக் கின்றனவாதலின் படித்தற்கியலாவண்ணமாயிருக்கின்றது. **எழுத்துப் பிழையுடனுளது.**

No. 2322, வான்மீகர் தீபசூத்திரம் பத்து.
VĀNMĪKAR DĪPASŪTTIRAM PATTU.

Pages, 4. Lines, 6 on a page.

Begins on fol. 35-(a) of the MS. described under No. D. 2316.

Complete.

Same work as that described under No. R. 940 (h) of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. VI.

End :

ஏத்திய தீபந்தானு மிருசுடர் முனையைப்போலத
தோத்திடும் விளக்கை நோக்கிச் சொல்பவர் பயணமாவார்
மாத்திரை யுயிர்கலங்கி வந்திடுந் திங்களொன்றில்
நாற்றிசை யுலகுள்ளோர்க்கு நயம்பெறவுரைத்தா ரீசன். (௰க)

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 940 (h) நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியிலே இங்கு இறுதியிலே காட்டப்பெற்றவிச் செய்யுள் அதி பிரதியில் இல்லாதாய் அதிகமாயுளது. ஏடுகள் மிகச் சிதில மாயும் முறிந்தும் இருக்கின்றன. எழுத்துப் பிழைகள் உள.

No. 2323, வான்மீகர் பலவிரற்சூத்திரம் ஐந்து.
VĀNMĪKAR PALAVIRAṞCŪTTIRAM AINDU.

Pages, 2. Lines, 6 on a page.

Begins on fol. 36 (a) of the MS. described under No. D. 2316.

Complete.

Same work as that described under No. R. 940 (g) of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. VI.

(கு. - பு.)—

இச்சிறு நூல் மூவருடக் காடலாக்கு 940 (g) நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூலின் ஐந்து பாடல்களும் இருக்கின்றன. ஏடு மிகவும் புழு வரிக்கப் பெற்றுள்ளது. எழுத்து பிழைகளிருக்கின்றன.

No. 2324, வான்மீகர் உறுப்புச்சூத்திரம் பத்து.
VĀNMĪKAR UṞUPPUCCŪTTIRAM PATTU.

Pages, 4. Lines, 6 on a page.

Begins on fol. 37-(a) of the MS. described under No. D. 2316.

Complete.

Same work as that described under No. R. 940 (d) of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. VI.

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 940 (d) நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூலின் பத்துச் செய்யுளும் இருக்கின்றன. அங்கங்கே சிலசில பதங்கள் பிரதி பேதங்களுடன் காணப்படுகின்றன. ஏடுகள் மிகவும் புழுக்களால் அறிக்கப்பெற்று மிகச் சிதைந்து கிடைக்கின்றன. எழுத்துப் பிழைகள் இருக்கின்றன.

No. 2325, வான்மீகர் அடிதலை கயிற்றுச்சூத்திரம் பத்து.
VAṆMĪKAR AḌITALAI KAYIṞṞUCCŪTTIRAM PATTU.

Pages, 3. Lines, 6 on a page.

Begins on fol. 38 (b) of the MS. described under No. D. 2316.

Complete.

Same work as that described under No. R. 940 (e) of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. VI.

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 940 (e) நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூலின் பத்துப் பாடல்களும் சிலசில விடங்களில் பிரதிபேதங்களுடன் இருக்கின்றன. ஏடுகள் மிகவும் புழுக்களால் தின்னப்பெற்றுச் சிதைந்திருக்கின்றன. எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன.

No. 2326, அகத்தியர் குருநூல் வைத்தியம் அறுநூறு.
AKATTIYAR KURŪNŪL VAITTIYAM ARUNŪṞU.

Substance, palm-leaf. Size, 11 × 1⅜ and 10½ × 1¼ inches. Pages, 48. Lines 7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 130-a :

The other works herein are Siddhar pannūṟ pāḍaṟṟiraṭṭu 1-a. Tiru mūlar Śoccasūttiram 118-a. Bhōgar Āṟādhārakkaṭṭaḷai (Śempuśutti-muṟai) 124-a.

Incomplete.

Same work as that described under No. 948 (a) of the Triennial Catalogue of Tamil Manuscripts, Vol. VI.

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 948 (a) நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இந்தப் பிரதியில் இந்நூல் எண்பத்தொன்பதாவது பாடல் வரையிலுமேயுளது. ஏடுகள் நுனியிலே முறிந்து கிடக்கின்றன. "அகத்தியர் தண்டகம்" என்றதாய் ஒரு பெயர் இதற்குப் பெயராக ஆரம்பத்திலே குறிக்கப்பட்டுளதாதலின் இப்பெயரானும் இந்நூல் வழங்கப்பட்டு வந்தது போலும். எழுத்துப்பிழையுள. இதற்குப் பின்னர் (௰௬) என்ற இலக்கமிட்டு பூபதி மாத்திரையின் விவரம் எழுதப்பெற்றதோர் ஏடு காணப்படுகிறது. இது எந்தநூலைச் சார்ந்ததோ தெரியவில்லை. அதில் அடங்கிய பாடல்கள் (45 to 47) ஆகும்.

No. 2327, சித்தர் பன்னூற்பாடற்றிரட்டு.
SIDDHAR PANNŪṞ PĀḌAṞṞIRAṬṬU.

Pages, 164. Lines, 8 and 9 on a page.

Begins on fol. 1-a of the MS. described under No. D. 2326.

Complete.

A collection of verses from the metrical works on Alchemy and Medicine by Agattiyar, Bhōgar, Urōmariṣi, Koṅkaṇar, Śaṭṭaimuni, Bōdaimuni and other *Siddhas*. Contains various references to many similar works, and is thus valuable.

Beginning :

போகர் நிகண்டு (சூஉா) ஆயிரத்திருநூறு.

பத்தான பூநீற்றைப் பாண்டத்திற் போட்டு
. . . .ா மனுஷனுடை அமுரிதானும்
நித்தான ரெண்டுபத்துப் படிதான் வார்த்து
நெற்பாக அதட்டியே கலக்கிப் போட்டுக்
கத்தான கற்சுன்னம் படிதானைந்து
கனமான பாண்டத்திலளந்து போட்டு
சித்தான வமுரிபடி பத்து வார்த்துச்
சிறப்பாகக் கலக்கியே வேறேவையே. (க)

வேருன கல்லுப்பின் சுண்ணத்திற் பாதி
விரைந்துவொரு பாண்டத்திலளந்து போட்டு
ஆருன வமுரிபடி யைந்து வார்த்து
அதட்டியே கலக்கி வைத்து மூன்றுநாள்தான்
நன்ருன நாலாநாள் தெளிவிறுத்து
நலங்காமல் ஐந்தாநாள் தெளிவிறுத்து வாங்கி
முன்ருன மூன்றையுமே கூடவிட்டு
மீருமலடுப்பேற்றி யெரித்திடாயே. (உ)

அடுப்பேற்றி யெரித்திடுவாய்க் கமலம் போலே
அடிதனிலே பற்ருமல் அகப்பை கொண்டுவாங்கு
துடுப்பேற்றித் திரளுகிற பக்குவத்தில்
திலதமாய் நல்லெண்ணெய் படிதான்வாரு
அடுப்பேற்றி யெரித்துமே பதத்தில் வாங்கிப்
பரப்பான் சட்டியிலே யூற்றிப்போடு
குடுப்பேற்றி நீராறவிட்டுக் கத்திக்கொண்டு சீவிக்
கனமான நெல்லுப்பெ . . . போடே. (ந)

உரோமருஷி இருபத்தைந்தில் சொன்னது. உரோமர் உ௰௫.

வெளியாகத் தோன்றுமப்பா விந்தநூலில்
வேறுவித மொன்றுமில்லை வண்ணுறுதி
அளியாத பூநீரு நிலவுப்போடு
அன்றுரைத்த கங்கையுப்பு அமுரி நீரால்

மொளியாக வஞ்சுதிறங்காய்ச்சிப் பின்பு
 மோசமே வாராமல் ஏழுதிறங்காய்ச்சிக்
களியாக மெழுகுபதம் வரும்போதப்பா
 கடைமருந்தைச் சொல்லுகிறேன் கருதிக் கேளே. (க)

கேளப்பா வீரமுடன் பூரம்வெள்ளை
 இருபையுடன் வெடியுப்பு வூசியுப்பு
வாளப்பா சீனமொடு புனுகோடொக்க
 வளமாகத் தாக்கியே பொடித்துப் போடு
ஆளப்பா வண்டம் போலு ருட்டிக்கொண்டு
 அப்பனே ரவிதனிலே காய்ந்த பின்பு
தூளப்பா கடுங்கார மேத்தியேத்தித்
 துடியுள்ள சுண்ணும்பிற் புடத்தைப்போடே. (உ)

* * * * * *

உரோமருஷி ஐம்பது (ருῳ).

சுன்னத்திலுலே சோருங் கிளிஞ்சிதான்
 சுன்னங்குடோரி துறையாம் வழலைக்குச்
சுன்னமிதை விட்டாற் கற்சுன்னமேதேது
 சுன்னங் கருவித்தை [து](தி)றந்து விட்டேனே. (க)

இயல்பாக முன்சொன்ன சவுக்காரத்தை
 இன்பமுள்ள சுன்னமதாய்ச் செய்வதற்கு
மயலாகச் சொல்லுகிறேன் மைந்தாகேளு
 மார்க்கமுள்ள பழச்சாற்றிற் றேய்த்துத் தோய்த்து
நயமாக ரவி முகத்தில் நவநாள் போடு
 நாடிநின்ற வெண்ணெயெல்லாங் கக்கிப்போகும்
செயமான சவுக்காரம் எண்ணெய் போகிச்
 சிவா சிவா சவுக்காரங் கட்டிப்போச்சே. (உ)

கொங்கணவர் முதற்காண்டம் (ௐ) ஆயிரம்.

வாதத்துக்காதி யென்ற சவுக்காரந்தான்
 வைக்கிறதோர்முறை கேளுமக்காள் மக்காள்
வேதத்துக்காதியென்றசவுக்காரத்தை
 விரைந்து வொருகிளிபோலே விளங்கக்கட்டி
நீதத்துக்காதியென்ற கல்லுச்சுன்னம்
 நிலையாகக்கிளிதனக்குக்கீழ்மேல்விட்டுப்
பேதத்துக்காதியென்ற நீரைவார்த்துப்
 பேராக நீத்திமெள்ளக்கிளியை வாங்கே. (க)

வாங்கியிந்தப்படிமக்காள் சுன்னத்துள்ளே
 வைத்து வைத்து நீருவாருநூத்துப்பத்து
வோங்கியிந்தக்காரமெல்லாம் உள்ளேபுக்கு
 வுத்தமனே யெண்ணெயெல்லாமொழிந்து போகும்

தேங்கியிந்தக் கட்டிமக்காள் தந்தம்போலாம்
சிறப்பாக விதிலேத்தக்கடுங்காரங்கேளு
போங்கியிந்த வண்டநீர்ப்பலந்தானென்று
போட்டதிலே சுண்ணாம்பு தண்ணீர் வாரே. (உ)

வார்த்ததனைக்கரைத்து வைத்துத்தெளிவைவாங்கி
வாகாகத் தெளிவிலிடமருந்து கேளு
சேர்த்ததனைத்தெளிவிறுத்துச்சிராங்கைதானும்
சிறப்பான நாபியொடு வீரம் பூரம்
பேர்த்ததனைச்சாரமொடுவுரமுஞ்சூடன்
புகழான சீனமொடு குருவண்டேதான்
ச(ா)ர்த்ததனிற்குக்குடத்தின் வெண்மலமும் புனுகும்
சார்வாக வெண்காரம் கூடக்கூட்டே. (ங)

கூட்டுகிற வெடையேது என்றுயானல்
குறையாமல் வகையொன்று வராகனென்று
மூட்டுகிற முன்தெளிவிற்கரைத்துக்கூட்டி
முறையான பதினென்று மருந்துமொக்க
வூட்டுகிற வண்டம் மக்காள் ஐம்பத்தொன்று
வுடைத்ததின் வெண்கருவையிதிலே வாரு
ஆட்டுகிற வெருக்கம்பால் சேரைவார்த்து
அடைவாக மத்திச்சு அப்பால்வையே. (ச)

சவுக்காரத்துக்கு அண்டச்செயநீர் :

வைத்துடனே தெளிவாகும் மூன்று நாள் மக்காள்
வாய்திறந்து சொல்லாதே யண்டநீர்தான்
இத்துடைய வாட்டல்லோ சுன்னத்தாட்டு
இதைவிட்டால் கடுஞ்சுன்னமென்பதில்லை
வைத்துடனே முன்வைத்த சவுக்காரத்தைக்
கலந்து விந்த நீர்தோ [ச்சு] (ய்த்து) ரவியிற்போட்டு
பொய்த்துடனே போகாமற்றினந்தான்பத்துப்
பூட்டியந்தச்செயநீரிற்றுவைத்துப்போடே. (ரு)

* * *

அகத்தியர் முப்பூவைம்பது.

பாரடாமுன்னுரைத்தமுப்பூவெல்லாம்
பரிவாகச்சித்தருக்குஞ்சிவயோகிக்கும்
சேரடா வைம்பதுக்குள் சொன்னேன் முப்பூ
செகத்திலுள்ள மானிடர்கள் செய்யவேண்டி
ஊரடாவீறுகொன்ற வுலுத்தருக்கு
வுறுதியாய்த்தேகமெல்லாம் வலுத்துப்போச்சு
ஆரடாவெனைப்போலே சொல்லப்போறார்
ஆச்சரியம் முப்பூவின் அருமைபாரே. (க)

End :

அகத்தியர்வகாரம் (௨ா) இருநூறு. (௨)

* * * * *

அமர்ந்த தொரு ஆனைக்கல்லறியமாட்டார்
அப்பனே பிண்டமது அறியாமூடர்
சுமந்த பிணம் போற்றிரிவார்வேதைகாணூர்
சொல்லுகிறேன் உப்புவித்தை அண்டஞ்சாக
நமன்கையிற்போனவுயிர்மீண்டதாலுல்
நந்திசாரிந்த முறை நவில்வார் கேளு
சமனசிறு செய்நீராற் கொல்லுங்கொல்லுந்
தண்டானமது வுப்பே சாரமாமே. (௩)
சாரமென்றுங்காரமென்றும் வழலையென்பார்
தன்னுக்குள் பயனென்றுஞ்சொல்லார் சொல்லார்
பூரமென்றுஞ் சொல்வதற்குப் பிறவிபேசார்
புகழான மதயானைக் கல்லைப்பேசார்
வீரமென்றும் அண்டமென்றும் விள்ளார் விள்ளார்
வேதைகளைப்பாடிவிட்டார் வெறுநூலாகக்
காரமென்ற கடுங்கார மஞ்சாங்காய்ச்சல்
கம்பியுப்புப் பூரமப்பா அடிதான்பாரே. (௪)
அடியென்று முடியென்று மண்டபிண்ட
மாகாசஞ்சிவனுருப்புக் கம்பிக்காச்சு
பிடியென்றுஞ் சொல்வதற்குத் தண்ணீருண்டாம்
குலயானைபட்டு விடுஞ் சாரச்சுன்னம்
மடியுமடா சரக்கெல்லாமிதிலே மாட்ட
மக்களே காயசித்தி மகிழ்ந்து பண்ணே. (௫)

* * * * *

* * * * *

என்றதொருநீராலே சரக்கெல்லாஞ்சாகும்
ஏகாந்தவுப்பிதப்பா சத்தி சத்தி
வென்றதொருநீரப்பா வருணன் பிள்ளை
மேலெழுந்த ரவிதனக்குச் சுத்தியாச்சு
நன்றாககண்டறிந்தால் அவனேவாதி
ரசவாதமிதிலப்பா சூதங்கட்டுங்
குன்றான கெந்தகத்தைக்கொல்லுங் கொல்லுங்
குடிகெடுத்தசத்தியுடன்கூடும் போதே. (௮௪)
போதமென்றதாக நீரல்லான்மற்றும்
பொறியில்லை சத்தியில்லை சிவமுமில்லை
வாதமென்று காண்பதற்கு நீரைச்சேரு
வகையுடனே கைமுறையாய் வழியாய்ப்பாரு
நீதமென்ற நீராலே களிச்சுண்ணந்தான்
நிலத்ததப்பாவென்றாலே வாதந்தங்கும்
சூதமென்ற சூதமுடனுப்புத் தொட்டுத்
தொட்ட சரக்கெல்லாந்தான் செத்துப்போமே. (௮௫)

(கு. - பு.)

இந்நூல் இரஸவாத வைத்திய விஷயமான பாடற்றெருகுப்பாகும். இதில் அகத்தியர், போகர், உரோமருஷி, கொங்கணர், சட்டைமுனி, போதைமுனி ஆகிய பல சித்தர்ப்பெரியார்கள் இரஸவாத விஷயமாக வும் வைத்திய விஷயமாகவும் இயற்றிப்போந்த நூல்கள் பலவற்றுள்ளும் பெரும்பான்மையாக இரஸவாதத்தையுணர்த்தும் பாடல்கள் பலவும் திரட்டி எழுதி வைக்கப்பெற்றுள்ளன. இதில் 40, 41, 53 to 59, 66 to 89, 100, 101, 103, 106 to 109 ஆன ஏடுகள் காணவில்லை யாதலின் அவைகளில் அடங்கிய பாடல்கள் நீங்கலாக மற்றவையெல் லாமிருக்கின்றன. இந்தப்பிரதியிலிருந்து பலநூல்களின்பெயரும், அவை யீற்றின்மொத்தச்செய்யுளெண்ணிக்கைகளும், இன்னும் பல விஷயங்களும் அறியக்கிடக்கின்றனவாதலின் இது மிகவுமுபயோகமானதாகவிருக்கும். இதில் உள்ள பாடல்கள் இன்னின்ன நூல்களிலிருந்து திரட்டப்பட்டனவென் பதற்கும், இன்னின்ன பக்கங்களில்வந்துள்ளனவென்று உணர்தற்கும் ஒரு அட்டவணை முதலில் 3 பக்கங்களில் எழுதப்பெற்றிருக்கிறது. எழுத்துப் பிழையுள. 97 என்ற எண்ணிக்கையிட்டு (3) ஏடுகள் உள.

No. 2328, திருமூலர் சொச்சசூத்திரம்.

TIRUMŪLAR ŚOCCASŪTTIRAM.

Pages, 9. Lines, 9 on a page.

Begins on fol. 118-a of the MS. described under No. D. 2326.

Complete.

Appears to be a summary of a treatise on Alchemy, entitled *Muppū Irunūṟu*, by Tirumūlar.

Beginning :

திருமூலர் அருளும் சொச்சம் சூத்திரம் பாடல் (௩௨) முப்பத்திரண்டு. முப்பூ (உா) இருநூற்றுக்குச் சூத்திரம்.

குருவினடிபணியார் கோடி நூலாராய்வார்
வருவதுவுங் கற்பமெனும் வழியுமறியார்காணூர்
சருகுதுளியானது வுஞ்சமுசயமுந்தீரார்
ஒருபொருளுன்னுக்கு ளுயிரொன்றுங்காணுதே (க)

ஒருபொருளுன்னுக்குள் சிவமொன்றதுவிளுவுங்
கருவிதுவுங் கங்கை கடலுப்புமிங்கிருக்கத்
தெருவு தெருவாயலையத் தெளியுமோ வுன்மனது
வருமோ வழலைக்கனலில் மண்ணி(லி)லைபாரே (உ)

பாருஞ்சிவகங்கையது பாரிலேதுங்காணூர்
ஊருகுளமேருநதி வாறுநதியுமல்ல
காருவெனு மேகசல பனிதுளி(யு)மல்ல
ஆருமறியார் பொசிப்பினன்னமயமாமே (௩)

அன்னமயசுத்தசல வமுரியெனும்பேரு
சொன்னமயசத்த மொடாகாசமெனுங் கங்கை
நின்னயமுனக்குளபோனுள நிருவிசலமாகும்
உன்(ன)மயமே யன்னமய மொன்று பொருளாமே (௪)

* * * * *

எழுந்துசவம் பேசுமெனுமெவ்வுலகு முணர்வார்
கழிந்துவிடாச்சடமிருப்பக் கற்பமறிவோராய்
அழிந்துவிட ஓநினைவு ஆக்கையழியாமல்
பொழிந்தருவிக்கருக் குருவைப்போசனஞ் செய்வீரே (௬)

End :

வேறுகவி

குருவான தந்தை குணனந்தியப்பா
திருமூலனே செய்ய தொழிற் சொன்னேன்
கருவூரார் கொங்கணர் பேர் கொண்டிலற்றுந் ?
திருவருளென்னூற் றரிசனமுற்றே (௩௰௩)

முற்றும்.

(கு. - பு.)—

இந்நூல் இரஸவாத விஷயமாகும். திருமூலர் தாம் இயற்றிப்போந்த "முப்பூ இருநூறு" என்ற தொரு நூலுக்குச்சுருக்கமாக வியற்றப்பெற்ற தென்று தெரிகிறது. முப்பத்துமூன்று செய்யுட்களான் அமைந்துள்ளது. முற்றும் உள்ளது. எழுத்துப் பிழை மிகவுள. ஏடுகள் சிதலுற்றிருக்கின் றன.

No. 2329. போகர் ஆருதாரக்கட்டளை (செம்புசுத்திமுறை.)
BHŌGAR ĀṚĀDHĀRAKKAṬṬAḶAI (ŚEMPUŚUTTIMUṚAI).

Pages, 11. Lines, 7 on a page.

Begins on fol. 124-(a) of the MS. described under No. D. 2326.

Contains 28 stanzas only.

Contains verses related to Alchemy. This is a part of a larger work.

Beginning :

போகர் ஆருதாரக்கட்டளை (செம்புசுத்திமுறை).

பொன்னுன லோகத்திற் பிழைக்க வென்றல்
போக்கோடே துருசுக்குள் செம்பைக்கொல்லு
மண்ணுகேள் செம்புக்குண் மாளாவிட்டால்
வாதமொன்றுங் காணுர்கள் மார்க்கம் பொய்யாம்
பண்ணுனநூல் பாரு பங்கம்பாரு
பருவத்தில் தோய்த்தெடுக்கப்பதத்தைப்பாரு
தென்னுனரவிபடவே வெளுப்பாச்சென்று
சிறந்து மெச்சு ஊறுதே தெளிந்துபாரே. (க)

போட்டொன்ருய்க் குழம்பாக வைத்துக்கொண்டு
புகழாகச் செம்புபலம் நாலு வாங்கி
ஆட்டொன்ருயுருக்கிய திற்சாய்த்துவாநீ
அப்பனே பதினைந்துக் கதிகம்வேண்டாம்
நீட்டொன்ருய்ச் செம்பினுடையூறற் போகும்
நிலைத்தபின்பு இச்செம்பைக் குகைக்குள்வைத்து
மூட்டொன்ருய் அண்டமொன்று சாரமொன்று
புகழாகப் பலம்ரெண்டு பொரிக்காரங்காலே. (௩)

கால்ப்போடு சவ்வீரம் பலமும் நீதான்
கலந்தரைத்து ஒன்ருகக்கடுகத்தூவு
எல்ப்போடு செம்புருகி யாடும்போது
இயல்பாகக் குடுத்தேரு இம்முறையே மூக்கால்
மால்ப்போடச் செம்பினுடை யூறற்போகும்
வர்ணங்கள் வெளுப்பாகும் வாதிகாளே
சேல்ப்போடு இச்செம்பை வெள்ளிபத்தில்
சேரொன்று மாற்றஞ்சு திறமுமாமே. (௪)

திறமான செம்பொன்று வெள்ளிபத்தில்
சேர்த்துருக்கிச் செயிலிங்கங் குன்றிபோடு
அறமான தங்கமொரு பணந்தான்போடு.

* * * * *

End :—

வைத்திடு சுன்னமாய் வாரிதுரெயினை ?
இத்திசைச்சினம் இணங்கன் கல்லுப்புடன்
சத்தியாஞ்சூடன் சமனிவை யைந்தையும்
பத்திய கல்வத்தினிற் பாங்காட்டக்கேட்டிடே. (உஉ)

கேட்ட இணங்கன் கெடியான நீரில்முன்
ஆட்டிடில் சுன்னம் வகையாக நீ[த்தி](ற்றி)யே
ஆட்டிய நீரிலடைவாமிவ் வைந்தையும்
காட்டியவில்லை செய்கனலிலுலர்த்திடே. (உ௩)

கனலிலுலர்த்திக் கனப்புடம் போட்டிடு
வினவியெடுத்ததில் வெண்கருவிட்டரை
சனமானகாசுபோல் தட்டியனலிலே
இனமிதையூத வடங்காது சுன்னமே. (உ௪)

சுன்னத்திஞலே சுகமாய்க்குகைபிடி
சுன்னத்தைக் காசிடை தூக்கியே முன்வைத்த
அன்னத்தப்பால் கருவளமானவுப்புநீர்
இன்னத்திற்போட்டு இதமாய்க் கரைத்திடே. (உ௫)

கலந்தவுரம் பூரம் கார்நவாச்சாரம்
உலந்த சினஞ்சூடன் உப்பது நீருடன்
வலந்த வுவர்ப்பூவும் ஞானிவெண்காரமும்
பலந்தண்டசுன்னம் பரிவாளவீரமே. (உ௬)

வீரமுடனெல்லாம் விரவிபொடித்திடு
சாரமுன்னீரில் சாரித்து மூன்றுநாள்
பாரின் முன் பார்க்கப்பதமாஞ்செய் நீராம்
காரமுன்வைத்த வெண்கணிரைப் போட்டிடே. (உ௭)

போட்டுத்துவைத்துப் புகழாக மூன்றுநாள்
வாட்டுரவியில் மகத்தாங்கடுங்காரம்
காட்டிடச் சுன்னஞ் சகலசரக்கெல்லாம்
மூட்டிடக்கோடி முறை முறை சுன்னமே. (உ௮)

கு. - பு.:—இது, போகர் ஆறுதாரக்கட்டளையென்னும் நூலின் ஒரு பகுதியாகிய "செம்பு சுத்தி முறை" என்ற பகுதியெனக் காணப்படுகிறது. இதுவும் இதன் தலையிலிட்டபெயரான் விளங்குகிறது. இதில் இருபத்தெட்டுச் செய்யுட்களேயிருக்கின்றன. இந்நூல் இத்துணைத்து என்று அறிந்து கோடற்கு ஒரு ஆதாரமும் காணப்படவில்லை. இரஸவாத விஷயமானது. செம்பு சுத்தி முறையும் அதுகொண்டு பல காரியங்கள் செய்யுமாற்றையும் விளக்குகின்றது. எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன. ஒரு சிறிது புழுவரிக்கப் பெற்றுளது.

No. 2330. இரஸவாத நூல்.

IRASAVĀDANŪL.

Substance, palm-leaf. Size, 10¼ × 1 inches. Pages, 100. Lines, 4 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance, old.

Complete.

A work in 100 stanzas, on Alchemy. The author's name is not known.

Beginning :—

ஆதியாம்பூ நீர்வழலை யாதியந்தமானவெடிகம்பியு நேராய்
சோதியழுந்தநுணுக்கி நல்ல சுந்தரசட்டியிற்றீபட நாட்டிப்
பூதியாய்ப்போகம் நினைக்கவெந்தன் பொக்கிஷம்வெட்ட எண்
[ணெய்கழ[க்க](ற்ற)
நீதியை விள்ளுவன் கேளாய்நல்ல நினைவொடிருப்பார்க்கு
[மேதினியோர்க்கும். (க)

சிப்பிச் செயநீர்.

மேதினியேரியில் நின்றெழுந்து சிப்பிகள்
வாயைத்திறந்திடுங்காரம்
பூதிக்குகந்திடம் பூரம் நல்ல
பூவுடன் வீரமும் சேர்த்து அரைத்து
ஆதிக்குங் கதைநீராய் அதைப்
பிண்டக்கரு வெனுஞ்சொல்வார்
ஓதியுணர்ந்திடும் முத்தாலசிவ
யோகிக்கும் போகிக்கு முண்மையிதாமே. (உ)

உண்மையான ஞல்வகை நீரும் சிப்பி
ஒருவராகன் திட்டம் போடந்த நீரில்
தண்மையாம் புட்டிகட்கேத்தி யந்தச்
சதை தண்ணீரெண்டு சுருக்கிடுசாமம்
வண்மையாய்க்கலுவத்திலிட்டுப் பின்னும்
மாளவெலுமிச்சம்பழந் தண்ணீர் வார்த்து
கண்மைபோலு மரைத்து நன்ருய்க்
கலங்காமற் பில்லையை ரவியிலுணர்த்தி. (ரு)

உணர்த்தின பில்லையெடுத்து நல்ல
கற்சுண்ணும்புக்குள்ளே யுணர்வாயமைத்து
மணத்தையுண்டாக்கச் சொல்வேன்மன்னி
மாட்டியெரித்தும் மறுபடியாட்டிக்
குணத்தையறிந்து எரித்துச்சீராய்க்
குறையாமற் சாரணை நாலுதிறத்திற்
பிணத்தையுந் தட்டியெழுப்பு நல்ல
பேரான நீரது வொருவருங்காணர். (சு)

*   *   *   *   *
*   *   *   *   *

End :—

காணர்கள் கள்ளிப்பால்விட்டு வதைக்
கருதியே ஆட்டிடவெட்டுநாண்மட்டு
பூணர்கள் ரவியிலேபோடு புதுமை
பூணுமே வெந்திடும் ரவியிலேகண்டேன்
ஊணர்கள் அம்புவியிலும் மாந்தரறிவுற்று
உறுதியாய்ச் சொன்னது கண்டிடுங்காணும்
தோணுத பேச்சுமே தோணும் எந்தன்
தொரைசாமி பூசையைச் செய்தவர்க்கொக்கும். (கூகூ)

ஒக்குமேயான் சொன்ன பேச்சு விந்த
உரவான கைமுறைவொக்குமே பாரு
ஆர்க்குமே கண்ணிலேகாணும் எந்தன்
ஆண்டவன் சொல்லாலும் யானுமே விண்டேன்
தீர்க்கமாய்க் குருவையுங் கார்த்துச் சிவன்சத்தி
தீட்சையைத்திறமாக விண்டேனே யானும்
காக்கவும் எந்நாளும் வாசிக்கருவைக்
கண்டாலும் எப்போதும் வாழ்ந்திடலாமே. (ள)

கு. - பு. :—இந்நூல் இரஸவாத விஷயமானது. நூறு பாடல்களான் அமைந்திருக்கின்றது. இயற்றியவர் இன்னுரென்று விளங்கவில்லை. ஏடுகள் ஒரு சிறிது சிதைந்துள. எழுத்துப் பிழை மிகப் பொதிந்து கிடக்கின்றன. இதிலே சிப்பிச்செய்நீர், வெண்டாமரைப் பூகெந்தித்தைலம், வெண்காரச் செந்தூரம், வெள்ளைப்பாஷாணக்கட்டு, சவுக்கார வைப்பு, சூதக்கட்டு என்னும் இவைகளின் ஆக்குமுறைகள் எல்லாம் விரிவாகக்கூறப் பெற்றுள்ளன.

No. 2331. இரஸவாத நூல் சித்தர்மயம்.
IRASAVĀDANŪL SIDDHARMAYAM.

Substance, palm-leaf. Size, 13 × 1¼ inches. Pages, 90. Lines, 5 and 6 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

A treatise on *Yōga* and the various magical powers to be attained through it. Gives the particulars about various *Siddhas* like Agastya, Śaṭṭaimuni, Koṅkaṇar, etc.

Beginning :—

. . . . .
நேரப்பா மடங்களது எட்டுண்டப்பா
நிலையான பெருமையெல்லாம்
. . . . .
. . . . ஆருமில்லை
. . . அண்டத்தில் சித்தரப்பா கோடாகோடி
நேரப்பா சித்தர்மயம் அனந்தங்கோடி
நினைவாகவென்னாலே பாரு பாரு.
. . . . (க)

பாரப்பாவிப்படியே பார்க்குந்தோறும்
பரிவாக வைம்பது தான் யோசனைக்குமப்பால்
நேரப்பாதலந்தானு மொன்றுண்டப்பா
நிலையானதலப்பெருமை நிகழ்த்துறேனே
தேரப்பாமடந்தானும் இருபத்தெட்டுத்
தெளிவாகச் சித்தருடை வருக்கங்கேளு
பேரப்பா வவர்களுடைப்பெயரைக்கேளு
பெரிதான சித்தர்மயம் புகலுறேனே. (உ)

புகலுறேன் சித்தருடைய பெருமையெல்லாம்
பெரிதான திருமூலர்வர்க்கமப்பா
அரிதரிது . . . . அப்பனே மூலருக்குக்
காலாங்கிப்பிள்ளை
பெரிதான போகரவர் . . . . ஆகும்
பேரான கொங்கணர்தான் பெருமைமெத்த
. . . . கொங்கணர்க்கைந்நூறுக்கும்
திரண்டதோர் அன்பத்து வழுமாச்சே. (ங)

ஆச்சப்பா அவர்களுக்கு ஆயிரத்துமுந்நூறு
. . . . உண்டாச்சப்பா
நாச்சப்பா நடுமூலங் கண்டாரப்பா
நலமான குளிகைசித்தி வாதசித்தி
மூச்சப்பா யோகசித்தி ஞானசித்தி
. . . . அஷ்டாங்கஞ்சித்தி
தோச்சப்பா கவனசித்தி வாலைசித்தி
தூக்கான சிதம்பரந்தான் சித்தியாச்சே. (ச)

சித்தியடாக . . . . ன சோடசந்தான்சித்தி
    சிதையாமல் சுப்பிரமணியர் அறுகோணஞ்சித்தி
முத்தியென்ற முப்பத்து ஆறுஞ்சித்தி
    முதல் . . . னவடுகன்சித்தி
கத்தியுடை வீரருடன் காளிசித்தி
    கடிதான சிதம்பரந்தான் கைக்குள்ளாச்சு
பத்தியுடை நவகோண . . .
    . . . முக்கோணமாச்சே. (௫)

ஆச்சப்பா மடங்கள[து](வை) இருபத்தெட்டும்
    அப்பனே இவர்களது ஆட்ட . . .
. . . ச்சப்பா ககனத்தின்குளிகையாடி
    நலமான பெருமையெல்லாம் நாட்டம் பார்த்து
மூச்சப்பா யோகத்தின் பெருமைபார்த்து
    முடிவான ஞானத்தின் பெருமைபார்த்து
ஓச்சப்பா வாகாயமோடியாடி
    யுத்தமனேயிருக்கிறது மடங்கள் தோறும். (௬)

தோருன மடத்துக்கு நேரே மேற்கு
    துலையான யோசனை தானிருபத்தஞ்சு
ஆருன சதுரகிரியென்று நாமம்
    அப்பனே யடிமலையிலனந்தங்கோடி
நேரான கைலாசன் வர்க்கமான
    நிர்மலனுஞ் சட்டை முனியென்று நாமம்
பேருன பிள்ளைகள் தானிருநூற்றஞ்சு (உாடு)
    பெரிதான வர்க்கத்தின் பெருமைதானே. (௭)

பெரிதான பிண்ணுக்கீசர் என்று நாமம்
    பேரான பிள்ளைகள்தான் முப்பத்தாறு
அரிதான வகப்பைசித்தர் பாம்பாட்டிசித்தர்
    அப்பனே யவர்களுக்கு ஐம்பத்தேழு (ருஎ)
தெரிதான பிள்ளைகள்தான் தெரியச்சொன்னேன்
    திறமான கருவூரார் திறமைகேளு
மருவான சுரூபந்தான் வகைதானுகும்
    வரிசையாப் பிள்ளைகள்தான் பத்துமாமே. (௮)

ஆமப்பா வம்மலையிற் பின்னுங்கேளு
    அப்பனே நாதாக்கள் கோடாகோடி
தேமப்பா யோகிகள்தான் கோடாகோடி
    திறமான ஞானிகள்தான் கோடாகோடி
காமப்பா ரிஷிகளவர் கோடாகோடி
    கற்பமுண்ணுஞ் சித்தரவர் கோடாகோடி
ஓமப்பா வுத்தமர்கள் பிராணுயாமம்
    உச்சரிக்குஞ் சிவயோகியநந்தங்கோடி. (௯)

கோடியடா அம்மலேக்கு நேரே மேற்கு
　　கொதிப்பான தனமுண்டு குணத்தைக்கேளு
நாடியடா வம்மலேக்கு நாமதேனம்
　　நலமான சித்தர்மயம் கோடாகோடி
தேடிவரும் பிள்ளைகள்தான் அனந்தங்கோடி
　　திறமான ரசகுளிகை கிட்டுங்கிட்டும்
ஆடியடா வம்மலேக்குத் தென்மேற்காக
　　அப்பனே கன்னியா குமரியாமே. (ய)
குமரியாம் நகரத்துள் குணத்தைக்கேளு
　　குறிப்பான காடதுதான் யோசனேதான் நூறு
அம்மரியாம் அகத்தியன்றன் நீருக்குள்ளே
　　அப்பனே மலேதானும் ஆறுண்டப்பா
அமரியாம் வழிதெரிந்து போகவென்ருல்
　　வதையாக விக்கரையில் மாந்தர் நோன்று
பமிரியா மக்கரையில் மாந்தர் நோன்று
　　. . . க்ஷத்திற்சேருமடா பருவம்பாரே. (யக)
பாரப்பா **பொதிகையென்று** உலகத்தோர்கள்
　　பாங்கான சதுரகிரி மலேயைச் சொல்வார்
தேரப்பா பொதிகை யென்றமலே தானப்பா
　　நிலேயாத சமுத்திரத்திற் சாரல்நிற்கும்
ஓரப்பா மலேதானும் யோசனேயின்நூறு
　　உத்தமனே யுயரமது இருநூறுகும் (உா)
மூரப்பா மறிவதுதான் மூன்ருய் நிற்கும்
　　முக்கண்ணுன் சாபமதால் முக்கோணமாச்சே. (யஉ)
ஆச்சப்பா வம்மலேக்குச் சேரவென்ருல்
　　அப்பனே சிதம்பரத்தின் ஆட்டம்வேணும்
மூச்சப்பா யோகநிஷ்டை பிராணுயாமம்
　　முடிவான தமர்வாசல் திறத்தல்வேணும்
ஓச்சப்பா வாலேயுடை நிஷ்டை வேணும்
　　உததமனே வடுகனுடன் வீரன்வேணும்
. . . பபா நாலுவகை திறமுண்டாளுல்
　　நலமாக வம்மலேக்கு நாடலாமே. (யங)

* * * *

End :—

இராவணன் வேதம் : தெலுங்கு :—
பாரப்பா ராவணன்ருன் ஒருநாள் கேளு
　　பரிவாக வேதமது நாலுந்தூக்கி
நேரப்பரி வேதமென்ற நாலேயுந்தான்
　　நிலேயாகச் சீர்தூக்கிப்பார்க்கும்போது
ஆரப்பா ஆயிரத்துஎட்டு வேதம்
　　அப்பனே சிக்கறுத்துக் கோத்து விட்டான்
ஊரப்பா வூர்தோறும் பரவவில்லே
　　உத்தமனே யப்பவடா தெலுங்குண்டாச்சு. (ாகூ௩)

ஆச்சப்பாதமிழினுடைய பெருமைகேளு
அப்பனே அகத்தியர்தான் பண்ணுரப்பா
வாச்சப்பா வடுகருக்கு . . .
வகையான பிராமணர்க்கும் ஆடும்பாரு
காச்சப்பா கன்னடியார்க்காகும்பாரு
கலையான குச்சிலியார்க்காகும் பாரு
மாச்சப்பா மராட்டியர்க்குமாகும் பாரு
மறையான மிலேச்சருக்குமாகும் பாரே. (௱கூ௪)

யாரப்பா வனைவருக்கும் வேணும் வேணும்
பாங்கான சத்திரியர்க்கும் வேணும் வேணும்
நேரப்பா வைசியருக்கும் வேணும் வேணும்
நிலையான சூத்திரர்க்கும் வேணும் வேணும்
தேரப்பா துலுக்கருக்கும் வேணும் வேணும்
தெளிவான கலிங்கருக்கும் வேணும்வேணும்
ஏரப்பா வெடுத்திருக்கு மண்டத்தோர்க்கும்
இயலான தமிழதுதான் வேணும் பாரே. (௱கூ௫)

பாரப்பா அதலமொன்றும் விதலமொன்றும்
பரிவான நிதலமொன்றும் ஏழுலோகம்
ஏரப்பா மேலே மூலோகமுண்டு
மெய்யான லோகமடா சத்திய லோகம்
ஏரப்பா விப்படியே கூடிநின்றால்
இயலான வண்டமடா வொன்றுமாகும்
ஆரப்பா வாயிரத்தெட்டு அண்டமாகும்
அப்பனே யவர்களுக்குந் தமிழே வேணும். (௱கூ௬)

வேணுமடா சிதம்பரத்திற் பார்க்கவென்றால்
வரிவான தமிழதுதான் வேணும் வேணும்
பூணுமடா வாலையைத்தான் பூணவென்றால்
புகழான தமிழதுதான் வேணும் வேணும்
தோணுமடா சிவயோகம் வாசியோகம்
தூக்கவென்றால் தமிழதுதான் வேணும் வேணும்
ஆணுமடா வனைவருக்கும் வேணும் வேணும்
அப்பனே யனைவர்க்கும் அறிந்துபாரே. (௱கூ௭)

பாரப்பா கிருதயுகத்திற் சித்தரப்பா
பரிவான பெருக்கனுடைக்கணக்கைக்கேளு
நேரப்பா கோடியாயி ரண்டிலட்சம்
நிலையான திரேதாயுகத்திலி லட்சங்கோடி
தூரப்பா துவாபரத்துக் கோடிகேளு
தூக்கானவைம்பதென்ற வாயிரந்தான்
காரப்பா கலியுகத்தில் கோடிகேளு
கணக்காகவிருபத்தையாயிரந்தான்பாரே. (௱கூ௮)

பாரப்பா யுகந்தோறும் வளர்ச்சிகேளு
　　பரிவாக விப்படியே பெருகும்பாரு
வேரப்பா சித்தரென்று வேறெயெங்கும்
　　விதம்விதமாய்ச் சித்தருடைப்பெருக்கம் மெத்த
நேரப்பா விப்படியே யாயிரந்தான் கோடி
　　நிலையான லட்சமடா கலியுமானால்
காரப்பா கணக்கெல்லாஞ்சரியே யாச்சு
　　காணாத பரவெளியலடங்குவாரே. (௱௧௧)

அடங்குவார் சித்தரெல்லா மடங்கிப்போவார்
　　அப்பனே சோதியிலே கலப்பார்பாரு
கடங்குவார் கண்டு நன்றாய்க் களிகூர்வார்கள்
　　காணாதகாட்சியெல்லாங் காணுவார்கள்
சடங்குவார் சிலம்பொலியின் சத்தங் காண்பார்
　　சாத்திரத்தை யறிந்து நன்றாய்ச் சத்தங்கேளு
ஒடுங்குவார் நடனசக்தி பாதந்தன்னில்
　　உத்தமனே யொடுங்கிநன்றாய் உருகுவாரே. (உ௱)

உருகுவாரிப்படியே சித்தரப்பா
　　உத்தமனே சித்தருடைப்பெருமை கேளு
வருகுவார் யுகந்தோறுவளர்ந்து நிற்பார்
　　வானென்ற அண்டத்திலாடுவார்கள்
சருகுவார் சமாதியிலேயடங்கி நிற்பார்
　　சரமான வாசியைத்தான் உட்கொள்வார்கள்
பெருகுவாரிப்படியே பெ . . . .
　　. . . . .
　　. . . . . (உ௱௧)

கு. - பு. :—இந்நூல் சித்தராதற்குரிய யோகமுறைமையினையும், அவ்யோகத்தான் சகல விதமான சித்திகளையும் பெருமாற்றினையும், இவ்வுலகின் நிலப்பரப்படங்களினும் உள்ள சித்தர்கள் பலருடைய இருப்பிடங்களையும், இவ்வுலகிலே நாலு யுகங்களினும் சித்தர் குழாம் இதத்துணையனதோன்றுஇன்றன என்பதனையும், இன்னும் அகத்தியர், சட்டைமுனி, கொங்கணர், இடைக்காடர், திருமூலர், பாம்பாட்டி, முதலானோரது குடும்ப வர்க்கம் இத்துணையன, அவை இன்னின்ன மலைச்சாரல்களிலே யமைந்துள்ளன என்றிவை முதலிய விஷயங்கள் பலவற்றையும் எடுத்துக்கொண்டு தெற்றென விளக்குகின்றது. இது, இன்னாரால் இயற்றப்பெற்றது. இன்ன பெயருடையது. இத்துணைத்து என்றவைகட்குரிய சான்றுகளில் ஒன்றேனும் இதிலிருந்து விளங்கவில்லை. இங்குக் காணப்படும் செய்யுட்கள் இருநூற்றொன்றேயாம். இதில் இந்நூலாசிரியர், உலகில் ஒருவன் சித்தனாதற்கு விழைந்தானாகில் அவன்தான் தன்சீவிய காலத்தில் பதினாறு வயதுமுதற்கொண்டு யோகமுறைமையில் ஒழுகல் வேண்டு முறைமையினையும் அவனுக்குரிய ஆகார நியமத்தினையும், இன்னானுக்குச் சித்திக்குமென்ற

தினையும் நன்றாகவிளக்கியிருக்கிறார். நிற்க, கடையகத்தில் தெலுங்கு பாஷை இராவணன் வேதமோதின காலத்தே பிறந்ததென்று கூறிப்போந்து இறுதி யாகத் தமிழ்ப் பாஷையானது மிகப் பெருமை வாய்ந்தது, அது, யாவர்க் கும் இன்றியமையாதது, என்றதாயும் மிகவும் சிறப்பாகத் தம் வாயாரப் புகழ்திருக்கின்றார். ஏடுகள் பல புழுவரிக்கப்பெற்று மிகக்கிரந்த பாதங் களுடன் காணப்படுகின்றன.

No. 2332. அம்பிகாநந்தர் முப்பூ சூத்திரம் இருபத்தைந்து. AMBIKĀNANDAR MUPPŪSŪTTIRAM IRUPATHAINDU.

Pages, 16, lines, 5 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Begins on fol. 1 a. patañjaliyār vādattiravukōl 9-a. Irāmadēvar pakṣi-ṇiaimpadu 16-a. Ñānakkaḍāviḍai 30 a.

Complete.

A treatise, in verse, on Alchemy. Ambikānandar, the author, states, in the beginning of the work, that he is the third grandson of Tirumūlar, and the fourth son of Bhōgar and that he has written two other works, one on *Vāśiyōgam*, and another on Medicine, in addition to this work.

Beginning :

அம்பிகாநந்தர் மூப்பூசூத்திரம் இருபத்தைந்து.

கார் செறியும் மேனி விநாயகனே காப்பு
காலாங்கி காப்பு கருவூரார் காப்பு
மேர்வளரும் போகானந்தி காதங்காப்பு
மெய்யாகுங் கும்பமுனிபதமே காப்பு
தார்வளருஞ்சித்தரிருபாதங் காப்பு
சாத்திரமுஞ்சூத்திர முந்தானே காப்பு
பார்தனிலே வகாரதுறையிருபத்தைந்தும்
பாடுதற்கு மூலரெந்தன் பாட்டர் காப்பே. (க)

பாட்டர்திருமூலருக்கு மூன்றாம் பேரன்
பாங்கானபோகருக்கு நாலாம்பிள்ளை
தாட்டிமாம் அம்பிகானந்தனென்பேர்
தருவான அரனுமையின்தாளைப்போற்றி
மூட்டினேன் வாத மெழுநூற்றுப்பத்தில்
முந்நூற்றிருபதனில் வாசியோகம்
பூட்டினேன் வைத்தியத்திலீரைந்நூறும்
பொன்கயிலைச்சட்டர்கண்டு புகழ்ந்திட்டாரே. (உ)

புகழ்ந்திட்டகைலாச சட்டைநாதர்
புதல் வனுஞ்சுந்திரர் என்னூலைப்பார்த்து
இகழ்ந்திட்டார் நூல்களிலே மூலந்தன்னை
இப்படியும் வெளியாக்கலாகாதென்ன
நிகழ்ந்திட்ட இருவருக்குந்தர்க்கமாச்சு
நிமிஷத்தில் நூல்மறைத்தார் நின்றசித்தர்
புகழ்ந்திட்டேன் கோபத்தாலிந்தநூலைப்
பார்த்தவருமெனக்காகப் பயந்திட்டாரே. (ரு)

பயந்திட்டார் மூலவர்க்கச் சித்தரெல்லாம்
பகைபண்ணக்கூடாது இருபத்தைந்தும்
செயம்பெற்றநூலிதென்று வெளியில்விட்டார்
சித்தர் சொன்னநூல்களெல்லாமிதற்கீடல்ல
மயம்பெற்றவாதத்துக்காதி யென்றும்
வாசியென்ற யோகத்துக் காதியென்றும்
நயம்பெற்ற ஞானத்துக்காதியென்றும்
நலமான கற்பமுதற்குளிகை கேளே. (சு)

* * * * * *

ஒன்றான வங்கியென்ற வழலையுப்புக்
கொப்புமுண்டோ வென்னாலே யுரைக்கப்போமோ
குன்றானபூமியெல்லா மோடினாலும்
குருவழலை உப்பறியக்கூடாதையா
சென்றானப்பூமுலையாள் தன்னைப்பாரு
செங்கையிலே பூண்டகங்கணத்தைப்பாரு
நன்றான ரேக்கிருந்த பூமிபாரு
நல்லபச்சை மஞ்சள் நிறம் நாடிப்பாரே. (எ)

End :

வெளிவருமோ பரிபாஷை புதையல்தன்னை
விதியான வினையாளன் காண்பதல்லால்
தெளியாத மூடருக்கு நூன்மகத்துவம்
செப்புகின்ற உபமான தியானமெல்லாம்
வளியோடே தெரியாது தங்கள் தங்கள்
மனதுக்குச் சரிப்போனபடியே பார்ப்பார்
அளியாத அங்கியுப்புமாதிவுப்பும்
அண்டமென்றும் பிண்டமென்றுமாசிப்பாரே. (உரு)
ஆசிப்பார் வெள்ளிக்குமீனே யென்பார்
ஆத்துக்குள் பாஷணம் மீனே யென்பார்
வேசிப்பாங்கண்ணுக்குக் கடலேயென்பார்
வெங்கலத்தைக் கஞ்சமென்று விள்ளுவார்கள்
பாசையாய்ச்சொன்னாலு மறிவாரென்று
பழங்கதைபோல் சொல்லெடுத்துப்பாடிப்போட்டார்
தோசிகளா உங்களுக்கு இந்தப்பாஷை
தோய்வதெப்போசுகிருதவான் சோதிப்பானே, (உசு)

சோதிப்பாயங்கியுப்பை வழலையென்றும்
சுண்ணமென்றும் பாலைதிலச்சுடராமென்றும்
நாதியானகேசரத்தின் பிராணநிட்டை
ஞானமென்றும் யோகமென்று நல்லோர் காண்பார்
பேதிப்பான் சாரணைக்குப்புடமாமென்றும்
பெரிதான கற்பமதேரசமாமென்றும்
சாதிப்பானிதற்கெல்லாமனமாமென்றுஞ்
சாத்திரமும் இருபத்து ஐந்துமுற்றே. (உரு)

(கு. - பு.)—

இந்நூல் இரஸவாத விஷயமாய் இருபத்தைந்து பாடல்களாகவமைந்துள்ளது. "அம்பிகாநந்தர்" என்னும் சித்தர்ப்பெரியாரால் இயற்றப்பெற்றதாகும். இப்பிரதியில் இது முற்றும் உளது. நூலாரம்பத்தில் இந்நூலாசிரியர் தம்மைத் திருமூலருக்கு மூன்றும்பேரன் என்றும், போகருக்கு நாலாம்பிள்ளையென்றும், தமக்குப் பெயர் "அம்பிகாநந்தன்" என்றும் இரஸவாத விஷயமாக எழுநூற்றுப்பத்துப்பாடல்களில் நூலொன்றும், வாசியோகவிஷயமாக முந்நூற்றிருபது பாடல்களில் நூலொன்றும், வைத்தியத்தில் ஆயிரம் பாடல்களில் அமைந்த நூலொன்றும் தாம் இயற்றியிருப்பதாகவும் இரண்டாம் பாடலிலேயுணர்த்தியிருக்கின்றூர். எழுத்துப்பிழையுள.

No. 2333, பதஞ்சலியார் வாதத்திறவுகோல் இருபது.
PATAÑJALIYĀR VĀDATTIṞAVUKŌL IRUPADU.

Pages, 13. Lines, 5 on a page.

Begins on fol. 9-a of the M S described under No. D. 2332.

Complete.

A treatise on Alchemy. It is made out from the remarks in the beginning of this work that this is a summary of another work, consisting of two hundred verses, on the same subject by Patañjali, the author.

Beginning :

பதஞ்சலியார் சந்தப்பா இருநூற்றுக்குச் சுருக்கம் (உக) இருபத்தொன்று.

வாதத்திறவுகோல்.

பூமலியும் கணபதி தன்பாதம்போற்றிப்
புகழ்பெரிய வாதத்தின் திறவுகோலை
நாமுரைப்போ மைந்நான்கு பாடற்குள்ளே
நலமான வாதவித்தை ஞானமார்க்கம்
சோமனுற்ற வேணியனூர் உபதேசத்தால்
துறையறியும் பதஞ்சலிதன் சூத்திரத்தில்
எமவித்தைக்காதியென்ற வத்துவுப்பு
இதையறியமாட்டாமல் ஏங்கினூரே, (க).

ஏங்கினூர் வஸ்த்துவுப்பைக் கண்டாப்போலே
இத்தாலேயிருக்குதென்பார் எத்தாலென்றால்
பாங்கியர்கள் தீட்டமென்பார் விந்தாமென்பார்
பன்னிரண்டு பதினாறும் பருவமென்பார்
தாங்கிவளர்த்திட்ட தலைப்பிள்ளை யென்பார்
சமாதியிலே வைத்திருக்குந்தலையோடென்பார்
தூங்கையிலே சொப்பனத்தில் ஆயிவந்து
சொன்னதென்பார் பூடென்பார் சுத்தியென்பார். (உ)

சுகியென்பார் கோழிமுட்டை கிளிஞ்சிரெண்டும்
சுத்தசலமானுக்காற் தொழிலாமென்றும்
தகையென்ன செவிநஞ்சு கண்ணிரண்டும்
கோசமென்றும் பீசமென்றும் குருவண்டென்றும்
திகையாத கடத்தினில் ஐங்காய மென்றும்
சிகையென்றும் பூநாகத் தெளிவென்பாரே. (௩)

End :

கண்டுபார் பிராணயாம மாதிமார்க்கங்
காட்சிபெற்றார் கற்பூரத்தேகமாகும்
பண்டு சொன்ன பரத்தினடி விசுத்திமூலம்
பராபரமாங்குருச் சொல்லப்பலிக்கும் மூலம்
கண்டமடித்துண்ணுக்கிற் கும்பகத்தால்
கால் நிறுத்தியுள்சடத்தைக் காணவேணும்
மண்டலத்தில் வஸ்த்து வுப்பைக்காணவென்றால்
பண்பார்த்துப்பண்பார்த்து வாழுவீரே. (உ௰)

வாளவேநடுவெழுத்துக்காதாரத்தை
மாட்டிவைக்கத் தலையெழுத்துப்பிரகாசிக்கும்
மீளவே கடையெழுத்து ஓடாதப்பா
விட்டெழுத்துந் தொட்டெழுத்தும் தலைகீழாச்சு
தாளவே வேண்டாங்காண் பிராணவாய்வு
சககிரதளபானம் உண்ணச்சாவு போச்சு
கோளுமே வராது பரம் நீயாவாய்
கூறிய வாதத்தின் திறவுகோல்முற்றே. (உக)

(கு. - பு.)—

இந்நூல் இரஸவாத விஷயமானது. இருபது செய்யுட்களான் அமைந்துளது. இது, பதஞ்சலியார் தாம் சந்தப்பாவானியற்றியதோர் இருநூறு பாடல்களைக்கொண்ட நூலுக்குச் சுருக்கமாய் அமைத்ததென்று இதன் தலையிற்காணும் ஓர் தொடர்மொழியான் தெரிகின்றது. மற்று, "கிடைக்குமிந்தநூலுக்கு முன்னூலய்யா, கெட்டியாய்ப்புதைத்துவைத்தேன் அந்த நூலில், முடிக்கனலும் அடிப்புனலும் நடுக்கான்மூன்றும், மோசமின்றிப்பாடிவிட்டேன் இருநூறுசந்தம், கொடைக்கொருவன் என்பதுபோல் இந்த நூலிற் கூறுவேன் வஸ்த்துவுப்பின்குறிப்பொன்றைத் தான், உடைக்கவென்றால் முடிக்கனல் அக்கினிப்பூ உள்ளே யுற்றவிடம்

வைத்து வுப்பென்றுரைக்கலாமே.'' (மக) என்று காணப்படும் பதி ஞேராஞ்செய்யுளாலும் வலியுறுகின்றது. இப்பிரதியில் இருபத்தோரு பாடல்களுமிருக்கின்றன: எழுத்துப்பிழை மிகவாய்க் காணப்படுகின்றன.

No. 2334, இராமதேவர் பட்சிணி ஐம்பது.
IRĀMADĒVAR PAKṢIṆI AIMPADU.

Pages, 28. Lines, 6 on a page.

Begins on fol. 16-a of the M.S. described under No. D. 2332.

Complete.

Same work as that described under Nos. R. 201 (b), R. 275 (f) of the Triennial Catalogue of Tamil Manuscripts. Vol. II.

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 201 (b) 275 (f) ஆகிய இந்நம்பர் களில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூலின் ஐம்பது செய்யுட்களும் இருக்கின்றன. ஷெ பிரதிகளில் இறுதியிலே (51) ஆவது பாடலாகக்காணப்பெறும் "எட்டு மிரண்டுமறிந்தவர்க்கே யெய்துமெய் தும்" என்ற விப்பாடல் இப்பிரதியில் காணப்பெறவில்லை. எல்லாப் பாடல்களிலும் பிரதிபேதங்காணப்படுகின்றன. எழுத்துப்பிழை மிகவும் காணப்படுகின்றன. இது முடிந்த பின்னர் "கடாவிடை" என்ற தலையங்கத்தின்கீழ் ஒரு நூல் உக்திபிரத்யுக்தி ரூபமாய் அமைந்துள்ளது. அது ஞானவிஷயம்போலும்.

No. 2335, ஞானக்கடாவிடை.
JÑĀNAKKAḌĀVIḌAI.

Pages, 7. Lines, 6 on a page.

Begins on fol. 30 a of the M.S. described under No. D. 2332.

Incomplete.

Similar to the work described under No. D. 1942 of the Descriptive Catalogue of Tamil Manuscripts. Vol. V.

Beginning:

கேள்வி.

எண்டி கிழவி எங்கிருப்பாய்
எந்தத்தேசஞ் சொல்லாய்
என்னபாடு பட்டுப்போறாய்
எந்தனுக்குரை செய்வாய். (க)

உத்திரம்.

கொச்சிமலை கோவைமலை, பிச்சிமலையென் நாடு
மொச்சியிருக்கும் பெரியோர் உச்சிமலை யென் நாடு, (உ)

கேள்வி.

மொச்சியிருந்தமலையன்ன உச்சிமலையென்ன கிழவி
உள்ளசேதி சொல்லிவிடு உச்சிதமாய்க் கேட்பேன். (௩)

கைபார்க்கவேணுமாஞல் காட்டு கையைக் கண்ணே
காதலவன் தேடிடுவான் காணுமல் வந்தேன். (௪)

காதலவன் ஆர்கிழவி காணவேணும் ஆயாள்
துள்ளுகிழவன் உந்தன்மீதில்தோணுமோ சொல்லாயாள். (௫)

அடிபோடி அம்மம்மா அவன்பேரைச் சொன்ஞல்
ஆருக்கப்பால் ஊருக்கப்பால் ஆரும் நாடார் சொன்னேன். (௬)

அண்டரென்றுந் தொண்டுசெய்யுமருளேபோற்றி
அத்தன் முனி அப்பனுக்கு அருளாய் போற்றி
விண்டவர்கள் கண்டவரே கணேசர் போற்றி
விடுபட்ட யானையுமாய் நின்ருய் போற்றி
குண்டலியில் நின்றகுருபரனே போற்றி
குருவாக நின்றவுன்னைப்போற்றினேனே . . .
என்நாடு பொன்ஞடு வெள்ளிமலைநாடு
வேடிக்கையாய் நான்வந்தேன் வீதிதனைப்பார்க்க
கஞ்சனூரெல்லையிலே கனத்திருந்த என்னை
கனத்திருந்த என்கணவன் பின்னேபோகச் சொல்லிக்
காட்டுமென்ருர் உன்னை . . . . . .
தனியொருத்தி யிங்கிருந்தால் தாளுமோ சொல்பூமி
தவருத வுன் விரதந்தாக்கிப்பிடிப்பாயே
பூர்த்தகிழம் வெளுத்தகிழம் பழுத்தகிழம் அம்மே
பேரான வெள்ளியங்கிரி பேராஞேன் கண்ணே. (௭)

End :

நில்லென்று சொன்னவரே நீயே யிதைச்சொல்லும் அய்ய
நீணிலத்திலுண்டோ தான் நின்றதெங்கே சொல்லும்
கல்லுமலை பொன்னுமலை வெள்ளியாமதுவொன்று
கருத்தளிந்து பார்த்தெடுத்தால் கனமெடுக்கலாமே
சின்னவளே பெரியவளே பொன்னுமாங்காய் காய்க்கும்[பெண்ணே
மின்னற்பூவும் சொர்னக்காயுமெத்த பூத்துப்பழுக்கும். (௩௩)
சுத்தமான செங்கல்லொன்று சார்ந்திருந்தால் பூர்க்கும்
புத்தமான வெங்கலத்திற் பொருந்திப்பார்த்தால் நீர்க்கும். (௩௪)
மேகமுண்டு நீரையள்ளிக்கெர்ப்பமானவாறுபோல்
நீரையுண்டு பூமி மீதில் நின்ற வாற்றைப்பாருமே. (௩௫)

(கு. - பு.)—

இச்சிறு நூல் சித்தர் நூல் வகையினைச் சார்ந்ததாய் யோகம் ஞானம் இரஸவாதம் என்னுமிவைகளையுணர்த்துவதென்று தெரிகிறது. இது இன்ஞரால் இயற்றப்பெற்றதென்றும் இத்துணைத்து என்றும் இன்ன பெயருடையது என்றும் இதிலிருந்து ஒருவாற்ருனும் விளங்கவில்லை; இடையில் இரண்டொரு இடங்களில் மகடூஉ முன்னிலையதாயும் "சிங்கி"

எனவிளித்துக் கூறப்பெற்றதாயும் குறத்தி பேசும் முறையிலே இழிந்த சொற்களான் அமையப்பெற்றதாயும் கடாவிடையுருவமாயும் அமைந்து உள்ளது. இதன்கண் வந்துள்ள பல சொற்களின் பொருள்களும் சித்தர் நூல்களிலேயுள்ள பரிபாஷையிலே பெரிதும் பழகிப்போந்தவர்க்கே எளிதில் புலனாகும். "இரட்டுற மொழிதல்" (சிலேஷை) என்னும் தந்திர யுக்தியால் பொருள் கொள்ளவேண்டியதாயிருக்கிறது. "குறம்" என்ற பிரபந்த வகையிலே சார்ந்தது போல் தோன்றுகின்றது. எழுத்துப்பிழை மிகவும் பொதிந்து கிடக்கின்றன. இங்கு முப்பத்தைந்து (35) கண்ணிகளே உள வாதலின் இந்நூல் முற்றுப்பெறவில்லை. மேலும் உள்ள பகுதியை யெழுதிவைக்க வெற்றேடுகளும் (2) கோக்கப்பட்டிருக்கின்றன.

No. 2336. உபநிடதவாதம் (சுத்தவேதாந்தக்கட்டளை.)
UPANIḌADAVĀDAM (ŚUDDHAVĒDĀNTAKKAṬṬAḶAI).

Substance, palm-leaf. Size 8 × 1 inches, pages, 20. Lines, 8 and 9 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

Similar to the work described under No. D. 1552 of the Descriptive Catalogue of Tamil Manuscripts. Vol. III.

Beginning :

உபநிடதவாதம்.

சுத்த வேதாந்தக்கட்டளை வருமாறு எதென்னில் ; மகா வாக்கியம் சொல்லப்பட்ட ஞானமே ஞானம். அதை யல்லாமற் சொல்லப்பட்ட ஞானங்களெல்லாம் அறியுமிடத்தில் அஞ்ஞானமேயாம். ஆனபடியினாலே சுத்த வேதாந்தஞ் சொல்லப்பட்ட பரீச்சையை ஆசாரியர் சீடனுக்கு அனுக்கிரகம் பண்ணுகிறார். அதெப்படியென்னில் இருக்கு யஜுஸ் ஸாமம் அதர்வணம் என்கிற நாலுவேதமும் இரண்டு பிரகாரமாயிருக்கும். அதெப்படியென்னில், அற்பசுருதி வாக்கியமென்றும் பிரபலசுருதி வாக்கியம் என்றுஞ் சொல்லப்படும். இதில் அற்பசுருதி வாக்கியம் கன்ம காண்டத்தைச் சொல்லும், பிரபல சுருதி வாக்கியம் அத்தியாத்மகமாகிய ஞான காண்டத்தைச் சொல்லும். இது முப்பத்திரண்டு உபநிடத்தாயிருக்கும். இது நாலு வாக்கியங்களைப் பிரதிபாதிக்கும். அதேதென்னில் பிரஞ் ஞானம் பிரமம், அகம்பிரம்மாஸ்மி, தத்துவமசி, அயமாத்மா பிரம்மம் என்கிற நாலு வாக்கியமும் சீவபர ஐக்கியத்தைச் சொல்லும்.

End :

. . . . ஆதலால் இந்த மூன்று அவத்தையும் நீயல்ல. அதெப்படியென்னில் சாக்கிரமெழுபாதியுடனே கூடி விளங்குமென்றுஞ் சாக்கிரஞ் சொப்பனத்தில் அழியுமென்றும் இப்படியுன்னால் அறியப் படுகையினால் அறியப்படுகையினாலே சாக்கிரமும் நீயல்ல. சொப்பனந் தான் நானோ வென்னில் சொற்பனமுநீயல்ல. அதெப்படி நானல்லவெனில் சொப்பனம் சாக்கிரத்தின் வாதனையென்றுஞ் சொப்பனம் சுழுப்தியில் அழியுமென்றும் இப்படி உன்னால் அறியப்படுகையினாலே சொப்பனமும் நீயல்ல. சுழுப்திதான் நானோவென்னில், சுழுப்தியும் நீயல்ல. அது எப்படி நான் அல்லவென்னில் பிராணனேயாதாரம் என்றும் இரண்டவத்தையினுடையொழிவென்றும் இப்படி உன்னால் அறியப்படுகையினாலே

சுழுத்தியும் நீயல்ல. இனி நான் யாரோவென்னில் இப்படி மூன்ற வுத்தையும் உணர்ந்து அவைகழன்று உணர்வாய் நின்று விளங்குகிற துரீயம் காரணம். நீயாகிற சொரூபத்தையாக்கும் மகாவாக்கியம் சுத்த த்வம் பதார்த்தம் சொல்லப்பட்டது. ? இனி, தத்பதார்த்தம் சொல்லு கிறோம். தத்பத முக்கியத்தை மனனம் செய் நீ. அதெப்படியென்னில், ஸர்வஞ்ஞன். [சிறுவக்கினன்] ஸர்வ காரணன். ஸர்வாந்தர்யாமி. ஸர்வேசுவரன். ஸர்வ சிருட்டி ஸர்வஸ்திதி ஸர்வஸம்ஹாரகாரகன். இதுதத்பதமு. . . .

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 1552 ஆவது நம்பரில் வந்துள்ள தத்துவாமிருதக்கட்டளையென்ற நூல்போலே யிராநின்றது. இப்பிரதி யில் இது முற்றும் இல்லை. எழுத்துப்பிழை மிகவும் காணப்படுகின்றன. ஏடுகள் சிதலுற்றுச் சிதைந்திருக்கின்றன.

No. 2337. வனமூலிகை பிரயோக வண்ணம்.

VANAMŪLIKAI PIRAYŌGA VAṆṆAM.

Substance, palm-leaf. Size, $8\frac{1}{4} \times 1\frac{1}{16}$ inches. Pages, 9. Lines, 8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Explains how to use the various herbs, found in forests, as remedies for diseases.

Beginning :—

வனமூலிகை பிரயோகம் வண்ணம்.

சம்புடனே வேர் விரையை, யுண்பவர்க்கு
கிராணி மூலத், தென்புடனே தீருமென்று,
கும்பமுனி தானுரைத்தார்
சித்திரபிலத்தின் மூலம், மெத்தாவலாய்க்
கொணர்ந்து, சத்தாகிலுங் கஷாயம்,
வைத்தாகிலுங் குடிக்கில்,
இரத்தமொடு சீதமும், பெருத்ததொரு
மேல்வயிறு, மத்திசுரதாபமுடன்
இத்தனை நோயேகிவிடும்
நிலவாகை பேருரைக்கில், மலைபோலு
முதுவயிறு, குலைவாய்க்குலைந்து வது,
நிலையாது போகும் நிசம்
தும்பையது தான்குடிக்கில்
அம்புவிதுவே கொடிய
பம்பரம்போலே சுழற்றும்
வேம்பு பித்தமே யகற்றும்
கரிசலாங்கண்ணில் மாதர், பிரியராவர்
வசியமுண்டு, தெரியாதணவிழுங்குந்,
தரியாது பாண்டிருமல்
ஆவாரை பிரமேகமகத்துமே

(ஐ)

,, (க)

சங்கதனில் வேர்பொடியை
யுங்கவதின் மேகமெல்லாம்
இங்கிதமாயேகுமென்றும்
மங்கைபாகர்தாமுரைத்தார்
தழுதாழை வேர் சமூலம்
வழுகாமலே கொணர்ந்து
நழுவாமலே யரைத்து
விழுதோடவேயுணவே
சித்தமதில் வாதமெல்லாம்
மெத்தவதி சூலைகளும்
சத்து நிலாதே யோடும்
வித்தகமாய்ச் சூனிமூடக்
கொத்தானும் வேர் சமூலம்
மெத்தாகவே யெடுத்து
வித்தாரமாயரைத்து
அத்தாவலாயுண்ணவே
கட்டுகள் மலத்தில் சீதம்
விட்டுவிடுமே யிடுப்பில்
குட்டுவலிதானுமோடுந்
திட்டமதாய்ச் செய்கலாகும்
முக்கால் நல்வேளைதன்னைச்
சுக்காகவே யுணர்த்தித்
திக்காமலே யிடித்து
விக்காமலேயருந்த
வயிறுது பேதிகளும்
சுயமாகவே சுரங்கள்
தயவாகவே யடங்கும்
நயமாகுங் காயசித்தி (ஐ)
ஆதொண்டை தலைவலியை யாற்றுமே (வ)

End :—

குன்றிதனையே யுணவே
சன்னியுடன் வேர்வைமெத்த
நன்னய சுரோணிதமும்
விண்ணிலகன்றேடுஞ்சிறு
பீனைநீர் கட்டகலும்
வேளைவாதங்களுடன்
தாளையொம முலையில்
மூளைநோய் தாளகலும்
வட்டமெனும் பேய்மருட்டி
துட்டசுரம் போயகலும்
சுட்டியதிலான விஷம்
மட்டிலரும் வாந்தி சத்தி

பேய்ப்பீர்க்கு நாமத்தை
வாய்ப்பாகவே யுணவே
போய்ப்பாயும் நஞ்சுவிஷம்
சாய்ப்பாகக் கட்டிவிடும்
புங்கதனில் மூலிகையில்
மங்குசொறி தேமல்களும்
பொங்கு அண்டவாத சன்னி
இங்கிதமா யோடும்புரை
மாக்கொளுந்தியினல் நசியம்
மூக்கதனிலே விடவே
தாக்குடனே கூடும் வலி
போக்கிவிடுமே தலையில்
ஆரறிவார் மூலிகை பிரயோகமே. (௯)

திருச்சிற்றம்பலம்.

பிரமாதீசஞு மார்கழிமீ ௰௧௨ வேங்கடாசலம் எழுதி
முகிந்த மூலிகை பிரயோகம்

கு.பு.—

இந்நூல், வனமூலிகைகள் பலவற்றையும் இன்னின்ன விதமாகப் பிரயோகித்தால் இன்னின்ன நோய்கள் தீரும் என்னுமதைத் தெளிவாகத் தெரிவிக்கின்றது. இதில் சுமார் பத்துப்பாடல்களே யிருக்கின்றன. இது, இன்னரால் இயற்றப்பெற்றது என்று ஒரு சிறிதும் விளங்கவில்லை. ஏடுகள் ஒரு சிறிது சிதைந்திருக்கின்றன. எழுத்துப்பிழைகள் மிகுந்திருக்கின்றன.

No. 2338. பொய்யாமொழீசர் குறவஞ்சி.
POYYĀMOḺĪSAR KUṚAVAÑJI.

Substance, palm-leaf. Size, 13 × $1\frac{1}{16}$ inches. Pages, 56. Lines, 8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

A poem, in the *Kuṛavañci* style, in praise of God Poyyāmoḻīśa (Śiva) of Poygaippāhai. It has to be inferred from the last stanza that Cidambara Tattuvaliṅga Ayyan was the author of this poem.

Beginning :—

பொய்கைப்பாகை பொய்யா மொழீசுவரர்பேரில்
குறவஞ்சி பிரபந்தம் :—

தார்கொண்ட சடையர் மழுப்படைய ரொருவிடையர்
தையல் பார்வதிபாகர் பொய்கைப்பாகையில் வாழ்
சீர்கொண்ட பொய்யாத மொழிப்பரமர் மீது திற
மிஞ்சு குறவஞ்சிப் பிரபந்தம் பாடக்

கூர்கொண்ட இளர்மருப்பன் வளர்பொருப்பனளித்த
குமரிசுதன் கமலபதன் குஞ்சர நன்முகவன்
கார்கொண்ட மெய்யநமதய்யன் மதகும்ப கற்பகத்தைப்
பொற்பகத்திற் கருதுவன் காத்திடவே (க)

தத்துவலிங்கந்துணை ஹேவிளம்பிஸ்ரீ புரட்டாசிமீ 2-ந்தேதி துவாதசி திதியும் திருவோண நட்சத்திரமுங்கூடின சுபதினத்திலே பொய்கைபாக்கம் குப்புடையான் பொய்யாத மொழி ஈசுவரர்பேரில் குறவஞ்சிப் பிரபந்தம் எழுதத்தொடங்கினது. தத்துவலிங்கம் துணை. பொய்யாத மொழீசுவரர் துணையாகவும். குருகடாட்சம் உண்டாகவும்.

பனிமதி நதிபொதி சடையுடையவர் பசு
பதிவன மிகுபொய்கைப் பாகையிலுறைதரு
மேகரநேகர் பராபர ரூபசிவன் மனதினில் நினைபவர்
கதிபெற வுதவிசெய் வாகர **பொய்யாதவர்மேல்**
மதுரிதமிஞ்சிய செஞ்சொலின்ன **குறவஞ்சிதனைப்பாட**
அனுதினமியலிசை யறிபுலவர்களுள்
மறைதல மதிலுறை வெள்ளம்புசநாயகி
பங்கருமாமுகிலாகனுமாகனக
கனகிரி நிகரிரு தனவரை மகள்பல
கடவுளர் தவமுனிவோர்
கதிர்மதி திசையினரிவர்கள் தனிலகிய
கமலபதந்துணையே
நாட்டையத்தரு :—
பூகமுடனுக மிக மாகமடர் சொல்லதிகழ்
பொய்கைபாய்கையில் மருவு
மெய்யர் மழுக்கையர் ஆஆ
மேக நிகரான வரி காணளிய தானுமிசை
விந்தை **குறவஞ்சிப் பிரபந்தத் தமிழ்பாட** ஆஆ
நாகவிறை யோக சுதை நாகவு மாரிதரு
நாதரிருபாதருயர் ஞானகுருராயர் ஆஆ
சேகரமதாகுங்குற மாதையணை நீதரிசை
சீலவடி வேலிரு காலைமறவேன் ஆஆ

* * * *

End :

தனி வழியாக நீ போன கொழுப்பேது
சங்கையில்லாமலே சிங்கி
எக்கச்சக்கம் பேசாதே உன்னுண்டைச்சியார்
சித்தஞ்சரிப் போனபடி போவேன் சிங்கா
எதுத்து நீ பேசினத்துக் குன்னைத்தாடையில்
எட்டி நான் அடித்தாலோ சிங்கி
இந்த எடாகூடங்கள் பேசாதே சண்ணப்போறேன்
எதிந்த வார்த்தைகள் சிங்கா,

சண்ணப்போறேனென்று தாண்டி தாண்டிவர்ராய்
சாதிக்கடுக்குமோடி சிங்கி,
சல்லித்தனமெல்லாம் பேசாதே போடா
உன்சளுக்கை நானறியேனோ சிங்கா
கள்ளைக்குடித்த மயக்கமோ பேசவுங்
காரியமேதடி சிங்கி
அந்தக் கள்ளைக் குடிப்பதுங் காய்க்கப் பேச்சு முன்
காரணமல்லவோ சிங்கா

வசனம் :—

அம்மம்மா சிங்கம்மா கோவிச்சுக் கொள்ளாதே உன்காலுக்குக் கும்பிடு
[கிறேனடி சிங்கம்மா
ஏதடா அம்மா என்கிறாய் அம்மக்கள்ளர் முறைமை கெட சிங்கா
அப்ப[ரி](டி)யுஞ் ? சொல்லப்போகாதோ
கோவிச்சுக்கொள்ளாதே சத்தே
பேசிக்கொளுவோம் வாடி சிங்கி

* * * * *

வாயெல்லாமிரத்தம் போற் சிகப்பாக
வழியுறதேதடி சிங்கி
எழில்வாய்ந்த மின்னார் தந்த தாம்பூலச் சாரத்தின்
வண்மை கண்டாயடா சிங்கா
பாரிலிந்தக்கோலமாமாலை யெல்லாமெங்கே
பண்ணிக்கொண்டு வந்தாய் சிங்கி
பொய்கை பாகையிலீசுவரன் மோகினிதந்த
பொற்பணிகள் கண்டாயடா சிங்கா
ஏதுக்கிங்[கை]கே நம்முடைக் குச்சியிற்போய்
இருப்போம்வா முன்போலே சிங்கி
அதுக்கென்ன தடையாச்சு சுகமாகக்கூடி
யிருப்போம் வாடாயடா சிங்கா

வாழி விருத்தம் :—

பகரறிய மறைவாழி வளஞ்சேர் பொய்கைப்
பாகையிறை வாழியவர் பரிவினாலே
சகமதனில் வருணமொரு நான்கும் வாழி
சந்ததமன்னவர் செங்கோல்தழைத்து வாழி
நகமருவு புயன் கங்கை குலத்துள்வந்த
நல்லண்ணன் சின்னண்ணனெந்தை நாளும் வாழி
மகிதலமேற் சிதம்பர தத்துவலிங்கையன்
மதுரகவியுந்தழைத்து வாழிதானே

பொய்கைப்பாக்கம் பொய்யாத மொழி ஈசுவரர்பேரில் குறவஞ்சி எழுதி நிறைந்தது முற்றும். சிவமயம். தத்துவலிங்கம் துணையாகவும். சிதம்பரேசுவரர் கிருபையுண்டாகவும்.

கு.பு.—இந்நூல் "பொய்கைப்பாகை" யென்னும் சிவஸ்தலத்தில் அமர்ந்துள்ள "பொய்யாத மொழீசுவரர்" என்னும் சிவபிரான் மீது இயற்றப் பெற்றதோர் "குறவஞ்சி" யென்னும் பிரபந்த விசேஷமாகும். இது

" சிதம்பரதத்துவலிங்கையன் " என்னும் மதுரகவிப் புலவரால் இயற்றப்பெற்றிருக்கலாமென்று இறுதிச்செய்யுளாம் வாழி விருத்தத்தான் ஊகிக்க இடனுண்டு. இப்பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது.

No. 2339. பொய்யாமொழீசர் குறவஞ்சி.
POYYĀMŌḺIŚAR KUṞAVAÑCI.

Substance, palm-leaf. Size, 16 × 1⅜ inches. Pages, 44. Lines, 6 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Same work as the above.

கு.பு.—இந்நூல் முன்பிரதியில் வந்துள்ளதே. இப்பிரதியில் முற்றுமிருக்கிறது. இந்தப்பிரதியிலே இந்நூல் தெளிவான வெழுத்துக்களான் எழுதப்பெற்றுள்ளது. ஏடுகள் அங்கங்கே ஒரு சிறிது சிதிலமாயிருக்கின்றன. இதிலே 19, 20 என்ற விவ்வேடுகள் காணப்பெறவில்லை.

No. 2340. வாகடம்.
VĀKAṬAM.

Pages, 244. Lines, 7 on a page.
Begins on fol. 1-*a* of the Ms. described under No. D. 195, Vol. V.

Almost complete.

A work on Indian Medicine. Gives rules, in verse, for the feeling of the pulses; and these rules are explained in the prose passages following them. The remaining portion of this work is in verse. Here are found verses, presumably taken from other works on Indian Medicine.

Beginning :—

நாடிப்பரீட்சை :—

கரிமுகனடியை வாழ்த்திக் கைதனில் நாடிபற்றிப்
பெருவிரலங்குலத்திற் பிடித்துடன் நடுவே தொட்டால்
ஒரு விரலோடில் வாதமிரு விரலோடிற் பித்தம்
திரிவிரலோடிமூன்று மோடிற் சிலேட்டும நாடியாமே (க)

ஆதியாங்கடவுளானையடியிணை போற்றிசெய்து
தீதறுவியாதிதன்னைத் தெளிவுடனறிய வேண்டிக்
கோதிலா நல்லோர் பேசுங்குணமிகுபாடறன்னை
நீதிசேர்படியின் மீதே நெறியுடனுரைத்தார் மேலோர் (உ)

சொன்னதோர் குணங்கடன்னைத்தொகுத்து நீரறியவேண்டிப்
பின்னையுங் குணவானுகிப் பேசிய குணத்தின் பாதி
வண்மையா மறிஞராகில் மறுபடி குணங்கள் செய்யு
மின்னமுங் குணங்கள் தன்னையிடம் படவறிந்து சொல்லே (ரு

ஏறியுங் குறைந்து நின்றுமிட்டதோர் குணங்கள் தன்னை
கூறிய குணம்பிராயங் குறைவிடாச்சுகம் வறட்சி
பாறிடுஞ் சுரங்கள் தன்னைப்பற்றிடுஞ் சுக்கிலத்தில்
வேறிடுங் குணங்கள் தன்னை விதித்து நீயாய்ந்து சொல்லே (ச)

எண்பது வாதந்தன்னை யிருவகைப்படுத்துக் காணில்
நண்பெறு மரைக்குங் கீழே நாற்பது வாதமாகும்
பண்புசேரரைக்கு மேலே பகுத்த நாற்பதுவேயாகும்
வண்டுசேர் குழலினாளே வாகடத்தியல்புதானே (ரு)

வாதந்தான் காலிற் சேரும் வயிற்றிலே பித்தஞ் சேரும்
சேதமே செய்யுமையஞ்சித்திர கண்டஞ்சேரும்
நாதனாருளினாலே நான் முகத்தேவன்பாரில
வேதநூல் விதியீதென்று விரும்பியே விளம்பினாரே (எ)

* * * * *

நாடி பரீக்ஷை யறியும்படி :—

அன்னமே கோழியாந்தை மயிலென நடக்கும் வாதம்
பின்னையோரட்டையாமை பெருத்திடிற் பித்தமாகுஞ்
சொன்னதேன் மொழி நல்லாளே சுத்திய தவளை பாம்பு
முன்னமே கபமிதென்று முதிய வருரைத்தவாறே (௧௧)

அன்னத்துடனே அட்டை கூடி நடந்ததேயானால் அது வாய்வுடனே கூடின பித்தமென்று அறிவது. ஆமையுடன் கோழி நடந்ததேயானால் அது வாத பாண்டு ரோகம் என்றறிவது. ஆந்தையுடன் அட்டை கூடி நடந்ததேயானால் அது இரத்த பித்தமெனறறிவது. மயிலோடு ஆமை கூடி நடந்ததேயானால் அது அற்புதமென்றறிவது * * * * * ஆந்தையுடன் தவளை கூடினால் பொசிப்பது கசப்பென்றறியவும், மயிலோடு தவளை கூடினால் அனுபோகம் அதிகமென்றறியவும், முற்றும்.

End :—

காயகற்பம் :—

கையாந்தகரைக் காரெள்ளு கார்ப்போகவரிசி கருஞ்சீரகம்
மெய்யார் நீலத்திலாவரை வேர் மற்றும் நீலிவராகியுடன்
நெய்யோடதனை யொன்றித்து நெகிழாதுண்ணவல்லீராய்
மையார் குழலும் வண்டாகும் வாணாள் கோடியிருப்பீரே

வசனப்பூடு :—

வெண்குட்டங் கருங்குட்டம் விரிகுட்டமிவை மாறுங்
கண்கெட்டு இருந்தாற்கு நல்லகண்ணுந் தருவிக்கும்
மண்கொண்ட தோட்டத்தில் மாரிகாலத்தில் மழை பெய்யாப் பல்
[லெனும் வசனப்பூட்டைப்
பண்கொண்டமென் மொழியா[ய்டு](யி)லேப்பறித்துத் தின்னப் பறுகட்டை
தலைக்கற்றைக் குழல் கட்டலாமே

நஞ்சுக்கு மாற்று.

எட்டிக்கு நாவல் எழில் சுண்டில் தோன்றிக்கு
வட்டவில்த்தாமரையாமற்றுத்—திட்டமுடன்

* * * * *

இந்நூல் வைத்திய சாஸ்திரமாகும். இதில் முதலில் நாடிபரீக்ஷை யுணர்த்தும் பதினொரு பாடல்களிருக்கின்றன. அதன் பின்னர் அதுக்கு விளக்கமாக வசன நடையில் ஒரு சிறிய பகுதியுளது. பிறகு முற்றும் வசன நடையில் அமைந்துளது. இடையிடையே சிலசில விடங்களில் வெவ்வேறு நூல்களிலிருந்து திரட்டிய பாடல்கள் காணப்படுகின்றன. இது அனுபவ முறையாக வந்த வைத்திய முறையாகும். இதில் பல் வேறு நோய்களையும் நீக்குமுறை விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இது இத்துணைத்தென்று விளங்கவில்லை. இறுதியில் அரைகுறையாக வெழுதி விடுக்கப்பெற்றுள்ளது. முதலில் ஒரு தனி யேட்டகத்தில் மேகங் கட்கான மருந்து முறை யெழுதியுளது. ஏடுகள் மிகவுஞ் சிதலுற்றிருக்கின் றன.

No. 2341. நாடி நிதானம் (அகத்தியர்திரட்டு வாகடம்).
NĀḌINIDĀNAM (AKATTIYARTIRAṬṬU VĀKAṬAM).

Pages, 12. Lines, 7 on a page.
Begins on fol. 136-a of the Ms. described under No. D. 1952, Vol. V.

Contains 58 stanzas.

Same work as that described under No. D. 2318.

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 2318 ஆவது நம்பரில் வந்துள்ளதே யாகும். இப்பிரதியில் 58 செய்யுட்களிருக்கின்றன. இது அகத்தியரது நூலிலிருந்து திரட்டப்பெற்றது என்று இதன் தலையிற் காணும் சொற் குறிப்பான் உணரக்கிடக்கிறது. இறுதியில் முற்றும் என்று ஒரு சொல் காணப்படுகிறது. பின்னர் " டக்கா வீராசாமி முறை " என்ற தலைப்பெயரின் கீழ்ச்சில அனுபவ வைத்திய முறைகள் (6) பக்கங்களில் எழுதப் பெற் றிருக்கின்றன. அந்த ஏட்டுக்குப் பக்க எண் குறிக்காமலே யிருக்கிறது. உள்ள ஏடுகள் பல சிதலுற்றிருக்கின்றன. எழுத்துப்பிழையுள.

No. 2342. கம்பராமாயணம்.
KAMBARĀMĀYAṆAM.

Substance, palm-leaf. Size, 16¾ × 1½ inches. Pages, 804. Lines, 8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Contains Yuddhakāṇḍa and Uttarakāṇḍa.

Same work as that described under No. D. 516.

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 516-ஆவது நம்பரில் வந்துள்ள நூலின் பிற்பகுதியாகும். இது இரண்டு வால்யங்களாகக் கட்டப்பட்டிருக் கின்றனவாதலின் முதல் வால்யத்தில் 1–5 காண்டங்களும் இரண்டாம் வால்யமாகிய விதிலே யுத்தகாண்டம் உத்தரகாண்டம் ஆகிய இவ்

லிருகாண்டங்களுமிருக்கின்றன. இறுதியில் " வெகுதானியஞு சித்திரை மீ (உ௰அ)வ சுக்கிரவாரம் மிருகசீரிஷ நட்சத்திரம் திருதீயை இந்தச் சுபதினத்தில் நாராயண முதலியார் குமாரன் இராமசாமி படிக்கின்ற ஸ்ரீமத் ராமாயணம். புட்டுலூர் முனியப்பன் எழுதின ஸ்ரீமத் ராமாய ணம் " என்ற இவ்வாக்கியம் காணப்பெறுகின்றது. பிறகு இராமயணச் சிறப்புணர்த்தும் மூன்று செய்யுட்களிருக்கின்றன.

No. 2343. பூசாவிதித்திரட்டு.
PŪJĀVIDHITTIRAṬṬU.

Substance, palm-leaf. Size, 16 × 1⅜ inches. Pages, 43. Lines, 7 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, very old.

Begins on fol. 1-a. The other works herein are Koṅkaṇarnūl mudal kāṇḍam. 22-a. Do. Iraṇḍāṅkāṇḍm.

A treatise on the worship of Goddess Devi and Her various manifestations. The use of mystic diagrams in such worship is also explained. This treatise is a compilation from the works of Agattiyar, Tirumūlar, Koṅkaṇar and other such Siddhas.

Beginning :

நாற்பத்து முக்கோண சக்கிர விதிப்படி பூஜாவிதிக்கு விவரம் :

ஆமப்பா பூஜைவிதி சக்கிரத்தைச் சொல்வேன்
யாருந்தான் சொல்லார்கள் அப்பாகேளு
ஓமப்பா தேவிக்கு ஆதிபீடம்
உத்தமனே நாற்பத்து மூன்றேகோணம்
காமப்பா வித்தையர்க் காதி வித்தை
காசினியிற் பூசை செய்வார் தசதீட்சை பெற்றோர்
நாமப்பாவிவளை முந்திப்பூசைபண்ணி
நலமாகச் சிவயோகத்திருந்திட்டேனே. (க)

இருந்திட்ட சக்கிரத்தினியல்புகேளு
இதமாக வளையம்போல் கீறிக்கொண்டு
அருந்திட்ட குருவருளால் ரேகைதானும்
ஆதித்தன் ரேகையொன்று திங்களொன்று
தெரிந்திட்ட செவ்வாயின் ரேகையொன்று
இயலான புதனுடைய ரேகையொன்று
பரிந்திட்டகுருவினுடை ரேகையொன்று
பாங்கான சுக்கிரன்றன் ரேகைதானே. (உ)

* * * * *

ஆமப்பா வெட்டுப்பே ரேவல் கேட்டு
அஷ்டாங்க யோகமுதல் அறுபத்துநாலும்
ஓமப்பா வாட்லா மிவர்களெட்டு
முத்தமனே அஷ்டதளத்துள்ளே பூசிக்

காமப்பாலுண்ணு விப்பார் விண்ணிலேற்றிக்
கருணையுடனீன்றெடுத்த ஞானசக்தி
சோமப்பால் கொண்டவர்க்குச் சட்டைபோகும்
சோதியாஞ் சிதம்பரத்தைச் சொல்லக்கேளே. (மஅ)

இந்தத் திருமுறைப்படிக்குச் சக்கிரத்தைத்தாபித்துப் பூசை செய்யவும். சித்தி முத்தி இரண்டும் உண்டாகும். சௌந்தரியலகரீ (௱கூ) தியானம் பண்ணி, "அரியதாகுஞ் சிவசத்தி" என்ற பாடற் முறைப்படி மந்திரத் தியானம் பண்ணவும். சிவகாமிதுணை தாரணவருஷம் புரட்டாசிமீ ௰உ முத்து முதலியார் நாற்பத்துமுக்கோண விதிமார்க்கம் எழுதி நிறை வேறிற்று... முற்றும். நாற்பத்துமுக்கோணம் கீறுகிறவயணம்.

* * * * *

கொங்கணர் தேவி பூஜாவிதி :—

பராபரத்தில் அடைந்துநின்ற மூலநாயன்
பதமிறைஞ்சி முக்காலுந்தொழுது போற்றி
நிராமயத்தில் உணர்ந்து நின்ற பெரியோர்பாதம்
நீங்காமல் தொழுதிறைஞ்சி நெஞ்சில்வைத்து
தராதரமா யெனையீன்ற போகர்பாதம்
சதநித்தம்தொழுதிறைஞ்சித் தாசனுகித்
துராதுரச்சி சிவனுடைய பதமும் போற்றிச்
சொல்லுகிறேன் எழுலட்சஞ்சுருக்கித்தானே. (க)

தானென்ற துரைச்சியைத்தான் பூசைபண்ண
சங்கையுண்டோ சூரையுண்டோ சாங்கமுண்டோ
வானென்ற ஐவருந்தான் பூசைபண்ண
மாட்டாமல் பீடமென வழங்கினுர்கள்
வேனென்று பூசைபண்ண வென்னுற்கூடா
விட்டகுறையாற் றெடர்ந்தாள் வேதாந்தத்திப்
பானமென்றல் வெகுப்பிரியமென்றுய்க் . . . .
. . . . ப்பூசைபண்ணிப் பாருபாரே. (உ)

ஒளித்திடவே மனசுக்குமாயை போச்சு
ஒன்றுமில்லை கண்மயக்கு ஒகோபாரு
அளித்திடவே நினைவாலப்பா ரெல்லாம்போய்
ஆத்தாள்தான் ஆடுகிற விந்திரசாலங்
களித்திடவே மதுவையுண்டு சுழியிலோடிக்
கையாறு தலங்களெல்லாங்காணுங்காணும்
நெளித்திடவே யிடைபின்னும் ரெண்டும்போக்கில்
நிமிஷத்தில் நாலுக்குள் நேரமாமே. (௩க)

நேராத பாவிக்கு வாதமேது
நிலையாத மனத்தோற்கு ஞானமேது
பாராத மூடருக்கு யோகமேது
பராபரையை யறியாற்குப்பலந்தானேது
காராத சீஷனுக்குக் கருத்தானேது
கைகாட்டாத் தொழின்முறைக்குக்கரைதானேது
தீராதகருமிக்கு அறிவங்கேது
செகச்சால மாடுநற் இலவணங்கேளே. (கூஉ)

கொங்கண நாயனார் பூசாவிதி முற்றும். தேவி சகாயம்.

இந்நூல், " அகத்தியர், திருமூலர், கொங்கணர் முதலான சித்தர் பெரியார்கள், அஷ்டகர்மம் முதலிய பலவிதமான சித்தியைப் பெறுவதற்காகத் தேவியைப் பூசித்து வழிபடுவதற்கு உறுகருவியாயிருந்த நாற்பத்து முக்கோணசக்கிரம், சிதம்பரசக்கிரம் முதலான சக்கிரங்கள் பலவும் இன்னின்ன வகையாகப் பொறிக்கப்பெற்றுத் தேவியை இன்ன விதமாகப் பூசிக்கவேண்டும் என்னு மாற்றை யுணர்த்துவது. இது பூஜாவிதி, தீட்சை விதி என்ற நூல்கள் பலவற்றுள்ளிலிருந்து சில சில பகுதிகளை மாத்திரம் ஒரு திரட்டாகத் திரட்டுவித்த நூலாகும். இதில் நாற்பத்து முக்கோணசக்கிரவிதி, அகத்தியர் பூஜைவிதி, பஞ்சதசாக்கரி திருமந்திரம், வாலைத்தியான விதி, திருமந்திரம், சிதம்பர வித்தை திருமந்திரம், அஷ்டகர்மங்கட்குரிய மந்திரங்கள், கொங்கணர் தேவி பூஜாவிதி என்ற விவைகள் திரட்டி வைக்கப்பெற்றிருக்கின்றன. கொங்கணர் பூஜைவிதி மாத்திரம் முப்பத்திரண்டு பாடல்களைக்கொண்டு ஒரு தனி நூலாக முற்றுமிருக்கிறது. அங்கங்கே ஏடுகள் பல சிதலுற்றுக் கிடக்கின்றன. கிரந்தபாதங்களுமிருக்கின்றன. எழுத்துப்பிழைகளும்உள.

No. 2344. கொங்கணர் நூல் முதற்காண்டம் ஆயிரம். KOṄKAṆAR NŪL MUDAṞKĀṆḌAM ĀYIRAM.

Pages, 274. Lines 9 on a page.
Begins on fol. 21-a of the Ms. described under No. D 2343.

Complete.

The first *Kāṇḍa* of Śrī Koṅkaṇar's work on Alchemy. Contains about a thousand verses. Herein the author refers to two other *Kāṇḍas* composed by him.

Beginning :

கொங்கணர்நூல் முதற்காண்டம்.

வையகம் வாழவென்று வாதகாவியமாம் நூலை
ஐயனன்றுரைக்க நந்தி யஞ்சலிபண்ணிக்கேட்க
மையுறுகுழலேஞானம் வளர்ந்திட வாழ்வுண்டாகக்
கையுளே கோட்டையேந்துங் கணபதிகாப்புத்தானே, (க)

வாதமாங்குணங்கள் மூன்றும்
வரிசையாய்ப்பார்க்க வென்றில்
கோதறு குழலாள்சொன்ன
குருவுடன் கணேசனுக்கத்
தீதறப்பூசைபண்ணிச்
சிந்தையிற் செபங்கள்செய்ய
மாதகலாதே நிற்பள்
வளர்ந்திடும் ஞானமன்றே. (உ)

போதவே வாதநூலைப் பொலிவுறச் சொல்லும்போது
தீதறமூல மூர்த்திச்சீர்பதந் தொழுதுநித்தங்
கோதையா மாயிபாதங்குறித்தொன்றிப் பூஜைபண்ணிப்
பேதைமையகற்றி வாதம் பிழையறச்சொன்னேன்காணே. (ங)

* * * * *

* * * * *

வேறு.

கண்டுடனே யெழுந்திருந்து அஞ்சலிபண்ணிக்
கவடகற்றி மனமொன்றாய்க் கருணைநீடி
ஒன்றுரைத்த குருபதத்தை யுணர்ந்தோர்வாழ்வார்
ஒன்பதினுங்கோடிகொண்டோடும் வேதை
அன்றுரைத்த மொழிமறந்து அழிம்புசெய்து
அவனிவனென்றே நித்த மறைந்தானாகில்
மன்றியுறாவிகோடி நரகில்வீழ்ந்து
வகாரவழி காணாதே மருளுவாரே. (சு)

* * * * *

அறிவுபிறக்கு மருள்தோன்றும்
அடங்காக்கவணங்கொடுபோகு
மறிவுபிறக்கும் மனஞ்சயிக்கும்
மகத்தாம் போதந்தனிற் சேர்க்கும்
பிறிவுபிறக்கும் வெகுகோடி
பெருத்தவாத சித்தியுமாம்
நெறிவுபிறக்கு மாயிபதம்
நிலைக்கப்பூசிக் காப்புமுற்றே. (யஙு)

பாயிரம் முற்றும். தேவி சகாயம்.

* * * * *

உப்புக்கட்டு.

கேளப்பா படிகியொடு வெடியுப்புப்போடு
கெடியான கல்லுப்புக் காரத்தோடு
தாளப்பா சாரமொடு பண்ணைகண்டா
தனியேழு மேழுபலந்தானேதூக்கி

நீளப்பா வழுரிவிட்டு அரைத்துக்கொண்டு
நெடியதொரு பாறையுப்புப் பலமீரேழு
கோளப்பா குழம்பினுள்ளே தோச்சுவாட்டு
கொழுகியதைத் தணலுக்குளடர்ந்துவாட்டே. (௩.௧)

வாட்டயிலே யடுக்கடுக்காய் முதிரவாட்டு
மருவியந்த உப்பினுடைக் கோபம்பேகும்
நீட்டயிலே படிகத்தின் பொரியைப்போட்டு
நினைவாக வறுத்திடுவாய் சாமமப்பா.
கேட்டயிலே யிதைவாங்கிப் பின்புகேளு
கெடியாகக்கட்டுதற்கு வழிசொல்வேனயான்
மூட்டயிலே யமுரிவிட்டு வுப்பையாட்டி
மூதண்ட நாயுருவி சாம்பற்போடே. (௩.௨)

போடந்த வுப்போடே சவுட்டுவில்லை
பொலிவாக உப்புக்குக் கால்காலப்பா
நீடந்தக்கலையத்திற் பாதிவைத்து
நினைவாக வடுக்கடுக்காயுப்பைவைத்து
ஓடந்த மேலிட்டுச் சீலைசெய்து
ஒத்தாப்போலெரித்திட்டு உடைத்துவாங்கி
ஆடந்த மறுகாலிப்படியேவைத்து
அதட்டியொரு புடம்போடக்கட்டும்பாரே. (௩.௩)

பாரப்பா வாட்டொன்று வறுப்பதொன்று
பரிவாக வெரிப்பதொன்று புடந்தானென்று
நேரப்பா வெகு பதனமாகச் செய்வாய்
நிலைக்கமட்டுங் கைமுறையாய் நினைவாய்ப்பண்ணு
ஆரப்பா வெதிருனக்கு வாதமாட
ஆகாகா சகலமெல்லா மடங்கித்துப்பிற்
பேரப்பாஉப் பென்பாரிதுவே சக்தி
பலத்தபின்பு சிவனுச்சு பெச்சொண்ணாதே. (௩.௪)

* * * * *

End :

ஆச்சப்பா உப்புரசத்தை விரித்துச்சொல்ல
அன்னா . . . .
. . . . . ஆயிரத்துச்சொச்சம்
உத்தமனே யாயிரத்துச்சில்வான்வாதம்
நீச்சப்பா வென்றுசொன்ன வேழுலட்சமெல்லாம்
நிலையாகச்சோதிச்சு விதிலேசொன்னேன்
பூச்சப்பா சகலநூலென்னுற் றங்கம்
புகழ்பெரியோர்க் கடிமையிட்டுப்புகட்டினேனே, (௧௧௭)

புகட்டினதோரென்னூலில் வாதம்பொய்யோ
புரிசடையோனொளித்திருந்த மூலம்பொய்யோ
பகட்டினதோருல்கத்தில் ஞானம்பொய்யோ
பராபரையைப்பூசித்த பருவம்பொய்யோ
அகட்டினதோர் அஷ்டாங்க யோகம்பொய்யோ
அப்பனே கல்லுப்புக்கட்டுப்பொய்யோ
சகட்டினதோர் முதற்சொரூபம் பொய்யோ
சாத்தினதோர் சுண்ணும்பு பொய்யோபாரே. (கூகூ௮)

பாரப்பா முதற்காண்டம் முகமுமாச்சு
பரிவான நடுக்காண்டம் மார்புமாச்சு
வோரப்பா பிற்காண்ட மமுதாந்தொட்டு
உத்தமனே பாதவரை யொக்குமொக்கும்
ஆரப்பா இம்முறையாய் நின்றதென்றால்
கண்டசிவனிம்முறையாய் நின்றமார்க்கம்
நேரப்பா முற்காண்டமுற்றுஞ் சொன்னேன்
நிலையான போகர்பதம் நினைந்துயானே. (கூகூகூ)

கூடுவது எவ்வாறு வேதாந்தமார்க்கம்
குறிப்பான மூன்றெழுத்து உபதேசமுன்னே
நாடுவது நாலெழுத்து ரெண்டாந்தீட்சை
நலமான அஞ்செழுத்து மூன்றாந்தீட்சை
ஊடுவது ஆறெழுத்து நாலாந்தீட்சை
உத்தமனே யெட்டெழுத்து அஞ்சாந்தீட்சை
ஆடுவது பத்தெழுத்து ஆறாந்தீட்சை
அப்பனே பதினஞ்சு எழுமாச்சே. (௲)

ஆச்சப்பா பதினாறு எட்டாந்தீட்சை
ஆச்சரியஞ் சத்தியுடை பிரசாதவித்தை
. . . ஒச்சப்பாவொன்பதுதான் பின்புகேளு
உத்தமனே பரமானப்பிரசாத வித்தை
வாச்சப்பா பத்தாச்சு தீட்சைமார்க்கம்
மருவியதோர் பதினொன்று . . தீட்சை
மூச்சப்பா ஆடாது எட்டிற்சேரும்
மூதண்ட மனதைமெள்ள அறிவிற்சேரே. (௲க)

Colophon :

பார்த்திப௵ சித்திரைமீ˚ உ௰௯உ. கொங்கண நாயனார் முதற்காண்டம் முத்துவாத்தியார் எழுதி நிறைவேற்றினது. முற்றும்.

கு.பு.—இந்நூல், கொங்கண சித்தர் பெரியாரால் இயற்றப்பெற்றது. ஆயிரம் பாடல்களால் அமைந்துள்ளது. இரஸவாத விஷயமானது. இது, "முதற்காண்டம்" என்ற பெயரான் வழங்கப்படுகிறது. மற்றும் (இரண்டாங் காண்டம் மூன்றாங் காண்டம்) அல்லது "இடைக்காண்டம், கடைக்காண்டம்" என்ற பெயரால் இரண்டு நூல்களும் தாம் இயற்றியிருப்பதாக இதில் இந்நூலாசிரியர் ஞாபகப்படுத்தியிருக்கின்றார். முற்றுமுளது, சில ஏடுகளில்லை; பல ஏடுகள் அடியோடு முறிந்து கிடக்கின்றன. கிரந்தபாதமுள. எழுத்துப்பிழையுண்டு.

No. 2345. கொங்கணர்நூல் இடைக்காண்டம் ஆயிரம்.
KONKANARNŪL IḌAIKKĀṆḌAM ĀYIRAM.

Pages, 166. Lines, 10 on a page.

Begins on fol. 158-a of the Ms. described under No. D. 2343.

This appears to be the Second or Middle *Kāṇḍa* referred to in the previous work, as a continuation thereof.

Beginning :

கொங்கண நாயனுர் இரண்டாங் காண்டம் (இடைக்காண்டம்).
திரிவங்கச்சுண்ணம் இரசமெழுகு.
நடுக்காண்டம் பாடுகிறேன் பூரணமே காப்பு
நலமான சுண்ணும்புக் காடு காடு
அடுக்கென்ற வங்கமொன்று நாகமொன்று
அப்பனே யீயமொன்று உருகும்போது
தடுக்கென்ற சூதமொன்று அதிலேவிட்டு
தாளகமாஞ்சுண்ணமொன்று அதிலேதூவி
முடுக்கென்ற வுப்பாலே பூரச்சுண்ணம்
மூடியொரு இடையிட்டு வறுத்திடாயே. (க)
வறுத்து இதைக் கறண்டியிலே கிண்டத்தூளாம்
வாங்கியிதில் நாலிலொன்று வீரங்கூட்டி
நிறுத்து இதைக்கருவாலே வில்லைகட்டி
நேர்ப்பாக ஊதப்பா சுண்ணும்பாகுங்
கறுத்து வது கண்டக்கால் வீரங்கூட்டிக்
கை முறையாய்க்கருவாலே வில்லைகட்டி
மறுத்து இது சுண்ணும்புக்குகையிலிட்டு
மாட்டிநன்றாயூதிடவே சுண்ணமாமே. (உ)
ஆமிந்தச் சுண்ணத்தை நிறுத்துக்கொண்டு
அந்திடைக்குச் சாரமிட்டு ஆட்டநீராம்
ஓமிந்த நீருக்குள் சூதம் வார்த்து
உத்தமனே யசைச்சாட்ட மெழுகுமாகுந்
தாமிந்தச் சுண்ணத்தையஞ்சு சுண்ணக்குகையிற்
றுக்கிவைத்துப் புடம்போடச்சுண்ணமாகும்
வேமிந்தச்சுண்ணத்தாலு பரசங்களாகும்
வேகிறதோர் விதமெல்லாம் விளம்புவேனே. (௩)

End :

நன்றென்ற மணியும் வாதம் ஞானிக்கேயீசனென்றுர்
தன்றென்ற வாதங்கண்டு தனிப்பெண்ணுல் மாளவேண்டாங்
கன்றென்ற ஞானத்துக்குக் கண்மணி குளிகையப்பா
அன்றென்றதெல்லாந்தள்ளி யகண்டத்திற்புக்குப்புக்கே. (௯அ)
புக்கு முன்னுயிரத்திற் புகழ்தாது பிறப்பைச்சொன்னேன்
தக்குமிந்தாயிரத்திற் சகலமுமடக்கிப்போட்டேன்
மக்கும்பின்னுயிரத்தில் வழங்கிய வழக்கஞ்சொன்னேன்
அக்குமின்னடைவைப்பாரு ஆனந்தி பணிசெய்வாளே. (௯௯)

பணிசெய்யுமாவதேது பாக்கிறேன் பாத்ததொன்று
அணிசெய்து நடுவே நின்று ஆடினபொருள் தானப்பா
தணிசெய்த திரிபடிக்குள் சகலமுந் தோற்றிமாளும்
மணிசெய்த செயலேதென்றில் மகத்துவங்காணுங்காணே. (தூய)

காணிது தூ . . . காதத்தின் பொருளதல்ல
தாணிது அண்டரண்டங்கடந்து முன்னுடுதப்பா
காணிது மனத்தையூன்றிக்கலந்து நீகூடினுக்கால்
காணிது வேறேயில்லை கரையில்லை கவிதான்முற்றே. (தூயக)

கு.பு.—இந்நூல், முன்பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இதில் (இடைக் காண்டம்) இரண்டாங்காண்டம் ஆயிரம் என்ற பகுதியிருக்கிறது. முன் பிரதியில் வந்துள்ளது முதற்காண்டம் என்ற பகுதியாகும். இனி, கடைக்காண்டம். என்ற பகுதியும் (ஆயிரம் பாடல் கொண்டது) ஒன்று உண்டென்று தெரிகின்றது. இதில் இப்பகுதியின் ஆயிரத்துப்பதினேரு பாடல்களுமிருக்கின்றன. இடையிடையே சில ஏடுகள் இருபகுதியாக முறிந்து இருத்தலோடு பல ஏடுகள் புழுக்களான் அரிக்கப்பெற்று இருக்கின்றன. ஆகவே பலவிடத்துக் கிரந்த பாதம் உண்டு. எழுத்துப் பிழை காணப் பெறுகின்றன.

No. 2346. கருசாஸ்திரம்.
KARUŚĀSTIRAM.

Substance, palm-leaf. Size, 8 × 1 and $8\frac{11}{16}$ × $1\frac{1}{4}$ inches. Pages, 62. Lines, 6 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

Similar to the work described under No. D. 2312.

Beginning :

கூகையின் வலது கண்மணியை யெடுத்துச் செப்புச்சிமிழில் அடைத்துக் கையிலாகுதல் வாயிலாகுதல் இடக்கத் தன் மேல் அம்புபடாது. இதுக்குச் சோதனையில் மழையில் நிறக மழை படாது.

கொடுவேலி வேருக்குச் சித்திரை நட்சத்திரத்தில் காப்புக்கட்டிச் [சோதி நட்சத்திரத்தில் காப்புக்கட்டிச்] சோதி நட்சத்திரத்திலே " அக்கினி ரூபி ஆதித்த ரூபி, ஆதிசுவாலினீ நம: " என்ற இந்த மந்திரம் சொல்லிப் பிடுங்கிப்பாலிலே கலந்து குடிக்கக் கண்டமாலை, மூல பவுத்திரம் புண் முதலான வியாதியெல்லாம் தீரும்

வேறு :—

மருதோன்றி மரத்தில் கிரகணம் தீண்டுகிறபோது காப்புக் கட்டி விடு கிறபோது மரத்தை வெட்டி விழத்தள்ளிக் கண்டங்கண்டமாக நறுக்கி உலர்த்தித் தைலமிறக்கி அந்தத் தைலத்துக்குத் தூபதீபங் கொடுத்து " ராசாமுந்திரி சுவாஹா உம்பட்டு " இந்த மந்திரம் பன்னீராயிரம் உருச்செபித்து முப்பலியுங்கொடுத்துச் சுத்தமான இடத்திலே வைத்துக் கொள்ளவும். யா(ரா)மொருவர் பேய்பிடித்துவந்தால் அவர்களுக்குப்

பார்க்கவேணும் என்றால் அந்தத் தைலத்தில் திலதமிட்டுக்கொண்டு அந்தப் பிசாசை எதிராகக் கூவிக்கொண்டு பார்க்க அப்பிசாசு போகிறேன் போகி றேன் என்று அபயமிட்டுக்கொண்டு ஓடிப்போம்.

* * * * *

ஆலம்விழுதை ஒருவெட்டிலே வெட்டிக் கீழே விழாமல் பிடித்துக் கொள்ளவும். பிடிக்கிறபோது " மாயா மோகினி மகா மோகினி செய செய மோகினி செய செய " வென்று இந்த மந்திரஞ் சொல்லிப் பிடித்துப் புதுச் சட்டியிற் கருக்கித் திலதமிட ராசமோகனம்.

End :

அழிஞ்சி விரை கொண்டுவந்து நல்லெண்ணெய் வார்த்து அரைத்து தளிக தட்டிலே வைத்து வெய்யிலிலே வைக்கத் தைலமிறங்கும். அந்தத் தைலத்தை யெடுத்து மாங்கொட்டையில் தடவிப் புதைக்கச் செடியாம்.

கு.பு—இந்நூல் கரு சாஸ்திரத்தைச் சார்ந்ததாய் உள்ளது. இதில் அஷ்ட கர்மங்களுக்குரிய கருக்களும், சில மாந்திரீகமுறைகளும் சில மருத்துவ முறைகளும் பிசாசுகள் ஓடுதற்குரிய முறைகள் சிலவும் எழுதப்பெற்றுள்ளன. ஏடுகள் ஒன்றோடொன்று தொடர்பில்லாமல் கோக்கப்பட்டிருக்கின்றன. எழுத்துப்பிழையுள. இதில் உள்ள ஏடுகள் இரண்டு பிரகாரமான அளவுகள் உள்ளனவாயிருக்கின்றன.

No. 2347. அகத்தியர் பூரணசூத்திரம் இருநூற்றுப்பதினாறு.
AKATTIYAR PŪRAṆASŪTTIRAM IRUNŪṞṞUPPADINĀṞU.

Substance, palm-leaf. Size, 9 × $1\frac{1}{4}$ and $6\frac{1}{8}$ × $1\frac{2}{8}$ inches. Pages, 124. Lines, 7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 1-a. The other work herein is Akattiyar Ñānampanirandu 63-a.

Complete.

Same work as that described under No. R. 177.

கு.பு.—இது மூவருடக் காட்லாக்கு 177-ஆம் நம்பரில் வந்துள்ளதே யாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது. அங்கங்கே சிற் சிலவிடங்களில் பாடபேதங்கள் காணப்படுகின்றன. எழுத்துப்பிழைகள் உள. 17-ஆம் ஏடில்லையாதலின் அதிலடக்கமான 61 முதல் 64 வரை யான பாடல்கள் இல்லை.

No. 2348. அகத்தியர் ஞானம் பன்னிரண்டு.
AKATTIYAR ÑĀNAM PANNIRAṆḌU.

Pages, 12. Lines, 6 on a page.

Begins on fol. 63-a of the Ms. described under No.D. 2347.

Complete.

Same work as that described under No. R. 280 (I).

கு.பு.—இந்நூல் மூவருடக் காட்லாக்கு 280 (l) நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உளது. இறுதிப் பாடலின் இறுதியடி மாத்திரம் இல்லே. பின்னர் திருவேரகத்துச் சிவ சுப்பிரமணியக் கடவுளை விளித்தியற்றப் பெற்றதோர் தோத்திர நூலின் (க, ம) என்ற பாடல்கள் எழுதப்பெற்ற வேறு ஏடுகள் இத்துடன் கோக்கப் பட்டிருக்கின்றன. ஏடுகள் சிதைந்துள. எழுத்திப்பிழைகள் காணப்படு கின்றன.

No. 2349. நாடி நிதானம்.
NĀḌINIDĀNAM.

Substance, palm-leaf. Size, $8\frac{1}{4} \times 1\frac{3}{8}$ inches. Pages, 30. Lines, 4 on a page Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 1-a. The other works herein are Aivakaivalippu 16-a, Akattiyar sūttram (1,500) 23-a. Tirumūlar Vākaṭam 53-a.

Complete in 30 stanzas.

Similar to the work described under No. D. 2341.

கு.பு.—இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 2341-ஆவது நம்பரில் வந்துள்ள நூல் போன்றதாகும். இதில் முப்பது செய்யுட்களிருக்கின்றன. இதிலிருந்து இது இன்னுரால் இயற்றப்பெற்றதென்று விளங்கவில்லே. ஏடுகள் சிறிது சிதைந்துள. இது முடிந்த பின்னர் சன்னியிற் சேர்ந்த குமர கண்டன் வலி, பிரமகண்டன் வலி, காக்கை வலி, முசலகண்டன் வலி என்னும் இவ்வைவகை வலியினியல் புணர்த்தும் சில செய்யுட்கள் (16) பக்கங்களில் எழுதப்பெற்றிருக்கின்றன.

No. 2350. ஐவகைவலிப்புக்குணம்.
AIVAKAIVALIPPUKKUṆAM.

Pages, 16. Lines, 5 on a page.

Begins on fol. 16-a of the Ms. described under No. D. 2349.

Complete.

A work, in verse, on five kinds of *Sannipāta* and their symptoms. It is not known which work this is a part of, or who composed this.

Beginning :

சன்னி. குமரகண்டன் வலி—குமரகண்டன் வலி, நமரகண்டன் வலி, பிரமகண்டன் வலி, காகவலி, முசலகண்டன் வலி—

காணப்பா லோகத்தில் மானுடர்க்கெல்லாங்
கடினமடா வலியஞ்சு சன்னியாகும்
வீணப்பா குமரகண்டன் நமரகண்டன்
வீழ்ந்தமுக்கும் பிரமகண்டன் காகவலி யொன்றும்
ஆணப்பா முசலகண்டன் வலியஞ்சு நோய்க்கும்
அடங்காது பிரமகண்டன் அசாத்தியந்தான்
தோணப்பா கண்டறிய வேணுமப்பா
தொடுகுறிபோற் சொல்லுகிறேன் குணத்தைக்கேளே. (க

குணமாங்குமர கண்டன்வலி
குறுக்கும் நாக்கு முகங்கோணும்
பணமாங்கழுத்துந் தோள் விம்மிப்
பார்க்கப்பற்றி யிழுத்துவைக்கும்
சணமாமுகநோம் செவிகண்ணுஞ்
சாய்த்தே புறத்தில் வலித்து நிற்கும்
வணமாம் வாதபித்தமையம்
வருகுஞ்சன்னி குணமிதுவே. (உ)

இதுவே நமரகண்டன் வலி :—

இதுவே நமரகண்டன் வலி
எடுத்துக் கிடத்தும் மூர்ச்சைபோம்
அதுவே கைகால் மெய்யுறங்கும்
மடித்து ஒடித்தாற்போலுளையும்
பொதுவே கண்டஞ்சிரசு முகம்
புதுவெள்ளம்போல் நீரொழுகும்
பதுவே நெஞ்சுந்தோள் முதுகும்
பத்திவலிக்கு முதிரமதே. (௩)

உதிரந்தன்னில் நாள் சென்றால்
உத்துவலித்துச் சுரோணித்த்தைப்
பிதுரப்பிதுங்க வொட்டாமல்
பின்னுங் கெர்ப்ப வாய்வாகும்
குதிரக்குத்தி மாதசங்கை
குடிப்போஞ் சொன்னேம் சிலநாளில்
அதிரும் வாத பித்தமையம்
அடர்ந்த சன்னியிதுதானே. (௪)

சாகவலி சன்னி :—

அறியுங்காகவலி தானும்
அலறுங்கண்ணும் மேல் நோக்கி
பிறியும் மலமும் சலம்நீரும்
பெருக்காத்துடையு மடக்காமல்
செறியுந்தொண்டை நாவுலர்ந்து
சிலேற்பனமிஞ்சிச் சளியொழுகும்
குறியாம் வாதபித்தமையம்
கொண்டசன்னியிதுதானே. (ரு)

End :

முசலகண்டன் வலி சன்னி :—

தானே முசலகன் வலிதானும்
தண்ணீர்த்தீயுஞ் சணப்போதில்
ஊனேயுடலில் வாய் வெழும்பி
உற்றுமுகத்தைத் தான்வலித்து

தேனே யொழுகும் வாய்தன்னில்
திரைபோல் நுரையுந்தள்ளிவைக்கும்
காணே கண்ணுங்கை காலுங்
கனத்து ஊளைக்கும் முசலகண்டனிதே. (எ)

இதுதான் வலிகளஞ்சுக்கும்
எடுத்த குணத்தைத் தானுரைத்தேன்
அதுதான் குமரகண்டன்
அறியுங்காக முசலகண்டன் நமரகண்டன்
சதுராய் நாலுஞ் சாந்தமதாய்த்
தைலமொத்த மருந்து செய்தால்
பிதுராம்பிரமகண்டன்வலி
பிணந்தான் திரும்பிப் பேசாதே. (அ)

கு-பு—இச்சிறு நூல் சன்னிவகையிற் சார்ந்த குமரகண்டன் வலி, நமரகண்டன் வலி, பிரமகண்டன் வலி, காக்கை வலி, முசலகண்டன் வலியென்ற இவ் ஐவகை வலிப்பு நோய்களுடைய குணங்களை யெடுத் துணர்த்துவது. இது எட்டுச் செய்யுட்களான் அமையப்பெற்றது. இதில் முற்றும் உள்ளது. இந்நூல் இன்னாரால் இயற்றப்பெற்றதென்றும் இன்ன நூலைச்சார்ந்ததென்றும் தெரியவில்லை.

No. 2351. அகத்தியர் வைத்தியசூத்திரம் ஆயிரத்தைந்நூறு.
AKATTIYAR VAIDDIYASŪTTIRAM ĀYIRATTAINNŪṚU.

Pages, 60. Lines, 4 on a page.
Begins on fol. 23-a of the Ms. described under No. D. 2349.
Breaks off in the 60th stanza.
Same work as that described under No. D. 1895.

கு-பு.—இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1895-ஆவது நம்பரில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் இந்நூல் முதல் அறுபது செய்யுட்களோடு முடிவடைந்திருக்கிறது. அப்பிரதிக்கும் இப்பிரதிக்கும் செய்யுள் தோறும் பாடபேதங்கள் காணப்படுகின்றன. எழுத்துப்பிழை மிகவுள.

No. 2352. திருமூலர் வாகடம்.
TIRUMŪLAR VĀKAṬAM.

Pages, 115. Lines, 4 on a page.
Begins on fol. 53-a of the Ms. described under No. D. 2349.
Complete.
Same work as that described under No. 1952.

கு-பு.—இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1952-ஆம் நம்பரில் வருணித்துக் கூறப்பெற்றுள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது. இறுதியிலே "சென்னைப்பட்டணம் மு. வி. ரா. சி. இ. சீ. பு. எல்லப்ப செட்டியார் எழுதி நிறைவேறினது" என்ற இத் தொடர்மொழி காணப்படுகின்றது. எழுத்துப்பிழைகள் காணப்படுகின்றன. அதற்கும் இதற்கும் மிகப் பாடபேதங்களிருக்கின்றன. ஏடுகள் ஒரு சிறிது சிதைந்துள.

No. 2353. முருகன் தோத்திரம்.
MURUKAN TŌTTIRAM.

Substance, palm-leaf. Size, 7½ × 1 $\frac{1}{8}$ inches. Pages, 68. Lines, 5 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 1-a. The other works herein are Māṇikkap pavaḻakkōvai, 36 a. Āndaikkādal, 39 b.

Complete.

In praise of God Muruga (Śrī Subrahmaṇya).

Beginning :

கைவல்லியநவநீதம் பூருவபடலம்.

பொன்னில மாதராசை பொருந்தினர் பொருந்தாருள்ளந்
தன்னிலந் தரத்திற்சீவ சாட்சிமாத்திரமாய் நிற்கு
மென்னிலங்களினுமிக்க வெழுநிலமதனில் மேலாய்
நன்னிலமருவுமேக நாயகன் பதங்கள்போற்றி. (க)

கந்தரனுபூதிதனைக்கற்றுணர்ந்தோர் தங்களுக்கு
வந்தவினையத்தனையுமாயுமே—செந்தில்
திருத்தணியில் வாழ்முருகன் செங்கமலப் பொற்பாதங்
கருத்தணியில் வாழ்ந்திருப்பர் காண். (உ)

திருப்பரமுங் குன்றுமலிச் செந்திப்பதியு
மருப்பாவினங் குடியுமாலாய் —இருப்பாக
ஏரகங்குன்றுடனுடனயின் சோலை மாமலையும்
பார்புகழாம் வேலர்பதி. (ங)

மதவானையை யனுசரிக்க :—

ஆடும்பரி வேலணி சேவலைனப்
பாடும் பரிசே பணியாயருள்வாய்
தேடுங்கய மாமுகனைச் செருவிற்
சாடுந்தணி யானை சகோதரனே. (க)

பால்பழம் நைவேத்தியம் :

மனதின் வியாகூலம் போக்குதல் :—

எந்தாயுமெனக்குத் தந்தையு நீ
சிந்தாகுலமானது தீர்த்தெனையாள்
கந்தா கதிர்வேலவனே யுமையாள்
மைந்தா குமரா மயில் வாகனனே. (உ)

சர்க்கரை தாம்பூலம் நைவேத்தியம் :

வணங்காதபேரை தண்டிக்க :—

உல்லாச நிராகுலயோகவிதச்
சல்லாப விநோதனு நீயலவோ
எல்லாமற வென்னையிழந்த நிலஞ்
சொல்லாய் முருகா சுரர்பூபதியே. (ச)

பச்சையரிசி நல்ல வெல்லம் நைவேத்தியம்.

புருஷனைக்கூடாத பெண்களுக்கு :—

திணியான மனோசிலை மீதுணதா
ளணியாரரவிந்த மரும்புமதோ
பணியானவள்ளிபதம் பணியுந்
தணியாவதி மோக தயாபரனே. (சா)

பால், பொங்கல், சக்கரை, பழம், தேங்காய் நைவேத்தியம்.

End : சத்துராதிகளைச் சங்கரித்தல் :—

இரவும் பகலுந்துதி செய்திருநாள்
பரவும் பரிசே பணியாயருள்வாய்
கரவுண்டெழுசூர்களையக்கதிர்போல்
விரவுஞ்சுடர்வேல் விடுசேவகனே. (ரு௭)

ஞானவானந்தம் பெறுதல் :—

ஞானந்தனினின்று நடித்தல் விடா
மோனந்தனை யென்று மொழிந்திடுமோ
வானந்த நடத்தனளித்தருளும்
வானந்தருவேள் மயில்வாகனனே. (ரு௮)

விதியை வெல்ல :—

நனவிற்படு நல்லுலகந்தனையுங்
கனவிற் பொருளாய்க் கருதாவெனை நீ
வினவிக்கொளு நாளுளதோ விதியே
சினவிற்சிறையிட்டருடேசிகனே. (ருகூ)

உச்சாடனம் பண்ணுதல் :—

உனையே யலதோர் பரமுண்டெனவே
நினையேனிடவூழ்வினை நீடுமதோ
கனையேழ் கடல்போல் வருகாரணமா
முனையே தெறு சண்முக வேலவனே. (சாக)

இவன் சொல்வழிப்படி சுவாமி நடக்க :—

நசையன்பினர்பானய வாதொழியின்
வசையுண்டெனு மவ்வழி நின்றருள்வாய்
விசையும்புகல் சூர்வெருவப்பொருதெண்
டிசையும் புகழ்த்திகழ் வேலவனே.

பழவினை நீக்குதல் :—

பண்டே தொடர்பற்றெடு சுற்றமெனும்
வெண்டோரை மகிழ்ந்து விளிந்திடவோ
கண்டே குறமங்கைதனைக்களவிற்
கொண்டே கடிதேகிய கொற்றவனே. (சாரு)

கன்னி மாயையிற் கொள்ளைகொடுத்தக்கவலை தீர :—
வள்ளைக் குழைமங்கையர் சிங . . . . . . லே
கொள்ளைப்படுமென் குறை தீருமதோ . .
.ள்ளைத்தனிமால் விடைமன்புகழும் . . .
பிள்ளைப்பெருமானெனும் பெற்றியனே. (௯௯)

* * *

* * *

கு-பு.—இந்நூல் முருகக் கடவுள் மீது துதிரூபமாய் அமைந்துள்ளது. இதில் உள்ள பாடல்களை எல்லாம் மந்திர ரூபமாகவுங் கொண்டு அவர் அவர் தத்தமது கோரிக்கைகளையும் பெறலாம் என்று ஒவ்வொரு பாடல் களின் தலைமுகத்திலும் எழுதிவைத்திருக்கும் தொடர்மொழிக் குறிப்பு களால் உணரக் கிடக்கின்றது. இது இன்னுரால் இயற்றப் பெற்றதென்றும் இத்துணைத்தென்றும் உணரவியலவில்லை. முதலில் முருகப் பெருமான் விஷயமான கைவல்லிய நவநீதப் பாட்டொன்றும், கந்தரனுபூதி செய்யு ளொன்றும் எழுதிவைக்கப்பட்டுள. ஏடுகள் சிறிது சிதைந்திருக்கின்றன. எழுத்துப்பிழைகள் காணப்படுகின்றன. 28-ஆம் ஏடு காணப்பெறவில்லை. இதன் பின்னர் ஔவை பாடல் மூன்று உள.

No. 2354. மாணிக்கப்பவழக்கோவை.
MĀṆIKKAPPAVAḺAKKŌVAI.

Pages, 6. Lines, 4 on a page.
Begins on fol. 36-a of the Ms. described under No. D. 2353.

Contains 12 stanzas only.

In praise of God Śiva. The author asks at the end of each stanza "When shall (I) see Lord Śiva ?."

Beginning :

மாணிக்கப்பவழக்கோவை.

அஞ்செழுத்தாய் எட்டெழுத்தாய்
ஐம்பத்தோரட்சரமாய் ,
பிஞ்செழுத்தாய் நின்ற
பெருமானைக் காண்பதெப்போ. (௧)

ஆதியாயந்தமுமாய்
ஆதாரப் பொருளுமாய்
நீதியாய் நின்ற நிம
லனைக்காண்பதெப்போ. (௨)

இறப்பிறப்பில்லாதார்
இன்பதுன்பமில்லாதார்
சிறப்பரிய வினையாளுஞ்
சிவபதத்தைக் காண்பதெப்போ. (௩)

உள்ளம் புறமு முயிராய்
உயிர்க்கலந்து . . . .
கல்லால் துணைநாதன்
. . கருத்துடன் நான் காண்பதெப்போ. (௫)

End :

ஐயனுமாயெவ்வுயிர்க்கும்
ஆதாரப்பொருளுமாய்
சைவனுமாய் நின்ற சதாசிவனைக்
காண்பதெப்போ. (௯)

அவ்வாகி உவ்வாகி
ஓங்காரத்துள்ளாகி
கவ்வாகி நின்ற கண
வனை நான் காண்பதெப்போ. (௯)

ஓரஞ்சு மஞ்சு முற்ற
பதினஞ்சுஞ்
சீரஞ்சாய் நின்ற சிவ
பதத்தைக்காண்பதெப்போ. (௰௧)

அக்கனமாய் எவ்வுயிர்க்கும்
ஆதாரப்பொருளுமாய்
சிக்கனமாய் நின்ற
திருவடியைக்காண்பதெப்போ. (௰௨)

கு-பு.—இந்நூல், "எக்காலக்கண்ணி" என்னும் நூலே போல "சிவ பிரானைக்காண்பதெப்போ" என்ற சொற்பொருள் ஒவ்வொரு பாடலின் ஈற்றிலுமமையுமாறு பாடப்பெற்றுள்ளது. இதில் பனிரண்டு செய்யுட்கள் இருக்கின்றன. இது இத்தணைத்து இன்னாரால் இயற்றப்பெற்றது என்னு மிவற்றில் ஒன்றும் இதிலிருந்து விளங்கவில்லை. ஏடுகள் ஒரு சிறிது சிதைந்திருக்கின்றன. எழுத்துப்பிழைகள் காணப்பெறுகின்றன. பிறகு சரஸ்வதி விஷயமான இரு செய்யுட்கள் உள.

No. 2355. ஆந்தைக்காதல்.
ĀNDAIKKĀDAL.

Pages, 2. Lines, 5 on a page.
Begins on fol. 39-b of the Ms. described under No. D. 2353.

Complete.

Similar to the work described under No. D. 2296.

Beginning :

ஒன்று பொல்லாது. இரண்டு நடை காட்டும். மூன்று பொரியரவம் தீண்டும். நாலு நல்லவர் வருவார். . . . . ஏழு இலையுடன் பிரக்கு . . ஒன்பது ஓலை வரும்.

End :

பதின்மூன்று தலைவன் படுவன். பதினாலு பத்திரம். பதினைந்து குதிரையோட்டம். பதினாறு வாழ்வு.

கு-பு.—இது, டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 2296-ஆவது நம்பரில் வந்துள்ள நூல்போன்றது. இதில் ஒன்று முதல் பதினாறு வரைக்கும் உள்ள எண்களுக்குப் பலம் கூறப்பட்டுள்ளது.

No. 2356. அகத்தியர் பூரணசூத்திரம் இருநூறு.
AKATTIYAR PŪRAṆASŪTTIRAM IRUNŪṞU.

Substance, palm-leaf. Size, 18 $\frac{10}{16}$ × 1$\frac{1}{16}$ inches. Pages, 72. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Same work as that described under No. R. 254 (j).

கு-பு.—இந்நூல் மூவருடக்காடலாக்கு 254 (j) நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாம். இப்பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது. ஷெ பிரதியில் முதலிற்காணும் "மேருவினிலுதித்தப் பூரணமதாகி" எனத்தொடங்கும் காப்புச் செய்யுள் இதில் காணப்பெறவில்லை. முடிந்தபின்னர் இதே இரஸவாத விஷயமான பாடல்கள் பதின்மூன்று அதிகமாகக் காணப்படுகின்றன. அவை எந்த நூலைச் சார்ந்தவையோ ? ஏடுகள் பல முறிந்து கிடக்கின்றன. அப்பிரதிக்கும் இப்பிரதிக்கும் அநேக விடங்களில் பாட பேதங்கள் இருக்கின்றன. எழுத்துப்பிழையுள.

No. 2357. அனுபவ வைத்தியம் வசனம்.
ANUBHAVA VAIDDIYAM VACANAM.

Substance, palm-leaf. Size, 13$\frac{5}{16}$ × 1$\frac{6}{16}$ inches. Pages, 432. Lines, 5 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Similar to the work described under No. D. 1978.

Beginning :

* * * * * * (க)

நாடியால் முன்னோர் சொன்ன
  நற்குறி குணங்களாலும்
நீடிய விழிதன்னாலும்
  நிலைபெறு முகத்தினாலுஞ்.
சூடிய ரேகை சேட்டை
  சொல்லிடு நல்லோர் சொன்ன
தேடிய குருடன்கையிற்
  சித்திரம் போன்றதாமே.

* * *

சிறியா நங்கை யறியாதார் சிறியநாகமே பிடியாரே. இது குளிசமாடிக் கட்டப்பிடிக்கலாம். * * * கற்சேம்பு பலிகொடுத்துக் குளிசமாடி மந்தையிற் புதைக்கப் புலியாட்டை யெடாது. பாம்பு கடித்தால் விழுதி யிலையை மென்று விழுங்க விஷம் ஏருது. சேப்பு நெருஞ்சில் சுட்டுச் சாம்பலாக்கி முலைப்பாலில் கரைத்துப் பஞ்சிற் . . . .

மேக ரணத்துக்கு :—ஆவாரை வேர் பட்டை பலம் இரண்டு (2) சீரகம் விராகான் எடை உ சாயங்காலத்துக்கு குறுணி தண்ணீர் வைத்துக் கஷாய மாய்க் காய்ச்சி ஐ ஆக இறக்கிச் சீரகம் அரைச்சுக்கலந்துப் பசுவின் வெண்ணெய் எலுமிச்சங்காய் மதியாரி வெள்ளை சர்க்கரை ஒரு பலம் கூடப்போட்டுக் காலமே மூன்று நாள் இந்தப்படிக்குக் கொடுக்கவும்.

End :

நீரிழிவிக்கும் தாகத்துக்கும்.

நீரிழிவுக்குச் சாமை அரிசி உப்புப்போடாமல் பொங்கி இதைப் பொட்டண மாகக் கட்டித் தண்ணி தெளித்துப் பிழிந்துபோட்டு இந்தத்திப்பியை உலர்த் திச் சூரணம்பண்ணி மூன்று விரற்கொண்டது எண்ணெயிற் கொள்ளவும். நீரிழிவு நிற்கும். இதனாலே தாகமெடுத்தால் சோறு கொதிக்கச்செய்தே தண்ணியை யிறுத்துக்கொண்டு இதில் தாழை விழுதும் குளிர்தாமரை யிலையும் கரைத்து முன்பொடியுங்கலந்து பனைவெல்லமும் இட்டுக்கொள்ள வும். தாகம் நிற்கும்.

நீரிழிவுக்குக் கோரைக்கிழங்குந் துளசியும் அரைத்து . . . குழப் பிக்கொள்ளவும். தீரும். இன்னும் ஒருவிதம்: ஆவாரையைச் சமூலம் உலர்த்தி உட்கட்டைத்தவிர இடித்துச் சூரணம்பண்ணி இதிற் பாதி நெல்லிப் பருப்பு, இதிற் பாதி மரமஞ்சள் கூட்டி வஸ்திரகாயம் பண்ணி இதிற் சக்கரையும் தேனுங்கலந்து உள்ளங்கையிற் கொள்ளவும். நீரிழிவு நிற் கும்.

கரப்பானுக்கு :—வெப்பாலை அரிசி, கார்போக அரிசி . . . வாய் விளங்கம், கண்டுபாரங்கி, நாட்டுமூலம், ஈசைக்கொட்டை, ஈசுரவேர், விஷ புத்தி, காட்டுச்சீரகம், எலுமிச்சம்பழம், கஸ்த்தூரி மஞ்சள், கருஞ்சீரகம், கடுக்காய், வசம்பு, வெங்காவளி, முக்காவேளை, தூதுவளை, வெண்காரம், படிக்காரம், பால்துத்தம், மயில்துத்தம், குங்கிலியம், ஆடுதின்னாப்பாளை, எள்ளு, காசுகட்டி இவையெல்லாம் பொடி பண்ணிக் கூட இலுப்பெண் ணெய், புங்கவெண்ணெய் விளக்கெண்ணெய், வேப்பெண்ணெய், நல் லெண்ணெய் இந்த அஞ்சு எண்ணெயும் காயவைத்து ஈசைக் [கொட்டு வுரை ?] கொட்டை விரையைச் சுட்டுப் பொடிபண்ணி இறக்குகிற சமயத்திலே போட்டு எல்லாம் அரைத்து எண்ணெயிலே கலந்துவைக்க வகைக்கு வராக னெடை (க) எண்ணெய் வகைக்குச் சேர் (வ).

கு-பு.—இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1978-ஆவது நம்பரில் வந் துள்ள நூல் போன்று இருக்கிறது. இதிலே அநேகவித நோய்களைத் தீர்த்தற் குரிய நன்மருந்துகளின் முறை விளக்கமாக வெழுதப்பட்டிருக்கின்றன. விஷங்களுக்கும் மருந்துகள் கூறப்பட்டுள. முதலிலும் இடையிலும் சில செய்யுட்கள் விரவி யெழுதப்பட்டுள. ஏடுகள் சிதைந்துள. எழுத்துப் பிழைகள் மிகவும் பொதிந்து உள. இடையில் 26 to 88, 234, 235, 275 என்ற இவ்வேடுகள் காணப்பெறவில்லை.

No. 2358. முருகன்தோத்திரப்பாடற்றிரட்டு.

MURUKANTŌTTIRAPPĀṬARṞIRAṬṬU.

Pages, 130. Lines, 4 on a page.

Begins on fol. 30-a of the Ms. described under No. D. 1074.

Contains 116 stanzas only.

Similar to the work described under No. D. 2353.

Beginning :

சூதாடும் வித்தை தொழில்விட்டுப் பொய்விட்டு துக்கம்விட்டு
வாதாடு தர்க்கத்தின் சாஸ்திரம்விட்டு மலர்சிறந்த
காதாடு குண்டல மாறுமுகமுங் கருத்துள் வைத்தால்
ஓதாடும் வேனுமயிலாடும் எட்டெட்டு மாடிடுமே. (க)

இறங்கி யிறங்கி யிருந்து நடந்து எழுந்திருந்து
உறங்கி விழித்துத் தெளிந்து தெளிந்து மெய்யுன்னியுன்னி
பறங்கிரி வேலென்ற சத்தமுன் சோத்திரத்திற்பாயலையோ
அறங்கிளை வாழ்கவுந்துஷ்டர் மனைக்கனலிட்டவனே
(சுப்பிரமணியர்). (உ)

தளைத்துக்கிளைத்துத் துளுத்திருந்தாக்கால் சகலருண்டு
இளைத்துக்களைத்து விழுந்துவிட்டால் எனக்காருதுணை
விளைத்துப்போர்செய்த சூருடனமரார வெட்டி மண்டை
துளைத்துப்புறப்பட்ட வேலா பழனிமலை துரையே.
(வேலாயுதம்). (ங)

புத்தியும் வித்தையுஞ் சித்தாந்த வேதப்புனலறிவும்
பத்தியும் பத்தி பதினன்கு வேதப்பலகலையும்
சித்தியுஞ் சித்திக்கு வேதாந்த ஞானத்திண் செய்கை தரும்
சத்தியஞ் சத்தியம் வேல்மணி மந்திரம் சடாட்சரமே.
(கடம்பன்). (ரு)

இணையொத்தமேனியும் ஆறுமுகமும் ஈராறுகையோன்
பணையொத்த தோளும் பருமுத்து மார்பும் பகருஞ்சர
அணையொத்தகால் விசைமுன்னுன்குருபு மெய்யன்புங்கொண்டு
துணையத்த வேழைமுன் வேல்மயில் நித்தந்துணைவரவே.
(சண்முகன்). (ம)

நால்வகை யோனி யெழுவகை தோற்றத்தில் நல்கிவந்தோர்
மாலயன் ருத்திரன் மயேசன் சதாசிவன் மற்றும்முள்ள
ஆலடித் தேவரிஷி முனிசித்தர்கள் அஷ்டசத்தி
வேலவன் வேலைத்துதிப்பார் உனைநித்தம் வேண்டுவரே.
(சூரசங்காரன்). (மஉ)

அண்டர்க்கிறைவனை யீராறுசமயத்தகந்தெளிந்த
தொண்டர்க்கெளியனை மாணிக்க முத்து சுயமணியைக்
கொண்டக் கடுவிடங்கொண்டான் புதல்வனைக் கொற்றவனைத்
துண்டக் குடோரியே சண்முகா நித்தந் துதிசெய்வனே. (0)
(குழந்தை வடிவேலன்).

கண்டுமிருந்தென்ன காணாத போதுங்களரியிலும்
மிண்டுகள் பேசிய சண்டாளர் மூர்க்கர்தம் வீம்படங்கத்
துண்டுத்தொழுவிற்றடைத்து அதட்டிச் சுருங்கும்படி
தண்டினை செய்திடும் வேலாதிருச்செந்தூர்ச் சேவகனே. (உ0)

முருகாவென்றுன்னை யிருகரங்கூப்பி முடியில் வைத்தால்
இருகாலம் பொய்த்த வினைவருமோ வெளியேன் பிழையே
தருகாமல் காப்பது உன் கடன்காண் சைலமேகவர்ணன்
மருகா குறப்பெண் மணாளா திருத்தணிமலைக் கந்தனே. (க)
(சரவணபவன்).

End :

அய்யன் பழனிப்பதி சுப்பிரமணியனு மாறுமுகம்
மெய்யன் திருச்செந்தூர் வேலாயுதமும் மெய்ப்பொருளும்
செய்ய கொண்டாக்கும் குமரய்யர் தான் குலதெய்வமென்று
வெய்யதுணங்க வ [று] (ரு) வாய்வெலாரி மலைக் கந்தனே. (

எட்டுக்காலோட விருகாலத்தலை மூன்றும்
வட்டமுடன் கொம்பிரண்டு வாய்நாலுந்—திட்டமுடன்
சொக்கனுக்கஞ்சுதலை சுமந்தாருக் காறுதலை
இக்கணக்கே கண்டேனினி.

ஆத்தாள் குறத்தி யப்பன் குறவன் அரனெனக்குப்
பாத்தா லொருமுறை பாட்டனுமாம் பதினாலுலகம்
காத்தாளென்பாட்டி காமனென்மாமன் கருணையுடன்
பெற்ற பிழைக்க வல்லார் பிள்ளையா ரெங்கள் பெரியப்பனே.

குறிப்பு.—இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 2353-ஆவது நம்பரில் வந்துள்ள நூல் போன்றுள்ளது. இதிலே முருகன் விஷயமான தோத்திரப் பாடல்கள் பல திரட்டி வைக்கப்பெற்றிருக்கின்றன. இடையே சில அகப்பொருள் விஷயமான பாடல்களும் எழுதப்பெற்றுள. இதில் உள்ள பாடல்கள் முற்றும் சில கலித்துறையும் சில வெண்பாக்களும் சில பதங்களுமாக விருக்கின்றன. உள்ள ஏடுகளில் சில சிதைந்திருக்கின்றன. எழுத்துப் பிழைகளிருக்கின்றன. சில பாடல்களுக்கு மாத்திரம் எண்கள் குறிக்கப்பட்டிருக்கின்றனவேயன்றிப் பல பாடல்களுக்குக் குறிக்காமலே விடுக்கப் பெற்றிருக்கின்றன.

No. 2359. அருணகிரிசுவரர் தேவாரம்.
ARUṆAGIRĪŚVARAR TĒVĀRAM.

Pages, 6. Lines, 7 on a page.
Begins on fol. 108-a of the Ms. described under No. D. 1074.

Contains 10 stanzas only.

Verses in praise of God Śrī Aruṇagirīśa of Tiruvaṇṇāmalai.

கு.பு.—இது அருணசலத்திற் கோயில்கொண்டு இருக்கும் அருணசலேசுவரர் சுவாமிமீது இயற்றப்பெற்ற தேவாரமாகும். இதில் " கமலாசனனும் நெடு மாலும், ஒத்தைப்புனல்களைந்து, கன்றூர்முனியும் பதஞ்சலியும், பொருப் பாங்கைலேதனைநினைந்து " என்று இம்மாதிரியாகத் தொடங்கும் பத்துப் பாடல்களே இருக்கின்றன. ஏடுகள் எல்லாம் பாதி முறிந்து விழுந்து இடக் கின்றனவாதலின் பாட்டுக்கள் எல்லாமே அரைகுறையாகச் சில ஒரு அடி யினவாயும் சில பாதி அடியினவாயுமிருக்கின்றன. ஆசிரியர் இன்னு ரென்று தெரியவில்லை. இதுக்குப் பின்னர் " சிவகாமியம்மை விருத் தம் " என்ற பெயரால் ஒரு பாடல் உளது.

No. 2360. திருத்தணிகைக்குமாரக்கடவுள் பதிகம்.
TIRUTTAṆIKAIKKUMĀRAKKAḌAVUḶ PADIKAM.

Pages, 17. Lines, 5 on a page.
Begins on fol. 131-a of the Ms. described under No. D. 1074.

Incomplete.

Similar to the work described under No. D. 1648.

கு-பு.—இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1648-ஆவது நம்பரில் வந்துள்ள நூல் போன்றுள்ளது. இதில் பத்துப் பாடல்களிருக்கின்றன. " திருப் பணி செழித்தருள் குறக்கனிதனைப் புணர்த்திரு த்தணிமலைக்கடவுளே " என்றதை மகுடமாக வைத்துப் பாடப்பெற்றுள்ளது. நடுவில் ஒரேடு முறிந்து போயுளது. மிகப்பிழையுடன் உளது. இதன் பிறகு " சுப்பிரம் மணியர் திருவனந்தல் " என்ற தலைப்பெயருடன் 2 பாடலும், " சிவலிங்க மாலை " என்ற நூலினது 2 பாடலும் எழுதப்பெற்றிருக்கின்றன.

No. 2361. அருணசலேசுவரர் விருத்தம்.
ARUṆĀCALĒŚVARAR VIRUTTAM.

Pages, 9. Lines, 6 on a page.
Begins on fol. 146 of the Ms. described under No. D. 1074.

Incomplete.

Similar to the work described under No. D. 1676.

கு-பு.—இது டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1676-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ள நூல் போன்று உள்ளது. இங்கு எழு பாடல்களேயுள. இந்நூல் இன்னாரால் இயற்றப்பெற்றதென்பது இதிலிருந்து விளங்கவில்லை. ஒவ்வொரு பாடலிலும் "அரகராமயேசனே பரமகுருவீசனே யருணசலவாசனே" என்ற சொற்றொடரை மகுடமாக வைக்கப்பெற்றுள்ளது. எழுத்துப்பிழைகள் மிகுந்திருக்கின்றன.

No. 2362. பலபாடற்றிரட்டு.
PALAPĀḌAṚṚIRAṬṬU.

Substance, palm-leaf. Size, $9\frac{2}{16}$ × 1 inches. Pages, 60. Lines, 4 and 5 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

A varied collection of verses.

கு-பு —இது, பல விஷயமான பாடல்களையும் ஒரு திரட்டாகத் திரட்டுவித்தது. இதில் "ஞானவிருத்தம்" என்ற தலைப்பேருடன் ஞான விஷயமான பாடல்கள்சிலவும், "சதுஷ்கோணமாலைபத்து" என்றதும், சில தோத்திரப்பாடல்களும், சில கீர்த்தனங்களும் சில பதங்களும் ஆக இவைகளே திரட்டி எழுதிவைக்கப்பெற்றிருக்கின்றன. ஏடுகள் மிகவும் சிதலுற்றிருக்கின்றன. எழுத்துப்பிழைகள் பொதிந்துகிடக்கின்றன.

No. 2363. தண்டலையார்சதகம் (பழமொழி விளக்கம்).
TAṆḌALAIYĀRŚATAKAM (PAḶAMOḶI VIḶAKKAM).

Substance, palm-leaf. Size, $15\frac{1}{16}$ × 1 inches. Pages, 36. Lines, 5 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Begins on fol. 1-a. The other work herein is Sarasvati antādi 24-a.

Complete.

A well-known didactic poem by Śrī Paḍikkāśuppulavar.

Beginning :

தண்டலையார் சதகம்.

காப்பு.

சீர்கொண்ட கற்பகத்தை வாதா விநாயகனைத் தில்லை வாழுங்
கார்கொண்ட கரிமுகனை விகடசக்கிர கணபதியைக் கருத்துள்வைப்பாம்
பேர்கொண்ட ஞானநாயகி பாகர் [நிழ] (நீணெறி) யெம்பெருமான் [மீதில்
ஏர் கொண்ட நவகண்டமிசைந்த பழமொழி விளக்கமியம்பத்தானே.

நூல்.

வரமளிக்குந் தண்டலையார் திருக்கோவிலுட்புகுந்து வலமாய் வந்தே
ஒரு விளக்காகிலும் பசுவின் நெய்யுடன் றுமரை நூலிலொளிர வைத் [தால்
கருவிளக்கும் பிறப்புமில்லை யிறப்புமில்லை கைலாசங் காணியாகும்
திருவிளக்கிட்டார்தமையே தெய்வமறிந்திடும் விளையுந் தீருந்தானே. (க)

கூன்செய்த பிறையணியுந் தண்டலையார் கருணைசெய்து கோடிகோடி
யான் செய்த வினையகற்றி நன்மைசெய்தானுபகாரமென்றுளுண்டோ
ஊன்செய்த வுயிர்வளர்த்தல் தவந்தானம் நடந்தேற வுதவிசெய்து
வான்செய்யும் நன்றிக்கு வையகமென்செய்யுமதை மறந்திடாதே. (௨)

End :

ஆழியெல்லாம் பாலாகி யவனியெல்லா மன்னமய மானுலென்ன
சூழவருமிரவலர்க்குப் பசிதீர வுண்டிருக்குஞ் சுகந்தானுண்டோ
ஏழுலகும் பணியவருந் தண்டலை நீ[ழ]நெ](ணெ)றியாரே யெந்தநாளும்
நாழி நெல்லுக்கொரு புடவை விற்றாலும் நிருவாணம் நாய்க்குத்
தானே (௬௬)

நித்தமெழுநூறு நன்றிசெய்தாலு மொரு தீது நேரேவந்தால்
அத்தனையுந் தீதென்பார் பழிகருமக் கயவர் குணமகற்றலாமோ
வித்தகஞ்சேர் தண்டலையார் வளநாட்டிற் சாம்பலிட்டு விளக்கினாலும்
எத்தனை செய்தாலுமென்ன பித்தளைக்குத் தன்றுற்ற மியற்கையாமே
(ள)

கு-பு.—இந்நூல், பொன்விளைந்தகளத்தூரிலே செங்குந்தர் மரபிலே யவ தரித்துச் சிவானுக்கிரகத்தால் தமிழ்க்கலை முழுதும் பயின்று "படிக் காசுப்புலவர்" என்று சிறப்புப்பெயர் பெற்றிருந்த பெரும் புலவரால் இயற்றப்பெற்றதாகும். இது "தண்டலை நீணெறி" யென்னும் சிவ ஸ்தலத்தில் அமர்ந்திருக்கும் பரமசிவனார்மீது துதி ரூபமாயும் ஒவ் வொரு பாட்டின் ஈற்றடியிலும் ஒவ்வொரு பழமொழியையும் அணியாக வைத்து அதன் அதன் பொருளையெல்லாம் மிகுதியான அடிகளிலே விளக்குவித்து நீதிரூபமாயும் அமைந்ததொரு அரிய பெரிய நூலாகும். இது ஒரு குறிப்புரையுடனும், தனித்தும் நூலாசிரியரின் சரித்திரக் குறிப் புடன் அச்சிடப்பெற்றுள்ளது. இதற்குப் "பழமொழி விளக்கம்" என்று மற்றொரு பெயரும் உண்டு. இதிலே நூறு பாட்டுக்களுமுள. பாடபேதம் உண்டு. இதில் உள்ள பாடல்களெல்லாம் பெரும்பான்மையாக அச்சுப் பிரதியிற் கண்ட முறைபோலல்லாமல் முன்னவை பின்னவைகளாகக் காணப் பெறுகின்றன. எழுத்துப்பிழையுள.

No. 2364. சரசுவதியந்தாதி.

SARASVATIYANTĀDI.

Pages, 10. Lines, 5 on a page.
Begins on fol. 24-a of the Ms. described under No. D. 2363.

Contains 20 stanzas only.

An eulogy, in thirty stanzas, on Goddess Sarasvati. By the Great Kambar.

Printed.

Beginning :

சரசுவதி துதி.

ஓத வினையகலும் ஓங்குபுகழ் பெருகுங்
காதற் பொருளனைத்துங் கைகூடுஞ்—சீதப்
பனிக்கோட்டு மால் பிரமர்க . . மாபாரதப்போர் தீட்டுந்
தனிக்கோட்டு வாரணத்தின்றாள். ( )

படிக நிறமும் பவளச் செவ்வாயுங்
கடிகமழ் செந்தாமரை போற்கையும்—துடியிடையும்
அல்லும் பகலுமனவரதமுந் தொழுதால்
கல்லுஞ் சொல்லாதோ கவி. (க)

ஆயகலைகளறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்குமென்னம்மை—தூய
உருப்பளிங்குபோல் வாளென்னுள்ளத்தினுள்ளே
இருப்பளிங்கு வாராதிடர் (உ)

நூல்

சீர்தந்த வெள்ளிதழ்ப் பூங்கமலாசனத் தேவி செஞ்சொற்
றார்தந்த வென்மனத்தாமரையாட்டி சரோருகமேற்
பார் தந்த நாதனிசை தந்த வாணி நற்பங்கயத்தாள்
வார் தந்த சோதியம் போதுகத்தாளை வணங்குதுமே. (க)

வணங்குஞ் சிலைநுதலுந் திருத்தோளும் வனமுலைமேற்
சுணங்கும் புதிய நிலாவொளிர் மேனியுந் தோட்டுடேன
பிணங்குங் கருத்தடங் கண்களுநோக்கிப் பிரமனன்பா
லுணங்குந் திருமுன்றிலாள் மறை நான்குமுரைப்பவளே. (உ)

உரைப்பாருரைக்குங் கலைகளெல்லாமெண்ணிலுன்னையன்றித்
தரைப்பாலொருவர் தரவல்லரோ தண்டரளமுலை
வரைப்பாலமுது தந்திங்கென்னை வாழ்வித்த மாமயிலே
விரைப்பாசடைமுடி வெண்டாமரைப் பதிமெல்லியலே. (ந)

இயலானதுகொண்டு நின்றிரு நாமங்களேத்துதற்கு
முயலாமையாற்றடுமாறுகின்றேனிந்த மூவுலகுஞ்
செயலாலமைத்த கலைமகளே நின்றிருவருளுக்
கயலாய் விடாம லடியேனையுமு வந்தாண்டருளே. (ச)

End :

தொழுவார் வலம் வருவார் துதிப்பார் தந்தொழின் மறந்து
விழுவாரருமறை மெய் தெரிவாரின்ப மெய்புளகித்
தழுவாரினுங் கண்கணீர் மல்குவாரிங்கனவதென்ன
வழுவாத செஞ்சொற் கலைமங்கைபா லன்பு வைத்தவரே. (உரு)

கு-பு.—இந்நூல், மகாகவியாகிய கம்பர் அருளிச்செய்த அந்தாதியாக வமைந்ததொரு நூலாகும். சரசுவதியின் துதி ரூபமானது. முப்பது பாடல்களால் அமைந்துளது. இப்பிரதியில் (உரு) பாடல்வரையுமே இருக்கிறது. இடையில் 11 to 15 ஆகிய பாடல்கள் எழுதப்பெற்ற ஓரேடு காணப்பெறவில்லை.

இது, "தோத்திரப் பிரபந்தத்திரட்டு" என்றதிற் சேர்த்து அச்சிடப் பெற்றுளது. இதனைத் தமிழுலகில் சரஸ்வதீ தேவியின் அருள்பெறுவான் விழைந்தார் யாவருமே மனப்பாடஞ்செய்து போற்றி வருகின்றனர். இப் பிரதி மிக வெழுத்துப் பிழையுடன் உளது. உள்ள ஏடுகளும் நுனியில் முறிந்து உள.

No. 2365. வைத்தியமுறையும் மந்திரமும்.
VAIDDIYAMUṞAI AND MANTRA.

Substance, palm-leaf. Size, 8½ × 1⅝ inches. Pages, 176. Lines, 8 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Similar to the work described under No. 190.

கு.பு.—இந்நூல் மூவருடக் காடலாக்கு 190-ஆவது நம்பரில் வந்துள்ள நூல் போன்றிருக்கிறது. இதில் அநேக வியாதிகளுக்கு மருந்து முறையும் மந்திர முறையும் வசன் நடையில் எழுதப்பெற்றிருக்கின்றன. சில மந்திர முறைகள் சக்கிரங்களில் அமைத்துப் பொறிக்கப் பெற்றிருக்கின் றன. ஏடுகள் மிக்வுஞ் சிதைந்துள. இது இத்துணைத் தென்றும் இன்னு ரால் எழுதப்பெற்றதென்றும் தெரியவில்லை. உள்ள ஏடுகளும் தொடர்ந்த எண் குறிக்கப் பெருமலே இருக்கின்றன. மொத்தம் (அஅ) ஏடுகள் உள. எழுத்துப்பிழைகள் மிகவுள.

No. 2366. கோகுலசதகம்.
GŌKULAŚATAKAM.

Substance, palm-leaf. Size, 16$\frac{1}{1}\frac{2}{6}$ × 1¼ inches. Pages, 52. Lines, 4 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete.

A centum of verses in praise of Śrī Gōkulam, the scene of the early life and divine sports of Lord Śrī Kṛṣṇa.

Printed.

Beginning :

கோகுலசதகம்.

திருமேவும் பாடியில் வாழ்வோர்கண் மீதிற் சிறக்கவுமே
உருமேவு கோகுல மேன்மைச் சதக முறைத் தமிழ்க்குப்
பருமேவு முல்லை . . . யும் பிரானண்டை வைப்பையெல்லாங்
கருமேவு முந்தியிற் காத்தான் கண்ணனடி காப்பதுவே.

காப்பு முற்றும்.

மணங்கொண்ட வேதன் முகத்திற் புயத்தில் வளர் குறங்கிற்
கணங்கொண்ட பாதத்திற்றேன்றிய நான்மறைக்கணம் பெறவே
புணங்கொண்ட பாம்பணையானமிர்தூறு மிப்பார் தழைக்க
குணங்கொண்டு முன்வருமன் பர்தங்கோத்திர கோகுலரே. (க)

End :

தரங்கமெறியுந்திருப்பாற் கடலிவர் தன் மனைபோல்
அரங்கந்துயிலும் பிரானருளால் அன்பர் கோத்திரத்தோர்
வரங்கள் பெறுகின்ற கோகுலப்பாவை மகிழ்ந்துகொண்டே
உரங்கொள் பெரும்புகழ்கொண்டால் திருவருளோங்கவுமே. (௯௯)

சங்கத்தை வென்றவர் மாங்காயுதிரத் தமிழுரைத்தோர்
துங்கக்கயேந்திர மோட்சமு மாயிரஞ் சொன்னவல்லோர்
எங்கட்கிறை மகிழ் பாகவதமு மேழாயிரமாய்க்
கொங்குற்ற வாணி கடாட்சத்திற் செய்தவர் கோகுலரே. (௱)

கு-பு.—இந்நூல், கோகுலத்தைப்பற்றிச் சிறப்பாகக் கூறுவதோர் "சதகம்" என்ற பிரபந்த விசேடமாகும். இது "பாலூர் அமிருத கவிராயர்" என்ற பெரும் புலவரால் இயற்றப்பெற்றதென்று தெரிகிறது. நூலிலிருந்து இதுக்கு விளக்கமாகத் தக்க சான்று தெரிந்திற்றிலது. இந்நூல் "சதகத்திரட்டு" என்றதிற் சேர்த்து அச்சிடப்பெற்றிருக்கிறது. அச்சுப் பிரதிக்கும் இதற்கும் முழுமையும் பாட பேதங்களிருத்தலோடு பல செய்யுட்கள் முன் பின்னுகவும் இருக்கின்றன. ஏடுகள் மிகச் சிதிலம். எழுத்துப்பிழையுள. முடிந்த பின்னர் "மண்டல புருடர் நிகண்டிலிருந்து" என்ற தலையங்கப் பெயருடன் (25 to 27), 68, 69 என்ற எண்களிட்ட சூத்திரங்கள் உள.

No. 2367. சுப்பிரமணியர் சுத்தஞானம் நூறு.
SUPPIRAMAṆIYAR SUDDHAÑĀNAM NŪṚU.

Substance, sritalam. Size, $9\frac{6}{16} \times 1\frac{14}{16}$ inches. Pages, 51. Lines, 10 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance, old.

Complete.

Same work as that described under No. R. 170 (*b*).

கு-பு.—இந்நூல் மூவருடக் காடலாக்கு 170 (*b*) நம்பர் பிரதியில் வருணித்துக் கூறப்பெற்றுள்ள "சுப்பிரமணியர் ஞானசூத்திரம் நூறு" என்ற நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உளது. சிற்சிலவிடங்களில் பாடபேதங்கள் காணப்படுகின்றன. ஏடுகள் ஒரு சிறிது சிதலுற்றுள. எழுத்துப்பிழைகள் உள. (5 & 25) ஆகிய இவ்வேடுகள் மாறிக் கோக்கப்பட்டுள.

No. 2368. கணக்கதிகாரம் உரையுடன்.
KAṆAKKADHIKĀRAM WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, $15\frac{3}{4} \times 1\frac{3}{8}$ inches. Pages, 38. Lines, 6 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

Same work as that described under No. 199-C. and with slight *difference* in Text and Commentary.

கு.பு.—இந்நூல் மூவருடக் காடலாக்கு 199-C நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். மூலத்திலும் உரையிலும் ஒரு சிறிது பேதம் காணப் படுகிறது. இப்பிரதியில் முதலிலிருந்து ஒரு சிறிய பகுதியேயுளது. ஏடு கள் ஒரு சிறிது சிதைந்துள. எழுத்துப்பிழைகள் உள. " விடுகதை " என்ற பெயரின் கீழ் " விதையில்லா நீர் பாய்ந்து முளை முளைக்கும், மேவியே நிலம் படரும் விரை விழாது, விரியுமது வண்டுமூண்ணு பூவே பூக்கும், மெல்லியர்கள் கையிலெடுத்துத் தலையிற் சூடார், பாரறிய ஐயாறு நாளைக்குள்ளே பயிரிட்டு அறுத்துப்படுப்பார், தரையில் ஆரொருவர் இக்கதையை யறிந்து சொன்னால் அவரை நாம் பெரியோரென்றறிய லாமே ". " உப்பு " என்று ஓர் புதர் எழுதியுளது.

No. 2369. கொங்கணர் பிரம்மானந்த நூல்.
KOṄKAṆAR BIRAMMĀNANDANŪL.

Substance, palm-leaf. Size, 10 × $1\frac{5}{16}$ inches. Pages, 60. Lines, 8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Same work as that described under No. R. 250-b.

கு-பு.—இந்நூல் மூவருடக் காடலாக்கு 250-b நம்பரில் வந்துள்ள " கொங்கணர் தத்துவநூல் " என்ற நூலேயாகும். இங்குக் " கைலாச கொங்கணர் பிரம்மானந்த நூல் " என்றதாக இதற்கு மற்றொரு குறி குறிக்கப்பட்டுளது. இதில் இந்நூல் முற்றும் உளது. (ரு அ) பாடல்களால் அமைந்துளது. அதற்கு மிதற்கும் பாட்டுக்கள்தோறும் சில பாடபேதங் கள் காணப்படுகின்றன. எழுத்துப்பிழையுள. ஏடுகள் ஒரு சிறிது சிதை வுற்று இருக்கின்றன.

No. 2370. அகத்தியர்பூரண சூத்திரம் இருநூறு.
AKATTIYAR PŪRAṆASŪTTIRAM IRUNŪṞU.

Substance, palm-leaf. Size, 11¼ × 1¼ inches. Pages, 40. Lines, 9 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Begins on fol. 1-a. The other work herein is Gōrakkarsūttiram, 21-a.

Complete.

Same work as that described under No. R. 254(j).

கு.பு.—இந்நூல் மூவருடக் காடலாக்கு 254(j) நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது. ஏடுகள் முறிந்து கிடக்கின்றன. சிற்சிலவிடங்களில் பாடபேதங்கள் காணப்படு கின்றன.

No. 2371. கோரக்கநாயனார் சூத்திரம்.

KŌRAKKANĀYANĀR SŪTTIRAM.

Begins on fol. 21-a of the Ms. described under No. D. 2370.
Pages, 15. Lines, 8 on a page.

Complete.

Explains the medicinal and such other properties of various herbs and plants.

Beginning :

கோரக்க நாயனார் அருளிச்செய்த சூத்திரம் :—

உலகமெய்க்கு மொரு பெருங்கருணைப்
பலகலைசெய்புகழ்ப் பாவைப்புதல்வனை
அலகில் மெஞ்ஞானமாகிய வானைத்
தலையில் வைத்ததிசயஞ்சாற்றுகின்றேனே. (க)

சாற்று மதிசயந்தான் எண்விதமாகும்
கூத்தம்பலவாய்க்கூறிடும் வேதங்கள்
போத்துந்தகமே பூரணமூலியே. (உ)

பூரண மூலி பெருந்தத்துவமாகுஞ்
சாரணைதாட்டிச் சர்ப்பங்கள்போலவே
பாரிறபதினெண் முழுத்திற்றோன்றிடும்
பேரணிகாட்டிற் பிசாசுகள் கூட்டமே. (ங)

* * *

கறைக்கும் பிரமிகையிலகப்படில்
மறைக்கும் பதினாயிரம் பேர்வந்தாலும்
நிற்கவுமாட்டார் நேருசமூலி
வற்கம் பிணக்கமயக்க மதாமே. (ய)

மயக்கப்படுத்து மதன சந்தோஷணி
நயத்திலொருபெண்ணை ராவுமருவிடில்
தியக்கமதாகித்திரும்பவறிந்திடாள்
சமித்திய மூலிகை தன்றெழிற்சொல்லுமே. (யக)

சாக்கிய மூலிகைதன்கையகப்படில்
நோக்கிய கோட்டை நொறுங்கியுடைந்திடும்
பாக்கிய மூலிகை படைகள் தெறித்திடும்
வாக்கிய வேதத்தில் வள்ளல் சொன்னாரே. (யச)

ஊமையுரைபேசு யோகிகள் மூலிகை
காமன்றன் மூலிகை கையிலகப்படில்
பூமியில் வாணம் புருடர்கை வைக்க
சாமீக மூல சாத்திடத் தங்கமே. (யரு)

End :

ஆகுமவள்தாயெனவே பாதம்போற்றி
அர்ச்சித்துத் தொழுதிறைஞ்சியன்பாயெண்ணி
பாக்கிலையுஞ்சுருள்கொடுத்துப்பணியே செய்து
பாணிவட்டம் ஊமைவட்டம் பண்ணி மேலே
வாகுபெற வறுகோணம் வரைந்து கொள்ள
வாலையுடையுயிரெழுத்து வாங்கு வாங்கு. (சுசு)

பூசனை செய்யுங்கையில் புராதனைப் பொசிப்பீராகில்
யோசனை தூரம் போவார் உமையொருபாகர்தானும்
ஆசையாமதுவையுண்டால் அதில்ரெட்டிதூரம்போவார்
ஈசனுராணைதிண்ணமிடைவிடாதிருக்க முற்றே. (சுஎ)

கு.பு.—இன்னால் இன்னின்ன மூலிகைகள் இரசவாதம் முதலிய இன்னின்ன தொழிலுக்கு ஆம் என்றும், அஷ்டகர்மங்களில் இன்னின்னதற்கு இன்னின்ன மூலிகைகளாம் என்றும், இன்னும் இன்னோரன்ன பல வித்தைகட்கும் உரித்தான கருக்கஸீயும் எடுத்து உணர்த்துகின்றது. கோரக்கர் இயற்றியதாகத் தலையங்கத்திற்குறிக்கப் பெற்றுள்ளது. " கொள்வது **அன்பதில் குறிப்பு உரைத்திட்டோம்**, கள்ளருக்காகக்காட்டார்கள் யோகிகள், பிள்ளையென்றுன்னைப் பிரியத்துடன் சொல்வ, துள்ளமடக்கித் துணுக்கிடும்பாதாளம் " என்ற (ருசு) ஆம் பாடலால் இந்நூலாசிரியர் ஐம்பது பாடல்களைக்கொண்டதொரு நூலும் இயற்றியுள்ளார் என்பது தெற்றென விளங்குகின்றது. மற்று, " வழுத்தினூர் இந்த நூல் மகிமையெல்லாம் மக்களே லோகர்க்குவுரைக்கலாகாக், கொளுத்திய தீபம்போல் விளக்கமாகும் **கோரக்கர் வெளி விட்டாரென்று** பேராம், அழுத்தமனத்தோர்களாகவேணும் அவர்களுக்கு வழலை முறையறைந்திட்டோமே ". என்ற ஐம்பதாவது பாடலால் ஆசிரியர் " **கோரக்கர்** " ஆவார் என்றும் தெளிவாகிறது. இதில் (சுஎ) பாடல்களிருக்கின்றன. முற்றுப்பெற்றதென்றே தோற்றுகிறது. ஏடுகள் மிகவும் சிதைவுற்றிருக்கின்றன. எழுத்துப்பிழையுள. சில சில பாடல்களில் இரண்டொரு அடிகளில்லை.

No. 2372. சிவப்பிரகாசவெண்பா.

ŚIVAPPIRAKĀŚAVEṆPĀ.

Substance, palm-leaf. Size, $14\frac{1}{2} \times 1\frac{3}{4}$ inches. Pages, 7. Lines, 9 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Wants 47 to 80 Foll. in the middle. By Tattuvadēśikanāyanār. Complete.

Begins on fol. 1-a. The other works herein are. Tattuvāmirtam, 4-a. Tiruttālāṭṭu, 17-a. Sorūpanandarpiḷḷaittamiḻ, 18-b. Sorūpānandar Veṇpāvantādi, 31-a. Sorupānandarkalitturaiyantādi, 38-a. Ñānavinōdankalampakam, 47-a. Sorupānandarñānavulā, 49-a. Sorupānandar Silīḍaiyulā, 62-b. Sorupānandar Neñjuviḍutūdu, 75-b. Sorūpānandar Kalimaḍal, 81-a. Mōhavadhaipparaṇi, 88-a.

Same work as that described under No. D. 1499.

கு.பு.—இந்நூல் டிஸ்கிருப்டிவ் கேடலாக்கு 1499 ஆவது நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இந்தப் பிரதியில் முற்றும் உள்ளது. ஏடுகள் சிதலுற்றுச் சிதைந்துள.

No. 2373. தத்துவாமிருதம்.
TATTUVĀMIRUTAM.

Pages, 26. Lines, 9 on a page.
Begins on fol. 4-a of the Ms. described under No. D. 2372.

Complete.
Same work as that described under No. D. 1553.

கு.பு.—இந்நூல் டிஸ்கிருப்டிவ் கேடலாக்கு 1553 ஆவது நம்பரில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது. இது தத்துவ தேசிக நாயனாரால் இயற்றப்பெற்றது. அதற்கும் இதற்கும் பல விடங்களிலே பாடபேதங்கள் காணப்படுகின்றன.

No. 2374. திருத்தாலாட்டு.
TIRUTTĀLĀṬṬU.

Pages, 4. Lines, 10 on a page.
Begins on fol. 17-a of the Ms. described under No. D. 2372.

Complete.
Same work as that described under No. D. 1558.

கு.பு.—இந்நூல் டிஸ்கிருப்டிவ் கேடலாக் 1558 ஆவது நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உளது. ஏடுகள் மிகவுஞ் சிதலுற்று இருக்கின்றன. எழுத்துப்பிழை காணப்படுகின்றன.

No. 2375. சொரூபானந்தர் பிள்ளைத்தமிழ்.
SORŪPĀNANDAR PIḶḶAITTAMIḺ.

Pages, 25. Lines, 10 on a page.
Begins on fol. 18-b of the Ms. described under No. D. 2372.

Complete.
Same work as that described under No. D. 325.

கு.பு.—இந்நூல் டிஸ்கிருப்டிவ் கேடலாக்கு 325 ஆவது நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது. ஏடுகள் மிகவும் சிதலுற்றுச் சிதைந்திருக்கின்றன. எழுத்துப்பிழையுள.

No. 2376. சொரூபானந்தர் வெண்பாவந்தாதி.

SORŪPĀNANDAR VEṆPĀVANTĀDI.

Pages, 14. Lines, 9 on a page.
Begins on fol. 31-a of the Ms. described under No. D. 2372.

Complete.

Same work as that described under No. D. 1514.

கு.பு.—இந்நூல் டிஸ்கிருப்டிவ் கேடலாக்கு 1514 ஆவது நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இந்தப் பிரதியில் இந்நூலின் (100) நூறு பாட்டுக்களுமிருக்கின்றன. ஏடுகள் மிகவுஞ் சிதலுற்றிருக்கின்றன.

No. 2377. சொரூபானந்தர் கலித்துறையந்தாதி.

SORŪPĀNANDAR KALITTUṞAIYANTĀDI.

Pages, 18. Lines, 9 on a page.
Begins on fol. 38-a of the Ms. described under No. D. 2372.

Wants Two Stanzas in the end.

Same work as that described under No. D. 1508.

கு.பு.—இந்நூல் டிஸ்கிருப்டிவ் கேடலாக்கு 1508 ஆவது நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் இறுதியில் இரண்டு செய்யுட்கள் ஒழிந்து முற்றும் உள்ளது. ஏடுகள் சிதலுற்றிருக்கின்றன. எழுத்துப் பிழைகள் இருக்கின்றன.

No. 2378. ஞானவிநோதன் கலம்பகம்.

ÑĀNAVINŌDAN KALAMBAKAM.

Pages, 5. Lines, 9 on a page.
Begins on fol. 81-a of the Ms. described under No. D. 2372.

Contains 78 to 100 Stanzas only.

Same work as that described under No. D. 1531.

கு.பு.—இந்நூல் டிஸ்கிருப்டிவ் கேடலாக்கு 1531 ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியிலே 47 முதல் 80 வரை ஆன ஏடுகள் காணப்பெற வில்லையாதலின் (78 முதல் 100) வரை ஆன செய்யுட்களே யிருக்கின்றன. உள்ள ஏடுகளும் மிகவுஞ் சிதலுற்றிருக்கின்றன. எழுத்துப் பிழைகள் உள.

No. 2379. சொரூபானந்தர் நெஞ்சுவிடுதூது.
SORŪPĀNANDAR NEÑJUVIḌUTŪDU.

Pages, 11. Lines, 10 on a page.
Begins on fol. 76-a of the Ms. described under No. D. 2372.

Complete.

Same work as that described under No. 1511.

கு.பு.—இந்நூல் டிஸ்கிருப்டிவ் கேடலாக்கு 1511 ஆவது நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது. ஏடுகள் மிகவும் புழுக்களால் அரிக்கப்பெற்றிருக்கின்றன.

No. 2380. சொரூபானந்தர் ஞானவுலா.
SORŪPANANDAR ÑĀNAVULĀ.

Pages, 26. Lines, 10 on a page.
Begins on fol. 83-b of the Ms. described under No. D. 2372.

Complete.

Same work as that described under No. 1538.

கு.பு.—இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1538 ஆவது நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது. ஏடுகள் மிகவும் சிதலுற்றுச் சிதைந்து கிடக்கின்றன.

No. 2381. சொரூபானந்தர் சிலேடையுலா.
SORŪPĀNANDAR ŚILĒḌAIYULĀ.

Pages, 26. Lines, 9–11 on a a page.
Begins on fol. 63-b of the Ms. described under No. D. 2372.

Complete.

Same work as that described under No. D. 1494.

கு.பு.—இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1494 ஆவது நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது. நூலாரம்பத்தில் "பதின்மூன்றுவது சிலேடையுலா தத்துவ வாக்கியம்" என்ற தலைப்பெயர் காணப்படுகிறது. அப்பிரதியில் (12 ஆவது) என்றிருக்கிறது. அன்றியும், அப்பிரதியில் "தந்தையாவானும்" "ஓங்கு முயிர்களொருகாலும்" என்றதாய்த்தொடங்கும் இரண்டு பாடல்களும் இப்பிரதியில் காணப்பெறவில்லை..

No. 2382. சொரூபானந்தர் கலிமடல்.
SORŪPĀNANDAR KALIMADAL.

Pages, 13. Lines, 9 on a page.
Begins on fol. 115-a of the Ms. described under No. D. 2372.

Complete.

Same work as that described under No. 1473.

கு.பு.—இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1473 ஆவது நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது. ஏடுகள் மிகவும் புழுக்களால் அரிக்கப்பெற்றிருக்கின்றன.

No. 2383. மோகவதைப்பரணி.
MŌHAVADHAIPPARAṆI.

Pages, 92. Lines, 8–10 on a page.
Begins on fol. 122-a of the Ms. described under No. D. 2372.

Complete.

Same work as that described under No. D. 1595.

கு.பு.—இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1595 ஆவது நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உளது. ஏடுகள் எல்லாம் மிகவுஞ் சிதலுற்றுச் சிதைந்து கிடக்கின்றன. சில ஏடுகள் இரு பகுதிகளாக முறிந்து கிடக்கின்றன. அப்பிரதிக்கும் இப்பிரதிக்கும் பாடபேதங்கள் காணப்படுகின்றன. இது முடிந்த பின்னர் சில வெற்றேடுகள் இருக்கின்றன.

No. 2384. கைமுறை வைத்தியம்.
KAIMUṞAI VAIDDIYAM.

Substance, palm-leaf. Size, 19 × 1½, 16⅝ × 1¼ and 17¼ × 1¼ inches. Pages, 122. Lines, 8 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Similar to the work described under No. 1978.

கு.பு.—இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1978 ஆவது நம்பரில் வந்துள்ள நூல்போன்று வசன நடையில் அமைந்து கை முறையாகச் செய்து வரும் வைத்திய முறையை விளக்குகின்றது. இது இத்துணைத்தென்றும் இன்னார் எழுதியது என்றும் ஒன்றுந் தெரியவில்லை. ஏடுகள் முற்றும் மிகவும் சிதைந்து கிடக்கின்றன. சில ஏடுகள் முறிந்து உள. இறுதியில் 'ரசபூபதி' மாத்திரையின் விவரம் உணர்த்தும் சில பாடல்கள் உள. ஏடுகளுக்குத் தொடர்ந்த எண் குறிக்கப்பெறாமலேயிருக்கிறது. எழுத்துப் பிழையுளது. பல வளவுள்ள ஏடுகளாகக் கோக்கப்பட்டுள்ளது.

No. 2385. இராமதேவர் பூஜாவிதி சிவயோகம் இருநூறு.
IRĀMADĒVAR PŪJĀVIDHI ŚIVAYŌGAM IRUNŪṚU.

Substance, palm-leaf. Size, 16½ × 1¼ inches. Pages, 70. Lines, 6, 7 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Begins on fol. 1-a. The other works herein are Akattiyar Saumyasāgarasūttiram 36-a, Akattiyar Saumyasāgarasūttiram Nūṟṟaimpadu 45-a.

Complete.

Same work as that described under No. 947-a

கு.பு.—இந்நூல் மூவருடக் காடலாக்கு 947-(a) நம்பரில் வந்துள்ள நூலே யாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உளது. ஏடுகள் சிதலுற்று க்கிடக்கின்றன. எழுத்துப் பிழைகள் உள.

No. 2386. அகத்தியர் சௌமியசாகரச்சுருக்கம் ஐம்பது.
AKATTIYAR SAUMIYASĀGARACCURUKKAM AIMPADU.

Pages, 18. Lines, 7 on a page.
Begins on fol. 36-a of the Ms. described under No. D. 2385.

Complete.

Seems to be a summary of the work described under R. 199.

Beginning :

அகத்தியர் சௌமியசாகரம் சூத்திர ரூம்.

பூரணமான சோதி பூமலர் கமலம் பீடம்
நேர்சுழி கலையாநித்தம் நிராமயத்தருளே போற்றி
காரண மான தந்தை கரிகச முகவன்பாதம்
கூரவி . . . த . . . . வாமக்குண்டலி கமலம் [போற்றி
வாரணமான கந்தன் மலரடி குருவின் பாதம்
சேல்விழி வள்ளி பங்கன் சேவடி விளக்கம் போற்றி
தேரணக்கவி வேதாந்தத் தட்சணப்புலவோர் சொல்லும்
சீரருளமூர்தமான செந்தமிழ் காப்பதாமே (க)

End :

சார்வான சுகசன்னி வந்ததானால்
சந்த . . . . இன் வீதமாகில்
ஆர்வான இரண்டு மத்தித்துக் கண்ணிற் போட்டால்
அலறிவிடுஞ் சுகசன்னி தோஷம் போகும்
நார்வான வேதாளம் முதல் பூதம்போகும்
. . . . . . களெல்லாம் அலறியோடும்
பார்வான இந்த நூல் அன்பதுக்குள்
பாடி விட்டோங் காண்போர்க்குப் பகலாமுற்றே. (ரு௰)

கு.பு.—இந்நூல் மூவருடக் காடலாக்கு 199 (a) நம்பர் பிரதியில் வந்துள்ள "சௌமிய சாகரம்" என்ற நூலுக்குச் சுருக்கமாய் அமைந்திருக்கலாமென்று தோற்றுகிறது. இது ஐம்பது பாடல்களால் அமைந்ததென்று இந்நூலின் கடைசியில் காணும் பாடலாலேயே அறியக் கிடக்கிறது. இப்பிரதியில் இது முற்றும் உளது. ஏடுகள் மிகவும் புழுக்களான் அறிக்கப்பெற்றும் ஓடியப் பெற்றுமிருத்தலால் கிரந்தபாதமுள்ளது. எழுத்துப் பிழைகள் இருக்கின்றன. இதுவும் அகத்தியரால் புலத்தியருக்கு உபதேசிக்கப்பெற்றதெனக் காணப்படுகிறது.

No. 2387. அகத்தியர் சௌமியசாகரச்சுருக்கம் நூற்றைம்பது.

AKATTIYAR SAUMIYASĀGARACCURUKKAM NŪṞṞAIMPADU.

Pages, 4. Lines, 7 on a page.

Begins on fol. 45-a of the Ms. described under No. D. 2385.

Incomplete.

Contains 1 to 14 Stanzas only.

Similar to the work described under the Number above.

Beginning :

அகத்தியர் சௌமியசாகரசூத்திரம் நூற்றைம்பது

அண்டமெனுங்குண்டலித்தாய் பாதம்போற்றி
அருள்பெருகுங்கசமுகவன் அருளே போற்றி
குண்டமெனு மாதியந்தங் குருவே போற்றி
கும்பமெனுஞ் செந்தமிழன் . . . .
கண்டமெனுங் கருக்குருவின் கமலம் போற்றி
கமலவிதழாயிரத்தெண்பீடம் போற்றி
மண்டலங்கள் நிறைஞ்சுநின்ற வாலே மாது
சவுந்தரியனுடை . . . . (க)

End :

சேரப்பா புலத்தியனே மகாராச யோகி
. . . . வராதிது உண்மை சிதருதய்யா
ஆரப்பா அறிவார்கள் . . . லரிசிகால் பலந்தான்
அதைப்பொடித்து இனத்தோடே யடைவாய்ச்சேரு
பாரப்பா விதுவகைகள் சர்வமெல்லாம் மைந்தா
. . . கரமது வால்பிசைந்து அதை யையா
நேரப்பா விதுபாகங்கூட்டி மத்திரவியில்
நேர்மைபெற ஒருநாள் முழுதும் வைத்திடீரே ? (யங)
வைத்திடவே புளிபோலா மதனைக்கொண்டு
. . . போம் பனங்கற்கண்டு இரண்டு பலம் வாங்கி
ஐத்திடவே யதைப் பொடித்துப் பொடியை யதிற்சேர்த்து
அருள் பெறவே கிளறிநீ நாதவிந்துதானும்
மூத்திடவே மூன்று . . . .

* * * * * *

* * * * * *

கு-பு.—இந்நூல் முன் பிரதியில் வந்துள்ள நூலே போன்று நூற்று ஐம்பது பாடல்களால் அமைந்துளது. இப்பிரதியில் முதலிலிருந்து பதினொலாவது செய்யுள் வரையிலுமே உளது. ஏடுகள் மிகவும் சிதலுற்றும் முறிந்துங்கிடக்கின்றன வாதலின் உள்ள பாடல்களும் மிகவும் சிரந்த வீழச்சியுடன் உள. எழுத்துப்பிழை மிகவாகக் காணப்படுகிறது. இதுவும் புலத்தியருக்கு அகத்தியர் உபதேசித்தது என்று தெரிகிறது.

No. 2388. இடைக்காடர் சூத்திரம்.
IḌAIKKĀḌAR SŪTTIRAM.

Substance, palm-leaf. Size, 16 × 1¼ and 17½ × 1$\frac{5}{16}$ inches. Pages, 12. Lines, 7 and 8 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Begins on fol. 1-a. The other works herein are Akattiyar Vaittiyam Mūppūvaimpadu 7-a, Akattiyarñānam Muppadu 15-a, Koṅkaṇanāyanār praṇavavutpatti 22-a, Koṅkaṇanāyanārsūttiram Nūṟu 25-a, Irāmadēvar Parañānakēśarivinōdam 40.

Complete.

A treatise on Alchemy.

Beginning :

இடைக்காட்டார் சூத்திரம்

காருலாவுமேக நற்கங்கை சத்தியோ சிவம்
பாரில் வாளவிட்டுப் புசுத்திப்பண்புவர்ப்பூவாக நீர்
சீருலாவு கங்கையாற்றெளிந்து வெள்ளையுப்பிலே
நீர்கவர்ந்தபோது தணல் நீடுலாவு சுன்னமே. (க)

சுண்ணமென்ன வுப்படா விக்குறிப்பறிந்தோன்வாதியாம்
எண்ணமா மறுவகையாமிச் சரக்கு முக்குரு
வண்ணமான வண்டுன்மின்வண்டு சுத்தியாவர்காண்
அண்ணலே யறுவகை சரக்கு நீர்விட்டாடியே (உ)

கார்ப்பதோர் சரக்குக் கெல்லாங்கட்டிடுஞ் செய்நீர் சொல்வேன்
ஏர்ப்பதோர் பஞ்சபூத மெழுவகைப் பிறப்புங்கூட்டிக்
கூர்ப்புடன் பாரு செய்நீர் குருவென மொழியவேண்டி
யார்க்குமே பிழைக்குஞ்செய்தி யன்புடன் சொல்லக்கேளே (௫ சு)

சொல்லக்கேள் உப்பு மூன்றுந்துடிய தாய்ச்சுண்ணம்பண்ணி
நல்லதோர் சுண்ணமொன்று நாலாகும் வெடியுப்புத்தான்
அல்லக்கேளிந்துப்பொன்று வப்பனே சூடஞென்று
வல்லொத்த புளிதானுனு வடிவுள சீனமொன்றே (சுயி)

ஒன்றுதானின்னுங்கேளுவுரைப்பனுன் திரைநுரையை
நன்றியாய்ச் சுண்ணம்பண்ணி நயமுடன் ஒன்றுங்கூட்டிக்
க[ண்டி](ன்றி)டுங்கோழி வெள்ளைக்கருவதைத் தண்ணீராக்கச்
சென்றிடுமெருக்கம்பாலே சேர்த்திடத் தண்ணீராமே (சுயிக)

நீரதைவிட்டிரண்டு சாமமேயரைத்துக்கொண்டு
நீரது வுலரவில்லை நேயமாய் அனலில் வாட்டிச்
சீருளபுடத்திற்போடு சென்றிடுஞ் சுன்னம்பாரு
தாருவான் சுன்னம்பாதி சாரத்தைப்பொடித்துவைய்யே (௬௰௨)

வைத்திடு பீங்கானிற்றன் வளமிருபது நாட்குள்ளேதான்
வுற்றதோர் தண்ணீர்காணும் உற்பன சலத்திலேதான்
சுத்தியாம் வீரம்பூரம் உரமொடு சுருக்காமொன்றாய்ப்
பத்திற்கு மொன்றிற் பாதி பண்புடன் பொடித்துப்போடே (௬௰௩)

போடப்பா செய்நீரென்ன புகழ்பெற்ற சரக்கையெல்லாம்
சாடுவாய்க் கொன்றுபோடுந்தாரமும் முறுகியாடும்
ஆடிய சூதங்கட்டு மப்பனே கருக்குள்ளெல்லாம்
ஓடிடும் வேதை கோடியுயிர்கொளும்பணிசெய்வாமே (௬௰௪)

செய்யப்பா செய்நீர் போக்குத்திற முடனுருஞ் சொல்லார்
மெய்யப்பா விந்தச் செய்நீர் வேதையே சரக்கின் வேதை
பொய்யல்ல வுமைதன்னுணை போக்கி நீர்க்கவர்கள் கோடி
வையப்பா மகத்தாஞ் செய் நீராமம்பல மாடுந்தானே (௬௫)

தானவனுகச் சொல்வேன் தண்ணீரிற் சூதங்கட்டி
ஏனமாயுருக்கிக்கொண்டு குகை தனிலிருக்கவேதான்
வானமும் மண்ணு மொன்றாய் வளர்ந்தவரிவர்தாமெண்பார்
ஆனதோர் குளிகை வாயிலடக்கவே யதிகசித்தன் (௬௰௬)

சித்தனுங் கவன சித்தி தேகங்கள் வச்சிரகாயம்
முத்தியாயறிந்து வாதம் முன்னிற்க சிதம்பரத்தைப்
புத்தியாற் பூசை செய்தாற் புகட்டுவார் மதுவின்றாப்போல்
உத்தமர் தமக்கே வாத மூவரடி முடியுமுற்றே (௬௰௭)

கு.பு.—இந்நூல் இரசவாததத்தைச் சார்ந்ததாயுள்ளது. அறுபத்தேழு பாடல்களான் முற்றியுள்ளது. நூலாரம்பத்துத்தலையில் " இடைக்காட்டார் சூத்திரம் " என்றதாகக் காணப்படுகிறது. இஃதன்றி செய்யுட்களிலிருந்து ஆசிரியர் பேர் விளங்கவில்லை. ஏடுகள் புழுவரிக்கப்பெற்று உள.

No. 2389. அகத்தியர் முப்பூவைம்பது.

AKATTIYAR MUPPŪVAIMPADU.

Pages, 16. Lines, 7 on a page.
Begins on fol. 7-a of the Ms. described under No. D. 2388.

Complete.

Same work as that described under No. R. 249-k.

கு.பு.—இந்நூல் மூவருடக்காடலாக்கு 249 (K) நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உளது. ஏடுகள் சிறிது சிதைந்திருக்கின்றன. அதற்கும் இதற்கும் சில 'சில விடங்களில் பாட பேதங்கள் காணப்படுகின்றன. எழுத்துப்பிழைகள் இருக்கின்றன. ஆதியிலும் இறுதியிலும் அகத்தியர் வைத்தியம் முப்பூவைம்பது என்பதாக இதன் பெயர் குறிக்கப்பெற்றுளது.

No. 2390. அகத்தியர்சூத்திரம் முப்பது.
AKATTIYAR SŪTTIRAM MUPPADU.

Pages, 14. Lines, 4 on a page.
Begins on fol. 15-a of the Ms. described under No. D. 2388.

Complete.
On the *Jñānam* of the *Siddhas*.

Beginning :

அகத்தியர் சூத்திரம் முப்பது.

பூரணமாய் மும்மூர்த்தி வந்தவாறும்
பூமியென்றுந்திகிரியென்றும் படைத்தவாறும்
காரணமாய்த் தேவியெங்கு நிறைந்தவாறும்
கற்பமுண்டு ரிஷிகள் சித்தர் . . . . . வாறும்
வாரணமாய் பறவையொடு நாற்கால் சென்மம்
மானிடர்கள் கூறுகின்ற குலத்தின் [வா](று)றும்
பாரதமாய் நால் வேதம் வகுத்தவாறும்
பாடினேன் முப்பதுக்குள் பார்க்கத்தானே. (க)

பாரப்பா பூர்ணத்திலவத்தை யொட்டிப்
பரபிரம்ம நாதமது சிவத்திற் சேர்ந்து
தேரப்பா சத்தியையுஞ் சாம்பலாக்கிச்
சிவ சிவா வென்ற பொருள் கைக்குள்ளாக்கிப்
பேரப்பா நால்வேத மயக்கமாக்கிப்
பூமியிலே மானிடரை யலைச்சலாக்கி
வேரப்பா சித்தர்களும் புராணமாக்கி
வேடிக்கைபோலக் காட்டிவிடுத்தார் தானே. (உ)

End :

முச்சுடரு முண்டாமப்பா மூர்த்தியல்லா
மூவருமே யாளுருவிலுரு வென்றுகும்
அச்சுதனு மிவர்களுமே ஆண்பெண்ணல்ல
அய்யர் மணிலிங்கமல்ல அனுதியான
சச்சுதானந்தனேயே வணக்கஞ்செய்து
சற்குருவைத் தெரிசித்துச் சாம்பற் பூசி
எச்சு விருகைக்கொண்டு நடப்பாயப்பா
[யென்] எம் ஆமென்ற மந்திரமுஞ் சொல்லே. (உ௯)

சொல்லியே கிழித்திடுவாய் முக்கோண சக்கிரம்
    சிகரமது நால் மூலை கோணமாகக்
கல்லியே சூலமிருபக்கஞு சேர்த்துக்
    கடையெழுத்துந்தலை யெழுத்து நடுவே வைத்து
அல்லியே போலவொரு பூவுஞ்செய்து .
    அதன் மேலே சிங்கக்கா சஞ்சு எத்தி
மெல்லியேதும்பைமல . . . .
    . . . . . டுத்துப் பார்வை குண்டமோடுந்தானே.

(உக)

ஓடுகின்ற வகைகள் எல்லா முறைத்துப்போட்டேன்
    உலகமது மார்க்கமெல்லாஞ் சொல்லி விட்டேன்.
தேடுகின்ற புராண மெல்லாம் பொய்யே யென்றேன்
    சிவன் பிரம்மா விஷ்ணுவின் பெயர்களென்றேன்
ஆடுகின்ற தீர்த்தமெல்லாம் அசுத்தமென்றேன்
    . . . . பண்ணுகின்ற அசந்தை சொன்னேன்
பாடுகின்றேன் முப்பதுக்குள் முடித்துப்போட்டேன்
    ஈமசிவன் சொற்படிக்குப் பாடினேனே.

(கூ0)

கு.பு.—இந்நூல் ஞான விஷயமானதென்று தோற்றுகிறது. முப்பது பாடல்களான் அமைந்துளது. ஏடுகள் பல நுனிகளில் முறிந்தும் புழு வரித்துங் கிடக்கின்றவையாதலின் அநேக விடங்களில் சிறந்த பாதங்கள் உள. எழுத்துப்பிழைகள் இருக்கின்றன. அகத்தியர் இயற்றியதென்று குறித்துள்ளது.

No. 2391. கொங்கணநாயனார் பிரணவோத்பத்தி இருபது.
KONKAṆANĀYANĀR PIRAṆAVŌTPATTI IRUPADU.

Pages, 6. Lines, 8 on a page.
Begins on fol. 22-a of the Ms. described under No. D. 2388.

Complete.

A *treatise* on the *Yōgam*, *Jñānam*, etc., of the *Siddhas*. Koṅgaṇar, the author of this treatise, refers, in the last verse, to another work composed by him under the title *Mūnṛu Kāṇḍam*.

Beginning :

கொங்கண நாயனார் பிரணவோத்பத்தி.

ஒன்றான கைலாச பரம்பரையாய் வந்த
    உற்றசிவ மூலகுரு பதத்தைப் போற்றி
நன்றான மாலாங்கரெழுவர்பதம் போற்றி
    நலம் பெரிய போகருடைப்பதத்தைப் போற்றி
கன்றான செடஞ்சனித்த வுற்பனத்தைச் சொல்வேன்
    கருதிக்கேள் கருத்திற்கொள் காரணனந்தர்
பன்றான பிருதிவி யென்ற நாதத்துள்ளே
    பரிவான சுக்கிலந்தான் சலந்தான் கேளே. (க)

கேளப்பா மனமான வாயுக்கூடிக்
கெடியான சித்தமென்ற வாகாசம் பொங்கி
வேளப்பா ஆங்கார சிகாரமிஞ்சி
மேவுதற்குப் பெண்மேலே மோகமாகும்
நாளப்பா வஞ்சுக்குப்பலமே தென்றால்
நலம்பெறவே சொல்லுகிறேன் நன்றாய்க்கேளு
தாளப்பா மனசோடே பிராணன் கூடும்
தாயான நாதத்தில் அபானந்தானே. (உ)

தானென்ற விந்துவிலே சமானன் கூடுந்
தனியான சித்தத்தில் வியானன் கூடும்
கானென்ற ஆங்காரங் கர்ச்சிப்போடே
கலந்து நிற்கு முதானனப்பாகண்டு கொள்ளு
வேனென்ற பத்துமொன்றாய் மன்திற் கூடி
மேவியவன் கலந்து விந்து விடும்போது
மானென்ற மவுனமென்றும் பரவசமேயாவன்
மருவிய தோர்பெண்ணுக்கு மிம்முறைதான் காணே. (௩)

முறையாகப் பெண்ணும் மவுனமொற்றால்
மோசமில்லை கர்ப்பமங்கே தரிக்கும்பாரு
நிறையாக வலத்தோடில் ஆணேயாகும்
நேராக விடத்தோடில் பெண்ணேயாகும்
முறையாகச் சுக்கிலந்தான் கர்ப்பத்திலப்பால்
உத்தமனே சுரோணிதந்தானுண்டு கொள்ளுங்
கறையாகப் பரந்தவளித மருப்போலக்
கழக்கோடிக்காய் போற்றிரண்டு சிரசுமாமே. (௪)

End :

தானென்ற சற்குருவாம் போகநாயன்
சாதகமாயப்பொருளுக்கு உப்பேயென்றார்
கோனென்று அதைத்தொட்டு மூன்று காண்டஞ் சொன்னேன்
கூறுகிற மெஞ்ஞான மவுனமென்று சொன்னார்.
வானென்ற ததுகடந்து சிலம்பொலியிற்புக்கு
மயங்கியங்கே மாறி வந்தேன் மக்காள் மக்காள்
பானென்ற ரவிகோடி காந்தியானேன்
பரமகுரு மூலர்பதம் பணிந்தேன் முற்றே. (உ௰௧)

கொங்கணநாயனார் திருவடிகளே சரணம்.

கு-பு.—இந்நூல் யோகம் ஞானம் இன்னுமிவைகளை நுவல்வதெனத் தோற்றுகிறது. இது இருபத்தோரு பாடல்களால் அமைந்துளது. இப்பிரதியில் இந்நூல் முற்றும் உளது. முதலில் கருப்பத்தில் கரு உற்பத்தியாகி விருத்தியாகுந்திறனைப்பற்றித் தெளிவாகக்கூறப்பெற்றுள்ளது. கொங்கணரால் இயற்றப்பெற்றதென்று தெரிகிறது. ஏடுகள் மிகவும் புழுக்களான் அரிக்

கப்பெற்றுச்சிதைந்திருக்கின்றன. எழுத்துப்பிழைகள் காணப்படுகின்றன. இந்நூலின் இறுதிச் செய்யுளில் இந்நூலாசிரியர் தாம் "மூன்று காண்டம்" என்றதாய் மற்றொரு நூலும் இயற்றியிருப்பதை யெடுத்துணர்த்தி யிருப்பது இங்கு நம்மால் குறிக்கொள்ளத்தக்கது.

No. 2392. கொங்கணநாயனர் சூத்திரம் நூறு.
KONKAṆANĀYANĀR SŪTTIRAM NŪṞU.

Pages, 29. Lines, 7 on a page.
Begins on fol. 25-a of the Ms. described under No. D. 2388.

Complete.

Same work as that described under No. 255-c.

கு-பு.—இந்நூல் மூவருடக் காடலாக்கு 255 (c) நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது. இறுதி ஏடு முறிந்து கிடக்கின்றதாதலின் இரந்தபாதம் உளது. அந்தப் பிரதிக்கும் இப்பிரதிக்கும் அங்கங்கே பாட பேதங்கள் காணப்படுகின்றன. எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன.

No. 2393. இராமதேவர் பரஞானகேசரிவிநோதம் நூறு.
IRĀMADĒVAR PARAÑĀNAKĒSARIVINŌDAM NŪṞU.

Pages, 13. Lines, 5 on a page.
Begins on fol. 40-a of the Ms. described under No. D. 2388.

Incomplete.

Same work as that described under No. 947-b.

கு-பு.—இந்நூல் மூவருடக் காடலாக்கு 947 (b) நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூலின் முதல் முப்பத்தைந்து செய்யுட்களேயிருக்கின்றன. ஏடுகள் பல முறிந்தும் சிதலுற்றுமிருக்கின்றன. எழுத்துப்பிழைகள் காணப்படுகின்றன.

No. 2394. அகத்தியர்சூத்திரம் இருநூறு.
AKATTIYAR SŪTTIRAM IRUNŪṞU.

Substance, palm-leaf. Size, $9\frac{3}{4} \times 1\frac{1}{4}$ inches. Pages, 139. Lines, 6 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete.

Begins on fol. 1-a. The other work herein is Akattiyar Pūraṇasūttiram (200), 72-a.

Same work as that described under No. 8-b.

கு-பு.—இந்நூல் மூவருடக் காட்லாக்கு 8 (b) நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் முதலேடு இல்லாமையால் முதல் இரண்டு பாடல்களும், (5) ஆம் ஏடு இல்லாமையால் (11—13) பாடல்களும் இல்லை. ஏடுகள் மிகவுஞ் சிதலுற்று முறிந்துகிடக்கின்றன. எழுத்துப்பிழைகள் காணப்படுகின்றன.

No. 2395. அகத்தியர் பூரணசூத்திரம் இருநூறு.
AKATTIYAR PŪRAṆASŪTTIRAM IRUNŪṞU.

Pages, 50. Lines, 8 on a page.
Begins on fol. 72 of the Ms. described under No. D. 2394.

Contains 1 to 186 Stanzas only.
Same work as that described under No. 254-(j).

கு-பு.—இந்நூல் மூவருடக் காட்லாக்கு 254 (j) நம்பர் பிரதியில் வந்துள்ள தேயாம். இப்பிரதியில் 1 முதல் 186 பாடல்களே உள. அப்பிரதிக்கும் இப்பிரதிக்கும், சில சில இடங்களில் பாட பேதங்கள் காணப்படுகின்றன. ஏடுகள் சிதலுற்றுள. எழுத்துப்பிழைகள் இருக்கின்றன.

No. 2396. அனுபவவைத்தியமுறை வசனம்.
ANUBHAVA VAIDDIYA MUṞAI VACANAM.

Substance, palm-leaf. Size, 9½ × 1⅝ inches. Pages, 64. Lines, 6 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 1-a. The other works herein are Sundarānandarsūttiram—Irupattaindu 33-a, Akattiyar Muppūvaipadu 38-a, Anubhava Vaittiyamuṟai 47-a.

Seems to be complete.

Similar to the work described under No. 1906 of the Descriptive Catalogue of Tamil Manuscripts, Vol. V.

Beginning :

பௌத்திரத்துக்கு.

ஆசனபவுத்திரத்துக்கு கஞ்சா இலை கட்டி அடுப்பில் புகைத்து கட்டவும். தீரும். புனலியிலை கொண்டு வந்து விளக்கெண்ணெய் விட்டு வதக்கிக்கட்டத் தீரும். எந்தக் காயம் பட்டாலும் பிரண்டையிலை கோவையிலை நருக்கி வதக்கி கட்டத்தீரும்.

நீர்ச்சுருக்குக்கு : அப்பிரகச் செந்தூரம் :—

ஈயம் விராகனெடை ஏ, பசுவின் கோமயத்தில் பிரண்டையிடித்துப் போட்டுப் பிசைந்து பிழிந்து அதில் இரண்டு தரம் உருக்கிச் சாய்த்துக் கொண்டு அதில் ரசம் விராகனெடை சு. தொந்தித்துக்கொண்டு பவழம் விராகனெடை சு. சாதிலிங்கம் விராகனெடை சு. கூடப்போட்டு நெல்லிக்காயை இடித்துக்கொண்டு- கோமயம் விட்டுப் பிழிந்துகொண்டு

அதில் விட்டுச் சாமம் அரைத்து வில்லை தட்டிக்காயவைத்து . . . . டில் மணற்போட்டு அடுப்பில்வைத்து மேலே வைத்து மணற் சுட வெடுத்து நீர்ச்சுருக்குப் பெரும்பாண்டுகளுக்குப்பணவெடை செந்தூரம் தேனிற் கொடுக்கவும்.

நேத்திர வைத்திய முறை :—

* * *

* * * (ருஉ)

காதார் குழலார் கைவளையும்
 க பாலத்தோடு கடுகு நெல்லி
மாதைப்பிரியாதான்றியொடு
 மதியாயென்று கால்கொண்டு
பூதிருந்தமஞ்சாடி, பூர முருக்கம்பழச்சாற்றிற்
 காதிக்கபிலாய் வெள்ளெழுத்துக்
 கண்ணுக்குரியது கண்டாயே. (ருங)

மஞ்சட் பொடியுங் கந்தகமும்
 மருவுங்குங்கிலியங் கூட்டி
யுஞசப்பொடிகளது செய்து
 உருகுதணலிற் புகைகாட்ட
மிஞ்சக் குடையுங் கண்ணோவும்
 விளையு நீருமது மாறிக
கெஞ்சிக்கெடியிற் புகுதுமென
 அறியச்சொன்னோங் கண்டீரே. (ருச)

தெள்ளுவிற் செங்கற்காய்ச்சி
 செம்பு வெங்கலத்திலிட்டு
ஒள்ளிய மூலைப்பாற்றூவி
 யுகந்ததோர் புகையுங்காட்ட
நள்ளவேநயன நோவும்
 நற்றலை நோவுந்தீரும்
வள்ளளும் வாகடத்தில்
 மகிழ்ந்துடன் உரைத்ததாமே. (ருரு)

எள்ளுடனுவந்து வேம்பின்
 இலையொடு கடுகுங்கூட்டித்
தெள்ளிய பொடிகள் செய்து
 சிறக்கவே புகையுங்காட்டி
உள்ளது சொன்னோமென்று
 உகந்து நீ செய்வையாகில்
மெள்ளவே கண்சிவப்பும்
 விலகு நற்கண்ணோயன்றே. (ருசா)

* * *

துத்தந்துரிசு அரிதாரம்
துய்ய இரதங்கந்தகமும்
மற்றுஞ் சிலையும் நேர்வாளம்
வடிவாம்வெள்ளை யுடன் கூட்டி
மெத்து நொச்சிச் சாறதனில்
மேவியரைத்து உண்டை செய்து
கொத்திக்கட்டுங் கண்ணோய்கள்
குலைந்தேபோகுங் கண்டீரே.

* *

கனத்ததோர் நயன முள்ளே
தழலெழவெரிந்துவெம்பிப்
பிந்தமாய் விழிபுடைத்து
உலையினில் மெழுகுபோலே
கந்தியே கண்சிவந்து கலங்கி
நீரருவி பாய்ந்தால்
அந்தமாமன்ன கோபம்
அறிந்து செய்மருந்து தானே. (௱ஊ)
மாதளம் பூவில் தாதில்
மதித்த கற்பூரங் கூட்டித்
தீதற முலைப்பால் வார்த்துத்
திகழவே நருக்கிக் கொண்டு
போதவே பிழிந்து கண்ணில்
புகையனல் காட்ட நன்று
ஈதினிற் குழம்பையிட்ட
பின் எண்ணெய் செய் சே ? (௱உ௰க)
உள்ளிய முலைப்பால் நாழி
உகந்து நல்லெண்ணெய் நாழி
தெள்ளிய மாஞ்சிற் கோட்டஞ்
செண்பகப்பூவே ரேலம்
மள்ளிய மதுர முத்த
மடைவிலாமிச்ச மாயில்
மெள்ளவே காய்ச்சித் தேய்க்கில்
விலகிடுமன்ன கோபம். (௱கூ௰)
ஆகத்திருவிருத்தம் கூ௱கூ௰

நயனவைத்திய முறைமுற்றும்.

சித்திரை வல்லாதி :—சித்திரமூலம் வெள்ளறுகு
சிவனார்வேம்பு சங்கம்வேர் சங்கங்குப்பிவேர்
கருடக் கிழங்கு வெள்ளெருக்கு * * *
குன்றிவேர் நிலக்கடம்பவேர் செங்கத்தாரி
அமுக்கிரு பூதகரப்பான் வாதகரப்பான் வண்டு
கடிப்பட்டை விரப்பங்கிழங்கு மிளகரணை

* * * *

* * * * *

பனைவெல்லம் சேர் ௯, ரசம் பலம் க, எள்ளு பலம் ச, நிமிவேர் பலம் க, செங்கொட்டை தூக்கு க.

இலகுவில்வாதி மேகத்துக்கு.

செங்கொட்டை பலம் ௰சு, பனைவெல்லம் ௰சு, சீரகம் பலம் ௰சு, பறங்கிப்பட்டைப் பலம் ௰சு, சுக்குப் பலம் உ, மிளகு பலம் உ, ஓமம் பலம் உ, கொத்தமல்லி பலம் உ, சாதிக்காய் பலம் க, சாதிப்பத்திரி பலம் க, சன்ன லவங்கப்பட்டைப் பலம் க, அதிமதுரம் பலம் க, கோஷ்டம் பலம் க, வால்மிளகு பலம் க, கருஞ்சீரகம் பலம் க, கற்கண்டு பலம் க, கசகசா பலம் உ, கிராம்பு பலம் க, எள்ளு படி உ, கொப்பரை தேங்காய் க, ஏலம் பலம் ௺ (அரைக்கால்), நீரடிமுத்து பலம் ௺, நெய் படி க. நெய்யில் சேராங்கொட்டையை வெட்டிப்போட்டுக் காய்ச்சித் தைலம் வாங்கித் தைலத்தில் வெல்லத்தை உதிர்த்து உருகு மட்டும் பார்த்துச் சூரணந்தூவிக் கிளறிப் பழம்பாண்டத்திலே வைக்கவும். கழற்சி மாதிரியாய் உள்ளுக்கு அரை மண்டலங் கொள்ளவும். புளிப்பு கைப்பு விடவும்.

மேகத்தெண்ணெய்.

ஏரண்டத்தைலம் படி க, வாளப்பருப்பு பலம் வ, கஸ்தூரிமஞ்சள் பொடி பலம் க, பாதிப்பொடியும் பருப்பும் தேய்க்கச் சுத்தியாம். பொடியை உலர்த்திப்போட்டுப் பருப்பும் பாதிப்பொடியும் ஒரு வராகனெடை ரசகற்பூரமுஞ் சேர்த்துப் பொடிசெய்துத் தைலத்தில் கலந்துச் சித்திரமூல வேர்ப்பட்டை வராகனெடை உ கூட நருக்கிப்போட்டு ஊறவைக்கவும். வீசம் வீசம் படியாய் மூன்று நாள் கொடுக்கவும். ஆறுநாள் பத்தியம். ஏழுநாள் தலைக்கி வார்க்கவும். தாங்குகிற மட்டும் எண்ணெய் கொடுக்கவும். மறுபத்தியம் உப்பு சேர்த்துக்கொள்ளவும். இன்னும் எண்ணெய் சாப்பிடவேண்டினுல் பத்தியம் உப்பு சேர்த்துக்கொள்ளலாம். இதுக்குத் தீரும் வியாதி அரையாப்புக்கட்டி, புண், விரணம், கையில் கருப்பு ஆணி, வெள்ளை விழுகிறது இவையெல்லாம் தீரும்.

(கு - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1906-ஆம் நம்பரில் வந்துள்ள நூல் போன்றுள்ளது. இதில் பல்வேறு வகையான வியாதிகளையுணரு மாற்றையும் அவைகட்குரிய சிகிச்சை முறையையும் பற்றிக் கூறப்பெற்றுள்ளது. நடுவில் (12-a) ஆம் ஏட்டிலிருந்து 29-ஆம் ஏடுகள் வரைக்கும் நேத்திர ரோகங்களையுணருமாறும், அவைகட்குரிய பல சிகிச்சை முறைகளும் கூறப்பெற்றுள்ளன. அப்பகுதி மாத்திரம் செய்யுள் உருவமாகவுள்ளது. அது ஒரு பெரும் நூலின் பகுதியாயிருக்கலாமெனத் தோற்றுகிறது. இன்ன நூலைச் சார்ந்தது என்பதும் ஆசிரியர் இன்னுரென்றும் ஒரு சிறிதும் விளங்கவில்லை. அப்பகுதியில் அடங்கிய பாக்கள் ருஉ to ௱௩௰ (52 to 130) ஆன பாக்களாகும். மிகுதியான பகுதி முற்றும் வசன நடையினுலேயே யமைந்துளது. ஏடுகள் சிதைந்துள. எழுத்துப் பிழைகள் உள.

No. 2397. சுந்தரானந்தர் சூத்திரம் இருபத்தைந்து.

SUNDARĀNANDAR SŪTTIRAM IRUPATTAINDU.

Pages, 10. Lines, 6 and 7 on a page.
Begins on fol. 33-a of the Ms. described under No. 2396

Complete.

Same work as that described under No. 8-c.

(கு - பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 8-c நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூலின் இருபத்தைந்து பாடல்களுமிருக்கின்றன. அப்பிரதிக்கும் இப்பிரதிக்கும் பாடபேதங்களிருக்கின்றன. ஏடுகள் மிகவுஞ் சிதறலுற்று உள. எழுத்துப்பிழைகள் காணப்படுகின்றன.

No. 2398. அகத்தியர் முப்பூவைம்பது.

AKATTIYAR MUPPŪVAIMPADU.

Pages, 18. Lines, 7 on a page.
Begins on fol. 38-a of the Ms. described under No. 2396

Incomplete.

Contains 1 to 27 Stanzas only.

Same work as that described under No. 172.

(கு - பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 172ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் முதலிலிருந்து இருபத்தேழு பாடல்களே யிருக்கின்றன. பாடபேதம் உள. ஏடுகள் சிதலுற்றிருக்கின்றன. பிழைகள் உள.

No. 2399. அனுபவ வைத்தியம்.

ANUBHAVA VAIDDIYAM.

Pages, 22. Lines, 6 on a page.
Begins on fol. 47-a of the Ms. described under No. 2396

Seems to be complete.

Similar to the work described under the Number above.

Beginning :—

க்ஷயம், ஈளை, இருமல், சுவாச காசம் இவைகட்கு மருந்து :—

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகுரோகணி, கற்கடகச்சிங்கி, செவியம், தானிக்காய் வகைக்குப் பலம் (௪) (கால்), பனைவெல்லம் பலம் (உ), அறத்தை, அக்கிராகாரம், கோஷ்டம், ஏலம், அதிமதுரம், சிறுதேக்கு, வாய்விளங்கம், இலவங்கப்பத்திரி இவை வகைக்குப் பலம் ஶு (அரைக்கால்), கிராம்பு பலம் ஶு, தேத்தாங்கொட்டை பலம் ஶு இவையெல்லாமிடித்துச் சூரணம் பண்ணி வத்திரகாயம்பண்ணி . . . . ஆடாதோடை வேர், தூதுவளை வேர் . . . . மறுபடி தேன்விட்டுக்

ளைறவும். இந்த லேகியம் கழஞ்சி மதுவாரி வேளைக்குக் கொள்ளவும். பத்தியம்—கைப்பு, புளிப்பு தவிரவும். இதுக்குத் தீரும் வியாதி, சயம், சுவாசம், ஈளை, இருமல், காசம் இவையெல்லாம் தீரும்.

End :—

இரத்தமூலத்துக்கு.

கழுதைத்தும்பையிலை ஒரு பலம், ஈர வெங்காயம் ஒரு பலம், வேறே வேறே யரைத்து மாசிக்காய் (க) (வராகனெடை) அரைத்துப் பசுவின் வெண்ணெயிற் கூட்டிக்கொடுக்கவும். இன்னும் ஒரு விதம் :—காட்டுக்கருணை ஒரு பலம் பன்னி நெய்யில் வறுத்துக்கொண்டு கழுதைத் தும்பை ஒரு பலம், தேங்காய்த் துருவல் ஒரு பலம் வறுத்துக்கொண்டு ஈரவெங்காயம் ஒரு பலம், வரகரிசி மாவு ஒரு பலம், இசுப்புக்கோல்விரை ஒரு பலம் வெவ்வேறே யரைத்துப் பசுவின் நெய்யில் ஒன்றாய்ப் பிசைந்து அடைசுட்டுத் தின்னவும். இது கைகண்டது.

(கு-பு.)

இந்நூல் முன் நம்பர் பிரதியில் வந்துள்ள நூல்போன்று. பல்வேறு நோய்கட்கும் உரிய பலமுறைகளையும் வசனத்தில் அமைந்து நுவல்கின்றது. ஏடுகள் சிதலுற்றிருக்கின்றன. எழுத்துப்பிழைகள் காணப்படுகின்றன. இது முடிந்த பின்னர் நான்கு ஏடுகளில் "அகத்தியர் கருப்பக்கோள்" என்ற பெயருடன் பதினொரு பாடலில் அமைந்த வொரு சிறு நூற்பகுதி காணப்படுகின்றது. இது அகத்தியர் இயற்றியதான ஒரு நூலின் ஒரு சிறிய பகுதியெனத் தோற்றுகிறது. இது வொரு தனித்த நூல் அன்று.

No. 2400. அகத்தியர் கருப்பக்கோள்.
AKATTIYAR GARUPPAKKŌḶ.

Pages, 8. Lines, 6 on a page.
Begins on fol. 58-a of the Ms. described under No. 2396

Contains 1 to 11 Stanzas.

Seems to be a portion of a work on medicine by Akattiyar.

Beginning :—

அகத்தியர் கருப்பக்கோள்.

பாரப்பா பெண்மலடாங் கருப்பக்கோளின்
பக்குவத்தைச் சொல்லுகிறேன் பண்பாய்க்கேளு
ஆரப்பா பெண்மலடே யார்க்குமல்லால்
அப்பனே யாண்மலடு ஆருமில்லை
நேரப்பா தவசிருந்தும் பொருளையீந்தும்
நேரான தில்லையருஞ் சூலையாலே
வேரப்பா தேவதையா லேழாங்கர்ப்பம்
விரிந்து நன்றாய்ப்புகலுகின்றேன் விரும்பிக்கேளே. (க)
புகலுகிறேன் முத்தாந்தன் மலடேயென்றால்
பூவையர்க்குக் கருக்குழிதான் விளக்கமற்று
அகலுகிறேன் என்றாலுங் கல்மஷந்தான்
அடைந்திருந்தால் விந்துவங்கே யகலாதப்பா

நிகலுகிறேன் மருதாந்தன் கருக்குழியில்வாய்வு
நிறைந்திருந்தால் விந்துவங்கே நேர்ப்படாது
தகலுகிறேன் பின்னுமங்கே கருக்குழியில்மூடித்
தசைவளர்ந்தால் விந்துவங்கே தான்செல்லாதே. (உ)

செல்லாது நாலாவதப்பா கேளு
ஸ்த்ரீகளுக்குக் கருக்குழியிற் புழுவுஞ்சேரில்
செல்லாது அஞ்சாவதப்பா கேளு
செத்தங்கே கருக்குழியிற் சோசைகட்டிற்
செல்லாது ஆறுவதப்பா கேளு
செப்புகிறேன் கருக்குழிதான் மதித்திருந்தால்
செல்லாது இவையாறும் வியாதியாகும்
சென்ற பின்புப்பேய்விரோத மேழாங்காணே. (ங)

காணப்பா விவைவிவரம் பிரித்துச்சொல்வேன்
கன்னியர்க்குப் புணர்வேளைதலைதா னுைந்தால்
தோணப்பா கருக்குழியிற் பாசம்பற்றித்
தோன்றுதென்று தானிதற்குச்சாந்திசெய்யப்
பூணப்பா கோழியுட பிச்சுத்தானும்
புகழான பருத்திவிரை பருப்புத்தானும்
தோணப்பா வவள் குளித்தநாளைதொட்டுச்
சுகமாக மூன்றுநாள் அரைத்துக்கேளே. (ச)

* * * *

* * * *

End :—

கொடுத்திடவே பிள்ளையுண்டாங் குறைவேயில்லை
கூறுகின்றேன் யோனிக்குள் மருந்தைக்கேளு
நடுக்கிடவே குங்குமப்பூ அதிமதுரந்தாவம்
நற்சீரகமத்துடனே மூன்றுங் கூட்டியாட்டிப்
படுத்திடவே யோனிக்குட்பூசிக்கொண்டு
பாயலையும் புணர்ந்திடவே பிள்ளையுண்டாம்
எடுத்திடவே ஆறுவதப்பா கேளு
எப்பமிட்டால் மதத்திருந்த தென்றே. (கூ)

* * * *

தானென்ற பத்தியத்தைச் சூட்சுமத்திற்சொல்வேன்
சாதகமுங் கடியதொரு பாகமாகும்
வேனென்று புளியாரை சீய்க்காய்கொழுந்து
மேலான நெல்லிக்காய் அரிநெல்லிக்காய்
நானென்ற வெள்ளாடு முசல் ஆமையாகும்
நிறமாகும் ஊக்குருவி காடைமாறும்
தூதுவளை துவரை பொன்னுங்காணியாகும்
சொல்லுகிறேன் குளிர்ந்த சலங் கிட்டலாகா
மைந்தனே சுடுதண்ணீர் சேர்த்துக்கொள்ளே. (மக)

கு.பு. :—இந்நூல் ஸ்திரீகளுக்குண்டாம் ஏழுவகை மலட்டின் தன்மையினையும் அவைகளை நீக்கற்காம் மருந்து முறையினையும் எடுத்துணர்த்துவது. பதினொரு பாடல்களால் அமைந்துளது. இது அகத்தியர் இயற்றிய ஒரு நூலின் பகுதியாக விருக்கலாமென்று தோற்றுகிறது. இஃதன்றி இன்ன நூலின் பகுதியாகுமென்று தெற்றென [விதிலிருந்து விளங்கவில்லை. எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன. ஏடுகள் ஒரு சிறிது சிதைந்துள.

No. 2401. கொங்கணர் கற்பம் நூற்றுப்பத்து.
KOṄKAṈAR KAṞPAM NŪṞṞUPPATTU.

Substance, palm-leaf. Size, 13¼ × 1 inches. Pages, 46. Lines, 5 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete.

A treatise belonging to the *Siddha* school of Indian Medicine.

Beginning :—

கொங்கணர் வாக்கியம் (௱௰).
காயகற்பத்துக்கு முந்தின கற்பம்.

போகா விருப்பதற்குக் கற்பஞ் சொல்வேன்
போக்கோடே உன்கையிலே நேர்மைகேளு
வாகான புளிப்புப்பு எண்ணெய்சுண்ணம்
மருவியதோர் மாங்கிஷங்கள் மோருமாகா
தாகாத கடுகுள்ளி காயமாகா
சஞ்சாரஞ் செய்யுகிற பெண்ணுமாகா
பாகான நித்திரையுஞ் சோம்பலாகா
பலசிந்தை விட்டுவிட்டு மூலம்பாரே. (க)

பார்க்கையிலே உங்கிறதோர் பத்தியத்தைக்கேளு
பாலாகும் நெய்யாகும் பழமுமாகும்
ஈார்க்கையிலே மிளகாகுந் தேனுமாகுங்
கைமுறையாய் வெல்லமுமாங்கஞ்சாவாகும்
சேர்க்கையிலே பயறுகுங் பொன்னுங்கண்ணி
செப்பினேன் சிறுகீரை தின்னலாகும்
தோர்க்கையிலே தூதுவளை யிலைகாயாகும்
சுகமாக வுண்டு கற்பஞ்சோரப்பண்ணே (உ)

காணப்பா விதுகடந்தால் கரிசாலையுண்ணு
கைமுறையாய் மண்டலந்தான் கறுக்குங்காயம்
பூணப்பா விதுகடந்து சரக்கையிரண்டு
பொற்றலையும் வல்லாறை யறிஞ்சு . . . .
தோணப்பா சமனுகப்பாக்களவு பாலில்
சுகமாக மண்டலந்தான் உண்ணு . . . . .
ஆணப்பா காயத்தில் நறைதான்போகும்
அழகான மன்மதன் போலாவாய்தானே. . . (௩)

End :—

தானென்ற மூலமதை யறியவேணும்
சத்திசிவ மிரண்டையுமே காணவேணும்
. . . . . . ம்பிக . . . . றியவேணும்
தருவான அண்டவித்தை செய்யவேணும்
தானென்ற கற்பமதை யுண்ணவேணும்
சமத்தாக . . . . த்தை யிருக்கவேணும்
தானென்ற நூலெல்லாம் பார்க்கவேணும்
சாத்திரந்தா னொருநூற்றுப்பத்து முற்றே. (௱௰)

கு.பு. :—இந்நூல் சித்தர் நூலைச் சார்ந்ததாய் உளது. இதில் பலவித கல்பங்களும் நுவலப்பட்டுள. நூற்றுப்பத்துப் பாடல்களால் அமைந்திருக்கின்றது. இதில் 10 to 12, 25, 26 ஆன ஏடுகள் காணப்பெறவில்லையாதலின் அவையிற்றில் அடங்கிய பாக்கள் நீங்கலாக மிகுதியான பகுதி முற்றும் உளது. ஏடுகள் மிகவும் சிதலுற்று முறிந்து கிடக்கின்றன. இது முடிந்த பின்னர் பன்னிரண்டு பக்கங்களில் சில வைத்தியமுறை முதலியனவும் சுந்தரானந்தர் சூத்திரம் என்ற பெயருடன் சில பாடல்களும் எழுதப் பெற்றுள்ளன. எழுத்துப்பிழைகள் மிகவுள.

No. 2402. போகர் பச்சிலைமூலிகை வைத்தியம்.
BHŌGAR PACCILAI MŪLIKAI VAIDDIYAM.

Substance, palm-leaf. Size, 9 × $1\frac{2}{8}$ inches. Pages, 44. Lines, 6 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete.

On the treatment of diseases with herbal remedies.

Beginning :—

போகநாதர் அருளிய பச்சிலை மூலிகை வைத்தியம் :—
திறந்திட்ட சீந்திலுக்குத்தேகஞ்சித்தி
. . . . க்கு விரணம்போகும்
திறந்திட்ட காஞ்சோறி கபத்தைச்சாடும்
கடியபெரு ங்காஞ்சோறி சிலேத்துமம்போக்கும்
துறந்திட்ட ஆடாதோடை சுரத்தைப்போக்கும்
சுயமான கருங்காலி குஷ்டம் போக்கும்
திறந்திட்ட வெண்கருங்காலிக்கு நாகமது
கட்டியே மணிபோலாமே. (௧)

* * * *

சுவாசமொடு காசம்போம் சிறுவழுதலைக்குச்
செப்பரிய வழுதலைக்குச் சிலேத்துமம் போகும்
திவாசமாம் நெருஞ்சிக்கு மூத்திரக்கிரச்சிரபோம்
நேரான வில்வமது சத்திபோகு
மவாசமாம் முன்னைக்கு மேகம்போகும்
மூர்க்கமாங்கழற் கோடிக்கு விரைவாதம்போம்
விவாசமாவெண் கழல்கோடிக்குக் குன்மம்போகும
மிக்கொட்டை கறந்தைக்கு வாக்குண்டாமே. (௨)

End :

அழுத்தமாம் அவல் தனக்கு ஆண்மையாகும்
அதிகமாம் வரவுக்கு ஆண்மை குன்றும்
தழுத்தமாம் தினைதனக்குச் சீரணமாகும்
செழு மொச்சை பயறுக்கு வாதமுண்டாம்
பழுத்தமா ம் பனிப்பயறு பித்தம்போக்கும்
பெருங்கறுப்புக் கடலைக்குக் காயசித்தியாகும்
பழுத்த அனுமுழுத்துவரை பாங்காம்மேனி
பலபடவே சித்தியாம் உப்பைக்கட்டே. (ருகூ)

முற்றும்.

கு.பு. :—இந்நூல் பச்சிலை மூலிகை முதலிய சரக்குகள் இன்னின்ன வியாதிகளைப்போக்கும் என்னும் செய்தியை விளக்குகின்றது. இது (ருகூ) பாடல்களால் அமைந்திருக்கின்றது. போகர் இயற்றியதாகத் தலையேட்டின் நுனியிலே குறிக்கப்பெற்றுள்ளதேயன்றி நூலில் உள்ள பாடல்களிலிருந்து ஆசிரியர் பெயர் விளங்கவில்லை. ஏடுகள் மிகவும் சிதலுற்று கிடக்கின்றன. பிழையுளது.

No. 2403. அனுபவ வைத்திய முறை.
ANUBHAVA VAIDDIYAMUṞAI.

Substance, palm-leaf. Size, 8½ × 1¼; 9 × 1 and 9½ × 1 inches. Pages, 58 Lines, 4 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Begins on fol. 1-a. The other works herein are Kuḻandaivaithyam 64-a. Vaittiyanūl 90, Vaittiyamuṟai Vacanam 111-a, Padārthaguṇacintāmaṇi 115-a.

Complete.

A treatise, in prose, on Indian Medicine.

Beginning :

வைத்திய முறைகள்.

ஒரு தலைநோவுக்கு, நரம்புச்சிலந்திக்கு :—வேளை வேரும் கத்தரிப்பழுப்பும் ஒருகொட்டைப்பூண்டும் . . . . . . கூட்டி நருக்கிச் சிறுநீரில் ஒருபாரிசம் நசியம்விடத் தீரும். இது கைகண்டது. விடத்தாறிலையைப் பறித்துத் தண்ணிபடாமல் அரைத்து. . . வறுத்து ஊற்றின விளக்கெண்ணெயிற் குழப்பி உண்டைபண்ணி விழுங்கவும். புழுங்கல் அரிசி கஞ்சி காய்ச்சி முன்னே குடித்துப் பின்பு . . . ன்னீரும் சோரும் உண்ணவும். இப்படி மூன்றுமுறை தின்னவும் குணமாம்.

வேறு : காட்டவரையிலையைப் பறித்துவந்து அரிசியிலிடித்துக் களிகிளறி நல்லெண்ணெய் கருப்புக்கட்டி கூட்டி இப்படி மூன்று ஞாயறு தின்னவும் நரம்புச்சிலந்தி தீரும்.

மண்டைக்கறப்பானுக்கு எண்ணெய் :—நல்லெண்ணெய் உரி—படியில வார்த்து இதுக்கு மருந்து ஆடு தீண்டாப்பாளை, ஊமத்தையிலே இவைகளைச் சமன்கூட்டியரைத்து நார்த்தங்காயளவு எடுத்து எண்ணெயிற் கரைத்துக் காய்ச்சும்போது மிளகு பலம் உ (அரை), வெள்ளுள்ளி பலம் உ (அரை) இவைகளை முழுசோடே போட்டுக் காய்ச்சி வெள்ளுள்ளி சிவந்துவரும்போது வடித்துவைத்துக்கொண்டு இந்த எண்ணெயை நசியம்பண்ணி உள்ளுக்கும் ஒரு காசிடை கொடுத்து வரவும். எட்டுநாளைக்கொருமுறை தலைக்குத் தேய்த்து முழுகிவரவும். இதுக்கு மண்டைக்கறப்பான், மூக்குப்புண் இவை கள் தீரும். இந்த எண்ணெயை வெட்டுக்குத்து விரணங்கள் மேலே தடவி வர விரணங்களும் ஆறிப்போம்.

பல வியாதிக்கு உண்டை :—இரஸம், நாவி, பொரிக்காரம், கெந்தகம், திரிபலை, திரிகடுகம், இருவி பொன்னரிதாரம் இந்தச் சரக்குகளைச் சமன் கொண்டு ஒரு நிறையும் சுத்தியான நேர்வாளம் ஒரு நிறையும் கையாந்த கரைச்சாற்றில் அரைத்துக் குன்றிமணி பிரமாணம் உண்டைபண்ணி நிழலி லுலர்த்தி வைத்துக்கொண்டு இதுக்கு அனுபானம் புளியிலைச்சாற்றில் மூன்று உண்டையிட அக்கினிமந்தம் வாய்வு தீரும். திரிபலை ஊறவிட்டு அந்த நீரில் ஒரு உண்டையிட உதரவாயுவு தீரும். பசுமூத்திரத்திலே இடப் பல வியாதியும் தீரும். பழைய நல்லெண்ணெயிலிடக் கண்ணிற் படலமறுக்கும். செஞ்சந்தணத்தில் எட்டுநாளிட நீர்ச்சுறப்பு மாறும். சாதிக்காய்ப் பொடியில் இரண்டுநாள் இரண்டு உண்டையிட மூலவியாதி மாறும். நெல்லிக்காய்ப் பொடியிலிரண்டுநாளிட இருமல் மாறும். மாசிக்காய்ச் சாற்றினில் (ரு) உண்டையிட (ரு) நாள் தின்னக் காய்ச்சல் மாறும். தென்னைமரத்தோல் சாற்றிலும் எலுமிச்சம் புளிப்பிலுங்கூட்டி ஒரு உண்டை (யக) நாளிடச் செங்கமாறி மாறும். பசுகோமயத்திலிப்பேய்விடும். கடுகு இலைச்சாற்றில் உரைத்துக்கண்ணிற் பிரைவளையமாகப் பூசத் தலைவலி மாறும். எலுமிச் சம் புளியில் உரைத்துக் கண்ணிலிடப் பல வியாதியும் தீரும். நொச்சியிலைச் சாற்றிலும் கையாந்தகரைச்சாற்றிலும் உண்டையிடப் பலவாயுவும் தீரும். கருப்புக்கட்டியிலிடப் பலவாய்வும்தீரும். பூசக்காய்ச்சாற்றில் இரண்டு உண்டை யிட அசீரணம் தீரும். வல்லாரைச்சாற்றில் ஒரு உண்டையிட விசாரமுண் டாம். நார்த்தங்காய்ப் புளிப்பில் உரைத்துப் பல்லில்பூசப் பல்பலக்கும். கொட்டை பாக்குசீவி நீரிலிட்டு மறுநாள் நீரில் உரைத்திட மாலைக்கண் மாறும். விளக்கெண்ணெயில் நாலு உண்டையிட வயிறு கழியும். உச்சி யில் உரைத்திட நண்டுவாக்காலி விஷம் மாறும். பொன்னுவாரை தோலும் இலையும் சாற்றிலுமிட அசீர்ணம்மா . . . . .

* * * *

End :

தேள் விஷத்துக்கு நசியம். பாம்புக்குங்கூட :—நாய்வேளையிலைச் சாறு காதில் பிழியவும். கற்கோவைக் கிழங்கு கொண்டுவந்து முள் ளிலே குத்தி எருக்கம் பாலிலே ஊறப்போட்டு உலர்த்தி எருக்கம் பாலிலே உரைத்து நாக்கிலேயும் கடிவாயிலேயும் தடவவும். அபினி, பெருங்காயம், கழற்சிக்காய் விதை, விளக்குச்சுடல் மண்ணு இந்த நாலு வகையும் எருக்கம்பாலில் அரைத்து உண்டைபண்ணி வைத்துக்

கொண்டு எருக்கம்பாலில் உரைத்துக் கடிவாயிற் பூசவும். தேள் விஷம் தீரும். பெருங்காயமும் வசம்பும் இந்த இரண்டும் சதுரக்கள்ளிப்பாலில் விட்டரைத்து உண்டைபண்ணி வைத்துக்கொண்டு அந்த உண்டையைக் கையில் தடவிக்கொண்டு பாம்புக்குடத்திலே கையிடப் பாம்பு கடியாது. இதுக்குச்சோதனே. இந்த மருந்தை எலிக்குத்தடவி விட்டுப் பாற்கவும். விலங்கு முறிய நாய் [பி (பு) புணையலாயிருக்கிற போழ்து எருக்கங்கோல் பச்சைக்கோலாலே அந்தப் புணையல் மேலே யடிக்கவும். அடித்து முறிந்த கோலே யெடுத்து எருக்கம் பழுப்பும் ஆமை யோட்டிலே போட்டுக் கட்டிச் சுட்டு அந்த நீற்றைப்பறணியிலே வைத்துக் கொண்டு வேண்டிய போது அந்த நீற்றைக் கதவிலே வைக்கத் தாள் திறக்கும். விலங்கில் வைக்க விலங்கு முறியும்.

கன்று டாராத மாட்டுக்கு :—புலி தடிக்கி வேரைச்சிறு நீரில் அரைத்து மூக்கில் நசியமிடவும். சுண்டை விரை அரைத்து நசியம் இடவும்.

தேளுக்கு மருந்து :—கழற்சிக்காய் உள் விதை யெடுத்து காஞ்சிரங்காம்பு கொண்டு அடைத்துத் தூபதீபங்கொடுத்து அந்தக் கழற்சிக்காயைத் தேள் கொட்டினபேர் கையில் கொடுக்கவும். அதைத் திரும்பவும் வாங்கி வேறு ஒருவர் கையிலே கொடுக்க விஷமங்கே பாயும். நேர்வாள விரையொன்று சுண்ணும்பிற் கொடுக்க விஷம் மீளும். கைகண்டது.

வேறு :—சாதிக்காயும் அபினும் சமன் கூட்டியரைத்து உண்டை பண்ணிக் கொடுக்கத்தீரும். வேறு— ஈரவெங்காயம் முலேப்பால் வார்த்து நசுக்கி உச்சியில் மத்திக்கத்தீரும்.

கு.பு. :—இந்நூல் மூவருடக்காடலாக்கு 556-ஆவது நம்பரில் வந்துள்ள நூல் போன்றதாய்ப்பல வகையான வியாதிகளுக்கும் விஷங்களுக்கும் உரிய சிகித்சை முறைகளே விரிவாக வசன நடையில் அமைந்து உணர்த்துகின்றது. இதில் அநேக விதமான அரிய பெரிய முறைகள் இருக்கின்றன. 47-வது ஏடு காணப்பெறவில்லே. சில ஏடுகள் சிதலுற்றிருக்கின்றன. எழுத்துப் பிழைகள் உள. இதில் உள்ள ஏடுகள் எல்லாம் மூன்று வகையான அளவு உள்ளவைகளாயிருக்கின்றன.

No. 2404. குழந்தை வைத்திய முறை.

KULANDAIVAIDDIYA MURAI.

Pages, 54. Lines, 6 on a page.

Begins on fol. 64-a of the Ms. described under No. D. 2404.

Incomplete.

On the treatment of the diseases of children.

Beginning :

குழந்தைகளுக்குச் சகல நோவுக்கும் பால சஞ்சீவி மாத்திரை :—
சீருலவு கலமதம் கல்னூர் கிராம்புடன்
திப்பிலி யதிவிடயமும்
செய்யதாளிசமுடன் கடுகு ரோகணி
இருசீரகம் ஓமமுடனே
காருலவு மக்கார சாதிக்காய் பத்திரி
கத்திநாயகனுடன்
காவலர்கள் புகழ் பஞ்ச திரவியந்துன்னுடன்
கற்கடக சிங்கி குரோசாணியுடனே
பேருலவு தருஞ்சத்துருவுடன் கற்பூரம்,
கஸ்தூரியுடனே கோரோசனை பெருகவே ?

இவைகள் சமமதாய்க் கூட்டியே பேணியரை உண்டையளவாய் அடைவான கையாந்தகரை கஞ்சாங்கோரை ஆனவெண்ணெச்சில் உடனே அன்பானநா [ற] (ர்) நதை மறத்தை மறளிஞ்சிமுசுறுடன் அழகான ஆவின் பாலிலும் உடனிடத்தே இறையெண்ணெய் நெய் பண்ணியே ஒரு போத ருந்தியிடவே ஓது கருவுக்காம் வெள்ள .. .. ..ரம் குண்டி அக்காரம் கெண மாந்தமும் நடனமிடுவகுறு கழிச்சலோடு நாடுந்தி ...... தோஷ முதலாய் நாலுவகைப்பிணி பட்சி தோஷங்களும் நவி பால் இரிச்சிரம் எல் லாம் திடமாய் அகத்திடும் பாலசஞ்சீவியைத் தேசத்தில் உள்ளோர்கள் செப்பமாய் அறியும்படிக் கும்பமுனி சொல்லிடுந்திகழ் வாகடத்தின் விதி யை யடைவு படவே செய்யவல்லவர்கள் இப்புவியில் ஆய்த்திடு பதத்தினுட னே அன்பதாய்க் குளிகையெண்ணெய் நெய்யருந்திடவே அகலுமாறுருண் களே.

சீர்கொண்ட வெண்காரம் கோரோசனை திகழவரைக்
கொரு கழஞ்சிக் குமலம் விடுகடுகு ரோகணியும்
முக்கழஞ்சொக்கவே சேர்த்திடித்து
வேர்கொண்ட நல்லகத்தியிலை ரசம் விட்டு
மெள்ள வொரு சாமம் நன்றாய்
விசைகொண்டிமுத்தரைத்துச் சீரிய பயறளவு
மென்மை பெற வுண்டை செய்தே
வார்கொண்ட பெண்முலைப்பாலினிலிடுவதிது
வாலபிணியக்கரம் வயிறிழிவு பிரமலொடு
மாந்தங்கண மதத்துவம் •
வாராதினிய பாலசஞ்சீவி யிதுவே

இப்படிக் கொடுக்கக்குணமாம்.

பிள்ளை பிறந்த பத்துநாள் மட்டும் அப்பால் பனிரண்டு வருஷமட்டும் அந்தந்த நாளிலே தீண்டுகிற தேவதை பேர்களும் அது செய்கிற குணங் களும் குழந்தைகளிருக்கிற விகாரங்களும் சாத்தியம் அசாத்தியமும் அவை களுக்குப்பலியும் மந்திரயந்திரமும் மேலுக்கும்பமும் ? தூபமும் தோஷ சாந்தியும் மூலிகாப்பிரயோகமும் ஔஷதங்களும் இதற்குத் தந்திர

உபாயமும் சர்வ பத்திரயுகமாய்ச் சொல்லுகிறேன் என்ற வாறு. இந்தப் பிரகாரம் தப்பிதமில்லாமல் செய்தாளுகில் சகல தோஷமும் சகல வியாதியும் குணமாம் என்றவாறு.

* * * * * *

End :

* * * * * *

(சசு)

வேறு—

சாதிக்காய் சாதிபத்திரி ஏல அரிசி கிராம்பு அதிவிடயம் கோஷ்டம் செண்பகமொட்டு சீரகம் ஓமம் கோரோசனை திப்பிலி சுக்கு மிளகு வட்டத்திருப்பி பெருங்கிழங்கு மாதளங்காய் சடைக்கஞ்சா நெல்லிப்பருப்பு வில்வவேர் இவை வகைக்குக் காசு இடை, இவை வகைகள் வரையிட்டு வஸ்திரகாயம் பண்ணி வைத்துக் கொண்டு இளவெந்நீரில் கொடுக்க கழிச்சல் நிற்கும். நில்லாவிட்டால் மாதளங்காய் வில்வபத்திரி கோரைக் கிழங்கு பெருமரப் பட்டை காரைவேர் வற்பூலாவேர் இவை கூட்டி இரு நாழி நீர்விட்டுக் கஷாயம் காய்ச்சிக் கஷாயத்தில் சூரணம் போட்டுக் கொடுக்கப் பிரமல் கழிச்சல் நிற்கும் (சசு)

கருஞ்சீரகம் கம்பிப்பிசின் கஸ்தூரிமஞ்சள் பூதகரப்பான் பட்டை திப்பிலி கார்ப்போகவரிசி கோரோசனை வாலுழுவை வெள்ளுள்ளி வசம்பு பெருங்காயம் கல்நார் சுக்கு மிளகு ஒவ்வொன்றும் கழஞ்சு. சிறு குறிஞ்சா மிளகரணை பெருமருந்து சத்திக்சாரணை கொஞ்சி கண்டங்கத்திரி சிறுகுறட்டை சடைச்சி ஆகாச ௦. . . . .

கு.பு. :—இது, பெரும்பான்மையாகக் குழந்தைகட்காம் வைத்திய முறையை யெடுத்து உணர்த்துவது. சில முறைகள் மாத்திரம் செய்யுளில் அமைந்திருக்கின்றன. மற்றைய பகுதி முழுமையும் வசனத்திலேயே யமைந்திருக்கின்றது. இதில், குழந்தைகட்குச் சகல நோவுக்கும் ஆம் பால சஞ்சீவி மாத்திரை யொன்றும், வியாதிகள் வரும்வகை, சன்னிவகை, பார்வை தோஷம், அந்திப்புள்ளின் தோஷம், மாந்த சுரத்தின் குணம், சுழிக்கணம், மூக்குக்கணம், திரிதோஷ சுர குணம், மாந்தத்துக்குக் குடிநீர், ஆமத்துக்கு மருந்து, மாந்த சஞ்சீவி யெண்ணெய், நீர்க்கணமாந்த எண்ணெய், கணத்தின் குணம், அட்சரம், குண்டி அட்சரம், காமாலைக் குணம், ஆமசுரம், சகல வியாதிக்கும் உரிய எண்ணெய், சூலைக்கு எண்ணெய் என்னும் இன்னோரன்னநன் மருந்துகளின் முறைகள் பலவும் இவைகள் விரிவாக எடுத்து உணர்த்தப்பெற்று இருக்கின்றன. இறுதியில் அரை குறையாகவிடுக்கப்பெற்றுளது. முற்றுப்பெறவில்லை. எழுத்துப் பிழைகள் மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றன. ஏடுகள் ஒரு சிறிது நுனியில் முறிந்தும் சில விடங்களில் புழுக்களால் அரிக்கப்பெற்று மிருக்கின்றன. இது அகத்தியர் வாகடத்தைப் பின்பற்றியிருக்கலாமென ஊகிக்க இடனுளது. பாட்டும் உரையுமாக வெழுதப்பெற்றுளது.

No. 2405. வைத்திய நூல்.
VAIDDIYANŪL.

Pages, 42. Lines, 6 on a page.
Begins on fol. 90-a of the Ms. described under No. D. 2403

Wants Stanzas 57 to 75 in the middle.

Similar to the work described under No. D. 1977.

Beginning :

வைத்திய நூல்.

சாம்பிராணி துருசுதுத்தம் சாற்றுங்கறுத்த குங்கிலியம்
விதித்தவகைகள் தான்க[ளா](ழ)ஞ்சு விளங்கும் பச்சை வெட்டுடனே
அழுந்தவல் . . . . மதாறென்று அறிவாய்க்கலுவமீதிலிட்டு
சதிருங்காய்ச்சியெள்ளெண்ணெய் திதிமாயரைத்துத்தண்ணிவிடே (க)

* * * *

மானேலிங்கங்கழஞ்சொன்று மதிக்குந்துருசு இருகழஞ்சு
தேனே [மிறு] (யரி) தார மரைக்கழஞ்சு திதமாமிரதங்குங்கிலியம்
ஊனே பலமு மூன்ருக வுரைத்த வெள்ளிலெண்ணெய்யுடன்
தானே யரைத்துத் தண்ணி விழல் தறுகா தெடுத்து வழித்திடுமே (உ)

* * * *

சீத சுரக்கிஷாயம்

பாதிரியின் பெருங்குமிழும் முன்னைமுத்தம்
பற்படகஞ்சிறு தேக்குக் கண்டங்காலி
யோதரிய சித்தமல்லி கடுக்காய் சுக்கு
வோங்கு தாமரை வளையம் பேர் மல்லி
நீதி சிறுவழுதலையும் வில்வவேரும்
நெருஞ்சிவேர் சமனுகக் காய்ச்சிக் கொள்ளச்
சீத சுர வாத சன்னி போமென்றீசன்
தெளிந்த நூலுரைத்ததிது திண்ணந்தானே (சக)

* * * *

End :

இருமலுக்குக் கிஷாயம்

ஆடாதோடை தேள் கொடுக்குத்தூதளை
வாடா சுக்குடன் வல்லிதன் கொண்டைவேர்
நாடாத்திப்பிலி நீர் பொடியிட்டிட
ஓடாதாகிலும் ஓடுமிருமலே (கூரு)

அண்டவாயுவு அரோசகங்களுக்கு

கண்டசுக்குக் கடுகுடன் பேய்ப்புடல்
விண்டதேக்கும்மிகு கொத்தமல்லியும்
கொண்டநீரைக் குறுகிக் குடித்திட
அண்டவாயுவு மரோசகந்தீருமே (கூள)

சிறுகாஞ்சோறி நன்னாரி தெய்வப்பெண்மடரருடன்
குறுகாதரைத்து உண்டை பண்ணிக் கொடிய சுரத்துக்கிடுவீராய்
மறுகால்வராது வாத மொடு வயிறு நோவுகுன்மமுடன்
தறுகாதளவும் விழி மடவீர் தரணி(ே) யோருக்குரையீரே (கூ)

துத்தந்துருசு பாஷாணம்
மெத்திய கெந்தி மிருரசவகையும்
பத்திய பாகற் சாற்றிலரைத்து
தித்திய மிளகளவுண்டைகள் செய்யே (௱)

சீதாங்க சுரம்

சீதாங்க சுரஞ் செப்பக்கேள்
ஓதிய கெந்தியுயரசவாளங்
கோதறு திரிகடு கடுகொடு சிவதை
மாதறு பாலில் மாத்திரை செய்யே (௱க)

கு - பு—இது வைத்திய விஷயமான தொரு நூலாகும். இது நூறு பாட்டுக்களான் அமைந்துளது. இயற்றியவர் இன்னாரென்று தெரியவில்லை. நூற் பெயரும் இன்ன தென்று ஓரிடத்திலும் விளக்கப்பெறவில்லை. இதில் அநேக விதமான நோய்களையும் நீக்கற்குரிய பலவகை நன் மருந்து களுடைய முறைகளும், பல கிஷாயங்களும், தைலங்களும், காரச்சீலைகள், பொடிவகை, மஞ்சட்காரம், பச்சைக்காரம், குடிநீர் வகைகள், அதிசார பித்தக் கழிச்சலுக்கு மருந்து முறை, அண்டவாய்வ ரோசகங்கட்கு மருந்து முறை என்னுமிவைகளும் நன்கு விளக்கமாகக் கூறப் பெற்றிருக்கின்றன. ஏடுகள் முறிந்து கிடக்கின்றன. நடுவில் 15 to 23 ஆன ஏடுகளில்லையாத லின் அவையிற்றில் அடங்கிய 57 to 75 ஆன பாடல்கள் காணப் பெறவில்லை.

No. 2406. வைத்திய முறை வசனம்.
VAIDDIYAMURAI VĀCANAM.

Pages, 8. Lines, 6 on a page.
Begins on fol. 111-a of the Ms. described under No. D 2403

A treatise, in prose, on Indian Medicine.

Similar to the work described under No. D 2403.

Beginning :

நீரிற் சிவப்புக்குறி குணத்துக்கு நவநீதம் (வெண்ணெய்).

கருநொச்சியிலைச்சாறு படி (க) எலுமிச்சைச்சாறு படி (க), பசுவின் பால் படி (க) நல்லெண்ணெய் படி (க) இந்நாலையுங்கலக்கி அடுப்பேற்றி மெழுகுபதத்தில் வெள்ளைக்குங்கிலியம் (பூ கூ) பலம் மூன்று, கற்பூர சிலாசத்து (௩ உ) கல்நார் (பூ உ) இவை மூன்றும் பொடி செய்து அதிற் போட்டு ஒரு கொதி கொதித்தவுடனே ஒரு பெரிய புதுச்சட்டியிலே நல்ல சலம் நாலுபடி விட்டு எண்ணெயை அச்சட்டியிற் கவிழ்த்து இலை மத்தினாலே கடையக்கடையச் சலத்தை யிறுத்துப்போட்டு மறுபடி ஏழு தரம்

சலம் விட்டுக் கடையவும். கடைந்துப் பீங்கானில் வழித்துக் கொண்டு புன்னைக் காயளவு இரண்டு வேளையாகச் சாப்பிடவும். இதுக்குத் தீரும் வியாதி கர்ப்பத்தில் விரணத்தை யாற்றும், மேக வாயுவைக் கேட்கும், மேகம் நிற்கும். நீர்த்தாரையிலே உதிரம் விழுகிறது நிற்கும். மது மேகத்தைக் கேட்கும். சூதக வாயுவைக் கேட்கும். இதுக்குப் பத்தியம் சஞ்சாரம் ஆகாது. சலபுஷ்பம் ஆகாது. உடம்பு அதிரலாகாது.

End.

கபாலத்தில் சூலைக்கு : கண்டத்தில் தலையிசுவுக்குத் தைலம்.

நல்லெண்ணெய் படி (க) வெங்காயச்சாறு படி (௨) அரை, குத்துக் காசாமுட்டிப் பட்டை யரைத்த விழுது (பூ ம) பலம் பத்து இந்த மூன்றுங் கலக்கி யடுப்பேற்றித் தைலம் இறக்குகிற பதத்தில் சிறு பாலடையிலை (பூ ரு) பலம் ஐந்து. எண்ணெயில் போட்டு எரித்து வடித்துக் கொள்ளவும். தலை முழுகின தினம் பத்தியம். சலபுஷ்பம் (உப்பு) புளி யாகாது.

கு-பு—இது, D-2403 நம்பர் பிரதி போன்று அநேக விதமான வியாதிகளையும் நீக்கற்குரிய பல நன் மருந்து முறைகளையும் வசனத்திலே யமைந்து விளக்குகின்றது. ஏடுகள் ஒரு சிறிது நுனியில் முறிந்துள. எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன.

No. 2407. பதார்த்தகுண சிந்தாமணி.
PADĀRTHAGUṆACINTĀMAṆI.

Pages, 34. Lines, 4 on a page.
Begins on fol. 115-a of the Ms. described under No. D. 2403

Same work as that described under No. D. 1958.

Beginning :

நெருப்பு வெண்பா

கண்டங் காளேவு வலிகாதம் போங்காய்ந்ததனுல்
விண்டே பல பிணிகள் விட்டேகும்—அண்டர்
பொருப்பனைய மாமுலை தோய்ப்பூவையரே யிந்த
நெருப்பின் குணமறிய நீ (கூ)

காற்று வெண்பா

மேகக்கடுப்பு மிகவுண்டாம் மெய்யெங்குந்
தாகந்தனி லிளைப்புச்சாந்தமாம்—போகத்தின்
புண்ணேய்க்கும் பொல்லாது பூவையரே காற்று
கண்ணோய்க்கு மாகாது காண் (சு)

ஆகாய வெண்பா

தாதுமதின் வழியே சாரும் பொசிப்பருந்து
மோதும் வெறிக்கு முரி தாகும்—நீதி முத
லெல்லா நினைக்குமிவையாகாயச் செயலே
நல்லாயுலகறிய நாட்டு (ரு)

தண்ணீர் வகை யெட்டின் குண வெண்பா.

கூவறருமேறி கோதிற் சுனையருவி
யாவறருமோடை நீராற்று—சேவிக்கு
மட்டுற்ற கூந்தன் மயிலே கேள் வந்தநீ
ரெட்டுவகை யென்றியம்பு (சு)

End :

கொடிக்கள்ளிப்பால் வெண்பா.

வாதங்குடல் சூலை வந்த சய ரோகமெல்லாங்
காதமெனவோடிக்கடியுமே—மாதே
யடிக்கடிசேர்குன்மவலி யத்தனையுந்தீருங்
கொடிக்கள்ளிப்பாலின் குணம் (எO)

இலைக்கள்ளிப்பால் வெண்பா.

குன்மங்குடல்வாதங் கொடிய வாய்வுத்திரட்சி
சென்மம் விட்டோடிச் சிதறுமே—வன்முலையீர்
சீதஞ் சொறி சிரங்கு சேராதிலைக்கள்ளி
மாதே யிதன் பாலைவை (எக)

கு.பு.—இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1958-வது நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் 1—71 செய்யுட்களேயிருக்கின்றன. இதில் உள்ள பாடல்கள் எல்லாம் அச்சுப்பிரதி பாடல்கட்கும் மற்றும் உள்ள பிரதிகளின் பாடல்கட்கும் ஒவ்வொரு அடிதோறும் மிகப்பாடபேதங்களுடன் காணப்படுகின்றன. பல ஏடுகள் முறிந்து விழுந்துள்ளன. எழுத்து பிழைகள் மிகவுள.

No. 2408. நாடித்திரட்டு.

NĀḌITTIRAṬṬU.

Substance, palm-leaf. Size, 9¾ × 1½ inches. Pages, 16. Lines, 8 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Begins on fol. 2-a. The other works herein are Maccamuni Eṇṇūṟu 1-a, Vaittiya Muṟaivacanam 8-b.

Incomplete.

Same work as that described under No. D. 2318.

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 2318-ம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூலின் ஐம்பத்தெட்டு செய்யுட்களும் இருக்கின்றன. இருக்கிற ஏடுகள் மிகவும் முறிந்தும் சிதலுற்றுமிருக்கின்றன. அப்பிரதிக்கும் இப்பிரதிக்கும் மிகப்பாட பேதங்கள் காணப்படுகின்றன.

No. 2409. மச்சமுனிபெருநூல் எண்ணூறு.

MACCAMUNI PERUNŪL ENNŪRU.

Pages, 2. Lines, 8 on a page.
Begins on fol. 1-a of the Ms. described under No. D. 2408.

Incomplete.

Contains 1 to 6 Stanzas only.

Same work as that described under No. D. 1967.

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1967-வது நம்பரில் வந்துள்ள நூலே யாகும். இப்பிரதியில் ஒன்று முதல் ஆறுவது செய்யுள் வரை யான பாடல்களே யிருக்கின்றனவாதலின் முற்றும் இல்லை. உள்ள வடு புழுக்களால் அரிக்கப்பெற்றிருக்கிறது. எழுத்துப் பிழைகளிருக்கின்றன. பாடபேதங்கள் காணப்படுகின்றன.

No. 2410. வைத்தியமுறை.

VAIDDIYAMURAI.

Pages, 18. Lines, 8 on a page.
Begins on fol. 8-b of the Ms. described under No. D. 2408.

Similar to the work described under No. D. 1978.

Deals with the preparation of various kinds of medicinal ghee, pills, powders, etc.

Beginning :

இராமபாண நெய்.

சிறுவழுதலை நன்னாரி சிறந்த திருயு நெருஞ்சில் வே
ருறுமே யிவை யோரோரு பல மாயுகந்த பேராமுட்டி நூறு பல
மறவே கசாயமதுவாக்கி மகிழுங்கற்கவகைகேளீ
ரிறுமே கத்தாழஞ்சாறுடனே யிதுவே தண்ணீர் மிட்டானும் (க)

இளநீருடனே கற்றாழை யிவையாமூன்று முக்குறுணி
யளவே முந்தின கஷாயத்திலதுவுங்கூட்டிக் கற்கங்கேள்
உள்வே யேலம் பச்சிலையும் உகந்த சந்தணத்திரிகடுகம்
மிளகுங்கற்பூர மில்வங்க . . னறு முடவாட்டு க்கல்லுடனே (உ)

இந்துமதுர முள்ளி விரையிலகு மட்டி சர்க்கரையும்
சந்து மிலாமிச்சம் ஞ. . . த்தானே முத்தங்காய்ப்புல்லு
முந்து நன்னாரி முத்தமுடன் முசியாதேரொன்றே. . . யி
வந்த பதக்குப்பால் கூட்டி வாரீர் குறுணி நெய்யுமதே (ங)

வடித்துக்காய்ச்சி மெழுகு. . . ருந்தி நாலுங்கழஞ்சி கொள்ள
இடித்த மிரத்த முடனென்றுங்காச மீளைபல.
வொடித்த நெஞ்சு நரிகுரனு மோடும்பாண்டு சோகை பல
வடுத்தே நீரு மோடும் போலான ராம பாணமிதே (ச)

பூசணி நெய்.

ஆவின் நெய்யுமிளை நீருமடுத்த பூசணி சதாவேரி
மேவும் பசுவின் பாலதுதான் வெவ்வேறிதுவுமிருநாழி
தாவுங்கோஷ்டகஞ்சந்தணமுந்தக்க பச்சிலே கச்சோலம்
பாவுமேல மிலவங்கம் பத்திரி கிரும்பு சாதிக்காய் (ரு)

ஓதுங்கடுகுவிளலரிசிசுக்கு வுலருந்திப்பிலி மாங்கொட்டை
கோவுமரத்தின குருவுடனே கூறுங்கூவளே தன் பிசினும்
மேவியிதனைய ரைத்ததனைவெந்து பதத்தில் வடித்துக்கொள்ளத்
தாவுஞ்சுரமும் மேல் வலியுந்தப்பும் வெப்பு முட்சுரமுங்
கோவிந்தாவெனவே கொளப்பூசணி நெய்தானே (சு)

சீந்தில் நெய் .. ..

பவழவைப்பு:—சங்கு பற்பம் (பூக) பலம் ஒன்று.

சாதிலிங்கம் பூகு-விளாப்பிசின் தண்ணியில் மூன்று நாள் அரைத்துப் பவழம் போல் பண்ணிக்காயவைத்து மிடைவை மீன் வயிற்றைப் பிளந்து வைத்துப் பாண்டத்தில் கால்வாசி போட்டு மீன் வயிற்றை அதிலே வைத்து மேலுங் கால்வாசி சுண்ணும்பு போட்டு நாலுபடி தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்துத் தண்ணியெல்லாம் வற்றக்காய்ச்சியெடுத்து நல்ல தண்ணீரில் கழுவிப்போட்டு எடுத்துப்பார்த்தால் பவளம் போல் இருக்கும்.

முத்து வைப்பு :—கழிபட்ட முத்து ஆறுலும் முத்து சிப்பியாறுலும் உவர் மண்ணும் சுண்ணும்பும் சமஞ்சேர்த்து ஒன்றுக்கு ச-படி தண்ணீர் விட்டு வற்றக்காய்ச்சித் தண்ணீர் சுண்டிய பின் கழுவிப் போட்டு உலர்த்திப் பொடி பண்ணிக் கனத்த சீலே வடி கட்டிக் கொண்டு முத்து உரிக்குஞ் செஷ்ச்சாத்தாலே முழுங்கரைத்து ? மிளகு போல் உண்டை பண்ணிச் சூரிய காந்தத்திறலே சிமிழ் போலே பண்ணி உண்டைவைத்து மேலே மூடி மாஷத்தாலே சீலே செய்து வெய்யிலில் வைத்து ஏழாநாள் திறந்து பார்த்தால் முத்துப் போல் பளிச்சு என்றிருக்கும்.

மகா கோடா சூடிக்குளிகை.

நாபி இருவி இரதம் கந்தகம் தாரம் வெண்காரம் இந்த ஆறு மருந்துந்தம்மிலொக்கக்கூட்டி சுக்கு மிளகு திப்பிலி கடுக்காய் தான்றிக் காய், நெல்லிக்காய் இந்த ஆறும் சமனுகவும், வாளம் நாலு பங்கு மூன்று வகையுஞ்சமனுகக் கூட்டி நொச்சிச்சாறு ஒரு நாள் அரைப்பு முருக்கிலேச் சாறு குப்பைமேனிச்சாறு கையாந்தகரைச்சாறு ஆடாதோடைச் சாறு இந்த அஞ்சு வகைக்கும் ஒரு நாள் அரைப்பாக அஞ்சு நாள் அரைத்து மிளகுப் பிரமாணம் உண்டைபண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு கபால சூலேக்கு எலி ஆலம்பாலில் கரைத்து உள்ளுக்குங்கொடுத்து மேலுக்கும் பூசவும். மண்டைக் கரப்பானுக்கு மேனிச் சாற்றிற் பூசவும். மண்டை வியாதிக்குச் செருப்படைச்சாற்றிலிடவும்.

End :

பக்கசூலைக்குக் கோடாசாலிச் சாற்றில் இடவும். சந்து விப்புருதிக்கு ஆட்டு [க்கோமயத்தால்] (மூத்திரத்தில்) இடவும் கர்ப்ப விப்ருதிக்குப் பழங்கஞ்சியி லிடவும். பூதக் கரப்பானுக்கு எலுமிச்சம்பழச்சாற்றிலிடவும். ஈட்டுக்குத் தண்ணீரிலிடவும். தம்பனைக்கு அத்திப்பாலில் இடவும். யோனி கட்டு பிரண்டைச்சாற்றில் இடவும். ஆண்கட்டு முருங்கைச்சாற்றில் இடவும். மகோ தரத்துக்கு அரப்பொடியில் இடவும். பிரநீர்க்கோவைக்கு எலுமிச்சம்பழச் சாற்றில் இடவும். பித்தபாண்டுக்குச் சங்கிலைச்சாற்றில் இடவும். சோகை க்குச் சீரகத்தில் இடவும். காமாலைக்கு ஏலவரிசியிலிடவும். வறட்காமாலைக் குக் கடுக்காய்ச் சாற்றில் இடவும்.

கண்ணுக்குமை.

வெள்ளெருக்கன் பரும் வேர் வடக்கே போன வேரைப்பிடுங்கிவந்து எரி நெருப்பில் இளம்பதமாய்க் கருக்கிக் கத்தியினுலே சீவிக் கொண்டு அத் தூள் பலம் (க) மயிற்றுத்தம் பலம் (௨) பாற்றுத்தம் பலம் (வ) இந்த மூன்றையும் கங்காளத்தைக்கவிழ்த்து அதின் பேரில் வைத்துக் கொங்கிலங்கு இலைச்சாறு துட்[டிவைட்டு] டெடைவிட்டு வெண்ணெய் பரும் எலுமிச்சங்கா யளவு எடுத்துகொண்டு சங்கினுலே எட்டு நாள் இந்த வெண்ணெயை விட்டு அரைத்து எடுத்து எருமைக் கொம்பு பரணியிலே வைத்துக்கொண்டு கண் வியாதிகளுக்குப் போடவும். கண்ணிலாணி. சாலேசரம். கண் மத்தியமம், கண்ணிற் பூவிழுந்தாலும் எல்லாவற்றையும் எடுக்கும். இது அனுபோகத் துக்குச்சரியாக விருந்தது.

வெள்ளைக்கு.—சவுக்காரம் பலம் அரை, மிளகு பலம் அரை, உரித்த பூண்டு பலம் அரை, இந்த மூன்றையும் நெகவரைத்து (ந) மூன்று பங்காக்கி உழக்குத்தயிரில் ஒரு பங்கு சேர்த்து ஒரு வேளைக்கு கொடுக்கவும். இந் தப்படி ந. மூன்றுநாளைக்குக் கொடுக்க வெள்ளை மாறும். உப்புவில்லாத பத்தியம். பத்தியமில்லாமல் சாப்பிட்டால் ருசு வேளை சாப்பிடவும். தீரும்.

No. 2411. உரோமருஷி சூத்திரம் ஐந்நூறு.

URŌMARUṢI SŪTTIRAM AINNŪṞU.

Substance, palm-leaf. Size, $11\frac{1}{4} \times 1\frac{6}{16}$ inches. Pages, 104. Lines, 9 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 1-a. The other work herein is Irāmadēvarpadineṉ paribhāṣai 54-a.

Complete.

Similar to the work described under No. 258-b.

Beginning :

உரோமருஷி சூத்திரம் ஐந்நூறு.

வெளிச்சூத்திரம் வகாரம் முடிவு.

அறிவான போதம் அறிவிப்போம் ஐம்பதில்
குறியாக நூற்றிற் குணமெல்லாங் காட்டினோம்
வெறியாயலையாமல் மேதினியோர்கள்
குறியாக வைந்நூற்றிற் கூறினோம் பாருமே. (க)

பாருமிந்நூல்போல் பகராது மற்ற நூல்
வேதனையில்லை வெளிவிட்டேன் வாதிகாள்
ஆதியிற் சொன்னேன் ஆயிரமிரண்டுதான்
நீதியாயிந்நூல் பாடினேன் ஐந்நூறே. (உ)

ஐந்நூறு மூன்று அருளிய போதகம்
ஐந்நூறு முன் காண்டமதில் வேத மோதினோம்
ஐந்நூறு ஞானமும் அருளினோமொன்றில்
ஐந்நூறு மிந்த நூல் அடக்கியபோதமே. (ங)

போத மிதென்று புகலக்கேள் முற்குரு
சோதனை யாகச்சொல்லுவே னிந் நூலில்
வேதமும் ஞானமும் மேலான முப்பூவும்
வாதிகளே நீவிர் மகிழும் பொருளிதே. (ச)

பொருளென்ன ரோமர் புகட்டிய காவியம்
அருளென்ன வென்று அலைவார் சிலவாதி
மருளென்ன சொல்லீர் மாட்டிய முப்பூ
திருவெ[ண்டு](ன்று)சொல்லும் சகத்திற் பெரியோரே. (ரு)

பெரியோர்கள் முன்னுரைத்த நூல்கட்கெல்லாம்
பூட்டிவைத்த கருக்குருவும் புகலுந்தீட்சை
மருவிய தோர்பூசைமுதல் கணேசன்பூசை
மயமான வயிரவர்தன் வாலை பூசை.

கருதியதோர் முப்பத்திரண்டு தீட்சை
கட்டான சமாதியொடு கற்மம் எட்டும்
பருதிபோல் ஒளிவெளியும் ஆதியந்தம்
கைமுறையுஞ் செய்முறையுங்கருதுவோமே. (சா)

கருத்தறிய வேணுமென்றாற் கற்பஞ்சொல்வோம்
காயசித்தி வேணுமென்றால் ஞானஞ்சொல்வோம்
பரித்திதனிற்றீப்பிடித்த வாறுபோலப்
பகர்ந்திட்டோம் ஆதிமுதல் அந்தந்தோறும்.

இருத்திய தோர் பொருள்களெல்லா மிந்நூறண்ணில்
இசைத்து வைத்தோம் உரோமருஷி யைந்நூறென்றால்
ஒருத்தருடன் பேசார்கள் பொய்சொல்லார்கள்
இந்நூலை யீயார்கள் பொருள் சொல்லாரே. (எ)

End :

தேகமிருந்தல்லோ சித்தெல்லாமாடலாம்
தேகத்திற் சேர்க்கலாஞ் செப்பியபூரணம்
தேகமிருந்து செய்தொழிற் செய்யலாம்
தேகத்துக்கித்தொழில் செய்முறைகாணுமே. (சகூ௪)

நந்தியெனக்கு நவின்ற முறைப்படி
அந்தியுஞ் சந்தியுமகலாமல் தீட்சை செய்
முந்தி முறையெல்லாமொழிந்தபடிக்கு
வந்தது காணும் வராதுமில்லையே. (சகூ௫)

எல்லைப்படியில் இராது வீடு
தொல்லைப்பதியிற் சுழலும் வகைகண்டு
தில்லைப்பதியிற் செண்டாடுங் கூற்றை
அல்லும் பகலும் அறிவாலறியுமே. (சகூ௬)

பார்ப்பதுக்கு நாளென்று வேணுமோதான்
பாழிலே யலையாதே பாழ்செய்யாதே.
சேர்ப்பதற்குக் கைபாகந்தப்பிடாதே
திருடாதே பொருவர் கைப்பொருளோராதே
கூர்ப்பது வேமனமடங்கிப் போதம்பண்ணிப்
புகழான பூசையெல்லாம் முடித்துக்கொண்டு
வாய்ப்பகட்டுப்பேசாமல் மனமடங்கி
மகத்தான வேதைகண்டு மகிழுவாயே. (சகூ௭)

மகிழவே குகைதனிலே திருமூலர்தானும்
வாங்கிவைத்த நூல்வழியே வருவதாக்கு
எகிழவே யவர்களுடன் தர்க்கமிட்டு
என்தொழில்கள் மேலாகி யெனக்குத்தந்து
பருவமுடன் செய்வதற்குத் தனக்கறிந்த
பண்புகளுமிந்நூலிற் பதித்து வைய்த்து
மவுனமாயிருந்தபின்பு என்முன் நீண்டு
வாங்கி யிந்தநூல்வெளியே வகுத்தேன் பாரே. (சகூ௮)

பாரிந்த வஞ்ஞூறும் பொருளொன்றாகப்
பாடிவைத்தேன் நவசித்தர்பாதம்பெற்று
வீணிந்த நூலென்று வெளிவிடாமல்
வேதாந்தி கெட்டிபண்ணுவித்த நூலே
ஏனிந்த நூல் வெளியாகவிட்டேனென்று
எல்லோருங் கோபித்தார் சிவனைக்கேட்டு
நானிந்தப்படிவிட்டேன் வெளியிலேதான்
நாட்டினேன் ரோமர் அஞ்ஞூறு முற்றே. (௫௱)

இந்நூல் மூவருடக் காடலாக்கு 258 பி நம்பர் பிரதியில் வந்துள்ள நூலினும் வேருகவுள்ளது. இதுவும் ஐந்நூறு பாடல்களாகியது. இன்னும் **ஐந்நூறு பாடல்கொண்ட மற்றொரு நூலும்** இயற்றியிருப்பதாகத் தெரிவிக்கின்றார் இந்நூலாசிரியர். அதை இந்நூலின் மூன்றுஞ் செய்யுளால் உணர்க.

No. 2412. இராமதேவர் பதினெண் பரிபாஷை.

IRĀMADĒVAR PADINEṈ PARIBHĀṢAI.

Pages, 11. Lines, 10 on a page.

Begins on fol. 54-a of the Ms. described under No. D. 2411.

Complete.

Same work as that described under No. 197-d.

கு.பு.—இந்நூல் மூவருடக் காடலாக்கு 197-d நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாம். இப்பிரதியில் இந்நூல் முற்றுமுளது. அதற்கும் இதற்கும் பாடபேதங்கள் காணப்படுகின்றன.

No. 2413. இரஸவாதத்திரட்டு.

IRASAVĀDATTIRAṬṬU.

Substance, palm-leaf. Size, $7\frac{1}{2} \times 1\frac{3}{8}$ and $8 \times 1\frac{3}{8}$ inches. Pages, 100. Lines, 7 and 8 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, very old.

Complete.

A compilation of verses from various works on Alchemy.

Beginning :

கொங்கணர் மூவாயிரத்தில்

சிகாரம் மு . . . . . ர.

வாதமாங் குணங்கள் மூன்றும்
வரிசையாய்ப் பார்க்கவேண்டில்
கோதறு குழலாள் சொன்ன
குருவுடன் கணேசன் உட்கத்
தீதறப்பூசைபண்ணிச்
சிந்தையிற் சிவங்கள் செய்ய
மாதகலாதே நின்ற
வளர்ந்திடும்ஞானமெ . . . . (க)

* * * *

உறைத்து மனமொன்றாகி யுற்றுப்பார்த்தால்
ஒன்றும் பொய்போகாது உமையாள் சொன்னாள்
விறைத்த மனம் பொய்மெய்யோ வென்று வெண்ண
வேதமய்யர் வார்த்தை யெல்லாம் விழலாய்ப் போகும்
மறச்சி யென்னும் சிறுபிள்ளை மாயி பாதம்
மறவாதே பூசை பண்ணு வருங்காண் ஞானம்
இறச்சியென்ன மதுவென்ன வென்றுசொன்னால்
எழுபிறப்பும் நாய்ச்சென்மம் எடுப்பா . . .

* * * *

பாரிருவர்நேர்ந்தவிடம் நிராகாரந்தான்
பளிச்சென்றவிடமெல்லாம் மாயி மாயி
சேரிருவர் வெட்டவெளியப்பன் அப்பன்
சித்த சித்திரண்டிதுதான் சேர்ந்து தாண்டி
ஊரிருவர்தாம்ங்கே யொன்றய்ப் போக
ஓகோ கோ உருவுமில்லை அருவுமில்லை
ஆரிருவர் என்றக்கால் அசைவாயப்பா
அத்து நின்ற ந . . . க்குள் அடர்ந்து கூடே. (மச)

வெருவாமலக்கரை யேறவேணுமென்றல்
வேதாந்த வந்தமென்றது வாதசத்தைப்பாரு
அருவானதிருமக்காள் கூடாயோகம்
அம்மம்மா கேசரியால் அறியவேணும்
குருவான தேசிகன் றன்சொன்னூற் காணும்
குருவிட்டால் ஏதுமில்லை குருடாய்ப்போச்சு
திருவானவுப்பைவிட்டால் வாதம்போச்சு
செப்பினேன் . . . (மரு)

End :

க்ஷாரக்கட்டு :

நவச்சாரம் ஒரு பலத்துக்கு வெண்காரம் ஒரு பலம் பொடிபண்ணி நாயுருவிச்சாற்றில் கொதிக்கவைத்துச் சாரக்கட்டி . . . சம் கட்டிக் காய வைத்து ஒரு சேர் இந்துப்பு வளையல் உப்பு நல்லுப்பு பொட்டிலுப்பு குறிச்சியுப்பு இவையும் வகைக்குச் சேர் (க) ஒன்று. பதக்கு அமரியில் போட்டுக்காய்ச்சி மெழுகுபோல் அரைத்து ஒரு கலையத்தில் கீழ் மே லிட்டு முன்சாரக்கட்டி கவசத்துடனே நடுவே வைத்து ஒரு மூடி சீலை மண் செய்து நாலுச்சாமம் சீராய் எரிக்கக்கட்டும்.

கு.பு.—இந்நூல் இரஸவாத விஷமான பலநூல்களிலிருந்து அங்கங்கே நுவலப்பெறும் இரஸவாத விஷயமான பாடல்கள் பலவற்றையும் ஒரு திரட்டாகத் திரட்டுவித்ததென வறியக்கிடக்கிறது. இதில் திரட்டுவித்த நூல்க ளாவன: கொங்கணர் மூவாயிரம், திருமூலர் திருமந்திரம், சட்டைமுனி நூல், கொங்கணர் நூல் என்னுமிவைகளாம். இறுதியிலே வசனநடை யிலும் ஒரு சிறிய பகுதியெழுதப்பெற்றுள்ளது. ஏடுகள் எல்லாம் மிகவும் சிதலுற்றுக்கிடக்கின்றன. சில ஏடுகள் முறிந்துங்கிடக்கின்றன. எழுத்துப் பிழைகள் உள. உள்ள ஏட்டுக்களுடைய எண்ணிக்கை தொடர்பில்லாம லிருக்கின்றன.

No. 2414. கொங்கணர் கற்பம் நூறு.

KOṄKAṈAR KAṞPAM NŪṞU.

Substance, palm-leaf. Size, 14¾ × 1 inches. Pages, 42. Lines, 4 and 5 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

Contains 1 to 88 Stanzas only.

Same work as that described under No. 1922.

கு.பு.—இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1922-ஆம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும். அப்பிரதியில் 9 to 25 ஆன பாடல்களேயிருக்கின்றன. இப்பிரதியிலோ முதலேட்டில்லேயாதலின் அதிலடங்கிய நான்கு பாடல்கள் நீங்கலாக ஐந்தாவது பாடல் முதற்கொண்டு எண்பத்தெட்டாவது பாடல்வரை யுமேயிருக்கின்றன. உள்ள ஏடுகளில் பல மிகவும் முறிந்து கிடக்கின்றன. புழுவறிக்கப்பெற்றும் இருக்கின்றன. பாடபேதங்கள் உள.

No. 2415. போகர் நாலாங்காண்டம்.

BHŌGAR NĀLĀṄKĀṆḌAM.

Substance, palm-leaf. Size, 16 $\frac{1}{8}$ × 1 $\frac{3}{8}$ inches. Pages, 82. Lines, 5 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

Breaks off in 206th Stanza.

Same work as that described under No. 268-(f).

With different readings.

கு.பு.—இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 268 (f) நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் இருநூற்றைந்து பாடல்களோடு முடிவடைந்து இருநூற்றாறாவது பாடல் தொடக்கத்தோடு காணப்படுகிறது. அப்பிரதிக்கும் இப்பிரதிக்கும் மிகப்பாட பேதங்கள் காணப்படுகின்றன. எழுத்துப்பிழைகள் உள. ஏடுகள் மிகச்சிதைந்திருக்கின்றன.

No. 2416. ஆரூடநவநீதம் (கிரகாரூடம்).

ĀRŪḌANAVANĪTAM (GIRAHĀRŪḌAM).

Substace, palm-leaf. Size, 9 × 1 inches. Pages, 104. Lines, 4 and 5 on a Page. Character, Tamil. Condition, much injured. Appearance, very old.

Contains Grahārūḍam only.

Same work as that described under No. 2300.

Beginning :

கிரகாரூடம்.

ஆதித்தனம் புலியங்காரகன் புதனமரர் குரு
வாதித்த சுக்கிரன் சனி ராகு கேது விம்மாதவர்கள்
பாதத்தில் அன்பு பரிந்தே யமைந்தாரூடநவ
நீதத்திலே கிரக வாரூடந்தானிது நிச்சயமே.
நூற்றெட்டிற்றணிவதாக நுவன்றிடு மிலக்கந்தன்னை
நூற்றெண்பான் றெகையை வைத்து நின்றதைப்பின்னுமீந்து
பாற்றிடு மிச்சந்தன்னைப்பகுத்தந்தப்படியே யீந்தால்
வாய்த்த மூவிலக்கத்துக்கும் வரும் பலன் பார்த்துச்சொல்வாம்,

இதன் விபரம்: (௱அ) நூற்றெட்டு அல்கை வைத்து மூன்றாய்ப் பகுந்து மூன்று தானங்களிலிருக்கிற அலகையை ஒன்பதிற் கழிக்க மூன்று தானத்திலும் மிச்சம் நின்றது பலமாம். அல்லது, முன்நின்றரை (௱அ)ல் குறையக்கேட்டுச் சொன்ன தொகையை (கூ)ல் கழிக்கத்தானம் (க) சொன்ன தொகையை நீக்கி மீதியிலும் குறையக்கேட்டு அத்தொகையை ஒன்பதிற் கழிக்கத்தானம் (க) அத்தொகையிற் சொன்ன தொகையை நீக்கி மிச்சத் தொகையும் ஒன்பதிற் கழிக்கத்தானம் (க) தானம் மூன்றிலும் நின்ற இலக்கம் பலமாம். ஆருடச்சுருக்கத்துக்கும் இவ்வித மாக மூன்றிற் கழித்ததுப்பலமாம்.

*   *   *   *   *

இரக ஆருட அட்டவணை முற்றிற்று.

இரகாரூடம்:

ஆதித்தன்றிசையிற்றனேயவன் புத்திதனிலே மந்தன்
தீதுற்ற காலமாகிற் சேர்ந்திடும் பொருள் நட்டங்கள்
வாதுற்ற வழக்குந் தீராமன்னவர் பகையுஞ் சேரும்
காதுற்ற கண்ணாய் சொன்னேங் காரியஞ் சிதையுமன்றே. (க)

சூரியன் றிசையிற் சோமன் தொடர்ந்துண்ணப்புகர் காலத்தில்
வீரிய மிகவுமுண்டு வேந்தர்களுறவு சேரும்
பாரினில் மழையும் பெய்யும் பாலனை பெறுவாள் பேதை
நாரியர் மணம்பலிக்கும் நன்மைகள் மிகுதியாமே. (உ)

இரவியின்றிசையிற் சேயோன் தொடர்ந்துண்ணக்குரு காலத்தில்
வருபிணி தீரும் வெல்லா வழக்குகள் வெல்லும் பூமி
பரவிய மழைகளுண்டு பார்த்திபர் சகாயமாவர்
விரவினிற் களவுங்காணும் விசேடமாம் பலனுமுண்டே. (ங)

End :

விடவார்த்திசையில் மந்தன் மிகுந்துண்ண மதியின் காலந்
திடமிகு செல்வமுண்டாஞ் சேயிழை மணமும் நேரும்
படு மிகு வியாதி தீரும் பார்த்திபர் சகாயமாகும்
கடுமை சேர் களவுங் காணும் காசினி விளைவுண்டாமே. (எக)

செஞ்சர்ப்பத்திசையில் ராகு சேர்ந்துண்ண ரவியின் காலம்
வஞ்சிக்குச் சுரங்கள் காணும் வந்திடும் கலகந்தானும்
மிஞ்சிய வலைச்சலுண்டு வீணில்லை பொருளுஞ்சேரும்
அஞ்சிய நட்பு நீக்கி யாண்மைகள் மிகவுண்டாமே. (அ௰)

செம்பணி திசையிற் கேது தெரிந்துண்ணவவர்காலத்தில்
வழ்புகள் மிகவுண்டாகி வலுத்திடுஞ் சண்டையாகும்
கெம்பிய பிணியுமுண்டாங் கெடுதிதான் காண்கிறதில்லை
பின்பு நற்றெய்வத்தாலே பேரருள் மிகவுண்டாமே. (அக)

இக்கவி யெண்பத்தொன்று மின்பமாயுணர்ந்துளோர்கள்
தக்கதோர் சுபாசுபங்கள் தாமறிந்துலகத்தோர்க்கு
மிக்கவே நன்மை தீமை விளங்கிடவெடுத்துக்காட்டித்
திக்கெல்லாங்கீர்த்தியுண்டாய்த்திருவருள் பெற்று வாழ்வார் (க)

சத்திய ஞானனந்த தத்துவ பதமுணர்ந்த
வித்தகர் பதத்தில் அன்பு விலகாத நியமம் பூண்ட
பத்திமையுடையோர் பாதம் பற்றி மெய்யருமை பூண்ட
சுத்த நற்பொய்கைநல்லூர் சுப்பையன் சொன்ன நூலே. (உ)

சூரியன் சோமன் செவ்வாய் சொற்புதன் வியாழன் வெள்ளி
காரியுமி ராகு கேது கடவுளொன்பதுபேர்தம்மைப்
பாரினிற் சோதிடத்திற் பார்த்தெடுத்துலகத்தார்க்கு
நேரிதாய்ச் செய்த நூலின் நிர்ணயமறிந்து பாரே. (ங)

ஆகச்செய்யுள் (அச) இரகாரூடம் முற்றிற்று.

கு.பு.—இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 2300 ஆம் நம்பர் பிரதியில் வருணிக்கப்பெற்றுள்ள நூலேயாகும். இப்பிரதியில் ஷை பிரதியிலே காணப் பெறாததாயும் "இரகாருடம்" என்ற பெயர் வாய்ந்ததுமான பகுதி மாத்திரமே காணப்பெறுகிறது. இப்பகுதி எண்பத்தொரு பாடல்களால் அமைந்துள்ளது. பின்னர் இந்நூலினது பயனையும் ஆசிரியரது பெயர் முதலியனவற்றையும் உணர்த்தும் மூன்று செய்யுட்கள் தனித்தவெண் கள் கொடுக்கப்பெற்றுக் காணப்படுகின்றன. அதன் பின்னர் எட்டு ஏடு களிலே "நாமநட்சத்திரம்" என்ற தலைப்பெயருடனே ஒரு பகுதி எழுதப் பெற்றுள்ளது. இதன் ஏடுகள் முற்றும் புழுக்களால் மிகவும் அரிக்கப் பெற்றும் சிறு சிறு துண்டுகளாகவும் முறிந்தும் விழுந்து கிடக்கின்றன வாதலின் உள்ள பகுதி படித்தற்கியலாவண்ணமாயிருக்கிறது. எழுத்துப் பிழைகள் மிகவும் காணப்பெறுகின்றன. இது சோதிட நூலாராய்ச்சி யாளர்க்கு மிகவும் இயன்றியமையாததாகும்.

No. 2417. செயங்கொண்டமாமுனி வளமடல்.

JEYAṄKOṆḌAMĀMUNI VAḶAMAḌAL.

Substance, palm-leaf. Size, 14 × 1¼ inches. Pages, 54. Lines, 5 and 6 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 1-a. The other work herein is Vaḷaiyalūr Naraśiṅgappaiya-rājan Vaḷamaḍal 28-a.

Complete.

A work, in the *Vaḷamaḍal* style, with Ādinātha of Madura for its hero.

By Jeyaṅkoṇḍamāmuni.

Beginning :

செயங்கொண்ட மாமுனி வளமடல்.

கொன்றை முடித்தார்க்குங் கோபாலரானார்க்கு
மன்று படைத்தார்க்கு மாளல்லோம்—என்றும்
மடப்பாவையாரை வசமாகத்தூது
நடப்பாரே தெய்வ நமக்கு.
மாதரிள முலைகள் வாழ்க மனைவாழ்க்கை
நீதி யுலகினெறி நிற்க நின்றியங்குஞ்
சாதி சரா சரங்கள் எல்லாந்தன் மகர
கேதனன்றனோராணைக் கீழ் நடப்பமேலையோர்
ஓதிய வெண்பத்து நான்கு நூறாயிரமாம்
பேதமவையனைத்து பெண்ணுருவோடாணுருவ
யாதி யுலகுதித்த வன்று முதலின்றளவுஞ்
சாதனமாய்க்கூடிவ்ருகின்ற சன்மார்க்க
மோதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந்தாமடங்காப்
பேதையிற் பேதையாரில்லென்று சொல்லுகின்ற
மூதுரையைக் கேட்டேயு மூர்க்கராயோர்ப்பின்றி
மாதர் திறம் பழிக்கும் வன்னெஞ்சக்கள்வராய்க்
கோதையர் பாற் கூடக்குளமாழ்வான்கோரை யெழுந்
தேது கொடு திட்டாந்தமிட்டுரைக்குமென்னேயோ
பீதாம்பரன்றன் பெருந்தேவிமாரிருவர்
சேதாம்பல் வாயூறுந்தேனூறற்றேக்கியதும்
போதாமையாலன்றோ போய்ப்பதினாறாயிரவர்
சீத முலைவெள்ளத்தினிற்றிளைத்ததென்னேயோ.

*   *   *   *

மாதீபமானதுறு மூதூர் மதுரையென்று
மூதூரிரண்டுடையோன் முத்தமிழ்ப்பா நான்கினுக்கு
மாதார மேன்மை யவதாரமெம்மனோர்.
மாதாரக மா மனு நூல் மறை நூலென்
றோதாதுணர்வோன் உலகினுக்கு . . . .

*   *   *   *

சேது பரியந்தஞ் செலுத்துதற்குத்தான் செல்லும்
சாது ரங்கஞ் சூழ்ந்த தனிப்புரவி மீதேறிச்
சோதி நெடுவாளுறை கழித்துத் தோலாத
தீதில் வடமலைப்பாலதென்மாளுவர் முனையில்
. . . . போந்து பொருகளத்துச்
சாதகரும் பாறுந் தசையருந்து செம்பருந்தும்
பூதபிசாசும் புலாலின் சுவை வெறுப்ப
மாதிரங்களெட்டும் வடுப்படுத்து வாகைநறும்
போது புரிந்த புருட கண்டீரவப்பொற்
சாதுசனவசன சங்கிராமசந்தோஷன்

போது சனவசனன் புண்டரீக மார்த்தாண்டன்
சீத களப திலக முக வலையன், சாதி குச சீர்கருண சன்மார்க்கன்
வேதசரிதன் பைபரிநகுலன், மாதுங்கன் மன் துங்கவல்லபனெங்
கேதங் கெடுக்குங்கிரிதுரங்க னிட்டூரன்
நீதி விநோதன் நிபுணதுங்கன் வித்தகனெங்
காதலால் யாம்புகழும் காரனை வாழ்வேந்துரகத ?
ஆதி நாதன்றருள்போற் குளிர்ந்துலகில்
மாதர் முலைத்துகில் போல் வந்தலைக்கும் வகை நீர்
மோதி மதகிடறி மூரிக்கரை மருங்கின்
கேதகை மல்லிகை கிஞ்சுகமஞ்சரி
மாதவி வல்லரி சண்பக மாலதி
பாதிரி புன்னை பராரைமரா மகிழ்

* * * * *

மாதளை முல்லை வருக்கைப்பருக்கனி
சூதங்கரந்தை சுகந்த நிறைந்தன.
சாதி நெருங்கிய சந்தன நந்தன
வீதி புகுந்து விளையாடு மின்னேவென
காதல் விளைக்கின்ற காமமோ காமத்தின்
சேதோமயமோ திருவோ திருவினுக்கு

* * * * *

சூதோ முலையோதுணைக் குரும்பையோ சுமந்து
போதாதெனுமிடையோ போய் நுடங்கும் வஞ்சியோ
யாதோவெனதுயிரோ வென்றுரைக்க நின்னூர்தம்
பாதத்தை யோராது பார்த்தேனைப் பார்த்தனங்கன்
கோபித்தெழுந்துக் கொடுஞ்சிலையை நாணேற்றித்
தாதொக்க வீழ்ந்து குழலொக்கு மைந்தம்பால்

* * * * *

மாதவிப்பூம்பந்தர் மறைந்தார் மறைதலுமே
ஏதோவென்றெண்ணி யானிந்திரபதம் பெற்றிழந்து
போதுறுவார்தம்மைப்போற் போயேகுமுன்று மறத்
தாது வத்தமாதியலைந்தலைப்பட்டாவிதளர்ந்து

* * * * *

End :

வாதைப் பட்டேனை மறுகூடு கூடிடவே
யூதையுடனியங்க வுள்ளமுடன்றயங்க
வாதரவு வெள்ளத்தேயள்ளற் சுழி யழிந்து
போது நெறியறியாத்தாழ்ந்தேனென் புண்ணியத்தால்
மூதுணர்ந்த வள்ளுவனூர் முப்பாலிற் பிற்பாலொன்
றோதிய காமமுழந்து வருந்திறற்
கேதமடலல்லதில்லை யென்றுராதலால்

யானுமதனையே மேற்கொண்டு
மாதரார் செய்திட்ட வல்லைபத்தைத்தீரமனைக்
கேதத்தை விட்டுக் கிழியின்மேற்கே சாதி
பாதத்தையெல்லாமெழுதினேன் பண்டேடுதென்
றூதப்பறக்கு முடற்குப் பொடி பெருகச்
சாதப்படவெண்பாந்தேடி வைத்தவப்பொடியைப்
பேர்தப் பொர்வியத்தடவலாம்பூ னையுமென்
கோதை புதுமலருங் கோத்துடைய வெள்ளொருக்குஞ்
சோதிக்க வைத்தானே தோழனெருமாவிரதி
காதுக்குங் கைக்குங் கழுத்துக்குங் கட்டுவன்
வேதித்தவன் சொன்ன வெள்ளொலும்பிறுபயணம்
போதித்தபோதே பெறலாம் மதுரைநகர்
காதற் புறஞ்சூழ் கரும்பெண்ணை மாமடலைப்
போதக்கொணர்ந்து புரவியாய்ச் சேர்த்ததனைச்
சாதி புரவியிது வென்னத்தாரணியோ
ரிதுக்கிவனுமினி நகுலனென்றுரைப்பக்
காதனோய் செய்தாரைக் காமத்திற் காண்பளவும்
யாதனுவேடமிது வென்ன வித்தெருவே
வீதிவாயெறிவேன் கண்டவூர்தொறு
மாதியாயூர்வேன்மடல்.
ஏறுவேன் நாளை யிவன் நகுலனெனவே
பாறிலாச்சீர் கருணைமானபரன்—சீறி
யதிரப்பொரும் யானையாதிநாதன்றன்
மதுரைப்புறஞ்சூழ்மடல்.

வளமடல் முற்றும்.

கு.பு.—இந்நூல் மதுரையிலிருந்த ஆதிநாதன் என்பவரைப் பாட்டுடைத் தலைவனுகக்கொண்டு இயற்றப்பெற்றதொரு "வளமடல்" என்னும் பிரபந்த விசேடமாகும். இதில் வந்துள்ள 'மடலேறல்' ஆனது ஓர் பெண்ணின்மேல் காமுற்ற ஆண் மகனுல் ஏறப்பெறுவதாகும். இப்பிரதியில் இந்நூல் முற்று முளது. தலையேட்டிற் குறிக்கப்பெற்றிருக்கும் "செயங்கொண்ட மாமுனி வளமடல்" என்னும் இவ்வாக்கியத்தால் நூலாசிரியர் செயங்கொண்ட மாமுனியாவர் என்று தெரிகின்றது. ஏடுகள் அங்கங்கே ஒரு சிறிது சிதைந்துள.

No. 2418. வளையலூர் நரசிங்கப்பையராசன் வளமடல்.

VAḶAIYALŪR NARAŚIṄGAPPAIYARĀJAN VAḶAMAḌAL.

Pages, 54. Lines, 6 on a page.

Begins on fol. 28-a of the Ms. described under No. D. 2417.

Complete.

A work, in the *Vaḷamaḍal* style, with Vaḷaiyalūr Naraśiṅgappayyarājan for its hero.

Beginning :

நரசிங்கப்பையன் வளமடல்.

சுரலோகம்போர் வேடுரந்தரிகஞ் செல்க
நரலோகங் காம வேளுமமே சொல்க
வரலோக மாநாக லோகமதுவேன் கால்
விரலூறு செந்தேனை வீழ்ந்தருந்தி வாழ்கப்
புருடரையு மாதரையும் போரம்பாற்கூட்டி
யருடரணி யுண்டாக்குமாடல் வேணிற்கத்
திருவிலி காணீங்கள் செகக்கர்த்தா வென்போ
னுருவிலி யென்பீரே யுருவிலிதானூர்காண்
கரமண் பிசைந்து கடாதிகள் செய்வோன் போற்
பிரமனைபடைப்பதவனை பின்னிருந்தே கண்டீர்
பரமேட்டி செய்து செய்து பாரிலிடும்போது
தரைமேட்டில் வீழ்ந்தவரோ சப்பாணி கூனை
ரிது முத மாதரிதழ முதமுண்ணு விரதம்
அனுட்டித்துடலை விற்று நோய் கொள்வீர்

* * * * *

பிரணையமாங் காற்றைப்பிடித்துக் காகத்
தருமையுட னோட்டி யடைப்பவரைப்போலே
யொருதண்டு மோர்கடமுங் கொண்டொருமக்கும்
பிரபஞ்சமில்லையேல் பின்னைமனையேது
கரபத்திரமேது கானற்சலத்தைதப்
பருகலோ வந்தீர் பிரப்பிரமம் போமோ.
வருமோ நீரேப்படிதான் வந்தீர் சந்நியாசந்
தருவோனு நீருமங்கடாயார் வயிறு
விரிய வெடித்தீரோ விலாவிலுதித்தீரோ
புருவநடுவிற் சிவனைப்போலே வந்தீரோ.

* * * *

தெரி சொற்றமிழ் நரசிங்க மகிபாலன்
புரிசத்திரமெல்லாம் பூசஞ்சுதை மண்போல்
திருமண்புனைந்து நெற்றிதேயுமையங்காரே
பரி பாடைபத்தொண்பதாம் பாடைதானோ
அரவையநந்தாழ்வானெனபீ ரனுமன்
கருடனென்றுற் கண்ணைவிந்து போம் போற்பெரிய
திருவடிகள் சின்னதிருவடிகள் என்பீர்

* * * *

பரியங்கமேலிருக்கும் பாவை யர்ங்கத்தில்
தெரியங்கமெல்லாந் தெரிசிக்கும் போதே
யரைவசமாங்கொங்கை மதயானை யிரண்டுங்
கரவசமாம்போர்துடம்பு கால் வசமாகுந்

திரை வசதியால் கலவி செய்திடிலானந்தம்
பரவசமாமத்தனையும் பார்த்து விடுமின்றே.

* * * * *

விரையும் பசுந்தமிழும் வெண்சங்குஞ் செந்தேன்
திரையு நிறைதரு தென் கன்னி வேந்தன்
கருணி படைப்போர் செய் கருதலரில்லாமற்
பரணி யொழித் தெல்லாப் பிரபந்தமுங் கொண்டோன்.
அரிவையர்வேளாகும் **அப்பையதீரன்.**

* * * * *

நரசிங்கராசனென நானிலங் கொண்டாட
வரிசை பெருகி வளர்ந்த பெயரான்

* * * * *

பரசிய கோதைப்பதி வளர்த்திரு
நரசிங்கமூர்த்தியை நாளும்பணிவோன்

* * * * *

குருக்கத்த மென்பூங் கொடியின் மறைத்தார்
விருக்கிட்டு மூர்ச்சித்து வீழ்ந்து கிடந்தேன்
தெரிக்கு மகஞ் செய்து தேவேந்திரபட்டந்
தரிக்கு மகுடந்தவறு பட்டதாமென்ன
சுரிமுக வாவி சூழ் சோலையில் நான்பட்ட
பருவரலை யார்க்குப்பகர்வேன் மதனன்.

* * * * *

End :

இருந்தைபோல் கருக்கு மிந்த மையனுக்கு
அரிந்த பனைமடலேயாதியென்று கண்டேன்
அருந்தாதொழுகும் மலர்மாதவியிற் புக்க
திருந்திழை யென்கண் வழியே சென்று மனத்துள்ளே
இருந்தமையால் அவ்வடிவையெல்லா மெடுத்து
தெரிந்தமயன் மின்னுட்டிலோத்தமையைச் செய்தோன்
அருந்தமையனாக வவன்றம்பிநானாகப்
பரிந்து கிழிமேற் பழுதகலத்தீட்டிப்
பொருந்தமயானத்தெனும்பும் போதாமலோடிக்
கரந்தை யணிவாரிடத்துங் கைக்கடனாய் வாங்கி

* * * * *

கருக்கே கலனையாய்க்கட்டுப் பரியேறி
உருகு களிப்பாலே யுடல் பிளந்த புண்வாய்
திருகுகளிப்பாலே போற்சிந்திவயப் ?
பெருமிதஞ் சேர்நாரசிங்கன் பிரியமுறுங் கோதைத்

தெருவுதொறும் மன்றுதொறுஞ் சென்று யானந்த
வரிவளையாளூர் வேண்மடல்.

முற்றும்

விக்கிரமஞூ பங்குனிமீ 2உ வளமடல் எழுதி நிறைவேறியது.

(கு. - பு.)—

இந்நூல் வலையலூர் " நரசிங்கப்பையராசன் ", என்பவர்மீது இயற்றப்பெற்றதொரு " வளமடல்," என்னும் பிரபந்த விசேடமாகும். இது இன்னாரால் இயற்றப்பெற்றதென்று ஓரிடத்துங் குறிக்கப்பெறவில்லை. இப் பிரதியில் இந்நூல் முற்றும் உளது. இதில் ஒவ்வொரு சாத்திரக்காரர் களையும் விளித்து உலகில் காமவின்பமே மிக்க சிறப்புற்றதாகும் என்று விளக்கிக்கூறப்பெற்றுளது. இதில் உள்ள மடலேறல் ஆண்மகனுலே றப்படுவதாகும். இந்நூலின் பாட்டுடைத்தலைவனைப் " படைப்போர் செய் கருதலரில்லாமற், பரணி யொழிந்தெல்லாப் பிரபந்தமுங்கொண் டோன்," " பாசிய கோதைப்பதி வளர்த்திரு நரசிங்க மூர்த்தியை நாளும் பணிவோம்," என்றதாகச் சிறப்பித்துக் கூறப்பெற்றிருத்தலால் அவன் மிகவும் பிரதாபம் வாய்ந்தவன் என்றும், நரசிங்கமூர்த்திக் கடவுளை வழிபடுகடவுளாகக்கொண்டவன் என்றும் விளங்குகிறது.

No. 2419. அகத்தியர் வைத்தியச்செந்தூரம் முந்நூறு.
AKATTIYAR VAIDDIYACCENDŪRAM MUNNŪṚU.

Substance, palm-leaf. Size, 15¾ × 1¼ inches. Pages, 87. Lines, 7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 1-a. The other works herein are Akattiyar Vaiddiyam aṛunūṛu 45-a, Vāiddiyacintamaṇi Veṇpā Nālāyiram. Dhātunidānam 125-a, Akattiyar Vaiddiyam nūṟṟumuppadu· 289-a, Irasavargam Padārthaguṇacintāmaṇi 293-a.

Complete.

Same work as that described under No. R. 149-c.

இந்நூல் மூவருடக்காடலாக்கு 149-c நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உளது. பாடபேதம் உள. எழுதின முறை தெளிவாக விருக்கிறது. பிழையுள. ஏடுகள் சிதைந் துள. தலையேட்டில் " வைத்திய சிரோமணி," என்று ஒரு பெயர் குறிக்கப்பெற்றுளது.

No. 2420. அகத்தியர் குருநூல்வைத்தியம் அறுநூறு.
AKATTIYAR GURUNŪL VAIDDIYAM AṚUNŪṚU.

Pages, 160. Lines, 6 on a page.

Begins on fol. 45-a of the Ms. described under No. D. 2419.

Almost complete.

Same work as that described under No. R. 948-a.

இந்நூல் மூவருடக் காடலாக்கு 948-a நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூலின் 1 to 531 பாடல்களேயிருக்கின்றன. அப்பிரதிக்கும் இப்பிரதிக்கும் அநேக விடங்களில் பாடபேதங்கள் காணப்படுகின்றன. ஏடுகள் எல்லாம் புழுக்களால் மிக வரிக்கப்பெற்றுச் சிதைந்திருக்கின்றன. எழுத்துப்பிழைகள் உள.

No. 2421. வைத்தியசிந்தாமணிவெண்பா நாலாயிரம்.

VAIDDIYA CINTĀMAṆI VEṆPĀ NĀLĀYIRAM.

Pages, 320. Lines, 6 and 7 on a page.

Begins on fol. 125-a of the Ms. described under No. D 2419.

Incomplete.

Same work as that described under No. 948-d.

End :

கர்ப்பவாலக்கிரிகை.

கருப்பம் மாதம் முதற்றிங்களில் வயிறு நொந்தால் தாமரைப்பூவில் தாதுவும் அல்லிப்பூவில் தாதுவும் நீரில் அரைத்துப் பாலிற் குடிக்கத் தீரும். இரண்டாந்திங்கள் வயிறு நொந்தால் காலுங்கையும் நொந்து மிடறு நொந்திருக்கும். இதுக்குச் செங்கழுநீர்க்கிழங்கு நீரிலரைத்துப்பாலில் குடிக்கத்தீரும்.

* * * *

ஏழாந்திங்கள் வயிறு நொந்தால் இதுக்கு மிளகு கண்டு சர்க்கரையும் நெல் பொரியும் நீரில் அரைத்துப் பாலிற் குடிக்கத்தீரும். எட்டாந்திங்கள் நொந்தால் காலுங்கையும் நொந்து மேல் நோக்கி இருக்கும். இதுக்கு மிளகுந்தாமரைப் பூவின்தாதுவும் திப்பிலியும் நீரில் அரைத்துப் பாலில் குடிக்கத்தீரும். ஒன்பதாந்திங்கள் வயிறு நொந்தால் பூரசம்பாலும் அதின். . . . . . .

* * * *

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக்காடலாக்கு 948-d நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் ஷெ பிரதியில் இல்லாத பகுதியுங் காணப்படுகிறது. ஆயினும் இறுதியில் அரைகுறையாகவே விடுக்கப்பெற்றிருத்தலின் இப்பிரதியிலும் இந்நூல் முற்றுப்பெறவில்லை. சில சில விடங்களில் உரையுங் கலந்து எழுதப்பெற்றுள்ளது. இதில் பல்வேறு வகையான நோய்களுக்கும் சிகிச்சை செய்யு மாறு நன்கு விளக்கப்பெற்றுளது. அங்கங்கே சில சில பகுதிக்குரிய பாடல்களின் எண்கள் சில விடத்துத் தொடர்ந்தும் தொடராமல் தனித்துங்கொடுத்து எழுதப்பெற்றிருக்கின்றன. நூல் முற்றும் உள்ள பிரதி எங்குளதோ. எழுத்துப் பிழைகளிருக்கின்றன. ஏடுகள் சிதைந்துள.

No. 2422. அகத்தியர் வைத்திய சூத்திரம் நூற்றுமுப்பது.
AKATTIYAR VAIDDIYASŪTTIRAM NŪṞṞUMUPPADU.

Pages, 7. Lines, 7 on a page.
Begins on fol. 289-a of the Ms. described under No. D 2419.

Incomplete.

Contains 1 to 39 Stanzas only.

A Tamil metrical rendering of the Sanskrit work on Medicine by Śrī Vāgbhaṭa.

Beginning :

அகத்தியசுவாமியருளிச் செய்த வைத்தியம் நூற்றுமுப்பது.
ஆக்கிராணம் : தலைவலிக்கு : வாதத்துக்கு : எரிவாதத்துக்கு :

ஆரியமாம் வாகடத்தினுட்பொருளையாராய்ந்து
சீரியதாஞ் செந்தமிழாற் செப்பவே—கூறியதா
யுள்ள நிதான மதை யோதவருள் பெருகும்
வள்ளலே யென் மனத்து வா. (க)

வாவென சேத்துமத்தின் வந்த இரந்திகளும்
போவெனவே நாவிலிடப்போகுமே—பாவனையாய்
வாக்கான பீனிசமு மற்றுஞ் சளிதீர
ஆக்கிராணம் பண்ணுமரத்தை. (உ)

அரத்தை சதகுப்பி சுக்கான நொச்சிச்சாற்றில்
அரைத்திழையக் காய்ச்சி யருந்த—வருத்தத்
தலைவலியும் நீரேற்றந் தன்னுடனே வாதங்
குலை குலைந்து போகுமெனக்கூறு. (ங)

* * * *

காணும் புனல் முருங்கை கழற்சிக் கோடிப்பருப்பு
பூணுங் கொத்தானுடனே போந்த சுக்கும்—வேணுமென்றே
தண்ணீர்க் கஷாயம் பருகீர் பருகியபின்
விண்ணிலண்டவாதம் போம் விட்டு. (ச)

* * * *

End :

விஷத்துக்கு.

மனமே கையாந்தகசைச்சாறு மகிழ் நசியங்
கனமாய் விஷந்தீருங்காண்—சினமாக
வுப்பரைத்து வெந்நீருடனிடவே வாந்திபண்ணிற்
தப்பா விஷங்கள் சமிக்கும். (ஙக)

இந்நூல் வடமொழியிலிருக்கும் வாகடத்தைத் தமிழின் மொழிபெயர்த்ததென நூலாரம்பத்து முதற் செய்யுளால் அறியக்கிடக்கிறது. வெண்பாவால் அமைந்துளது. அகத்தியர் இயற்றியதாகக்குறித்துளது. இந்நூலின் நூற்றுமுப்பது செய்யுட்களில் இப்பிரதியில் 1 to 39 செய்யுட்களேயிருக்கின்றன. புழுவரிக்கப்பெற்றிருக்கிறது.

No. 2423. இரஸவர்க்கம் : பதார்த்தகுண சிந்தாமணி.
IRASAVARGAM : PADĀRTHA GUṆA CINTĀMAṆI.

Pages, 27. Lines, 7 on a page.
Begins on fol. 293-a of the Ms. described under No. D 2419.

Incomplete.

Contains 1 to 152 Stanzas only.

Same work as that described under No. 1958.

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1958-வது நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் 1 to 152 பாடல்களே இருக்கின்றன. ஏடுகள் சிதைந்துள. எழுத்துப்பிழைகள் காணப்படுகின்றன. பின்னர் 5 பக்கங்களில் சுக்கு லேகியம் முதலாய் மேகசஞ்சீவி யெண்ணெய் இறுவாகச் சில வைத்திய முறைகள் எழுதப்பட்டுள. அதற்குப் பிறகு சில வெற்றேடுகள் கோக்கப்பட்டுள.

No. 2424. அகத்தியர் வாகடம் வசனம்.
AKATTIYAR VĀKAṬAM PROSE.

Substance, palm-leaf. Size, 15 × 1½ inches. Pages, 638. Lines, 7 on a page Character, Tamil. Condition, very much injured. Appearance, old.

Begins on fol. 1-a. The other work herein is Anubhava Vaiddiyamuṟai 320-a.

Complete.

Seems to be a prose rendering of a metrical work on Medicine by Akattiyar.

Beginning :

வீரப்ப முதலியார் வாகடம்.
அகத்தியர் அருளிய வாகடம்.

காச விஷமுட்டித்தைலம். விஷமுட்டித்தைலம். கோவிந்தன் எழுதினது :—

எட்டிப்பழஞ்சாறு ௪ வ எருக்கன் சமூலஞ் சாறு .௪ வ. எலுமிச்சம் பழச்சாறு ௪ வ. எருக்கம்பட்டைச்சாறு ௪ வ. அமுக்கிரு இலைச்சாறு ௪ வ. ஆமணக்கிலைச்சாறு ௪ வ. நொச்சியிலைச்சாறு ௪ வ. இலைக்கள்ளிச்சாறு ௪ வ. நல்லெண்ணெய் ௲ வ. பசுவின்பால் ௲. வெள்ளுள்ளித்தைலம் ௪ வ. இவையெல்லாம் ஏகமாய்க் கூட்டிப் பெரிய சாலில் வார்த்துக் காய்ச்சி

நீரெல்லாஞ் சுண்டவிட்டு. இது கற்க மருந்து. தேவதாரம் அதிமதுரம் செங்கலவக் கோஷ்டம் சைந்தவ லவணம் இலவங்கம் இவைகள் வகைக் குப்பலம் (௨) கொண்டு வந்து இடித்துச் சூர்ணம் பண்ணிக்காய்ந்த தைலத் திற்போட்டுக் கிளறிக்காய்ச்சிப் பதத்திலிறக்கி வடித்துவைத்துக்கொண்டு இந்தத் தைலம் மேலுக்கிட்டுப் பிடிப்பித்துவர வாதரோகம் (அ௰ச) எண்பத்து நாலு வகையும் சர்வ ரோகங்களும் தீரும்.

* * * *

End :

உத்தாமணி முசுமுசுக்கை முடக்கற்றான் செம்முள்ளி கருசலாங்கண்ணி பொன்னாங்கண்ணி சிறுகீரை தழுதாழை ஆடாதோடை சங்கிலை சங்கங் குப்பியிலை தகரையிலை செருப்படை சிலத்திருயகம் கொட்டைக்கரந்தை கோழியவரை துளசி மணத்தக்காளி . . . .
தண்ணீர்விட்டான் கிழங்கு புளியறணைக்கிழங்கு வகைக்குப் பலம் அரை (௨) முள்கருணைவேர் செங்கத்தாரிவேர் சித்திரைமூலம் கீரைவேர் வகைக்கு பலம் (வ) கால். கடை மருந்து—சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, திப்பிலி மூலம், மிளகு, கண்ட திப்பிலி, வெந்தயம், செவியம், ஓமம், நெல்லிமுள்ளி, கடுக்காய் (௰௨) பணிரண்டு. வெள்ளைப்பூண்டு (பூ௩) பலம் மூன்று மற்றவை வகைக்குப் பலம் வ. . . . .

அகத்தியர் முன்னூறு.

பூதலத்தில் தென்பொதிகை தன்னில் வாழும்
பூரணமேயென் குருவே சிவனேயையா
மாதவத்தால் அஷ்டசித்தியெட்டும் பெற்ற
வரிசையினால் வைத்திய நூல்வகையாய்ச் சொல்வேன்
போதகத்தின் முகத்தானை கடைக்கோட்டானைப்
புழுக்குழியில் வீழ்ந்தானைப் புதல்வன்றன்னைச்
சாதகமாய் மனமடக்கி யறிவிற் கூட்டித்
தற்பரமாய் நின்ற கணபதி காப்பாமே (௧)

கணபதியின் பதத்தாலே கீழ்முக்கோணம்
கரையடங்காப்பிறப்பான கடவுளாரைமாக்
கணபதியைக் குண்டலியிற் கண்டு தேறிக்
கனலெழுந்து வாயு பந்த புரியட்டத்தார்
கணபதியே பிறப்பிறப்பு ஆண்பெண்ணாகிக்
கரை கொள்ளாநாதமொடு விந்துவாகிக்
கணபதியைப் பெற்றெடுத்த விந்து வாசல்
கலங்குகின்ற விடு குறியுங் காணுங்காணே. (௨)

* * * *

போச்சப்பா மேகமென்றதெல்லாம் போகும்
பூண்டதொரு நீரிறக்கம் தீருந் தீரும்
ஆச்சப்பா சீந்தியுடை சக்கரையினாலே
ஆச்சரியம் அத்திசுரதோஷம் போகும்

போச்சப்பா நாடிதனிற் ரேஷமில்லை
பிரபலமாய்த் தேகத்தைக் குளிர்ச்சிபண்ணும்
வாச்சப்பா வைத்தியத்தின் சக்கரைஷயச் சொல்வார்
வாய்ப்பேச்சே வைத்தியந்தான் வணங்கிக்கேளே.

பருத்தித்தோட்டம் சுப்பராயலு கையெழுத்து.
அட்டவணை—சங்கதிராவகம் கஅக ஆம் ஏடு.

* * * *

வில்வாதி லேகியம் வில்வாதி ரஸாயனம் கஅசு ஏடு.

இந்நூல் அகத்தியர் வாகட நூலின் வசனமென்று தோன்றுகின்றது. இதில் அநேக விதமான நோய்களையும் நீக்கற்குரிய பல்வேறு வகையான மருந்துகளுடைய ஆக்கும் முறைமையினையும் பிரயோக முறைமையினையும் நன்கு எடுத்து உணர்த்துவது. இறுதியில் "அகத்தியர் முந்நூறு" என்றதான ஒரு தலைப்பெயருடன் சில பாடல்கள் எழுதப்பெற்றுள. மிகுதியான பகுதி முற்றும் வசன நடையிலேயேயமைந்துளது. ஏடுகள் மிகவும் சிதலுற்றும் முறிந்துங் கிடக்கின்றன. எழுத்துப்பிழை சொற்பிழைகள் மிகுதியாகவிருக்கின்றன. இறுதியில் இந்நூலில் வந்துள்ள மருந்துகளுடைய முறை இன்னின்ன ஏடுகளில் வந்துள என்று அறிவிக்கும் ஒரு அட்டவணையும் எழுதப்பெற்றுக்கோக்கப்பெற்றிருக்கிறது. இடையில் 116 to 118, 162 to 170 ஆன ஏடுகள் இல்லை.

No. 2425. அநுபவவைத்தியமுறை வசனம்.
ANUBHAVA VAIDDIYAMUṚAI PROSE.

Pages, 52. Lines, 5 on a page.

Begins on fol. 320-a of the Ms. described under No. D 2424.

Complete.

Similar to the work described under No. R. 566.

Beginning :

கணபதி யென்றிடக்கலங்கும் வல்வினை
கணபதி யென்றிடக் காலனுங் கைதொழும்
கணபதியென்றிடக்கருமமாதலால்
கணபதி யென்றிடக் கருமமில்லையே.

வாதம் (அடிக்கு) எண்பதுக்கும் எண்ணெய் :—

கழற்சிக்காயிலைச்சாறு படி (க) வெங்காயச்சாறு படி (க) எண்ணெய் படி (க) ரஸகற்பூரம் வி. வராகனெடை 2. நேர்வாளம் சுத்திபண்ணினது பலம் இ. (மெழு)கு பதமாகக் காய்ச்சிக் கறண்டி எண்ணெய் கொடுக்கச் சகல வாயுவும் அண்டவாமுதம் தீரும். பத்தியம் இச்சாபத்தியம்.

பீனிசத்துக்குப் பாதம் எண்ணெய் :—பாதங்கொட்டை ஒரு சிராங்காய் உடைத்துப்பருப்பெடுத்து இராத்திரி ஊறப்போட்டு விடியகாலம் எடுத்து ஊறினபருப்பின் மேலிருக்கிற தோலை [நல்லா] நன்றாய்ச் சொரண்டி போட்டு வெந்நீர்விட்டுப் பஞ்சு போல் பருப்பைத்தட்டி வெள்ளைத்துணியில் வைத்துப் பால்பிழிந்துகொண்டு அப்பாலைக் கறண்டியிலூற்றிக் காய்ச்சத் தண்ணீர் நன்றாய்ச் சுண்டி எண்ணெய்பதத்தில் எடுத்து ஆற்றிச் சீசா வில் வைத்துக்கொண்டு இரண்டு வேளையும் ௩ துளி மூக்கில் விடத்தீரும். பத்தியமில்லை. ௩ நாள் விடவும்.

End :

வீரகன்னியென்னும் பேயின்குணம் :— [ஒணர்த்தும்] (உலர்த்தும்) வயிறு கழியும்–சீறியழும். உடம்பு கனத்திருக்கும். துணக்கென வலிக் கும். மயல் விகாரம் பண்ணும். இதுக்குப்பலி : வெறுஞ்சோறும் மீனும் இறைச்சியும் கொள்ளட்டையும் நெய்யும் பெட்டைக்குஞ்சும் வேஷ்டியும் பாக்கு வெற்றிலையும் புதுச்சட்டியிலிட்டு தலை சுற்றிச்சுடலைக்கரையில் வைப் பது. ஈசுவரன் கோவிலுக்கு நெய் விளக்கு வைக்கவும் இதுக்கு யந்திரம்.

* * * *

(கு. - பு.)—

இந்நூல், பலவகை நோய்களை நீக்கற்காம் மருந்துகளுடைய முறை யினையும், பேய்கள் பிடித்துத் துன்புறுவார்க்கு மந்திரிக்கும் முறைமை யினையும், இன்னும் தேள் விஷம் முதலான விஷங்கட்கும் மந்திரிக்கு மாற்றின் முறைமையினையும் நன்கு எடுத்து உணர்த்துகின்றது. இறுதி யில் நாடி பரீட்சையையுணர்த்தும் எட்டுப்பாடல்கள் எழுதப்பெற்றிருக்கின் றன. ஏடுகள் சிதைந்திருக்கின்றன. பிழைகள் உள.

No. 2426. வைத்தியநூல்.
VAIDDIYANŪL.

Substance, palm-leaf. Size, 15¼ × 1¼ inches. Pages, 40. Lines, 7 on a page Character, Tamil. Condition, very much injured. Appearance, old.

Begins on fol. 1-a. The other work herein is Padārthaguṇacintāmaṇi of Teraiyar 23-a.

Incomplete.

Similar to the work described under No. D. 1976.

Beginning :

வைத்திய சாத்திரம.

நாடி பரீக்ஷையறியும் விதம்:—

நாடியழகிய நூலை . . . . யறிவுடன் கேட்கச் செப்புவன்யானே
வாதநாடி வகுப்பைச் சொல்லின் மோதுதலின்றி முயன்ற நடையாம்
பித்தநாடி பிசகற நேர்ந்து வொத்தநீரட்டைபோலோடி நிற்கும்
ஐயநாடிய தனடைகேட்கிற்றுய்யதவளை போற்றெங்கிக்குதிக்கும்
வாதநாடி வலுப்பேறி நிற்கிலுதைய நோவு முலாவி நிற்கும்
பித்தநாடி பெருத்து நிற்கில் மெத்தவும் வேட்கை மேதை செய்யும்
ஐயநாடியது பெறநிற்கிலுய்யா ரென்றே யுகந்தறிவீரே (க)

சுரமே நச்சுநாடி துடிப்பு நாடி . . . . கரமேலேறியக்கரத்துக்கேண்மோ
மூளையிற் சுரங்கள் முயன்று குதித்திடில் நாளினு நாடி நவின்ற பித்தமாம்
அத்தியிற் சுரங்களமர்ந்து நிற்கினு மெத்தவு நாடியோங்கிப்பதறிடும்
தசையிற் சுரங்கள் தானேயுழன்றிடில் கையில் நாடியழன்று பித்தமாம்
நாடியேங் . . . கு . . லோடியாடி யுகந்த பித்தமாம்
தோலில் வெதுப்புத் தொங்கி நின்றிடில் காலநாடிகனமிகுபித்தமாம்.

(உ)

சுரமே தணியாத தொகுத்த நாடிகேள்
உரமிலே மெத்தென வோடி நின்றதே
கைபிடிநாடி காண்கையின்னம்
மெய்குணமாதே விளம்புவன் கேண்மோ.
அனில நாடி யதுங்கி யியங்கிடில்
எனிலோர் பிணிகளியல்புடன்மீளும்
ஊதையும் பித்துமொக்க நடக்கில்
மேதை செய்யும் விளங்கிய நோதல்
ஐயும்பித்து மதுவேயியங்கிடில்
மெய்யே யெட்டில் விளங்கத்தீரும்.

* * * *

End :

எந்தவித குளிர் காய்ச்சலுக்கு மருந்து :—

வெள்ளைப்பாஷாணம் அவரைக்கொட்டைகனமாகச் சில கொண்டு எலுமிச்சம் பழத்தை இரண்டாக வகிர்ந்து விதையை நீக்கிப் பாஷாணத்தைச் செருகி இரண்டு வகிரும் ஒன்றுக மூடிச் சீலைமண் செய்து உலர்ந்தபின் குக்குடபுடம் போட்டு எடுத்துப் பிறகு வேப்பீர்க்கும் சிறு கீரை வேரும் பற்பாடகமும் குடி நீரிட்டு வெள்ளைப்பாஷாணம் வி. வராகனெடை (க) கற்காவிக்கல் வி. வராகனெடை (ரு) இவ்விரண்டையுங் கஷாய நீர் விட்டரைத்து உழுந்து பிரமாணம் குளிகை செய்து நிழலில் உலர்த்தி இதிலொரு குளிகையை வேப்பீர்க்குச் சாற்றிலே சீரகம் கூட இடடரைத்துக் கொடுக்கத் தீரும். இரண்டு நாள் கொடுகக எந்த வித குளிர் காய்ச்சலானுலும் நாலா முறை முதலாகத் தீரும். சத்துவமில்லாதவனுக்காகாது. . . . வசுரமான பின் கொடுக்கவும். இதனுல் வீக்கம் பிறவாது. கழற்சிக்காயத்தனை வெல்லத்தில் மூன்று துளி கள்ளிப்பால் விட்டுக் கொடுக்கக் குளிர் காய்ச்சல் விடும். குளிர் வந்த வேளையில் கொடுக்கவும். தீரும். நாள் மூன்று கொடுக்கவும்.

நாராயண தைலம் :—முன்னைமலை கலக்கி பாதிரிவேர் வேப்பம்வேர் முதியான் கூந்தல் அமுக்கிரு சிறு வழுதியிலை கண்டங்கத்திரி நெருஞ்சில் சிற்றுமுட்டிவேர் முட்டி குதிரை வாலி சாரடை வேர் ஒரொன்று பலம்(ம) பத்து இடித்து எட்டு மரக்கால் தண்ணீர் வார்த்து நாலொன்றுய்க் காய்ச்சி வடித்துச் சதகுப்பை தேவதாரம் சடாமாங்கிசி சைலேயம் சிற்றுமுட்டி.

சந்தணம், தகரம், கோட்டம் சஞ்சாசம் ஏலம் இலவங்கம் இலவங்கபத்திரி நாகப்பூ சிற்றரத்தை அமுக்கிரு . . . . இந்துப்பு ஒரொன்று ஒரு பலம் பசுவின் பால் ஒரு தண்ணீர் விட்டான் சாறு சஉ நல்லெண்ணெய் உஉ விளக்கெண்ணெய் உஉ புங்கெண்ணெய் உஉ வேப்பெண்ணெய் உஉ இலுப்பெண்ணெய் உஉ எல்லாங்கலந்து காய்ச்சிப்பதத்தில் வடித்துக் கொள்ளவும். இதற்கு கசவாதம் சர்ப்பவாதம் . . . . .

(கு. - பு.)—

இந்நூல் பல வகையான வியாதிகளையும் விஷங்களையும் நீக்கற்குறிய அநேக வகையான நன்மருந்துகளையும் எடுத்துணர்த்துவது. முதலில் கையில் நாடிகளைக்கொண்டு வியாதிகளைப் பரீக்ஷிக்குமாற்றை விளக்கும் சில பாடல்களும் உரையில் அவற்றின் விளக்கமும் எழுதப்பெற்றிருக்கின்றன. அப்பாடல்கள் இன்னுரியற்றியதென்று நன்கு புலப்படவில்லை. ஏடுகள் பல மிகவுஞ் சிதலுற்றும் ஒடிந்தும் இரந்தபாதங்களுடனும் காணப்படுகின்றன. படித்தறியலாவண்ணமாயுளது. எழுத்துப் பிழைகள் உள. இறுதியில் சில வெற்றேடுகள் கோக்கப்பெற்றிருக்கின்றன. நூல் இத்துணைத்தென்று விளங்கவில்லை. அரைகுறையாக விடுக்கப்பெற்றுள்ளது

No. 2427. தேரையர்பதார்த்தகுண சிந்தாமணி.
TĒRAIYAR PADĀRTHAGUṆA CINTĀMAṆI.

Pages, 240. Lines, 7 on a page.
Begins on fol. 23-a of the Ms. described under No. D. 2426.

Incomplete.

Contains 1 to 1051 Stanzas.

Same work as that described under D. No. 1957.

Beginning :

தேரையர் அருளிச்செய்த இரஸ வர்க்கத்திரட்டு :
பதார்த்தகுண சிந்தாமணி
காப்பு.

பாரில் மனிதர்க்குப் பதார்த்தமுடன் மூலிகையும்
நீருலவு செந்நெனி கழ்ந்திடவே—சீரிலகு
செந்தமிழால் யானுரைக்கச் செல்வ விநாயகனுங்
கந்தனு மேயென்நாவிற் காப்பு.
காப்புகலை வாணி கயிலாச பார்பதியும்
சேப்புந் திருமகளாஞ் செல்வதியு—மூப்பி
லாதி . . . . . மாதியுமை நாயகியும்
நீதி யாமெந்தன் வாய்நின்று. (உ)

* * * * *

தீத்த வெல்லாந்திரண்டவை யந்தேனொழிய
கைத்த வெல்லாம்பித்தம் புடொலொழிய—ஒத்த
புளிப்பெல்லாம் வாதம் பொய்யல்ல மெய்யாம்
ஒளி திகழு நெல்லி யொழிய. (உ)

குறிஞ்சிநிலம் :

* * * *

தருவினிற் செடிகள் கேசரங்கள் பூக்கொழுந்திவ்வெல்லாம்
அரிவையே தின்றபோது . . . . . ஞ் சாமந்தன்னில்
மருவுமாயுருவேத நல்வேதம் வகுத்திடும்படி யீதென்று
குருபரனடியைப் போற்றுங் குறு முனியுரைத்ததாமே. (மிகூ)

பஞ்சபூதத்திரட்டு மண்குணம் :

* * * *

(அ)

* * * *

* * * * * (௲௪மிகூ)

End :

செவ்வகத்தி : கல்லத்தி : கருங்காலி :
பொருமிய மேகச்சூடும் பொங்கிய மூலந்தீரும்
செருமிய செவ்வகத்தி திடந்தரு கல்லித்திக்கு
முருமிய கருங்காலிக்கு முலர்த்திய மேகந்தீரும்
தருமிது பன்னீருக்குத் தாகமும் வெட்டைபோமே. (௲௫0)

நறுவிவெள்வேல் முசிலே வெட்டைபோம் நறுவிலிக்கு
வெறித்திடும் பெரும்பாடெல்லாஞ் சட்டைபோங் குருதிவெள்வேல்
தணித்திருங்கிராணி மூலந்தெட்டையாம் புவியிற் பித்தந்
தெற்றிடுமதுரமாகும் பட்டையாம் முசிலேமூலம் பலபலவியாதி
போமே. (௲௫க)

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1957-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில், அப்பிரதியிலும் அச்சுப்பிரதியிலும் காணப்பெறுத சில பாடல்கள் விசேடமாகக் காணப்படுகின்றன. பாடபேதங்கள் உள. இப்பிரதியிலே இந்நூலாசிரியர் குறு முனியை யெடுத்துச் சொல்லியிருக்கின்றார். அன்றியும் இதிலிருந்து இதனை வடமொழியிலிருந்து செந்தமிழின் மொழி பெயர்த்துக் கூறிய வரலாறும் புலப்படுகின்றது. "தேரையர் அருளிச்செய்த இரஸவர்க்கத்திரட்டு : பதார்த்த குண சிந்தாமணி" என்றவித் தொடர் மொழிகள் தலையேட்டிற் காணப்படுகின்றனவாதலின் இதனைத் தேரையர் இயற்றிப் போந்திருக்கலாமென்று தோன்றுகிறது. இப்பிரதியில் 1 முதல் 1051 பாடல்கள் காணப்படுகின்றன. இப்பிரதி வைத்திய நூலாராய்ச்சியாளர்க்கு மிகவும் இன்றியமையாததொன்றாகும். ஏடுகள் பல அடியோடு சிதலுற்றும் முறிந்தும் கிடக்கின்றன. படித்தற்கியலாவண்ணமாய் அத்துணை சிதைந்துள்ளது. எழுத்துப் பிழைகள் மிகக் காணப்படுகின்றன. கிரந்தபாதமுள.

No. 2428. சீவகசிந்தாமணி உரையுடன்.
JĪVAKACINTĀMAṆI (WITH COMMENTARY).

Substance, palm-leaf. Size, 13¾ × 1¼ inches. Pages, 736. Lines, 8 and 9 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

Contains 1 to 5 Ilambakas only.

Same work as that described under No. D 102.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 102-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். இப்பிரதியில் இந்நூல் உரையுடன் ஆதியிலம்பகம் முதல் ஐந்தாவதான பதுமையாரிலம்பகத்தின் 244-ஆம் பாடல் வரையுளது. ஆறுவதான கேமசரியார் இலம்பகத்தில் 142—145 ஆகிய இந்நான்கு பாடல்கள் மாத்திரம் உள. எழுத்துக்கள் தெளிவாக வெழுதப்பெற்றிருக்கின்றன. ஏடுகள் முற்றும் புழுக்களால் அரிக்கப் பெற்றும் முறிந்துஞ் சிதைந்துங் கிடக்கின்றன. இப்பிரதி முத்துக்குமாரசாமியார் என்றவர்க்கு உரியதாயிருந்தது என்று மேலெழுதி வைத்திருக்கும் குறிப்பு ஏட்டுத்துண்டால் அறியகிடக்கிறது.

No. 2429. நீலகண்ட வித்தியை.
NĪLAKAṆṬHA VIDDIYAI.

Substance, palm-leaf. Size, 8¾ × 1¼ inches. Pages, 160. Lines, 5 and 6 on a page. Character, Tamil and Grantha. Condition, injured. Appearance, very old.

Begins on fol. 1-a. The other works herein are Uḍalaṟiviḷakkam 83-a, Śaṭṭaimunivākkiyam 109-a.

Complete.

Explains, in detail, how by worshipping God Śrī Nīlakaṇṭha, by repeating the spells sacred to him, etc., certain diseases can be cured, and magical powers can be acquired.

Beginning :

நாதமுங் கீதமும் வெளிபரதேசமும்
    நாளு மைந்து பூதமும்
தாதுவு மாய்ப்புக ளீர்புகள்
    வாரணமும் வேதமும்
போத மெய்ஞ்ஞான சாரமு
    மேவிநின்ற பாதமு
மேதுமில வான உச்சிப்
    பூரணையைப் பணிகுவனே. (க)

பூதலத்தின் தென்பொதிகை தன்னில் வாழும்
பூரணமே யென்குருவே சிவமே அய்யா
மாதவத் தாலட்ட சித்தி யெட்டும் பெற்ற
வரிசையினால் வைத்தியநூல் வகையாய்ச் சொல்வேன்
. . . கத்தின் முகத்தானை . . கடைகெட்டானை
புழுக்குழியில் விழுந்தானைப் புதல்வன் றன்னை
சாதகமாய் மனமடங்கி அதுவிற் கூடித்
தாபரமாய் நின்ற கணபதியே காப்பே. (உ)

கணபதியின் பதத்தாலே கீழ் முக்கோணம்
கரைய . . . ங் காப்பிறப்பிறப்புங் கடவுளாற் பரம்
கணபதியை க்குண்டலிக்குள் கண்டு தேறி
கனலெழுந்த வாயுவந்தப் புரியட்டத்தால்
ணபதியே பிறப்பிறப்பு மாண் பெண்ணுகிக்
கரைகொள்ளா விந்துவொடு நாதமாகிக்
ணபதியைப் பெற்றெடுத்த விந்து வாசல்
காலாகி நின்றகுறி காணுங் காணே. (௩)

* * * *

* * * *

நகாரத்தி லொன்றே லக்கம்
நலம்பெறு மகார மெட்டு
சிகாரமே நாலாஞ் செம்மை
சிறந்திடு வகாரமஞ்சு
யகாரம் முப்பதோடு மூன்றும்பத்தே
. . . காரம் எழுத்துமாம்
உற்ற வீடன் பத்தொன்றே. (௪)

ஈராறு மஞ்சு மிருமூன்று நாமூன்றும்
சீராக மூவாறுஞ்செ . . . . . முடன்—வாரேந்து
வட்டமூலை மாதே மதியுடனே
யிட்டழைக்கத் திரிகோணமாம். (௫)

நீலகண்ட வித்தை :

சுரத்துக்குப் பால்வண்ணமாய் நீலகண்டமாய்ச் சதுர்ப்புஜமாய் நூறுரு தியானம்பண்ணி விபூதி தரிக்கச் சுரம் நிவாரணமாம். சந்திர மண்டலத்தின் நடுவேயிருக்கிற பாவனையாய் இரண்டு கையுடையவராய் அமிர்த சந்திரனைச் சடையிலே தரித்தவராய்ப் பாவனைபண்ணி நூற்றெட்டு உரு செபிக்கத் தக்கன் கார்க்கோடகன் முதலான விடமெல்லாம் போம். அமிருத நிறத்தராய்க் காளகண்டராய் உமைஸஹிதராய்ப் பாவித்து நூற்றெட்டு உரு தியானம் பண்ணிக் கண்ணினாலே பார்க்க விஷ நாசனம்.

சந்திர மண்டலத்தின் மத்தியிலே யிருக்கிறவராய் அமிருத சந்திரனைத் தரித்தவராய்ப் பாவித்துக்கொண்டு கையிலே சலத்தை வாங்கி நூறு உருத்தியானம் பண்ணிச் சிரசிலே சலத்தை புரோட்சணம் பண்ணினால்

விஷம் பட்டு மூர்ச்சித்துக் கிடக்கிறவன் எழுந்திருப்பான். பின்னையும் முன் சொன்னபடி தியானம் பண்ணிச் சலத்தைப் புரோக்ஷணம் பண்ண ஆஸந்[த] (ந) விஷமும்? எழுந்திருக்கும். அமிருத சந்திரனுக்கு நடுவேயி ருக்கிறவராய் அமிருதகும்பத்தை க்கையிலே வைத்துக்கொண்டு இருக்கிறவ ராய்த் தியானம் பண்ணி நூற்றெட்டு உரு செபித்துச் சலத்தைப் புரோக்ஷிக்க விஷ அரமாம். விஷமாக்கிரஹித்து மூர்ச்சித்து அசந்து கிடக்கிறவனைக் கோடி வஸ்திரத்தினாலே மூடிப் பாதாதி சிரசுமட்டும் அமிருத கும்பத்தி னாலே வாங்குகிற பாவனையாய்ப் பாவித்துச் செலத்தைவிட்டுச் சிரசிலேயிரு ந்து கால்மட்டும் அந்த வஸ்திரத்தைக் கிழித்துப் போடவும். இதற்கு நூற்றெட்டுரு செபிக்க நித்திரை கொண்டாப் போலே யெழுந்திருப்பான்.

* * * *

End :

அஸ்ய ஶ்ரீ நீலகண்டருத்ர மஹாமந்த்ரஸ்ய காண்வ ருஷி: | அநுஷ்டுப் சந்த: | நீலகண்ட மஹாருத்ரோ தேவதா | ப்ரோம் பீஜம் ஶக்தி: | டம் கீலகம் | நீலகண்ட ப்ரஸாதஸித்த்யர்தே ஜபே விநியோக: | ப்ரோம் க ஜங்க டம் ஈ ப்ரோங்க ஜங்க டம் கா ஓம் நமோ பகவதே ஹ்ருதயாய நம: | நீலகண்டாய ஶிரஸே ஸ்வாஹா | மஹாருத்ராய ஶிகாயை வஷட் | காலகூட விஷபக்ஷணாய கவசாய ஹும் | டம் நேத்ரத்ரயாய வௌஷட் | ஸ்வாஹாகஸ்த்ராய பட் இதி திக்பந்த: | த்யாநம் | கத்ப்ருத்ர ஸுராஸுர பாணிபாத்ரம் பஞ்சாநநம் வத்ர தப்ஷா . . விலஸம் க்ருத்ர ஹஞ்ஜம் ஸமுக்ஷணம் ஶ்ரீநீலகண்டம் ஸ்ம்ருதி ஸாவயேதம் | இதி நமோ பகவதே நீலகண்டாய ஜயத்ராணைகமேதவே மாமத்ர [நந] (ஸய) ஸாமஹேதா ஸுதந்த்ர பாஸாநஹேஸ்வர நீலகண்ட கவிமேஶாந மஹாமாய மாயா ஶி[ரே] (ர) | மந்த்ர: :— ப்ரோம் ஜம்டம்.

* * * *

(கு-பு).—

இந்நூல் மந்திர சாஸ்திரத்தைச் சார்ந்ததாய் "நீலகண்டருத்திரன்" என்னும் திவ்விய மஹா மூர்த்தி விஷயகமான மந்திரத்தைச் செபித்துச் சித்திபெற்று அதுகொண்டு இயற்றும் பல விஷ வைத்தியம் முதலான வைத்திய முறையையும், மந்திரிக்கு மாற்றையும், வசியம் முதலாய் மாரணம் வரையில் ஆன அஷ்ட கருமங்களைச் செய்யுமாற்றையும் நன்கு வசனநடையில் விளக்குகின்றது. எழுத்துப் பிழைகள் சொற் பிழைகள் மிகவாகக் காணப்படுகின்றன. ஏடுகள் ஒரு சிறிது சிதைந்துள. ஈற்றிற் சில மந்திரமடைத்தெழுதிய சக்கிரங்களும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. முதலிலே மந்திர விஷயமான சில பாடல் காணப்படுகின்றன.

No. 2430. உடலறிவிளக்கம்.
UḌALAṞIVIḶAKKAM.

Pages, 52. Lines, 5 and 6 on a page.

Begins on fol. 83-a of the Ms. described under No. 2429.

Contains Stanzas 52 to 100 only.

Same work as that described under No. 142.

(Seems) with different readings.

(கு-பு).—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 142-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் 52-ஆஞ் செய்யுளிலிருந்து (ா) நூறுவது செய்யுள் வரையிலுமே இருக்கிறது. அப்பிரதிக்கும் இப்பிரதிக்கும் மிகவும் பாடபேதங்கள் காணப்படுகின்றன. ஏடுகள் ஒரு சிறிது புழு வரிக்கப்பெற்றிருக்கின்றன. எழுத்துப் பிழை மிகவாகக் காணப்படுகின்றது.

No. 2431. சட்டைமுனியார் வாக்கியம்.
ŚAṬṬAIMUNIYĀR VĀKKIYAM.

Pages, 186. Lines, 6 on a page.

Begins on fol. 109-a of the Ms. described under No. 2429.

Contains 1 to 195 Stanzas.

A treatise on Alchemy.

Beginning :

சட்டைமுனி வாக்கியம்.

நிர்க்குணமாய் நிர்மலமாய் நிரஞ்சன மூமாகி
நேரான பூரணமாய் மனமெட்டாத
சற்குணமாய்ச் சமரசமாய்த் தானுந்தாண்டிச்
சச்சுதானந்த வெளிக்கப்பால் நின்ற
சற்குணமா யெனையாண்ட சின்மயத்தைப்போற்றி
சமரசமாம் வேதாந்த வாதஞ்சொல்வோம்
நற்குணமாய்ச் சனகாதிரிஷிகள் பாதம்
நலம்பெறவே நாவில்வைத்துப் பாடுறேனே. (க)

பாடுறேன் பராபரமெய்ய கண்டவித்துப்
பண்பாக வதுக்கடுத்தப்பரையினு டவெளிதான்
நீடுறேனிதுக்கடுத்து ஆகாச வெளிதான்
நேராகவதின் கீழே வாயுவாச்சு
நாடுறேன திங்கீழேவன்னி வன்னி
நலமான வதின்கீழே சலமுமாச்சு
ஊடுறேன தின்கீழே பூமியாச்சு
ஓகோகோ சீவனெல்லா முதித்தவாறே (உ)

வாருன சனங்களுக்கு மைந்துபூதம்
மருவியதோர் தேவதைக்கு மஞ்சுபூதம்
நாருன வசண்டமெல்லாம் ஐந்துபூதம்
சதாசிவமாய் நின்றதுவு மைந்துபூதம்
கூருன யோனியெல்லாம் ஐந்துபூதம்
குறும்பரே ஐந்திணு லெல்லாமாச்சு
நீருன வேடமிட்டு உபதேசித்து
நிலையெல்லா மைந்தெழுத்து நிலையுமாச்சே. (ரு)

End :

தெரியவே குருவோடு வீரங்கூட்டிச்
சிறப்பாக வெண்குருவை வார்த்துஒன்ருய்ப்
பரியவே புற்கொத்தான் மேலேபூசிப்
பங்கான வெழுசுன்னக் குகையில்வைத்து
நெரியவே சீலைசெய்து புடத்தைப்போடு
நின்மலம்போற் குருவாகுந் துரிசிதானு
மரியவேகு ருவாலே யாகுமட்டு
மறிந்தமட்டுஞ் சொல்லுகிறேன் நன்ருய்க்கேளே. (ாகூச)

நன்ருன குருப்பட்டாற் சூதங்கட்டும்
நலமான சரக்கெல்லாம் . . . .
. . . ன்ருன ஒவ்வொன்றின் வேதைகோடி
ஓகோகோ வெகுதூரந்து ரிசின்வேதை
வொன்ருன துரிசினுற் றங்கம்நீறுங்
காட்டுமுன்னே நாதமதுமணி போலாடுந்
தன்ருன குளிகையுமாந்தம் பணமுமாகும்
தாக்கிணுலு ருக்கின மாந்தாக்குதாக்கே. (ாகூரு)

(கு-பு.)—

இந்நூல் இரஸவாத விஷயமாய் அதற்குரிய பலவகை முறைகளையும் நன்கு விளக்குகின்றது. இதன் தலை யேட்டிலே "சட்டை முனி வாக்கியம்" என்றதாகக் குறிக்கப்பட்டிருத்தலின் இந்நூலாசிரியர் சட்டை முனியாவார் என்று தெரிகிறது. இந்நூல் இத்துணைத்தென்று தெரியவில்லை. இப்பிரதியில் 1 முதல் 195-ஆன செய்யுட்களேயிருக்கின்றன. எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன. ஏடுகள் அங்கங்கே புழுக்களால் அரிக்க பெற்றும் சில விடத்து நுனியில் முறியப்பெற்றும் இருத்தலால் கிரந்த பாதங்கள் இருக்கின்றன. இந்நூல் முடிவுற்ற பின்னர் ஒன்பது ஏடுகளில் சில மந்திர முறைகள் சக்கிரங்களுடன் எழுதப்பெற்றிருக்கின்றன. அவை யிற்றின் ஏடுகளும் மிகச் சிதைந்திருக்கின்றன.

No. 2432. வைத்திய சாத்திரம்.
VAIDDIYAŚĀTTIRAM.

Substance, palm-leaf. Size, 16¼ × 1½ inches. Pages, 580. Lines, 7 to 10 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, very old. Incomplete.

Similar to the work described under No. 2410.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 2140. -ஆவது நம்பரில் வந்துள்ள நூலேபோன்று கண்ணோய்கள் முதலான பல்வேறு வகையான வியாதிகள் உண்டாகுமாற்றையும் அவைகளைப் போக்கற்குரிய நன்மருந்துகளைப் பிர யோகிக்கு முறையினையும் நன்கு விளக்குவது. ஏடுகள் பல மிகவுஞ் சித லுற்றும் முறிந்துங் கிடக்கின்றன. முதலில் ஒரு சிறிய பகுதி பாடல் உருவமாகவும் மிகுதியான பகுதி பெரும்பாலும் வசன ரூபமாகவும் எழு தப்பெற்றிருக்கின்றன. இறுதியில் பல வகை வசியங்கட்கு முரிய மந் திர முறையும் எழுதப்பெற்றுள்ளது.

No. 2433. சூடாமணிநிகண்டு—பதினோராவதுநிகண்டு பத உரையுடன்.

CŪḌĀMAṆI NIKHAṆḌU—PADINŌRĀVADU NIKHAṆḌU (WITH PADAVURAI).

Substance, palm-leaf. Size, $16\frac{5}{16}$ × $1\frac{1}{2}$ inches. Pages, 312. Lines, 4 to 7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Same work as that described under No. D 15.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 15-ஆம் நம்பரில் வந்துள்ள நூலே யாகும். இப்பிரதியில் பதினோராவது தொகுதியாகிய ஒரு சொற் பல பொருட்டொகுதி மாத்திரம் பத உரையுடன் உளது. ஏடுகள் மிகவுஞ் சிதைந்துள. எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன.

No. 2434. சைவானுஷ்டானவிதி.

ŚAIVĀNUṢṬĀNA VIDHI.

Substance, palm-leaf. Size, $9\frac{1}{2}$ × $1\frac{1}{4}$ inches. Pages, 9. Lines, 6 to 8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Similar to the work described under No. 1339.

Beginning :

அனுஷ்டான அட்டவணை.

விடிய அஞ்சு நாழிகை யென்ன எழுந்திருந்து யதா யோக்கியமாய்ச் சரீரம் சுத்திபண்ணிக்கொண்டு விபூதி தரித்துக்கொண்டு கரநியாசம் பண் ணிக் குரு உபதேசித்தப்படி சிவத்தியானம் செபஸ்தோத்ரம்பண்ணி விதித்த இடங்களிலே ஈசான திக்கில்லாமல் மற்றத் திக்குகளிலே போய் பஹிர் பூமிக்குப் போய் சௌசம்பண்ணித் தந்த சுத்தி பண்ணிக்கொண்டு ஸ்நாநம் பண்ணும்படி.

End :

பின்புகரசுத்தி, சரசுவதி தியானம் :—பாலையாய் [செ] (சி) வந்த வஸ்திரமாய் நந்தியாபரணமுமாய் இப்படிப் பாவித்துச் சலத்துக்குத் தேனு முத்திரை கொடுத்துக்கையில் சலம் எடுத்துக்கொண்டு சிவ அஞ்சு மந்திரத் தால் புரோக்ஷித்துக்கொள்ளவும். அஞ்சு மந்திரத்தால் (ஆசமனம்) [ணம் பண்ணவும். கையில் சலமெடுத்துக்கொண்டு சிவ சூரியனைப்பார்த்து மூல மந்திரத்தால் சலம் விடவும். ஆசமனம். தொடுமிடம் கரசுத்தி. அங்க நியாஸம் கணபதயெநம : என்று குட்டிக்கொண்டு பஞ்சாட்சரம் .

* * * * . . . .

இப்படிக்குப் பிரதக்ஷிணம்பண்ணி நமஸ்காரம் பண்ணவும். சபம் பண் ணினவிடத்திலே சலம் புரோக்ஷித்துத் தொட்டு மார்பிடந் தொடவும்.

உண்டாலுடனே . . நீ . . . மூலக நீதியவனழகைக்
கண்டாலுடனே . . . . கமலமு . . ங்கண் மூன்றும்
[மிடறும்
. . ண்டாய் நிறைந்த பொற்சடையும் வெள்ளைமதியுங்கரு
வண்டார்குழலி யிடப்பாலும் மானுமழுவு மாய்நின்றான்.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்இருப்டிவ் காட்லாக்கு 1339-ஆம் நம்பர் பிரதியில் வந் துள்ள நூலே போன்று சைவர்கள் காலை யெழுந்திருந்து அவர்கள் செய்ய வேண்டிய அனுஷ்டான முறைமையினையும் அதன் முகமாய்ச் சிவார்ச் சனைசெய்யு மாற்றினையும் நன்கு விளக்குவது. உள்ள ஏடுகள் எல்லாம் மிகவும் புழுவரிக்கப்பெற்று முறிந்து கிடக்கின்றன. இதற்கு முன்னர் (8) எட்டு ஏடுகளில் சில நீதி விஷயமான சுலோகங்களும் சிவஸ்தோத்ர மான ஏழு (7) சுலோகங்களும், பின்னர் ஆறு ஏடுகளிலே சிவார்ச்சனைக் குரிய 'சிவநாமாவளியும்,' பின்னர் ஓரேட்டில் 'நட்சத்திரவடையாளம்' என்றதலைப் பெயருடன் நட்சத்திரங்களுடைய வடிவம் உணர்த்தும் ஒரு பகுதியும், அடுத்த எட்டில் மனையடி சாஸ்திர விஷயமாய் வீடுகளையடி யளந்து கட்டி அவர்கள்பெறும் ஊதியம் உணர்த்தும் ஒரு பகுதியும் எழுதப் பெற்றிருக்கின்றன. எழுத்துப் பிழைகள் மிகவாகக் காணப்படுகின்றன.

No. 2435. வைத்தியநூல் வசனம்.
VAIDDIYANŪL VACANAM.

Substance, palm-leaf. Size, $14\frac{1}{16}$ × $1\frac{1}{4}$ inches. Pages, 104. Lines, 7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Similar to the work described under No. 1978.

Beginning :

வைத்திய நூல்.

முன்னே பாம்பு போலே பின்னே தவளை போலே நடந்தால் பைத்திய சிலேஷ்மம் என்றறியவும். விறகு கட்டுக்குள்ளே மூஞ்சூறு போலே நடந்

தாலும் குடிலமாய் நாடி கலந்திருந்தாலும் கொஞ்சமாய் நடந்தாலும் மெள்ள நடந்தாலும் சவலைப் பிள்ளைபோல் நடந்தாலும் இப்படி நடந்தால் சன்னிபாதம் என் றறியவும்.

சாத்தியமாகாத நாடிலக்ஷணம்.

காலிபடம் போலவும், மேளமடிக்கிறுப் போலவும் பைத்திய நாடி குணம் . . . . உ . . . . கதியாகவும் வாதநாடி மந்த மாகவும் சிலெட்டும நாடி . . ம்பு போலவும் தீவிரமாகியும் இப்படி நடந்தால் அசாத்தியமென்று அறியவும். * *

End :

சன்னிவாத சுரத்துக்குக் கலிக்கம்.

முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், திரிபலை, திரிகடுகு, கோஷ்டம், அதி மதுரம் . . . வேர், இலுப்பைப்பூவுங்கூட்டிக் கருப்பஞ் சாற்றிலே அரை த்துத் தூதுவிளங்காய்ப் பிரமாணம் உண்டை பண்ணி முலைப்பாலில் ஓர் உண்டையிடச் சன்னிசுரம் தீரும். சன்னி மீறினால் முசுமுசுக்கையை முலைப் பாலிற் பிசைந்து ஓர் உண்டையிட மீளும்.

கலிக்கம்.

சாரணைவேர், முந்திரிப்பழம், ... ஞ்சுண்டான பழத்தின் மேலே யிருக்கிற பிசின், சுக்கு, மிளகு, திப்பிலி, பச்சை துத்தம் இவையெல்லாம் சமன் கொண்டு பொடிசெய்து . . . கலுவத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றிலாவது குப்பைமேனிச்சாற்றிலாவது உரைத்துக் கண்ணிலிட முயல கன் பிசாசு . . . எல்லாம் போம்.

* * * *

* * * *

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1978 ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ள நூல் போன்றது. இது, சன்னி சுராதி அநேகவகையான வியாதிகளுக்கும் பிசாசாதிகளுக்கும் உரிய பல்வேறுவகையான மருந்து களையும் கலிக்க வகைகளையும் அந்தந்த வியாதிகளையும் நன்கு தெரிந்து கோடற்குரித்தான அவ்வோவிலக்ஷணத்தையும் குணத்தையும் எடுத்து உணர்த்துவது. முதலில் ஒரேடில்லை. நூலாரம்பத்து நாடிகளைக்கொண்டு அவ்வோவியாதிகளைப் பரீக்ஷித்துணருமாற்றையும் நன்கு விளக்குகின்றது. நடுவில் ஏடுகள் சிதைந்திருக்கின்றன. 5 பக்கங்களிலே வியாதிகளுடைய பெயர்களுக்கும் அவைகட்குரிய மருந்துகளுடைய பெயர்களுக்கும் ஒரு அட்டவணையும் எழுதப்பெற்றுளது.

No. 2436. கந்தபுராணம்.

KANDAPURĀṆAM.

Substance, palm-leaf. Size, 19 × 1½ inches. Pages, 890. Lines, 10 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete.

Same work as that described under No. 540.

Colophon :

ஸ்வஸ்தி ஸ்ரீ விசயாப்புதைய கலியுக சகாப்தம் ௪௲௯௱ . . . சாலிவாகன சகாப்தம் ௧௲௭௱௫௰௮ க்குமேல் செல்லாநின்ற துன்முகிஸ்ரீ புரட்டாசிமீ ௨௰௩௨ வெள்ளிக்கிழமையும் அபரபட்ச சதுர்த்தசி நாழிகை ௨௰௬ அஸ்த நட்சத்திரம் நாழி ௬௰ மாகேந்திர நாம யோகம் . . . உதிச்சு நாழிகை ௰௫ அளவில் தட்டையநாடு புலியூரிலிருக்கும் காணியாளர் புல்லங்கை கோத்திரம் சின்னதம்பிக் கவுண்டர் மகன் பெரியதம்பிக் கவுண்டன் அவன் மகன் சின்னகுமார கவுண்டன் அவர் மகன் பழனிக் கவுண்டர் அவர் மகன் குமாரசுவாமிக் கவுண்டனுக்கு பாண்டிநாட்டினில் வாசுகிதேவநல்லூரிக்கும் காரைககாத்த வேளாளர் வகையில் பழனி லேறும்பெருமாள் பிள்ளை மகன் சொக்கநாத பிள்ளை அவர் மகன் சிந்தாமணியர் பிள்ளை அவர் மகன் திருஞானசம்பந்தம் பிள்ளை அவர் மகன் சங்கரசி . . . ணியா பிள்ளை கோயம்புத்தூர் சீமையிற்புலிகுத்திக் கொப்பண மன்ருடியார் சீமைகிணத்துக் கடவுக் கிராமம் சித்தூரில் கந்தபுராணம் எழுதி நிறைந்தது. சம்பூர்ணம்.

* * * *

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 540 ஆவது நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உளது. ஏடுகள் எல்லாம் புழுக்களாலே மிகவும் அரிக்கப்பெற்றும் முறிந்துங் கிடக்கின்றன. இறுதியிலே இப்பிரதியானது இன்ன காலத்தில் எழுதப்பெற்றது என்றதைக் குறிக்கும் ஒரு குறிப்பும் எழுதப் பெற்றிருக்கிறது. அநேகவிடங்களில் கிரந்த பாதங்கள் காணப்படுகின்றன. எழுத்துப்பிழைகள் உள.

No. 2437. திருவரங்கத்தந்தாதி (யமகவந்தாதி.)

(TIRUVARANGATTANTĀDI (YAMAKAVANTĀDI.)

Substance, palm-leaf. Size, 14⅝ × 1¼ inches. Pages, 106. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 1-a. The other works herein are Tirukkaruvaikkalitturaiyantādi 54-a, Tirukkaruvai Veṇpāvantādi 104-a, Śivaśivaveṇpā 131-a, Ponvaṇṇattantādi 168-a.

Complete.

Same work as that described under No. D. 256. Text only.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 256-ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் மூலமாத்திரம் முற்றும் உளது. எழுத்துத் தெளிவாக வெழுதப்பெற்றுள்ளது. "இவை முனிசாமி கையெழுத்து", என்றதான இத்தொடர்மொழி முதலேட்டிற் காணப்படுகிறது.

No. 2438. திருக்கருவைக் கலித்துறையந்தாதி.
TIRUKKARUVAIK KALITTUṚAIYANTĀDI.

Pages, 101. Lines, 4 on a page.
Begins on fol. 54-a of the Ms. described under No. D. 2437.

Complete.

Same work as that described under No. D. 245.

(கு-பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 245–ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாம். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது. இறுதி யேட்டில் " தி. விசாகப்பெருமாளையரது கல்வி விளக்க வச்சுக்கூடத்தில் அச்சிற் பதிப்பிக்கப்பெற்றது " என்றவித்தொடர் மொழி காணப்படு கிறது. ஏடுகள் அங்கங்கே ஒரு சிறிது புழுக்களான் அரிக்கப்பெற்றிருக்கின் றன. எழுத்துக்கள் தெளிவாகவே எழுதப்பெற்றுள.

No. 2439. திருக்கருவைவெண்பாவந்தாதி.
TIRUKKARUVAI VEṆPĀVANTĀDI.

Pages, 52. Lines, 4 on a page.
Begins on fol. 104-a of the Ms. described under No. D. 2437.

Complete.

Same work as that described under No. D. 248.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 248–ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது. ஏடுகள் ஒரு சிறிது சிதைந்துள. எழுத்துக்கள் தெளிவாக வெழுதப் பெற்றிருக்கின்றன. 130–ஆம் ஏடு வெற்றேடாகவுளது. அச்சிடப்பெற்றது.

No. 2440. சிவசிவவெண்பா.
ŚIVAŚIVAVEṆPĀ.

Pages, 72. Lines, 5 on a page.
Begins on fol. 131-a of the Ms. described under No. D. 2437.

Complete.

A didactic poem, in the *Veṇpā* style, with the refrain *Śiva Śiva.* Every stanza embodies a quotation from the *Tirukkuṛaḷ.*

Beginning :

சிவசிவ வெண்பா.

காப்பு.

தெள்ளுலக நீதி சிவசிவா வென்று திரு
வள்ளுவர் வெண்பாவால் வழுத்துறவெற்—குள்ளதுணை
கந்தணி வீராறு கை மேவிய கருணைத்
தந்திமுகன் செம்பதுமத்தாள். (க)

அவையடக்கம்.

சிவசிவாவெண்பாரிச் செய்யுட்டிறந்தேர்ந்
தெவர்களு மென்றஞ்சாதிசைத்தேன்—கவிஞரியற்
பண்பாலுரைத்த பழமொழிமுன்னீதுமொரு
வெண்பா நூலாய் விளங்கவே. (உ)

கடவுள் வாழ்த்து.

விற்பிரம்பாலுற்ற வடுமேவ வுலகெங்குநிறை
சிற்பரனே தெய்வஞ் சிவசிவா—சொற் சிறந்த
வகர முதல வெழுத்தெல்லாமாதி
பகவன் முதற்றே யுலகு. (க)

(இப்பாட்டிற்குப் பிரமாணம்) (நூலாசிரியர் பாடல்).

இந்திரனை மௌலிதுகள்படவடித்தான் வழுதிமுன்னுளிறையோனீன்ற
கந்தனயன் குட்டுவெளிப்பட வடித்தான் ஹெடர்ந்தோடிக் கண்ணனன்றனனை
நந்தன் மனையடித்தனளிவ் வடிகளெல்லா மேவ[|](ணு)ற்றநாதன்மீதே
இந்துகுல மன்னரடியிருதிறமு மெவ்வுலகுமெய்திற்றன்றே. (?)

பாரதம்.

விண்ணிலுறை வானவரிலியாரடி படாதவர்
விரிஞ்சன் முதலோருததி சூழ்
மண்ணிலுறை மன்பதையிலியாரடிபடாதவர்
மனுக்கண் முதலோர்களகலாக்
கண்ணிலுறை நாகர்களிலியாரடி படாதவர்கள்
கட்செவி மகீபர் முதலா
வெண்ணில் பலயோனியிலியாரடி படாதவர்
இருந்துழி யிருந்துழியரோ. (?)

திருவாரூர்ப் புராணம்.

தார்மேனின்றிலங்கு புயவழுதிமேலுந்
தன் மனை மங்கையர்மேலு மமைச்சர்மேலும்
யார்மேலுஞ் சென்று பெருஞ்சேனைமேலும்
அயன்மேலு மரன்மேலு மறவோர்மேலும்
தேர்மேலொண்பகன்மேலும் மதியின்மேலும்
சிறந்துள விந்திரன்மேலுந் தேவர்மேலும்
பார்மேலுங் கன்மேலு மரங்கண்மேலும்
பட்டதரன் மெய்யிலடிபட்டபோதே.

(இப்படியே மற்றைப் பாட்டுக்களின் பிரமாணங்களை இதனுரைப் பாடத்திற் காண்க.)

வான் சிறப்பு.

பூமலர் கோனேரியற்கும் பூவையர்க்கும் பூமழைசெய்
தீமை நலங்கண்டோஞ் சிவசிவா—பூமுற
கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை. (உ)

நீத்தார் பெருமை.

நல்ல சுகருக்கன்றி நாணுவதென் வேதமுனி
செல்லமடவார் சிவசிவா—சொல்லி
னுரனென்னுந் தோட்டியாணோரைந்துங்காப்பான்
வரனென்னும் வைப்புக்கோர் வித்து.

End :

புலவி.

சத்தியபாமை மலர் தந்திலனென்றூட லுடன்
சித்தம் மகிழ்வித்தான் சிவசிவா—நித்தமுணற்
குப்பமைந்தற்றுற் புலவியது சிறிது
மிக்கற்று னீவிடல். (௩௱௩௰௧)

புலவி நுணுக்கம்.

இப்பிறப்பிலே பிரியேனென்ற நளனோடேடல்
செப்பவரிதன்றே சிவசிவா—வப்படியே
இம்மைப் பிறப்பிற் பிரியலமென்றேனுகக்
கண்ணிறை நீர் கொண்டனள். (௩௱௩௰௨)

ஊடலுவகை.

மான் மகள் பாலூடி மரமானுன் மழகளிற்றின்
றேனனையாள் காந்தன் சிவசிவா—வேனெனிலங்
கூடுதற் காமத்திற்கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப்பெறின். (௩௱௩௰௩)

Colophon :

சிவசிவ வெண்பா முற்றிற்று (முற்றும்).

ஆயிரத்தறு நூற்றெண்பது பத்தா
மாண்டு சொல் சகாத்த நாளதனில்
மாயிரு ஞாலத்ததிக **மாந்தில்லைமன்றில்**
வாழ் சென்னமல்லையர்
பாயிருடரத்தும் பரிதிபோற்
பாவப்படரகற்றிடுஞ் **சிவ வெண்பாத்**
தீயவைபோக்கிப் பரகதிசேரச்
செப்பினன் றெளிதவத்தவர்க்கே.

(கு-பு.)—

இந்நூல், நீதி நூற்களைச் சார்ந்ததாய் ஒவ்வொரு பாடலிலும் "சிவ சிவா" என்பதனையும், இறுதியிரண்டடிகளிலும் திருவள்ளுவனுரது ஒவ்வொரு குறள் வெண்பாக்களையும் மகுடமாகவைத்து நூற்று முப்பத்து மூன்று பாக்களான் "தில்லைவாழ் சென்னமல்லையர்" என்னும் பெரும் புலவரால் இயற்றப்பெற்றதோர் அரிய நூலாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றுமுளது. இது, அச்சிடப்பெற்றிருக்கிறது. இதற்கு ஒரு உரை நூலும் உண்டு என்று கடவுள் வாழ்த்துச் செய்யுட்குப் பின்னர் காணப்பெறும் ஒரு குறிப்பால் உணரக்கிடக்கிறது. உரையாசிரியர் பெயர் இன்னதென்று குறிக்கப்பெறவில்லை. இந்நூல் சகாத்தம் ஆயிரத்தறுநூற்றுப் பத்தொன்பதா

மாண்டில் இயற்றப்பெற்றதாகும் என்பது இறுதியிற் காணப்படும் " ஆயி ரத்தறுநூற்றெண்பது பத்தாமாண்டு சொல் சகாத்த நாளதனில் " என்ற செய்யுளால் நன்கு விளங்குகிறது. ஏடுகள் ஒரு சிறிது சிதைந்துள. இறுதியில் ஒரு வெற்றேடு உளது.

No. 2441. பொன்வண்ணத்தந்தாதி.
PONVAṆṆATTANTĀDI.

Pages, 102. Lines, 4 on a page.
Begins on fol. 168-a of the Ms. described under No. 2437,

Complete.

A poem, in the *Antādi* style, in praise of God Śiva, and beginning with the words *Pon Vaṇṇam.*

By Cēramānperumāḷ Nāyanār.

Beginning :

பொன்வண்ணத்தந்தாதி.

பொன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மேனி பொலிந்திலங்கு
மின்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம் வீழ்சடை வெள்ளிக்குன்றந்
தன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணமால் விடைதன்னைக்கண்ட
வென்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணமாகிய வீரனுக்கே. (க)

ஈசனைக் காணப்பலிகொடுசெல்ல வெற்றே யிவளோர்
பேயனைக் காமுறு பிச்சிகொலாமென்று பேதையர்முன்
றாயெனை யீர்ப்பத்தமியேன்றமைர வத்தாழ் சடையோன்
வாவெனைப்புல்லவா வென்றனிமை விண்டனவாட்கண்களே. (உ)

கண்களங்கஞ்செய்யக் கைவளை சோரக்கலையுஞ்செல்ல
வொண்களங்கண்ணுதல் வேர்ப்பவொண் கொன்றையந்தாருருவப்
பெண்களங்கம்மிவள் பேதுறு மெண்பதோர் பேதை நெஞ்சம்
பண்களங்கம்மிசைப்பாட நின்றடும் பரமனையே. (௩)

* * * *

தவனே யுலகுக்குத்தானே முதறன்படைத்தவெல்லாஞ்
சிவனே முழுதுமென்பார் சிவலோகம் பெறுவர்செய்ய
வவனே யடல்விடையூர்தி கடலிடை நஞ்சமுண்ட
பவனே யெனச்சொல்லுவாரும் பெறுவரிப்பாரிடமே. (௯)

* * * *

உலகாளுவீர் தொழுமின் விண்ணாள் வீர்பணிமின் நித்தம்
பலகாமுறுவீர் நினைமின் பரமனை டொன்றலுற்றீர்
நலகாமல ராலருச்சியுமி னுணரகத்து நிற்கு ?
மலகாவுறு வீரரணடியாரை யடைமின்களே. (௰௪)

* * * *

தீவினையேனை நின்றைவ ரிராப்பகற் செத்தித்தின்ன
மேவின வாழ்க்கை வெறுத்தேன் வெறுத்துவிட்டேன் வினையு
மோவினதுள்ளத் தெளிந்தது கள்ளங் கடிந்தடைந்தேன்
பாவின செஞ்சடை முக்கண ணுரணன் பாதங்களே. (மஅ)

* * * *

End :

பொய்யாநரகம் புகினுந்துறக்கினும்போந்து புக்கிங்
குய்யா வுடம்பினேரோர்வ நடப்ப பறப்பவென்று
நையாவிளியினும் நானிலமாளினு நான்மறைசேர்
மையார் மிடற்றானடி மறவாவரம் வேண்டுவனே. (கூஅ)

வேண்டிய நாள்களிற் பாதியுங் கங்குன்மிகவவற்று
ளீண்டிய வெந்நோய் முதலது பிள்ளைமை மேலதுமூப்
பாண்டின வச்சம் வெகுளி யவா வழுக்காறிங்ஙனே
மாண்டன சேர்தும் வளர்புன்சடைமுக்கண் மாயனையே. (கூகூ)

மாயனன் மாமணிகண்டன் வளர் சடையாற்கடிமை
யாயின தொண்டர் துறக்கம் பெறுவது சொல்லுடைத்தே
காய்சின வானைவளருங் கனகமலையருகே
போயின காக்கையுமன்றே படைத்தது பொன்வண்ணமே. (ர)

பொன்வண்ணத்தந்தாதி முற்றுப்பெற்றது.

Colophon :

வரலாறு.

அன்று வெள்ளானையின் மீதிமையோர் சுற்றணுகுறச்செல்
வன்றொண்டர் பின் பரிமேற்கொண்டு வெள்ளிமலையான்முன்
சென்றெழிலாதி யுலாவரங்கேற்றிய சேரர்பிரான்
மன்றிடையோது பொன் வண்ணத்தந்தாதி வழங்கிதுவே.

பிரமாதீச வருஷம் ஐப்பசிமீ உயகூஉ திருவேட்டிசுவரன்பேட்டையி லிருக்கும் தாண்டவராய செட்டி குமாரன் அருணசல செட்டி குமாரன் வீரணமுடைய மகாருஷி கோத்திரம் குமாரசாமி படிக்கின்ற திருவரங் கத்தந்தாதி. திருக்கருவைக்கலித்துறையந்தாதி, திருக்கருவை வெண்பா வந்தாதி, சிவ சிவ வெண்பா, பொன்வண்ணத்தந்தாதி.

(கு-பு.) —

இந்நூல், "கழறிற்றறிவார், சேரமான் மாவெண்கோ", என்றுதிய பல் பெயர் பூண்டவரும், சுந்தரமூர்த்திநாயனாரோடு தோழமைபூண்டு திருக்கைலாயத்துக்குக் குதிரைமேலேறிச்சென்று அவண் நந்தி தேவராலே தடையுண்டு "ஆதியுலா", வென்னும் பிரபந்தத்தைப் பாடிப் பூத கணங்களில் தாமும் ஒருவராய் அமர்ந்திருந்து சிவ வழிபாடு செய்துகொண் டிருக்கும் பெருமைவாய்ந்தவருமான "சேரமான்பெருமாள் நாயனார்", என்னும் பெரும் புலவர் பத்தரால் சிதம்பரத்திலே இயற்றப்பெற்றது என்று இந்நூலின் இறுதியிலே காணப்பெறும் "அன்று வெள்ளானையின் மீதி மையோர்" என்ற பாடலால் அறியக்கிடக்கின்றது. இந்நூற் பெயர், முதற் குறிப்பான் பெற்றபெயராகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது. இதில் உள்ள பாடல்கள் எல்லாம் சில அகப்பொருட் சுவையினையுட்கொண் டனவாயும் சில பேரின்பச் சுவையினையுட்கொண்டனவாயுமிருக்கின்றன.

No. 2442. வில்லிபுத்தூரார் பாரதம் உரையுடன்.
VILLIPUTTŪRĀR BHĀRATAM WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 15½ × 1$\frac{1}{16}$ inches. Pages, 432. Lines, 7 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Wants 30 pages in the Beginning.

Breaks off in Stanza 56th of Draupadimālaiyiṭṭaccarukkam.

Same work as that described under No. D. 527.

Beginning :

ஆதிபர்வம்.

கலியுக வியாதன் சொல்லக் கணபதி யெழுதும் பாடல்
பொலி . . . . மிழிலாறுயிரமெனும் விருத்தம் போற்றி
சலிவறு வில்லிபுத்தூரிறைவனஞ்சார்வபௌமன்
ஞெலிகெழு மறையோர் கோமானுயர்ந்தவருப்பச் சொன்னுன்.

உரை.—மகாவிஷ்ணுவானவர் தம்முடைய சுவரூபம் நீக்கி கலியுகத்தில் வேத சுவரூபமே வேத வியாஸராய் உத்பவித்த தவராச மஹாமுனி சொல்ல விக்கினேசுவரரானவர் எழுதாநின்ற பாடலை விளங்கத் தமிழி ஞலே ஆறுயிரம் விருத்தமாகப் போத்துதல் செய்து பொருள் தேடிப் பாடும் தகைமையிற் சலிப்பில்லாத வில்லிபுத்தூராழ்வார் என்னும் கவி ராச . . . ஒன்றுங் குறைவில்லாதிருக்கப்படாநின்ற கீர்த்தி பொருந் திய வேத பிராம்மணர்களுக்கெல்லாம் இராசாவானவர். வித்தையினு லும் கேள்வியினுலும் உயர்ச்சியை அடைந்தபேர்கள் மனது களிகூரப் பாடல் சொன்னுரென்றவாறு. (க)

End :

அரவநெடுங்கொடி யுயர்த்தோன் முதலாவுள்ள
வனைவருமங் கொருதனுவுக்காற்றுராகி
யுரவு மெலித்தெழின் மாழ்கிச் செயல்வேறின்றி
யுள்ள மழிந்திருந்ததற்பினுறு மேறன்னக்
கர்வுடனந்தணர் நாப்பணிருந்த கொற்றக்
கருமுகில் வாகனன் புதல்வன் கரியமேனி
யிரவி குலச்சிறுவனைப்போலெழுந்து மன்ற
விளங்கொடிதம் முனை நோக்கி யியம்பினுனே. (நஎ)

என்பது, கர்ணன் வீழ்ந்தவுடனே ஸர்ப்பக்கொடியுடைய துர்யோதன் முத லான ராச ராசாக்கள் எல்லாரும் அவ்விடத்திலே ஒரு வில்லுக்குத் தோற்று நின்றவர்களாய்ப் பலன் குறைநது அழகு போய் ஒரு செயலு மில்லாதவர்களாய் மனதழிந்து கலங்கி நின்றபினபு ஒளிவாகப் பிராம் மண சபை நடுவேயிருந்த வெற்றியான கரிய மேக வாகனனுகிய தேவேந் திரன் புதல்வனுன அர்ச்சுனன் கறுத்த சரீரமுடைய சூரிய குலத்து ராசகுமாரனுன இராமபத்திரரைப் போலே எழுந்து நின்று கலியாணத் துக்கு உரிமையாக அலங்கரித்து இளையவல்லி சாதிக்கொடிபோலும் நின்ற

துரோபதைக்குத் தமையனை திருஷ்டத்யும்னனைப் பார்த்து ஆணிடிபோல வாய்த்திறந்து . . . .
. . . .

(கு-பு.) |

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 527 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் ஆதிபர்வம் த்ரௌபதி மாலையிட்டச் சருக்கம் ஐம்பத்தேழாவது பாடல் வரைக்கும் உளது. மூலமும் உரையுமாக விருக்கிறது. உரை இன்னாருடையதென்று விளங்கவில்லை. மிகப்பிழையுடனுள்ளது. நூலாரம்பத்து அப்பிரதியில் இல்லாத சில பாடல்கள் உள. இப்பிரதியிலிருந்து இந்நூலின்பெயர் ஆருயிரம் என்று முதற்செய்யுளாலும் அதன் உரைப் பகுதியாலும் விளங்குகிறது. ஏடுகள் பல மிகவும் முறிந்து கிடக்கின்றன. முதலில் 2–16 ஆன ஏடுகளில்லையாதலின் அதிலடங்கிய பகுதி நீங்கலாகவிருக்கிறது.

No. 2443. பிங்கலநிகண்டு.

PIṄGAḶANIKHAṆṬHU.

Substance, palm-leaf. Size, 16 × 1¾ inches. Pages, 136. Lines, 10 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, very old.

Incomplete.

Contains 1 to 9 " Vakais "

Same work as that described under No. D. 33.

(கு-பு.)—

இந்நூல், டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 33 ஆம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முதலிலிருந்து ஒன்பதாவது வகையான (கூ) மாப்பெயர்வகை என்ற பகுதியின் (ராரு) நூற்றைந்தாவது சூத்திரம் வரையில் இருக்கிறது. ஏடுகள் பல மிகவுஞ் சிதிலமாய் முறிந்து கிடக்கின்றன.

No. 2444. இசைப்பாடற்கொத்து.

IŚAIPPĀḌARKOTTU.

Substance, palm-leaf. Size, 15$\frac{3}{16}$ × 1¾ inches. Pages, 174. Lines, 4 and 5 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

A collection of devotional verses in praise of God Viṣṇu, worshipped at Tirukkaṇṇaṅguḍi and other Deities.

By Bālakavi Kṛṣṇan.

Beginning :—

இப்புத்தகம் முழுவதும் பாட்டு.

மங்களம்.

ஜயமங்களம் நித்திய சுப மங்களம் உ
மங்களம் அரவிந்தவல்லி மணவாளருக்கு
மங்களம் கிருஷ்ணாரண்ய வாஸருக்கு
மங்களம் உபரிசரவஸு பணிந்த பாதருக்கு
மங்களம் லோகநாத மாயவர்க்கு ஜய மங்களம். (க)
விண்ணவர்கள் புகழுந் திருக்கண்ணங்குடி நின்றவர்க்கு
மண்ணுலகையளந்த மணிவண்ணருக்கு ||
நண்ணுபுகழ்த்தாமோதரன் நாராயணன் புகழும்
எண்ணரிய மகிழுருவாயி ருந்தவர்க்கு ஜயமங்களம். (உ)
காயிலாவகுளமுங் கண்ணுறங்காப் புளியும்
ஓய்விலாவழக்கு மூறுதகிணறும்
ஆயிருக்கவே சபித்த ஆலிநாடன்புகழும்
நேயமுத்து ரங்கராய் நின்றவர்க்கு
ஜயமங்களம் நித்திய சுபமங்களம். (ங)

End :

சுருவித் தொடர்ந்தலைந்தே கனதனமாதரைத்தழுவித்
தவ முற்றிடு பரிசுத்தர்கள் தமை யுற்றிட நழுவி
மருவிற் பல மலராருனதடி பெற்றிட வெருவி
மனநற்றதி சுழல்மத்திடர் கெடநற்கதி தருவீர்
பருவத்திள மடவார் துகிற்பரிக்கும் பெருமாளே
படியுண்டிடு களவுண்டளைப்பருகும் பெருமாளே
கருவிற் கிடந்தழுந்தா தருள்காட்டும் பெருமாளே.
கண்ணங் குடிதனில் நின்றருள்கருணைப்பெருமாளே.

(கு-பு).—

இது, திருக்கண்ணங்குடிப் பெருமாள்மீது பாடப்பெற்ற பாடல்கள் பலவும் ஊஞ்சல் மங்களம் தாய்மகள் ஏசல் முதலியனவற்றையுங்கொண்டுள்ளது. 'பாலகவி கிருஷ்ணன்' என்பவரால் பாடப்பெற்றதென்று தெரிகிறது. நடுவில் ஓரேட்டில் காளத்திநாதர் விஷயமான எச்சரிக்கையொன்றும் மங்களம் ஒன்றும் எழுதப்பெற்றுள. பின்னர் திருக்கண்ணங்குடி ஞானப்பூங்கோதையார் ஊஞ்சல், திருக்கண்ணங்குடி எச்சரிக்கை, பெருமாள் தாலாட்டு, அம்மன் எச்சரிக்கை, ராமர் முத்திரை முதலியவைகளும் எழுதப்பட்டிருக்கின்றன. ஏடுகள் மிகச் சிதிலம். சில ஏடுகள் மாறிக் கோக்கப்பெற்றிருக்கின்றன.

No. 2445. எம்பெருமானார் உபதேசம்.

EMPERUMĀNĀR UPADĒŚAM.

Pages, 2. Lines, 6 on a page.

Begins on fol. 76-a of the Ms. described under No. D. 823.

Complete.

"Instructions of Śrī Emperumānār (Śrī Rāmānuja)," a *rahasya* work of the *Tenkalai Śrīvaiṣṇavas*.

Beginning :

எம்பெருமானார் வடுகநம்பிக்குப் பிரசாதித்தருளின பிரகாரம்.

பிரபத்திக்கு விரோதங்கள் எல்லாம் த்யாஜ்யம். அஃதேதென்னில் கர்மஜ்ஞான பக்திகள். அதெங்ஙனேயென்னில் : கர்மங்கள் அஸாத்தியங் கள். ஸம்ஸாரிகள் அனுஷ்டிக்கிறத்துக்கு அளவுபடாது. காலலோப மந்திர லோப தந்திரலோப அர்த்தலோபங்களுமாயிருக்கும். அதிவிளம்பனமாகை யாலே ஸம்ஸாரிகள் அநுவர்த்தியாமல் கர்மம் அநுஸந்திக்கிற பேர்களுக்கு விடம் ஸ்வர்கபர்யந்தமே. ஸ்வர்க்கத்திலே அல்பகாலமும் . . . . . கெடாமையாலே உத்பத்தி ஸ்திதி லயங்களுக்கே வரவேண்டும். வேறே வழியாகிலும் மந்த்ரோச்சாரணம் தப்பினாலும் நரகஹேது. கர்மாசரணம் நரகஹேதுவாகையாலே ஸாமதி ஸாதநமன்று. கர்மமேதென்னில் யஜ்ஞதாந தபோஜப்யாக ஸந்த்யாவந்தந ப்ரஹ்மயஜ்ஞாக்நிஹோத்ர தீர்த்தயாத்ரா புண்யக்ஷேத்ரவாஸ க்ருச்ச்ரசாந்த்ராயணதவஷ்டி வ்ரதோபவாஸ யாமநாத . . . .

* * * * *

நைமித்திக கர்மங்களும், ஸந்த்யாவந்தந ஸாவித்ர மாயஸ்ராத்தப்ரவா ஸந க்ஷேத்ரவிசேஷவந்தநாதி நித்யகர்மங்களும் ப்ரபத்திவிரோதங் கள். ஜ்ஞாநப்ரகாரமேதென்னில் :—சாஸ்த்ர ஜ்ஞாநவான்களென்ற களிலே ஸம்ஸாரநிவ்ருத்தியில்லை. அவித்யாதிகளாகையாலே. . . . . அஹங்காரஹேதுக்களாயிருக்கை யாலே ஸாமதிஸாதநமன்று. ஆகையாலே ஜ்ஞாநம் வ்யர்த்தம். . ஸாமதி ஸாதநமன்றென்று ஸவாஸநத்தோடே விட்டு ஆசார்யர் கள் அருளிச்செய்த அர்த்த விசேஷங்களிலே குழிப்பட்டுக் கடத் தேறி . . . . ஜீயஸ்ஸந்நித்து . . . . . என்கிறபடியே யாவதாயிகாரிகளாய் ஸதாநுஸந்தி அநுபவிப்பார்கள்.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

(கு-பு.)—

இந்நூல் வைஷ்ணவ மதத்திலே தென்கலை ஸம்பிரதாயத்தினர்க்குரிய தொரு ரஹஸ்ய விசேஷமாகும். இதனை உடையவர் தமது பிரிய சிஷ்ய ரான வடுக நம்பிகளுக்கு உபதேசித்துப் போந்ததாகக் குறிப்பிட்டுளது. எழுத்துப்பிழையுடன் காணப்படுகிறது. உள்ள ஓரேடும் செல்லரிக்கப்பெற் றிருக்கிறது.

No. 2446. ரஹஸ்யத்ரயப்ரகரணப்ரயோஜனம்.

RAHASYATRAYAPRAKARAṆAPRAYŌJANAM.

Pages, 3. Lines, 6 on a page.

Begins on fol. 68-a of the Ms. described under No. D. 823.

Complete.

A religious treatise of the *Tenkalai Śrīvaiṣṇavas.*

Beginning :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:। ஆழ்வார் திருவடிகளே சரணம். முமுக்ஷுவான சேதநனுக்கு மோக்ஷத்திலே இச்சையுண்டாம் போது ரஹஸ்யத்ரயம் அறியவேணும். ரஹஸ்யத்ரயமாவது :— திருமந்திரமும் த்வயமும் சரமஸ்லோகமும். இவற்றுக்கு ப்ரகாரண மென்றும் ப்ரயோஜநமென்றும இரண்டாயிருக்கும். அதில் ப்ரகாரணம் அறிகையாவது ரஹஸ்யத்ரயத்தில் உண்டான அர்த்த விசேஷங்களைப் பதந்தோறும் ஸூக்ஷ்மமாகவறிகை. ப்ரயோஜந மறிகையாவது தாத்பர்ய மறிகை. அதாவது, திருமந்திரத்துக்கு நாராயண பதமும் த்வயத்துக்கு சரணபதமும் சரமஸ்லோகத்துக்கு ஏகபதமும் இந்தப் பதத்ரயத்திலும் உண்டான சாரார்த்தங்களை யதார்த்தமாக வறியவேணும். . . .

* * * * *

End :

சரமஸ்லோகத்திலே 'மாம்' என்று தன்னைத் தொட்டுக் காட்டி 'ஏகம்', என்று கையும் ஞானமுத்ரையுமாக ஸ்வாபாவ்ய பதத்தை யேறிட்டு இருக்கிற என்னை ஒருவனையுமே உபாயமாகப் பற்ற வேண்டும். ஆழ்வாரைப் பற்றும் போது திருவடிகளைப் பற்ற வேண்டுகையாலே எம்பெருமானோ ரோட்டை ஸம்பந்தமே இவ்வாத்மாவுக்கு ஜீவநம். இதுக்குப் பிரமாணமாகக் கண்ணிநுண் சிறுத்தாம்பும், நூற்றந்தாதியும் ஆம். இவ்வர்த்தம் அறியாதவனுக்கு யாவதாத்மபாவியாய் ஸம்ஸாரம் அநுவர்த்திக்கும். இவ்வர்த்த நிஷ்ணை அதிகாரிக்கு ஆழ்வார் ப்ரபத்தியும் உடையவர் ப்ரபத்தியும் நித்யாநுஸந்தாநமாகக் கடவது.

லோகாசார்யாய நம:. ஆழ்வார் திருவடிகளே சரணம்.

குறிப்பு :—இந்நூல் வைஷ்ணவ ஸம்பிரதாயத்தைச் சார்ந்ததாக வுள்ளது. இது முமுக்ஷுவானவன திருமந்திரம் த்வயம் சரமஸ்லோகம் என்றவைகளில் உள்ள ப்ரகரணம் ப்ரயோஜநம் என்ற இவ்வர்த்தங்களை நன்குயறிந்து பிரபந்நனாய் அவன் வாழ்ந்திருக்குமாற்றை யெடுத்து உணர்த்துகின்றது. ஆகவே இக்குறி காரணக்குறி. இதனை இயற்றியவர் இன்னாரென்று ஓரிடத்திலும் குறிக்கப்பெறவில்லை யாயினும் இறுதியிற் காணும் ஓர் "லோகாசார்யாய நம:" என்ற சொல்லால் இதன் ஆசிரியர் பிள்ளை லோகாசார்யரா யிருக்கலாமென ஊகிக்க இடனுண்டு. சிதைந்துளது.

No. 2447. திருவாய்மொழி ஸாராம்ச ரஹஸ்யம். TIRUVĀYMOḺISĀRĀMŚARAHASYAM.

Pages, 5. Lines, 6 on a page.
Begins on fol. 69-a of the Ms. described under No. D. 823.

Complete.

Explains the true purport of the *Tiruvāymoḻi* of Śrī Nammāḻvār.

Beginning :

திருவாய்மொழி ஸாராம்சம்.
எம்பார் திருவடிகளே சரணம்.
ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸகல ஜகத் காரண பூதமான வேதத்திலும் வேதோப ப்ருஹ்மணங்களாக ப்ரவ்ருத்தங்களான ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களிலும் ஸகல ஸாரமாக ப்ரஸித்தமாய் ஸர்வேச்வரனுடைய ஸர்வஸ்வம் ஆய் ஸர்வாத்மாக்களுக்கும் உஜ்ஜீவநமாக இருக்குள்ள உபாயோபேயங்களைப் ப்ரதிபாதிக்கையாலே த்வயமென்று திருநாமத்தை யுடையதாயிருக்குள்ள வாக்யத்வயமும் பதார்த்தத்தையும் ப்ரதிபாதிக்கிறது. அதாவது ;—

ஸ்ரீய: பதித்வமும், நாராயணத்வமும் நாராயணனுடைய ஸர்வ லோகசரண்யமான உபாயத்வமும், அதனுடைய ப்ராப்யத்வமும், கைங்கர்யமாய் வைலக்ஷண்யமாயிருக்குள்ள ப்ராப்ய ஸ்வரூபமும், முக்தியிலுடைய நித்யகைங்கர்ய ப்ரதிஸம்பந்தியான நித்யவஸ்துவும், கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியான ஸர்வேச்வரனுடைய திவ்யமங்களவிக்ரஹத்தையும், ஸர்வஸ்வாமித்வமும், நித்யகைங்கர்யமும், கைங்கர்ய ப்ரதிபந்தக நிவ்ருத்தி ஸாதனமும், ஆகவிப்படி யாயுள்ள விசேஷங்கள். ஸாங்க்ரஹமாயுள்ள விசேஷ ப்ரகாசகமான ஸ்ரீ விசேஷத்தினுடைய விவரண ரூபமாய் ஸஹஸ்ர ஸங்க்யோபேதத்தாயிருக்குள்ள திருவாய்மொழியினை பத்துப் பத்தாலும் இப்பதார்த்தத்தையும் நம் பூர்வாசார்யர்கள் அடைவே சேர்த்து அநுஸந்தித்துக்கொண்டு போருவர்கள். இதில் முதற்பத்தால் 'மலர் மகள் விரும்பும் நமரும் பெறலடிகள்,' என்றும், 'மலராள் . . னன்,' என்றும், 'திருமகளார் தனிக்கேள்வன்,' என்றும், 'திருவின் மணாளனென்னுடைச் சூழலுளான்,' என்றும், 'மாமகளார் தனிக்கேள்வன்,' என்றும், 'மெய்ந்நல மலராள் மணாளனை,' யென்றும் ஸ்ரீய: பதித்வம் ப்ரதிபாதிதமாயிற்று. இரண்டாம் பத்தால் 'எம்பெருமான் நாரணற்கென்றும்,' 'எம்பிரானெம்மான் நாராயணனாலே' என்றும், 'நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன்,' என்றும், நாராயணத்வம் ப்ரதிபாதிதமாயிற்று.

* * * * *

End :

பத்தாம்பத்தால் 'துயர்கெடுங் கடிதே,' என்றும், 'கெடுமிடராயவெல்லாம் கேசவா,' என்றும், 'எழுமையு மேதஞ் சாரா,' என்றும், 'பிணியொன்றுஞ் சாரா,' வென்றும், 'பிறவித்துயர் கெடுக்தோறும்,' என்றும், 'பண்டே யொழிந்த வினையாயினவெல்லாம்,' என்றும் "அமரா வினைகளே," என்றும், "கடுநரகம் புகலொழித்த" என்றும், 'தானே தடுமாற்ற வினைகள் தவிர்த்தான்,' என்றும், 'பிறவிகெடுத்தேன்,' என்றும், 'அந்தி தொழுஞ் சொல்லுப்பெற்றேன்,' என்றும், 'அவாவற்று வீடுபெற்ற,' என்றும்; கைங்கர்ய ப்ரதிபந்தக நிஸ்ஸேஷ நிபர்ஹணத்வம் ப்ரதிபாதிதமாயிற்று. இப்படி ஸ்ரீய: பதித்வாத்யர்த்தங்களாய் கைங்கர்ய ப்ரதிபந்தக நிஸ்ஸேஷ நிபர்ஹண பர்யந்தங்களாயிருந்துள்ள உபாதேயார்த்தங்களை ப்ரதிபாதிக்கக் கடவதாயிருந்துள்ள வாக்யத்வயமும், திருவாய் மொழியும் ஸமவச்சரணார்த்திகளாய் ப்ரபத்த்யுபாயராயிருக்கும் அதிகாரிகளுக்கு காலக்ஷேப ஹேதுவாயும் ஸம்ஸார வீரண நாயகமாகவும் யாவச்சரீரபாதம் அநுஸந்தேயம்.||

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

குறிப்பு :—இந்நூல் "த்வயம்" என்ற திருமந்திரத்தில் கூறப்பெற்றுள்ள ஸ்ரீய: பதித்வம், முதலாய், கைங்கர்யப்ரதிபந்தகநிஸ்ஸேஷ நிபர்ஹணத்வம் இறுவாகக் கிடந்த பத்து அர்த்தங்களும் மேற்படி த்வயார்த்த பிரகாசகமான திருவாய்மொழியிலேயுள்ள பத்துப் பத்துக்களிலேயும் இன்னின்னவிடங்களிலே யமைந்திருக்கின்றன என்பதை யெடுத்துக்காட்டான் எடுத்து உணர்த்தி, ஆகவே ஷை த்வயமும் திருவாய்மொழியும் பிரபந்நாதிகாரிகளுக்கு எப்போதும் அநுஸந்தேயங்களாம் என்னுமிதை யுணர்த்துகின்றது. இதனை யியற்றியவர் இன்னாரென்று விளங்கவில்லை. இது ஒரு 'ரஹஸ்ய விசேஷம்' என்று தோற்றுகிறது. முற்றுமிருக்கிறது. ஏடு சிதிலமாயுளது.

No. 2448. அகத்தியர் கருக்குரு ஆயிரம்.
AKATTIYAR KARUKKURU ĀYIRAM.

Substance, palm-leaf. Size, 12 × 1$\frac{5}{16}$ inches. Pages, 312. Lines, 6, 8 and 9 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Incomplete.

Begins on fol. 1-a. The other work herein is Akattiyarkaruma (Vaiddiya) Sūttiram Nūṟṟaimpadu, 160-a.

A treatise belonging to the *Siddha* School of Indian Medicine.

Beginning :

. . . . மெஞ்ஞானச் சோதிபதஞ்
செப்பரிய கணேசனொடு கந்தன் காப்பு
அருவுருவாமாதியந்த வெளியுந்தாண்டி
யகண்டு நின்ற சின்மயத்தின்பாதம் போற்றிப்
பரிவுடைய பூரணத்தில் சூட்சா சூட்சப்
பதியிருந்த மனோன்மணித்தாய்ப் பாதம்போற்றிக்
குருவருளால் நாதாக்கள் பாதம்போற்றிக்
கூ . . . . . வைத்திய சூத்திரந்தான் பாரே. (க)

பாரப்பா பெருநூல் தானெட்டு காண்டம்
. . . . னதைக்குறுக்கி யெண்ணூறு சொன்னேன்
சேரப்பா வாதமொடு ஞானமார்க்கம்
. . . . வைத்திய முமட்ட கர்மம்
ஆரப்பா வகை விபரமாகச் சொன்னேன்
அறியாத பசங்களு . . . . கந்தானே
சீரப்பா கருக்குருவுந்திறந்து சொன்னேன்
செப்பியதோர் நூல்களுக்குத் திறவு கோலே. (உ)

. . . . . லாகவே பாடிவைத்தேன்
செப்பரிய சித்தரெல்லாம் மெச்சிக்கொண்டு
மறவன்றி வெட்டவெளியாகச் சொன்னார்
மகத்தான பிரமருஷியாகையாலே
யுறவாடி நூல் வாங்கி யொளித்தார் சித்தர்
ஓகோகோ . . . . . . தென்று சொல்லிச்
சதுராடியவருடனே தர்க்கம் பேசிச்
சண்டையிட்டு நூல் வெளியாய் வாங்கினேனே. (ங)

பூநீர்சுத்தி.

* * * *

* * * *

(ரு)

வார்த்துமே கலக்கியந்தத்தெளிவை வாங்கி
வாகான புத்தோட்டில் வாருவாரு
வார்த்துமே ரவிதனிலே காய்ந்து உப்பாம்
மறுபடியுஞ் சுத்தசலந் தெளிந்து வாங்கி
வார்த்துமே புத்தோட்டில் ரவியிலுப்பாம்
மறுபடியுஞ் சுத்தசலத்திட்டு முன்போல்
பார்த்துமே தெளிவிறுத்து ரவியிற் காய்ந்து
பக்குவமாயிப்படியே பத்துமுறை செய்யே. (சு)

* * * *

End :

அஞ்சு சுண்ணக்குகை.

வைத்ததொரு சுண்ணமென்ற முறைகட்கெல்லாம்
வளமாகச் சொல்லியதோர்க் குகையாம்பாரு
செய்திட்ட கடுங்காரக் குகைதான்கேளு
செப்பியதோர் அஞ்சு சுன்னங் கலுவத்திட்டு
ஐத்ததொரு சுண்ணும்பு நீராலாட்டி
அப்பனே வில்லைசெய்து புடத்தைப்போடு
உய்த்ததொரு வண்டவெள்ளை வர்க்கம்பாலும்
உரைத்திட்ட சுண்ணும்பு நீறுங்கூட்டிக்
கைத்துமே யரைத்ததனைக் குகைதான்பண்ணிக்
கடுங்காரச் சுண்ணமொன்று குகைதானுச்சே. (எ௱ய)

ஆச்சென்ற வாதிகட்கு இதுமுன்வேணும்
அல்லாட்டால் குருமுடிக்கச் சுண்ணமாகா
வாச்சென்ற நவலோக முருக்கவேண்டில்
வச்சிரமாங் குகைதன்னைச் சொல்லக்கேளு
* * * * (எ௱யக)

(கு-பு.)—

இந்நூல் வைத்தியநூலைச் சார்ந்தது. இதுக்குக் 'கருக்குரு', என்று ஒரு பெயர் உளதாகத் தெரிகிறது. அன்றியும், நூலாரம்பத்தே "வைத்திய சூத்திரந்தான்பாரே", என்றிருப்பதால் அகத்தியர் வைத்திய சூத்திரம் என்றும் ஒரு பெயர் உண்டெனத் தெரிகிறது. ஆயிரம் பாடல்களான் ஆகியது. இப்பிரதியிலே 711 செய்யுட்களேயிருக்கின்றன. இடையில் 21, 111, 112, 146, 147, 152 என்ற எண்ணமைந்த ஏடுகளில்லை. முதலேடு முறிந்துளது.

No. 2449. அகத்தியர் வைத்தியசூத்திரம் நூற்றைம்பது.
AKATTIYAR VAIDDIYASŪTTIRAM NŪṚṚAIMPADU.

Pages, 70. Lines, 6 on a page.
Begins on fol. 160-a of the Ms. described under No. D. 2448.

Complete.

Same work as that described under No. R. 275 (b).

(கு-பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 275 (b) நம்பர் பிரதியிலிருக்கும் நூலேயாகும். இப்பிரதியில் முற்றும் இருக்கிறது. இப்பிரதியிலே இந்நூலுக்குப் பெயர் 'அகத்தியர் கருமசூத்திரம் நூற்றைம்பது', என்றதாகக் குறித்திருக்கிறது. இப்பெயராலும் இது, வழங்கப்பெறும்போலும். ஏடுகள் சிறிது சிதைந்து இருக்கின்றன. இப்பிரதிக்கும் அப்பிரதிக்கும் பாடபேதங்கள் மிகவாகக் காணப்படுகின்றன. இதற்குப் பிறகு பத்து ஏடுகளிலே இடிமருந்து, ராமபாணம், சித்திரவல்லாதி, மேகசஞ்சீவி யெண்ணெய், வனசவில்வாதி, தாளிசக்குளிகை யென்றிம்மருந்துகளுடைய முறைகள் சில வசனத்திலும், சில செய்யுளிலுமாக எழுதப்பெற்றிருக்கின்றன. இறுதியில் இவைகளின் பெயர்களை எழுதிவைத்திருக்கிறது.

No. 2450. கொங்கணர் கடைக்காண்டம் ஐந்நூறு.
KONKAṆAR KAḌAIKKĀṆḌAM AINNŪṚU.

Substance, palm-leaf. Size, $9\frac{2}{8} \times 1\frac{6}{16}$ inches. Pages, 312. Lines, 8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Begins on fol. 1-a. The other works herein are Śalliyanūl 157-a. Pañcākṣara-pattu 190-a, Akattiyar Ūḷiākyaṟṟuccūttiram, Vaittiyam 194,Vaittiyanūl Prose, 188 (a) Kailāsamūrttivādanūl 208 (a), Sundarānandar atītasūttiram 310 (a).

Same work as that described under No. R. 275 (a)

(கு-பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 275 (a) நம்பர் பிரதியிலே வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியிலே முற்றும் இருக்கிறது. இப்பிரதியானது சுக்குராசமி-ம்ஸு (1840-ம்ஸு) சூன்மீ எஉ (ஜூன்மீ 7உ) ஆதிவாரக் கிழமையன்று பூர நட்சத்திரம் (சார்வரிஸு வையாசிமீ உயஎஉ ஆதிவாரக்கிழமை பூர நட்சத்திரத்திலே) யெழுதி முடிந்தது. ஐதர் சாகிபு சுவடி என்று இறுதியிற் காணப்பெறும் ஓர் வாக்கியத்தால் தெரிகிறது. ஏடுகள் ஒரு சிறிது சிதைந்துள.

No. 2451. சல்லிய நூல் உரையுடன்.
ŚALLIYANŪL WITH MEANING.

Pages, 66. Lines, 8 on a page.

Begins on fol. 157-a of the MS. described under No. D. 2450.

Complete.

Same work as that described under No. R. 353 (b).

இந்நூல் மூவருடக் காடலாக்கு 353 (b)-நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாம். இப்பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது. எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன.

No. 2452. பஞ்சாட்சரப் பத்து.
PAÑCĀKṢARAPPATTU.

Pages, 8. Lines, 8 on a page.

Begins on fol. 190 a of the MS. described under No. D. 2450

Complete.

Same work as that described under No. R. 168 (g).

(கு.-பு.)—

இந்நூல் மூவருடக் காடலாகு 168 (g) நம்பர் பிரதியில் வநதுளள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உள்ளது. இறுதியிலே ஒரு மந்திரமடைத்த சக்கிரமும் "சுக்குராசமிஸு மார்கழிமீ மிஅஉ எழுதி முடிந்தது" என்ற விச்சொற்றொடருங் காணப்பெறுகின்றன.

No. 2453. அகத்தியர் ஊழியகற்றுச் சூத்திரம்.
AKATTIYAR ŪḶIYAKAṞṞUCCŪTTIRAM.

Pages, 8. Lines, 6 on a page.

Begins on fol. 194-a of the MS. described under No. D. 2450.

Complete.

Same work as that described under No. R. 168 (f).

இந்நூல் மூவரு.க் காடலாக்கு 168 (f) நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியிலே இந்நூல் முற்றும் இருக்கிறது. இறுதியாம் ஒன்பதாஞ் செய்யுளின் ஈற்றடி மாத்திரம் எழுதப்பெறவில்லை.

No. 2454. வைத்தியநூல் வசனம்.
VAIDDIYANŪL PROSE.

Pages, 19. Lines, 6 on a page.

Begins on fol. 198-a of the MS. described under No. D. 2450.

Similar to the work described under D. No. 1969.

Beginning:

ஒடி பில்லி சூனியம் ஏருமலிருக்க.

கருங்குன்றி வெண்குன்றி[வெ](வி)ரை காவாளை இந்த மூன்று விரையும் புலித்தலையிலே மனிதர் தலையோட்டிலே கழுதை தலையோட்டிலே பயிர் பண்ணின வேர் சேர்த்தடைத்துத்தலையிருக்கவும். நாய்ப்பாகல் விரையை கலைக்கொம்பில் பயிர் பண்ணி வேர் சேர்த்தடைத்துக்கொள்ளவும். இடுகாட்டில் முளைத்த நீலி வேர் சிறு கீரை வேர் ஸமூலமுமிருக்கச் சூனியம் மேல்படாது. சூனியக் குணமறியும்படி:—தாளியிலை யரைத்து உடம்பெங்கும் திமிர்ந்திட்டால் உடம்பெல்லாம் உப்பும். அதுவறிந்து மருந்து கொடுக்கவும். அரசுமேல் ஆதொண்டைக்குப் பலி காப்பு ஒரு காசு காணிக்கை வைத்துத் தூபதீப நைவேத்தியஞ் செய்து சத்துள மணிகள் கட்டவும். பில்லி சூனியங் கிட்டாது.

End:

தேளுக்கு, எலிகடிக்கு.

ஆவாரை விரை முலைப்பாலில் அரைத்துக் கொட்டின வாயிலே பூசத் தீரும். பச்சை கற்பூரம் முலைப்பாலில் உரைத்துப் பூச மீளும். அரைத்த சுக்கு மிளகு திப்பிலி வில்வப்பட்டை கடுக்காய் தானிக்காய் நெல்லி முள்ளி இவைகள் சமன் கூட்டி மாசிப்பச்சைச்சாறு வார்த்தரைத்து உண்டை பண்ணி நிழலில் உலர்த்தி உமிழ்நீரில் உரைத்துக் கண்ணிலிடக் கொட்டின வாயில் கடுப்புத்தீரும். ஊமத்தவிலைப்பறித்துச் சாறு கொண்டு உள்ளுக்கு நல்லெண்ணெயிற் கூட்டி நக்கத் தீரும்.

விஷத்துக்குக் குறுணி வெள்ளாட்டுக் கோமயத்தில் வெற்றிலை நூறு ஊறவைத்துப் பிசைந்து வடிகட்டித் தைலமாய்க்காய்ச்சி வைத்துக்கொண்டு விஷந்தீண்டினால் எள்ளுப் பிரமாணம் வெற்றிலையிற்கொடுக்கத் தீரும். ஒரு தலைவலிக்கு எள்ளு அளவு கண்ணிலிடத்தீரும். விஷம் மீறிச் செத்தபேரை உச்சந்தலை உள்ளங்கால் உள்ளங்கையில் கீறிப்பார்த்து இரத்தம் பொசிவு கண்டவிடத்திலே ஒருபண வெடை தைலம் ஒட்டிவிட்டு ஒரு செவ்வாலங்கொட்டையும் உரைத்துக் கீறின விடத்திலே தடவினால் எழுந்திருப்பார். அதன் பிறகு ஒருபண வெடை தைலம் உள்ளுக்குக் கொடுக்க விஷம் தீரும்.

(கு-பு.)—இச்சிறிய பகுதி கரு சாஸ்திரத்தைச் சார்ந்ததாய்ப் பில்லி சூன்னியம் முதலியவைகட்கும் பல்வேறு விஷங்களுக்கும் உரித்தான மருந்துகளுடைய முறைகள் பலவற்றையும் எடுத்துணர்த்துகிறது. எழுத்துப் பிழையுடன் உளது.

No. 2455. கைலாசமூர்த்தி வாதநூல் முந்நூறு.
KAILĀSAMŪRTTI VĀDANŪL MUNNŪṞU.

Pages, 202. Lines, 8 on a page.

Begins on fol. 208-a of the MS. described under No. D. 2450.

Complete.

A work on Alchemy.

Beginning :

கைலாசமூர்த்தி வாதநூல்.

நிர்க்குணமாய் நிர்மலமாய் நிரஞ்சனமுமாகி
நேரான பூரணத்தின் மனமெட்டாத
சற்குணமாய்ச் சமரசமாய்த் தானுந் தாண்டிச்
சச்சிதாநந்த வெளிக்கப்பால் நின்ற
தற்குணமாயெனை யாண்ட சின்மயத்தைப் போற்றிச்
சமரசமாய் வேதாந்த வாதஞ் சொல்வேன்
நற்குணமாஞ் சனகாதி ரிஷிகள்பாதம்
நலம்பெற வென் நாவில் வைத்துப் பாடுறேனே (க)

பாடுறேன் பராபரமே யகண்டவித்துப்
பண்பாக வதுக்கடுக்கப் பரையினுடைவெளிதான்
நீடுறேன் அதுக்கடுக்க வகண்ட வெளிதான்
நேராக வதின் கீழே சலமுமாச்சு
ஊடுறேன் அதின் கீழே பூமியாச்சு
ஓகோகோ சிவனெல்லா முதித்த வாறே
* * * * * * *
* * * * * * * (உ)

காணப்பா லகுவாக மூலம் பார்த்துக்
கைமுறையாய் வாசிகொண்டு ஊதியூதி
ஊணப்பா சக்கிரத்தில் நின்று நின்று
உத்தமனே நந்தி கண்டால் வாதங்காணும்
தோணப்பா வெறும் பேச்சால் வார்த்தை சொன்னால்
சுடுகாட்டிற் பிணமானால் சொல்லுக்கொக்கும்
பூணப்பா மூலத்தே யொளிகாணுமட்டும்
பொற்கொடிபோற் சுழிமுனை யுந்துறந்து போமே (௫)

End :

பாரப்பா விப்படியே பாஷாணங்கள்
பரிவான வறுபத்துநாலு தானும்
நேரப்பா வினமுறைபோல் மெழுகு மாகும்
நிறை நிறையாய்ப் பொன்னு முதல் வெள்ளியாகும்
ஆரப்பா வெண்ணெய்போல் திறந்து சொல்வார்
அடக்கியல்லோ விக்கருவை வழலை யென்பார்
தூரப்பா விதினாலே வழலையாச்சு
* * * * * * *
எண்ணூர் ? :
மனோன்மணியினுடைய கிருபையுண்டாகவேணும்.

முற்றும்.

Colophon :

ஆங்கீரசவருஷம் மேஷ ஞாயிறு ௰௫௨ தமிழ் ௫௨ வெள்ளிக்கிழமை காலமே (௬) ஆறு மணிக்குத் திருச்சி(ரா)[ன]ப்புரங் கோட்டையிலிருக்கும் அப்துல் காதர்க சமேதார்க்குமாரன் அயிதர் சார் புஸ்தகம். கைலாசமூர்த்தி வாத நூல் முன்னூறு எழுதிமுடிந்தது. சென்னையிலிருக்கும் ஆனைக்குச்சேரி தாவீது வாத்தி யெழுதினது. திருச்சிற்றம்பலம் :

செவ்வாக மாலைக்கண் நிவர்த்தியாகும்
பேய்க்குச் செப்புகிறேன் அஞ்சனத்தைக்கேளு
செவ்வாகுஞ் சூதமொன்று கெந்தி மூன்று
தீர்க்க வெள்ளைச் சாரணைவேர் நாலுதூக்கிச்
செவ்வாக நேர்வாளம் நாலு தூக்கு
சேம்பீரச் சாற்றினாற் குழையவாட்டி
செவ்வாகு மான்கொம்பு சிமிழில் வைத்து
தேவையென்றால் பழஞ்சாற்றிற் றீட்டிடாயே

தீட்டினால் சன்னி விஷம் பேயு நீங்கும்
செப்புறேன் உண்மைபோல் உன்மற்றமானால்
காட்டினால் ஒழிந்திடவே மருந்தல்லாமல்
கடுகவே பிடித்தவரை விலங்குப்பூட்டி
ஊட்டியதோருலையிட்டுக் கொழுவைக்காய்ச்சி
யொழுகவிடு அவர்மேலே யண்ட வண்ட
நீட்டினால் வாய்திறந்து பேசுவான்காண்
நீராக நித்தகிரியை நீசெய்திடாயே

(கு. - பு.)—

இந்நூல் இரசவாதத்தைச் சார்ந்ததென்று தெரிகிறது. கைலாசமூர்த்தியால் இயற்றப்பெற்றது எனக் குறிக்கப்பெற்றிருக்கிறது. இங்கு முந்நூற்றிருபது பாடல்களோடு முடிவுற்றிருக்கிறது. இதில் உள்ள பாடல்களில் பல மூவருடக் காட்லாக்கு 254 (l) and 256 ஆகிய நம்பர்களிலே வந்துள்ள " கயிலாயச் சட்டைமுனி வாதநூல் ஆயிரம், " என்றவைகளிலே காணப்படுகின்றன. இது முடிந்தபின்னர் " செவ்வாக மாலேக்கண் நிவர்த்தியாகும் ", எனத் தொடங்கி இரண்டு பாடல்கள் எழுதப்பெற்றிருக்கின்றன. அவை இந்த நூலைச் சார்ந்தவையோ அல்லது வேறு நூலைச் சார்ந்தவையோ ஒன்றும் தெளிவாக விளங்கவில்லை.

No. 2456. சுந்தரானந்தர் அதீதசூத்திரம் முப்பத்தாறு.
SUNDARĀNANDAR ATĪTASŪTTIRAM MUPPATTĀṞU.

Pages, 40. Lines, 5 on a page.

Begins on fol. 310-*a* of the MS. described under No. D-2450.

Complete.

Same work as that described under No. R-168-(a).

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 168 (a) நம்பர் பிரதியிலே வந்துள்ள நூலேயாம். இப்பிரதியிலிருந்து இந்நூலுக்கு முப்பத்தாறு செய்யுளென்றும், " சுந்தரானந்தர் அதீதசூத்திரம் ", என்ற மற்றொரு பெயர் உண்டென்றும் தெரிகிறது. அதில் ' சுந்தரானந்தர் விநோத சூத்திரம் ', என்றதாகவிருக்கிறது. : இதில் இந்நூலின் முப்பத்தாறு செய்யுட்களும் இருக்கின்றன. எழுத்துப் பிழைகளிருக்கின்றன. ஏடுகள் ஒரு சிறிது சிதைந்துள. இதுக்குப் பின்னர் " சாதிகுலஞ் சமயமதமெங்கட்கில்லை ", எனவும், "உண்ணும் போதீரெழுத்தாலுயிரடங்கி ", எனவுந் தொடங்கப்பெற்ற இரு சித்தநூற்பாடல்கள் எழுதப்பெற்றிருக்கின்றன.

No. 2457. தன்வந்திரி கருக்கிடை நிகண்டு முந்நூறு.
DHANVANTIRI KARUKKIḌAI NIKHAṆṬHU MUNNŪṞU.

Substance, palm-leaf. Size, 13½ × 1½ inches. Pages, 125. Lines, 6 on a page Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Begins on fol. 1-*a*. The other works herein are Mōhinīmantram, 64-*a* Kuraḷimantram, 65-*a*. Madhuraivīran mantram. 66(*a*), Karuśāstīram 68-*a*.

Same work as that described under No.R. 145- (a).

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 145 (a) நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியிலே இந்நூல் முற்றிலுமிருக்கிறது. அதற்கும் இதற்கும் பிரதிபேதங்காணப்படுகின்றது. எழுத்துப் பிழைகள் காணப்படு கின்றன. ஏடுகள் ஒரு சிறிது சிதைந்திருக்கின்றன.

No. 2458. மோஹினி மந்திரம்.
MŌHINI MANTIRAM.

Pages, 2. Lines, 6 on a page.

Begins on fol. 64-*a* of the MS. described under No. D-2457.

Complete.

A work on the spells and mystic diagrams sacred to Goddess Mōhinī

Beginning :

மோஹிநி மந்திரம்.

ஓம் ஐயும், கிலியும், ரீயும், ஸ்ரீயும், ஐயுங்கிலியும் ச்ரீயும் சர்வ மோஹினி வாவா சருவஜனங்கள் வசிகரி இன்னான் மகள் இன்னானைக் கொண்டுவா என்முன்னே சுவாஹா. உருவு ரூ (நூறுயிரம்) பால் பழம் தேங்காய் பச்சரிசி வடைப் பருப்பு சர்க்கரை பானகம் வைத்துப் பூசிக்கவும். அகத்தியர் சாபம் நசி நசி ஆசாரியர் சாபம் நசி நசி சுக்ரசாபம் நசி நசி முப்பத்து முக்கோடி தேவர்கள் பதினெண்பேர் சாப மும் நசி நசி இம்மந்திரம் சித்திக்க சுவாஹா.

End :

ஓம் வம் சிம் லம் சிவாய நம : மங் யங் ரங் நங் லங் ரங் வங் சிங் வயிர வாயநம : உருவு ௲அ (ஆயிரத்து நூற்றெட்டு)

(கு. - பு.)—

இந்நூல் மந்திர சாஸ்திரத்தைச் சார்ந்ததாய் 'மோஹிநீ', யென்னும் தேவதைக்குரிய மந்திர யந்திரங்களைக்கொண்டு சித்திபெறுமாற்றை விளக்கு கின்றது. இங்கு அதற்குரிய மூன்று சக்கிரங்கள் எழுதப்பெற்றிருக்கின்றன. எழுத்துப் பிழைகளிருக்கின்றன.

No. 2459. குறளி மந்திரம்.
KURALIMANTIRAM.

Pages, 2. Lines, 5 on a page.

Begins in fol. 65-*a* of the MS. described under No. D. 2457.

Complete.

Similar to D. No. 2458.

Beginning :

குறளி மந்திரம் முதல் :—

ஶ்ரீ வீரி சுகமான வீரி அஷ்டபுஜ லக்ஷ்மீ இஷ்டமுட னெந்நாளும் ஆகலாமா யிட்ட ஶ்ரீ வீரி யென் எதிராளி நெஞ்சைக் கலக்கி மறிக்கி தரிக்கி உருக்கி மண்டையை உரி உரி. மூளையை வாங்கு வாங்கு. கழுத்தை முறி முறி காலையுங் கையையும் மார் மார். ஓம் விரி வாவா அவன் பெசிகம் நீவிந்து அவனையும் உயிரையும் உடலையும் வாங்கு வாங்கு சிசிசி சிசிசி சிசிசி விரி சிசி ஒன்றுபட்டம் கேட்கலாமோ சீக்கிரம் கொல்லு கொல்லு. முறிச்சு தரிச்சு எரிச்சு எரி எரி எரிச்சு * * * *

End :

எரி எரி எரி எரி எரி எரி எரி எரி முரி முரி தரி தரி உரி உரி உரி வீரசூரி யென்னுணை. என் குருவினுணை. உன்னுணை. உரி உரி உரிச்சு அவன் ஆவியை நீவாங்கி * *

இதற்கு மூல மந்திரம். ஶ்ரீ வீரி சுக மாவிரி சுவாஹா. சூசூசூ உரூாஅ. செபிக்கவும். பூசை முந்நாழி முச்சிரங்கை தேங்காய் பழம் கூடவைத்து ௩. சுத்தி புஷ்பம் சாம்பிராணி சூடம் தாம்பூலம் வைத்துச் சோடச உபசாரத்துடனே நைவேத்தியஞ்செய்து உரு. உரு செபிக்கவும். ஓம் ஶ்ரீ ஶ்ரீ சூசூ எரி எரிசூ எரி எரி எரி சக்கிரம்.

(கு. - பு.)—

இந்நூல் மந்திர சாஸ்திரத்தைச் சார்ந்ததாய்க் குறளியென்னும் தேவியினைத் தேவதையாகக்கொண்ட மந்திரங்களை நுவலுகின்றது. யந்திரமும் எழுதப்பெற்றுள்ளது. எழுத்துப் பிழையுடன் காணப்படுகிறது.

No. 2460. மதுரைவீரன் மந்திரம்.
MADURAIVĪRAN MANTIRAM.

Pages, 3. Lines, 6 on a page.

Begins on fol. 66-*a* of the D 2457. MS. described under No.

Complete.

Similar to D, No. 2458.

Beginning :

மதுரைவீரன் மந்திரம்:—

ஓம் வீரா உலக வீரா பொரி பொரி வீரா மாரு மாரு வீரா தாக்கு தாக்கு வீராக் காரிக் குதிரைமேலேறிக் கறந்த சவுக்குங் கையிலேந்திப் பந்தப்பட்டாலும் வீசிக்கொண்டு பரந்துவாவீரா. பாய்ந்துவாவீரா. ஈரேழு லகமும் அலறி வாவீரா. குறங்குபோல் குதித்து வாவீரா. ஆகாசமும் பூமியு மடங்கி வாவீரா. சிற்றுளியும் புதுமாட்டுத்தோலும் வாச்சுளியும் எருமைமாட்டுத்தோலும் கொண்டு ஓடிவா வீரா. நிலையைத் தாடாவீரா. நிச்சயஞ்சொல்லடா வீரா. சத்தியந் தவறாத வீரா உன்னை நான் படிச்சு சேவிக்கும்போது எனக்கு வந்து நீ உறுதியாய் நிற்க. அரன் கைலாச

மூர்த்தி பாதத்தாணை. ஸ்ரீ மகாதேவர் பாதத்தாணை. உன் தாய் தகப்பன் பாதத்தாணை. என் குரு பாதத்தாணை. நீ வந்து நிலையைத் தரவேண்டும். சுவாமியின் குரு பாதத்தாணை. சிவாய. மதுரைவீரன் மூல மந்திரம் ஓம், க்லீம், வீரமான கிலீ வீரா மத்தகா மத்தகா உத்தகிலி வீரா பிறந்தமூர்த்தி பக்கத்தில் வருவாய் பகர்ந்து தருவாய் இஷ்டத்தைச் சொல்வாய் ஈசன் மகனே பகர்ந்தபாலாய சிவாய உரு (ராஅ) (ரூராஅ)

End :

ஓம் உகந்த வீரா. உக்கிரத்து வீரா. அரும் வீரா. அமர்ந்த வீரா. உச்ச உருமத்திலே பொம்மக்காளுண்மை தேவதையின் முன்னே செசெ. சேத்தே வாடா சதியதே சகல குல வல்லபா. ஐம்கிலீம் சௌம் அடி யென்றுரை அடிபிடி யென்றுரைப் பிடி அகரு பகரு ஆதி சிவன்றன் ஆணை. மதுரை மீனாட்சி பாலகா வா. வாராமலிருந்தால் அனவாதாண்டவா வாராகி கோவிலிலே உன் நிணத்தை யெடுத்து அம்மன் தன்னாணை. திருவிளக்கேற்றுவேன். சுவாமி யென் குருவினாணை சுவாஹா ( )

(கு. - பு.)—

இச் சிறு நூல் மந்திர சாஸ்திரத்தைச் சார்ந்ததாய் மதுரையிலே கோயில் கொண்டிருக்கும் மதுரைவீரன் என்னும் தேவதையின் விஷயமான சில மந்திரங்களை யெடுத்து உணர்த்துகின்றது. இத்தேவதையே போலும் காசி ராசனுக்கு மகனாய்த் தோற்றித் திருமலை ராயனுக்குப் போர் வீரனாக வமர்ந்திருந்து மதுரைவீரன் என்பதாகப் பேர் பெற்று இருந்து பின்னர்க்காலவசத்தான் மனிதர் வடிவம் நீத்துத் தன் நிசவுருவைக்கொண்டது. இவ்வீரன் விஷயமாக அம்மானையென்ற பிரபந்த விசேஷமும் ஒன்று உண்டு. அதிலே இக் கதையை விரிவாகக்காணலாம்.

No. 2461. கரு சாஸ்திரம்.

KARUŚĀSTIRAM.

Pages, 34. Lines, 6 and 7 on a page.

Begins on fol. 68-*a* of the MS. described under No. D. 2457. Complete.

Similar to the work described under No. D. 1869.

Beginning :

மருந்து அட்டவணை :—

வெள்ளையெருக்கம் வேர், வெள்ளைக் குன்றிமணி வேர், வெடத்தலை மேல் புல்லு தட்டு புன்றி மஞ்சள் வேர், நாயுருஞ்சி பூண்டு வேர், வட்டகாச்சியிலை வேர், சிதில்புன்றி வேர், காற்செடி பூவு மார்க்கல் பழம் ௩. முள்ளு இலை, பொடுதாலை சுண்டைமரம் வேர் ஆக மருந்து (௰உ)

எங்கு எங்குப் பூசியிட எங்கையின் நீறு
வெற்றிகொள்ள வசீகரம், என்னையெதிர்த்து
அய்யனது திக்கை நெஞ்சத்துட்பார்த்து
எங்கை நீறு என்னையெதிர்த்த மந்திரவாதியை
என் நெஞ்சத்துள் பார்த்து எங்கை நீறு.
என்னையெதிர்த்த சத்துருவாதியை நெஞ்சத்துள் பார்த்து என்
கைநீறு.

மாரையிமறசத்தி ? பிள்ளையார் காக்க, வயிற்றைச் சிங்கமர் காக்க, தொப்புளைக் கந்தசாமி காக்க, இடுப்பை இராச எலி காக்க, தொடையைத் துருக்கை காக்க, முழங்காலை மூருத்தி ஐயனூர் காக்க * * * * * பல்லைப் பாருவதி காக்க, நாக்கைக் கருணன் காக்க.

இராச வசியத்துக்குச்சந்தணப்பொட்டு :

வெள்ளெருக்கலம் வேர், வெள்ளைச் சாரணை வேர், வெள்ளைக் குன்றி வேர், விடத்தலை மேல் புல்லுருவி, பச்சை மஞ்சள் சமன்கொண்டு பன்னீர் விட்டரைத்துத் திலதமிட.

புருஷர் வசியம் :—

செந்தாமரைக்கிழங்கு, கவிழ்த்தும்பை வேர், கோரோசனை ரசம், பச்சை கற்பூரம் சமன் கொண்டு சூரிய கிரஹணத்தில் பன்னீர் விட்டரைத்து உண்டைபண்ணித் திலதமிட்டுச் செல்ல இவளைக் கண்ட புருடருக்கு ஊர்வசியைக் கண்டு மயங்கினாப்போலே மயங்கும்.

End :

பேய் ஓடிப்போக வேறு :—

மெய்யடை சொரித்தவளைவாயில் குங்கிலியம் வைத்து . . . . கைபிடித்த பேருக்கு அந்தப் புகையைப் பிடிக்க ஓடிப்போம், வேறு :—

* * * * * * *

இது கரு சாஸ்திரத்தைச் சார்ந்ததாய் இராச வசியம், புருஷ வசியம், விலங்கு தெரிக்க, அக்கினியில் நடக்க, தண்ணீரில் விளக்கெரிக்க, முதலான பலவருமையான காரியங்களுக்குரிய கருக்களைப் பிரயோகிக்குமுறைமையினை யெடுத்துணர்த்துகின்றது. சில சக்கிரங்களும் பொறிக்கப்பட்டுள.

No. 2462. நிமித்த சாஸ்திரம்.

NIMITTAŚĀSTIRAM.

Substance, palm-leaf. Size, 6 × 1¼ inches. Pages, 126. Lines, 5 on a page Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete.

Similar to the work described under No. D. 2017.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 2017-ம் நம்பர் பிரதியிலே வந்துள்ள நூல்போன்றிருக்கிறது. இப்பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது. மிகவும் எழுத்துப்பிழையுடன் எழுதப்பெற்றிருக்கிறது. இந்நூலுக்குச் "சந்தனக்குறடு" என்பதாக ஒரு பெயர் குறிக்கப்பெற்றுளது. தொடு குறி சாஸ்திரம் முதலியவைகளைப் போன்றது.

No. 2463. சதமுக ராவணன் கதை.
ŚATAMUKHARĀVAṆANKATHAI.

Substance, palm-leaf. Size, 16¼ × 1-5/16 inches. Pages, 66. Lines, 6, 7 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete.

Same work as that described under No. D. 396.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 396-ம் நம்பரில் வந்துள்ள நூலேயாம். இப்பிரதியிலே இந்நூல் முற்றும் உளது. அப்பிரதிக்கும் இப்பிரதிக்கும் ஒரு சிறிது வசன நடையிலே வித்தியாசம் உளது. ஏடுகள் மிகவுஞ் சிதிலமாயிருக்கின்றன. எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன.

No. 2464. ரஹஸ்யத்ரயஸாரார்த்தம் (பரகாலநல்லான் ரஹஸ்யம்).
RAHASYATRAYASĀRĀRTHAM (PARAKĀLANALLĀN RAHASYAM).

Substance, palm-leaf. Size, 15-2/8 × 1¼ inches. Pages, 594. Lines, 7 on a page. Character, Tamil and Grantha. Condition, slightly injured. Appearance, old.

Complete.

Same work as that described under No. D. 901.

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 901-வது நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியிலே இந்நூல் முற்றும் உளது. இறுதியேட்டில் இப்பிரதி யெழுதிவைத்த நாளையுணர்த்தும் "சுசம்சஹஸ்ரு விபவவர்ஷம் தக்ஷிணயனம் ஐப்பசிமீ வெள்ளிக்கிழமை உத்திராஷாடம் அஷ்டமீ சுக்லபக்ஷம் இவ்வளவுங் கூடின சுப தினத்தில் 'பரகாலநல்லான் ரஹஸ்யம்' எழுதி முடிந்தது. லாஞ்சன ஸ்ரீ வேங்கடாசார்யதாஸனுகிய அண்ணயாசார்யரது ஸ்வஹஸ்தலிகிதம்" என்ற இத்தொடர் மொழியும் இதே பொருள் கொண்ட ஓர் வடமொழி சுலோகமும் உளது.

No. 2465. பெருமாள் திருமொழி வியாக்கியானம்.

PERUMĀḶ TIRUMOḶI VIYĀKHYĀNAM.

Substance, palm-leaf. Size, 15-2/8 × 1-10/16 inches. Pages, 108. Lines, 7 on a page. Character, Telugu. Condition, much injured. Appearance, old.

Complete.

Begins on fol. 1-*a*. The other work herein is Nāycciyārtirumoḷi-vyākhyānam 55-*a*.

A Commentary on Kulaśēkharapperumāḷtirumoḷi which is a part of the *Nālāyiradivyaprabandham.*

By Periyavāccān Piḷḷai.

Beginning :

பெருமாள் திருமொழி வியாக்கியானம்.

ஶ்ரீய:பதியாய் ஜ்ஞாநாநந்தைகஸ்வரூபனாய் ஸமஸ்தகல்யாண குணாத்மகனாய் உபய விபூதியுக்தனாய் ஸர்வஸ்வாமியான ஸர்வேஶ்வரன் அடியாகப் பெருமாள் பெற்றது ஸத்வாரமாந ஜ்ஞாநமாகையாலே க்ரமத்தாலே காண்கிறோமென்று ஆறியிருக்கலாவது தந்தலையாலே வந்ததாகிலிறே. அவன்றானே காட்டக்காண்கிறவராகையாலே அப்போதே காணவேண்டுகையாலே விடாய் பிறந்தது. பரமபதத்தில் அநுபவிப்பது குணாநுபவமாகையாலே அந்த ஸௌஶீல்ய குணங்கள் பூர்ணமான கோயிலிலே அநுபவிக்கப் ப்ரார்த்திக்கிறார். இங்கநுபவிக்கக் குறையென்? ப்ரார்த்திக்கிறது என்னென்னில் ஸாகேத்ரும் பிறப்பேயுடைய ராகையாலே மநுஷ்யர் சிந்திப்பார் பலருண்டாகையாலே இங்குவந்து அநுபவிக்கமாட்டாதே "அடியார்கள் குழாங்களையுடன் கூடுவதென்றுகொலோ," என்றும், "அந்தமில் பேரின்பத்தடியரோடிருந்தமை," யென்றும் நம்மாழ்வார் ப்ரார்த்தித்துப் பெற்ற பேற்றை இங்கே யநுபவிக்கப் ப்ரார்த்திக்கிறார்.

முதற்பாட்டு:—"இருளிரியச்சுடர்," இத்யாதி. ப்ரஜ்ஞ விதேஹ்யிலே சொல்லுகிறபடியேயிறே ஸர்வஸர்வேஶ்வரனா யிப்பது. அத்தையிங்கே திருவநந்தாழ்வான்மேலே சாய்ந்து கிடக்கிற விடத்திலே அநுபவிக்க மநோரதிக்கிறார். ஸம்ஸாரி முக்தனாய்ச் சென்றால் "வாபேநாரோஹதி," இத்யாதிப்படியே எழுந்தருளியிருக்கிற பர்யங்கத்திலே மிதித்தேறினால் "நீ யார்," என்றால் "நான் குமாரன்," என்பாரைப் போலே "அஹம் ப்ரஹ்மாஸ்மி," என்றிறே இவன் சொல்லுவது. இருள் இரியச் சுடர மணிகள் இமைக்கும் நெற்றி=இருள் சிதறிப்போம்படி ஜ்யோதிஸ்ஸையுடைய மணிகள் விழிக்கிற நெற்றியும்.

இனம் துத்தி அணி பணம் ஆயிரங்கள் ஆர்ந்த=இனமான துத்தி : அதாவது, இரண்டாய்ச் சேர்ந்த திருவடி நிலையென்று சொல்லுகிறவற்றை யுடைத்தான படங்கள் ஆயிரத்தையும் பூர்ணமாகவுடையனாய் ; அரவு அரசன் பெருஞ்சோதி=நாகராஜா வென்னும் மஹா தேஜஸ்ஸையுடையனாய் ; அனந்தன் என்னும்=எல்லாவற்றையும் வியாபித்து நிற்கிற ஸர்வேஸ்வரனை ; ? விளாக்குலை கொள்ளுகிற ஸ்வரூபாநு ரூபகுணங்களை யுடையராகையாலே ' அநந்தன் ' என்றுசொல்லப்படுகிற வென்றும்,

* * * * * * *

* * * * * * *

என்கண் இணைகள்=பட்டினிவிட்ட வென்கண்கள் ; என்று கொலோ ? களிக்கும் நாளே = அங்கே கண்டு " அஹமந்நம் அஹமந்நம் " என்று களிக்கும் களிப்பை இங்கே கண்டு களிப்பது என்றோ ? உ || க ||

இனி இரண்டாம் பாட்டு :—

" வாயோரீரஞ்ஞூறு " ஊதி

* * * * * * *

End :

பத்தாம்பாட்டு :— ' அன்று சராசரம் ' :— ' கவிஜேக்ஷாஃ வஸிஷ்ாநாஃ,' என்று வ்யதிரேகத்தாலே அவைபட்ட வ்யஸநப்பாடு அறிந்தருளுகையாலே " நொவாஸக்த ஃயொஜ்யாயாம் ஸூஷூக்ஷ ஃவிஜூஸ்யெ | திரஶ்யொநி மதாஸ்வாநெ வடவெஷாஃ ஃந-வ்ர தாஃ" || என்கிறபடியே இளையபெருமாளோபாதி அவையிற்றையும் வாஃவஉத்துக்குப் போகவிட்டு, ' நற்பாலுக் குய்த்தனன் ' என்னக் கடவதிறே : அடலரவப் பகையேறி=ஸவஜாதிக்கு ஜநஸகஜ வான பெரிய திருவடியை மேற்கொண்டு கஸூஸவமத்தை வென்று அந்த வீர ஸ்ரீயோடே கூடி நின்று விளங்குகிற திருத் தோள் நாலோடுங்கூட அங்குள்ளார் எதிர்கொள்ளும்படி யெழுந் தருளிப் பரமபதத்திலே போய்ப்புக்கு * * * * * * * திருநாமப் பாட்டு : ' தில்லைநகர்,' ஊதி :— ஹாவொநாநக்ஷுமஞுகி . . . . தான் விடமாட்டாதே யிங்கே வந்து நிதஃவாஸம் பண்ணுகிறவனை ; எல்லையில் சீர் ஊதஃாதி :— வஹஹமணவாளன சக்கிரவர்த்திக்கு ' விதாஃ ஸாவயாஃவ ' என்றதாய்ப் பிள்ளை பிறந்தது தொடக்கமாகப் பரமபதம் புக்கது முடிவான வுண்டான ஸ்ரீராமாயண கலையை * * * * * * * * * குடைக் குலசேகரன் சொற் செய்த=வெண் கொற்றக் குடையுடையரான ஸ்ரீ குலசேகரப் பெருமாள் அருளிச்செய்த ; நல் இயலின் தமிழ்

மாலை பத்தும் வல்லார்=அழகிய இயலையுடைய தமிழ்மாலை பத்தை யும் வல்லார்; நலம் திகழ் நாரணன் அடிக்கீழ் நண்ணுவாரே=பரம பதத்திலே விளங்கா நின்றுள்ள ஸர்வேஶ்வரன் திருவடிகளைக் கிட்டப்பெறுவார்கள்.

பெருமாள் திருமொழி வியாக்கியானம் முற்றும்.

குலசேகராழ்வார் திருவடிகளே சரணம்.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் -காடலாக்கு 785-வது நம்பரில் வந்துள்ள 'பெருமாள்' திருமொழி என்ற திவ்விய பிரபந்தத்திற்குப் 'பெரிய வாச்சான்,' பிள்ளை இயற்றியருளிய விரிவுரையாகும். இப்பிரதியில் இது முற்றும் உள்ளது. ஏடுகள் மிகச் சிதைவுற்றிருத்தலோடு தெலுங்கு எழுத்தில் எழுதப்பெற்றுள்ளது.

No. 2466. நாய்ச்சியார் திருமொழி வியாக்கியானம்.
NĀYCCIYĀR TIRUMOḺI VIYĀKHYĀNAM.

Pages, 234. Lines, 7 on a page.

Begins on fol. 55 of the MS. described under No. D. 24–65.

This is a Commentary by Periyavāccān Piḷḷai on the work described under No. D. 761. Printed.

Complete

Beginning :

நாய்ச்சியார் திருமொழி வியாக்யானம்.

அவதாரிகை:—வைராக்யஸ்ரீகாரம் பண்ணி வைராக்யத்தையும் நிக்ஷேபித்தாராய் நின்றது கீழ்: இந்த வைராக்யவத்தியிறே இத்தலைக்கு வேண்டுவது. அது இத்தலையிற் கண்ணழிவித்திருந்தது. அவன் பக்கலிலே அபிநிவேசம் கரைபுரண்டிருந்தது. அநந்தரம் அபிநிவேஶ ஸாதநாவமாகப் பெற்றுக்கொண்டு நிற்கக் கண்டதில்லை. இத்தலையிலே ஒரு ஹேதுவைக் கொள்ளிலிறே அது பக்வமாய்ப் பெறுகிறோமென்றிருக்கலாவது: அதுக்கு அங்ஙனன்றிக்கே யிருந்தது. இனிப் பரிக்ரஹித்த ஸாதனம் பலத்தோடு வ்யாப்தியில்லாதபடி ஸித்தமாய் இருந்தது. இங்ஙனே யிருக்கச் செய்தே பலிக்கக் காணாமையாலே யதாக்கா யதாக்கு நிர்வேணம் பண்ண க்ஷமரல்லாதபடி கலங்கி அபிமத விஷயத்தைப் பிரிந்தார் தரியாட்டுங் கூடுகைக்கு மடலெடுக்குமாப்போலே பிரிந்தாரைக் கூட்டிப் போருகையே ஸ்வபாவமாக வுடையரான என்னுமிதுவேய் ப்ருசாக காலோ ஶ்ரயணம் பண்ணிப் பெறுகையிலே உபக்ரமிக்கிறாள். பெருமாளை

யல்லது அறியாத திருவயோத்யையிலுள்ளார் அவர்க்கு நன்மை யெண்ணி ‘ஸர்வே தேவா நமஸ்யந்தி,’ என்று தேவதைகள் காலிலே விழுந்தார்களிறே. இவ்வஸ்து தன்னைப் பரதசையிலும் வேண்டேன் (திருவடி) ‘நசோஷ்ட வாஸுதேவ,’ என்றானிறே ‘ராஜாராஜமாத்ருகம்ஷிது,’ என்கிறபடியே [ஸு] (ஸ்துதிஷ்டான ஸாத்விகரோடே சேர்ந்து ஸம்வத்ஸராஶ்ரயணம் பண்ணக்கடவதாயிருக்க, ஸாத்விகாக்ரேஸரான ‘பெரியாழ்வார்’ வயிற்றிலே பிறந்தவள் ராஜோகுணப்ரசுரரான தேவதைகள் காலிலே விழும்படியாய்த்துக் கலங்கினபடி. இப்படிப்பட்ட கலக்கத்தாலே பிரிந்தாரைக் கூட்டுமென்னு மிதுவே கொண்டு ஸமாஶ்ரயணம் பண்ணுகிறாள். * * * * * * * * *

வடபெருங் கோயிலானுடைய திருக்குழலிலே வெடிக்க வேண்டும் என்று கருமுகையை ஸாபேக்ஷியா நிற்பர். இவனுடைய வ்ராவ்ருத்தரை யிருக்கிறபடி காமன் காலிலே ஒரு மதமத்த மலராகிலும் முருக்க மொட்டாகிலும் வெடிக்க வேண்டுமென்று மதமத்தை முருக்கு இவையிற்றை ஸாபேக்ஷியா நிற்கும். வடிகர் உகந்ததே தேடியிட வேண்டுமிறே.

முதற்பாட்டு:— தையொரு திங்களும்:—மார்கழி மாஸம் ஒரு மாஸம் நோன்பு நோற்றார்களாய் நின்றதிறே. இனித் தையொரு மாஸமும் அவன் வரும் தலத்தை யலங்கரித்து. (தையொரு திங்களும்) “செங்கண்மால் எங்கண்மா லென்ற நாளெண் நாளும் நாளாகும்,” என்று ஸர்வேஶ்வரன் பக்கலிலே ஸூசகவ்ருத்தம் பண்ணினான் என்றறிவது. ஒரு நாளுண்டானால் காலக்ரயமும அடிக்கழஞ்சு பெற்றுச் செல்லாநிற்குமிறே. இப்படி யொரு நாளை யானுகூல்யம் மிகை யென்றிருக்கும் பகவத் விஷயத்தைப் பற்றி வைத்திறே இவன் காலிலே ஒரு மாஸமாகத் துவளப் பார்க்கிறது. தறை விளக்கி=ஸர்வேஶ்வரனுக்கு ஸமாராதனமான ஸ்தலங்களிலே புக்குப் பரிசர்யைப் பண்ணிப் போரும் குடியிலே பிறந்தவளிறே: தறை விளக்கி:—திருக்கண்ண மங்கையாண்டான்போலே இது தானே ப்ரயோசனமாகச் செய்கிறபடி. பகவத் கைங்கர்யம் பண்ணுகைக்கு ஸ்தல சுத்தி பண்ணுகிறபடியிறேயிது; தண்மண்டலமிட்டு=குளிர்ந்து தர்ஶநீயமான மணடலத்தை யிட்டு, தொழுது எழுதும் என்னுமிது மிகையான விஷயத்தைப் பற்றிவைத்து இங்கே மண்டல பூசை பண்ணுகிறாளிறே யாற்றாமை மிகுதி; மண்டலமிட்டு:—

* * * * * * * * *

End :

நிமமத்தில் : 'பருத்தாள்,' இத்யாதி :—பருத்துப் பெரியதாளை யுடைத்தாய், சரீரம் பருத்தவத்தனையும் பாடாற்ற வரிதாயிருக்கு மிறே ; அப்படிப்பட்ட யானையானது தன்னிலமல்லாத வேற்று நிலத்திலே புக்கு முதலைவாயிலே அகப்பட்டு இடர்ப்பட்டு அதினுடைய ஆர்த்தத்வநி செவிப்பட்ட வநந்தரம் ஆயுதாபரணங்களை க்ரமமாகத் தரித்துக் கொண்டு ரக்ஷகத்திலே தன்னையெண்ணுற் பின்னையொருவர் இல்லாதபடி யிருக்கிறவனை. "ஸமாவேக ஸாவேகி:", என்னுமாப்போலே இதனுடைய விடாயுடையத் தனக்குப் பூர்வக்ஷணத்தில் உண்டானபடியும், அதனிடரைப் பரிஹரித்தாற்போலே தன்னிடரைப் பரிஹரித்தபடியுஞ் சொல்லுகிறது.

* * * * * * * *

மருந்தாம் என்றும்=இதுதான் 'ஸம்ஸாரபேஷஜம்,' என்னு தந்தாமுடைய ஹ்ருதயத்திலே வைத்துக்கொண்டு, 'நஸிஹேதி கிஞ்சந,' என்கிறபடியே யிருக்குமவர்கள் ஸாவேக்ராக்யமாய் நிரதிசயபோக்யமா யிருந்துள்ள திருவடிகளை யுடையவன் திருவடிகளிலே : பிரியாது என்றும் இருப்பாரே=சிலரைக் கண்டீரே என்று கேட்கவேண்டாதே என்று மொக்கத் தங்கள் கண்ணாலே கண்டு நித்யாநுபவம் பண்ணுமதுவே யாத்ரையாகப் பெறுவர்.

நாச்சியார் திருமொழி வியாக்கியானம் முற்றும்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ ஸேனைமுதலியார் திருவடிகளே சரணம் |
ஸ்ரீ ஸேனாதிபதி திருவடிகளே சரணம் |
ஸ்ரீ ஸ்வாமி திருவடிகளே சரணம் |
ஸ்ரீநிவாஸ திருவடிகளே சரணம்.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 761-ம் நம்பரில் வந்துள்ள 'நாய்ச்சியார் திருமொழி' யென்ற திவ்வியப் பிரபந்தத்திற்குப் 'பெரியவாச்சான்பிள்ளை,' யியற்றியதோர் விரிவுரையாகும். மணிப்ரவாள நடையுடைத்து. இஃது அச்சிடப்பெற்றுள்ளது. இப்பிரதியில் இந்நூலின் முதல் திருமொழி (எ)-ம் பாட்டு தொடங்கி மூன்றாந் திருமொழியில் அவதாரிகை வரையிலான பகுதிகள் நீங்கலாக மிகுதியான பகுதிகள் முழுமையு மிருக்கின்றன. தெலுங்கெழுத்தான் எழுதப்பெற்றுள்ளது. ஏடுகள் மிகச் சிதைந்திருக்கின்றன. இடையில் சில வெற்றேடுகள் விடப்பட்டுள.

No. 2467. திருவாய்மொழி தெலுங்கு பிரதிபதவுரையுடன்.
TIRUVĀYMOḶI WITH TELUGU MEANING.

Substance, palmleaf. Size, 17¼ × 1-10/16 inches. Pages, 290. Lines, 8 on a page. Character, Telugu. Condition, much injured. Appearance, very old.

Complete.

The *Tiruvāymoḷi* with word-for-word meaning in Telugu.

Beginning :

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி தெலுங்கு பிரதி பதவுரை.

பக்தாம்ருதம் விஶ்வஜநாநுமோதநம் ஸர்வார்த்ததம்
ஶ்ரீ ஶடகோப வாங்மயம் |
ஸஹஸ்ர ஶாகோபநிஷத் ஸமாகமம் நமாம்யஹம்
த்ராவிட வேத ஸாகரம். ||

தனியன் :

திரு வழுதிநாடென்றுத் தென்குருகூரென்றும்
மருவிய வண்பொருநலென்றும்—அருமறைகள்
அந்தாதிசெய்தான் அடியிணையே யெப்போதும்
சிந்தியாய் நெஞ்சே தெளிந்து. || க ||

திருவழுதிநாடென்றும் — திருவழுதிநாடனின்னி; தென் — ரம்ய மைன, குருகூர் என்றும்—குருகாபுரீயனின்னி; மருவு—அவகாஹிஞ்சடகு, இனிய—ப்ரியமைன, வண்—உதாரமைன, பொருநல் என்றும்.= திருத்தாம்பிரபர்ணியனின்னி, அரு—அபூர்வமையெரிகேடந்துகு அசக்யமைன, மறைகள் அந்தாதி செய்தான். . . . . அந்தாதிசேசின ஆழ்வாருலயொக்க, அடிஇணையே—ஶ்ரீபாதத்வந்தவமுனே, எப்போதும்—எப்புடுன்னு, சிந்தியாய்—சிந்திஞ்சுமா, நெஞ்சே—மனஸா ! தெளிந்து—தெலிசி. || க ||

* * * * * * *

முதற்பாட்டு :—" உயர்வறவுயர்நலம் ".

உயர்வற வுயர்நல முடையவன் யவனவன்
மயர்வற மதிநல மருளினன் யவனவன்
அயர்வறு மமரர்கள் அதிபதியவன் அவன்
துயரறு சுடரடி தொழுதெழென்மனனே. || க ||

பிரதிபதம் :—உயர்வு—இதராதிசயமு, அற—பொய்யேடட்டு, உயர்—அதிசயிஞ்சன, நலம்—ஆநந்தமுனு, உடையவன்—கலிகினவாடு, யவன்—எவடு ?, அவன்—வானியொக்க, மயர்வு—அஜ்ஞானமு, அற—பொய்யேடட்டுகானு, மதி நலம்—மஞ்சிஜ்ஞானமுனு, அருளினன்—இருபசேசினவாடு, எவன்—எவ்டு ?, அவன்—வானியொக்க, அயர்வு—விஸ்மிருதி,

அறும்—லேனி, அமரர்கள்—நித்ய ஸூரியலகு, அதிபதி—ஸ்வாமி, யவன்—எவடு?, அவன்—வானியொக்க, துயர் அறு—துக்கநிவர்த்தமைன, சுடர்—தீப்தமைன, அடி—திருவடிகளுனு, தொழுது, ஆஸ்ரயிஞ்சி, எழு—அபிவிருத்தி பொந்துமா என்மனனே —நாமனஸ்ஸா ! || க ||

End :

அவாவறச் சூழரியை யயனையரனை யலற்றி
அவாவற்று வீடு பெற்ற குருகூர் சடகோபன் சொன்ன
அவாவிலந்தாதிகளாலி வையாயிரமுமுடிந்த
அவாவிலந்தா திப்பத்தறிந்தார் பிறந்தாருயர்ந்தே. || கக ||

பதவுரை :—

அவாவறச்சூழரியை—அபிநிவேசமு. . . . ட்டுகானு சுட்டுகொன்ன ஹரியை, அயனை—ஹிரண்ய கர்ப்பாந்தர்யாமியைனஸ்வாமினி. அரனை—பசுபதி பதப்ராப்யருத்ராந்தர்யாமியைன ஸ்வாமினி, அலற்றி—மொரரவேடி : ? அவாவற்று—அபிநிவேசமொடுகி, வீடுபெற்ற—மோக்ஷமு பொந்தின, குருகூர் சடகோபன் சொன்ன, ஆழ்வாரலானதிச்சின, அவாவிலந்தாதிகளில் ? ஸங்க விகார ராஹித்ய மவுசுன்ன முக்தபதக்ரஸ்த்தமைன, இவை ஆயிரம் உ முடிந்த, ஈவெயின்னமொகிவின, அவாவிலந்தாதி இப்பத்து அறிந்தார்—வாஸங்க ராஹித்யமை முக்தபதக்ரஸத்தமைன ஈபதின்னி, எரிங்கினவாரு, உயர்ந்து பிறந்தார். திருவாய்மொழி ஸமாப்தி புட்டிரி.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீயஃ பதிஆண்டாள் ஆழ்வார் எம்பெருமானுர்
மணவாளமாமுனி ஸ்ரீஜீயர்கோவு
ராமாநுஜ நரஸிம்ஹ ஸ்ரீநிவாஸ மஹாதேசிகேந்த்ர
நமோநமஃ.

ஸ்ரீலக்ஷ்மீ நரஸிம்ஹாய நமஃ.
ஸ்ரீந்ரு ஸிம்ஹாய நமஃ ||

(கு. - பு.)—

- இந்நூல், டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 716-வது நம்பர் பிரதியில் வந்துள்ள நூலுக்குத் தெலுங்கில் அமைந்த பிரதிபதவுரையாம். இப்பிரதியில் ஆதி தொடங்கி முற்றிலுமிருக்கிறது. ஏடுகள் சிதைந்துள. தெலுங்கெழுத்தில் எழுதப்பெற்றிருக்கிறது. உரை நடை தெலுங்கில் அமைந்து நன்றுயிருக்கிறது. உரையாசிரியர் இன்னுரென்று விளங்கவில்லை. சில ஏடுகள் மிகவும் முறிந்துகிடக்கின்றன. எழுதின முறையும் நன்றுயிருக்கிறது

No. 2468. ஸ்ரீ வசன பூஷண வியாக்கியானம்.
ŚRĪVACANABHŪṢAṆAVĪYĀKHYĀNAM.

Substance, palm-leaf. Size, 16¼ × 1½ inches. Pages, 520. Lines, 6 on a page. Character, Telugu. Condition, much injured. Appearance, very old.

Almost complete.

Same work as that described under No. R. 66.

இந்நூல் மூவருடக் காடலாக்கு 66-வது நம்பர் பிரதியில் வந்துள்ள தேயாம். இப்பிரதியில் இந்நூல் இறுதியான பகுதியில் ஒரு சிறிது பாகம் ஒழிந்து மிகுதியான பகுதி முற்றும் உளது. ஏடுகள் மிகவும் புழுக்களான் அரிக்கப்பெற்றுப் பல ஏடுகள் அடியோடு முறிந்துங்கிடக் கின்றன. தெலுங்கெழுத்தில் எழுதப்பெற்றுளது.

No. 2469. திருக்குறள் சரவணப்பெருமாளையர் உரையுடன்.
TIRUKKURAḶ WITH THE COMMENTARY OF ŚARAVAṆAP-PERUMĀḶAIYAR.

Substance, palm-leaf. Size, 18-6/16 × 1½ inches. Pages, 704. Lines, 8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

This is a Commentary by Tiruttaṇikai Śaravaṇapperumāḷaiyar on *Tiruvaḷḷuvarkuṟaḷ*. Printed.

Beginning :

தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் அருளிச்செய்த திருக் குறளின் உரை : திருத்தணிகை சரவணப் பெருமாள் ஐயரால் சிறுவர் முதலிய யாவரும் எளிதின் உணரும்படியாகப் பரிமேலழகர் உரையைச் சுருக்கிவெளிப்படையாக்கிப் பதவுரையும் தாத்பர்யவுரையுமாகச் செய்யப் பட்டது. இதனோடு திருவள்ளுவமாலைக்கும் உரை செய்து சேர்த்து இருக் கின்றது.

கலியுகஞு சதககாஙக. சாலிவாகன சகஞு கூளாருமவ. இங்கிலீஷ்ஞு கூஅசாஙம. ஆகிய இதில் நிகழ்கின்ற விகிருதிஞு சென் னப்பட்டணத்தில் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

முச்சகத்தினு முறை முழுதுணர்வினருணர்
சச்சிதானந்தத்தனி நிலையதனொடு
தோன்று மயனரி யரனெனத் தொழிலொரு
மூன்று முறை செய்மூன்றுருவாயொளிர்
ஈசனையன் பொடு மிறைஞ்சுதுந்
தேசுயர்ப்புலமையின் சீர் பெறற்பொருட்டே.

உரைச்சிறப்புப்பாயிரம் :—

நிலைகிளர் விழுமிய நிகமாதிகளெலாம்
மலைகிளர் கட..லிய த்ததேயந்தொறும்
வீற்று வீற்றுய்க் கெழுஉ விளங்குபன்மொழியினும்
போற்றுறு தலைமையிற் பொதுவதாயெங்கணும்
கடவுளர்க்குரித்தாகலிற் கீர்வாணமென்றிடு
பெயர்த்தாம் வடமொழியினுளிருத்தலாற்
சிலர்க்கல தோதலுஞ் செழும் பொருளுணர்தலும்.

* * * * * * *

End :

திருவள்ளுவமாலை உரையுடன் :—

நரிவேரு உ த்தலையார் :—

இன்பம் பொருளறம் வீடென்று மிந்நான்கும்
முன்பறியச் சொன்ன முதுமொழி நூன்—மன்பதைகட்கு
உள்ளவரி தென்றவை வள்ளுவருலகம்
கொள்ளமொழிந்தார் குறள். || ||

இதன் பொருள் :—இன்பமும் பொருளும் அறமும் வீடுமாகிய இந் . . .

(கு. - பு.)—

இந்நூல் திருவள்ளுவனூர் குறளுக்குத் திருத்தணிகை சரவணப் பெருமாளையர் அவர்கள் இயற்றிப்போந்ததோர் அரியவுரையாகும். இதில் இது முற்றுமிருக்கிறது. இறுதியிலே திருவள்ளுவமாலை உரையுடன் இருக்கிறது. அது அரைகுறையாகவுளது. ஏடுகள் சிறிது சிதைத்துள. இது முன்னர் இங்கிலீஷ்ஷு சூஅாஙடி 1830-ம் வருஷம் சென்னையிலே அச்சிடப் பெற்றுளது என்றதாய் ஓர் குறிப்பு முதலேட்டிலே காணப்படுகிறது.

No. 2470. கூர்ம புராணம்.
KŪRMAPURĀṆAM.

Substance, palm-leaf. Size, 17¼ × 1¾ inches. Pages, 390. Lines, 15 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Same work as that described under No. D. 548.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 548-வது நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இது முற்றும் உளது. அப்பிரதிக்கும் இப்பிரதிக்கும் அநேக விடங்களில் பிரதிபேதங்கள் காணப்படுகின்றன. ஏடுகள் மிகவும் புழுக்களான் அரிக்கப்பெற்றுச் சிதைந்திருக்கின்றன.

No. 2471. வாயு சங்கிதை.
VĀYUSAṄGITAI.

Substance, palm-leaf. Size, 14-2/8 × 1¾ inches. Pages, 290. Lines, 8 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Almost complete.

Same work as that described under R. No. 593 (*a*).

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 593(a)-வது நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் இறுதியில் ஒரு சிறிய பகுதி நீங்கலாக மிகுதியான பகுதி முற்றும் உளது. இடையிலே 46-ம் ஏடு இல்லை. 117-ம் ஏடு ஒன்று எழுதாமலே விடப்பட்டிருக்கிறது. அன்றியும் அங்கங்கே ஊடேயூடே சிலசில பாடல்களில் சிறிய பகுதிகள் எழுதாமலே விடப்பட்டிருக்கின்றன.

No. 2472. சிவஞானபோதம் உரையுடன்.
ŚIVAÑĀNABŌDHAM WITH MEANING.

Substance, palm-leaf. Size, 7 × 1¼ inches. Pages, 270. Lines, 8 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance old.

Complete.

Begins on fol. 1-*a*. The other work herein is Śivappirakāsaccintanai 136(a).

Similar to the work described under No. D. 1274.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1274-ம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூலைப்பெரும்பாலும் ஒத்துளது. இவ்வுரையாசிரியரின் பெயர் இதிலிருந்தும் விளங்கவில்லை. இப்பிரதியிலே இவ்வுரை நூல் முற்றும் உளது.

No. 2473. சிவப்பிரகாசச் சிந்தனையுரை.
ŚIVAPPIRAKĀŚACCINTANAIYURAI.

Pages, 192. Lines, 8 on a page.

Begins on fol. 136(a) of the Ms described under No. D. 2472.

Almost complete.

Same work as that described under No. D. 1312.

With slight difference of reading.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1312-வது நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் இறுதியில் ஐந்து பாடல்கள் நீங்கலாக மிகுதியான பகுதி முழுமையும் அங்கங்கே ஒரு சிறிது வித்தியாசத்துடன் உளது. எழுத்துப்பிழைகள் காணப்படுகின்றன. ஏடுகள் ஒரு சிறிது சிதைந்துள.

No. 2474. சிவ பூஜாவிதி வசனம்.
ŚIVAPŪJĀVIDHI PROSE.

Substance, palm-leaf. Size, 14 × 1½ ; 11¾ × 1½ ; 12¾ × 1¾. inches. Pages, 36. Lines, 8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 1. The other works herein are Gurumoḷivināvalakareal 19. a. Śvapujāvidhi. 31. a.

Complete.

Similar to the work described under No. D. 1340.

Beginning :

விடிய அஞ்சு நாழிகைக்கு எழுந்திருந்து சுசியாயிருந்தாலும் அசுசியாயிருந்தாலும் கால் கை சுத்தி பண்ணிக்கொண்டு வடக்கு முகமாயிருந்து விபூதி தரித்துப் பிராணுயாமம் கரந்யாஸம் அங்கந்யாஸம் இவைகளைப் பண்ணி யதாசக்திசெபித்துச் சமையியாகுல் உருத்திரமூர்த்தியைத்தியானம் பண்ணவும். நிர்வாணியாகுல் நிஷ்களமாய்த் தியானம் பண்ணவும். யதா சக்தி தோத்திரம் பண்ணி விபூதித்தரித்து வெளியே புறப்படவும். இந்தப்படி பண்ணுமல் வெளியிலே போகுல் அன்றைக்கு உபவாசமாயிருந்து பஞ்சகவ்வியங்கொண்டு "அகோரத்தால்" இருநூறு செபிக்கவும்.

தியானவிதி முற்றும்.

இனி சௌச விதி :—ஈசான திக்கு விட்டு மற்ற திக்கிலே ஆலயத்துக்கு நூறு தண்டு பிரமாணம் அப்புறம் போய் வஸ்திரத்தை உச்சி செவி மறையும்படியாகக் கட்டிக்கொண்டு * * *
விளை நிலம் யாறு குளம், வீதி மடம், கோயில்கள், சலக்கரை வழி, மர நிழல் பசு மாட்டு மந்தை, அறுகம் பூமி, குழிமேடு * * *
இப்படிப்பட்டவிடங்களிலே போகலாகாது. போகுல் சர்வ சங்காரமளவும் ? நரகம் வரும். இப்படிப்பட்ட இடமல்லாத விடத்திலே போய் ஒரு துரும்பைப்போட்டு மூன்று தரம் கையைத்தட்டிப் பூமி தேவியை அப்புறம் விலகினவளாகப்பாவித்துக்கொண்டு * * *

End :

அஸ்திரத்தால் செபித்து இருதய மந்திரத்தாலே இருதயத்திலே யொடுக்கிக்கொள்ளவும். அர்க்கியங்களையும் அஸ்திரத்தால் தெறித்து இருதயத்திலே யொடுக்கிக்கொள்ளவும். கால் அலம்பிக்கொண்டு விபூதி

தரித்துப் பிராணாயாமம் கரநியாஸம் அங்கநியாஸம் பண்ணி அகோரத்தால் நூற்றெட்டு உரு ஜெபித்துப்பின்னும் பிராணாயாமம் கரநியாஸம் அங்கநியாஸம் பண்ணவும்.

சிவ பூசாவிதி முற்றும்.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1340-வது நம்பர் பிரதியில் வந்துள்ள நூல்போன்று சிவ வழிபாட்டிற்கு உரிய பூஜா முறைமையினை யுணர்த்துகின்றது. இது வசனத்தால் அமைந்துளது. இப்பிரதியில் இந்நூல் முற்றும் உளது. ஏடுகள் ஒரு சிறிது முறிந்துஞ் சிதைந்துமுள.

No. 2475. குருமொழி வினாவலகவல்.
GURUMOḺIVINĀVALAKAVAL.

Pages, 24. Lines, 9 on a page.

Begins on fol. 19-*a* of the MS. described under No. D. 2474.

Complete.

A treatise on the good results of worshipping God Śiva.

Beginning :

குருமொழி வினாவல் அகவல் :—

நற்குஞ்சரக்கன்று நண்ணிற்கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்.

அருவாய் நின்றாய் குருவே யென்றதென்
நீக்கமில் குருவே தீக்கை யென்றதன்
அந்தமில் குருவே மந்திர மென்றதென்
மாசில் குருவே யாசமித் தென்பயன்
திட்டமாய்ப் பின்னர்த் தொட்டதென் தொடுமிடம்
சத்தியமான வத்திர சத்தியென்
சுற்றையுதைத்தோன் நீற்றுச் சுத்தியென்

* * * * *

பச்சைமாமயிலிச்சையாற்றவம்புரி
கச்சிப்பதியிலிச்சையாலுயர்ந்தோன்
மழவைக்கதிபன் தழுவக்குழைந்தான்
புண்ணிய முதல்வன் எண்ணிய சற்குரு
நாதன் பொன்னடி நீதியால் வணங்கி
யாசறு வனுஷ்டான மாதியாகப்
பாசமதகல வீசியவகவல்
மாசற வினாவல் வகுத்துகொண்ட
தேசுள திகழ் மனவாசகங் கடந்தான்
பூசனைமுடிவாய்ப் புகன்றனன் மகிழ்ந்தே.

அகவல் முற்றும்.

உரை :—

அருவாய் நின்றுய் குருவே யென்றதென் என்பது, அரூபியாயிருக்குஞ் சிவனே தேவரீர் குருமூர்த்தியாக வெழுந்தருளினது என்னையெனின் சிவன் விஞ்ஞானகலா பிரளயாகலா சகலராகிய மூவகையான்மாக்களையும் அனுக்கிரகஞ் செய்யுமிடத்துச் சாதாரமாயும் நிராதாரமாயும் அனுக்கிரகஞ் செய்வன். நிராதாராமாவது, தீவிர தீவிரதா சத்திநிபாதத்தையுடைய விஞ்ஞானகலர் பிரளய கலர் இவர்கட்குச் சிவன்றன்றுனே நிராதாரமாய் அனுக்கிரகஞ் செய்வது.

End :

மந்திரபாவனையினுலே தற்சொரூபங் கெட்டுச் சத்தி சொரூபமாம். ஆதலால் சுத்தி செய்யவேண்டிற்று. மந்திரங்கள் எப்பொழுதும் சுத்தமாயிருக்க மந்திரசுத்தி செய்வான் என் என்னில் மந்திரங்கள் எல்லாம் அதிகார மலத்துடனே கூடித் திரோதான சத்தியினுலே மறைப்புண்டிருக்கையினுலே பிராசாத மந்திரத்தைச் சமைய முதலிய நால்வரும்.

(கு. - பு.)—

இந்நூல் சைவ சித்தாந்தத்தைச் சார்ந்ததாய் உளது. 'மனவாசகங்கடந்தார்' என்னும் சைவ சித்தாந்தியாரால் இயற்றப்பெற்றதென்று அறியக்கிடக்கின்றது. குருவானவர் சீடருக்குச் சிவபூசையினையுணர்த்தின போது அச்சிவபூசையில் உள்ள ஒவ்வொரு செயலுக்கும் இன்ன இன்னபயன் என்பதனையுணர்த்தவேண்டுமென்னக் குருவானவர் அச்செயல் ஒவ்வொன்றினையும் எடுத்து விளக்கி அவைகட்கு இன்னின்ன பயன் ஆகும் என்று விடையிறுப்பதாய் அமைந்துள்ளது. இது அகவற்பாவான் அமைந்துளது. முடிந்தவுடன் இதற்கு விளக்கவுரையொன்று அரைகுறையாகவெழுதப் பெற்றிருக்கிறது. உரையாசிரியர் இன்னுர் என்று விளங்கவில்லை.

No. 2476. சிவ பூசாவிதி.
ŚIVAPŪJAVIDHI.

Pages, 18. Lines, 12 on a page.

Begins on fol. 31-*a* of the MS. described under No. D. 2474.

Contains stanzas 12 to 95 only.

Similar to the work described under No. D. 1339.

Author's name is unknown.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காடலாக்கு 1339-வது நம்பரில் வந்துள்ள நூலையொத்து சிவார்ச்சனையில் உள்ள ஒவ்வொரு அங்கச் செயலினையும் இத்தன்மைத்து என்று செய்யுள் நடையில் அமைந்து உணர்த்துகின்றது. அந்தாதியாகவமைந்துள்ளது. இப்பிரதியிலே இந்நூலின் (மஉ to கரு) 12—95 ஆன பாடல்களேயிருக்கின்றன. முன்னேயும் பின்னேயும் பல ஏடுகள் காணப்பெறவில்லை. உள்ள ஏடுகளும் மிகவும் முறிந்தும் சிதலுற்றுங் கிடக்கின்றனவாதலின் பாடல்கள் படித்தற்கரியனவாயிருக்கின்றன நூலாசிரியர் பெயர்காணப்பெறவில்லை.

No. 2477. சிலப்பதிகார வரும்பத விளக்கவுரை.
ŚILAPPADIKĀRAVARUMPADAVIḶAKKAVURAI.

Substance, palm-leaf. Size, 25¾ × 1 inches. Pages, 132. Lines, 6 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Explains the meaning of difficult words in the *Śilappadhikāram*.

Beginning :

சிலப்பதிகார வரும்பதவிளக்கவுரை :—

கரும்புமிள நீருங் கட்டிக்கனியும்
விரும்பும் விநாயகனே வேண்டி—யரும்பவிழ்தார்ச்
சேரமான் சொன்ன சிலப்பதிகாரக்கதையைச்
. . . . யாவேதரி.

உரை :—குணவாயிற்கோட்டம்—திருக்குணவாயிற்கோயில், சேரல் என்பது—செங்குட்டுவனே ; சேரனுக்கு இளங்கோவாகிய அடிகளே. இளங் கோவடிகள்தாம் துறந்திருந்து இக்காவியஞ் செய்தார். கொழுநிழற்கண் நின்று காட்ட: கண் என்றது. கண் என்கின்ற புலம். காண ; விட்புலம்—விண் என்கிற விடம் : அது பட்டது. போர்சிறப்பு நீங்காத பெருமை, நாடகமேத்து நாடகக் கணிகை—நாடகத்தையாடிச் சிறப்பிக்குங் கணிகை. ஆடிய கொள்கை(யின்)—இவனுடிய கோட்பாட்டால்.

End :

*நிறைவதாவது :—காப்பன காத்துக் கடிவன கடிந்தொழுகல். ஓர்ப் பாவது—ஐயப்பட்ட பொருண. . . பொருளெனத் துணிந்தறிதல் கடைப்பிடியாவது—கற்றுங்கேட்டுமுள்ள பொருளே மறவாமை * * * * நாணமாவது—பெண்டிர்க்கியல்பாகிய குணம். மடமாவது—கொளுத்தக் கொண்டு கொண்டதுவிடாமை. அச்சமாவது—கணவர் காணுதை பொரு ளேக் கண்டாலஞ்சுவது. பயிர்ப்பாவது—பயிலாத பெ(ா)ருட் கணருவருத்து நிற்கு . . .*

வருந்தருகாதை முற்றும்.

(கு. - பு.)—

இது, இளங்கோவடிகளியற்றிய சிலப்பதிகாரம் என்னும் நூலின் அரிய பதங்கட்குப் பொருளின்னதென விளக்குவது. அச்சிடப்பட்டுள்ள பிரதியினும் சிற்சிலவிடத்துப் பாடபேதமுள்ளது. இந்தப் பிரதியின் ஏடுகள் சிதைந்துள. இப்பிரதியில் இந்நூல் முடிவுபெற்றுள்ளது.

No. 2478. யயாதிவிலாஸம்.
YAYĀTIVILĀSAM.

Substance, palm-leaf. Size, 18½ × 1 inches. Pages, 254. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Songs embodying the story of Yayāti of Puranic fame.

Beginning :

யயாதி விலாசம்.

விநாயகர் காப்பு வெண்பா.

திங்கண் மரபிற்ரேன்றுஞ் சீரார் யயாதியின் மேற்
றுங்க விலாசமியான் சொல்லவே—அங்கத்தை
மஞ்செனத்தரித்த வீசன் மஞ்சையற்குமுன்பயின்ற
மஞ்சனைப் பணிந்து வாழ்த்துவாம்.

சுப்பிரமணியர் அறுசீர் அடியாசிரியவிருத்தம்.

நயங்கொள் புயங்கக் கேதனன் பால்நண்ணிப்
பொறுமைதனிற்சிறந்த
செயங்கொள் பஞ்சபாண்டவர்க்குத்
திருநாடிரந்த பெருமானின்
வயங்கொண் மருகனெனவுதித்து வானோர்
துயரத்தினைத் தவிர்த்துத்
தயங்குசமரூருறை நீபத்தாரோன்
பதுமத்தாள் பணிவாம். || க ||

திருமால் அறுசீர் அடியாசிரிய விருத்தம்.

மால்வாரணத்திலுழலாம் மன்னுமடியார்க்கருள்புரிய
மால்வாரணத்தின் மகவெனவே வடபல்லவத்திற்றுஞ்சிறைவர்
வால்வாரணத்தனருந்தவரு மலரிற்ரேன்றுந்திசை முகனும்
வால்வாரணத்தன் காணரிய மாயோன் பதுமத்தாள் பணிவாம்.
|| உ ||

திருமகள் விருத்தம்.

திரைபுனை கடல்கள் சூழ்ந்த திண்புவியினிற்றுதித்த
இருபுனைத்துருவனுக்கன்றினியநற்பதவியீந்து
வருவினையகற்றுமாயன் மன்னியவுரத்தில் வாழ் செந்
திருவினை வணங்கியானுஞ் சிந்தையிற்றுதி செய்வேனே.
|| ௩ ||

* * * * *

சரஸ்வதியறுசீரடியாசிரிய விருத்தம்.

நிலைமையுள புலவருடை யிதயமலர்
மிசையினிலே நின்று நாளும்
நலமுடனே வரமுதவு நாமகளின்
நளினபதம் நாளுமேத்தித்
தலமுழுது மோர்குடைக்கீழ்த் தலைமை
யுடனே செங்கோல் தனி நடாத்தும்
வலமுழர் யயாதி யெனு மகிபனுடைச்
சரிதமதை வழுத்துவேனே. || ||

* * * * *
* * * * *
* * * * *
* * * * *

பாடினோன் விருத்தம்.

சீராருமதிமரபு நகுடனீன்ற
செம்மல் **யயாதி சரிதைத்** திகழும்பாரில்,
பேராரும்படியிசை விலாசமாகப்
பேசினுன் றகை**பையநக**ரில் வாழும்
ஏராருஞ் சீர்கருணர் மரபுசெம்ம
லெழிற்செயமாமுனிகோத்திரனிணையில்லாத,
வாராருமுகில் **வீராசாமி** யீன்ற
வரதராஜனென்னும் கவிவல்லோனே.

அவையடக்கம்.

மன்கவியுந் தருந்தேவயானைதன்னை
மதிமரபு நகுடனருள் யயாதி வேந்தன்,
வன்கவின் செய்மன்றல் புரிசரிதைமிக்கோர்
மாநிலத்தில் வழுத்தியநல் வடநூல் தன்னை,
மின் கவிஞரிட பாத்து(க்)களிறனுனு
மிக(ச்)சிறியேன் விலாசமென வியந்துரைத்த
புன்கவியு மென்கவியாய்க் கருதியன்பு
பொருத்துவார் புகழ்பரவு புலவர் மாதோ.

மங்களம். இராகம். பந்துவராளி.

ஆதி தாளம்.

மங்களம் மங்களம் செயசுப மங்களம் மங்களம்.
அங்கண் மாதிரத்தினில் அடியார்க்கருள் விளைக்கும்
அத்திவதனருக்கும், அரிவை வல்லபைக்கும்,

மங்களம்.

வடபல்லவத்தினிற்கண் வளராத மூலனுக்கும்
மரைமலரினுதித்த வயமுறுமாதினுக்கும்,
திடவிருடியார் துதி திகழாறுமுகனுக்கும்
தேவயானைக்குமெழில் சேரும் வள்ளி தனக்கும்

மங்களம்.

நானிலத்திற்புகழும் நாவலருக்கு வாக்கும்
நற்றிறமுமருளி(ச்) சித்தம் மகிழ்ந்துகாக்கும்,
தூநிலவுபாரதி சுருதியன புகழோர்க்கும்
சூலபாணியுமைக்குஞ் சொலத்திருபுரியூர்க்கும்.

மங்களம்.

இந்திரன்போலரசாண்ட இகல் யயாதிகோனுக்கும்
இடபன்மனு மளித்த விகல் சன்மிட்டை மானுக்கும்
தந்தைக்கிளமை தந்த தகை தருமவானுக்கும்
தம்பியெனவே வருதகைமையிருசூனுக்கும்—

மங்களம்.

விநாயகர் வருகிற விருத்தம்.

சீருயரவனியெல்லாஞ் செழித்திடச் செங்கோல் கொண்ட
பேருயர் மன்யயாதி பிறங்குள சரிதை கூற
ஏருயர் சுருதியன்ன விலகிய[ப்] பாரதத்தை
மேருவிலெழுதும் பால விநாயகர் வருகின்றுரே.

விநாயகர் வருகிற தரு—இராகம்—கலியாணி.

தாளம்—ரூபகம்.

பால விநாயகர் வந்தார்—ஆதி
மூல விநாயகர் வந்தார்
ஞாலமெல்லாம் புகழ்—கோலவாகு வேறி
நன்மையுறும் பைய நகர்தனிற் செய்ய—பாலவி.

* * * * *

* * * * *

கட்டியன் சொல்—கட்டியம்.

நாற்றிசைகண் முழிதினும் வாத்திய நிரைமேவு
நரலையெனவே முழங்க
ஞானப்பிரகாச முன் காணவிருடியரெலா
நன்ருக வாசி கூற,
மாற்றலர்களஞ்சிநனி போற்றி செய்தேயிரு
மருங்கினு நெருங்கி(ப்) பணிய
வாகுவிற் சிறந்தகனி பாகுநேர் மதுரமொழி
மங்கையர் நிருத்தஞ்செய்ய
சாற்றருங் கேள்வி மனு நூற்றெரியமைச்சர்கள்
தருக்குடன் கூடிவரவே
சந்திரவட்டக் குடையை யந்தமாய்த் தாங்கியே
தகைமையுள வரசர் சூழ
ஏற்றமுள கவிஞர் துதி யாற்றவே கீர்த்திமலி
யிறை யயாதியும் வருகிருர்.
எங்கணு மிருந்து வந்திங்கு வைகினவர்கள்
யாவரு மெச்சரிக்கை.

End :

முடிசூட்டல்—விருத்தம்.

இராகம்—தோடி.

உலகிலுறு மெண்ணேழுதேசத்துற்ற
யுத்தம வேந்தர்(கணெ)(நெ)ருங்கி யுகந்து போற்ற,
இலகு புகழ் வியாசர் முதல் தவத்தோரெல்லா
மியலுடனுசிகள் கூற விமையோர் வாழ்த்த,
கலசை மருவிய வத்திணுபுரத்திற்
சதிருடனே யெங்கு மலங்காரஞ்செய்து
நலமுடனே நவமணிகளிழைத்த கிரீடம்
நாட்டினுர் பூருவுக்கு(ச்) சூட்டினரே.

பூரு ராஜன் மகுடாபிஷேக தரு.

இராகம்—சௌராஷ(்ட்ர)கம்.

அபிஷேகங் கொண்டானே—சொல்
அருமறை மொழிப்படி, பெரு நவமணிமுடி
அபிஷேகங் கொண்டானே.

* * * * *

* * * * *

அற்புத முடியினை நற்றவ வியாசரும்
பற்றி(க்) கரத்திற் சிரத்திற்றரித்து—மெய்
ஆட்சியிற் கவனிப்பாய் மனமே—வெகு
காட்சியாக வாழ்ந்திடவே மகுடாபிஷேக

* * * * *

* * * * *

சுடர் முடி தனது மூப்பினைக் கவர்ந்த
சுதனுக்கு விருப்பமாய் நல்கி
சொல்லு மூவாசை யாவையு மொழித்து(த்)
துன்னலர் பணியும் யயாதி
தொடர்வினை யகற்றி நற்கதி யடைய(த்)
துன்றிய வனத்திடைப்புக்கு(த்)
தூயருந் தவருந்தான் சிரந்துளக்குந்
தோமிலாக் காதிமைந்தனைப் போல்
படர் புகழ் சரசமலரயன் கழலை(ப்)
பதித்திதயத்தினிற் கருதி(ப்)
பகருந் தவங்கள் புரிந்திட(ப்) பகவன்
பரிந்து யயாதிமுன் தோன்றி

இடரறு வருங்களீந் தாண்டமுழுது
மியங்க விமானமு நல்க,
இனிமையாய்(ப்) பெற்று(ச்) சத்தியலோக
மெய்தியே வைகினன் மாதோ.

இப்பால் வாழி விருத்தம்

பொன்மருவுங்கந்திருவர் முனிவர் வாழி
போதன் வாமனன் பித்தன் புனிதன் வாழி,
சொன்மருவு மீதலர் பூதலரும் வாழி
தூயிரவிமதியுடு கந்தரமும் வாழி,
மின்மருவும் யயாதியுஞ் சன்மிட்டை வாழி
வேளீனய பூருமுதல் மூவர் வாழி,
மண்மருவு தருமகுணதியரும் வாழி
வாசித்தோ ரெழுதினோர் கேட்போரும் வாழி.

(கு. - பு.)—

இந்நூல், சந்திரவமிசத்தரசராகிய யயாதி மகாவரசனது சரிதத்தை விளக்குவது. இசைப்பாடல்களாலாகியது. இயற்றியவர் பையனூர் வரதராஜபிள்ளை யென்பவர். செய்யுள் நடை தாழ்ந்தது. பிழையும் சில விடத்துள. இந்தப் பிரதி சிதைந்திருக்கின்றது.

No. 2479. ஞானசார வியாக்கியானம்.
JÑĀNASĀRAVIYĀKHYĀNAM.

Substance, palm-leaf. Size, 15½ × 1-6/16 inches. Pages, 132. Lines, 6, 7 on a page. Character, Tamil and grantha. Condition, injured. Appearance, old.

Begins on fol. 1-*a*. The other work herein is Pramēyasāraviyākhyānam 67-*a*.

Complete.

Same work as that described under No. R. 42 (c).

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக் காடலாக்கு 52 (c) நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

No. 2480. பிரமேய ஸார வியாக்கியானம்.
PIRAMĒYASĀRAVIYĀKHYĀNAM.

Pages, 34. Lines, 6 on a page.

Begins on fol. 67-*a* of the MS. described under No. D. 2479.

Complete.

Same work as that described under No. R. 52(*d*).

(கு. - பு.)—

இந் நூல் மூவருடக் காட்லாக்கு 52 (d)-ம் நம்பர் பிரதியில் வந்துள்ளநூலேயாகும். இப்பிரதியிலே இந்நூல் முழுமையும் உளது. இதன் ஏடுகள் பல முறிந்துஞ் சிதலுற்றுமிருக்கின்றன.

No. 2481. அருணசல புராணம் உரையுடன்.
ARUṆĀCALAPURĀṆAM WITH COMMENTARY.

Substance, palm-leaf. Size, 16¾ × 1¼ inches. Pages, 424. Lines, 8—10 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, very old

Complete.

Same work as that described under No. D. 550.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 550-ம் நம்பர் பிரதியிலே வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியிலே இந்நூல் முழுவதும் இருக்கிறது. இதன் ஏடுகள் மிகவுஞ் சிதலூற்றுக் கிழிந்தும் முறிந்தும் இருக்கின்றன. இதற்கும் அதற்கும் பிரதிபேதங்கள் காணப்படுகின்றன.

No. 2482. பெரிய புராணம்.
PERIYAPURĀṆAM.

Substance, palm-leaf. Size, 12¾ × 1¼ inches. Pages, 938. Lines, 8 on a page Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete.

Same work as that described under No. D. 620.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 620-ம் ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ளதேயாகும். இந்தப் பிரதியில் இது முழுதும் இருக்கிறது. இதன்ஏடுகள் மிகவும் சிதலூற்றுச் சிதைந்தும் முறிந்துமிருக்கின்றன.

No. 2483. பஞ்சபட்சி சாஸ்திரம்.
PAÑCAPAKṢIŚĀSTIRAM.

Substance, palm-leaf. Size, 5 × 1 inches. Pages, 112. Lines, 5 on a page Character, Tamil. Condition, good. Appearance, old.

Seems complete.

Similar to the work described under No. R. 164-(b).

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 164 (b)-ம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூல் போன்று ஆருட விஷயத்தை யெடுத்து உணர்த்துகின்றது. இடையில் வசியம் முதலான பல தொழில்களுக்கும் உரியதான காலத்தினையும் அவற்றுக்குரிய சில மந்திர யந்திரங்களையும் எடுத்துணர்த்துகின்றது. அங்கங்கே சில மந்திரமடைத்த சக்கிரங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. முற்றுப்பெற்றதென்று தோன்றுகிறது.

No. 2484. இராமாநுஜ ரஹஸ்யத்ரயம்.
IRĀMĀNUJARAHASYATRAYAM.

ubstance, palm-leaf- Size, 8 × 1½ inches. Pages, 52. Lines, 6 to 8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Explains three sacred and secret formulas, which have for their central object Śrī Rāmānuja Ācārya, the Apostle of *Śrī Vaiṣṇavism*, whose worship is inculcated, as equivalent to that of God Śrī Viṣṇu.

Beginning :

இராமாநுஜ ரஹஸ்யத்ரயம்.

அஸ்மத்³கு³ருப்⁴யோ நம:.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

பாதா³யத்யாபவர்க³ம் ப⁴க்த்யா தத்வதோ வேத³ ஸாத்⁴யகம் |
ஜ்ஞாநஹஸ்த்யாதி ஜயம் ஸம்வந்தே ஸாந்த்வநா தே³ஶிகம் ||

அநாத்³யவித்³யா ஸஞ்சிதாநந்த பாபபுண்ய கர்மவஶனாய் தே³வதிர்யக்³மநுஷ்ய ஸ்தா²வர ஶரீரங்களைப் பரிக்³ரஹித்து ஸம்ஸாரியாய் ஜந்மமரணனாய் தந்நிஸ்தரணோபாயம் அறியாத சேதனனுக்கு நிர்ஹேதுக கடாக்ஷத்தாலே அத்³வேஷாபி⁴முக்²யஸத்வோத்கர்ஷாதிகள் உண்டாய் ஸதா³சார்ய ஸமாஶ்ரயணம் பண்ணின அதிகாரிக்கு மோக்ஷைக ஹேதுவாய் பரம ரஹஸ்யம் ஆன ராமாநுஜ திருமந்த்ரம் அறியவேணும் ;—

அம்மந்த்ரம் அறியும்படி எங்ஙனே யென்னில் :—

'ஓம் நமோ ராமாநுஜாய' என்று எட்டு திருவக்ஷரமாய் ஓம் என்றும், நம: என்றும், ராமாநுஜாய என்றும் மூன்று பதமாய் இருக்கும்: இதில் முதல் பதமாய் ஏகாக்ஷரமான ப்ரணவம் அகாரம் என்றும், உகாரம் என்றும், மகாரம் என்றும் மூன்று திருவக்ஷரமாய் மூன்று பதமாய் இருக்கும். இரண்டாம் பதமான 'நமஸ்' ந என்றும் ம: என்றும் இரண்டு திருவக்ஷரமாய் இரண்டு பதமாய் இருக்கும்: மூன்றாம் பதமான 'ராமாநுஜாய' பதம் அஞ்சு திருவக்ஷரமாய் ராம என்றும், 'அநுஜ' என்றும் இரண்டு பதமாய் மேல் 'ஆய' என்று சதுர்த்தியாய் இருக்கும்: இதற்கு அர்த்தம் முதல் பதமான அகாரத்தாலே எம்பெருமானைச் சொல்லுகிறது: "அகாரோ விஷ்ணுவாசக:", என்றும், "அக்ஷராணாமகாரோஸ்மி," என்றும், 'அகாரார்த்தோ விஷ்ணு:' என்றும் நாராயண வாசகமான அகாரம் எம்பெருமானைச் சொல்லுகை எங்ஙனே? என்னில் :—"ஸாக்ஷாந்நாராயணோ தே³வ: க்ருத்வா மர்த்யமயீம் தநும் | மக்³நாநுத்³த⁴ரதே லோகாந் காருண்யாச்சாஸ்த்ரபாணிநா", என்றும், "ஆசார்யஸ்ய ஹரிஸ்ஸாக்ஷாச்சரரூபீ ந ஸம்ஶய:", என்றும், "பீதகவாடைப் பிரானார் பிரம குருவாகிவந்து", என்றும், இப்படி ஸகல ப்ரமாணங்களாலும் சொல்லுகிறபடியே ஸ்ரீமந்நாராயணனே ஆசார்யனாகையாலே "தஸ்மிந் ராமாநுஜார்யே கு³ருரிதி ச பத³ம் பா⁴தி நாந்யத்ர," என்றும், "ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜக³த்³கு³ரு: | ஸ ஏவ ஸர்வலோகாநாம் உத்³த⁴ர்த்தா நாத்ர ஸம்ஶய: ||" என்றும், 'ஆசார்யதே³வோ ப⁴வ,' என்று தனியே யொரு பதம்: அதன்னது எம்பெருமானார்க்கே

என்றும், ஜூவாய-லெ-குதி-லெ எம்பெருமானுர்க்கே யுண்டாகை யாலே ஸகாரவாஷ்ர் எம்பெருமானுர் ஆகைவிகூ' | * *
* * * * * * * * * *

ஷுயவ்ாகாணம் :— ஷுயம் இரண்டு வாக்யமாய் ஆறு பதமாய்ப் பத்தர்த்தமாய் இருபத்தைந்து திருவக்ஷரமா யிருக்கும் : அதெங் ஙனே ? என்னில் :—ஸ்ரீமநாராயண சரணௌ ஶரணம் ப்ரபத்யே | ஸ்ரீமதே நாராயணாய நம: | என்று இரண்டு வாக்யமாய் ஸ்ரீமந்நாராயண சரணௌ என்றும், ஶரணம் என்றும், ப்ரபத்யே என்றும், ஸ்ரீமதே என்றும், நாராயணாய என்றும் நம: என்றும் ஆறு பதமாய் * * * * * * *
* * * * * * * * * *

சரமஶ்லோக வ்யாகாணம் - சரமஶ்லோகம் இரண்டு அர்த்தமாய்ப் பதி னொரு பதமாய் முப்பத்திரண்டு திருவக்ஷரமாய் இருக்கும். அதெங் ஙனே யென்னில் :—

" ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ ।
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச: ||" என்று இது இரண்டு; அர்த்தமாய் ஸர்வதர்மாந் என்றும், பரித்யஜ்ய என்றும், மாமேகம் என்றும், ஶரணம் என்றும், வ்ரஜ என்றும், அஹம் என்றும், த்வா [ஸர்வேப்ய:] (பாபேப்ய:) என்றும், மோக்ஷயிஷ்யாமி என்றும், மா என்றும், ஶுச: என்றும் பதினொரு பதமாய் இருக்கும். இதில் பூர்வார்த்தத் தாலே அதிகாரி க்ருத்யத்தையும், உத்தரார்த்தத்தாலே உபாய க்ருத்யத் தையுஞ் சொல்லுகிறது : ஸர்வதர்மாந் என்கிற பதத்தாலே தர்மஜ்ஞாநஶக்தி வ்யக்திகள் சொல்லப்படுகி(ன்றன) * * *
* * * * * * * * * *

End :

இவ்வர்த்தம் ஜ்ஞாநமண்டபமான திருநாராயணபுரத்தில்......காலத் திலே முதலியாண்டான், எம்பார், திரு நாராயண புரத்தரையர், மாருதியாண்டான், உக்கல் அம்மாள் இவ்வைவருக்கும் (பிரஸா தித்து) இதை ஒருத்தருக்கும் வெளியிட வேண்டாம் ; இதில் வ்யக்தி வக்தி பிறக்கிறது துர்லபமா யிருக்குங்காணீர் !" என்று அருளிச் செய்து, "நம்பிறவிதானே ஸர்வோத்தாரகமாய் இருக்கும். நம் மைப் பற்றி நிர்ப்பரராய் இருங்கோள். ஒரு குறையும் இல்லை (முக்தி) பெறலாம்", என்று அருளிச்செய்து 'ஸ்ரீக்ருஷ்ணம்', என்று தம்முடைய விக்ரஹத்தை இவர்களுக்கு ப்ரஸாதித்தருள இவர்களும் கண்டு இனி நமக்கு எம்பெருமானுர் திருவடிகளே

ஶரணம் என்று விஸ்வஸித்திருக்கையாலே நமக்கும் இதுவே தஞ்சம். இவ்வர்த்தம் பரம ரஹஸ்யம் என்று ஸம்ப்ரதாயமாகக்கடவது || இந்த ரஹஸ்யம் ஸம்ப்ரதாயிகள் அளவும் வந்திருக்கிறபடி எங்ஙனே யென்னில் திருமலைநம்பி எம்பாரை எம்பெருமானார்க்கு யாவதாத்மபாவியாக ஸமர்ப்பித்த பின்பு * * * * *

இனி நான் பெரிய திருமலை நம்பியை யறியேன், தேவரீர் திருவடிகளே தஞ்சம் என்று விண்ணப்பஞ் செய்யக் கேட்டருளி அப்போதே எம்பெருமானாரும் இவருடைய அத்யவஸாயத்துக்குப் போரவுகந்தருளி இம்மந்த்ரத்வயமும் ப்ரஸாதித்தருளினார்; சரமஶ்லோகம் ப்ரஸாதித்தபடி தானே உண்டாகையாலே அங்குச் சொல்லுகிறதாம்: இந்த ரஹஸ்யத்ரயம் எம்பெருமானார் எம்பார்க்கு ப்ரஸாதிக்க அவர் பட்டர்க்கு, பட்டர் நஞ்சீயர்க்கு, நஞ்சீயர் நம்பிள்ளைக்கு, நம்பிள்ளை வடக்குத் திருவீதிப் பிள்ளைக்கு, அவர் லோகாசார்யர்க்கு, அவர் கூர குலோத்தமதாஸர்க்கு, அவர் திருவாய்மொழிப் பிள்ளைக்கு, அவர் மணவாளமாமுனிக்கு, அவர் வானமாமலைஜீயர் முதலானார்க்குப் ப்ரஸாதிக்க, இப்படி ஸம்ப்ரதாயார்கள் அளவும் வந்தது என்று ஸம்ப்ரதாயமாகும்.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்:

இராமாநுஜ ரஹஸ்யத்ரயம் முற்றிற்று.

கு - பு:—இந்த நூல், ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் வழங்கப்பெறும் திருமந்த்ரம் த்வயம் சரமஶ்லோகம் என்ற மூன்று ரஹஸ்ய மந்திரங்களைப் போலவே ஸ்ரீராமாநுசர் விஷயமாக அவற்றின் பொருள்களையே உட்கொண்டு 'ஓம் நமோ ராமாநுஜாய,' 'ஸ்ரீமத் ராமாநுச சரணௌ ஶரணம் ப்ரபத்யே' 'ஸ்ரீமதே ராமாநுஜாய நமஃ' "ஸர்வகர்மாணி ஸந்த்யஜ்ய ராமாநுஜ ஏகம் ஶரணம் வ்ரஜ | விஸ்ருஜ்ய ஸர்வபாபேப்யோ ஹம் த்வா மோக்ஷயிஷ்யாமி மாஶுசஃ ||" என்றமூன்று ரஹஸ்யங்களையும், அவற்றின் விரிவான பொருள்களையும் அறிவுறுத்தி, ஸ்ரீமந்நாராயணனே ஆசார்யராக அவதரித்தாராகலின் இருவர்க்கும் ஸ்வரூபாத்யவஸாயத்தை பேதமின்மையுங் கூறிச்சென்று இங்ஙனம் பொருள் கூறுதலில் உண்டாகும் அநுபபத்தியையும், அவற்றுக்குச் சமாதானத்தையும் பல ப்ரமாணங்களால் எடுத்துரைக்குமதாய் ஸ்ரீராமாநுஜரே ஸர்வருக்கும் உத்தாரகர் ஆவர் என்னு மதத்தை அறிவுறுத்துவது: இம்மூன்று ரஹஸ்யங்களையும் அவ்வெம்பெருமானாரே எம்பார் முதலான ஐந்தாசிரியர்களுக்கும் ஒரு கால விசேஷத்தே உபதேசித்ததாகவுங் கூறப்பட்டுள்ளது: ஆயினும் இவ்விதம் நூல் வடிவமாக இயற்றியவர் இன்னார் என்று

அறியக்கூட வில்லை: ஆனாலும் இந்நூலில் முதலில் எழுதியுள்ள தனியனால் வரதாசார்யரின் புதல்வரும் சிஷ்யரும் ஆன 'ஸுந்தர தேசிகர்' என்னும் ஒருவரால் தொகுக்கப்பெற்றிருக்கலாமோ வென ஐயமுறக் கிடக்கிறது.

No. 2485. ஸர்வமத சித்தாந்த ஸாரஸங்கிரஹம். SARVAMATASIDDHĀNTASĀRASAṄGRAHAM.

Substance, palm-leof. Size, 16 × 1¼ inches. Pages, 46. Lines, 4 to 5 on a page. Character, Tamil and grantha. Much injured. Appearance, old. Complete.

Summarises the doctrines of the various religions in India, and prefers the Śrī *Viśiṣṭādvaita* of *Ś*rī Rāmānuja Ācārya.

Beginning :

ஸர்வமத சித்தாந்த ஸார ஸங்கிரஹம்.

ஸர்வமத ஸித்தாந்த ஸாரஸங்க்ரஹம் பண்ணுகிறோம்: மதமாவது:—ஶாங்கராத்வைதம், விஶிஷ்டாத்வைதம். ஶாங்கராத்வைதம் | ஶாங்கராத்வைதம் ஆவது-ப்ரஹ்மத்துக்கும் ப்ரபஞ்சத்துக்கும் பேதம் இல்லை யென்கிறது. விஶிஷ்டாத்வைதம் ஆவது - ப்ரஹ்மத்துக்கும் ப்ரபஞ்சத்துக்கு ஸ்வாபாவிகஸம்பந்தம் . . . . . ஸாவெந கஶேஷம்: ப்ரஹ்மவிஶிஷ்டமாகாத வஸ்து இல்லை யென்கிறது: ஶாங்கராத்வைதம் ஆவது-ப்ரஹ்மம் வேறே ப்ரபஞ்சம் வேறே..... ஸாவெந ப்ரபஞ்சங்களுக்கு கஶேஷம் இல்லையென்கிறது. ஶாங்கராத்வைதம் இருக்கும்படி எங்ஙனே யென்னில்:—"ஏகமேவாத்விதீயம் ப்ரஹ்ம" என்கிற ஶ்ருதி ப்ரஹ்மம் ஒன்றே; இரண்டாவது இல்லை என்று சொல்லுகையாலே பிரம்மம் ஒன்றே, இரண்டாவதான பிரபஞ்சம் (அஸத்யம்) என்கிறது ஆகையாலே ப்ரஹ்மமே ஸத்யம். ப்ரபஞ்சம் அஸத்யம். என்னக் குறையில்லை. ஆனால் பிரபஞ்சம் தோற்றுகிறது எங்ஙனே யென்னில் கண்ணிற் குற்றத்தாலே முத்துச் சிப்பியிலே வெள்ளி தோற்றுகிறாப்போலேயும், வெளுத்த சங்கிலே கப்பு தோற்றுகிறாப் போலேயும் நிலத்தின் குற்றத்தாலே அந் நிலத்தில் கானலிலே தண்ணீர் தோற்றுகிறாப்போலேயும் ப்ரஹ்மத்தினிடத்திலே (அவித்யா தோஷத்தாலே) ப்ரபஞ்சம் தோற்றுகிறது. அஸத்யமாம்படி எங்ஙனே யென்னில்:—சிப்பியிலே தோற்றுகிற வெள்ளி...

* * * * * * * * * * *

* * * * * * * * * * *

End :

க்ஷயிகம் ப்ரஹ்மாநந்தம் என்று சொல்லித் தலைக்கட்டுகையாலே : இப்படிக்கொள்ளாவிடில் முக்தனுக்கும் பிரம்ஹத்துக்கும் ஸாதர்ம்யஞ் சொல்லுகிற ' நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி,' என்று ஶ்ருதியும் " போகமாத்ர ஸாம்யலிங்காச்ச " என்கிற ஸூத்ரமும் விரோதிக்கும். ஆகையால் நாதமுநி (யாமுநமுநி) ஆளவந்தார் முதலான மஹாதேசிகர்கள் காட்டின வழியே தஞ்சம் என்று கொள்ள வேண்டும் என்று நம்முடையவர் திருவுள்ளம் இருக்கும்படி :

ஸ்ரீமதே நம: | ஸ்ரீ ஸகலஶாஸ்த்ர ஸார ஸங்க்ரஹம் ஸமாப்தம்.
ஸ்ரீவாதிபீகர மஹாகுரவே நம: ||

கு - பு :—இக்கிரந்தம், ஸகல மத சித்தாந்தங்களையும் சுருக்கமாய் விளக்கிக் காட்டிக் கடையகத்து ' நாதமுனி யாளவந்தார் முதலான பெரியார்கள் பின்பற்றின மதமே ஸ்ரீ உடையவர்க்கும் ஸம்மதமாய் இருக்கும் ' என்றுக் கூறுவதால் விஶிஷ்டாத்வைத மதமே சிறந்தது என்று அறிவுறுத்துவது : இயற்றியவர் இன்னரெனத் தெளிய இயலவில்லை யாயினும் கடைசியில் ' வாதிபீகர மஹா குரவே நம: ' என்று ஒரு பெரியாரின் திருநாமங் காணப் பெறுவதால் அவரே இயற்றி யிருப்பினும் இருக்கலாம் என்று துணிய இடம் உள்ளது. ஏடுகள் மிகவுஞ் சிதலுற்று முறிந்தும் இருக்கின்றன. இறுதியில் (3) ஏடுகளில் " உக்தம் ஸகலம் ப்ரஹ்ம ஸம்வாத ஸூத்ரா " என்று தொடக்கமான வட மொழி ஶ்லோகங்கள் எழுதப்பெற்றுள.

No. 2486. ரஹஸ்ய த்ரயஸார வியாக்கியா ஸாரஸ்வாதிநீ

RAHASYATRAYASĀRAVYĀKHYĀ SĀRĀSVĀDINĪ.

Substance, palm-leaf. Size, 19 × 1¾ inches. Pages, 828. Lines, 6—8 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Contains Adhikāras 1 to 26.

Same work as that described under Nos. D. 975 and D. 976.

கு.பு.—இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 975, 976-ம் நம்பர் பிரதிகளில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூலின் 26 அதிகாரங்களின் வியாக்கியானம் ஆன பகுதியே உளது. இப்பிரதியின் ஏடுகள் சிதைந்திருக்கின்றன.

No. 2487. ரஹஸ்ய த்ரயஸார வியாக்கியா ஸாரஸ்வாதிநீ.
RAHASYATRAYASĀRAVYĀKHYĀ SĀRĀSVĀDINĪ.

Substance, palm-leaf. Size, 17 × 1¾ inches. Pages, 448. Lines, 8 on a page. Character, Tamil and Grantha. Condition, much injured. Appearance old.

Contains Adhikāras 1—3.

Same work as the above.

கு.பு.—இந்நூல் முன் பிரதியில் வநதுள்ளதே. இப்பிரதியில் ப்ரதாந ப்ரதிதந்த்ராதிகாரம் வரையிலான பகுதிக்கு மாத்திரம் உளது. இப் பிரதியின் ஏடுகள் எல்லாம் மிகச் சிதலுற்று முறிந்துகிடக்கின்றன.

No. 2488. ஸ்ரீ பாஷ்யார்த்த ஸங்க்ரஹம்.
ŚRĪBHĀṢYĀRTHASAṄGRAHAM.

Substance, palm-leaf. Size, 16½ × 1½ inches. Pages, 366. Lines, 8—10 on a page. Character, Tamil and Grantha. Condition, much injured. Appearance, old.

Incomplete.

Same work as that described under No. R. 868.

Beginning :

ஸ்ரீரங்கவேங்கட நாதார்ய:—ஶ்ரீ:.

ஸர்வவ்யாபாரநிர்முக்த ஸ்ரீபாஷ்யார்த்தஸங்க்ரஹ:,
தேஹலீதேஹலீதீபக: க்ருதிர்வாஸுதேவங்கட ராகவ: ||

* * * * * * *

ஆதௌ த்ருதீயஸ்லோகத்தாலே தாம் செய்தருளுகிற ஸ்ரீபாஷ்ய ஸாரத்துக்கு அவிக்நபரிஸமாப்த்யர்த்தமாக ஸ்ரீயஃபதி விஷயக ஸக்த ப்ரணாமாத்மகமான மங்களம் செய்தருளி [ஞா](நா)லு அத்யாயங்களிலே ப்ரதிபாத்யமான காரணத்வம், ஸாத்யத்வம், உபாயத்வம், உபேயத்வம் என்கிற அர்த்தங்களையும் ஸங்க்ரஹித்தருளினர். பாராஸர்யேத்யாதி ஸ்லோகத்தாலே ஸ்வக்ரந்தத்துக்கு விஷய ப்ரயோஜந ஸம்பந்தங்களைக் காட்டி ஆசார்யாபிவாதந ரூபமான மங்களத்தையும் செய்தருளினர்.

ஸமந்வயாத்யாயக இத்யாதி வாக்யத்தாலே ஸூத்ரத்துக்கு ஸங்கதியை யருளிச்செய்தார்.

அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா.

அத்ராயமபிப்ராய: உதாஹ்ருதவாக்யத்தாலே அத அத: என்கிற சப்தங்களுக்கும் அர்த்தத்தை ஸாதித்தருளினார். அதீதஸாங்கவேதஸ்ய இத்யாதியாலே கர்ம விசாரம் பூர்வவ்ருத்தம் ப்ரஹ்மவிசாரம் வக்ஷ்யமாணம். கர்மணாம் அல்பாஸ்திரபலத்வ நிர்ணய விசிஷ்டமான ப்ரஹ்மஜ்ஞான அனந்தஸ்திரபலத்வப்ரதீதி ப்ரஹ்மவிசாராரம்பத்திலே ஹேது என்று காட்டினார். ப்ரஹ்மணோ ஜிஜ்ஞாஸேத்யாதியாலே ப்ரஹ்மண: என்கிற ஷஷ்டிக்கு கர்மார்த்தத்தை ஸமர்த்தித்தார். ப்ரஹ்மஶப்தேந உதாஹ்ருதியாலே ஶப்தஶக்தியாலேயும் அர்த்தஸ்வபாவத்தாலேயும் ப்ரஹ்மஶப்தம் புருஷோத்தமனைப் ப்ரதிபாதிக்கிறது என்று ஸமர்த்தித்தார்.

(கு-பு.)—

இது மூவருடக் காட்லாக்கு 513-ம் நம்பர் பிரதியில் வந்துள்ளதின் பூர்வ பாகம். இதில் ஸூத்ர பாஷ்யம் முதலிரண்டு அத்தியாயங்களுக்கும் பின்னிரண்டு அத்யாயங்களுக்குமாகப் பூர்ணமாகவுளது. இந்தப் பிரதி மிகவும் சிதைந்துள்ளது.

No. 2489. ராம பட்டாபிஷேக ஸர்க்க வியாக்கியானம்.

RĀMAPAṬṬĀBHIṢĒKA SARGAVIYĀKHYĀNAM.

Substance, palm-leaf. Size, 16¼ × 1¼ inches. Pages, 88. Lines, 7 and 8 on a page. Character, Tamil and grantha. Condition, injured. Appearance, old.

Begins on fol. 1-*a*. The other works herein are Śrī Rāmadinacaritam, 8-*a*. Śiṟṟiyatirumaḍal Vyākhyānam 10-*a*.

Similar to the work described under No. R. 425-*j*.

Beginning :

பட்டாபிஷேக ஸர்கவ்யாக்யா.

பெருமாள் திருவயோதிக்கு எழுந்தருளினதுக்கு ஹேதுவேதென்னில் :—

“ அதச்ச த்ரிலோகீமிமாம் பாலயிஷ்யந் ஸுகேந நிக்ருஹீதா ஸமா: |
நந்திக்ராமாதி யதிஸ்த்வாந ப்ரவேக்ஷ்யாமி ஸாகேதா (ம) நம் ||

என்று ஸ்ரீஹரதாழ்வான் சொல்ல,

“ ப்ரத்யக்ஷ ப்ரதிஜ்ஞாய ஸாதகம் பரிஷஸ்வஜே ” என்றும் “ நிவ்ருத்த (வந) வாஸஸ்யார்த்தம் ஜநகீபதே: ந | ப்ரவிஶந்த்யயோத்யாம் ” என்றும், “ அந்தகம் சதுர்தச வர்ஷஸ்ய பூர்ணே நவமேஹநி கதே மந,” என்றும் சொல்லுகிறபடியே, நாம் பதினலாமாண்டில் வருகிறோ

மென்று சொன்னோம். நாம் வாராவிடில் பரதாழ்வான் முடிந்து போவ னென்றும், ஸத்யஸந்த மாகாதென்றும் நினைவாலே யெழுந் தருளினர். * * * * * * * * * * * * உத்திஷ்டஜ்ஞாதய: ஸர்வே கோஸலா:," என்கிறபடியே ஸ்ரீ பரதாழ்வான் * * * * எழுந்திருந்து தம்முடைய ஹ்ருதயத்தைப் பெருமாளுக்கு வெளியிடுகிறார். 'சிரஸ்யஞ்ஜலிமாதாய,' உக்தி. முன்பு ஸ்ரீ சித்திர கூடத்தில் பண்ணின ப்ரபத்தி பலியாமைக்கு ஹேதுவே தென்னில் :—தன்னால் வரும் நன்மை விலைப்பால் போலே, அவனால் வரும் நன்மை முலைப்பால் போலே,' என்று பிள்ளான் அருளிச் செய்கையாலே விதூவாக்ய பரிவாரத்துக்கு முன்பு பண்ணினதாகையாலே பெருமாளுக்கு ஸங்கி [ஸந்தி] பர்யாய மில்லாமையாலே பலியாமல் போச்சுது. இப் போது பலிக்குமென்று சிரஸிலே அஞ்சலியைப் பண்ணினர். அன்றிக்கே "சிரஸ்யஞ்ஜலிமாதாய" உக்தி. பரப்ரஹ்மவ்யாப்திக்கு ஸாதகமாய் "அஞ்ஜலி: பரமாமுத்ரா க்ஷிப்ரம்தேவப்ரஸாதனீ" என்கிறபடியே அநந்யமதிகத்வ ஸாதகமாகையாலே இந்த அஞ் சலி ஸ்ரீபரஸமர்ப்பணமாக விருக்கவுமாம். 'கைகேயீம் ப்ரதயாம்நம:,' என்றதுக்கு ஹேதுவே தென்னில் :—பரதாழ்வான் சிரஸிலே அஞ்சலியைக் கண்டு திருவபிஷேக விக்னத்தால் வந்த தன்னுடைய அபயசஸ்ஸு போச்சுதென்று ஸந்தோஷியானாள்.

End :

பலச்ருதி-இந்தக் காவ்யத்தைக் கேட்டவர்களுக்குக் குடும்ப விருத்தியும், தனதான்ய விருத்தியும், உத்தம ஸ்திரீகளும் ஸுகமும் ஸம்ருத்தியும் உண்டாம். ஆயுஷ்ருத்தி :—இந்தக் காவ் யத்தை நியமேந கேட்டவர்களுக்கு ஆயுஷ்யமும், ஆரோக்யமும், யசஸ்ஸும், ஸௌப்ராத்ருத்வமும், நல்ல புத்தியும், தேஜோவ்ருத்தியும் முதலான[து] (வை)களு முண்டாம். இதிலே ஸந்தேகமில்லை.

ஹரி: ஓம். ஸுபமஸ்து. ஸ்ரீராமாய நம:.

கு.பு.—இது, வால்மீகி ராமாயண யுத்தகாண்டத்தில் 131-ம் ஸர்க்க மாகிய ஸ்ரீராம பட்டாபிஷேக ஸர்க்கத்துக்கு மணிப்ரவாள நடையில் குறிப் பாக அமைந்துள்ள ஒரு வியாக்யானம் ஆகும். இந்தப்பிரதியில் பூர்ண மாகவுளது. இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை. பெரும்பாலும் கோவிந்தராஜர் வடமொழியிலியற்றியுள்ள வியாக்கியானக் கருத்துக்களைத் தழுவியது.

No. 2490. சிறிய திருமடல் வியாக்கியானம்.

ŚIṞIYATIRUMAḌAL VIYĀKHYĀNAM.

Page 70. Lines, 8 on a page.

Begins on fol. 10-*a* of the MS. described under No. D. 2489.

Complete.

Same work as that described under R. No. 25-(b).

(கு-பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 25 (b)-ம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியிலே இந்நூல் முற்றுமிருக்கிறது. ஏடுகள் ஒரு சிறிது சிதைந்திருக்கின்றன.

No. 2491. புண்யாஸ்ரவ கதை.

PUṆYĀSRAVAKATHAI

Substance, palm-leaf. Size, 16 × $1\frac{1}{8}$ inches. Pages, 18. Lines, 7 on a page. Character, Tamil and grantha. Condition, good. Appearance, old.

Begins on fol 1-*a*. The other works herein are, Jīvasambhōdanai 10-*a*. Ādityavāravratānuṣthānam 216. Jīvadayāśṭamivratam 222. a. Saubhāgyavratam 232-*a*.

Incomplete.

Same work as that described under No. R. 961.

(கு-பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 961-ம் நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முதற்கொருடங்கிக் கைலாச நகரத்துச் சென்றிருந்த "ப்ரபாவதீ" என்னும் பெண்ணுக்குப் "பத்மாவதீ" என்னுமவள் "சதுர் விம்சதிதீர்த்தங்கர புஷ்பாஞ்சலி விதானம்" என்றதனைச் செய்யுமாற்றினை விளக்கும் பகுதி வரையிலுமே இருக்கிறது. எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன. ஏடுகள் ஒரு சிறிது சிதலுற்றுள.

No. 2492. ஜீவசம்போதனை உரையுடன்

JĪVASAMBHŌDANAI WITH COMMENTARY.

Pages, 410. Lines, 6 on a page.

Begins on fol. 10-*a* of the MS. described under No. D. 2491.

Complete.

Same work as that described under No. R. 950.

Beginning :

சிவஸம்போதனை உரையுடன்.

மூவுலகும் வந்திறைஞ்ச மூவர் முதலாகி
மூவுலகுந் தானே முழுதுணர்ந்தான்—மூவுலகின்
உட்பொருளாய் ஓங்கி யுயர்பொருளாய் நிற்கின்ற
வப்பொருளா மெங்கட் கரண். (க)

உரை :—என்பது, த்ரைலோக்யநாயகனாகிய ஸகலஸேவ்ய ஸர்வஜ்ஞா
நாயிஷ்டக வஸ்து ஸம்பூர்ணாவ்ருத் தீ ஈஸ்வராதி ஸ்வாயம்புவ ஸ்திரம்ஸம்பதி
ஸம்ய விஸர்ஜதி விஷ்ணுராஜ ஸேநா க்ருதி காரண வ்யவஸ்தாநாதீத ஸர்வஜ்ஞா
ஷிக உத்ரவஸ்தாத்ருதநக வஸ்து காலத்ரயதிர ஸோகவர்த்தி ஸர்வண

வயர்காயாவ ஸோக முக்திக த்ரிகோடி வர்ணாஸாத்தக வஸ்து
ஸாக்ஷாத்காரண ஸமஸ்த ஸகல விஸ்வ கேவல ஜ்ஞாந
ஸ்வரூபமாகிய பரமேஸ்வரன் பரமேஷ்டி ஸம்ஸார
த்ராணவ்ரஷ்டமே ஸரணமாக வடைந்தோமென்றவாறு. || க ||

அன்றியும்,

இருநால் வினைகெடுத்திட்டெண்கு ணனுமெய்தி
யுருவாற் சிறிதொழிந்த வுண்மை—யருவாகி
நித்தராய் மூவுலகு மேத்த நிறைந்த புகழ்ச்
சித்தரா நந்தமக் கொர் சேர்வு (உ)

அன்றியும்,

நாலொன்பது குணமுநல் லொழுக்கமைந்தினையு
நூலொண் பொருள்வகையினுண்மையான்—மேலின்ப
மாய்ந்தவகை நிகழுமாசாரிய ரடியென
வாய்ந்த மனம் வைத்தனம் மாண்பு (௩)

ஆறிரண்டங்கமுமாய்ந்தீரேழ் பூவகமுங்
கூறிரண்டெண் கேள்விகளிற் குன்றுமற்—றேறி
வருந்தருநல் லொத்துரைக்கும் ? வாய்மையார்பாதம்
நிரந்தரம் நான் வந்திப்பன் இன்று (ச)

அருங்கலங்கண் மும்மை யழிவகை யொன்றின்றிப்
பெருங்குணங்க ணல்லனவே பேணி—யொருங்கிசைந்த
சாதுக்கடங்கட் சரணரவிந்தமி (வி)மம்
மாதுக்கந் தீர்க்கும் மருந்து (ரு)

* * * * * *

End :

மட்டவிழும் பங்கயங்கள் பூத்த மடுவகத்தே
கொட்டிகளுந் தோடவிழ்ந்தாற்போலாதே—விட்டநிறை
மாண்கவிதை மாப்புலவோர்த் தொல்லைவையுண்மாணுதே
யான் கவிதை செய்யுமிது (௯)

அருளறத்தின் மிக்க வறிவுடையாராய்ந்த
பொருளறத்தின் மிக்கார் புலவர்—தெருளறத்தின்
மன்னலா மென்பவர்தம் மாண்புரையால் யான்கவிதைப்
பன்னலா மென்பது வெண்பங்கு (௰)

என்பது, ஸகிழ்ஸமஸ்த ஜாக வாஸிகரங்களை நிறைந்த யதிகோமத்தில் நிகழ்வோரும் காவ்யலக்ஷணம் அறியும் புலமைமிக்கோரும் நிறைமாயிருந்த யதிமரநத்தை யதிமஹாவணஞ் செய்கை? மற்ற வாரது கருணாமாஹாத்திலுல் உற்று இதனை யுரைக்கலுற்றேன் என்ற வாறு || ௰ || அன்றியும்,

கருக்கொண்டு மின்னிக் கடன்முகந்து கொண்மூப்
பொருப்பின் மிசை பொழியப் பொங்கி—யரிக்கொள்
கயமிறுத்துக் கோடிமுத்துக் கல்லுருட்டிமண்மே
லிய முனைக்கே வந்திழிந்த தீண்டு (௰௧)

என்பது,

பாவையினீர் புனன்முகந்து மிசையெழுந்து பயோதரங்கள்
னிரவிமிகு விபுலகிரி மிசையின் மிகப் புயல் பொழியக்
காரகிலின் குறடுக்கிக் கருமாவின் எயிறுவாரி
வேரி மிகு மதுப்போதுகள் மென்மேலெனக் கொண்டெழுந்து
சந்தனத்தை முறித்தெறிந்து தமனியத்தின் றழைவாரிச்
சிந்தூர மிலவங்கந்தி மிசு தெறுங் கற்பூரங்
கறையடியின் கொடியினெடு கண்மயிலின் பீலிவாரித்

Colophon :

(கு-பு.)—

துன்முகிளுப புரட்டாசிமீ 22உ சுக்ரவாரம் கஷுதியில் காந்தை குந்துநாதஸ்வாமி ஸந்நிதியில் பகவாத்தை நயினுர் தேவேந்திர மாமுனி சிவசம் போதனை எழுதி முடிந்தது.

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 950-ம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முற்றும் உளது. ஷெ பிரதியில் எழாம் அதிகாரம் முதற்கொண்டு (12)-ம் அதிகாரம் வரையுமே உளதாதலின் இங்கு நூலாரம்பப்பகுதி எழுதிக் காட்டப்பட்டிருக்கிறது. இவ் வுரைப்பகுதி மணிப்ரவாள நடையிலே யமைந்துளது. இவ்வுரையாசியர் இன்னாரென்று விளங்கவில்லை. எழுத்துப் பிழைகள் உள. ஏடுகள் ஒரு சிறிது சிதைந்துள.

No. 2493. ஆதித்தியவார நோன்பு.

ĀDITTIYAVĀRA NŌNPU.

Pages, 14. Lines, 6 on a page.

Begins on fol. 216-*a* of the MS. described under No. D 2491.

Complete.

A portion of the work described under No. D. 294.

(கு-பு.)—

இது, மூவருடக் காட்லாக்கு 294-ம் நம்பர் பிரதியில் வந்துள்ள நோன்பு கதையென்ற நூலின் இடையிலான ஒரு பகுதியாகும். இங்கு இவ் விரதம் முற்றும் உள்ளது. எழுத்துப் பிழைகள் உள.

No. 2494. ஜீவதயாஷ்டமீ நோன்பு.

JĪVADAYĀṢṬAMĪ NŌNPU.

Pages, 20. Lines, 6 on a page.

Begins on fol. 222-*a* of the MS. described under No. D 2491.

Complete.

Similar to the above.

இது, முன்பிரதியில் வந்த நூல் போன்றதே. இப்பிரதியில் இது முற்றுமிருக்கிறது. எழுத்துப் பிழைகள் இருக்கின்றன.

No. 2495. ஸௌபாக்கிய நோன்பு.

SAUBHĀGYA NŌNPU.

Pages, 24. Lines, 6 on a page.

Begins on fol. 232-*a* of the MS. described under No. D 2491.

Complete.

Similar to the above.

இது முன்பிரதிபோன்றதே. இதில் இந்நோன்பு முழுதுமிருக்கிறது. எழுத்துப் பிழையுடன் காணப்படுகிறது.

No. 2496. ஸங்கீதக்கொத்து.

SAṄGĪTAKKOTTU.

Substance, palm-leaf. Size, 16 × 1½ inches. Pages, 134. Lines, 6 on a page. Character, Tamil and grantha and Telugu. Condition, much injured. Appearance, old.

Incomplete.

A collection of songs written by Śrī Tyāgarāja and others.

Beginning :

*   *   *   *   *   *   *
*   *   *   *   *   *   *

தேவகாந்தாரி.

வினராதா நாமனவி வினராதா நா
கனகாங்க காவேடிரங்க ஶ்ரீகாந்த
காந்தலெல்ல காமிஞ்சி பிலிசிதே |
. . . . . தே ஜினெக்கி வாகதே ...
... பிலிசிதே |
வினராதா நாமனவி வினராதா ||
...
த்யாக ராஜநுத கருணாலய பிலிசிதே |
வினராதா நாமனவி வினராதா ||

கீர்தன :—

வாரணாவதேஶிரா ராமய்ய வாரணாவதேஶிரா |
... ஶ்ரீகர || || வார ||

End :

... || ரு ||
ஶிவ ஶிவ இதி வததி ஸகாமம்
... || சு ||
... || எ ||
... || அ ||

(கு-பு.)—

இது, தியாகராஜர் முதலியோர் இயற்றிய இசைப்பாடல்களை (கீர்த்தனங்களை)த்தொகுத்து எழுதப்பெற்றதொரு கீர்த்தனக்கொத்தாம். இதில் ஸம்ஸ்கிருதம் தெலுங்கு தமிழ் இப்பாஷைகளால் ஆகிய பலராகங்களில் அமைந்துள்ள பல வகையான கீர்த்தனங்களும் அவைகட்குரிய ஸ்வரங்களும் இருக்கின்றன. இறுதியில் வாஸிஷ்டவஷீ ஸம்ஸ்கிருத பாடல்களும் இருக்கின்றன. இடையில் சில வேதவாக்கியங்கள் எழுதப்பெற்றிருக்கின்றன.

No. 2497. ராமாயணவசனம், (யுத்தகாண்டம்.)
RĀMĀYAṆAVACANAM, [YUDDHAKĀṆḌAM.]

Substance, palm-leaf. Size, 16¾ × 1½ inches. Pages, 158. Lines, 8 on a page
Character, Tamil and Grantha. Condition, good. Appearance, old.

Incomplete. Wants 18 to 20 leaves in the middle.

A prose version, in the *Maṇipravāḷa* style, of the *Yuddhakāṇḍa* of *Vālmīki Rāmāyaṇam*.

Beginning :

லக்ஷ்மணரும் வேதகோஷங்களும் சொன்னவுடனே ராமரும் விஜித்துப்பார்த்து வேதகோஷங்களோடும் தூர்யாதங்களோடும் கூடி இருக்கிற ராக்ஷஸர்களை எப்படி ஜயிக்கப்போகிறோம் என்று ஸநத்குமாரரைப்பார்த்து ஸ்ரீரகுநாயகர் சொன்னார். இப்படியே ஸ்ரீராமபத்ரர் சொன்னவுடனே ஸநத்குமாரர் சொல்லுகிற பிரகாரம் ராம பத்ரரே ராக்ஷஸர்களிடத்திலே தயையில்லை. தாக்ஷிண்யமில்லை. ஸத்யமில்லை. ஸௌசமில்லை. ஆகையாலே ராக்ஷஸர்களை ஜயிக்கலாமென்று ஸநத்குமாரர் ஸ்ரீரகுநாயகரைப் பார்த்துச் சொன்னார். உடனே ஸ்ரீராமரும் ஸநத்குமாரர் சொன்ன வார்த்தையைக்கேட்டு ஸந்தோஷப்பட்டு உடனேயே யுத்தம் பண்ணவேண்டுமென்று யோசித்து எந்த முகூர்த்தத்திலே யுத்தத்துக்கு உத்யோகித்தால் * * * * *

End :

ஸ்ரீரகுநாயகர் ஸுக்ரீவனுக்கு பட்டாபிஷேகம் சொல்லி அதுக்குப் பின்பு தாரை முதலானவரை ஸ்த்ரீகளையும் அழைத்து ஸீதையைக்கொண்டு அவர் அவர்களுக்கு ஸந்தோஷமாகவே உடுவைகளையுங் கொடுப்பித்து அனுப்பின பின்பு அங்கதனை யழைப்பித்து அவருடைய தோளுக்கு அலங்காரமாகவே யிருக்குமென்று நல்ல தோள்வளையுங்கொடுத்து அநேக உடுவைகளையுங்கொடுத்து அனுப்பினார். பின்பு, ஜாம்பவான் மகாராசரை யழைத்து அவருக்கு உசிதமாகவே யிருக்கிற உடுவைகளையுங் கொடுத்து அங்கதர் முதலான வானரர்களை யெல்லாரையும். .

(கு-பு)—

இந்நூல் வால்மீகி ராமாயணத்து யுத்தகாண்டத்துக்கு மணிப்ரவாள நடையில் அமைந்ததொரு வசனரூபமான கிரந்தமாகும். இதில் இந்நூல் இறுதியில் ஒரு சிறிய பகுதி மாத்திரம் ஒழிந்து முற்றும் இருக்கிறது. எழுத்துப் பிழைகள் உள. நடுவில் 18 to 20 ஆன ஏடுகள் காணப்பெறவில்லை.

No. 2498. ராமாநுஜஸித்தாந்த தாத்பர்ய நிர்ணயம்.

RĀMĀNUJASIDDHĀNTA TĀTPARYANIRṆAYAM.

Substance, palm-leaf. Size, 16¾ × 1½ inches. Pages, 60. Lines, 6 on a page. Character, Tamil and grantha. Condition, much injured. Appearance, very old.

Incomplete.

A treatise relating to the Śrī *Viśiṣṭādvaita* of Śrī Rāmānuja Ācārya.

Beginning :

ஸ்ரீராமானுஜ ஸித்தாந்த ஸாரார்த்தம் நாரதோதிதம் |
வேதாந்தாதிக ஸச்சாஸ்த்ரஸாரஸ்ய ப்ரகாசகம் || || க ||
ஸ்ரீவைஷ்ணவ ப்ரகரணாஜ்ஞாதி ஸம்க்ஷிப்ய ப்ரோச்யதே |
தச்சேந்த்ராந்த்ய விரோதோபாயோபாதிகளம் || || உ ||

ப்ரபந்நனான ஸ்ரீ வைஷ்ணவனுக்கு அதிகார ஸம்பத்தி யுண்டாகவேண்டும். அதிகார ஸம்பத்தியுண்டாகும்போது ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்த ஸாரார்த்த மறிய வேணும். அந்த ஸம்பிரதாய ஸாரார்த்தமறியும்படி யெங்ஙனே யென்னில் ஸ்ரீராமானுஜஸித்தாந்தத்தினுடைய ஸம்ப்ரதாய லக்ஷணங்கள் முதலில் அறிந்து க்ரமமாக ஸம்ப்ரதாய ஸாரார்த்தங்கள் மறியவேணும். ஸம்ப்ரதாய லக்ஷணமறியாமல் லக்ஷ்யமான ஸம்ப்ரதாய ஸாரார்த்தங்கள் மறியப் போகாது. அறிந்தோமென்றாலும் அறிந்ததன்று. அறிந்து அத்தால் ப்ரயோஜனமேதென்னில், இக்த ஒரு மதத்திலும் வடவாசார்ய மதமென்றும் தென்னாசார்ய மதமென்றும் பின்னையும் சில ஸம்ப்ரதாயங்கள் உண்டாய் ஸம்ப்ரதாய லக்ஷணமாகாமல் இருப்பதால் ஒரு படியாலே ஸம்ப்ரதாயஸாரார்த்தங்கள் மறிய வேணும். இப்படி ஸம்ப்ரதாய லக்ஷணமாக வறிந்து அநுஷ்டித்த போது ஒழிய ப்ரபந்நனுக்கு அதிகாரம் போராது. அதிகார ஸம்பத்தியுண்டானாலொழிய ஸம்ப்ரதாய ஸம்பத்தியுண்டாகாது.

End :

என்று சொல்லவுமில்லையே. இதுவுமன்றியிலே திருவாய் மொழி முதலான த்ராவிட ப்ரபந்தங்களை எல்லாம் ஸ்வயத்துக்கு . . . . ன்றும் ஸேவிக்கச் சொல்லிச் சொல்லுகையாலே விடச்சொன்ன வர்த்தங்கூடாது. ஆசார்யன் அருளிச் செய்தாப்போலே செ . . . . யமே ஸ்வரூபவை யதார்த்தமாயிருக்கும். இப்படியிருக்கிற ஸ்ரீராமானுஜ ஸித்தாந்தம் அவிரோதமன்றியிலே ஸம்ப்ரதாய லக்ஷணமாய் . . . . . ஸம்ப்ரதாய ஸாரார்த்தம் விவரிக்கிறோம். ஸார்வபௌமனான ராஜாவானவன் தானாளுகிற தேசங்களிலே உண்டான பிரஜைகளை . . . . யனுப்புகிறபோது ஸீமைக்குள்ளேயிருக்கிற அதிகாரிகள் பேர்படவும் சூத்ருடைய பேர்படவும் . . . . அனுப்பினன் . . . . ங்களை வாசித்துக்கொண்டு அந்த வாசகங்களை பின . . . . ராஜாங்ஙளிலே . . . . . . ப்ரஜைகளுக்கு . . . . . . னுடைய நிருபத்தின்படி கேட்டி கொளோ வென . . . . ளிருக்கிற விடங்

களிலேயிருந்து உம்பளிறைகள் வேணுமென்றிருந்தோ கோளா கில் இந்த ஊழியத்தைச் செய்யச்சொன்னேன் . . . அல் லது நம்மு . . . . ந்திருக்க வேண்டிறு லும் நம்மைப்போலே அயிகாரங்கள் வேண்டிறுலும் இன்னின்ன படி ஊழியங்கள் செய்யுங்கோள் . . . . . . ஸஊ்ரய ஹொ மங்களை வேண்டிறுல் அப்போது இந்த விந்த வகைகள் ஊழியங் களைச் செய்யுங்கோள் . . . . என்னை நம்பி ஶரணமடைந் தவர்களைத் தம் பக்கல் அழைப்பித்துக்கொண்டு தனக்கு ஸஊ் ரமாகக் கட்டவிழ்த்துக்கொண்டு . . . . ஸம மொழிந்து வக்ஷவாதம் இல்லையே. ஆகையால் நம்பிராஜாவை ஸேவியுங்கோள் என்று ஆஜ்ஞாபித்து . . . . . .

குறிப்பு.—

இந்நூல் ஸ்ரீ வைஷ்ணவ மதத்திலே உடையவர் ஸித்தாந்தத்தின் தாத்பர்யம் இன்னவிதமாகும் என்று எடுத்து விளக்குவதாகும். இது ஷெ மதத்தில் சிலர் நாஸ்திகர்களைப்போலவே உட்கருத்து அறியாமல் ஸம்பிர தாயத்திலே சிற்சில அதிவாத ஸ்லோகங்களைக்கொண்டு பல கிளர்ச்சிகளை யும் உண்டாக்கவே, அவைகட்குச் சமாதானமாக இயற்றப்பெற்றதென்று முதலிரண்டு ஸ்லோகங்களாலும் க்ரந்தத்திலே நுதலப்படும் ஸமாதான பரகரியைகளாலும் அறியக்கிடக்கிறது. மற்று இந்நூலாசிரியர் பிள்ளை லோகாசார்யரது ஸ்ரீ வசனபூஷணத்திலிருந்து பிரமாணமெடுத்து ஓதியும்— ஸம்பிரதாயமாக வரும் யவரது ஒழுக்கங்களாலும் தெளிய வுணர்த்து கிறார் முற்றுப்பெறவில்லை. ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

No. 2499. வேதாந்தாசார்ய வைபவப் பிரகாசிகா.
VĒDĀNTĀCĀRYA VAIBHAVAP PIRAKĀŚIKĀ.

Substance, palm-leaf. Size, 17 × 1-5/16 inches. Pages, 102. Lines, 7 on a page. Character, Tamil and grantha. Condition, much injured. Appearance, very old.

Incomplete.

Same work as that described under No. R. 104-(b).

(கு-பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 104 (b)- நம்பர் பிரதியில் வந் துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இலக்ஷ்மணுசார் என்பவர் தமக்குத் தேசிகாபசாரத்தால் திருமேனியிலே வியாதியுண்டானதாய்ப் பத்நீமுகமாய் அறிந்துகொண்டு அதை நீக்கிக்கொள்ள ஸத்தியமங்கலம் ஏறப்போந்து தேசிகனது ஸந்நிதியிலே ஒரு ஸம்வத்ஸரம் எழுந்தருளியிருந்து வேதாந்த தேசிகனது ஸ்ரீபாத தீர்த்தம் ஸ்வீகரித்து அதன் மகிமையினுல் வியாதி நீங்கப் பெற்று ஒரு ஸத்குமாரரையும் (தீர்த்தபிள்ளை) பெற்றுர் என்ற இச்செய்தியை விளக்கும் பகுதிவரையிலுமே யுளது. ஏடுகள் எல்லாம் முறிந்து சிதைந்திருக்கின்றன. பின்னர் 2 ஏடுகளில் வைஷ்ணவ மதத் தில் உள்ள ரஹஸ்ய விஷயங்களில் உண்டாகும் சில ஸந்தேஹங்களுக்கு விடையிருக்கும் பகுதி எழுதியுளது.

No. 2500. ஸ்ரீவசனபூஷணம்.
ŚRĪVACANABHŪṢAṆAM.

Substance, palm-leaf. Size, 16¼ × 1¼ inches. Pages, 54. Lines, 9 and 10 on a page. Character, Tamil and Grantha. Condition, injured. Appearance old.

Wants 1—10 leaves in the beginning.

Begins on fol. 11-*a*. The other works herein are Arccirādi 25-*b*. Tatvatrayam 37-*a*. Periyavaccānpiḷḷairahasyam 63-*b*. Prameyaśekharam 68-*a*. Śriyaḥ patippaḍi 69-*a*. Uḍaiyavar pattuvārttai 77-*b*. Jñātavyāmśam 78-a. Yādṛccikappaḍi 80-*a*. Nigamanappaḍi 81-*b*. Parandapaḍi 84-a. Carmaślōkam 94-*b*. Arthapañcakam 121-a. Samsārasāmrājyam 129-a. Sāmagriparamparai 128-*a*. Jñātavyāmśam 130-*b*. Ajñānajñānāvasthaikal 131-a. Avasthātrayam 133-a. Aḻakiyamaṇavāḷaperumāḷ nayanār Rahasyam 140-a.

Same work as that described under No. R. 49-(e).

(கு. பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 49 (e)-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முதலில் 1 to 10 ஆன ஏடு களில்லையாதலின் அப்பகுதி யொழிய மிகுதி முற்றுமிருக்கிறது.

No. 2501. அர்ச்சிராதி.
ARCCIRĀDI.

Pages, 24. Lines, 10 on a page.

Begins on fol. 25-*b* of the MS. described under No. D. 2500.

Complete.

Same work as that described under No. R. 49-(e).

(கு. பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 49 (e)-ம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாம். இப்பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது.

No. 2502. தத்வத்ரயம்.
TATVATRAYAM.

Pages, 16. Lines, 9 on a page.

Begins on fol. 37-*a* of the MS. described under No. D. 2500.

Complete.

Same work as that described under No. R. 49-(b).

(கு. பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 49 (b)-ம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாம். இப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது. 45 to 62 ஆன ஏடுகள் காணப்பெறவில்லை.

No. 2503. பெரியவாச்சான் பிள்ளை ரஹஸ்யம்.

PERIYAVĀCCĀNPIḶḶAIRAHASYAM.

Pages, 12. Lines, 9 on a page.

Begins on fol. 63-*b* of the MS. described under No. D. 2500.

Complete.

Same work as that described under No. D. 914.

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 914-ம் நம்பர் பிரதியிலே வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியிலே இது முற்றுமிருக்கிறது. எழுத்துப் பிழைகள் காணப்படுகின்றன.

No. 2504. ப்ரமேயசேகரம்.

PRAMĒYAŚĒKHARAM.

Pages, 2. Lines, 9 on a page.

Begins on fol. 68-*a* of the MS. described under No. D. 2500.

Same work as that described under No. D. 931.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 931-ம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப் பிரதியில் இந்நூல் இறுதியிலே ஒரு சிறிய பகுதி யொழிய முற்றுமிருக்கிறது. எழுத்துப் பிழைகள் உள.

No. 2505. ஸ்ரிய:பதிப்படி.

ŚRĪYAḤ PATIPPAḌI.

Pages, 173. Lines, 8 on a page.

Begins on fol. 6 C I-*a* of the MS. described under No. D. 2500.

Complete.

Same work as that described under No. D. 999.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 999-ம் நம்பர் பிரதியிலே வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியில் இந்நூல் முழுதுமிருக்கிறது. எழுத்துப்பிழைகள் உள.

No. 2506. உடையவர் பத்துவார்த்தை.

UḌAIYAVAR PATTUVĀRTTAI.

Pages, 3. Lines, 9 on a page.

Begins on fol. 77-*b* of MS. described under No. D. 2500.

Complete.

Same work as that described under No. D. 827. With slight difference in the readings.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 827-ம் நம்பர் பிரதியிலே வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியிலே இது அங்கங்கே ஒரு சிறிது பாடபேதங்களுடன் காணப்படுகிறது. இதன் பின்னர் "ஜ்ஞாதவ்யாம்ஸம்" என்ற பெயருடன் ஒரு சிறுநூல் முமுக்ஷுக்களுக்கு அறியவேண்டிய சில விஷயங்களை யெடுத்துணர்த்துகின்றது.

No. 2507. ஜ்ஞாதவ்யாம்சம்.

JÑĀTAVYAMŚAM.

Pages, 2. Lines, 3, 6 on a page.

Begins on fol. 78-*b* of the MS. described under No. D. 2500.

Complete.

Same work as that described under No. R. 105-(a).

(கு. - பு.)—

இந்நூல் ரூவருடக் காட்லாக்கு 105 (a)-ம் நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியிலே இது முழுதுமிருக்கிறது. இதிலிருந்தும் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. எழுத்துப் பிழைகளிருக்கின்றன.

No. 2508. யாத்ருச்சிகப்படி.

YĀDṚUCCIKAPPAḌI.

Pages, 4. Lines, 9 on a page.

Begins on fol. 80-*a* of the MS. described under No. D. 1500.

Complete.

Same work as that described under No. D. 957.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 957-ம் நம்பர் பிரதியிலே வந்துள்ள நூலேயாகும். இப் பிரதியில் இந்நூல் முற்றும் இருக்கிறது. எழுத்துப் பிழைகளிருக்கின்றன.

No. 2509. நிகமனப்படி.

NIGAMANAPPAḌI.

Pages, 4. Lines, 8 on a page.

Begins on fol. 81-*b* of the MS. described under No. D. 2500.

Complete.

Same work as that described under No. R.173-(d).

(கு. - பு.)—

இந்நூல் ஸம்ஸ்கிருத மூவருடக் காட்லாக்கு 173 (d) நம்பர் பிரதியிலே வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியிலே இது முழுதுமிருக்கிறது. எழுத்துப்பிழைகள் உள.

No. 2510. பரந்தபடி.

PARANDAPAḌI.

Pages, 73. Lines, 9 on a page.

Begins on fol. 84-*a* of the MS. described under No. D. 2500.

Complete.

Same work as that described under D. No. 903.

(கு. - பு.)—

இந்நூல் டிஸ்கிருப்டிவ் காட்லாக்கு 903-ம் நம்பர் பிரதியிலே வந்துள்ள நூலேயாகும். இப் பிரதியிலே இந்நூல் முழுதுமிருக்கிறது. எழுத்துப் பிழையுடன் உளது.

No. 2511. அர்த்தபஞ்சகம்.

ARTHAPAÑCAKAM.

Pages, 13. Lines, 8 on a page.

Begins on fol. 121-*a* of the MS. described under No. D. 2500.

Incomplete.

Same work as that described under R. No. 49-(d).

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 49 (d) நம்பர் பிரதியிலே வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியிலே இது முற்றுப்பெறவில்லை. ஏடுகள் சில முறிந்து இருக்கின்றன. எழுத்துப் பிழைகளிருக்கின்றன.

No. 2512. ஸம்ஸாரஸாம்ராஜ்யம்.

SAMSĀRASĀMRĀJYAM.

Pages, 3. Lines, 8 on a page.

Begins on fol. 129-*a* of the MS. described under No. D. 2500.

Complete.

Same work as that described under R. No. 105-(e).

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 105 (e) நம்பரில் வந்துள்ள நூலேயாகும். இப்பிரதியிலே இது முற்றுமுளது. எழுத்துப்பிழைகள் உள.

No. 2513. ஸாமக்ரீ பரம்பரை.

SĀMAGRĪPARAMPARAI.

Pages, 2. Lines, 8 on a page.

Begins on fol. 128-*a* of the MS. described under No. D. 2500.

Complete.

A treatise on the origin and causes of the cycle of births and deaths, according to the *Viśiṣṭādvaitins.*

Beginning :

ஸர்வேச்வராய நம:.

அநாதி அவித்யையடியாக அந்யதாஜ்ஞாந விபரீத ஜ்ஞாநங்கள் உண்டாம். அவ்வந்யதாஜ்ஞாந விபரீத ஜ்ஞானங்கள் உண்டாக அவற்றாலே விஷயங்களிலே ராகத்வேஷம் உண்டாம். அந்த ராகத்வேஷமடியாக ஸதஸத் ப்ரவ்ருத்தியுண்டாம். அந்த ஸதஸத் ப்ரவ்ருத்தியடியாக புண்யபாப ரூப கர்மங்கள் உண்டாம். அக்கர்மங்கள் அடியாக அசேதநமிச்ரதேஹ ஸம்பந்தங்களுண்டாம். தேஹஸம்பந்தமடியாக அநந்தாவதியான ஸுகதுக்கங்களை யார்ஜ்ஜிப்பித்து அநுபவிப்பதாகா நிற்கும். இச்சக்கிரஞ் செல்லா நிற்க செய்தே யாத்ருச்சிக ஸுக்ருத நிமித்த பகவத் கடாக்ஷ விசேஷத்தாலே ஸதாசார்ய ஸமாச்ரயண முண்டாம்.

End:

இந்நிலத்தில் பொருந்தாமையும் பொருந்தின நிலம் புகப் பெருமையுமுடையனாய் "ஆக்கை விழும்பொழுதெண்ணே," என்பது, "பணிகண்டாய் சாமாறே." என்பது, "அடையவருளாய்," என்பது, "கூவிக்கொள்ளுங்காலமின்னுங் குறுகாதோ," என்பதுமாய் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகள் வேறுபட்டிருந்துள்ள முமுக்ஷுவுக்கே ப்ரமாணாபேக்ஷையுள்ளது. ஸகல சாஸ்த்ரங்களுக்கும் தாத்பர்யம் ஸ்வஸ்வாதந்த்ர்யத்தையும் ஸ்வபாரதந்த்ர்யத்தையும் இசைவிக்காகவாறேயிருப்பது.

ஆச்சான் பிள்ளை திருவடிகளே சரணம்.

(கு. - பு.)—

இது ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்திலே தென்னாசார்ய ஸம்பிரதாயஸ்த்தரான பெரியவாச்சான் பிள்ளை யென்னும் பெரியாரால் இயற்றப் பெற்றதாகும். இப்பிரதியிலே இது முற்றும் உளது. எழுத்துப்பிழையுளது. இதிலே ஸம்ஸாரத்துக்குக் காரணமான ஸாமக்ரீகளுடைய பரம்பரையை யெடுத்து உணர்த்தியிருப்பதாலே இப் பெயர் இதுக்குக் காரணப் பெயராயிற்று.

No. 2514. ஜ்ஞாதவ்யாம்சம்.

JÑĀTAVYĀMŚAM.

Page, 1. Lines, 8 on a page.

Begins on fol. 130-*b* of the MS. described under No. D. 2500.

Complete.

Same work as that described under No. R. 105-(a).

(கு. - பு.)—

இது மூவருடக் காட்லாக்கு 105 (a) நம்பர் பிரதியில் வந்துள்ள நூலேயாகும். இப் பிரதியில் இந்நூல் முற்றும் உளது. இதிலிருந்தும் இதன் ஆசிரியர் இன்னார் என்று தெரியவில்லை. எழுத்துப்பிழையுளது.

No. 2515. அஜ்ஞாநஜ்ஞாநாவஸ்தைகள்.

AJÑĀNAJÑĀNĀVASTHAIKAḶ.

Pages, 5. Lines, 9 on a page.

Begins on fol. 131-*a* of the MS. described under No. D. 2500.

Complete.

Similar to the work described under No. R. 105 (*f*).

Beginning :

அஜ்ஞாந ஜ்ஞாநாவஸ்தா.

அஜ்ஞாந ஸமயத்திலும், ஜ்ஞாநஸமயத்திலும், ஜ்ஞாநம் பக்வமான ஸமயத்திலும், ஜ்ஞாநஹேதுமான ப்ராப்தி ஸமயத்திலும், மாதாபிதாக் களோடு ஸம்பந்தங்களோடு, போஜநாதிகளோடு, ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளோடு, விஷயங்களோடு, ஸஹவாஸங்களோடு, ஸ்வர்க்கநரகத் தோடு, வைஷ்யாதிகளோடு, ப்ரார்த்தனைகளோடு வாசியற ஹேதுத் திருக்கும். முதலடியான அஜ்ஞாந ஸமயத்திலே விவேகம் ஸம்பவியா மையாலே "ஶரீரமேவ மாதா பிதாஜநயதஃ," என்று கேவல ஶரீரத்தைப் பெற்றவர்களையே, மாதாபிதாக்களாக அபிமானித்து அவர்களிட்டபேரும் அவர்கள் நியமித்த ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும் அவர்களை யநுவர்த்தித்து அத்தாலே வந்தேறின ஸம்பந்தங் களும்.

End :

ஆசார்யன் அங்கீகரித்த முமுக்ஷுவுக்கு நாள் தோறும் ஆராய வேண்டுவதொன்று, எங்ஙனே யென்னில்:—ஒருவன் ஒருகந்ய கையை ஒரு தேவஸந்நிதியிலே கையைப் பிடித்தால் ஸம்பந்தமாவ தெழுமுறையில் நிலைகள் நெகிழ்ந்து பர்த்தாவினுடைய வபிமானத்திலே ஒதுக்காம் போலவும் யஜ்ஞத்திலே ஒருவன் தீக்ஷித்தால் ஸம்பந்தமாவ

வெஷயில் நிலைகள் அடைய நெகிழ்ந்து அவஹாயஹானத்தளவும் யஜமான வேஷத்துக்குத் தக்க வநுஷ்டானமே யாகிறுப் போலவும் ஸந்யாஸிகள் அடைய நெகிழ்ந்து ஶரீரத்துக்கு உசிதமான வர்த்தனத்தோடே வர்த்திக்கிறுப்போலவும் இந்த ஜீவன் முக்தனை முமுக்ஷுவுக்குக் கீழ் நின்ற நிலைகளடைய நெகிழ்ந்து ஹமவஸௌக்ஷயமொன்றிலும் நிரதனாய் வர்த்திப்பது எப்போது வென்று தன் நெஞ்சை யுருக்கித் தன் வேறுபாடு தோன்ற வர்த்திக்கையே முமுக்ஷுவுக்குக் க்ருத்யமென்று நஞ்சீயர் அருளிச் செய்வர்.

பெரிய வாச்சான் பிள்ளை திருவடிகளே சரணம்.

(கு. - பு.)—

இந்நூல் ஸ்ரீவைஷ்ணவ மதத்தில் உள்ள தென்கலை ஸம்பிரதாயஸ்தரான பெரியவாச்சான் பிள்ளை யென்னும் பெரியவரால் வெளியிடப் பெற்றது. இதன் இறுதியிற் காணப்பெறும் “வேறுபாடு தோன்ற வர்த்திக்கையே முமுக்ஷுவுக்குக் கிருத்யம் என்று நஞ்சீயர் அருளிச்செய்வர்” என்னுமிவ்வாக்கியத்தான் இது நஞ்சீயராலேயே இயற்றபெற்றதாகுமோ வென்று ஐயுறக்கிடக்கின்றது. இது, ஸம்ஸாராவஸ்த்தையிலும் முமுக்ஷுவின் அவஸ்தையிலும் ஒரு ஜீவாத்மா இருக்கும் இருப்பின் விசேடங்களை யெடுத்து உணர்த்துகிறது. முற்று மிருக்கிறது. எழுத்துப்பிழையுடன் காணப்படுகிறது.

No. 2516. அவஸ்தாத்ரயம்.

AVASTHĀTRAYAM.

Pages, 13. Lines, 8 on a page.

Begins on fol. 133-*a* of the MS. described under No. D. 2500.

Complete.

Similar to the work described under R. No. 105-(c). The Author seems to be Periyavāccānpiḷḷai.

Beginning :

“அநாதி மாயயா ஸுப்த:” என்கிறபடியே அநாத்யவித்யையாலே ஜ்ஞாநஸங்கோசமாய் அத்தாலே அந்யதாஜ்ஞாந விபரீத ஜ்ஞாநமாய் அத்தாலே அஹங்கார மமகாரங்களாய் அத்தாலே ராகத்வேஷங்களாய் அத்தாலே புண்யபாபரூபகர்மங்களாய் அத்தாலே ப்ரக்ருதி ஸம்ப(ய) ஶரீரமாய் அத்தாலே “பெருந்துயர் இடும்பையிற் பிறந்து,” சதுரமென்று தம்மைத்தாமே சம்மதித்து உளனாக வெண்ணி ‘தத்தம் முடைக்குரம்பை வாழ்க்கைக்கு உறுதியே வேண்டி கண்டவா தொண்டரைப்பாடி வள்ளல் புகழ்ந்து வாய்மையிழந்து காசுங் கறையுடைக் கூறைக்கும் அங்கோர் கற்றைக்கும் ஆசையினால் *

End :

நின்னருளே புரிந்திருந்தேன் என்றுமிருக்கை. ப்ரதம ஸத்ருஶவ்யவஸாயஜ்ஞானமாவது, தேஹஸம்பந்தமும், ஸ்த்ரீபுத்ராதிஸம்பந்தமும், ஐஶ்வர்ய ஸம்பந்தமும், தனக்கென்று பண்ணும் ஸம்ஸார பந்தமும் கட்டு அடங்க உண்டிட்டாயினி யுண்டொழியாய் முற்றக் கரந்தொழிந்தாய் பத்திமைக்கண் புடையேனுவதே பணியாய் எந் தாய் என்றிருக்கை. இப்படி அத்யவஸாயமுடைய அதிகாரிக்கு க்ருதஜ்ஞதையும் செய்யவேண்டுமதுக்கு அபேக்ஷையும் ஸஹா ஸம்பந்தமும். ஸ்ரீ: ஸநாதி ஸ்வயமாஸாத்ய: என்கிறபடியே ஸநாத்ய விஶேஷ்யாலே அஜ்ஞானமாய் அத்தாலே அந்யதாஜ்ஞான விபரீத ஜ்ஞானமாய் அத்தாலே அஹங்காரமமகாரமாய் * * *

* * * * * * *

ஆகையாலே அநந்யார்ஹ ஶேஷத்வத்தில் பிறந்த ஜாதிதானே ஸ்ரீ வைஷ்ணவத்வம் என்று பெரியவாச்சானருளிச்செய்த வார்த்தை.

(கு. - பு.)—

இந்நூல் மூவருடக் காட்லாக்கு 105 (c)-ஆவது நம்பர் பிரதியில் வந்துள்ள நூலின் விஷயங்களை யொத்த விஷயங்களையே சிறிது வேறுபட்டும் சிறிது கூட்டியும் எடுத்து உணர்த்துகின்றது. முதல் இறுதிகளில் எங்குமே இந்நூலின் பெயராவது ஆசிரியரது பெயராவது குறிக்கப்பெறவில்லை. நடை நோக்கால் பெரியவாச்சான்பிள்ளையாய் இருக்கலாமென்று ஊஹிக்கப் படுகிறது. எழுத்துப்பிழையுளது.

No. 2517. அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் ரஹஸ்யம்.

ALAKIYAMANAVĀLAPPERUMĀL NĀYANĀR RAHASYAM.

Pages, 42. Lines, 9 on a page.

Begins on fol. 140-*a* of the MS. described under No. D. 2500. Complete.

This is a religious tract dealing with the "Tirumantram,", the "Caramaślōka" and the "Dvaya" of the *Śrīvaiṣṇavas.*

By Aḷakiyamaṇavāḷapperumāḷnāyanār, son of Kriṣṇapāda and younger brother of Piḷḷailōkācârya.

Beginning :

ஸ்ரீஶைலேஶதயாபாத்ரம் ... ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

ஒரு கடலிற்றுறையிலே படுகிற முத்து மாணிக்கங்களிலே சில ஒளியையுடையவாய்ச் சில சொத்தையாய் அவையிற்றிலே சிலவற்றைக் கடைந்து சேர்த்தவாறே நல்லவற்றோடே ஒரு கோவை யாமாப்போலே பெரும்புறக் கடலான நாராயணனுடைய ஸங்கல்பத் தாலே ஸத்தைபெறுகிற ஆத்துமாக்களிலே சிலரைத் "துலங்கொளி

சேர்தோற்றத்து நல்லமார்,'' என்னும்படி நிக்ருஷ்டராய்ச் சிலர் வன்சேற்றள்ளலாலே யழுக்கேறி யாப்புண்ட பத்தராய் அவர்களிலே சிலர் மலமறக் கழுவி * * * ஓதம்போல் கிளர் நால்வேதக் கடலிலும் தேனும், பாலும், அமுதுமாகச் சேர்த்துப் பிரித்தெடுத்து அறநூல் சிந்தாமை வழிவித்தவன் என்னும்படி நரநாராயண ரூபத்தைக்கொண்டு சிஷ்யாசார்ய க்ரம முன்னாகப் பெருவிசும்பருளும் பேரருளாலே பெரிய திருமந்திரத்தை வெளியிட்டருளினான். இதுக்கு அந்தர்யாமியான நாராயணன் ருஷி. தேவீகாயத்ரீச்சந்தஸ். பரமாத்மாவான நாராயணன் தேவதை. ப்ரணவம், பீஜம், ஆய சக்தி: | ஸாத்வவர்ணம். மோக்ஷத்திலே விநியோகம் * * * * மந்திரத்திலே ஸக்தியைப்பண்ணி இத்தை உபகரித்தவன் பக்கலிலே நீ செய்தவவென்று க்ருதஜ்ஞனும் அவனுக்கு உஜ்ஜீவனம் உண்டாக்கக் கடவது. எம்பெருமானோடு ஆத்மாவுக்கு உண்டான உறவையறியவொட்டாத விரோதியை ஒரு வழியாலே கழித்துப் பெரும்பேற்றையித்து வழியிடுகையாலே முமுக்ஷுவுக்கு அறியவேண்டும் அர்த்தம் இதுக்குள்ளே உண்டு. ஸ்வரூபம் சொல்லுகிறது. ப்ரணவம், விரோதியையும், அது கழிக்கு முபாயத்தையுஞ் சொல்லுகிறது. நமஸ் பரஸ்வரூபம் சொல்லுகிறது. நாராயணபதம் புருஷார்த்தத்தைச் சொல்லுகிறது. ஸகலார்த்த ப்ராப்யமும் விரோதியும், உபாயமும், பலமும், ஜ்ஞாதாவுக்கு ஆகையாலே ஸ்வரூபஞ்சொல்லுகையிலே இதுக்கு நோக்கு.

* * * * * * *

பேசுமின் திருநாம மெட்டெழுத்தும் என்கிறபடியே இது எட்டுத் திருவெழுத்தாய் ஓம் என்றும், நம: என்றும் நாராயணாய என்றும் மூன்றுபதமாயிருக்கும், இதில் முதல் பதமான ப்ரணவம் அ என்றும், உ என்றும், ம என்றும் மூன்றெழுத்துமாய் நால்வேதக் கடலமுதம் என்றதாய் * * *

End :

இந்த நமஸ்கார ப்ரபத்தியிலே களையறுக்கிறது. ஸ்ரீமந் நாராயணனுடைய சேர்த்தியழகையுடைத்தான திருவடிகளை உபாயமாக அத்யவஸிக்கிறேன். ஸ்ரீமந்நாராயணனுக்கு ஸர்வசேஷவ்ருத்தியிலும் அவனுகப்பே பேறும்படி செய்யப்பெறுவேனாக வேணும் என்று தலைக்கட்டுகிறது. அகலகில்லேனும் ஏழையேதலனும், முற்கூற்றில் அர்த்தம். உனக்கே யாட்செய்ய சிற்றஞ் சிறுகாலே பிற்கூற்றில் அர்த்தம். அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் திருவடிகளே சரணம்.

(கு. - பு.)—

இந்நூல் ஸ்ரீ வைஷ்ணவ மதத்திலே தென்னுசார்யஸம்பிரதாயத்தின ரான பிள்ளைலோகாசார்யர் என்னும் பெரியவரின் திருத்தம்பியான அழ கிய மணவாளப் பெருமாள் நாயனுர் என்ற பெரியாரால் இயற்றப்பெற்றது. இது ஷை மதத்திலே வழங்கப்படும் திருமந்திரம், த்வயம், சரமஸ்லோகம் என்றதான மூன்று ரஹஸ்யங்களையும் பற்றிக் கூறுவது. இது மணி ப்ரவாள நடையிலே யமைந்தது. இப் பிரதியிலே இது முற்றும் உளது. இது முடிந்தபின்னர் நாலு பக்கங்களிலே ரஹஸ்ய விஷயமான சில விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இயற்றியவர் இன்னுரென்று தெரிய வில்லை.

No. 2518. பெரிய திருமொழி வியாக்கியானம்.

PERIYATIRUMOḺI VYĀKHYĀNAM.

Substance, palm-leaf. Size, 18½ × 1¾ inches. Pages, 504. Lines, 10 on a page. Character, Tamil and grantha. Condition, much injured. Appearance, very old.

Incomplete.

Contains pattus 1 to 6 only.

Same work as that described under No. R. 24.

(கு. - பு.)—

